# அசோகனின் வைத்தியசாலை

# அசோகனின் வைத்தியசாலை

நோயல் நடேசன்

**அசோகனின் வைத்தியசாலை**
நோயல் நடேசன்

முதற்பதிப்பு: டிசம்பர் 2013
© நோயல் நடேசன்
வெளியீடு: மகிழ்
754, கனகராசா வீதி,
திருநகர் வடக்கு,
கிளிநொச்சி,
இலங்கை

முகப்பு: ரஷ்மி
நூல் வடிவமைப்பு: ஜீவமணி

நூலாக்கம்: கருப்புப் பிரதிகள்,
Karuppupradhigal@gmail.com
Mob: 94442 72500

**விலை ரூ: 300.00**

**Asokanin vaithiyasalai**
Noel Nadesan

First Published: Dec 2013
© Noel Nadesan
Published by MAHIZH,

754, Kanagarasa Lane
Thirunagar North, Kilinochchi
Sri Lanka

Cover: Rashmi
Layout: Jeevamani

Book Produced by
Karuppu Pradhigal
Karuppupradhigal@gmail.com
Mob: 94442 72500

**Price: Rs: 300.00**

நான் தமிழ் எழுதத் தொடங்கிய
பதினைந்து வருடங்களாக
எனது தமிழை தொடர்ச்சியாக
திருத்தி இலக்கிய வடிவமாக்கிய
அன்புக்குரிய நண்பர்
**எழுத்தாளர் முருகபூபதிக்கு**
நாவல் சமர்ப்பணமாகிறது.

# முன்னுரை

## ஜெயமோகன்

### 1

*ஏறத்தாழ இருபதாண்டுகளுக்கு முன்பு தமிழ்ச்சூழலில் ஒரு கூற்று மிக அதிகமாக விவாதிக்கப்பட்டது. எஸ்.பொன்னுத்துரை அதைச் சொன்னார் என்று நம்பப்பட்டது. 'அடுத்த நூற்றாண்டு தமிழிலக்கியத்தை புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்கள் எழுதுவார்கள்'. அந்தவரி அன்றைய புலம்பெயர்ந்த ஈழத்தவர்களை பெரிதும் கவர்ந்தது. இந்தியாவில் பலர் அது ஈழத்தவர்களை மகிழ்விக்குமென்பதனாலேயே திரும்பச் சொன்னார்கள். இன்னும் சிலர் இலக்கியமென்பது அனுபவப்பதிவு என்ற எளிய சமவாக்கியத்தின் மீதான நம்பிக்கை காரணமாக அதைச் சொன்னார்கள்.*

*அதற்கேற்ப அன்று புலம்பெயர்ந்த ஈழத்தவர்கள் நடத்திய இதழ்கள் வந்து குவிந்தன. 1990இல் சுந்தர ராமசாமியின் இல்லத்தில் ஒரு பிளாஸ்டிக் தொட்டியில் இருபத்திரண்டு புலம்பெயர்ந்த ஈழத்தவர்கள் நடத்திய சிற்றிதழ்களை அவர் போட்டுவைத்திருந்ததை நான் எண்ணிப்பார்த்தேன். புலம்பெயர்ந்தவர்களின் ஏராளமான நூல்கள் வெளிவந்தன. மணிமேகலைப்பிரசுரம் அவற்றை அச்சிட்டுத்தள்ளியது. நானே அந்த உத்வேகத்தை பெரிதும் நம்பினேன்.*

*ஆனால் வழக்கம்போல சுந்தர ராமசாமி அவரது யதார்த்த போதத்துடன் இருந்தார். 'இது ஒரு ஆற்றாமையோட வெளிப்பாடு, அவ்வளவுதான். சீக்கிரமே நிப்பாட்டிருவாங்க' என்றார் 'அதிகபட்சம் ஒரு பத்து வருஷம். இவங்க அந்தந்த ஊர்களிலே காலூணினதுமே எழுதவேண்டிய அவசியமில்லாம ஆயிடும். அடுத்த தலைமுறை தமிழே பேச வாய்ப்பில்லை'.*

'ஏன் சார், இவ்வளவு புத்தகங்கள் வருதே?' என்றேன்.

'ஆனா உள்ளடக்கம் என்னன்னு பாருங்க. எல்லாமே கடந்தகால ஏக்கங்கள்தான். புதிசாப்போன ஊரிலே அவங்களுக்கு இன்னும் மனசு தரிக்கலை. அவங்க விட்டுட்டு வந்த மண்ணை நினைச்சுப்பாக்கிறாங்க, அதுக்காக எழுதறாங்க' என்றார் சுந்தர ராமசாமி. 'இல்லேன்னா சமகால அரசியலை எழுதறாங்க. ரெண்டுக்குமே நிரந்தர மதிப்பு இல்லை'.

'நிரந்தர மதிப்புள்ளது என்ன?'.

'சொந்த அனுபவங்களும் சுயமான நுண்ணிய அவதானிப்புகளும் தான். அதெல்லாம்தான் இலக்கியத்தை உண்டுபண்ணுது. இலக்கியத்தோட சதை அதுதான். அந்தச் சதையிலேதான் இலக்கியத்தோட உயிர் இருக்க முடியும்' சுந்தர ராமசாமி சொன்னார் '...இவங்க இலங்கையிலே வாழ்ந்த வாழ்க்கையை எழுதுறதைக் கவனியுங்க. எல்லாருமே கிட்டத்தட்ட ஒரே விஷயங்களைத்தான் எழுதறாங்க. இலக்கியவாதி எழுதினா அது அவன் மட்டுமே எழுதக்கூடிய விஷயங்களா இருக்கும். அந்தக்கோணம் அவன் மட்டுமே காட்டக்கூடியதா இருக்கும். அவனைப்படிச்சா மட்டும்தான் அது கிடைக்கும். அது சும்மா நினைவுகூர்ந்து எழுதறதில்லை. அது வேற. அது ஆழ்மனசிலே இருந்து நேரடியா கிளம்பி வரக்கூடிய ஒண்ணு. uniquness இல்லேன்னா இலக்கியமே இல்லை'.

அதை பின்னர் நானே உணர்ந்தேன். எல்லாரும் சொல்லும் அரசியல் எல்லாரும் பார்க்கும் வாழ்க்கைத் தருணங்கள். அவற்றுக்கு அப்பால் சென்றவர்கள் சிலரே. அவர்களும் மிக விரைவிலேயே எழுதாமலானார்கள். புலம்பெயர்ந்த ஈழத்தவர்களின் இதழ்கள் அலைபின்வாங்குவதுபோல நின்றன. இலக்கியவேகம் மறைந்தது. எஸ். பொன்னுத்துரை சொன்ன வரியை மேற்கோள் காட்டினால் இன்றைய வாசகன் ஆச்சரியப்படக்கூடும்.

சுந்தர ராமசாமி சொன்னார் 'பெருவெட்டான விஷயங்களை எழுதறவங்க எழுத்தாளர்களே கெடையாது. சாதாரணமக்கள் ஏதோ சில காரணங்களுக்காக எழுத ஆரம்பிச்சா சீக்கிரமே சலிச்சு வெளியே போயிடுவாங்க. எழுத்தாளனுக்கு மட்டும்தான் தொடர்ந்து எழுதற வேகம் இருக்கும்..'.

எழுத்தாளர்கள் வாழ்க்கை அனுபவங்களால் உருவாவதில்லை. வாழ்க்கையை அவதானிப்பதனால் உருவாகிறார்கள். மிக

எளிய வாழ்க்கையிலிருந்துகூட மேதைகளான படைப்பாளிகள் கிளைத்திருக்கிறார்கள். அனுபவங்கள் நிகழும்போதே அவற்றை அவதானிக்கும் ஒரு மனவிலகல் எழுத்தாளனிடம் இருக்கிறது. ஒருபோதும் அவன் மக்களில் ஒருவன் அல்ல. மக்களுக்காக அவன் வாழலாம், மரிக்கலாம் ஆனாலும் மக்களை விலகிநின்று பார்க்கும் அன்னியன்தான் அவன். அந்த விலகல் மூலம் அவன் அடையும் வேறுபட்ட கோணமே அவனுடைய தனித்துவத்தை உருவாக்குகிறது.

இக்காரணத்தாலேயே எழுத்தாளன் சமகால உணர்வலைகளை, கருத்துப்போக்குகளை முழுக்க ஏற்காதவனாகவே இருப்பான். அவன் ஊர்வலத்தில் ஒருவனல்ல. ஊர்வலங்களால் அவன் வெறுக்கப்பட்டு விமர்சிக்கப்படுவதும் இதனாலேயே. ஈழ எழுத்துக்களில் அந்த விலகல் கொண்ட எழுத்து மிகமிகக் குறைவாகவே கண்ணுக்குப்பட்டிருக்கிறது. அவ்வாறு கண்ணுக்குப்பட்ட அனைத்தையும் நான் கவனப்படுத்தியிருக்கிறேன்.

## 2

புட்டுக்குழலில் இருந்து புட்டை வெளியே தள்ளுவதுபோல வாழ்க்கை யாழ்ப்பாண மக்களை வெளியுலகம் நோக்கித்தள்ளியது என்கிறார் நடேசன் இந்நாவலில். கொதிக்கக் கொதிக்க. அந்த வெளித்தள்ளலின் வலியையும் அதற்குப்பின்பான வாழ்க்கைப் போராட்டத்தின் அலைக்கழிப்பையும் அரிதாகவே நாம் இலக்கியமாகக் காண்கிறோம். காரணம் இலக்கியம் நேரடியாகச் சொல்லப்படக்கூடியவற்றால் ஆனதல்ல. மெடுசாவின் தலை போன்றது இலக்கியம் இலக்காக்கும் அதிஉண்மை. அதை புனைவின் மீது பிரதிபலித்து மட்டுமே பார்க்கமுடியும்.

புனைவை உருவாக்குபவை கூர்ந்த அவதானிப்புகள். புறத்தின் சிறு தகவல்கள். அகத்தின் நுண் நிகழ்வுகள். அவற்றால் தன் உடலை ஆக்கிக்கொள்ளும் படைப்புகளில் மட்டுமே நாம் ஒரு நிகர்வாழ்க்கையை வாழமுடியும். வாழ்ந்துபெறும் துயரை பரவசத்தை அறிதலை உணர்தலைப் பெற முடியும். அத்தகைய ஆக்கங்களில் ஒன்று நோயல் நடேசனின் வண்ணாத்திக்குளம். அந்நாவலுக்குப் பின் அவர் எழுதிய மூன்றாவது நாவல் இது.

இந்நாவலின் முக்கியமான அம்சமாக நான் கருதியது புலம்பெயர்ந்த ஆஸ்திரேலியச் சூழலில் பொருத்திக்கொள்ள ஈழத்தவர் அடையும் தவிப்பு நுணுக்கமாகப் பதிவாகியிருப்பதுதான். ஓர் இடைவெளியில்

ஒரு உலோகத்துண்டை கச்சிதமாகச் செருக முயலும் இயந்திரத் தொழிலாளியை காணும் அனுபவம் போலத் தோன்றியது. வைத்துப்பார்க்கிறார், எடுத்து சூடாக்கி கூடத்தால் அடிக்கிறார். வைத்துப்பார்த்து எடுத்து அடிக்கிறார். மீண்டும் ராவுகிறார். மீண்டும் வைக்கிறார். உரசுகிறார். மீண்டும் பொருத்திப்பார்க்கிறார். நசுங்கி உரசி சூடாகிப்பழுத்து உருமாறிக்கொண்டே செல்லும் உலோகத்துண்டின் வதைபோலிருக்கிறது அந்த வாழ்க்கை.

பெயரை மாற்றிக்கொள்கிறார்கள். மிஸ்டர் சிவா மன்னிக்கவும் வேலை காலி இல்லை என்று எஜமானர்கள் அன்பாகச் சொல்வது எளிதாக இருக்கும்பொருட்டு. கோட்டும் சூட்டும் போட்டுக்கொள்கிறார்கள். நாவில் உச்சரிப்பைப் பழக்குகிறார்கள். மெல்ல மெல்ல தன்னைத்தானே அறைந்து ராவி உரசி இன்னொன்றாக மாற்றிக்கொள்கிறார்கள். அது ஒரு தொடர்பயணம்போல. அதன் முடிவில் ஓர் இடத்தில் நின்று திரும்பிப்பார்க்கையில் விட்டுவந்த தன் உருவம் நினைவுவெளியில் எங்கோ நின்று தன்னைநோக்கிப் பதைப்பதைக் காண்கிறார்கள்.

மண்ணிலிருந்து வெளியேறியவன் அடையும் முக்கியமான சவால் தன்னுள் ஊறிநிறையும் தன்னிரக்கத்தை வெல்வதுதான். தன் நிறத்தை, தன் மண்ணை, தன் பண்பாட்டைப் பற்றிய தாழ்வுணர்ச்சியாக அது நிறைகிறது. அதைவெறுத்துப் பழித்து விலக்கி இன்னொன்றாக தன்னை மாற்றிக்கொள்ளாமல் வாழமுடியாமலாகிறது. புலம்பெயர்ந்தவனின் பேரிழப்பு என்பது இதுதான். அதை உணர்ந்துகொண்டதும் அடையும் மிதமிஞ்சிய போலிப்பெருமிதம் இன்னொரு வகை திரிபு.

“இந்த சுயபச்சாதாபம் மனிதர்களுக்கு மட்டுமல்ல இனங்களுக்கே ஏற்படக் கூடியது. சில இனங்கள் தொடர்ச்சியாக பழி வாங்கப்பட்டன என அரசியல்வாதிகளால் தொடர்ச்சியாக கூறப்படும்போது இந்த மன உணர்வு தேசிய உணர்வாக மாறிவிடுகிறது. இவைகளைப் புரிந்து அறிந்து கொள்ள பகுத்தறிவு உதவினாலும் பலர் மனஉணர்வுகளின் கைதியாக ஆகிவிடுவது தவிர்க்க முடியாதது” என உணரும் சிவா சுந்தரம்பிள்ளையின் தன்னறிதல் இந்நாவலின் முக்கியமான மையம்.

நிற ஒதுக்குதலை மெல்லத் தாண்டிவந்துகொண்டிருக்கும் தேசம் ஆஸ்திரேலியா. ஆனால் எங்கோ அதை மீண்டும் மீண்டும் சந்திக்கநேர்கிறது. உன்னை இங்குள்ள விவசாயிகள்

ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்று சொல்லப்படுகையில் “அந்தப் பதில், காசநோய் உள்ளவன், கோழையும் இரத்தமும் கலந்து முகத்தில் காறித் துப்பியது போன்ற தாக்கத்தை ஏற்படுத்தியது. நீ ஒரு வெளிநாட்டவன் என்பதை அந்தப் பதில் உணர்த்தியது” என உணரும் சிவாவின் மனம் அவனுடைய இருத்தலின் உண்மையான பெறுமதியை உணர்ந்துகொள்கிறது. பிறகு அவனுடைய முயற்சியெல்லாம் அந்த யதார்த்தத்தின் மீது, அதை மறைத்தும் மறந்தும் இன்னொரு இருத்தலை கட்டிக்கொள்வதுமட்டுமே.

## 3

நான் விரும்பும் அங்கத எழுத்தாளர்களில் ஒருவரான ஸக்கி எழுதிய டாபர்மெரி என்ற சிறுகதையில் டோபர்மெரி ஒரு பூனை பேசும். பூனை பேச ஆரம்பித்தபோதுதான் அதன் ஓர் இயல்பு அனைவருக்கும் தெரியும். சத்தமில்லாத காலடிகளுடன் நடக்கும் வல்லமை கொண்டது பூனை. பதுங்கியிருக்கும் உடல் கொண்டது. காத்திருக்கும் பொறுமையும் உடையது. மனிதனை அது நூற்றாண்டுகளாக வேவு பார்த்துக் கொண்டிருக்கிறது. அத்தனைபேரின் அந்தரங்கமும் அதற்குத்தெரியும். கடைசியில் டோபர்மெரி கொல்லப்படுகிறது. ‘நீ ஏன் ஒரு யானையை பேசப்பழக்கக் கூடாது? குறைந்தபட்சம் நம்முடைய படுக்கைகளுக்கு அடியில் வந்து படுத்துக் கொள்ளாதல்லவா?’ என்று அதைப் பேசப்பழக்கிய நிபுணரிடம் சொல்கிறார்கள்.

டோபர்மெரியை நினைவுறுத்துகிறது நடேசனின் இந்நாவலில் வரும் கொலிங்வூட் என்ற பேசும் பூனை. ‘கொலிங்வூட் மெதுவாக வயிற்றில் முன்காலை வைத்து பின்னங்கால்களில் நின்றபடி சுந்தரம்பிள்ளையின் காதருகே முகத்தை உராய்ந்தது.

‘இந்த மனிதன் இப்படித்தான். கொஞ்சம் நாகரீகம் குறைவு. நீ அதை பொருட்படுத்தாதே. மனதில் எதையும் மறைத்து வைத்திருக்கத் தெரியாது’ - என அது பேச ஆரம்பிக்கும் கணம் இந்நாவலின் அடுத்த தளம் திறந்துகொள்கிறது.

சிவாவின் சவால் அவன் முன் விரிந்திருக்கும் ஆஸ்திரேலிய வாழ்க்கைக்குள் ஓர் இடைவெளியில் பொருந்துவது. அவனால் அங்குள்ள வாழ்க்கையை அன்னியனின் கண்களுடன் மட்டுமே பார்க்கமுடிகிறது. அந்த வாழ்க்கையில் இருந்து அவனை நோக்கி நீண்டுவரும் பிரியத்தின் குரல் என்று கொலிங்வூட்டைச் சொல்லலாம். அவன் மனைவி சொல்வதுபோல அது அவனுடைய

பிரமையாக, மனச்சிக்கலாகக் கூட இருக்கலாம். ஆனால் இறுகி உறைந்த அந்த அன்னிய நாகரீகத்தின் நெகிழ்ந்த ஒரு துளி அந்தப்பூனை.

கொலிங்வூட் தமிழனிடம் பேசும் ஆஸ்திரேலியாவின் ஆன்மா என்று நினைத்துக்கொண்டேன். வெறுமொரு அனுபவப்பதிவாக நின்றுவிட எல்லா சாத்தியங்களும் கொண்ட இந்நாவலை ஒரு முக்கியமான கலைப்படைப்பாக ஆக்குவது இந்தப்பூனையின் கதாபாத்திரம்தான். தமிழில் பேசும்பூனைகளும் கிளிகளும் முன்னர் வந்திருந்தாலும் ஆசிரியரின் மறைமுகக்குரலை ஒலித்து தத்துவம்பேசாமல் தெளிவாக குணச்சித்திரத்துடன் தெளியும் கொலிங்வூட்டின் புன்னகைக்கும் முகத்தைத்தான் முதன்மையானதாகக் கருதுகிறேன்.

மாமன்னர் அசோகர் மிருகங்களுக்காக ஒரு வைத்தியசாலையை அமைத்தார் என்பது வரலாறு. ஓர் அம்மையார் தர்மத்துக்காக அமைத்த மிருகவைத்தியசாலையில் பணிபுரியும் சிவாவின் அனுபவங்களே இந்நாவலின் உடல். அறியப்படாத ஒரு தனியுலகம். நோயுற்ற மிருகங்கள் வந்தபடியே உள்ளன. அவை ஒவ்வொன்றும் தெளிவான குணங்கள் கொண்ட ஆளுமைகள். அவற்றின் உரிமையாளர்களுக்கும் அவற்றுக்குமான உறவும் பல உள்ளோட்டங்கள் கொண்டவை.

ஒவ்வொன்றாகச் சொல்லிச்செல்லும் இந்நாவல் ஒருகட்டத்தில் இரண்டு எண்ணங்களை நோக்கிச் செலுத்துகிறது. ஒன்று, இந்த வாழ்க்கை மனிதர்களால் மட்டும் ஆனது அல்ல, மிருகங்களும் வாழ்க்கையின் பிரஜைகளே என்ற பார்வை. இன்னொன்று இங்கே மிருகங்கள் என சொல்லப்பட்டிருப்பவை மிருகங்கள்தானா என்ற எண்ணம். இவ்விரு கோணங்களும் இந்நாவலை இருவேறு வாசிப்புச்சாத்தியங்களை நோக்கிச் செலுத்துகின்றன. அதுவே இந்நாவலின் அழகியலின் வெற்றி.

மிருகங்களின் நோயுலகத்துக்குச் சமானமாக ஓடுவது அந்த வைத்தியசாலையின் ஊழியர்களின் உள்ளரசியல். காமமும் பொறாமையும் தொழில்போட்டியும் புரிதலின்மைகளும் நட்பும் கலந்து உருவாகும் ஒரு விளையாட்டாக அது நாவலின் உடலெங்கும் விரிகிறது. ஒவ்வொருவருக்கும் ஓர் ஆளுமையை, வாழ்க்கைப்புலத்தை, வரலாற்றுப்பின்னணியை முன்வைக்கிறது நாவல். அராபியர்கள், சீனர்கள், ஐரோப்பியர்கள் என பல்வேறு

இனங்களில் இருந்து அந்தப்புதிய நிலத்தில் வாழவந்த சமூகங்களின் பிரதிநிதிகள் அவர்கள்.

எளிய உறவுவிளையாட்டாக ஆரம்பிக்கும் இந்த சித்தரிப்பு நாவல் விரிய விரிய ஆஸ்திரேலியாவின் சமூக-அரசியல் வாழ்க்கையின் சித்திரமாகவே தென்படுகிறது. ரிமதி, பார்தோலியஸ், ஜோஸே, மரியா, மிஷேல், பாலின், கார்லோஸ், சாருலதா என நினைவில் மோதும் பெயர்கள் வழியாக பண்பாடுகள் குழம்பிக்கலந்து உருவாகும் ஒரு புதியபண்பாட்டின் துளியை வெற்றிகரமாகச் சித்திரிக்கிறார் நடேசன் என்னுடைய வாசிப்பில் தமிழில் எழுதப்பட்ட ஒரு நாவலில் ஓர் அன்னிய நாட்டின் சமூகவியலும் பண்பாடும் இத்தனை நுட்பமாக விவரிக்கப்படுவது இதுவே முதல்முறை. இதற்குச் சமானமாகச் சொல்லப்படவேண்டியது ப. சிங்காரத்தின் புயலிலே ஒருதோணி நாவலின் ஆரம்பப் பக்கங்களை மட்டுமே.

ஒரு வாசகன் எளியவாசிப்பில் இவ்விரு உலகங்களையும் தொடர்பற்றவையாக எடுத்துக்கொள்ளக்கூடும். ஆனால் கற்பனையால் அவற்றை இணைக்க முடிந்தால் ஆசிரியர் உருவாக்கும் வாழ்க்கைத் தரிசனம் முழுமையாகக் கிடைக்கலாம்.

## 4

வாழ்க்கை கைக்குள் நிற்காமல் வழிந்து விரிந்து பரவிக் கொண்டிருப்பதை எப்போதும் இலக்கியவாதி உணர்வான். அனைத்தையும் சொல்லிவிடமுடியாதென்ற பதைப்பை ஒவ்வொன்றைச் சொல்லும்போதும் அவன் உணர்வான். ஆகவே வாழ்க்கையை முழுக்கச் சொல்லிவிடக்கூடிய வாழ்க்கையின் ஒரு பகுதியை அவன் வெட்டி எடுத்துக்கொள்வான். ஒரு குடும்பம், ஒரு தெரு, ஒரு நகரம். இது ஒரு மருத்துவமனை.

ஒருவாசகனாக இந்த மருத்துவமனை எனக்கு ஆண்டன் செகோவின் ஆறாவது வார்டை, தாம்ஸ்மன்னின் மேஜிக்மௌண்டனை, ஷோல்செனித்ஸினின் கான்சர்வார்டை நினைவுறுத்தியது. நோயில் பிரதிபலிக்கும் வாழ்க்கை. உதிர்ந்தவற்றால் காட்டப்படும் காடுபோல. இங்கே வேறுபாடு விதவிதமான நோயாளிகளாக வந்துகொண்டே இருக்கும் மிருகங்கள்.

என் தந்தையின் வழியில் நான் அடைந்தது மிருகங்கள் மீதான பிரியம். இந்த நாவலை பெரும் பரவசத்துடன் என்னை

வாசிக்கவைத்த அம்சம் அதுதான். குறிப்பாக நாய்கள். இருபத்துமூன்று சகநாய்களின் கூண்டுகளிலும் புகுந்து மிஞ்சியதை முழுக்கத் தின்னும் அந்த லாப்ரடாரைக் கண்டால் அதை கொஞ்சாமல் என்னால் நகரமுடியாது. அந்த வேகம் உணவாக முன்னால் வந்து நிற்கும் இவ்வுலகின் மீதான பெரும் பற்று அல்லவா?

ஞானியின் சமநிலைமிக்க எளிமையுடன் இவ்வுலகை விட்டுச் செல்கிறது கொலிங்வூட். "கொலிங்வூட், உனது கடைசி ஆசை என்ன?" "எனக்குப் புரிந்து விட்டது. ஒழுங்காக என்னைக் கருணைக்கொலை செய்" என்ற வரிகளில் இந்நாவலின் உச்சத்தை நான் கண்டறிந்தேன். இயல்பாக இருந்து இயல்பாக உதிரும் கொலிங்வூட்டின் நிமிர்வுக்கு முன்னால் விதவிதமாக திருகி வளைந்து நெளிந்து நின்றிருக்கிறார்கள் மனிதர்கள். எளிய உயிர்கள்.

# என்னுரை

இலக்கியம் என்பது அனுமானம், அனுபவம் மற்றும் அவதானிப்பில் பிறக்கிறது என சொல்வார்கள். இலங்கையில் மதவாச்சி என்னும் பிரதேசத்தில் தொழில் நிமித்தம் வாழ்ந்த காலப்பகுதியில் எனக்கு ஏற்பட்ட அனுபவத்தையும் அவதானிப்பையும் பின்னணியாக வைத்து உருவாகியது எனது முதல் நாவல் வண்ணாத்திக்குளம்.

இலங்கை அரசியலில் சாதாரண சிங்கள மக்களின் மனங்களில் இனவாதத்தை தூவிய சிங்கள அரசியல்வாதிகளினாலும் - அதேபோல் தமிழ் இளைஞர்களுக்கு உணர்ச்சியூட்டி கொம்பு சீவிய தமிழ் அரசியல்வாதிகளாலும் ஏற்பட்ட இனநெருக்கடிகளை கோடிகாட்டி எழுதப்பட்ட இந்த நாவல்; ஆங்கிலத்திலும் (Butterfly Lake), சிங்களத்திலும் (சமணலவெள) மொழி பெயர்க்கப்பட்டது.

நான் பிறந்த நாட்டில் எனக்கிருந்த அபிமானத்தால் வண்ணாத்திக்குளம் நாவல் எழுதப்பட்டதே அல்லாமல், எழுத்தாளராகவோ அல்லது நாவலாசிரியராகவோ வரவேண்டுமென்ற எண்ணத்தில் நான் அந்த நாவலை எழுதவில்லை.

அதன் பின்னர் அவுஸ்திரேலியா நியூசவுத்வேல்ஸ் மாநிலத்தில் நான் பணியாற்றிய மேற்கு சிட்னி பல்கலைக்கழகத்தின் பின்புலத்தில் எழுதிய நாவல் உனையே மயல்கொண்டு.

பெண்கள் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்த பின்பும் ஏற்கனவே அவர்கள் தமது தாயகத்தில் எதிர்கொண்ட வன்செயலின் பாதிப்புகள் எப்படி தொடர்கிறது என்பதை உளவியல் ரீதியாக சித்திரிக்கும் முயற்சிதான் உனையே மயல்கொண்டு என்ற எனது இரண்டாவது நாவல். குறிப்பிட்ட இரண்டு நாவல்களும் இலங்கைப் பிரச்சினைகளைக் கருவாகக் கொண்டவை.

மூன்றாவது நாவலான அசோகனின் வைத்தியசாலை எனது புகலிட வாழ்வில் முக்கிய பகுதியான - சுமார் ஆறு வருடங்கள் மிருகவைத்தியராக தொழில்புரிந்த மெல்பன் வைத்தியசாலையொன்றின் பின்னணியில் புனையப்பட்டது.

இந்த வைத்தியசாலையில் எனக்கேற்பட்ட பல அனுபவங்கள் - அங்கிருந்த செல்லப்பிராணிகளோடு தொடர்புடைய சம்பவங்கள் எனது வாழும் சுவடுகளில் தொகுப்பில் பதிவாகிவிட்டன. எனினும் அசோகனின் வைத்தியசாலை - அங்கு என்னோடு தொழில்புரிந்த மனிதர்களையும் அவர்களின் செய்கைகளையும் பார்த்துப் பெற்ற நேரடி அனுபவங்களிலிருந்தும் அவற்றின் அகப்பின்னணிகளை புரிந்து கொள்ளும் முயற்சியிலும் உருவானது.

இலங்கை - இந்திய கலாச்சார பின்னணியில் இருந்து வந்து புதிய கலாச்சாரம் ஒன்றில் தனித்து விடும்போது - நுண்மையான அவதானிப்புகள் கொண்ட ஒருவனுக்கு இந்த வைத்தியசாலை ஒரு காட்சிச்சாலையாக அல்லது சுயவிசாரணைக்குத் தள்ளிவிடும் பரிசோதனைக்கூடமாகவோ மாறிவிடுகிறது. அதனால் பெற்ற அவதானிப்பும் மற்றும் அனுபவமும் உந்தியதனால் உருவான புனைவுதான் அசோகனின் வைத்தியசாலை.

உலகத்தின் பெரும் நாவல் இலக்கியங்கள் கதாநாயகன் வெளியிடம் செல்வதையோ அல்லது அன்னியன் புதிய இடத்திற்கு வருவதையோதான் கருப்பொருளாக கொண்டிருக்கின்றன. ஹோமரின் ஒடிசியில் இருந்து இராமரது பயணத்துடன் தொடங்கும் இராமாயணமும் இந்தக் கருப்பொருளில் இருந்து உருவாகி - இதிகாசம், கற்பனைவாதம், மொடனிசம், போஸ்ட் மொடனிசம் எனக் காலங்களைக் கடந்து பயணித்து வருகிறது.

அசோகனின் வைத்தியசாலையின் கருப்பொருளில் நாயகன் வெளி செல்வதோ அன்னியனாக புதிய இடத்துக்கு வருவதோ என்ற புரிதல் வாசகர்களை சார்ந்தவிடயம் என்பதாக இந்த நாவல் அமைந்துள்ளது.

வழமையான கருப்பொருளைக் கடந்த மனசாட்சி என்பது என்ன? அது எப்படி உருவாகிறது என்று பலகாலமாக இருந்த எனது கேள்வி இந்தக் நாவலில் ஆன்மாவாக ஊடுருவுகிறது. இதை மெதுவாக எழுத்தாளர் ஜெயமோகன் தொட்டுச் சென்றாலும் நான் சிறிது விளக்க விரும்புகிறேன். நிக்கலஸ் ஹம்பிரி (Nicholas Humphrey) என்ற பிரித்தானிய உளவியலாளர் மனசாட்சி என்று நாம் அழைக்கும்

*(Consciousness)* என்பது உருவாகும் விதத்தை விளக்கியது என்னை மிகவும் கவர்ந்தது.

'நாங்கள் உருவாக்கிய அரங்கத்தில் நடத்தப்படும் ஒரு விந்தையான நாடகமே மனசாட்சி' என்கிறார்.

*Consciousness is a magical mystery show that you lay on yourself and you respond to sensory input by creating a personal response.*

எம்மைச் சுற்றி உள்ள விடயங்களைப் பார்ப்பதாலும் கேட்பதாலும் எமக்கு உருவாகும் மனப்பதிவு இந்த மனசாட்சி. இக்கால மொழியில் புரோக்கிராம் பண்ணப்பட்ட கணினியின் மென்பொருள் போன்றது. அப்படியானால் பிறவியிலேயே ஊமையாகவும் குருடாகவும் இருக்கும் ஒருவனுக்கு மனசாட்சி உருவாகாதா? மேலும் மனநோயால் பாதிக்கப்பட்டவர்களது நிலை என்ன? அவர்கள் மனசாட்சி இல்லாதவர்களா? என எழுப்பிய கேள்விகளின் விளைவுதான் வைத்தியசாலையில் வளரும் கொலிங்வூட் என்ற பூனை.

இந்தப் பூனையின் மனசாட்சி அந்த வைத்தியசாலையில் உள்ள மனிதர்களின் சிந்தனை, செயல், பேச்சு என்பதற்கு அமைய உருவாகிறது. அந்தப் பூனை பேசும்போது எப்படி இருக்கும்? அதனது நடத்தையில் எப்படியான அற உணர்வு தெரியும் என்பனவற்றின் அனுமானம் அந்த வைத்தியசாலைக்குரிய அறம் சார்ந்த யதார்த்தமாக *(Moral realism)* இந்த கதையில் சொல்லப்பட்டுள்ளது.

இலக்கியம், அறிவுரை முடிவுகளைத் தரக்கூடாது என்பதால் - அவைகள் முடிவுகள் அல்ல; கேள்விகள் மட்டுமே.

மனிதர்களின் உடல் இயக்கம் நின்ற பின்பு ஆன்மா வெளியேறுவதாக நினைக்கிறோம். அந்தச் சிந்தனை மனிதர்களுக்கு எப்படி வந்தது?

கனவுகளில் மனிதர்கள் வெளியிடங்களுக்கு ஏன் வேறு உலகத்திற்கே செல்கிறார்களே! இதனது விளைவுதான் உடலை விட்டு வெளியேறும் ஆன்மா என்ற சிந்தனையின் வரலாறா? அப்படியென்றால் மனிதர்கள் மரணத்திற்கு பயப்படுவதும் காலம் காலமாக மரணத்தை தள்ளிப் போடுவதற்கான ஒரு முயற்சிதான் மனிதர்களிடம் தெய்வத்தைப் பற்றிய சிந்தனையை உருவாக்கியதா?

*நிக்கலஸ் ஹம்ரியின் கூற்றான மனசாட்சி என்பது மனிதர்கள் தங்களை பாதுகாத்து வாழ்வதற்கான உணர்வேயாகும். அந்த உணர்வில் உருவாகிய ஆன்மீக உணர்வில் இருந்துதான் ஒட்டுண்ணியாக தெய்வ நம்பிக்கையும் பின்பு மத உணர்வுகளும் எக்காலத்திலும் வாழ்ந்து வருகிறது என்ற கூற்றில் எவ்வளவு உண்மை உள்ளது?*

*தற்போது அந்த மத உணர்வுகள் தெய்வ நம்பிக்கைள் உருவாக்கிய மனசாட்சிகள் தற்காலத்து மனிதர்களது செயல்களை மட்டுமல்ல இனக்கூட்டங்களினதும் அரசுகளினதும் நடவடிக்கைகளை தீர்மானிக்கிறதே.*

*இந்தக் கேள்விகளுடன் கதைசொல்லியும் அவனுடன் சுந்தரம்பிள்ளையும் மற்றும் கொலிங்வூட் என்ற பூனையும் வலம் வருவதுதான் இந்த அசோகனின் வைத்தியசாலை நாவலில் உள்ள ஆன்மா. வைத்தியசாலையில் நடைபெறும் சாம பேத குரோதம் இந்த நாவலின் உடலாகிறது.*

*புலம் பெயர்ந்த கலாச்சாரத்தின் மொத்தப்பதிவு என்பதால் தமிழில் தொடக்க முயற்சி. ஆனால் வெற்றியா தோல்வியா என்பது இதை வாசிப்பவர்கள் சொல்லவேண்டியது.*

*இந்நாவலை படுக்கையில் இருந்தபடி ஆயிரம் இரவுகளில் மின்விளக்கைப் போட்டு எழுதும்போது என்னை அனுசரித்துச் சென்ற எனது மனைவி சியாமளாவுக்கும் எழுத்துப் பிழைகளைத் திருத்திய எழுத்தாளர் முருகபூபதிக்கும் இந்த நாவல் எனது இணையத்தில் வந்தபோது வாசித்து தனது எண்ணத்தை எழுதி இதை வெளியிட துணை செய்த கவிஞர் கருணாகரன் மற்றும் அறிமுகவுரை எழுதிய எழுத்தாளர் ஜெயமோகன் ஆகியோருக்கும் மேலும் இணையத்தில் தொடர்ந்து வாசித்துவிட்டு உற்சாகம் தந்த தமிழ்நாட்டு எழுத்தாளர் சுப்பிரபாரதிமணியன், இந்த நாவலை பதிவுகள் இணையத்தளத்தில் வெளியிட்ட எழுத்தாளரும் கவிஞருமாகிய கனடா கிரிதரன் இதை வெளியிட முன்வந்த மகிழ் பதிப்பகத்தினருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.*

*அன்புடன்*

*10.12.2013* **நடேசன்**

Email: uthayam12@gmail.com

# முதலாம் பாகம்

# 1

தலமறீன் ஏர்போட்டில் இருந்து பேண்ரீகலி கத்தோலிக்க தேவாலயத்தில் நடக்கும் மரணசடங்கில் கலந்து கொள்வதற்காக வேகமாக காரை ஓட்டிவந்தான் சுந்தரம்பிள்ளை. ஒரு மணிநேரமாவது செல்லும் என நினைத்தவனுக்கு ஐம்பது நிமிட நேரத்தில் வந்தது ஒரு சாதனைதான் என நினைத்துக்கொண்டு காரை எங்கு நிறுத்தலாம் என பார்த்த போது தேவாலயத்தின் முன்பகுதியின் பாதையோரங்கள் ஏற்கனவே பலரால் கார் நிறுத்த பாவிக்கப்பட்டது தெரிந்தது. மரண ஆராதனைகள் தொடங்கியிருக்காது என்று தனக்குள்ளே கூறிக்கொண்டு தேவாலயத்தின் பின்பகுதியில் காரை நிறுத்திவிட்டு ஆலயத்தை நோக்கி வேகமாக நடந்தான் சுந்தரம்பிள்ளை.

தேவாலயம் பிரதான பாதையில் அமைந்துள்ளது. ஆலயவாசல் உயரமான யுகலிப்டஸ் மரத்தினால் மறைக்கப்பட்டடிருந்தது. அதனது கிளைகள் வெயிலுக்கு நிழலாக இருந்தது. மரத்தின் ஆளுயரத் தாழ்வான கிளைகள் மின்சாரசபையால் வெட்டப்பட்டிருந்தது. அப்படி வெட்டிய கிளையில் மீண்டும் கொழுந்துகள் துளிர்க்கத் தொடங்கி இருந்தன. அந்த துளிரின் அருகில் சிறு இரண்டு மக்பைகள் சோடியாக இருந்தன. தலையை அசைத்தபடி அவைகள் ஒன்றோடு ஒன்று உரையாடுவது போல் தெரிந்தது. அவைகளுக்கு அருகில் பிரதான மரத்தில் சிக்காடா ஒன்றின் ரிங்காரம் காதைக் கிழிப்பது போல் இருந்தது. நிலத்தின் கீழ் வெளிவரும் இந்த பச்சை நிறமான வெட்டுப்பூச்சி வகையறாவைச் சேர்ந்த சிக்காடாவின் சத்தம் வாத்தியத்தின் சத்தம் போல் பலமாக இருக்கும். மக்பையும் சிக்காடாவும் கூட ஜோனின் மரண ஆராதனைக்கு வருகை தந்திருக்கின்றன.

ஆனால் இவை எல்லாம் மிசேலுக்கு ஆறுதலளிக்குமா?

ஜோனினது நினைவுகளுடன் உள்ளே நுழைந்த போது தேவாலய மேடையருகே நின்ற மிஷேல் கண்ணுக்குத் தெரிந்தாள். கருமையான

உடையணிந்து போதகருடன் ஏதோ பேசிக் கொண்டிருப்பதாக தெரிந்தது. தேவாலயத்தின் உள்ளே நூற்றுக்கு மேற்பட்டவர்கள் இருப்பது அனுமானிக்க முடிந்தாலும் வைத்தியசாலையை சேர்ந்தவர்கள் இருக்கிறார்களா என கவனமாக மீண்டும் பார்த்த போது வைத்தியசாலையை சேர்ந்தவர்கள் இடது பக்கத்தில் ஏற்கனவே வந்து அமர்ந்திருக்கிறார்கள் என்பது தெரிந்ததும் மெதுவாக உள்ளே சென்று காலோஸ்ஸின் பக்கத்தில் இருந்த காலி இடத்தில் அமர்ந்துகொண்டான் சுந்தரம்பிள்ளை.

மரண ஆராதனைகள் எப்பொழுதும் கசப்பானவை. இது மிகவும் வேதனையான மரணம். இதே தேவாலயத்தில் நான்கு வருடங்கள் முன்பு ஜோனின் திருமணத்திற்கு சென்றதும் திருமணத்தின் பின்பு தம்பதிகளாக அவனும் மிஷேலும் தேவாலயத்தின் முன்னால் உள்ள யூகலிப்ரஸ் மரத்தின் கீழ் ஒன்றாக படம் புகைப்படம் எடுத்துக்கொண்டது இன்றைக்குப் போல் இருக்கிறது.

அது ஒரு வசந்தகாலத்து காலை நேரம்.மெதுவான குளிருடன் வீசிய காற்றில் சுற்றி இருந்த டண்டினோங் மலைபிரதேசத்து நறுமணங்கள் நிறைந்து இருந்தது. இயற்கையின் ரம்மியமான சூழலில் புன்னகையை எங்கும் தூவியபடி நிலத்தை தழுவும் வெள்ளைக் கல்யாண உடையில் வானத்தில் இருந்து வந்த தேவதை போல் பூத்து குலுங்கிய வெள்ளை ரோஜா செடியாக அலங்காரத்துடன் ஜோன் அருகில் நின்று ஒவ்வொருவரையும் புகைப்படத்திற்கு அழைத்துக் கொண்டு நின்றவள் இப்பொழுது கறுப்பு உடையில் அவனருகே விம்மியபடி நின்றாள்.

ஜோன் உயிரற்ற உடலாக அந்த பெட்டியுள் அலங்கரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தான்.

மிஷேலுக்கு நடந்தது எந்த விதத்தில் பார்த்தாலும் அநியாயமாகப்பட்டது. இவ்வளவு அவசரமாக அவள் விதவையாக்கப் பட்டிருக்கிறாள்.விதி, தெய்வம் ,நோய் என்று அவரவர் நம்பிக்கைப்படி காரணங்கள் மனதில் தோன்றினாலும் சுந்தரம்பிள்ளையின் இதயம் தண்ணீரில் போட்ட வெல்லக்கட்டியாக மாறியது.

காலோஸ் கையில் தட்டி ‘ஏன் வேலையை விட்டாய்?’

‘நான் எதற்காக வேலையில் சேர்ந்தேனோ அந்த விடயம் நிறைவேறிவிட்டது’

‘அதென்ன?’

‘இலங்கையில் இருந்து இங்கு வந்த போது எந்த இடத்திலும் வேலை செய்வதற்கு என்னை தயாராக்குவது எனது நோக்கமாக இருந்தது. புதிய நாட்டில் மற்றவர்களை நம்பாமல் என்னை மட்டுமே நம்புவதற்கு இந்த அனுபவம் போதுமானது. ஐந்து வருடம் வேலைசெய்ததனால் இனி எங்கும் வேலை செய்வதற்கு என்னைத் தயாராக்கியது’

‘நீ செய்தது சரி நானும் எப்போதோ விலகி இருக்க வேண்டும்’.

‘நான் சொந்தமாக தொழில் செய்ய முடிவு செய்து விட்டேன்’

மதகுரு தனது பேச்சை தொடங்கினார்.

‘எங்கள் ஜோன் மிகவும் கண்ணியம் நேர்மை கொண்டவர். அவரை மிஷேல் மணந்து கொண்டபோது இந்த தேவாலய குடும்பத்தினர் அளவு கடந்த மகிழ்சி கொண்டோம். ஆனால் இவ்வளவு விரைவாக ஜோனை இந்த உலகத்தில் இருந்து அழைத்துக் கொள்வார் என்பது எவருக்கும் ஜீரணிக்க முடியாது. ஆனாலும் பிதா தனக்கு மிகவும் பிரியமானவர்களை தன்னிடம் அழைத்துக்கொள்கிறார்...

சுந்தரம்பிள்ளையால் மதகுருவின் பிரசங்கத்தை பொறுத்துக் கொள்ளமுடியவில்லை. அரைத்த மாவை அரைப்பது போல் இருந்தது அவரது பேச்சு. அருகில் இருந்த காலோஸ் கத்தோலிக்க மதத்தை மிகவும் நம்பிக்கை கொண்டவன். தீவிரமாக முகத்தை வைத்துக்கொண்டு மதகுருவின் பிரசங்கத்தை கேட்டுக்கொண்டிருந்தான். மரணசடங்கு நடக்கும் இடத்தில் இருந்து இடையில் வெளியேறுவது நாகரீகமாக இருக்காது.

வேலையில் இருந்து விலகிய காரணத்தை இலகுவாக காலோஸுக்கு சொன்னாலும் வைத்தியசாலையை விட்டு விலகிய காரணம் எது என்பது அவனுக்கே புதிராக இருந்தது.

ஷரன் விலகி சென்றதா?

இல்லை.

கொலையாளியை தண்டனையில் இருந்து தப்ப உதவியதா?

வைத்தியசாலையின் சுந்தரம்பிள்ளையின் ஐந்து வருட நினைவுகள் மெதுவாக மனதில் நகர்ந்தன.

□ □ □

மெல்பன் நகரில் அமைந்துள்ள மிருக வைத்தியசாலை ஒரு விதத்தில் மகத மன்னன் அசோகன் உருவாக்கிய வைத்தியசாலை போன்றது. புத்த சமயத்தை தழுவிய அசோகன் பிரயாணத்தில் களைத்த மிருகங்களுக்கு இளைப்பாறவும் நோய் கண்ட மிருகங்களை மருத்துவம் பார்க்கவும் தனது ஆணைக்கு உட்பட்ட பிரதேசமெங்கும் மிருக வைத்தியசாலைகள் உருவாக்கியதாக சரித்திரம் கூறுகிறது. அந்த கோட்பாட்டில் மெல்பனில் உருவாக்கப்பட்ட இந்த மிருக வைத்தியசாலை எந்த நோயுற்ற விலங்குகளினதும் பிணி தீர்க்கும் இடம் என பலரால் சொல்லப்பட்டதாலும் மிருக வைத்தியத்தின் சகல நுட்பங்களையும் அங்கு பணியாற்றி அனுபவத்தில் தெரிந்து கொள்ளமுடியும் ஒரு போதனாவைத்தியசாலை போன்றது என பலர் கூறியதனாலும் அங்கு வேலைக்கு விண்ணப்பித்திருந்தான் சிவநாதன் சுந்தரம்பிள்ளை.

இலங்கையில் முப்பது வருடப் போர் பல தமிழர்களை புட்டுக்குழலில் இருந்து புட்டுத்தடி புட்டுகளை வெளித் தள்ளுவது போல் சொந்தமான வாழ்விடங்களில் இருந்து தள்ளிவிட்டது. அதனால் வாழ்விடங்கள், வாழ்க்கைப் பாதை மற்றும் கலாச்சார அடையாளங்களை மட்டும் மாற்றவில்லை. மனிதர்களின் மிக முக்கியமான அடையாளங்களில் ஒன்றான திருநாமத்தையும் மாற்றி குறுக்கி அழித்து குழந்தைகள் வெட்டித்தள்ளிய கடுதாசித்தாளாக பல வடிவங்களாக்கியது. கீழைத்தேய கலாச்சாரத்தைக் கொண்ட நாடுகளில் இருந்து வந்திறங்கியவர்கள், தங்களது நாமங்கள் வந்தேறிய நாட்டினரது வாய்களில் சுலபமாக நுழைந்து நாக்கில் வெளிவர வேண்டியதை கருத்தில் கொண்டு தாங்களாகவே புதிய ஞானஸ்தானம் எடுத்து சிறிய பெயரை சூட்டிக்கொண்டார்கள்.

இதை ஞானஸ்தானம் என சொல்வதின் காரணம் பெரும்பாலான பெயர்கள் கிறீஸ்தவ பெயர்கள். ஆனால் பாதிரிமாரின் பங்கில்லாமல் இலங்கைத் தமிழர் மத்தியில் கிறிஸ்துவ சமயம் வளர்ந்தது. இந்தப் பெயர் மாற்றம் ஒரு விதத்தில் இவர்களின் கலாச்சார மாற்றத்தின் முதல் படியாக அமைகிறது. வந்து குடியேறிய நாடுகளின் கலாச்சார சமுத்திரத்தில் கலந்து கரைந்து விட இலகுவாகிறது.

இப்படித்தானாக மாற முரண்டு பிடித்தவர்களுக்கு வேலைத் தலங்களில் உள்ளவர்கள் புதிய பெயர் சூட்டி மகிழ்ந்தார்கள். ஆனால் சுந்தரம்பிள்ளையின் மகனான சிவநாதன் மெல்பன் ஏர்போட்டில் வந்து இறங்கியபோது அவுஸ்திரேலிய சுங்க அதிகாரிகள் சிவநாதன் சுந்தரம்பிள்ளையாக்கி விட்டார்கள். சிவநாதனை சுருக்கி சிவா சுந்தரம்பிள்ளையாக அழகு படுத்தியவர்கள் பிற்காலத்தில் வேலைகளை தேடி செல்லும் காலத்தில் சந்தித்த மனேஜர்கள். இந்தப் பெயர் மாற்றம் அவர்களுக்கு இலகுவாக இருந்தது. முழுப் பெயரையும் கஷ்டப்பட்டு உச்சரித்து வேலை காலி இல்லை என்பதைவிட 'சிவா மன்னிக்கவேண்டும்' என்று சொல்லுவது நிச்சயமாக அவர்களுக்கு வசதியாக இருந்தது

சுந்தரம்பிள்ளை தங்கி இருக்கும் புறநகர் மெல்பனின் கிழக்குத் திசையில் இருபத்தைந்து கிலோ மீட்டர் தொலைவில் அமைந்திருக்கிறது. அந்தப் பகுதியில் இருந்து மெல்பன் நகரத்தின் மத்தியில் அமைந்திருக்கும் அந்த மிருக வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டுமானால் மின்சார இரயிலில் மெல்பன் நகருக்குச் சென்று அங்கிருந்து மின்சார ட்ராமும் எடுக்க வேண்டும்.

காலையில் எழுந்து வேலைக்கான நேர்முகத்திற்கு போக வேண்டும் என்ற நினைவு இரவு முழுவதும் சப்பாத்துக்குள் விழுந்த சிறுகல்லாக துருத்தியபடியே இருந்ததால் இரவு நித்திரை தொடர்ச்சியாக இருக்கவில்லை. பல முறை எழுந்து கடிகாரத்தை பார்த்த போது ஒவ்வொரு முறையும் கடிகாரம் மெதுவாக ஓடுவதான உணர்வைக் கொடுத்தது. அதனால் வைத்த அலாராம் சரியாக வேலை செய்யுதா என மீண்டும் சரி பார்த்துவிட்டு இருமுறை படுத்தான்.

அன்றைய காலைவேளை எவரது அவசரத்தையும் பொருட்படுத்தாமல் திரைச்சீலை மூடி இருந்த கண்ணாடி யன்னலின் இடைவெளிகள் ஊடாக மெதுவாக எட்டிப் பார்த்தது. அந்த நேரத்தில் கடிகாரம் ஆறரை மணியாகியது. மல்பெனில் வசந்தகாலம் குளிராகவும் தாமதமாகவும் சூரியனை வெளிகாட்டும். குளித்து வீட்டைவிட்டு வெளிக் கிளம்பியபோது காலை ஏழரை மணியாகியதால் கிழக்கை நோக்கிய அந்த வீட்டில் முற்றத்தில் நல்ல வெளிச்சமாக இருந்தாலும் வானத்தில் சூரியனைக் வெளிக்காட்டாமல் மேகங்கள் ஒளித்து வைத்துக்கொண்டிருந்தன. ஈரலிப்பான அந்த சூழலில் வெளியே இரயில் நிலையத்தை நோக்கி நடந்தபோது காற்றின் மிதக்கும் நீர்துளிகள் உடையில் படிந்து ஈரமாவது போன்ற உணர்வைக் கொடுத்தது.

பொக்சில் என்ற அந்த புறநகரத்தில் இரயில் நிலையம் ஐந்து நிமிடம் நடக்கும் தூரத்தில் உள்ளது. அவசரமாக மற்றவர்களோடு சேர்ந்து நடந்து பிளாட்பாரத்தை அடைந்தபோது இரயில் வரச் சரியாக இருந்தது.

மின்சார இரயிலில் ஏறி இருக்கையில் இருந்து கொண்டு தன்னைச் சுற்றி இருப்பவர்களின் உடை அலங்காரத்தை பார்த்துக் கொண்டான். இலங்கையில் இருக்கும் வரையில் உடையலங்காரத்தில் விசேடமாக கவனம் செலுத்தியது கிடையாது. ஆறடிக்கு இரண்டு அங்குலம் குறைந்த உயரத்துடன் சிவப்பு நிறத்தில் பாடசாலைக்காலத்திலே சராசரியிலும் மேலான அழகான தோற்றம் இயற்கையாக இருந்தால், உடையலங்காரத்தில் அதிகம் கவனித்தது கிடையாது. அத்துடன் காதலி, வேலை என்பன இலங்கையில் இலகுவாக கிடைத்தது. புலம் பெயர்ந்தபின் அவுஸ்திரேலியாவில் நிலைமை மாறிவிட்டது. வேலை தேடிச் செல்லும் போது நாகரிகமாக வெள்ளைக்காரர் போல் செல்ல வேண்டும் என்று பலர் சொன்னதால் வேறு வழியில்லை. ஆனால் இது இலகுவான காரியமாக இருக்கவில்லை. கோட்டும் சூட்டும் அணிந்து ரை கட்டியபடி நேர்முகப்பரீட்சைக்கு செல்லும் போது சட்டை, ரை அத்துடன் சப்பாத்து என்பன பொருத்தமாக இருக்கவேண்டும். இலங்கையில் திருமணத்தன்று மட்டும் கோட்டு போட்டு ரை கட்டியது. அதன்பின் அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயரும்போது சூட் அணிந்தது நினைவுள்ளது. இப்படியாக இருந்த நிலைமை மாறி ஒவ்வொரு முறையும் வேலை தேடிப் போகும் போது சூட் அணிந்து ரை கட்டவேண்டிய நிலை வந்தது. இதனால் சில பிரச்சினைகள் எழுந்தன. அதில் முக்கியமாக அணிந்த சேர்ட்டுக்குப் பொருத்தமான கலரில் ரையை தேட வேண்டும். இந்தப் பிரச்சினையை தவிர்க்க தொடர்ச்சியாக வெள்ளைச் சட்டையை அணிவதையே வழக்கமாகக் கொண்டிருந்த சுந்தரம்பிள்ளைக்கு, தனது உடைகள் செயற்கையாக இருப்பது போன்ற உணர்வு வந்து இயற்கையற்ற தன்மையை உடலில் உருவாக்கிவிட்டது. இந்த உணர்வு வந்ததும் தன்னைச் சுற்றி இருக்கும் மற்றவர்கள் எப்படி இருக்கிறார்கள் என ஆராய வைக்கும்.

மெல்பன் நகரத்தை நோக்கி வேலைக்கு செல்பவர்களை தன்னுள்ளே அடைத்துக் கொண்டு செல்லும் காலை நேரத்து இரயில் என்பதால் பலர் சுந்தரம்பிள்ளை போன்று சூட் அணிந்தபடி இருந்தார்கள். பல இன மக்களைக் கொண்ட இந்த நகரத்தின் தன்மையை இந்த இரயிலில் பிரயாணம் செய்பவர்களும் பிரதிபலித்தார்கள். இந்திய ,சீன, ஐரோப்பியர் என சகல இனத்தவரும்

இருந்தது ஒரு விதத்தில் ஆறுதலாக இருந்தது. ஒரு இடத்தில் இருக்கும் போது அன்னியன் போல் இருப்பது எவருக்கும் மனதுக்கு உவகையாக இருப்பதில்லை. வேலைத் தலத்துக்குச் செல்லும் ஆண்கள் கைகளிலும் மடிகளிலும் பிரீவ் கேசுகளையும் பெண்கள் கைப்பைகளையும் மடியில் வைத்தபடி அமர்ந்திருந்தார்கள். மிகக் குறைந்தவர்களே இடம் கிடைக்காமல் நின்றார்கள். அந்த மின்சார இரயில் பெட்டியுள் பல்கலைக்கழக மாணவர்கள் முதுகில் தொங்கிய பைகளுடன் தனித்துத் தெரிந்தார்கள். அவர்களது கவலையற்ற கண்களும் இளமையான முகங்களும் கடந்து சென்ற இளமைப் பருவத்தை சுந்தரம்பிள்ளைக்கு நினைவு படுத்தத் தவறவில்லை.

சுந்தரம்பிள்ளைக்கு முன்பாக சீட்டில் இருந்த இளம் பெண் தனது கைப்பையில் இருந்து சிவப்பு ஸ்ரிக்கையும் சிறிய கண்ணாடியையும் எடுத்து உதட்டு சாயத்தை பூசிவிட்டு மீண்டும் உதட்டை திருப்தியுடன் பார்த்துக் கொண்டாள். இப்பொழுது அவளது உதட்டின் பளபளப்பில் அவளது கண்ணாடி தன் முகம் பார்த்தது.

சுந்தரம்பிள்ளையின் சீட்டில் யன்னல் அருகே இருந்தவர் அன்றைய த ஏஜ் தினசரியில் தன்னை பலவந்தமாக புதைத்துக்கொண்டிருந்தார். அந்த அகலமான பத்திரிகை பக்கத்தில் இருந்தவர்களுக்கு சொந்தமான இடத்தையும் அடைத்துக் கொண்டிருந்தது. அகலமான பத்திரிகைகள் இரயில் பிரயாணத்திற்கு ஏற்றவையல்ல. முன்னாலும் அருகிலும் அமர்ந்தவர்களின் வெளிகளை ஆக்கிரமித்துக்கொள்கிறது. அந்தப் பத்திரிகையின் ஆக்கிரமிப்பில் இருந்து சிறிது விலகி ஒரு மாணவன் தனது பாடப் புத்தகத்தை பிரித்து மடியில் வைத்து படித்துக் கொண்டிருந்தான். அவனது புத்தம் சிவாசுந்தரம்பிள்ளையின் கையை இடித்தபோது மெதுவாக திரும்பி மன்னிப்புக் கேட்டான்.

இலங்கையில் இருந்து குடியேறிய சுந்தரம்பிள்ளைக்கு அவுஸ்திரேலியாவில் மிகவும் பிடித்த இரண்டு விடயங்கள் தன்னால் மற்றவருக்கு அசௌகரியம் ஏற்பட்டால் உடனே மன்னிப்பு கேட்பது. அறிமுகம் அற்றவர்களையும் எப்படி இருக்கிறீர்கள் என நலம் விசாரிப்பது. இந்த நாட்டின் நல்ல விடயங்களை புரிந்து கொண்டாலும் அதை அனுபவிப்பதற்கு காலம் நேரம் வேண்டும். குடிவந்தர்களுக்கு செய்வதற்கு வேலை, குடும்பத்துடன் இருப்பதற்கு வீடு என்று அமையும்வரை இந்த நாட்டின் சிறப்புகளை சந்தித்தாலும் அனுபவிக்க மனம் வராது. மெல்பன் அழகான நந்தவனங்கள் கடற்கரைகள் நிறைந்த நகரம். இங்கு செல்வதற்கு எவரும் பணம்

வசூலிப்பது கிடையாது. ஆனால் இதை அனுபவிப்பதற்கு அழகியல் கொண்ட அமைதியான மனநிலை வேண்டும்.

சிவா சுந்தரம்பிள்ளை மனதில் சுய பச்சாதாபம். கடல் அலை தொடர்ச்சியாக கரையில் வந்து குதித்து மெதுவான சத்தத்துடன் மீண்டும் பின் வாங்குவது போல் மனதை அலைக்கழித்தது. இரயிலில் உள்ள எல்லோரும் ஏதோ வேலைக்காக சென்று கொண்டிருக்கிறார்கள். இவர்கள் மத்தியில் தான் மட்டும்தான் வேலை தேடிச் செல்பவன் என அவனுக்கு நினைப்பு வந்தது. இந்த நினைவுகளில் மூழ்குவதும் மீள்வதும் ஒரு பொழுது போக்காகவே பீடித்துக்கொண்டதோ என சிலகாலங்களாக சந்தேகம் வந்துவிட்டது. கோடைகாலத்தில் எருமை மாடு சேற்றில் உழன்று உடல் சூட்டை குறைப்பது போன்றதாகி விட்டது. இப்படிப் போனால் சுயபச்சாதாபம் போதை வஸ்துப் போல் மாறக் கூடும் என்ற உணர்வு சிவப்பு விளக்காக அச்சமூட்டியது.

இந்த சுயபச்சாதாபம் மனிதர்களுக்கு மட்டுமல்ல இனங்களுக்கே ஏற்படக் கூடியது. சில இனங்கள் தொடர்ச்சியாக பழி வாங்கப்பட்டன என அரசியல்வாதிகளால் தொடர்ச்சியாக கூறப்படும்போது இந்த மன உணர்வு தேசிய உணர்வாக மாறிவிடுகிறது. இவைகளைப் புரிந்து அறிந்து கொள்ள பகுத்தறிவு உதவினாலும் பலர் மனஉணர்வுகளின் கைதியாக ஆகிவிடுவது தவிர்க்க முடியாதது.

ஆறு மாதத்திற்கு முன்பு அடிலைட்டிற்கு இருநூறு கிலோ மீட்டருக்கு அப்பால் தென் அவுஸ்திரேலியாவில் உள்ள சிறிய நகரத்தில் சுந்தரம்பிள்ளை வேலை பார்த்தான். டொக்டர் சிலேட்டரின் கிளினிக்கில் உதவி வைத்தியர் பணி. சிலேட்டரின் மனைவியும் மிருக வைத்தியராக இருந்தபோதிலும் வேலை செய்வதில்லை. சுந்தரம்பிள்ளைக்கு வைத்திய வேலை புதிய இடத்தில் ஆரம்பத்தில் கஷ்டமாக இருந்தாலும் சமாளிக்கக் கூடியதாக இருந்தது. ஆனால் திருமதி சிலேட்டரின் அதிகாரம்தான் தாங்க முடியவில்லை. இரண்டு வேலைகளை ஒரே நேரத்தில் பணிப்பதும் பின்னர் வேலை முடிந்ததும் குறை சொல்லுவதுமாகவே அவள் இருந்தாள்.

ஒரு நாள் சுந்தரம்பிள்ளையால் தாங்க முடியவில்லை. டொக்டர் சிலேட்டரிடம் முறையிட்டான்.

‘எனக்குத் தரப்பட்டவேலையை நான் செய்து முடிப்பதற்கு முன்பு மீண்டும் அதை செய்யுமாறு சொல்ல வேண்டிய தேவை இல்லை.

நான் மேலாளர் இல்லாமல் வேலை செய்து பழக்கப்பட்டவன். உங்கள் மனைவியின் அதிகாரம் என்னை மூச்சுத் திணற வைக்கிறது'.

டொக்டர் சிலேட்டர் இங்கிலாந்தைச் சேர்ந்தவர். நகைச்சுவையாக 'நானும் இந்த மேலாதிக்கத்தில் பத்து வருடங்களுக்கும் மேலாக துன்பப்படுகிறேன். அவள் கர்ப்பமாக இருக்கும் காலத்தில்தான் எனக்கு சற்று நிம்மதியாக இருக்க முடிகிறது. இதன் விளைவுதான் எங்களுக்கு நான்கு குழந்தைகள்' சிரித்தபடியே சொன்னார்.

'அது உங்களுக்குக் கிடைத்த ஆயுள் தண்டனை. அதை நீங்கள் விரும்பி ஏற்றுக்கொண்டீர்கள். எனக்கு அப்படி இல்லைதானே?. நான் வேலையை விட்டு விடுகிறேன்' எனக்கூறிய போது, அவர் 'என்னால் வேலையை விடமுடியாது. நல்ல இடத்தில் உமக்கு வேலை கிடைப்பதற்கு எனது வாழ்த்துகள்'. எனச் சொன்னார்;.

சிவா சுந்தரம்பிள்ளை ஒருமாதத் தவணையில் வேலையை இராஜினாமா செய்தான்.

## 2

சிவா சுந்தரம்பிள்ளை அவசரமாக எடுத்த முடிவின் விளைவாக ஆறு மாதங்கள் வேலையற்று நிற்க வேண்டி இருந்தது. அந்தக் காலங்கள் மிகவும் முக்கியமானவை. பல இடங்களை பல மனிதர்களைப் பார்த்து பழகிய நாட்கள். அந்த ஆறுமாத காலத்தில் விக்ரோரியாவில் பல இடங்களில் இரு நாட்கள், ஒரு கிழமை என விடுப்பு எடுக்கும் மிருகவைத்தியர்களுக்குப் பதிலாக வேலை செய்தான். அறிமுகமற்ற சிறு நகரங்கள் மற்றும் மெல்பன் புறநகர்ப் பிரதேசங்கள் என சில இடங்களில் வேலை செய்யும்போது அந்தப் புதிய இடங்களும், புதிய மனிதர்களும் திரில் அனுபவமாக இருந்தாலும் மனதில் நிரந்தர வேலை இல்லையே என்ற அழுத்தம் பனை ஓலைப் பையில் சரசரக்கும் உயிர் நண்டு போல் எப்போதும் குடைந்து கொண்டிருக்கும்.

விக்ரோரியாவில் பக்கஸ்மாஸ் மெல்பனில் இருந்து நூறு கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. அதிகமாக பால் மாட்டுப்பண்ணைகள் உள்ள பிரதேசமாகும். சிவா சுந்தரம்பிள்ளை வேலைக்கான நேர்முகத்திற்குச் சென்ற போது அங்கு ஏற்பட்ட அனுபவம் வாழ்கையில் மறக்க முடியாதது மட்டுமல்ல. வாழ்வையே வேறு பாதையில் திருப்பியது. சிறிய சம்பவங்கள் நெருப்புப்பொறி போன்று பெரிய காட்டை அழிக்க கூடியவை. சுந்தரம்பிள்ளையின் எதிர்காலத்தை புதிதாக மீண்டும் புதிதாக வார்ப்பதில் பக்கஸ்மாஸ் வைத்தியரும் அங்கு நடந்த நேர்முகமும் பங்காற்றியது.

சுந்தரம்பிள்ளையின் இலங்கை மற்றும் இந்தியாவின் வேலைக்கால அனுபவத்தை கேட்டுவிட்டு அந்த பக்கஸ்மாஸ் மிருக வைத்தியர், 'இந்தப் பகுதியில் பண்ணை மாடுகள் மத்தியில் வேலை செய்வதற்குரிய தகுந்த அனுபவம் உங்களுக்கு இருக்கிறது. அதனால் எனக்கும் உங்களைப் பிடித்து இருக்கிறது. ஆனால்

இங்குள்ள விவசாயிகள் உங்களை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என நினைக்கிறேன்' என்றார்.

அந்தப் பதில், காச நோய் உள்ளவன், கோழையும் இரத்தமும் கலந்து முகத்தில் காறித் துப்பியது போன்ற தாக்கத்தை ஏற்படுத்தியது. நீ ஒரு வெளிநாட்டவன் என்பதை அந்தப் பதில் உணர்த்தியது. அந்த மனிதர் அவுஸ்திரேலியருக்கே உரிய நேர்மையை கடைப்பிடித்து முகத்துக்கு நேரே சொன்னது உண்மையாக இருந்தாலும் சிவா சுந்தரம்பிள்ளைக்கு பலநாட்களாக பழுதாகிய வேர்க்கடலை ஒன்றைக் கடித்தது போல் நாக்கில் கசப்பாக இருந்தது. அவரின் அந்தப் பதில், ஒரு விதத்தில் புதிய முடிவை எடுக்க வைத்தது. பால்பண்ணை விவசாயிகள் மத்தியில் தொழில் செய்ய முடியாது. இனிமேல் மாடுகளின் வைத்திய அனுபவத்தை வைத்து இந்த நாட்டில் தொழில் பார்க்க முடியாது. உனது பழைய அனுபவங்களை மூட்டைகட்டி வைத்துவிட்டு புதிதாக செய். என்ன செய்வது என்று சிந்தனை செய் என உள்ளுணர்வு அழுத்தம் திருத்தமாக கூறியது.

அதற்கு ஒரே இடம் நகரம் மட்டுமே. ஆனால் அங்கு நாய் பூனைகளுக்கு மட்டுமே வைத்தியம் பார்க்க முடியும். அந்தப் பகுதியில் ஏட்டுப்படிப்பு மட்டும்தான். எந்தத் தொழில் அனுபவமோ கிடையாது. சவரத்தொழில் செய்ய விரும்புபவன் மண்முட்டியில் கத்தியால் மழித்து பழகுவதுபோல் ஆரம்பத்தில் இருந்து தொடங்கவேண்டும்.

ஏழு வருடகாலமாக இலங்கையிலும் இந்தியாவிலும் பெற்ற மாடுகளுடனான வைத்திய அனுபவத்தை மூட்டை கட்டிவிட்டு, இந்நாட்டின் நகரப்பகுதிகளில் நாய் பூனைகளுக்கு வைத்தியம் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்பதை அந்தப்பதில் உணரவைத்தது. ஆனால் அதற்கு அனுபவம் தேவை.

புது அனுபவத்தை கட்டாயம் தேடிப் போகவேண்டும் என்ற உணர்வின் விளைவாகத்தான் அவுஸ்திரேலியாவில் உள்ள பெரிய அந்த மிருக வைத்தியசாலையில் வைத்தியர் தேவை என்ற விளம்பரத்தை மிருக வைத்திய ஜேர்னலில் பார்த்துவிட்டு அந்த வேலைக்கு விண்ணப்பித்தான். அந்த வேலைக்கான நேர்முகம் காலை பத்து மணியளவில் இருப்பதாக உடனடியாக பதில் வந்திருந்தது.

இரயில்வே நிலையத்தில் இறங்கி கோபேர்க் செல்லும் ட்ராமில் ஐந்து நிமிட பயணத்தில் அந்த வைத்தியசாலைக்குரிய தரிப்பு வந்தது.

எலிசபத் வீதியில் உள்ள அந்தத் தரிப்பில் இறங்கி சில நிமிட பொடி நடையில் கிளைத் தெருவில் உள்ள வைத்தியசாலையின் வாசல் பகுதிக்கு வந்து சேர்ந்தான் சுந்தரம்பிள்ளை.

வைத்தியசாலை வெள்ளை வர்ணமடித்த உயரமான சுவர்களுக்கு நீல இரும்பு கதவுகளுடைய முன்பகுதியை கொண்டது. வெளியில் இருந்து பார்த்தால் எதுவும் தெரியாது. சின்னதாக இரும்புக் கதவுகளில் வைத்தியசாலையின் பெயர் எழுதப்பட்டிருந்தது. இரண்டு மாடிகளை கொண்ட பழைய மோஸ்தரில் அமைந்த ப வடிவில் அமைந்த ஆடம்பரமில்லாத கட்டிடத்தின் ஒரு பக்கத்தில் மோட்டார் கார்களுக்கு ரயர் மாற்றும் கடைக்தம் மறுபுறத்தில் கார் எஞ்ஜினை பழுதுபார்க்கும் கடைக்கும் இடையில் இருந்தது. இந்த பகுதி நகரத்தின் மத்திய பகுதியில் இருந்து ஒரு சில கிலோ மீட்டர் அருகில் இருந்தபோதும் கைத்தொழில்பேட்டையின் சுற்றாடலை கொடுத்தது.

இரும்புக் கதவுகளின் வழியாக சென்றதும் இடது பக்கத்தில் உடனே வைத்தியசாலையின் கட்டிடத்துள் செல்ல முடியும். அங்குள்ள வரவேற்பு பகுதியின் இடது பக்கத்தில் பலர் சிறிதும் பெரியதுமான பலவித நாய்களை வைத்துக்கொண்டு இருந்தார்கள். சிலர் வரவேற்பு பகுதிக்கு தள்ளி நின்றார்கள். அவர்களது நாய்கள் பெரிதாக இருந்தன.எல்லா நாய்களும் சங்கிலியிலோ அல்லது தோல் வாரிலோ கட்டப்பட்டு கைகளால் பிடிக்கப்பட்டு பாதுகாப்பாக இருந்தன. சில நாய்கள் ஒன்றை ஒன்று பார்த்தும் மணந்து கொண்டும் முகத்தை மெதுவாக உரசிக்கொண்டும் சினேகமாக இருந்தன. இவைகளுக்கு எதிரே வரவேற்பு பகுதியின் வலது பக்கத்தில் ஆள் உயரத்திற்கு பலகையால் தடுப்பு சுவரால் மறைக்கப்பட்டு அங்கே பூனைகளை பெட்டிகளில் வைத்து நாய்களின் கண்களில் இருந்து மறைத்து வைத்துக்கொண்டு இருந்தார்கள். சில நாய்கள் பூனைகளின் மணத்தை நுகர்ந்துகொள்ள மூக்கை பூனைகளின் திசையை நோக்கி நீட்டிக்கொண்டிருந்தன. பூனைகளைத் தழுவிவரும் காற்று அவைகளின் அமைதியை குலைத்தது.

ஒரு வயதான அவுஸ்திரேலியர் உள்ளே செல்லாமல் வாசலில் நின்றார். எழுபது வயது மதிக்கக் கூடிய அவரது தலையில் மயிர்கள் எதுவும் இல்லை. கருமையான மூக்கு கண்ணாடி அணிந்திருந்தார். வெள்ளை பாண்டு வெள்ளைச் சட்டை என உடையணிந்த மனிதரின் வலது கையில் வெள்ளிப் பிரம்பு இருந்தது. இடது கையில் பிடித்திருந்த சங்கிலியில் அடுத்த முனையில் ஒரு சந்தனக்கலரான

லாபிரடோர் இன நாயொன்று நின்றது. வாசலுக்கு அருகே வந்த சிவா சுந்தரம்பிள்ளையின் இடுப்புக்கு கீழ்ப் பகுதியை முன்னாலும் பின்னாலும் முகர்ந்து விட்டு ஏதோ புரிந்து கொண்டது போல் அந்த நாய் மீண்டும் தன் தலையை தொங்கப் போட்டவாறு மீண்டும் தனது எஜமானரிடம் சென்றது.

'இவனுக்கும் எங்களை பரிசோதித்து மருந்து கொடுக்கிற பலன் கிடைக்கின்றதா என இன்று தெரியும். இவன் எங்களை மிருகாபிமானத்துடன் நடத்துவானா?' என்ற ஏக்கம் அந்தப் பிராணியின் முகர்வில் இருக்கலாம் என்று சிவா சுந்தரம்பிள்ளை தனக்குள் நினைத்துக்கொண்டான். இந்த இடத்தில் வேலை கிடைத்தால் அதை விட அதிஷ்டம் தேவையில்லை என்ற நினைப்பும் உடனடியாக வந்தது.

இரண்டு பெண்கள் ரிஷப்சனில் வேலை செய்து கொண்டிருந்தார்கள். அவர்களிடம் பேசிக்கொண்டு இருந்தவர்கள் தங்களது வேலையை முடித்து விட்டு போகும் வரையும் காத்திருந்து ரிஷப்சனில் இருந்த இரு பெண்களிடம் தன்னை அறிமுகப்படுத்த வரிசையில் காத்துக் கொண்டான். ஒருத்தி நடு வயதில் மிகத்தாட்டியாக அங்கிருந்த சிறிய இடத்தை அடைத்துக்கொண்டிருந்தாள். அவளது அங்கங்கள் ஒவ்வொன்றும் அணிந்திருந்த நீல யூனிபோமை தாண்டி வருவதற்கு திமிறியபடி முயற்சித்தன. பொன்னிறத்தலைமயிரை கொண்டையாக போட்டிருந்தாள். கண்ணுக்கு அவள் மையிட்டது சற்று அதிகமாக இருந்தது என நினைக்கத் தோன்றியது.அங்கங்கள், அலங்காரம் எல்லாவற்றிலும் அவுஸ்திரேலிய செல்வ செழிப்பின் பிரதிநிதியாக காட்சியளித்தாள். மற்றவள் அழகாக, மற்றவளுக்கு சகல விதத்திலும் மாறுதலாக நின்றாள். அவள் ஒல்லியான தோற்றத்துடன் தனது கரிய நிறமான கூந்தலை முதுகு எங்கும் கார்மேகமாக படர விட்டிருந்தாள்.

யாரிடம் முதலில் அறிமுகம் செய்வோம் என மனதில் வெள்ளி நாணயத்தை சுண்டிப்பார்த்த போது ஒல்லிப் பெண் கருங் கூந்தலைக் கொண்ட தலையாக வானத்தை நோக்கி விழுந்தது.

சாதி, சமய, மொழி ரீதியான வேறுபாடு மட்டுமல்ல உடல் ரீதியான வேறுபாடு கூடாது என்ற ஞான உணர்வு தலைகாட்டியதும் இருவருக்கும் வஞ்சகம் இல்லாமல் பொதுவாக அறிமுகம் செய்து கொண்டான்.

இளமையாகவும் ஒல்லியாகவும் இருந்த பெண் கண்கள் விரிய 'நீங்கள் பார்க்க வேண்டியவர் டொக்டர் காலோஸ் சேரம். என்னை பின் தொடருங்கள்' என கூறியபடி வரவேற்பு அறையின் இடது பக்கத்தில் அமைந்த கொரிடோர் வழியாக பனியில் சறுக்கியபடி செல்பவள்போல் இடுப்பை வைத்துக்கொண்டு சென்றாள். அந்த நீண்ட கொரிடோரில் அவளைத் தொடர்வது இலகுவாக இருக்கவில்லை. அவளைப் பின் தொடர்ந்த போது மத்தியில் உள்ள ,இரண்டாவது இலக்க அறையின் கதவில் இரண்டு முறை தட்டிவிட்டு காத்திராமல் உள்ளே சென்றவளை சிவா சுந்தரம்பிளை பின்தொடர்ந்தான்.

'இதோ இவர் உங்களைத் தேடி வந்துள்ளார், காலோஸ்' எனக்கூறிவிட்டு பின்னர் திரும்பி 'இவர்தான் நீங்கள் தேடி வந்த பெரியவர்' என குறும்புத்தனமான புன்னகையால் அந்த அறையை நிறைத்து விட்டு வெளியேறினாள்.

அந்த டொக்டர் தன்னை காலோஸ் சேரம் என பலமான கை குலுக்கலுடன் அறிமுகப்படுத்திய பின்னர், வேறு எதுவும் பேசாது தன்னைபின் தொடர்ந்து வரச் சொல்லிவிட்டு முன்னால் மிக வேகமாக சென்றார். மனிதர் நின்று அழைத்து போவதற்கு முயற்சிக்காதது வியப்பைக் கொடுத்தது. ஆறடி உயரமும் விரிந்த தோள்களும் உள்ள மனிதர், இடுங்கிய கண்களைக் கொண்ட சீன முகத்துக்குச் சொந்தமானவர். சீனர்களில் எத்தனை பேர் ஆறடியில் இருப்பார்கள்? முகத்தைப் பார்த்த போது கடுகடுப்பாக இருந்தது. முகத்தில் மருந்துக்குகூட சிரிப்பு இல்லை. பார்வைக்கு ஒரு கறார் பேர்வழி போல் தெரிந்தது. இவரின் கீழ் வேலை செய்வது இலகுவான காரியமாக இராது என நினைத்துக் கொண்டு அவரைப் பின்தொடர்ந்து சிறிய படிகள் வழியாக மேல்மாடியில் உள்ள ஒரு அறையுள் சுந்தரம்பிள்ளையும் சென்றான்.

அந்த அறையில் ஏற்கனவே அந்த நாற்காலிகள் மேசையுடன் அடைத்தபடி இருந்தன. எதுவும் சீராக இருக்கவில்லை. மேசையில் கடிதங்கள், புத்தகங்கள் ,கோப்புகள் என நிரம்பி இருந்தன. சுவர்கள் வெறுமையாக இருந்தது. அலுவலகம் போல் இருந்தாலும் அழகுணர்வோ ஒழுங்கோ இல்லாத அறையாக இருந்தது. அங்கு தடித்த மீசையுடன் கனமான மூக்குக் கண்ணாடி அணிந்த உயரமான சுமார் ஐம்பது வயதுள்ள ஒருவர் இருந்தார். அவரது இளநீல சட்டையின் வழியே அவரது வயிறு அவர் அமர்ந்திருந்த கதிரையின் கீழ் எட்டிப் பார்த்தது. அவர் அறையை மட்டுமல்ல தனது

உடலையும் சீராக பராமரிக்கவில்லை. இவைகள் ஒன்றுக்கொன்று தொடர்பானவையா?

அவரது மேசையில் குவிந்திருந்த கோப்புகளுக்கு இடையில் ஒரு சாம்பல் நிறமான பூனை அமைதியாக தூங்கிக்கொண்டிருந்தது. மேசையில் அந்த மனிதர் புத்தகங்களை வைத்தும் எடுத்தும் வேலை செய்து கொண்டிருக்கும்போது இந்தப் பூனையால் கண்களை மூடியவாறு உறங்க முடிகிறதா? தான் இருப்பது வேறு உலகத்தில் என நினைக்கிறதா?'

'இவர்தான் புதிதாக சேர்ந்த மிருக வைத்தியர். இவர்தான் ஜோன் எங்கள் கணக்காளர்'. என காலோஸ் சேரம் இருவருக்கும் பரஸ்பரம் அறிமுகப்படுத்தியபோது சுந்தரம்பிள்ளை திடுக்கிட்டான்.

'எப்படி இவரால் இப்படி சொல்ல முடிகிறது? ஏற்கனவே தீர்மானித்துவிட்டாரா? இல்லை இது நேர்முகத்துக்கு வரும் எல்லோரிடமும் நம்பிக்கை தருவதற்காக கூறும் ஒரு வழக்கமான வார்த்தையா? மனதை நோகடிக்காமல் நாசுக்காக வேலை இல்லை என பல தடவை சொல்லக் கேட்டிருக்கிறான். இது எதிர்மாறாகவல்லவா இருக்கிறது?

பல நேர்முகங்களில் நன்றாக செய்ததாக எண்ணியவை. ஆனால் முடிவில் சறுக்கியதால் தன்னம்பிக்கை குறைந்து விட்டது. ஆனாலும் மனக்குழப்பத்தை வெளியே காட்டவில்லை. ஜோன் காட்டிய கதிரையில் சுந்தரம்பிள்ளை உட்கார்ந்தான். அப்பொழுது மேசையில் அமைதியாக உறங்கிக்கொண்டிருந்த பூனை பேச்சு சத்தத்தை கேட்டு எழுந்து மெதுவாக சுந்தரம்பிள்ளையின் மடியில் இறங்கி கால்களை நீட்டி உடலை வளைத்து சோம்பல் முறித்தது. இதைக் கண்ட கணக்காளர் ஜோன் 'கொலிங்வூட்டுக்கு புதிய டொக்டரிடமும் பற்றுதல் வந்துவிட்டது போல' எனக் கூறி விட்டு வெளியேறினார்.

'இன்று வேலை செய்யலாமா?' என சேரம் கேட்டார்.

'நான் அதற்குத் தயார்' என்றான் ஆச்சரியத்தை வெளிக்காட்டாமல்

'முக்கியமான விடயம் ஒன்று உங்களுக்குச் சொல்லவேண்டும். அதாவது இங்கே நடக்கும் வேலைத்தல அரசியலில் ஈடுபடக்கூடாது. இதை நான் ஆரம்பத்திலேயே சொல்கிறேன். தற்பொழுது இங்கே பலர் எனக்கு எதிராக சதி செய்கிறார்கள். இவர்களது வலையில் நிச்சயமாக நீங்கள் விழுந்து விடக்கூடாது என்பதற்காகத்தான் இப்பொழுதே

சொல்கிறேன்''. என்று அவர் கூறியபோது, கொலிங்வூட் மெதுவாக வயிற்றில் முன்காலை வைத்து பின்னங்கால்களில் நின்றபடி சுந்தரம்பிள்ளையின் காதருகே முகத்தை உராய்ந்தது.

'இந்த மனிதன் இப்படித்தான். கொஞ்சம் நாகரீகம் குறைவு. நீ அதை பொருட்படுத்தாதே. மனதில் எதையும் மறைத்து வைத்திருக்கத் தெரியாது' மெதுவான மழலையான குரலில் அந்த வார்த்தைகள் வந்தன.

சுந்தரம்பிள்ளைக்கு காலோஸ் சேரம் கூறிய விடயம் அதிர்ச்சியை தந்தது. ஆனால் பூனையின் குரல் உடலை பனிப்பாளங்களின் நடுவே வைத்தது போன்று இருந்தது சுந்தரம்பிள்ளைக்கு.

'இந்தப் பூனை பேசுகிறது! அதுவும் இந்த வைத்தியசாலையின் தலைமை வைத்தியரைப் பற்றி என்னிடம் புறம் சொல்லுகிறது. இது மர்மப் பூனையாக இருக்குமா? இல்லை. மனித ஆவி இந்தப் பூனையின் உடலில் உட்புகுந்துவிட்டதா? ஆங்கிலப்படங்களில் வரும் காட்சியை போல் இருக்கிறதே? பூனையின் குரல் மற்றவர்களுக்கு கேட்டது போல் தெரியவில்லையே? காலோஸ் திரும்பி பார்க்கவில்லையே? எனக்கு மட்டும் தனியாக கேட்கும் போது இது ஒரு ஹலுசினேசன் தன்மையல்லவா? எனது காதுக்குள் குரல் கேட்பது மனப்பிறழ்வு எனும் சிஸ்சோபிறினியாவின் குணக் குறியல்லவா? முப்பத்தி மூன்று வயது சிஸ்சோபிறினியா வருகிற வயதில்லையே! பெரும்பாலும் பதினெட்டு அல்லது இருபது வயது பருவத்தில்தான் இந்த மன நோய் வருவதாகக் கேள்விப்பட்டுள்ளேன். இங்கு வர முன்பு நன்றாக இருந்தேனே என தலையை பிசைந்து கொண்டு சுந்தரம் பிள்ளை மௌனமாக இருந்தபோது "என்ன இந்த ஆளிடம் அதாவது உனது எதிர்கால மேலாளரிடம் எவ்வளவு சம்பளம் என கேட்டாயா?'' என அந்தப் பூனை மீண்டும் கேட்ட போது சிறிது அதிகாரம் கலந்து இருந்தது.

இந்த நாட்டில் வேலைக்கான நேர்முகத்தின் போது கேட்கும் கேள்விகளில் நீங்கள் எவ்வளவு வேதனம் எதிர்பார்க்கிறீர்கள்? என்பதும் ஒன்று. இலங்கையில் வேலைக்கு இவ்வளவு வேதனம் என்ற விதிமுறையில் பழகி வந்தவர்களுக்கு, ஆளுக்கு ஒரு வேதனம் என்பது எதிர்பார்க்காத ஒன்றாக அமைந்து விடுகிறது. மிகவும் சங்கடத்தில் ஆழ்த்திவிடுகிறது. ஆரம்பத்தில் இவ்வளவு வேதனம் தரும்படி கேட்பது எப்படி? இதைவிட இந்த வேலை கிடைக்குமோ

கிடைக்காதோ என்ற சந்தேகத்தில் இருக்கும் போது எவ்வளவு என்று வேதனத்தைப்பற்றிக் கேட்க முடியும்?

இப்படியாக மனம் அலை மோதிக்கொண்டிருந்த வேளையில், அதே விடயத்தை தெளிவாக பூனை பேசுவது சுந்தரம்பிள்ளைக்கு விசித்திரமாக இருந்தாலும் அந்தப் பேச்சில் நியாயம் இருப்பதுபோல் தோன்றியது. எதற்கும் எவ்வளவு சம்பளம் என்ற கேள்வியை கேட்டு வைப்போம் என நிமிர்ந்தபோது காலோஸ், சுந்தரம்பிள்ளையின் பயோ டேற்றாவை தொடர்ந்து பார்த்துக்கொண்டிருப்பது தெரிந்தது.

சிறிது நேரத்தில் நிமிர்ந்து பயோடேற்றா இருந்த காகிதங்களை உயர்த்தி காட்டியபடி'இந்த வேலையை உமக்கு நாம் தருவதற்குக் காரணம் இந்த இரண்டு காகிதங்கள் அல்ல. உம்மைப் பற்றி நோத்கோட்டைச் சேர்ந்த கீத் டெவர் எனக்கு கூறிய சிபாரிசுதான். அவர் இந்த வைத்தியசாலையில் முன்பு என்னோடு வேலை செய்தவர்' எனச் சொல்லிவிட்டு, அந்த அறையின் யன்னலருகே அந்த பயோ டேற்றாவை எடுத்துக்கொண்டு சென்றார்.

இரண்டு மாதங்களுக்கு முன்பு கீத் டெவர் என்ற மிருகவைத்தியர் விடுமுறைக்காக இரண்டு வாரங்கள் சென்றபோது அவரது இடத்தில் வேலை செய்த பின் அவரை தனது பயோடேற்றாவில் நடுவராக போடுவதற்கு சுந்தரம்பிள்ளை அனுமதி கேட்டு அதில் பதிவுசெய்திருந்தான்.

தனக்கு வேலை கிடைத்த வித்தார இரகசியம் புரிந்து விட்டதால் சுந்தரம்பிள்ளையின் மனதில் அமைதி துளிர்விட்டது. இந்தத்தருணத்தில் கலந்துரையாடலை கொலிங்வூட்டுடன் வைத்துக்கொள்வோம் என நினைத்துக்கொண்டான்.

"அதென்ன கொலிங்வூட் எண்டு கண்டறியாத பெயராக இருக்கிது. வழக்கமாக நிறத்தை கொண்டுதானே பூனைகளை அழைப்பது. அல்லது புஸ் புஸ் என அழைக்கலாமே?"

'அதெல்லாம் உங்களது ஊரில். கொலிங்வூட் என்பது மிகவும் பிரபலமான கால்பந்துக் குழுவின் பெயர். அந்த பெயரை செல்லமாக எனக்கு வைத்திருக்கிறார்கள்"

'அப்படியா? ஏய் கொலிங்வூட் எத்தனை நாட்களாக இங்கே வசிக்கிறாய்?

'எத்தனை நாட்களா? எத்தனை வருடங்கள் என்று கேள்'

‘அப்படியே கேட்கிறேன்’

இந்தப் பூனை வாயால் மட்டுமல்ல மனத்திலும் அழிச்சாட்டியம் பிடித்தது போல் இருக்கிறது. கவனமாகப் பேசவேண்டும்.

‘குட்டியாக வந்தேன். கிட்டத்தட்ட பத்து வருடங்கள் ஆகிவிட்டது’.

‘எப்படி மனிதக் குரலில் பேசமுடிகிறது?’

‘இருபத்துநாலு மணி நேரமும் இந்த ஆஸ்பத்திரியில் இருக்கிறேன். இங்கு உள்ளவர்கள் பேசுவதை அவதானித்து வந்துள்ளேன். தற்போது உன்னிடம் மட்டுமே எனது மொழித் திறமையை காட்ட உத்தேசம்’.

‘என்னிடம் மட்டும் ஏன் இந்த ஓர வஞ்சனை காட்டுகிறாய்?’ கொஞ்சம் நகைச்சுவையாக

‘புதிதாக சேர்ந்த உனக்கு மட்டுமே எனது மொழி புரியும். உயர்ந்த அதிர்வலைகளில் எனது சத்தம் வருகிறது. மற்றவர்களுக்கு கேட்கும் அதிர்வலையில் கேட்காது’.

‘அது எப்படி?எனக்கு மட்டும் எப்படி அதிக அதிர்வுகளை புரிந்து கொள்ள முடிகிறது?’

‘நீங்கள் உங்கள் சொந்த மொழியை உரத்த குரலில் பேசுவதால் எனது அதிர்வலைக்கு இசைவாக்கம் அடைந்துவிட்டீர்கள் என நினைக்கிறேன். நான் மற்றவர்களோடும் பேசினேன் அவர்களுக்கு புரியவில்லை. ஆனால் அவர்கள் பேசுவது எனக்கு எப்பொழுதும் புரியும்’.

‘தாயை பழித்தவனை தாய் தடுத்தால் விடுவேன். தாய்மொழியை பழித்தவனை தாய் தடுத்தாலும் விடேன்’ என்ற பாரதிதாசன் பாடலுக்கேற்ப ஆத்திரத்தில் ‘நீ ஒரு பூனை கூதி’ என்றான் சுந்தரம்பிள்ளை.

‘வார்த்தையின் அர்த்தம் புரியாவிட்டாலும் ‘நீ கெட்ட வார்த்தையை பாவிக்கிறாய் என்பது தெரிகிறது. இது எந்த ஊர் கெட்ட வார்த்தை?’

‘இது சென்னைத் தமிழ். அங்குதான் சில வருடங்கள் இருந்தேன்’.

இந்த நேரத்தில் காலோஸ் சேரம் தலையை நிமிர்த்திகொண்டு ஜன்னல் அருகே இருந்துவந்து 'சம்பள விபரத்தை ஜோனிடம் பேசி விட்டு கீழே வரவும்' என கூறிவிட்டு பதிலை எதிர்பாராமல் கதவைத் திறந்து கொண்டு வெளியே சென்றார். அப்பொழுது உள்ளே வந்த கணக்காளர் ஜோன் ஒரு வெள்ளை காகிதத்தை சுந்தரம்பிள்ளையிடம் தந்தார்.

அது நியமனக் கடிதம். அதில் நியமனத்துடன் சம்பள விபரமும் குறிப்பிடப்பட்டிருந்தது. அதில் நிருவாக சபை செயலர் என ரொன் ஜொய்ஸ்ஸ் என்பவர் ஒப்பமிட்டிருந்தார்.

## 3

நியமனக் கடிதத்துடன் அந்த அறையில் இருந்து வெளியேறிய சுந்தரம்பிள்ளை கணக்காளரிடம் 'உங்களது கழிப்பறையை பாவிக்க முடியுமா' எனக்கேட்டான்.

'இந்த கொரிடோரின் வலது பக்கத்தில் உள்ள முதலாவது கதவு என்று அவர் சொல்லியபோது, அங்கு சென்ற சுந்தரம்பிள்ளையை தொடர்ந்து கொலிங்வூட் வந்தது.

'என்ன இங்கேயும் வருகிறாய்? எனக் கூறி கழிப்பறைக் கதவை மூட முனைந்ததையும் மீறி கொலிங் வூட் மிக உரிமையுடன் உள்ளே வந்துவிட்டது.

அது குளிக்கும் அறையும் கழிப்பறையும் இரண்டாக பிரிக்கப்பட்டு இருந்தன. கொலிங்வூட் குளிக்கும் அறையில் தங்கிவிட்டது. சுந்ததரம்பிள்ளை கழிப்பறைக்கு சென்று பூனைதானே என கதவை சாத்தாமல் கழிப்பாசனத்தில் இருந்து கொண்டு கீழே கிடந்த சஞ் சிகைகளை பார்த்த போது, அவை ஆறு மாதம் கடந்த பிளே போய் மகசீன்கள். பக்கங்களை புரட்டி பார்த்த போது அதில் உள்ள அழகிகளின் அவயவங்களின் காட்சி, உடலில் உள்ள இரத்தம் வேகமாக கீழ் நோக்கி ஓடி மனதை மேலே ஒரு கற்பனை உலகத்திற்கு தள்ளிச் செல்ல உந்தியது. சில பக்கங்களை புரட்டவைத்தது. இப்படியான அழகிகளை எங்குதான் தேடிப்பிடிக்கிறார்களோ? இப்படிப் போனால் சரி வராது என மனதின் ஓட்டத்திற்கு சிவப்பு விளக்கை காட்டிவிட்டு, அந்த மகசீன்களை மீண்டும் அதே இடத்தில் வைத்துவிட்டு எழுந்து கையை கழுவிய சுந்தரம்பிள்ளை, கொலிங்வூட்டை பார்த்தான். அந்த குளிப்பறையின் ஒரு மூலையில் பிளாஸ்ரிக் தட்டில் சிறிய கல்லுகள் போடப்பட்டிருந்த தட்டில் குந்தி இருந்து விட்டு தனது கழிவுகளை மூடியது.

மனிதர்களை விட மிக நாகரீகமாக நடந்துகொண்டது. எத்தனை மனிதர்கள் இன்னும் இந்தப் பிராணிகளிடம் இருந்து கற்றுக்கொள்ள மறுக்கிறார்கள்?

'கொலிங், இங்கே யார் பிளேபோய் வாசகர்கள்? அதுவும் இந்த கழிப்பறையில்?'

'எங்கள் கணக்காளர் ஜோன்தான். அவருக்கு மலச்சிக்கல் வரும்போது இந்த சஞ்சிகைதான் உதவி செய்யும்'

'அது எப்படி பிளே போய்...?

'கொஞ்சமும் புரியாத ஆளாக இருக்கிறாய். இந்த மனிதன் கணக்காளர். இவர் கூட்டல் கழித்தல் பார்ப்பதில் ஏதாவது பிரச்சினை ஏற்படும் போது இவருக்கு மலச்சிக்கல் வந்துவிடும். அப்பொழுது இந்தக் கழிப்பறையில்தானே காலம் கடத்த வேண்டும். அப்போதுதான் இந்த சஞ்சிகைகள் அந்த ஆளுக்குத் தேவைப்படும்'.

இந்தப் பூனைக்கு நக்கலும் நளினமும் சேர்ந்து இரத்தத்தில் உள்ளது. நானும் கவனமாக இருக்கவேண்டும் என எண்ணிக்கொண்டே மாடிப்படிகளில் இறங்கி காலோஸ் சேரத்தினது அறைக்குச் சென்றான் சுந்தரம்பிள்ளை. அந்த அறை மூன்று அறைகளின் மத்தியில் உள்ள இரண்டாவது அறை. முன்பக்கத்து வாசலால் செல்லப்பிராணிகளை வைத்தியரிடம் கொண்டு வருபவர்கள், அந்த அறையின் பின் கதவைத் திறந்தால் மருந்துகளின் பார்மசிக்கு செல்ல முடியும். பின்பகுதியால் உள்ளே சென்றதும் சுந்தரம்பிள்ளையை அடுத்து கொண்டு வரப்படும் செல்லப் பிராணியை பரிசோதிக்கும்படி காலோஸ் சேரம் பணித்தான்.

இது தனது நேர்முகப் பரிசோதனையின் ஒரு பகுதியாக சுந்தரம்பிள்ளை நினைத்துக் கொண்டான்.

பலர் வெளியே செல்லப்பிராணிகளோடு காத்திருக்கும்போது வரிசைக்கிரமத்தில் அவர்களை அழைப்பதற்கு சுவரில் பொருத்தியுள்ள ஒலிபெருக்கியூடாக செல்லப்பிராணியின் பெயரையும் அதனது சொந்தக்காரனதும் பெயரைச் சொல்ல வேண்டும் எனப் பணிக்கப்பட்டது.

அதன் பிரகாரம் ஆஸ் (Ash) என்ற உரிமையாளரையும் மைலோ (Milo) என்ற பூனையையும் இரண்டாம் இலக்கத்து அறையின் உள்ளே வரும்படி ஆங்கிலத்தில் ஒலிவாங்கியில் சிறிது தயக்கத்துடன்

சுந்தரம்பிள்ளை கூறினார். இப்படி கூவியளைத்து வைத்தியம் செய்வது இதுதான் முதன்முறையாகும்.

சொல்லி விட்டு திரும்பி பார்த்தபோது அறைக்குள் இருந்த டொக்டர் காலோஸ் சேரம் முகத்திலும், அப்போதுதான் பார்மசி கதவின் வழியே உள்ளே வந்த பெண்கள் போல் இடுப்புவரை கூந்தலைக் கொண்ட முப்பது வயது மதிக்கக் கூடிய ஒருவர் முகத்திலும் சிரிப்பு பொங்கி வழிந்தது. அந்த சிரிப்பில் ஏளனம் நகைச்சுவை கலந்து தெரிந்தது.

கதவை திறந்து கொண்டு உள்ளே வந்த ஒரு இளைஞன் மைலோ என்ற பூனையைக் கொண்டு உள்ளே வந்தான்.வந்தவனது முகத்தில் இனம் புரியாத சங்கடம் கலந்த சிரிப்பு தெரிந்தது. இப்படி பலவாறான சிரிப்புகள் குழப்பத்தை உருவாக்கிய போதிலும் வேலை கிடைத்திருக்கிறது. அதை கருத்தாக செய்வது இப்பொழுது முக்கியம் என்று சிரிப்பை ஒதுக்கி விட்டு சாம்பல் நிறமான மைலோவை பரிசோதனை மேசையில் வைக்கும்படி கூறினான். ஒரு விதத்தில் மைலோ மட்டும் சுந்தரம்பிள்ளையை அந்த அறையில் சங்கடத்தில் ஆழ்த்தவில்லை. அதனது இதயம், சுவாசம், கண்கள், மூக்கு என ஒழுங்காக பரிசோதித்துவிட்டு வருடாந்த தடுப்பூசி செலுத்தியதால் வேலை இலகுவாக முடிந்தது.

‘மேலும் ஏதாவது தேவையா?’ அந்த இளைஞனிடம் கேட்டான்.

‘இல்லை. இல்லை..’. வார்த்தைகள் முடியவில்லை

‘தயங்க வேண்டாம்’

‘நீங்கள் எனது பெயர் கூறி அழைத்தபோது வரவேற்பு அறையில் இருந்தவர்கள் எல்லாம் சிரித்தனர்’

சுந்தரம்பிள்ளைக்கு புரியவில்லை

பக்கத்தில் நின்ற காலோஸ் சேரம் பெரிதாக சிரித்தபடி,

‘இன்றைக்குத்தான் புதிய வைத்தியர் வேலைக்கு சேர்ந்திருக்கிறார். சேர்ந்ததும் வாயில் தூசண வார்த்தை வந்துவிட்டது. இனி மேல் எங்கள் பாடு கஷ்டம்தான்’ என தோளை குலுக்கி இடுங்கிய கண்களை இன்னும் பிதுக்கியபடி சிறிதாக சிரித்ததும் சுந்தரம்பிள்ளைக்கு புரிந்தது. ‘Ash என்ற வார்த்தை Arse ஆகிவிட்டது.

'என்னை மன்னிக்கவேண்டும். முதல் தடவையாக ஒலிபெருக்கியில் கூப்பிட்டேன். அதனால் உச்சரிப்பில் தவறிவிட்டது'.

சாதாரணமாக சொல்லி விட்டாலும் வெட்கமும் அவமானமும் சேர்ந்து பாறை போல் அழுத்தியது. பக்கத்தில் காலோஸ் சேரத்தின் சிரிப்பு சுந்தரம்பிள்ளை முதுகுக்குப் பின்னால் தொட்டு தொட்டு கேலி செய்தது.

வந்த இளைஞன் மைலோவுடன் வெளியே சென்ற பின்புதான் சுந்தரம்பிள்ளை சுமுகமான நிலைக்கு வந்தான். சங்கடமான நிலை உடலை சுற்றி இறுக்கி வலை போன்று இறுக்கமாக இருந்தது. அதை அறுத்துக் கொண்டு உடனடியாக வர முடியவில்லை. ஐந்து நிமிடங்கள் மட்டும் நீடித்த மருத்துவ ஆலோசனை அரைமணி நேரம் நீடித்த உணர்வுதான் இருந்தது.

"ஒன்றும் கவலைப்பட வேண்டாம். இப்படித்தான் காலோஸ் வந்த ஆரம்பத்தில். போகப் போக சரி வரும்."

தேனாக ஒழுகும் அந்த வார்த்தைகள் இங்கிலாந்து பேச்சுத் தொனியில் பின்னால் இருந்து கேட்டது. அந்தக் குரல் மனதுக்கு இதமாக இருந்தது. ஆறுதலான வார்த்தைகள் மருந்தை விட வலிமையானது. மயிலிறகைவிட மென்மையானது.கூரான கத்திபோல் உடலை இறுக்கிய சங்கட வலையை அறுத்தெறிந்தது.

திரும்பிப் பார்த்த போது நீண்ட கூந்தல் இடுப்புவரை தொங்க முப்பது வயது மதிக்கதக்கஒருவன் தன் பெயர் அன்ரூ என அறிமுகப்படுத்தினான். மேலும் தான் காலோஸின் உதவியாளர் என்றான்.

அப்பொழுது காலோஸ் 'அன்ரூ, இவருக்கு ஹொஸ்பிட்டலை சுற்றிக் காண்பிக்கவும். இவர் எங்களது புதிய மிருக வைத்தியர்' என்றார்.

அன்ரூவை பின் தொடர்ந்து மருந்துகள் வைக்கப்படும் பார்மசியூடாகச் சென்ற போது இன்னும் இரண்டு வைத்தியர்கள் நாய் பூனைகளை பக்கத்து அறையில் பரிசோதித்துக்கொண்டிருந்தார்கள். அந்த அறையை கடந்து பூனைகளுக்கான பகுதிக்கு செல்லவேண்டும். பூனைகளுக்கான இடம் பல பகுதியாக கண்ணாடியால் பிரித்து கதவுகள் போட்டு அடைக்கப்பட்டிருந்தது. வாசல் பாதுகாப்பாக இரும்பு வலை கொண்ட இரண்டு கதவுகள் ஒன்றன்பின் ஒன்றாக

இருந்தன. நாய்கள் தப்பி ஓடுவது குறைவு. அப்படி நடந்தாலும் அவற்றை பிடிப்பது சுலபம் ஆனால் பூனைகளைப் பொறுத்தவரை மிகவும் கடினமான காரியம்.

உள்ளே உள்ள பூனைகளில் நோய் பீடித்தவை, ஆரோக்கியமானவை,மற்றும் தத்தெடுக்க தயாராக இருக்கும் பூனைக் குட்டிகள் என தரவாரியாக பிரிக்கப்பட்டு சிறிய கூடுகளில் அடைக்கப்பட்டிருந்தன. அங்கு இரண்டு பெண்கள் நீல நிற யுனிபோர்ம் அணிந்தபடி வேலை செய்தார்கள். முப்பது வயதில் ஒருத்தி உடலில் எது வித சதைப்பிடிப்பும் அற்று பஞ் சத்தில் உணவற்று பலகாலம் இருந்தவள் போன்ற ஒல்லியான தோற்றத்துடன் பரட்டை தலையுடன் கெதர் என அறிமுகமானாள். கெதருக்கு நேர் எதிர்மாறாக அமோக விளைச்சலுடன் அங்கங்களை பிரிந்து செல்ல நினைக்கும் உடலுடன் இருந்த மொரினின் மடியில் இப்பொழுது சிம்மாசனம் போட்டு கொலிங்வூட் இருந்தது.

இரு பெண்களையும் அறிமுகப்படுத்திய பின்பு ‘இதுதான் கொலிங்வூட்’ என அன்ரூ அறிமுகப்படுத்திய போது மெதுவாக தலையை திருப்பி இவரைத் தெரியும் என்ற பாவனையில் கண்ணை சுழற்றிவிட்டு தலையை உயர்த்திவிட்டு இப்பொழுது மொரினது விசாலமான மார்பகத்தின் இடைவெளியில் தலையை புதைத்து வசதியாக படுத்தது.

‘அதிஷ்டசாலிப் பூனை’ என கூறி மொரினுக்கு கண் சிமிட்டினான், அன்ரூ

‘சட் அப், அன்ரூ’ என சிரித்தாலும் அன்ரூவின் அந்த வார்த்தைகள் அந்த ஐம்பது வயதான மொரினின் முகத்தை சிவக்க வைத்தன. அந்த நேரத்தில் எழுபது வயதைத் தாண்டிய மெலிந்த உடலுடைய பெண்மணி, பூனைகள் வைத்திருக்கும் பகுதிக்குள்ளே வந்தாள். அவளது உடையலங்காரம் பார்ப்பதற்கு விசித்திரமாக இருந்தது. உடை வயதிற்கு பொருத்தமாக இருக்கவில்லை. இருபத்திரண்டு வயது பெண்ணின் உடல் தோற்றம் காட்டும் கவுணை அணிந்திருந்தாள். அந்த உடையை இளம் பெண் அணிந்திருந்தால் அவளது திரண்ட மார்பகங்கள் பாதியை மட்டும் மறைத்து மீதியை உயர்த்தி வெளிக்காட்டி ஆண்களின் தலையை சுற்ற வைத்திருக்கும். ஆனால் இந்தப் பெண்ணின் சட்டையின் மேல்பகுதி அவளது வாடி வதங்கிய மார்பகங்களின் முலைக்காம்புகளை மட்டுமே மறைத்தது. வெயிலில் உலரப்போட்ட கவுண்போல் அவளது

தோளில் தொங்கியது. வாடி வதங்கிய முகத்தில் கூர்மையான மூக்கு ,கண்ணுக்கு மையும் உதட்டு சாயமும் சிறு குழந்தைகளின் சுவரில் வரையப்பட்ட சித்திர வேலைப்பாடு போல் அவசர கோலத்திலிருந்தன. மொத்தத்தில் பாடசாலை நாடகத்திற்கு வேடம் போட்ட ஒரு சூனியக்காரி போல் அவளது உருவம் இருந்தது.

இந்தப் பெண்மணியின் உடல் வளைவுகளை சுந்தரம்பிள்ளை இரசித்துக்கொண்டிருக்கும் போது கெதரையும் மொரினையும் காணவில்லை, அவர்கள் எங்கே என தேடியபோது ஒரு சிறிய அறையொன்றுக்குள் பூனைகளுக்கு உணவு எடுப்பதுபோல குனிந்தபடி பாவனை செய்து கொண்டு நின்றனர். அவர்கள் தங்களை மறைத்துக்கொள்ள முயல்வது அப்பட்டமாகத் தெரிந்தது. அதிலும் மோரின் தனது உடலை மறைக்க முயன்றது நாடகத்தில் வரும் நகைச்சுவைக்காட்சியாகத் தோன்றியது. இப்பொழுது அன்ரூ கதவு அருகே சென்று சுந்தரம்பிள்ளையை அந்த இடத்தை விட்டு வெளியேறும்படி கண்களை அசைத்து, விரல்ளையும் காட்டி பரபரப்பாக தீப் பற்றிய கட்டிடம் ஒன்றின் உள்ளிருந்து வெளியேறுவதற்கான அபாய சமிக்ஞை போல் காட்டினான்.

அன்ரூவின் சமிக்ஞையின்படி சுந்தரம்பிள்ளை வெளியேறும் போது அந்தப் பெண்ணை வாசலில் நேர் எதிராக சந்திக்க நேர்ந்தது. அவள் சுந்தரம்பிள்ளையின் கையைப் பிடித்தபடி ‘எனது கைலிக்கு எப்படி இருக்கிறது?’ என்றாள் அதிகாரம் கலந்த குரலில்.

திரு திரு என விழித்த சுந்தரம்பிள்ளையின் மறுகையை பிடித்து அன்ரூ அந்த இடத்தில் இருந்து இழுத்தபடி வெளியே அழைத்து வந்தான்.

‘ஏன் எல்லோரும் ஒளித்து ஓடுகிறார்கள்? அந்தப் பெண்மணிக்கு என்ன பிரச்சினை?’

‘அது ஒரு நட் கேஸ். ஒரு பெரிய கதை’

இப்படி பேசியபடியே அந்த வைத்தியசாலையின் உணவு அருந்தும் பகுதியை அடைந்தார்கள்.

இருவரும் ஆளுக்கொரு கப்பில் கோப்பியை எடுத்துக்கொண்டு கட்டிடத்தின் வரந்தா போன்ற பகுதியில் போடப்பட்டிருந்த ஆசனங்களில் அமர்ந்ததும் ‘அந்தப் பெண்ணின் பெயர் ஜீன். மெல்பனில் ஒரு வசதியான குடும்பத்தை சேர்ந்தவள். திருமணமாகி

சிலகாலத்திலே கணவனை போரில் இழந்ததால் அவளது மனநிலை பாதிக்கப்பட்டிருக்க வேண்டும். வளர்க்கும் பூனைகளே அவளது உலகமாக வாழத் தொடங்கினாள். ஜீனின் பூனைகள் பல்கிப் பெருகின. இதனால் பக்கத்து வீட்டினர் நகரசபையினருக்கு புகார் கூறினார்கள். நகரசபையினர் இதில் பிராணிகளின் நலன் சம்பந்தப்பட்டிருப்பதாக எங்களுக்கு அறிவித்தார்கள். நாங்கள் சென்று பார்த்த போது வீட்டுக்குள் போக முடியவில்லை. மூச்சுத் திணறியது. அவ்வளவு நாற்றம். பூனைகளின் மலம், சலம் என வீட்டின் தரை எங்கும் காணக் கூடியதாக இருந்தது. பூனைகளை எங்களிடம் கையளிக்க மறுத்தது மட்டுமல்லாது காய்கறி நறுக்கும் கத்தியைக் காட்டி ஜீன் பயமுறுத்தினாள். நாங்கள் பின்வாங்கி வந்து விட்டோம்.

இரண்டாவது முறையாக பொலிஸாரை அழைத்துக் கொண்டு இருபது பூனைகளை அங்கிருந்து கொண்டு வந்தோம். இதன் பின் ஜீன் தனது லோயர் மூலமாக வைத்தியசாலை நிர்வாகத்தை தொடர்பு கொண்டு, தனது வீட்டை தான் இறந்த பின்பு வைத்தியசாலைக்கு உறுதி எழுதி வைப்பதாகவும் அதற்கு பிரதி உபகாரமாக வைத்தியசாலை தனது பூனைகளை இறக்கும் வரை பாதுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டாள். இதற்கு வைத்தியசாலை நிர்வாகம் சம்மதித்தது. இதன் பின் அடிக்கடி தனது பூனைகளை பார்க்க அடிக்கடி வருவாள். வந்தால் தொல்லை தாங்க முடியாது. எல்லோரும் ஏதோ விதத்தில் ஜீன் வரும்போது மறைந்து விடுவார்கள். இந்த நாடகம் வருடக்கணக்காக தினமும் அரங்கேறுகிறது. இந்தக்காட்சிதான் தற்போது நீங்கள் பார்த்தது'.

'வைத்தியசாலைக்கு தனது வீட்டை எழுதிக் கொடுத்தது பெரிய விடயம் தானே?'

'நான் இந்த வைத்தியசாலைக்கு பொறுப்பாக இருந்தால் அந்த வீட்டை திருப்பி எழுதிக் கொடுத்திருப்பேன்'.

'எனக்கு நீங்கள் எல்லோரும் அந்தப் பெண்ணிடம் கடுமையாக நடப்பது போல் படுகிறது'.

'இன்றைக்குத்தானே புதிதாக வந்திருக்கிறீர்கள். போகப் போக ஜீனைப் பற்றி உங்களுக்குப்புரியும்

உரையாடலும் கோப்பியும் ஒன்றாக முடிந்தன.

டொக்டர் காலோஸ் சேரம் அறையில் நாய் பூனைகளுக்கு சுந்தரம்பிள்ளை தொடர்ச்சியாக மருத்துவம் பார்த்தான். மாலை ஆறு மணிக்கு வேலை முடிந்ததும் அன்ரூவும் டொக்டர் காலோஸ் சேரமும் சுந்தரம்பிள்ளையுடன் அந்த வைத்தியசாலைக்கு அருகாமையில் உள்ள மதுபான சாலைக்குச் சென்றனர். வேலைக்கு சேர்ந்த முதல் நாளே மதுபானச்சாலைக்கு மேலாளரால் அழைத்து வரப்படுவேன் என சுந்தரம்பிள்ளை நினைக்கவில்லை.

மாலையானதால் அந்த இடம் மதுப்பிரியர்களால் நிரம்பி வழிந்தது. மெல்பன் பல்கலைக்கழகத்துக்கு அருகாமையில் இருப்பதால் இளம் வயதினரே பெரும்பாலும் அங்கு தாகம் தீர்க்க வந்தார்கள். அவுஸ்திரேலிய கலாசாரத்தின் இன்றியமையாத கூறாக இந்த தாகசாந்தி உள்ளது. இலங்கை இந்தியாவில் கோயில் அருகாமையில் திருவிழாக்காலத்தில் தண்ணீர் பந்தல்களில் மோர், ஊறுகாய் தண்ணி அருந்தி பக்தர்கள் தாகசாந்தி பெறுவது போன்றது இந்த விடயம். இங்கு பக்திக்கு பதிலாக வேலைத்தல விடயங்களின் அழுத்தங்களைக் குறைத்து வேலை செய்பவர்களிடத்தில் தகவல் பரிமாற்றத்தை மட்டுமல்ல ,நட்பையும் உறுதி செய்ய இந்த தாகசாந்தி விடயம் உதவுகிறது. காதல், நட்பு, காமம் என்ற உணர்வுகள் தடையின்றி பரிமாற இந்த மதுசாலைகள் ஊடகமாகிறது. வேலையின் பின் மதுச்சாலையில் சந்தித்து மது அருந்துவது மேற்கத்திய நாகரீகத்தின் சடங்காகும். இந்தச் சடங்கில் கலந்து கொள்ளாதவர்கள் அன்னியப்பட்டவர்களாக இருப்பார்கள் என்பது சமகால கருத்தாகிவிட்டது.

ஜன்னலுக்கு அருகில் உள்ள மேசையில் அமர்ந்துகொண்டதும் மூவருக்கும் சேர்த்து டோக் போல்ரர் எனப்படும் தேனின் நிறம் கொண்ட ஸ்ரவுட்டை டாக்டர் காலோஸ் சேரம் அங்குள்ள பரிசாரக பெண்ணிடம் கொண்டுவரச் சொல்விவிட்டார்.

அந்த ஜன்னலின் அருகில் வெளியே பார்த்தபோது இளம் வயது ஆண்- பெண் ஜோடிகள் கைகளை பிடித்தபடியும், முத்தமிட்டவாறும் சாரி சாரியாக வந்து கொண்டிருந்தார்கள். பெரும்பாலானவர்கள் பல்கலைக்கழக வகுப்பை முடித்து விட்டும், சிலர் வேலைத்தலங்களில் இருந்தும் நேரடியாக அங்கே வருகிறார்கள். கோடைகாலத்தில் ஆபிரிக்க மிருகங்கள் பற்றிய விவரணப்படத்தில் அவை தண்ணீருக்காக வரிசையாக இடம் பெயரும் காட்சி நினைவுக்கு வந்தது. அந்த ஜன்னலுக்கு அப்பால் எலிசபெத் பரேட் என்ற அந்த பெரிய வீதி செல்கிறது. இந்த வீதியின்

இரு பக்கத்திலும் வாகனங்களும் நடுபகுதியில் மெல்பனுக்குகே பிரத்தியேகமான ட்ராம் ரோடு செல்கிறது. வேலை முடியும் நேரமானதால் மின்சாரத்தில் இயங்கும் ட்ராம் ஒன்று நிறைமாத கர்ப்பிணிப் பெண்போல் மெதுவான ஒலியோடு செல்வது தெரிந்தது. இந்த மதுபான விடுதிக்கு எதிராக எலிசபெத் வீதியின் அடுத்த பக்கத்தில் ரோயல் பெண்கள் வைத்தியசாலை அமைந்துள்ளது. வீதியின் இருமருங்கும் நிற்கும் மரங்கள் மாலையின் மங்கிய வெளிச்சத்தில் மெல்பனுக்கே உரிய பூங்கா நகரம் என்ற பெயரை உறுதி செய்தது. மாலை சூரியனது ஒளிக்கதிர்கள் அடர்ந்த பச்சை இலைகொண்ட மரங்களை திரைச்சீலையாக்கி அற்புதமான ஓவியத்தை வரைந்து கொண்டிருப்பது பொறுக்காத சில பறவைகள் அந்த வண்ணக்கலவையில் தாங்களும் குளித்தபடி அங்கும் இங்கும் பறந்து திரிவது அந்த மதுசாலையின் கண்ணாடி யன்னல்கள் வழியாக தெரிந்தது.

காலோஸ் சேரம், அன்ரூவிடம் ‘இன்றைக்கு மெலிண்டா முலையில் இருந்து என்னால் கண்களை எடுக்க முடியவில்லை. ஆனால் அவள் என்னை ஒரு முறைகூட கண் எடுத்தும் பார்க்கவில்லை. என்னைப் பொறுத்தவரை இன்றைய நாள் இந்த வருடத்தில் விடியாத நாள்’ என்றார்.

சுந்தரம்பிள்ளைக்கு ஒன்றும் புரியவில்லை. இது ஏதோ ஒரு காதல் விடயம். இதை தெரிந்து கொள்ளாமல் இருப்பது உத்தமம் என அவன் மனதில் நினைத்துக் கொண்டிருந்தபோது டோக் போல்டர் மது நுரைத்தபடி பெரிய கிளாசில் வந்தது.

அன்ரூ சிவா பக்கம் திரும்பி ‘சிவா, இந்த வைத்தியசாலையில் பெரிய அரசியல் போராட்டம் நடைபெறுகிறது. இது இரஸ்சிய புரட்சியாக வெடிக்குமா இல்லை புஸ்வாணமாகுமா என்று தெரியாது. இதில் நீங்கள் கலந்து கொள்ளாமல் இருப்பதுதான் நல்லது’ என்றான்.

‘நான் அப்படியே செய்கிறேன்’ என்று சொன்னாலும் யார் இந்த புரட்சியாளர்கள்? யார் இந்த மெலிண்டா என்பதை அறிவதில் ஒரு ஆர்வம் சுந்தரம்பிள்ளை மனதில் சிறிய செடிபோல் துளிர்த்தது. தலையிடாதே என சொன்னவர்களே அந்த விதையை மனதில் ஊன்றி விட்டவர்கள்

நாற்பது வயதாவது இருக்கும் டொக்டர் காலோஸ் சேரம், நிச்சயமாக திருமணம் செய்து குடும்பஸ்தராக இருக்கவேண்டும்.

இந்த மனிதருக்கு என்ன நடந்துவிட்டது? காதல் வியாதி பிடித்து அலைக்கிறதா? இந்த வயதில் உண்மையில் காதல் ஏற்படுமா?. இல்லை நிறைவேறாத காமமா? இல்லையேல் மத்திம வயதில் ஆண்களுக்கு ஏற்படும் மன நெருக்கடியா? எதுவென்றாலும் சுவாரசியமாக இருக்கும் என டோக் போல்டரை நுனி நாக்கால் ருசித்துகொண்டு இருவரின் உரையாடலையும் செவிமடுத்தான் சுந்தரம்பிள்ளை.

'இவர்கள் ஒரு கூட்டம் போட்டு பேசி இருக்கிறார்கள். இதற்கு ஸ்ரீவன்தான் தலைமை ஏற்றிருக்கிறான். பெரும்பாலும் அடுத்த செவ்வாய்க்கிழமை நடக்கும் போட் மீற்றிங்கில் உங்களுக்கெதிரான குற்றச்சாட்டு பத்திரம் வைக்கப்படலாம்'. அன்ரூ மிகவும் உறுதியாக சொன்னான்.

அன்ரூ காலோஸ் சேரத்தின் மருத்துவ உதவியாளர் மட்டும் அல்ல. சேரத்தின் காதல் விடயங்களுக்கும் அன்ரூவின் உதவி கிடைக்கிறது. அத்துடன் வைத்திய சாலையில் நடப்பதை உடனுக்குடன் தெரிவிக்கும் ஒற்றனாகவும் செயற்படுகின்றான்.

'நான் பலவந்தமாக எதனையும் செய்யவில்லை. அவளாகத்தான் வந்தாள். இந்த பப்புக்கு எத்தனை தரம் வந்துள்ளாள்! போன மாதம் கூட என்னுடன் குயின்ஸ்லாண்டுக்கு வந்திருந்தாள். கடந்த ஆறுமாதம் எந்த பிரச்சினையும் இல்லாமல் இருந்தது. யாரோ இவள் மனதை கெடுத்துவிட்டார்கள்'.

டொக்டர் சேரத்தின் வார்த்தைகளில் சுயபச்சாத்தாபம் மட்டுமல்ல ஆத்திரமும் அவமானமும் பொதிந்திருந்தது. முகம் சிவந்து விட்டது. பேசும்போது கண்களில் ஒருவிதமான கடுமை தெரிந்தது.

"ஸ்ரீவனுக்கு இந்த விடயத்தில் சில வைத்தியர்களினது அனுதாபம் இருக்கிறது. அவர்கள் இந்த விடயத்தை துருப்புச் சீட்டாக வைத்து உம்மை தலைமைப் பதவியில் இருந்து அகற்றுவதற்கு நினைக்கிறார்கள். நீர் இதில் கவனமாக இருக்கவேண்டும்." என்றான் அன்ரூ.

'மெலிண்டாவுக்கு முன்பு இந்தத் தலைமை பதவி முக்கியமில்லை' எனக் கூறியபடி, அடுத்த டோக் போல்டருக்கு பரிசாரப் பெண்ணிடம் கூறிவிட்டு சுந்தரம்பிள்ளையை பார்த்தார் டாக்டர் சேரம்.

இவர்கள் பெண்ணால் ஏற்பட்ட ஏமாற்றத்தாலும் அடைய முடியாத காமத்தை மறைக்கவும் குடிக்கிறார்கள். ஏமாற்றம், தோல்வி, வலி இப்படி எத்தனையோ காரணங்களை மறைக்க போதை போர்வையாக இருக்கிறது. அதிகாரத்தில் இருந்த போது பெண்ணின் நிராகரிப்பு பலமான உளத் தாக்கத்தை கொடுத்திருக்கிறது. அந்தக் காயத்தை சுரண்டி மேலும் காயப்படுத்துவதில் அன்ரூ தெரிந்தோ தெரியாமலோ குறியாக இருப்பது புரிகிறது. காமம், பெண்களின் நிராகரிப்பு, அதிகாரம் இந்த மூன்றும் ஒன்று சேரும் போது ஏற்பட்ட போர்கள் உலக சரித்திரத்தின் பல பக்கங்களை நிரப்பியுள்ளன.

வெளியே இருள் கவிந்து விட்டது. ஆனாலும் மின்விளக்குகள், பல இடங்களில் இருளை விரட்டி தங்கள் இருப்பை வெளிப்படுத்தின. மதுபானவிடுதி குடிமக்களால் நிறைந்துவிட்டது. இருக்கைகள் அற்ற நிலையில் பலர் நின்றபடியே குடிக்கத் தொடங்கி விட்டார்கள். கெவி மெற்றல் இசை ஒரு மூலையில் இருந்து சூறாவளிபோல வந்து அமைதியாக இருந்த அழகான சூழலை வெளியே தள்ளிவிட்டது.

இவர்கள் எவ்வளவு நேரம் இருந்து குடிக்கப் போகிறார்கள்?

போதைக்காக குடிப்பவர்களைக்கொண்ட நாட்டில் இருந்து வந்த சுந்தரம்பிள்ளைக்கு இங்கே மாலை நேர சடங்காகவும் பொழுது போக்காகவும் குடிப்பவர்களை பார்த்த போது சற்று வித்தியாசமாக இருந்தது.

எதிர்பாராதவிதத்தில் வேலை கிடைத்ததால் ஏற்பட்ட சந்தோசத்தில் அன்று மனம் நிறைந்திருந்தது. இரண்டாவது டோக்போல்டருக்குப் பின்னால் வீடு செல்லும் நினைவு வந்தபோது மனதில் சிறிது உப்பைக் கரைத்தது போன்ற உணர்வு. மீண்டும் ட்ராம், இரயில் என ஏறி வீடு செல்ல வேண்டியதால் நேர அட்டவணையை பொக்கட்டில் இருந்து எடுத்துப் பார்த்தான் சுந்தரம்பிள்ளை.

மெலிண்டாவின் அங்க லாவண்ணியங்களை வாய்மொழியாக டோக்போல்டரோடு சேர்த்து உறிஞ்சிக்கொண்டிருந்த டொக்டர் சேரம் ‘கவலைப்படவேண்டாம் மிஸ்டர். நான் உம்மை வீட்டில் கொண்டுபோய் பத்திரமாக இறக்கி விடுகிறேன்’ என்றார்

அந்தப் பிரச்சினை தீர்ந்து விட்டது என நிம்மதியாக இருந்த போது, இன்னும் ஒரு டோக் போல்டர் வந்தது. அதையும் குடித்து முடித்து எழுந்த போது போதை தலையில் ஏறியிருந்தது. இரவு

எட்டரை மணிக்கு மேல் ஆகி விட்டது. இருள் கவிந்து, அந்த இரவு மெல்பனின் நகரப்பகுதியை மூடிவிட்டது. ஆங்காங்கு நகரத்து சாலை விளக்குகள் சீராக ஒளியை பரப்பிகொண்டிருந்தன.அன்ரூ விடைபெற்றுக்கொண்டு சென்றதும் சுந்தரம்பிள்ளை டொக்டர் சேரத்தின் சிவப்பு நிற ஃபல்கன் காரில் ஏறியமர்ந்தான். மெல்பன் நகரத்தின் பிரதான நகரத்தை ஊடறுத்துக்கொண்டு அந்தக்கார் சுந்தரம்பிள்ளை வசிக்கும் கிழக்குப் பகுதி புறநகரமான பொக்சிலுக்குச் சென்றது.

# 4

சுந்தரம்பிள்ளை வீடு திரும்பியதும் வீட்டில் குதூகலம் நிரம்பி வழிந்தது. இந்த வேலை கிடைத்த விடயம் குடும்பத்தில் எல்லோருக்கும் மகிழ்ச்சி அளித்தது. வேலை புருச லட்சணம் என சும்மாவா சொல்கிறார்கள்? முக்கியமாக வேறு நாட்டில் இருந்து பஞ்சம் பிழைக்க வருபவனது மனநிலையில் வேலை, அவனது உயிருக்கு அடுத்த நிலையில் உள்ளது. அவனில் அவனது குடும்பம், பிள்ளைகள் ,அவர்களின் எதிர்காலம் என பல சுமைகளை இலகுவாக்குகிறது.

சுந்தரம்பிள்ளையின் சிந்தனையில் ‘என் போன்று தொழிலுக்காக பட்டப்படிப்பில் நாலு வருடம் ஈடுபட்ட பின் பலவருடங்கள் சொந்த ஊரில் ஏற்கனவே வேலை செய்து விட்டு வரும் போது அது தொழிலை தொடர்ந்து செய்வது என்பது மிக முக்கியமானது. இளமையில் பல வருடங்களை அழித்து எதிர்காலத்தில் விருப்பான தொழிலுக்காக கண்முழித்து, இரவு பகலாக முயற்சியுடன் படித்து பட்டம் பெற்ற பின்பு அந்த வேலை வாய்ப்பற்று வேறு வேலை செய்வது என்பதே வாழ்கையின் தோல்வியாகிறது. வேலைகள் எல்லாம் சமன் என்று சொல்வது இலகுவான போதிலும் குறிப்பிட்ட ஒரு வேலையை இலட்சியமாக எடுத்து அதற்காக வருடக்கணக்காக அர்ப்பணித்து தயர்ப்படுத்திய பின் மற்ற வேலை எவ்வளவு உயர்வாக இருந்தாலும் அதில் மனநிம்மதி கிடைக்காது. ஜீவனோபாயத்திற்காக வேறு வழியில்லாமல் என்னை நானே சங்கிலியில் பிணைத்துக் கொள்வது போன்று வேலை செய்தாலும் வாழ்க்கையின் தோல்வி என்ற எண்ணம் நிழலாக தொடரும். எனது வாழ்க்கையில் அவுஸ்திரேலியாவுக்கு வந்து மூன்று வருடங்களாக நிரந்தரமான ஒரு வேலை இல்லை. சிட்னியில் பெயின்ற் தயாரிக்கும் தொழிற்சாலையில் சில மாதங்கள், பின்பு உணவுச்சாலையின் சமையல் கூடத்தில் சிலமாதங்கள் என கிடைத்த வேலைகளை செய்துகொண்டு படித்து மிருக

வைத்திய பரீட்சையில் பாஸாகினாலும் அலைச்சல் தொடர்ந்தது. நிரந்தர வேலை குதிரைக் கொம்பாக இருந்தது. மெல்பனில் சில கிழமைகள் மிருக வைத்தியராக வேலை, அதன் பின்பு அடிலயிட்டுக்கு அப்பால் உள்ள ஊரில் சுமார் ஆறு மாதகாலம் வேலை என்பது தொடர்ச்சியான பயணமாக இருந்தது. கிடைத்த இடங்களில் கிடைத்த வேலையை வேண்டாம் என்று சொல்லாமல் எடுத்துக் கொண்டு சில இடங்களுக்கு குடும்பத்துடனும், மற்றைய இடங்களுக்கு தனியாகவும் செல்ல வேண்டி இருந்தது. எனது குடும்பம் மட்டுமல்ல சாருலதாவின் தாயும் தந்தையும் மகளையும் பேரப்பிள்ளைகளையும் பிரிய முடியாமல் பின் தொடர்ந்தனர். ஐரோப்பாவில் அலைந்து திரியும் ஜிப்சிகள்போல் இருந்தது. ஆனால் என்ன குதிரையும் கரவனும் இருக்கவில்லை. இந்த வேலையோடு ஜிப்சி வாழ்க்கை எனக்கு முடிந்து விடும்' என சுந்தரம்பிள்ளை உணர்ந்த போது மனதில் அமைதி வந்தது.

அவுஸ்திரேலிய நகரங்களில் தாங்கள் வாழும் இடங்களில் இருக்கும் கால்ப்பந்து குழுவை பெரும்பாலும் ஆதரிப்பது வழக்கம். அதன் பிரகாரம் சுந்தரம்பிள்ளையின் மகன் சகன், பல நகரங்களுக்கு குடும்பம் செல்லும் போது அந்தந்த நகரங்களின் கால்ப் பந்தாட்ட குழுக்களில் ஏதாவது ஒன்றை தனது அபிமான குழுவாக ஏற்று ஆதரவை அளிப்பான். ஐந்து வயது முதல் எட்டு வயது வரையும் பல நகரங்களையும் இப்படி சுற்றுவதால் ஒரு வருடத்திற்கு ஒரு குழுவை அபிமான குழுவாக அவன் ஏற்றுக்கொள்வதன் சங்கடம் சுந்தரம்பிள்ளைக்கு புரிந்தது. அவுஸ்திரேலியாவில் கால்ப்பந்தாட்ட குழுக்களுக்கு கிடைக்கும் ஆதரவு, இந்திய - பாகிஸ்தான் கிரிக்கட் ஆட்டத்தில் அந்தந்த நாட்டைச் சேர்ந்தவர்களிடம் இருந்து கிடைக்கும் ஆதரவைப் போன்றது. அதைவிட இப்படி புதிதாக குடிவந்த பிள்ளைகளுக்கு பாடசாலைகளில் கால்பந்தாட்ட குழுக்களுக்கு ஆதரவு கொடுப்பது முக்கிய விடயம். பாடசாலை நண்பர்கள் குழுக்களாக ஒன்றாவதற்கு உதவும் முக்கிய விடயம். இதனால் சகனுக்கு அப்பாவுக்கு வேலை கிடைத்தால் மெல்பனில் தொடர்ந்து இருப்பதை விட ஏற்கனவே பிரபலமான கொலிங்வூட் என்ற கால்பந்தாட்ட குழுவை தனது அபிமான குழுவாக தேர்ந்தெடுத்திருந்ததால் அந்தக் குழுவை தொடர்ந்து ஆதரிக்க முடியும் என்பது அவனது மகிழ்ச்சிக்கு காரணமாகியது. அடிலயிட்டில் பிரிந்திருந்த அப்பா இனிமேல் ஒவ்வொரு நாளும் வீடு வருவார் என்பது மகள் சாந்திக்கு சந்தோசம் அளித்தது. இருவரின் சம்பளத்தில் மெல்பனில் நல்ல வீடு வாங்க

வங்கிக் கடன் கிடைக்கும் என்பது சாருலதாவின் எண்ணம். இப்படி ஒவ்வொருவர் மனங்களும் வெவ்வேறு காரணங்களால் குதூகலித்தது.

சாருலதாவிடம் வேலை கிடைத்த விடயத்தை மகிழ்ச்சியுடன் சொல்லிவிட்டு, அங்கு நிகழ்ந்த விநோதமான சம்பவம் பற்றியும் சுந்தரம்பிள்ளை விவரித்தபோது அவள் அதை நம்ப மறுத்தாள்.

கொலிங்வூட் என்ற பெயருடைய பூனை பேசியதை சாருலதாவால் கொஞ்சமும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

மனிதர்களுக்கு வைத்தியம் பார்க்கும் அவள், 'உங்கள் மனதில் இருந்த ஒருவகை நினைப்புத்தான் அந்தப் பூனை பேசுவது போல் கேட்டிருக்கிறது. உட்காதும் மூளையின் ஒரு பகுதிதானே ' என்றாள்.

'இல்லை. சாரு உண்மையாகக் கேட்டது'

'முட்டாள்தனமாக பேசாதீர்கள் மற்றவர்கள் சிரிக்கப் போகிறார்கள்''.

'உண்மை. நீ நம்பாவிட்டாலும்'

'மனோவியாதியால் பீடிக்கப்பட்டவர்களுக்குத்தான் இப்படி உணர்வு வரும். வேலை கிடைக்காமல் தலை பேதலிப்பவர்களை நான் பார்த்திருக்கிறேன். நீங்கள் மட்டும்தான் வேலை கிடைத்ததால் இப்படி ஒரு பேதலித்த நிலையை அடைந்திருக்கிறீர்கள்' எனக் கூறிவிட்டு கணவனை தனது நோயாளியை போல் பார்த்துவிட்டு நகைச்சுவைக்காக செய்வது போல புன்னகைத்தாள்.

இந்தக் கதையை இவளிடம் இனி பேசிப் பிரயோசனம் இல்லை எனப் படுக்கைக்கு சென்றான் சுந்தரம்பிள்ளை. படுக்கையிலும் காலோஸின் காதல் விடயங்களுடன், பேசும் பூனையின் நினைவுகள் தொடர்ந்தன. கணக்காளரின் மலச்சிக்கலும், மலகூடத்து பிளேபோய் மகசின் விவகாரமும் சிரிப்பை வரவழைத்தன. தொடர்ந்து வந்த அன்றைய நிகழ்வுகளின் நினைவுகள் தமிழ் படத்தில் வரும் நவரச காட்சிகள்போல் வந்தன. சில மணித்தியாலத்தில் நினைவுகள், குழந்தைகளின் உணவைச் சுற்றிப் பறக்கும் இலையான்கள் போல் பறந்தன. விரட்டிவிட்டு நித்திரைக்குச் செல்ல நடுநிசி கடந்துவிட்டது. அதன் பின்பு அந்த நினைவுகள் மீண்டும் கனவுகளின் காட்சிகளாகின.

□ □ □

அடுத்த நாள் வேலைக்குச் சென்ற போது சாம் அன்ரோவிச் என்ற அழகான இருபத்தைந்து வயதான இளைஞன் சுந்தரம்பிள்ளைக்கு உதவியாளராக நியமிக்கப்பட்டிருந்தான். சாம் யூகோஸ்லாவியாவில் குரோசியவைச் சேர்ந்தவன். ஏற்கனவே நாலு வருடங்கள் மிருகவைத்தியம் படித்துவிட்டு பட்டப்படிப்பை முடிக்காமல் அவுஸ்த்திரேலியா வந்தவன்.'ஏன் தொடர்ந்து படிக்கவில்லை' எனக் கேட்டபோது 'ஆங்கிலம் இங்கு எனக்கு படிப்பதற்கு பிரச்சினையாக இருந்தது. தற்பொழுது திருமணம் ஆகி ஒரு குழந்தைக்கு தந்தையாகி விட்டபடியால் குடுப்பத்திற்காக உழைக்க வேண்டிய நிலையில் இருக்கிறேன்' என்றான்.

வெள்ளைக்காரர் இலங்கையை ஆண்டதால் தனக்கு ஆங்கிலம் பிரச்சினையாகவில்லை என்ற நினைப்பு சுந்தரம்பிள்ளைக்கு வந்தது.

எப்பொழுதும் சிரித்தமுகத்தோடும், மற்றவர்களிடம் நகைச்சுவையாகவும் பெண்களிடம் சாதுரியமாகவும் பேசும் சாமை உடனடியாகவே பிடித்திருந்தது. இருவரும் வெளிநாட்டவர்களாகவும் இருந்ததால் நட்பு வசந்தகாலத்து செடியாக துளிர்த்தது.

காலை நேரத்தில் வேலை தொடங்கியதும் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் மிருகங்களை பரிசோதிக்க வோர்ட் ரவுண்ட் போகவேண்டும். அதற்கான குறிப்புப் புத்தகத்துடனும், பரிசோதனைக் கருவிகள், மருந்துகளுடனும் சாமும் சுந்தரம்பிள்ளையும் பூனைகள் அடைத்து வைக்கப்பட்ட பகுதிக்குச் சென்றபோது கொலிங்வூட் எதிரில் வந்தது.

'வேலை தொடங்குவதற்கு போகும் போது எதிரில் வந்தாலும் இந்தப் பூனை மிகவும் புத்தி சாதுரியமானது. தன் தேவையை நிறைவேற்றிக் கொள்ளும். எந்த நாய்க்கும் பயப்படாது. இல்லையா கொலிங்வூட்? ' என்று சாம் அதனை கையில் தூக்கி அதனது சாம்பல் நிறமான பட்டுப் போன்ற உரோமங்களை கைகளால் தடவியபடி அறிமுகப்படுத்தியபோது, 'ஏற்கனவே எனக்கு அறிமுகமாகிவிட்டது' எனச் சொன்னவாறு கொலிங்வூட்டின் பழுப்பு நிற கண்களை பார்த்து அதன் தலையில் தடவினான் சுந்தரம்பிள்ளை.

இருவரது தொடுகைகளிற்கு எந்த அசைவையும் காட்டாது தனக்கு இப்படி செய்வது உங்கள் கடமை என இராணுவ மேலதிகாரி, சோல்ஜரிடம் சலுட்டை ஏற்றுக்கொள்வது போல் இருந்துவிட்டு திடீரென சாமின் கையில் இருந்து கீழே பாய்ந்து சுந்தரம்பிள்ளையின்

காலைப் பிராண்டியபடி ‘பெண்கள் விடயத்தில் மட்டும் இவனை நம்பாதே. மற்றும்படி இவன் நல்வன்’ எனக் கூறியது.

சுந்தரம்பிள்ளை திடுக்கிட்டு வீட்டில் மனைவி சாருலதா கூறியதை நினைவு கூர்ந்தான்.

‘இந்தப் பூனை போன்று இங்கு ஒரு நாயும் உள்ளது’ என்று சாம் கூறினான்.

ஆனால் சாமைப் பற்றிய கொலிங்வூட்டின் கூற்று அவனுக்கு கேட்டிருக்க சாத்தியமில்லை. எனக்கு மட்டுமே அதனைக் கேட்கமுடிகிறது என்ற எண்ணத்தில் தன்னை சுதாரித்துக்கொண்டு ஒவ்வொரு கூட்டில் இருந்த பூனைகளை பார்த்துப் பரிசோதித்து, ஏற்கனவே நோய் குணமானவற்றை வீட்டுக்கு அனுப்பும்படி குறிப்பெழுதிவிட்டு, சிலவற்றிற்கு ஏற்கனவே கொடுக்கும் மருந்தை மாற்றி வேறு மருந்தை எழுதினான்

பூனைகளின் வோட்டின் ஒரு மூலையில் உள்ள கூட்டில் சிறிய, நாலுமாதம் மட்டுமே வயதான மோல்ரீஸ் இன நாய்க்குட்டி இருந்தது. வெள்ளை நிறத்தில் புதிதாக பெய்த பனியை திரட்டிச் செய்த உருண்டை போல் அழகாக இருந்தது. கருமையான மூக்கு திருஸ்டிப் பொட்டாக தெரிந்தது. கண்கள் உரோமத்தில் புதைந்திருந்தது. அந்த நாய்க்குட்டி தன் தலையை தொடர்ச்சியாக மேலும் கீழுமாக ஆட்டிக்கொண்டிருந்தது. உரோமத்தை விலக்கி கண்கள் இரண்டையும் பார்த்தபோது கண்கள் இரண்டிலும் மெதுவான கிரிக்கட்டின் சுழல் பந்து வீச்சில் தெரியும் சுழற்சி தெரிந்தது. மேலும் கீழுமாகவும் மற்றும் இடம் வலம் என நான்கு திசைகளிலும் சுழற்சி இருந்தது. அந்த கண்களை பார்த்தவுடன் அதன் மூளை நரம்பின் பகுதிகள் மூளை காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருப்பது புரிந்தது. கூட்டிலிருந்து சோதனை செய்வதற்காக நாய்க்குட்டியை சாம் தூக்கியபோது கூட்டின் உட்பகுதியில் தலைமயிர் வளர்த்த இந்திய சாமியார் சத்திய சாயிபாபாவின் கண்ணாடிப் பிரேம் போட்ட சிறிய படம் இருந்தது. பல இலங்கை இந்தியர்களது வீடுகளில் சுவர்களில் தொங்கிக் கொண்டிருக்கும் படம் இப்படி நாயினது கூட்டில் இருப்பது சுந்தரம்பிள்ளை எதிர்பார்க்காதது.

‘இது என்ன? இந்தக் கூட்டில் சாயிபாபாவின் படம் இருக்கிறது?’

‘இந்தியப் பெண் ஒருவரின் நாய்க்குட்டி. இவர் ஒரு ஞானி என்றும் இவரின் ஆசியால் மூளைக்காய்ச்சல் குணமாகும் என்று

வைத்திருக்கிறார். அந்தப்படத்தை கூட்டை விட்டு எடுக்க வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டார்'. என்றார் அந்தப் பகுதிக்கு பொறுப்பான மோறின்

'ஏன் இங்கு வைத்தியத்துக்கு கொண்டு வந்தார்கள். அப்படியே அவரிடம் கொண்டு போயிருக்கலாமே?

'அவர் இந்தியாவில் இருப்பதால்தான் இங்கு வந்திருக்கிறார்கள்;' மீண்டும் சிரித்தபடியே அவள் சொன்னாள்.

அந்தப் பதில் நகைச்சுவையாக மட்டுமல்ல தர்க்கரீதியாகவும் இருந்து.

அந்த நாய்க்குட்டி குணமானால் பெயரும் புகழும் கிடைப்பது சத்திய சாயிபாபாவிற்குத்தான். வைத்தியசாலைக்கு அல்ல. ஆனால் நாய்க்குட்டி இறந்தால் வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற பின்பும் இறந்து விட்டது என்பார்கள். ஆக மொத்தத்தில் சாயிபாபாவின் கீர்த்திக்கு பங்கம் வராது. புற்று நோய் வந்த ஒருவர் பலதடவை கீமோதிரபி, ரேடியோதிரப்பி என விஞ் ஞானத்தின் பயன்களை பெற்று குணமாகி இருப்பதும், பலகாலம் வாழ்வதும் இக்காலத்தில் சகஜமாக நடக்கிறது. ஆனால் அதற்கான பெயர் மட்டும் யாரோ மயிர் வளர்த்த பேர்வழிக்கு செல்வது வைத்திய தொழில் செய்யும் சுந்தரம்பிள்ளைக்கு அநியாயமாகப் பட்டது. புற்றுநோயை பற்றி பல காலம் ஆராய்ச்சி செய்த விஞ் ஞானிகள் மற்றும் குணமாக்கிய வைத்தியர்கள் எந்த பாராட்டுதலும் பெறுவதில்லை. அவர்களது பெயரைக் கூட எவரும் நினைவு வைத்திருப்பதில்லை. பரவாயில்லை. சத்தியசாயி பக்தர்கள் செலுத்தும் பணம் மருத்துவருக்கும் வைத்தியசாலைக்கும் கிடைக்கிறது. இந்த நினைப்பு சுந்தரம்பிள்ளைக்கு சிறிது ஆறுதலைக் கொடுத்தது.

சாமின் உதவியுடன் மயக்க மருந்தை ஏற்றி அந்த குட்டி நாயை நித்திரையாக்கிவிட்டு இருவரும் நாய்கள் அடைக்கப்பட்டிருக்கும் பகுதிக்குச் சென்றார்கள்.

நாய்களின் வோர்ட், பூனைகளை வைத்திருக்கும் வோர்ட்டில் இருந்து சிறிது தூரத்தில் உள்ளது. இடைப்பட்ட பகுதியில்தான் சத்திரசிகிச்சை செய்யும் அறைகள் மற்றும் பல்வைத்திய பிரிவும் உள்ளன. இதன் மூலம் நாய்களின் குரைப்புச் சத்தங்கள் பூனைகளுக்கு கேட்காது. நாய்கள் பகுதி இரண்டாக பிரிக்கப்பட்டு தொற்று

நோய்ப் பிரிவும் தொற்றாத நோய்களால் பீடிக்கப்பட்ட நாய்களை வைத்திருக்கும் பிரிவும் உள்ளன. தொற்றாத நோய்ப் பகுதி மேலும் இரண்டாக பிரிக்கப்பட்டு, அதில் தீவிர சிகிச்சைப்பிரிவு தனியாக உள்ளது. ஒவ்வொரு பகுதிக்கும் பொறுப்பாக இருப்பவர்களுக்கு மேலாளர் மேவிஸ் என்ற ஐம்பது வயதான பெண். பருத்த உடலும் கரகரத்த ஆண்குரல் போன்ற அவரது குரலும் நாய்களை மட்டுமல்ல மனிதர்களையும் ஒரு வழிக்குக் கொண்டு வரும் போல் தெரிந்தது. காக்கிநிற அரைக்கால் சட்டையுடன் சிகரட்டு பிடித்தபடி வைத்தியசாலையின் வாசலில் எதிர்கொண்ட போது சாமினால் மிக மரியாதையாக அறிமுகப்படுத்தபட்டார்.

இருவரும் சென்ற பாதையில் டொக்டர் காலோஸ் சேரமும் அன்ட்ரூவும் தங்களது வோர்ட் ரவுண்டை முடித்துக்கொண்டு வந்தபோது எதிர்ப்பட்டார்கள். இருவரது முகத்திலும் அணையின் மேலாகப் பாயும் வெள்ளம் போல் சிரிப்பு நுரைத்தபடி வழிந்தோடியது.

'இவர்கள் சிரிப்புக்கு ஏதாவது செக்ஸ் ஜோக்குகள்தான் காரணமாக இருக்கும்' என சாம் மெதுவாக காதோரமாக சொன்னான்.

'சாம், இன்று அழகான ஒரு பெண் வைத்தியர் வேலை தேடி நேர்முகத்துக்கு வந்தார்.

'காலோஸ் அந்த பெண்ணின் நேர்முகம் முடியும் வரை கண்ணை அவளது தொடைகளில் இருந்து எடுக்கவில்லை. ஆண்களின் கண்களை களவு கொண்டு செல்லும் அபாரமான அழகு. அழகைவிட அவளது நடை பேசும் தோரணை விபரிக்க முடியாத அளவு கவர்ச்சியானது. இந்த வைத்தியசாலை அவளது அழகைத் தாங்குமோ தெரியாது?'

அன்ட்ரூவின் வாயில் இருந்து அழகின் ஆராதனையுடன் நாடகப்பாணியில் வார்த்தைகள் எச்சிலில் தோய்ந்து வழிந்தன..

'அவளுக்கு வேலை நிச்சயம்தானே, காலோஸ்' என்றான் சாம்.

'நேற்று இப்படியான ஒரு முகத்தை வேலைக்கு எடுத்தேன். அதற்கு சமன் செய்ய அழகான பெண்ணை வேலைக்கு எடுக்க வேண்டாமா? சுந்தரம்பிள்ளையை பார்த்து சிரித்தபடி காலோஸ் சொன்னபோது அந்த வழியால் வந்த மோறின், ' உமது முகத்தை பலவருடமாக பார்த்து பொறுத்துக்கொள்ளுகிறோம் காலோஸ்

உன்னிலும் பார்க்க இளமையும் அழகும் சிவாவிடம் உள்ளது' என்றாள்.

"மோரினுக்கு கறுப்பு பிடிக்கும்" என்றான் காலோஸ்

'பிளடி காலோஸ்' என கூறியபடி கடந்து சென்றாள்

இந்தச் சம்பாசணையில், வேலையில் சேர்ந்த இரண்டாம் நாள் காலை நேரத்தில் கலந்துகொள்ள விருப்பம் இல்லாமல், தீவிர சிகிச்சை பிரிவுக்குள் சுந்தரம்பிள்ளை சென்றான்.

அந்த இடத்தில் ஒரு இளைஞன் சிரித்தபடியே வந்து கைகளைத் தந்து தன்னை ஜோன் ரிங்கர் என அறிமுகப்படுத்திக்கொண்டான். சிரிக்கும்போது முன் பல்லுக்கு மேலே உள்ள சிவந்த முரசும் தெரிந்தது. கருப்பான சுருள் தலைமுடியுடன் ஆறடி உயரத்தில் அழகாக இருந்தான்.அவனது சிரிப்பில் மற்றவர்களை தொற்றிக்கொள்ளும் கவர்ச்சி இருந்தது..

அந்தத் தீவிர சிகிச்சை பிரிவில் அதிக கவனிப்பு தேவைப்படும் நோய் கொண்டவை இருந்தன. அதில் பாம்பு கடித்த ஒரு ஆண் அல்சேஷன் நாய் இருந்தது. அதனது மூத்திரவாயில் ரியுப் செலுத்தி பிளாஸ்ரிக் பையுடன் இணைத்திருந்தார்கள். அந்த நாயில் இருந்து இரவு முழுவதும் வெளியேறிய சலத்தின் அளவைக் குறித்து வைத்திருந்தார்கள்.

அவுஸ்திரேலியாவில் உள்ள ரைகர் இனத்தைச் சேர்ந்த பாம்பினால் கடிக்கப்பட்டு இரவு வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்ட இந்த நாய்க்கு பாம்புக்கடிக்கான மாற்று மருந்து செலுத்தப்பட்டதால் இன்று உயிர் பிழைத்துள்ளது. வெப்ப காலத்தில் காலை மாலை நேரத்தில் இந்த ரைகர் பாம்பினால் மிருகங்களும் மனிதர்களும் கடிபடுவார்கள். பாம்புகள் இரைதேடி இடம்பெயரும் போது நாய்கள் அவற்றை நோக்கி கடிப்பதற்காகவோ விளையாட்டாக மூக்கை நுளைக்கும் போது அவற்றின் முகத்திலும் கால்களிலும் கடிக்கப்படும். சிறுநீரகத்தை தாக்கும் இந்தப் பாம்பின் விஷம் உடனடியாக மாற்று மருந்து கொடுக்காவிடில் உயிரை எடுக்கக் கூடியது. சிறுநீரகத்தின் பாதிப்பை அறிந்து கொள்ள சிறுநீரின் அளவு பயன்படும்.

அந்த நாயின் சலத்தில் இரத்தம் தெரியவில்லை. மேலும் எழுந்து நின்று மோப்பம் பிடித்தபடி நின்றது. புதிய ஜென்மத்தை

அடைந்துவிட்டது என தெரிந்ததால் உரிமையாளருக்கு நாயை பற்றிய நல்ல செய்தியை தெரிவிக்க வேண்டும் என குறித்துக்கொண்டு அடுத்த கேசை பார்த்தான். அது ஒரு சிவப்பும் நரை நிறமும் கலந்த நீண்ட உரோமங்களைக் கொண்ட பொமரேனியன் இன நாய், இதய நோயால் பாதிக்கப்பட்டதால் கண்ணாடியால் ஆன ஒட்சிசன் பெட்டிக்குள் இரவலாக சிலிண்டரில் இருந்து கிடைத்துவரும் காற்றை சுவாசித்துக்கொண்டு, ஆட்களைப் பார்த்து வாலையாட்டியது.

அதிக காலம் வாழ விரும்பும் மனிதர்கள் போல் செல்லப்பிராணிகளையும் தன்னுடன் வைத்துக்கொள்ள மனிதர்கள், விலங்குமருத்துவர்களை நம்பி இருக்கிறார்கள். செல்லப்பிராணிகளின் கடைசி நிமிடத்தை தீர்மானிப்பது மிருக வைத்தியரின் மிகவும் பொறுப்பு வாய்ந்த கடமையாகிறது. இனிமேல் இந்த செல்லப்பிராணி நோயால் துன்பப்படும். அந்த நோயை எம்மால் குணப்படுத்தவோ, குறைக்கவோ முடியாது. மேலும் அதன் துன்பம் உங்களுக்கும் பாரமாகவும், கவலையாகவும் இருக்கும் என்பதை உரிமையாளர்களுக்கு உணர்த்த வேண்டும். இங்கே அந்த விடயத்தை அவர்களுக்கு புரியும்படி சொல்லும் அதே நேரத்தில், அந்த வார்த்தைகள் நூற்றுக்கு நூறு வீதம் உண்மையாகவும் இருக்கவேண்டும்.

அங்கு வைத்திருந்த செல்லப்பிராணிகளின் நோய்களின் வரலாற்றை, மருத்துவ அறிக்கையில் படித்து தெரிந்து கொள்ள முன்பு ஜோன் ரிங்கரால் சுந்தரம்பிள்ளையிடம் சுருக்கமாக கூறப்பட்டது.

'ஜோன்' மெல்பனில் உள்ள சிறந்த கிறமர் கல்லூரியில் படித்தவன்' என்றான் சாம்

மெல்பனின் தனியார் பாடசாலைகள் அவுஸ்திரேலியாவில் புகழ் பெற்றவை. அவற்றில் படிப்பதற்கு உள்ளூர் மாணவர்கள் மட்டுமல்லாது பல ஆசிய நாடுகளில் இருந்து செல்வந்த மாணவர்கள் வருவார்கள். கல்விமான்களை மட்டும் உருவாக்காமல் சிறந்த விளையாட்டு வீரர்களையும் சமுதாயத் தலைவர்களையும் சேர்த்து உருவாக்கும் இந்தப் பாடசாலைகளில் படிப்பதற்கு நிச்சயமாக பெருந்தொகைப் பணம் வேண்டும். பெற்றோர் இங்கு பிள்ளைகளை படிக்க வைக்கும்போது பிள்ளைகளின் எதிர்காலத்திற்கான ஒரு முதலீடாகவே அதனைச் செய்வார்கள். அப்படியான சிறந்த

பள்ளியில் படித்து விட்டு நாய்களை பராமரிக்கும் வேலைக்கு ஜோன் வந்தது அவனது பெற்றோரின் சிறந்த முதலீடாக சாமுக்குத் தெரியவில்லை.

‘நாய்களைப் பராமரிக்கும் வேலை எனக்குப் பிடித்தது. அதுதான் செய்கிறேன். சிவா, நான் வசிக்கும் இடத்திற்கு உங்கள் இடத்தை கடந்துதான் செல்ல வேண்டும். வேலை முடிந்த பின் என்னோடு காரில் வந்தால் உங்கள் வீட்டில் இறக்கி விடுவேன். உங்களுக்கு இரயில் பணம் மிச்சமாகும். எனக்கும் பேச்சுத்துணையாக இருக்கும்’. என்றான் சாம்.

ஜோனின் நேரடியான பேச்சும், அவன், சாமின் கூற்றை சிரித்தபடியே புறக்கணித்ததும் சுந்தரம்பிள்ளைக்கு பிடித்திருந்து.

‘நல்லது மீண்டும் மாலையில் சந்திப்போம்’ என்றான் சுந்தரம்பிள்ளை.

சாம், நீ ஆங்கிலம் தெரியாது என்றாய் ஆனால் எப்படி அழகா பேசுகிறாயே?

‘நான் படிக்கிற காலத்தில் குரோசியாவில் உல்லாசப் பிரயாணிகள் ஹொட்டல் ஒன்றில் பகுதி நேர பரிமாறுபவனாக வேலை செய்தபோது ஆங்கிலத்தை பேசுவதற்கு கற்றுக் கொண்டேன். பேசும் ஆங்கிலம் எழுதுவதற்கோ, படிப்பதற்கோ காணாது.

‘இந்த வைத்தியசாலையில் வேலை செய்வது இலகுவாக இருந்ததா?’

‘அதற்கு நான் காலோசிற்கு நன்றி சொல்லவேண்டும். எனது பிரச்சினையை சொல்லிய போது வேலை தந்ததுடன் என்னை தொடர்ச்சியாக பாதுகாப்பது காலோஸ்தான்.

‘ஏன் பாதுகாக்க வேண்டும்’?

‘எனது ஆங்கிலம் பல செல்லப்பிராணிகளின் உரிமையாளர்களுக்கு ஆரம்பத்தில் புரியவில்லை. அதை பெரிய விடயமாக்கி சிலர் என்னை வேலையில் இருந்து எடுக்க வேண்டும் அல்லது நாய்களுக்குப் பொறுப்பாக போடவேண்டும் என்ற பிரச்சினை உருவாக்கிய போது காலோஸ் அந்த இடத்தில் என்பக்கம் நின்றதால் ஒருவாராலும் என்னை ஒன்றும் செய்ய முடியவில்லை.

‘இந்த வைத்தியசாலையில் இனவாதமானவர்கள் பலர் இருக்கிறார்களா’?

‘இனவாதம் இருந்தாலும் பலர் வெளியே காட்டமாட்டார்கள். ஆனால் நம்மைப்போல் வெளிநாட்டவர்களிடம் திறமை இருக்கு என்பதை வெளிக்காட்டும் வரையும் அவர்கள் நம்பமாட்டார்கள்’.

‘அது சரியானதுதானே’?

‘என்னைப்பொறுத்தவரை நேரடியான இனவாதத்தை நான் இதுவரை சந்தித்தது இல்லை’

‘அது ஒருவிதத்தில் நிம்மதியளிக்கிறது. என்னைப் பொறுத்தவரை சிறுமிருகங்களின் வைத்தியத்தை இப்பொழுதுதான் செய்கிறேன். அதற்காக இந்த வைத்தியசாலையைத் தேர்ந்தெடுத்து விண்ணப்பித்தேன். குறைந்தபட்சமாக வேறு பிரச்சினை எதுவும் இல்லாமல் இருந்தால் இலகுவாக இருக்கும்’.

ஊர், சமூக கூட்டம், ஏன் ஒரு வேலைத்தலமாக இருந்தாலும் ஒரு அன்னியர் செல்லும்போது அந்த இடத்தின் சமநிலையில் மாற்றம் ஏற்படுகிறது. ஏற்கனவே அங்குள்ளவர்கள் தங்களது செயல்களில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இந்த மாற்றம் இலகுவானதல்ல. இந்த மற்றத்தை விரும்பாதவர்கள் புதிதாக வந்தவர்களை வெறுக்கிறார்கள். மற்றவர்கள் மாற்றத்தை அனுசரித்தபடி தங்களை மாற்றுகிறார்கள். மாற்றம் மெதுவாகத்தான் நடைபெறும் என்று வரலாறு சொல்கிறது. அவுஸ்திரேலியா, ஆவுஸ்திரேலிய ஆதிகுடிகளை மனிதர்கள் இல்லையென கூறியது. பின்பு ஆசியர்களுக்கு, எதிராக வெள்ளையர் மட்டும்தான் குடியேறலாம் என இருந்து மாற்றமடைந்து பல்கலாச்சார சமூகமாகமாறி சகலரையும் வரவேற்கிறது. இந்த மாற்றம் மெதுவாகத்தானே நடந்தது.

இனவாதம், சமயவெறி, ஏன் சாதியஎதிர்ப்பு என்பன இந்த மாற்றத்தை வெறுக்கும் உணர்வால் உருவாகிறது. இளைஞர்கள், பெண்கள் மாற்றங்களை ஏற்றுக்கொண்டு செல்பவர்களாக இருப்பதால் இந்த எதிர்ப்பு உணர்வுகள் அவர்களில் குறைவாகவும் ஆண்களில் வயதானவர்கள் மாற்றத்தை வெறுப்பவர்களாக இருப்பதால் இப்படியான எதிர்ப்புணர்வுகளை அதிகம் கொண்ட டைனோசர் போன்று இருக்கிறார்கள். இந்த வெறுப்புகள் எதிர்ப்புணர்வுகள் சமூகங்கள், சமயங்கள், சாதிகள் தொடர்ச்சியாக இருப்பதற்கு உதவும்

என்பதால் இப்படியான கூட்டத்தில் தமது பிழைப்பை நடத்துபவர்கள், இதை தொடர்ச்சியாக வைத்துக்கொள்ளவிரும்புகிறார்கள். கத்தோலிக்க பாப்பாண்டவருக்கோ ஒரு முல்லாவுக்கோ ஒரு கூட்டத்தின் தனித்தன்மையை பேணுவது அவர்கள் அதிகாரத்திற்கும், பிழைப்பிற்கும் தேவையாகிறது.

சாம், உன்னை காலோஸ் உள்வாங்கியது போல் இப்பொழுது நான் வந்திருக்கிறேன். இது எப்படியாக வைத்தியசாலையில் பார்கப்படுமோ தெரியவில்லை.?'

'காலோஸ் இருக்கும்வரையில் எவராலும் எதுவும் செய்யமுடியாது.காலோசுக்கு இந்த வைத்தியசாலையை நடத்தும் நிருவாக குழுவினரிடம் நல்ல மரியாதை உள்ளது. பத்துவருடங்கள் தலைமை வைத்தியராக இருந்து நடத்துவது பெரிய காரியமாக அவர்கள் நினைக்கிறார்கள்' என்றான்

# 5

அந்தத் தீவிர சிகிச்சைப்பகுதியில் இருந்த வேலையை முடித்துக்கொண்டு வெளியேறி பொதுவான நோய்களைக் கொண்ட நாய்கள் பகுதிக்கு சென்ற போது உப்பலான குழந்தை முகத்துடன் ஆறரை அடி உயரமும் அதற்கேற்ற அகலமான விரிந்த தோள்களுடனும் ஒரு இளைஞன் வந்தான்.வயது இருபதுக்கு மேல் இராது. அவனுடன் ஒரு குண்டான சந்தனக்கலர் லாபிரடோர் இன நாய் தொடர்ந்து வந்தது. நடப்பதை வேண்டா வெறுப்பாக செய்வது போல் அதனது நடை இருந்தது. ‘மிகவும் அமோகமாக விளைந்திருக்கிறாய்‘ என அதன் தலையை குனிந்து தடவும்போது ‘நீ தானா அந்த புது இந்திய வைத்தியர்’ என கேட்டு முகத்தை திருப்பியது. சுந்தரம்பிள்ளை திடுக்கிட்டு கையை எடுத்தான்.

இந்த நாய் பேசுவது மட்டுமல்ல. திமிராகவும் பேசுகிறது. அதன் வார்த்தையில் ஏளனம் தொக்கி நிற்கிறது. புது வைத்தியன் என்பதாலா இல்லை இந்தியன் என நினைப்பதாலா? நான் இங்கு வேலையில் சேர்ந்திருப்பது - எல்லோருக்கும் புதிதாக இந்தியன் ஒருவன் வேலைக்கு சேர்ந்திருப்பதாக எல்லோரிடமும் தகவல் போய் சேர்ந்திருக்கிறது. இதை திருத்தி நான் இலங்கையன் என்று சொல்வதில் என்ன இருக்கிறது? என நினைத்தபோது அந்த ஆறு அரை அடி இளைஞன் தனது பெயர் மல்வின். நாய்கள் வைத்திருக்கும் பகுதியில் வேலை செய்வதாக சொல்லி பலமாக கைகளைக் குலுக்கினான். அவனது உடலின் பலமும் ஆரோக்கியமும் அந்த கை குலுக்கலில் தெரிந்தது.

‘புதிய வேலைக்கு எங்கள் வாழ்த்துகள்‘ எனக் கூறிவிட்டு ‘இந்த நாய்க்கு இடம் கொடுக்க வேண்டாம். இது திருட்டுப் பெட்டைநாய்’ எனச் சொல்லிவிட்டுச் சென்றான்.

‘போடா குண்டா’ எனக்கூறிக் கொண்டு அந்த நாய் அவனைத் தொடர்ந்து சென்றது.

சாம், இந்த நாயின் கதை என்ன?"

'இந்த நாய் மேவிஸ் என்ற வோர்ட்டுகளுக்கு மேலாளராக இருக்கும் பெண்ணின் நாய். அவரோடு அடிக்கடி இங்கு வரும். மற்ற நாய்களை பொருட்படுத்தாது. நாய்க் கூடுகளை எல்லாம் கழுவும் போது எல்லா நாய்களையும் முன் பகுதியில் அடைத்து விட்டு அந்த கூடுகளில் உணவை வைத்து மீண்டும் அந்த கூடுகளில் நாய்களை விடும்வரை இடைவெளி நேரத்தில் வெளிவாசலை பூட்டி இருப்பது வழக்கம். ஒரு நாள் அந்த வாசல் தவறுதலாக திறந்திருந்தது. இந்தப்பகுதியில் இருபத்தினான்கு கூடுகள் இருக்கிறது. இந்தக் குண்டுநாய் அந்த இருபத்து நாலு கூட்டில் உள்ள உணவையும் தின்று விட்டது.

'எப்படி? அவ்வளவு சாப்பாட்டையும் சாப்பிட்டதா? அதன் வயிற்றுக்குள் எப்படி அடக்க முடிந்தது? '

'ஒரு கூட்டில் சாப்பிட்ட சாப்பாட்டை அடுத்த கூட்டில் வாந்தியாக எடுத்துவிட்டு மீண்டும் சாப்பிட்டிருக்கிறது.. இதன் பின் இந்த வைத்தியாலைக்குள் அனுமதி மறுக்கப்பட்டு ஆறுமாதம் தடை போடப்பட்டிருந்தது. இதன்பின் எல்லோரும் இந்த நாயை திருட்டு நாய் என்பார்கள். உண்மையான பெயர் மக்ஸி'

'வழமையாக லபிரடோர் இனத்து நாய்கள் ஆகாமியம் பிடித்தவை. ஆனால் இது ஒரு உலக சாதனையாகத்தான் இருக்க முடியும்'

சாதாரண நாய்களின் பிரிவில் வேலை சுலபமாக இருந்தது. பெரும்பாலான நாய்கள் நோய்கள் குணமாகி இருந்தன. அவற்றை வீட்டுக்கு அனுப்பலாம் என எழுதிவிட்டு தேவையான மருந்துகளுடன் செலவுக்கணக்கையும் சேர்த்து எழுதிவிட்டு கடைசிப்பகுதியான தொற்று நோய் பகுதிக்குச் சென்றார்கள்;.

வைத்தியசாலையில் தொற்று நோய்ப் பகுதி தனிப்படுத்தப்பட்ட பகுதி. வேலைசெய்பவர்கள் மட்டும்தான் செல்லமுடியும் என வரையறுக்கப்பட்ட பகுதி. அங்கு போகும் போதும் வரும் போதும் கிருமிநாசினியில் கால்களை நனைத்து விட்டுச் செல்ல வேண்டும். சிறிய நாய்க்குட்டிகள்தான் அங்கிருந்தன. தடைமருந்து போடாததால் தொற்றிய வைரசால் பாதிக்கப்பட்டவை.

ஐந்து நாய் கூடுகள் மட்டுமே உள்ள அறையது. அங்கு ஒரு இரண்டு மாத வயதான ரொட்வீலர் இன நாய்க்குட்டியின் சடலம் கருப்பு பிளாஸ்ரிக் பையில் வைத்து தலை மட்டும் தெரிய கூட்டினுள்ளே வைக்கப்பட்டிருந்தது. குளிந்து விட்டிருந்தது. வயிற்று போக்கில் இறக்கும் இந்தக்குட்டிகள் உயிருடன் இருக்கும் போதே தண்ணீர் தன்மையற்று குளிர்ந்திருக்கும். விரல்நுனிகளை சில்லிட வைத்தன.

இந்த குட்டிகள் உரிமையாளர்களின் கவனக்குறைவால் இறக்கின்றன. இவைகளுக்கு தடைமருந்துகள் உரியகாலத்தில் ஏற்றப்பட்டிருந்தால் இவை உயிர் பிழைத்திருக்கும்.

ரொட்வீலர் நாய்க்குட்டியின் உடலை உடனே குளிர் அறைக்கு எடுத்து செல்லும்படிசொல்லிவிட்டு அதனது சொந்தக்காரருக்கு உடனே தகவல் தெரிவித்தான் சுந்தரம்பிள்ளை. இறந்த செல்லப்பிராணிகளின் உரிமையாளர்களுக்கு அறிவிப்பது மிருகவைத்தியரகளின் பொறுப்பு. இது மிகவும் கஷ்டமான தகவல் பரிமாற்றமாகப் பட்டது சுந்தரம்பிள்ளைக்கு, இறந்த ஒவ்வொரு செல்லப்பிராணியும் மருத்துவரின் தோல்வியாகவே மனதில் உறுத்தியது. இதைவிட தங்களது நாயோ பூனையோ இறந்து விட்டது என அறிந்தவுடன் அவர்களின் சோகத்தின் வெளிப்பாடுகள் ஒவ்வொருவருக்கும் வித்தியாசமாக இருப்பதால் எதிர்கொள்ளுவது சுலபமான காரியம் இல்லை. மிருகவைத்தியர்களை செல்லப்பிராணிகளின் மரணத்துக்கு குற்றம் சாட்டுவதும் உண்டு. இறப்பு தவிர்க்க முடியாத ஒன்றாகும் போது, இழப்பால் ஏற்படும் உள்ளத்து உணர்வுகளை உள்வாங்கி ஆறுதல் சொல்லுவது ஒரு சவாலாக இருக்கும்.

காலை நேரத்தில் இந்த வோர்ட் ரவுண்ட் முடிய இரண்டு மணித்தியாலம் ஆகிவிட்டது.இதன் பின்பு கிடைக்கும் சிறிய ஓய்வில் தேநீரை அருந்தி விட்டு காத்திருக்கும் வெளிநோயாளர்களைப் பார்ப்பதற்கு சென்றுவிட்டான் சுந்தரம்பிள்ளை.

பரிசோதனை அறையில் ஒரு நாயை பரிசோதித்துக்கொண்டிருக்கும் போது ஜோன் ரிங்கர் வந்து, ‘சிவா, நாய் ஒன்று இறந்து விட்டது’ எனச் சொன்னபோது ‘எழுதிவிட்டு போகவும்’ என்று கூறி விட்டு வேலையை தொடர்ந்தான். இண்டு நோய்களால் பீடிக்கப்பட்ட செல்லப்பிராணிகளின் இரத்தத்தை எடுத்து பரிசோதனைக்கு அனுப்ப வேண்டி இருந்ததால் ஜோன் ஸ்ரிங்கர் சொன்னது மறந்துவிட்டது. நினைவில் மீண்டும் வந்து சொந்தக்காரருக்கு தொடர்பு கொள்ள

விரும்பி நாயின் பெயரைப் பார்த்தபோது அந்தக் குறிப்பு புத்தகத்தில் மரணம் என்ற வார்த்தை, காலையில் ஒட்சிசனின் உதவியால் சுவாசித்துக் கொண்டிருந்த அந்தப் பொமரேனியனின் அருகே எழுதப்பட்டிருந்தது. சுவாசிப்பதற்கு கடன் வேண்டி கஷ்டப்பட்ட அந்த சிறிய நாய்க்கு பதினைந்து வயதுக்கு மேலாக இருக்கும். ஏற்கனவே ஒவ்வொரு நாளும் மருந்தெடுத்து ஒரு வருடத்துக்கு மேல் சராசரி நாய்களிலும் பார்க்க அதிக காலம் உயிர் வாழ்ந்துள்ளது. அந்தப் பிராணியின் இறப்பில் உரிமையாளரைத் தவிர எவரும் கவலைப்படத் தேவையில்லை. சில நாய்களுக்கு முதுமையில் இதயத்தில் வால்வுகள் பழுதாகி விடுவதால், இதயத்தின் கன அளவு பெருத்து மார்புக்கூட்டில் உள்ள சுவாசக் குழாயை அழுத்துவதால் சுவாசிக்க முடியாமல் இருக்கும். இந்த நிலையில் மருந்துகளால் இதை சுகப்படுத்த முடியாது. ஆனால் சிலகாலம் மட்டும் ஆயுளை நீட்டிவைக்கலாம்.

உரிமையாளரை தொலைபேசியில் அழைத்து உங்கள் "ஜின்ஜியை எங்களால் காப்பாற்ற முடியவில்லை. உங்களுக்கு எனது அனுதாபம். மேலும் ஜின்ஜியின் உடலை உங்கள் வீட்டில் புதைப்பதற்கு விரும்பினால் நீங்கள் வந்து பெற்றுக்கொள்ளலாம்'. என சுருக்கமாக சொல்லிவிட்டு, உடலை பார்ப்பதற்கு தீவிர சிகிச்சை நாய்களின் கூடுகள் இருந்த பக்கம் சென்ற சுந்தரம்பிள்ளைக்கு அங்கு பெரிய அதிர்ச்சி ஒன்று காத்துக்கொண்டிருந்தது. சில அதிர்ச்சிகள் சந்தோசத்தை தரும். ஆனால் இந்த அதிர்ச்சி வேலைக்கு சேர்ந்த இரண்டாவது நாளில் சங்கடத்தைக் கொடுத்தது.

இறந்ததாக அறிவிக்கப்பட்ட ஜின்ஜி அந்தக் கண்ணாடி ஒட்சிசன் கூட்டுக்குள் இருந்தபடி பார்த்து தனது சிறு உடலோடு சேர்த்து வாலை ஆட்டியது. காலையில் பார்த்த போது இல்லாத புத்துணர்வுடன், உற்சாகமாக நின்றது. சென்னிற சடைமயிரை சிலிர்த்தபடி நின்றது தொலைவில் இருந்து பார்த்தால் ஆபிரிக்க சிங்கத்தின் தோற்றத்தில் இருந்தது. அந்த வயதில் அந்தத் தோற்றம் மனதுக்கு ரம்மியமாக இருந்தது. அருகில் சென்றதும் மெதுவான அதனது குரைப்பு விட்டு விட்டு வந்தது. சுந்தரம்பிள்ளைக்கு, ' இந்தக் கூட்டுக்குள் நான் ஏன் இருக்கவேண்டும். நான் முற்றாக குணமாகி விட்டேன். என்னை வீட்டுக்கு அனுப்பு' என கேட்பது போல் இருந்தது.

அதிர்ச்சியும் ஆத்திரமும் புகைந்தபடி அந்த பகுதியின் கதவை அடித்து மூடிவிட்டு 'ஜோன்' எனக் கூவியபடி தேனீர் பருகும்

இடத்துக்குச் சென்ற சுந்தரம்பிள்ளை அங்கு ஜோன் ஒருகையில் கோப்பியும் மறுகையில் சிகரட்டும் பிடித்தபடி தாழ்வாரத்தில் நின்றதை பார்த்த போது கோபம் மேலும் அதிகமாகியது.

'என்ன நடந்தது?' என்றான் மிக சாவகாசமாக.

'உயிருடன் இருக்கும் நாயை இறந்ததாக நீ எழுதியதால் நான் உரிமையாளரிடம் உடலைப் பெற்றுக் கொள்ள வரும்படி சொல்லிவிட்டேன். இப்பொழுது ஜின்ஜி உயிருடன் இருக்கிறது'.

'அப்பொழுது ஜின்ஜியை கருணைக்கொலை செய்வோம்' என்றான் சிரித்தபடி.

'பகிடி விடாதே. இப்பொழுது யார் பதில் சொல்வது'

'நான் சொல்லுகிறேன். அதில் பிரச்சினை இல்லை'.

'என்ன பிரச்சினை இல்லையா?'

'இதை இலகுவாக எடுத்துக்கொள்.

'எப்படி ஜோன்? உயிரோடு இருக்கும் நாயை இறந்து விட்டது என உரிமையாளருக்கு சொல்லிவிட்டு..'.

'இப்படி பல விடயங்கள் இங்கே நடந்திருக்கின்றன. இது ஒரு விபத்து'.

அமைதியாக சிலகணங்கள் ஜோனின் முகத்தை பார்த்துவிட்டு, 'இப்படி பெரிய வைத்தியசாலையில் குழப்பம் ஏற்பட சாத்தியம் இருக்கலாம். நடந்தது நடந்துவிட்டது. எதற்கும் இதை நானே பார்த்துக்கொள்வதுதான் புத்திசாலித்தனமானது என நினைத்து'நான் சொல்லுகிறேன்' என்று சொல்லிவிட்டு சுந்தரம்பிள்ளை தனது அறைக்குச் சென்று தொலைபேசியை எடுத்து நாய்க்குரியவரை அழைத்தபோது, அடுத்த முனையில் அவரது மனைவி அழுதபடி, 'அவர் ஜின்ஜியின் உடலை எடுக்க வைத்திய சாலைக்கு வந்து கொண்டிருக்கிறார்' என்றாள்.

அந்த மனைவியிடம் விடயத்தை சொல்லி மேலும் சிக்கலாக்காமல் உரிமையாளர் வந்ததும் மன்னிப்புக் கேட்டுக் கொள்வோம் என்ற சிந்தனையில் வைத்தியசாலையின் வரவேற்புப் பகுதியில் இருப்பவர்களிடம் ஜின்ஜியின் உரிமையாளர் வந்தால் தன்னிடம் அனுப்பும்படி சொன்னான் சுந்தரம்பிள்ளை.

இதுபோன்ற சம்பவங்கள் இந்த வைத்தியசாலையில் முன்பு நடந்திருந்தாலும் குறிப்பிட்ட சம்பவங்கள் சிலருக்கு மட்டும் தெரிந்திருந்தால் சேதாரம் குறைவாக இருக்கும். ஆனால் செய்தியை பரவவிட்டால் எல்லோர் வாயிலும் இந்த விடயம் அவலாகும். முடிந்தவரை விடயம் வெளியே பரவுவதை தவிர்க்கவும் - முக்கியமாக வைத்திய முகாமைத்துவத்திற்கு செல்லாமல் பார்த்துக் கொள்ளவும் விரும்பினான் சுந்தரம்பிள்ளை. அவனது மனதைப் பொறுத்தவரை தனது தவறாக இதனை நினைத்துக்கொண்டு, இந்த சம்பவத்தால் ஏற்பட்ட சேதாரத்தை குறைப்பது எப்படி என்று மனதில் குமைந்து கொண்டிருந்தான். கால் மணிநேரத்தில் ஒருவர் அறையின் கதவைத் தட்டினார். வெளியே வந்து பார்த்தபோது அறுபது வயதான, நரைத்த தலையோடு சட்டையின் மேல் இரு பொத்தான்களைப் போடாமல் மார்பு மயிர்கள் தெரிந்த ஒருவர் கால்மேசு போடாமல் கருப்பு காலணியை அணிந்திருந்தார். கருமையான கண்களுடன் ஒரு ஒலிவ் நிறத்தில் தென் இத்தாலியர் அல்லது கிரேக்க நாட்டவர் என அனுமானிக்கப்படக் கூடியவிதத்தில் ஒருவர் நின்றார். அவசரத்தில் மனிதர் ஓடிவந்திருக்கிறார். அவரது முகத்தில் சோகம் திரையிட்டு கண்கள் சிவந்து கலங்கி இருந்தன.

‘எப்பொழுது ஜின்ஜி இறந்தது? ’வார்த்தைகள் தடுமறியபடி கேட்டார்.

‘நீங்கள் தயவு செய்து என்னை மன்னிக்கவேண்டும். இங்கு ஒரு தவறு நடந்து விட்டது.ஜின்ஜி உயிரோடு உள்ளது. இறந்தது ஜின்ஜி போன்ற வேறு பொமரேனியன் ஒன்று. பெயரை சரியாக பார்க்காமல் நாங்கள் தவறு இழைத்து விட்டோம்’ என்றான் அவரது கையை பிடித்தபடி.

குரல் தாழ்மையாகவும் முகத்தில் உண்மையான, ஆழமான மனவருத்தத்தை வெளிப்படுத்தியபடியும் சுந்தரம்பிள்ளை சொல்லியதும் அந்த மனிதர் முகத்தில் மகிழ்ச்சி புதுவெள்ளமாக புரண்டு ஓட அப்படியே சுந்தரம்பிள்ளையை கட்டி இறுக்கமாக அணைத்துவிட்டார். அந்த அணைப்பின் இறுக்கம் அந்த மனிதரின் சந்தோசத்தை வெளிபடுத்தியபோதிலும் குற்ற உணர்வில் வெட்கத்தில் நெளிந்தான் சுந்தரம்பிள்ளை. அதைப் பொருட்படுத்தாமல் நின்ற இடத்தில் இருந்து பலே நாட்டியப் பெண்களைப்போல் குதிக்காலை எம்பியபடி ‘ஜின்ஜியை பார்க்கலாமா?’ என்றார்.

அவரது முகத்தில் சில விநாடிகள் முன்பாக இருந்த சோகம் கோடையில் பெய்த சிறுமழை போல் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. அந்த இடத்தில் அளவற்ற சந்தோசம் ததும்பியது. சுந்தரம்பிள்ளைக்கு அது பெரிய ஆறுதலாக இருந்தது..

'நீங்கள் ஜின்ஜியை போய் பாருங்கள். வீட்டுக்கு கொண்டு செல்லலாம். நான் பத்து நிமிடத்தில் மருந்துகளை தர ஆயத்தம் செய்கிறேன். மீண்டும் வந்து இந்தக் கதவுக்கு பக்கத்தில் வந்து அமருங்கள்'

அவரது மகிழ்சி சுந்தரம்பிள்ளையை காற்றில் பரவும் வைரஸ் நோய்போல் வேகமாக தொற்றிக்கொண்டது.

ஜின்ஜிக்கான மருந்துகளை எடுத்துக் கொண்டு கொரிடோரில் தொடர்ச்சியாக பார்த்துக் கொண்டிருந்தபோது அந்த மனிதரைக் காணவில்லை. மற்றைய செல்லப் பிராணிகளைப் பரிசோதிகாமல் பத்து நிமிடம் காத்திருந்து அந்த மருந்துகளை எப்படி காலாகாலத்துக்கு கொடுக்க வேண்டும் என்று சொல்லி விடுவதற்காக காத்துக் கொண்டிருந்தான் சுந்தரம்பிள்ளை.

இந்த வேலையை நர்சுகள் செய்வது வழக்கம். ஆனால் இந்த விடயம் மற்றவர்களுக்கு தெரியாமல் இருக்கவேண்டும் என்பதுடன் குற்றவுணர்வும் நிழலாக சேர்ந்து அந்த மனிதருக்காக காத்திருந்தான் சுந்தரம்பிள்ளை.

அரை மணி நேரமாகிவிட்டது.

அவசரமாக எம்பி எம்பி நடந்தபடி அந்த நீளமான கொரிடோரில் வந்து கொண்டிருந்த அவரின் இடுப்பில் மரணமடைந்து உயிர்த்தெழுந்த நல்லாயனாக ஜின்ஜி என்ற அந்த பொமரேனியன் நாய் இருந்தது. அதனது முகத்தில் ஒருவித ஒளிவட்டம் தெரிவது போல் இருந்தது. நல்லாயனை சிலுவையில் அறைந்து பின்பு புதைத்தவர்கள் நம்மைப் போல் தவறு செய்திருக்கலாமா? இவ்வளவு மருத்துவம் முன்னேறியகாலத்திலே இறந்தவர்கள் என பிணஅறையில் போட்டவர்கள் பிழைத்து வரும் போது இரண்டாயிரம் வருடத்துக்கு முன்பாக இப்படியான விடயங்கள் சாதாரணமாக நடக்கலாம் என்ற சிந்தனையுடன் நின்றான் சுந்தரம்பிள்ளை. அருகில் வந்து மருந்து சரைகளை பெற்றுக்கொண்ட அந்த மனிதர் பதிலுக்கு கையில் இருந்த காகிதப் பொட்டலத்தை கொடுத்தார்.

அந்தப் பொட்டலத்தை வாங்காமல் 'இது என்ன?' எனக்கேட்டான் சுந்தரம்பிள்ளை.

'இது சம்பூக்கா. இனிப்பாக இருக்கும் இத்தாலிய மது. ஜின்ஜி உடலை எடுத்துப்போக வந்த என்னிடம் அதனை உயிருடன் மட்டுமல்ல குணமாக்கியும் கொடுத்துள்ளீரகள். ஜின்ஜி நாய் இல்லை. எனது மனைவிக்கு பிள்ளை மாதிரி' என அவர் சொன்ன போது அவரது குரல் கரகரத்தது. கண்களில் நீர் இமைகளை முட்டியது.

அந்த அரைமணிநேர இடைவெளியில் வெளியே சென்று மதுசாலையில் அவர் இதை வாங்கியிருக்க வேண்டும். அவரது மனநிறைவுக்காகவும் தொடர்ந்து அந்த மனிதரை சங்கடப்படுத்தாமல் இருப்பதற்காகவும் அந்த சம்புக்கா இருந்த பொட்டலத்தை வாங்கிக்கொண்டபோதிலும் மனதில் செய்த தவறு உறுத்தியது. ஜோன் எழுதிவிட்டு சென்றாலும், தொலைபேசியில் தொடர்பு கொள்ளும் முன்னர் உறுதிப்படுத்தியிருக்க வேண்டியது வைத்தியரின் கடமையாகும். தவறு செய்து விட்டு அதற்கான பரிசுப் பொருளை வாங்குவது எப்படி சரியாகும் என்பது மனசாட்சியின் வாதமாக இருந்தது.

அப்பொழுது அந்த வழியாக வந்து கொண்டிருந்த ஜோன், 'இந்தப் போத்தல் எனக்கு கிடைத்திருக்க வேண்டும்' என்றான்.

'அந்த மனிதனுக்கு நாங்கள் அதிர்ச்சி வைத்தியம் கொடுத்திருக்கிறோம். என்றாலும் நீ சிறிது கவனமாக எழுதி இருக்கலாம். நானும் ஜின்ஜியைப் பார்த்த பின்புதான் அவர்களுக்கு தொலைபேசி எடுத்திருக்கவேண்டும்'.

'சிவா... நடந்ததையிட்டு கவலைப்பட்டு பிரயோசனம் இல்லை. இலகுவாக எடுத்துக் கொள்ளவேண்டும். இப்படி பல விடயங்களை வாழ்வில் நாம் எதிர் கொள்ளவேண்டும்' என்றான் அந்த இருபத்தைந்து வயதான இளைஞன் ஜோன்.

அவனது கூற்றிலும் உண்மையிருக்கிறது. ஒரு விடயத்தில் பல பேர் சம்பந்தப்பட்டிருப்பதால் ஒருவர் விடும் தவறு பலரை பாதிக்கிறது. எனது தவறுகளை தவிர்த்துக் கொள்ள இது ஒரு பாடமாக அமைய வேண்டும் என நினைத்துக்கொண்டு தனது அடுத்த வேலைக்குச் சென்றான் சுந்தரம்பிள்ளை.

பரிசோதனை அறையில் ஏற்கனவே வயதான அவுஸ்திரேலிய தம்பதிகள் நின்றார்கள். உயரமாக சிறிது குறும்தாடியுடன் நின்றவர் கண்ணாடி அணிந்திருந்தார் நீள் வட்டமான அவரது முகத்தில் உதடுகள் பெனிசிலால் வரைந்தது போன்று மெல்லியதாக இருந்தது.. பெண் பச்சைக்கலரில் சட்டை அணிந்திருந்தாள். இருவரும் எழுபது வயதை ஒட்டியவர்களாக இருந்தார்கள். ஆணிடம் கையில் வயதான டல்மேசன் நாய் நின்றது. கருப்பு புள்ளிகள் கொண்ட அதனது உரோமம் பளிச்செனத் தெரிந்தது. அந்த நாயின் விதைகள் கால்களுக்கிடையால் பெரிதாக தெரிந்தன.

உங்களுக்கு நான் என்ன செய்யவேண்டும் என கேட்ட சுந்தரம்பிள்ளையை திரும்பிப் பார்த்துவிட்டு சிரித்தார். அவருக்கு புரியவில்லை என நினைத்து‘ நான் தான் மிருகவைத்தியர் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்றபோது அவரது முகத்தில் கடுப்பாகியது.

அவருடன் வந்த மனைவி உடனே ஹீரோவுக்கு தான் பிரச்சினை. எங்களுக்கல்ல.

அந்தப்பதிலில் உள்ள நகைச்சுவையை பொருட்படுத்தாமல் ‘என்ன பிரச்சினை’ என்றபடி பெண்ணை நோக்கியபோது -

‘சில நாட்களாக சலத்தோடு இரத்தம்போகிறது‘

‘என்ன வயது?

‘‘பன்னிரண்டு‘‘

கொஞ்சம் மேசையில் ஹீரோவை ஏற்றுவோமா?

மேசையின் உயரத்தை குறைத்தபோது கமோன் ஹீரோ ஏறு என்றதும் மெதுவாக ஏறியது. அந்த நாயில் மேன்மையுடனான கீழ்ப்படிவாக தெரிந்தது.

நான் இந்த நாயின் புறஸ்ரேற்றை பரிசோதிக்கப்போகிறேன். நீங்கள் ஹீரோவை பிடித்துகொள்ளுங்கள் எனக்கூறியபோது அந்த மனிதர் கவனிக்காமல் அடுத்த பக்கம் முகத்தை திருப்பிக் கொண்டு நின்றார்

இப்பொழுது அந்த மனைவி வந்து பிடித்தார்.

நாயின் குதத்தில் விரலை விட்டு பரிசோதனை செய்தபோது அதனது புரோஸ்ரேற் வீங்கி இருந்தது.

உங்களது நாயில் புரஸ்ரேற் தொற்றாகி வீங்கி இருக்கிறது. அதனால்தான் இரத்தம் வருகிறது. ஆனாலும் சலத்தை எடுத்து ஏதாவது கல் அல்லது கான்சர் இருக்கிறதா எனபார்க்க வேண்டும்.

ஏன் புரஸ்ரேற் வீங்கி இருக்கிறது? மனைவி

'இது விதை எடுக்காத ஆண் நாய்களுக்கு வருவது'.

'மனிதருக்கு வருவது போல்' என்று சொல்லிவிட்டு கையை வாயால் மறைத்தபடி சிரித்தார் அந்த பெண்மணி.

உடனே அந்த ஆண் இப்பொழுதுதான் நாயின் பக்கம் திரும்பினார். அவரது கண்களிலும் முகத்திலும் சூடு தெரிந்தது.

இருவருக்கும் இடையில் ஏதாவது குடும்ப பிரச்சினை இருக்கவேண்டும். அதற்கு இந்த டல்மேசன் ஊடகமாக பயன்படுகிறது. இந்த விடயத்தில் நான் ஈடுபடுவதிலும் பார்க்க தலைமை வைத்தியரிடம் இரண்டாவது ஆலோசனைக்கு விடுவது சாலச்சிறந்தது என்று இதைபற்றி மேலும் விளங்கப்படுத்துவதற்கு எனது தலைமை வைத்தியரை கூப்பிடுகிறேன் எனச் சொல்லிய சுந்தரம்பிள்ளை அடுத்த அறையில் நின்ற காலோஸை அழைத்தான்.

உள்ளே வந்த காலோசையும் அந்த மனிதர் உற்சாகமாக பார்க்கவில்லை. அதைப்பொருட்படுத்தாமல் மீண்டும் அந்த நாயை பரிசோதித்துவிட்டு - இந்த விடயத்தில் எனது கருத்தும் சிவாவின் கருத்தை ஒத்து இருக்கும். விதையை எடுக்காததால் இந்த நோய் வந்திருக்கிறது. தற்பொழுது மருந்துகளோடு ஒப்பரேசன் செய்வது தான் ஒரே வழி என்றார் காலோஸ்.

"இந்த வயதில் ஹீரோ தாங்குமா ?

வேறுவழி இல்லை என பதிலை எதிர்பார்க்காமல் அந்த அறையை விட்டு காலோஸ் வெளியேறிவிட்டார்.

இப்பொழுது மருந்தை தாருங்கள் மற்றவைகளை நாங்கள் யோசித்து சொல்கிறேம் என்று அந்த பெண் கூறியதும் மருந்துகளைத் தயார் செய்ய பார்மசிக்கு சென்றான்.

மருந்தை வாங்கிக்கொண்டு செல்லும் போது அந்த மனிதர் தொடர்ச்சியாக மவுன விரதம் இருந்தார்.

சுந்தரம்பிள்ளையைப் பொறுத்தவரை அவர்கள் வெளியே சென்றது தலையில் இருந்து பாரத்தை இறக்கியது போன்று இருந்தது.

மனதில் இருந்த விடயத்தை பகிர்வதற்காக பார்மசிக்கு சென்ற போது அங்கு காலோஸிடம், 'அந்த மனிதன் ஒரு வார்த்தை என்னோடு பேசவில்லை. அதைவிட புரஸ்ரேற் விடயமாக பேசிய போது அந்தப்பெண் சிரித்துக்கொண்டே மனிதர்களுக்கு வரும் விடயம்போல் என சொல்லி சிரித்தபோது அந்த மனிதரின் முகத்தில் கடுப்பாக இருந்தது'.

'அந்த மனிதருக்கு புரஸ்ரேட்... விட்டுத்தள்ளு'.

முதல் நாள் ரிசப்சனில் இருந்து சுந்தரம்பிள்ளையை காலோஸுக்கு அறிமுகப்படுத்திய அந்த மெல்லிய பெண் பார்மசிக்கு வந்தபோது 'என்ன லின் உனது வாசனை இன்றைக்கு... எனக்கு தலையை கிறுகிறுக்கிறது'.

'கமோன் காலோஸ், உனக்கும் சிவாவுக்கும் இந்த விடயத்தை சொல்ல வேண்டும். இப்ப சிவாவை பார்த்துவிட்டு டலமேசனோடு வந்த மனிதர் காசை கொடுத்துவிட்டு நான் இந்த வைத்தியசாலைக்கு இனிமேல் வரமாட்மேன் என்றபோது நான் என்ன நடந்தது என்றுகேட்டபோது ஆரம்பத்தில் ஒரு இந்தியன் நாயை பற்றி சொன்னான். எனக்கு எதுவும் புரியவில்லை. அதன்பின்பு ஒரு யப்பான் மேலதிகாரி வந்தான். அப்பொழுதும் எதுவும் பரியவில்லை. ஏன் ஆவுஸ்திரேலியர் ஒருவரும் இல்லையா என கேட்டார்.

அப்ப நீ என்ன சொன்னாய்?

'வேறு மிருகவைத்தியரை பார்க்கபோகிறீர்களா' என்றேன் அவர் வெளியில் சென்றதும் அவரது மனைவி நாய்க்கு புரஸ்ரேற் என்றது அவருக்கு பிடிக்கவில்லை. இதை நீங்கள் பெரிதாக எடுத்துக் கொள்ள வேண்டாம் என சொன்னார். இதை சொல்லத்தான் வந்தேன்'

'அந்த நாய்க்கு மட்டுமல்ல அந்த மனிதருக்கும் புரஸ்ரேட் அதுதான் எங்களில் கடுப்பு. சிவா விட்டுத்தள்ளிவிட்டு வேலையைப்பார்'

## 6

புரஸ்ரேட் விடயத்தில் அந்த மனிதர் கோபமடைந்து வெளியேறிய சிறிது நேரத்தில் பல பூனைகளை சாம், சிறு பூனைக் கூடுகளில் தொடர்ச்சியாக பரிசோதனை அறைக்குள் கொண்டு வந்து நிலத்தில் வரிசையாக வைத்துக் கொண்டிருந்தான். கிட்டத்தட்ட அறையின் அரைவாசியிடம் அந்தக் கூடுகளால் நிரப்பப்பட்டிருந்தது.

'ஏன் இவையெல்லாம் என்னிடம் வருகின்றன'? என ஏதோ பெரிய வேலையை எதிர்பார்த்து மனக் கிலேசத்துடன் சுந்தரம்பிள்ளை அவனிடம் கேட்டபோது 'இன்று ஆண் பூனைகளை நலமெடுப்பது உங்கள் வேலை. இன்று இந்த நாள் உங்களுக்கானது'. என்றான்.

புத்தரின் புன்னகை அவனது முகத்தில் தவழ்ந்தது.

சுந்தரம்பிள்ளைக்கு எதுவும் புரியவில்லை மீண்டும் கேட்ட போது ' கவலைப்பட வேண்டாம். ஒவ்வொரு நாளும் மூன்று மிருகவைத்தியர்கள் இந்த மூன்று அறைகளிலும் வேலை செய்கிறார்கள். இந்த மூன்று அறைகளிலும் வெவ்வேறு நாட்களில் இந்தப் பூனைகளுக்கு நலமெடுக்கும் வேலை நடக்கிறது. இன்றைக்கு செவ்வாய்கிழமை என்பதால் இந்த அறையில் நடக்க வேண்டும். எனவே இன்று இந்த வேலையை நீங்கள் செய்யும் நாள்' என விபரித்தான்.

பதினொரு பூனைகளும் பல்வேறு வர்ணங்களில் பாரதியாரின் பாடலுக்கேற்றபடி கூடுகளில் இருந்தபடி மிரண்ட கண்களால் இடைவெளிக(ளூடாக பார்த்தபடி இருந்தன. இப்படியாக கூட்டாக நலமெடுத்தல் இதுவே முதல் முறையானதால் பதினொரு கடுவன் பூனைகளின் இருபத்திரண்டு விதைகளை எடுப்பதற்காக ஒவ்வொன்றாக மயக்க மருந்து கொடுத்து விதை எடுக்கத் தயாரான சுந்தரபிள்ளையை சாம் தடுத்தான்.

‘இப்படி நலம் எடுத்தால் கிட்டத்தட்ட ஒரு மணித்தியாலம் சென்றுவிடும். அது இந்த இடத்தில் சரிவராது. பதினொரு பூனைகளுக்கும் முதலில் மயக்கமருந்து கொடுத்துவிட்டு பின்பு நலம் எடுப்போம்’

எல்லாவற்றிற்கும் மயக்க ஊசி கொடுத்து மயக்கமாக்கியபின் மேசையில் கிழங்குகளை அடுக்கியது போல் கிடத்திய பின்பு சாம் அவற்றின் விதைப்பகுதியை சுத்தப்படுத்தி அற்கஹோல் தெளித்த பின்பு சுந்தரம்பிள்ளை ஒப்பரேசனால் விதைகளை எடுத்ததும் அந்தப் பதினொரு பூனைகளிலும் படிந்திருந்த இரத்தக்கறைகளை சுத்தப்படுத்திவிட்டு மீண்டும் அவற்றினது கூட்டுக்குள் வைக்கப்பட்டன. சாம் கூறியபடி அந்த வேலை அரை மணி நேரத்தில் முடிந்து விட்டது.

இலங்கையில் கிராமங்களில் இரண்டு பேர் அமுக்கி சாக்குப் பையில் ஆண் நாய்களை போட்டு தரையில் அழுத்தி பிடித்திருக்க மூன்றாவது மனிதர் அதனது விதைகளை நெருப்பில் பழுக்க காய்ச்சிய இரும்பு சத்தகத்தால் வெட்டி எடுத்து விட்டு அந்த இடத்தில் அவைகள் துடிக்கத் துடிக்க ஓலம் இட்டபடி இருக்கும் போது சுடுசாம்பலை அள்ளி அந்த இடத்தில் தடவும் குரூரமான காட்சி நினைவுக்கு வந்தது. இதை விட கொடூரமானது மாடுகளுக்கு வண்டிக்காக விதை நீக்கும் படலம். காளைமாடுகளுக்கு சாராயம் பருக்கிவிட்டு நான்கு கால்களை ஒன்றாகக் பிணைத்துக் கட்டிவிட்டு அவைகள் ஓலமிட கிடுக்கித்தடியால் அவைகளின் விதைகளை நசிப்பது. மறுநாள் அந்தக் காளை மாடுகளின் விதைகள் காற்பந்தளவு வீங்கியபடி இருக்கும். அந்த வீக்கம் வற்றி சாதாரண நிலை அடைவதற்கு இரண்டு வாரங்கள் ஆகும். கயிற்றில் கட்டப்பட்ட களைமாடுகள் தீனமான குரலில் ஓலமிட்டபடி கட்டிய மரத்தை சுற்றி பல நாட்களாக நடந்து கொண்டிருக்கும். அவற்றால் நிலத்தில் படுத்து இளைப்பாறவோ உணவு உண்ணவோ பல நாட்களாகும். இந்தக் கொடுமைகளை சிறுவனாக பார்த்த அனுபவம் சுந்தரம்பிள்ளைக்கு உண்டு.

மனதை விட்டு அகலாத சம்பவம் ஒன்றும் சுந்தரம்பிள்ளை இலங்கையில் மிருக வைத்தியராக வேலை செய்த காலப்பகுதியில் நடந்தது.

ஒரு நாள் இலங்கையில் அநுராதபுரம் பகுதியில் வேலை செய்யும் போது நடந்த சம்பவம். இரண்டு சிங்கள விவசாயிகள்

அவசரமாக வந்து காளை மாட்டிற்கு இரண்டு நாளாக இரத்தப் பெருக்கு நிற்கவில்லை வந்து பாருங்கள் என அழைத்தார்கள். விடயத்தை விவரமாக கேட்டபோது, கிடுக்கித் தடியால் நலம் எடுக்கப்பட்ட ஒரு காளை மாட்டினது விதைப்பை வீங்கி பெருத்து இருந்திருக்கிறது. அந்த விதையில் இருந்து வடிந்த இரத்த வாடையால் கவரப்பட்ட ஒரு காகம் விதையில் கொத்தி இருக்கிறது. கொத்தியபோது விதைக்கு வந்த பிரதான இரத்த நாடியில் உறைந்திருந்த இரத்தக்கட்டியையும் தின்று விட்டது. இரத்த நாடியில் இருந்து இரத்தம் தொடர்ச்சியாக பாய்ந்து கொண்டே இருந்தது. இது நடந்து இரு நாட்கள் இரத்தப் போக்கு நிற்குமென காத்திருந்து விட்டு அது நடைபெறாததால் வைத்தியரை நாடியிருக்கிறார்கள் எனத் தெரியவந்தது. சுந்தரம்பிள்ளை அங்கு சென்று அந்த இடம் ஒரு குளக்கரை. அந்த குளக்கரையின் மேட்டில் வளர்ந்திருந்த பூவரச மரத்தில் அந்த சிவப்பும் வெள்ளையும் கலந்த காளை மாடு கட்டப்பட்டு நின்றது. அதனது தேங்காய் போல் வீங்கிய விதையின் கீழ்பகுதியில் இருந்து இரத்தம் தொடர்ச்சியாக பாய்ந்து கொண்டிருந்தது. மரத்தை சுற்றிய பகுதியெங்கும் இரத்தத்தால் வட்டமாக சகதியாக்கப்பட்டிருந்தது. அந்த இரத்த மணத்திற்காக காகங்கள் பூவரச மரத்தில் கூட்டமாக காத்திருந்தன. அந்த விவசாயிகள் இரத்தம் ஓடத் தொடங்கியதும் காளைமாட்டுக்கு காவல் இருந்ததால் நாய் நரி போன்ற மிருகங்கள் வரவில்லை. கண்ணீர் முகத்தில் கோலமிட விட்டு, விட்டு ஓலம் இட்டபடி அந்தக் காளை மாடு மரத்தை சுற்றி இரண்டு நாட்களாக ஓடிக்கொண்டிருந்தது.

காலம் காலமாக செய்வதையே தாங்கள் செய்ததாக கூறியபோது மேலதிகமாக அவர்களிடம் எதுவும் பேசாது மயக்கமருந்தைக் கொடுத்து இரத்த நாடியை கட்டியபின்தான் இரத்தப் போக்கு நின்றது. வண்டிக்குக் கட்டும் அந்த வடக்கன்மாடு அன்று உயிர் பிழைத்த சம்பவம் மனத்திரையில் வந்தது. அந்த ஒரு மாட்டுக்கு செய்த சேவையே நாலுவருடம் படித்ததற்கு போதுமானது என்ற மன நிறைவை சுந்தரம்பிள்ளைக்குத் தந்தது.

செல்லப்பிராணிகளுக்கான மருத்துவம் நடக்கும் இந்த வைத்தியசாலையில் நேரம் மிக முக்கியானது. பல விடயங்கள் தொழிற்சாலையில் நடப்பது போன்று வேகமாக நடைபெறும். எப்பொழுதும் பலர் தங்களது நோயுற்ற செல்லப் பிராணிகளுடன் வைத்தியத்துக்காக காத்துக் கொண்டிருப்பார்கள். இலங்கை, இந்தியாவில் அரசாங்க வைத்தியசாலைகளை தருமாஸ்பத்திரி

என்பார்கள். அந்த அர்த்தத்தில் பார்த்தால் இந்த வைத்தியசாலை செல்லப்பிராணிகளுக்கான தருமாஸ்பத்திரி எனக் கூறலாம்

இரண்டாவது உலகப் போரின் பின்பு வசதியற்றவர்களின் செல்லப்பிராணிகளுக்கு குறைந்த செலவில் சிகிச்சை பெற்றுக் கொள்வதற்காக தாராளமனம் கொண்ட சீமாட்டி ஒருவரால் உருவாக்கப்பட்டு பின்னர் கருணை உள்ளம் கொண்டவர்களின் கவனிப்பில் இந்த வைத்தியசாலை இயங்கிவருகிறது. உரிமையாளரிடம் பணம் இல்லை என்ற காரணத்தால் எந்த ஒரு பிராணியும் நோயால் துன்புறக்கூடாது என்பதே இந்த வைத்தியசாலையின் பிரதான நோக்கமாக அன்றில் இருந்து இன்று வரையும் உள்ளது. நோய் பிணியால் துன்புறும் மிருகங்களுக்கு வைத்தியம் செய்ய அசோக மன்னனால் உலகத்தில் முதலாவது மிருக வைத்தியசாலை கட்டப்பட்டதாக சரித்திரத்தில் எழுதப்பட்டுள்ளது. அந்தவிதத்தில் பார்த்தால் இது அந்த அசோகனின் வைத்தியசாலைக்கு நிகரானது

ஒவ்வொரு நாளும் நடு இரவு வரை இப்படியான நோக்கத்திற்காக திறந்திருக்கும் இந்த வைத்தியசாலையில் மறுநாள் புதன்கிழமை இரவு பணி செய்வதற்கான நேர அட்டவணை சுந்தரம்பிள்ளைக்கு தரப்பட்டிருந்தது. இரவுகளில் கொண்டு வரப்படும் செல்லப்பிராணிகள் கடும் நோயுள்ளனவாகவும் வாகன விபத்துக்குள்ளானவையாகவும் இருக்கும். அவைகளை எப்படி சாமாளிப்பது என்ற யோசனை இதயத்துடிப்பை கூட்டியது.

'மதிய உணவு நேரமாகிவிட்டது' எனச்சொல்லியவாறு, சுந்தரம்பிள்ளையை சாம் வைத்தியசாலைக்கு வெளியே கூட்டி வந்தான்.

'நான் ஏற்கனவே சான்விச் கொண்டு வந்திருக்கிறேன்'; எனச் சொன்ன போது 'இந்த வைத்தியசாலைக்குள் இருக்கும் அவசரத்தையும் பரபரப்பையும் விட்டுத் தள்ளி விட்டு வெளியே இயற்கையை பார்த்து, நுகர்ந்தால்தான் பின்பு நிம்மதியாக வேலை செய்யமுடியும்'. என்றான்.

நடுப்பகலில் கிடைத்த ஒரு மணி நேரத்தை செலவிட தெருவுக்கு வந்த போது ஏற்கனவே வைத்தியசாலையின் வாசலில் அன்ரூவும் டொக்டர் சேரமும் நின்று கொண்டிருந்தார்கள்.

‘வாங்கோ இன்று பிரிட்டிஷ் மதுவிடுதிக்குப் போவோம். இன்று செவ்வாய்க்கிழமை மதியம் பெண்கள் மேலே உடுப்பு இல்லாமல் பியர் பரிமாறும் நாள்’

அன்ரூ அழைந்தான்.

‘அன்ரூவுக்கு எந்த நாளில் அந்த சுற்றுவட்டாரத்தில் எந்த மதுபான விடுதியில் பெண்கள் மேலுடை இல்லாமல் இருப்பார்கள் என்பது அத்துப்படி’. என சாம் அவனது முதுகில் தட்டினான்.

‘இப்படி மனதுக்கு ரம்மியமான காட்சிகளைப் பார்த்தால்தான் திரும்பி வந்து மாலை ஆறுமணி வரையும் வேலை பார்க்க தெம்பாக இருக்கும். பெண்களின் உடலைப் பார்ப்பதை விட மனதுக்கு வேறு எது ஊக்கமாத்திரை?’. அன்ரூ விட்டுக் கொடுக்காமல்

எல்லோருமாக நோர்த் மெல்பனில் உள்ள அந்த மதுபானச்சாலையை நோக்கி நடந்தார்கள்.

சுந்தரம்பிள்ளைக்கு இது புதுமையாக இருந்தது. ஆனாலும் அவர்களுடன் சேர்ந்து நடப்பதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை. இவர்கள்தான் நட்புடன் என்னை தங்களில் ஒருவனாக ஏற்றுக் கொண்டவர்கள்.

அப்பொழுது அங்கு அவசரமாக ஓடி வந்த நர்ஸ் நொறேல், ‘காலோஸ்’ ஒரு இளம் பெண் வேலைக்காக உம்மைச் சந்திக்க வந்து காத்திருக்கிறாள். அவளுக்கு என்ன சொல்வது?’ எனக் கேட்டாள்.

‘மதிய உணவுக்கு போய்க்கொண்டிருக்கிறோம். வந்தவுடன் சந்திக்கிறேன்’. என்றார் காலோஸ்

‘எந்த மதுவிடுதி என்று சொல்லும் நான் கூட்டிக்கொண்டு வருகிறேன். அவள் எனக்கு ஏற்கனவே தெரிந்தவள்தான்’.

‘பிரிட்டிஷ் மதுவிடுதி’ என்றான் அன்ரூ சிரித்தபடி.

அதிக தூரம் நடக்கத் தேவை இருக்கவில்லை. இரண்டு சிறிய தெருக்களையும் அதன் அருகே பச்சையாக கம்பளம் விரித்து அதன் மேல் நட என்று சொல்வதுபோல வெட்டி விடப்பட்ட புல்தரைகளையும் அங்கு இடைக்கிடையே ஆங்காங்கு இருக்கும் யூகலிக்ப்ரஸ் மரங்களையும் கடந்து சென்ற போது இரண்டு வீதிகள் சந்திக்கும் இடத்தில் அந்த பிரிட்டிஷ் மதுபானச்சாலை தெரிந்தது.

அந்த நேரத்தில் வெளியே நடப்பது சாம் சொல்லியது போல் உடலுக்கும் மனத்திற்கும் அமைதியை கொடுத்தது. மெல்பனின் வசந்த காலத்து இதமான மஞ்சள் வெய்யில் உடலுக்கு இதமாக சூடாக இருந்தது. மிதந்து வந்த காற்று யுகலிப்ரஸ் வாசத்துடன் முகத்தில் மயிலிறகாக வருடிக் கொடுத்தது. யுகலிகப்ரஸ் மரங்கள் எந்தக் காலத்திலும் பச்சையாக இருப்பதும் எந்த இடத்திலும் வளரும் தன்மையால் நகரத்தை பசுமையாக்கியது. இதனால்தான் நந்தவனங்களின் நகரம் என்ற பெயர் மெல்பனுக்கு கிடைத்தது. முழு அவுஸ்திரேலியாவும் களிமண்ணும் இயற்கைப்பசளை தன்மையுமற்ற பூமியானதால் நீர்த் தன்மை இருப்பதில்லை. இதனால் மிகக் குறைந்த வகை மரங்களே இயற்கையாக வளரும். இந்த வறுமையான நிலத்தில் வெற்றிகரமாக வளரும் யுகலிக்ப்ரஸ் மரத்தை அவுஸ்திரேலியா எங்கும் காணலாம்.

மதுச்சாலை இருந்த இடம் மெல்பனின் மையப்பகுதியில் இருந்து இரு கிலோ மீட்டரில் இருந்தாலும் அமைதியாக அதிக வாகனங்கள் அற்ற தெருக்களாக இருந்தது. மதுச்சாலையின் பெயர் வாசலில் சிறிய விளம்பரப்பலகையில் நீல வர்ணத்தில் எழுதி இருந்தது. அதன் கீழ் விக்ரோரியா பிட்டர் என்ற பியர் போத்தலின் படம் வரைந்திருந்தது. குடிபோதையில் உள்ளவர்களும், ஆங்கிலம் புரியாதவர்களும் படத்தை பார்த்து அறிந்து கொள்ள வேண்டும் என்ற பொதுநலம் அந்த மதுபானச்சாலை உரிமையாளர்களுக்கு இருந்திருக்கவேண்டும். பெரிய விளம்பரமில்லாத பழைய கட்டிடத்தில் அமைந்திருந்த அந்த மதுச்சாலை மெல்பன் துறைமுகத் தொழிலாளர்களுக்காக ஆரம்பத்தில் இருந்திருக்கவேண்டும். அந்த இடத்தில் இருந்து மெல்பன் துறைமுகம் வெகு தூரமில்லை

கதவைத் திறந்து நால்வரும் உள்ளே சென்றனர். அங்கு இருளாக இருந்தது. ஒரு அழுது வடியும் மின்சார பல்ப் மட்டும் உயரத்தில் தெரிந்தது. கண்களுக்கு விம்பங்கள் உருவங்களாக மாறி தெளிவாக தெரிந்து கொள்ள சிறிது நேரம் எடுத்தது. அத்துடன் பெரிய சத்தத்துடன் வந்து கொண்டிருந்த கெவி மெற்றல் இசை காதை அடைத்தது. பியர் மணம் மூக்கை தடவி தலைக்குச் சென்று போதைக்கான இரசாயனங்களை கிளறியதும் உடனே மதுவின் தாகத்தை மூளையில் ஏற்படுத்தியது. மூக்கு காது கண்கள் என்ற மூன்று புலன்களாலும் அனுபவிக்கக் கூடிய இடம் மதுச்சாலை. இதில் முதலாவதாக போதைக்கான தாக்கத்தை உருவாக்குவது மணமேயாகும். மற்ற புலன்கள் மெதுவாகத்தான் செயல்பட்டன. இருள் மெதுவாக நீங்கி கட்புலன் மீண்டும் வந்து சேர்ந்தபோது

சுந்தரம்பிள்ளைக்கு பல ஆண்கள் பியர் விற்கும் கவுண்டரைச் சுற்றி நிற்பது தெரிந்தது. சிறிய மதுச்சாலையானதால் அதிக ஆசனங்கள் இல்லை. பத்துக்கும் குறைவாக போடப்பட்ட ஆசனங்கள் பெரும்பாலானவை வெறுமையாக இருந்தன.

அன்ரூ கூட்டத்தை ஊடறுத்தபடி வேகமாக எய்த அம்பின் கூர்முனைபோல் சென்றான். அவனை மற்றவர்கள் பின் தொடர்ந்தனர். கவுண்டரை நெருங்கிய போது நான்கு ஐரோப்பிய பெண்கள் மார்பில் எதுவும் அணியாமல் கறுப்பான ஜீன்சை மட்டும் அணிந்தவாறு பியர் பரிமாறிக் கொண்டிருந்தனர். நாலு பேரும் பியருக்கு சொல்லிவிட்டு காத்திருக்கும்போது, அவர்களின் முலைகளை கண்களை வெட்டாது பார்த்துக்கொண்டிருந்த அன்ரூ திடீரென தலையை தாழ்த்தி கண்களை வெட்டி உதடுகளை பக்கவாட்டில் குவித்து காலோஸைப் பார்த்து 'அந்த சிவப்புத் தலைக்காரியின் இரண்டு முலைகளும் சிலிக்கனால் ஆனது' என்றான்

'யூ பாஸ்ட்டட். சும்மா பார்த்து விட்டு போக வேண்டியது தானே. உன்னை மருத்துவ பரிசோதனை செய்யச் சொன்னார்களா?' என்றார் சத்தமாக காலோஸ்.

'எப்படி உறுதியாக சொல்கிறாய் அன்ரூ?' தயங்கியபடி சுந்தரம்பிள்ளை.

'இதோ அந்தப் பெண்ணை கவனித்துப்பார்;. அந்த முலைக்காம்புகள் நேராக இருக்கின்றன.அத்தோடு கீழ்ப்பகுதியில் சிறிய வெண்மையான தழும்பு இருக்கிறது'.

அந்த சிலிக்கன் முலைக்காரி சொல்லி வைத்தாற் போல சிரித்தபடி பியர் கிளாசை தந்த போது சுந்தரம்பிள்ளைக்கு அவளது முகத்தைப் பார்ப்பதா அல்லது முலையை பார்ப்பதா என்ற சங்கடம். சங்கடத்துடன் நெளிந்தபடி இரண்டையும் பார்த்த போது அன்ரூ சொன்னது சரியாக இருக்கலாம் எனத் தோன்றியது.

பியர் வந்ததும், பியரைப் பெற்றவர்கள் கவுண்டரை விட்டு விலகி புதிதாக பியர் வேண்டுவதற்கு வருபவர்களுக்கு ஜனநாயக அடிப்படையில் இடம் கொடுத்துவிட்டு, மற்றவர்களும் அந்த பியர் பெண்களின் முலைகளை தரிசித்து இன்பம் பெற வேண்டும். ஆனால் இந்த நால்வரும் கவுண்டரிலேயே பியர் கிளாசுகளை வைத்துக்கொண்டு, முலைகளை கண்களால் அர்ச்சித்தபடி பியரைப் பருகினார்கள். யாழ்ப்பாணத்து நல்லூர் தேரை நோக்கி தெய்வ

தரிசனம் பெற முன்னேறும் ஆஸ்தீக அடியார்கள் கூட்டம் கந்தனின் அனுக்கிரகம் தங்களுக்கு மட்டும்தான் என்ற நம்பிக்கையுடன் முன்னேறுவது போல் பின்னால் ஒரு கூட்டம் வந்து அலைபோல் மோதிக்கொண்டு இருந்தது. கூட்டத்தின் மோதலில் பியரை ஊற்றாமல் குடிக்க வேண்டும் என்ற கவலையும் சுந்தரம்பிள்ளையை பீடித்துக் கொண்டது.

'பியர் வேண்டியவர்கள் பின்னால் போகலாம்' என இரண்டு செங்கட்டிகள் உராய்வது போன்ற குரல்.

ஒலித்த குரலுக்குரியவர் நடுத்தர வயதான உயரமான தடித்த பெண்.தலைமயிரை குட்டையாக வெட்டி இருந்தாள். அவளது கண்கள் கோபக் கனல் தெறிக்க அன்ரூவை நோக்கி இருந்தது.

ஜனநாயகத்தை நிலை நிறுத்த யாராவது அதிகாரம் செய்ய வேண்டும். இல்லையெனில் ஒரு சிலர் மட்டுமே அதன் பலாபலனை அனுபவித்துவிடுவார்கள் என்ற அரசியல் தத்துவத்தை அந்தச் சம்பவம் விளக்கியது

'இந்தப் பெண்தான் இந்த மதுவிடுதியின் முதலாளி' என கூறிக்கொண்டு அன்ரூ பின்வாங்க,அவனைத் தொடர்ந்து மற்றவர்களும் சென்று காலியாகக் கிடந்த ஆசனங்களில் அமர்ந்து பியரை குடிக்கத் தொடங்கிய போது வாசலைத் திறந்தபடி நொரோலும் அவளுடன் அன்று வேலை தேடி வந்த மற்றப் பெண்ணும் இவர்களை நோக்கி வந்தார்கள்.

வந்தவர்கள் இருவரும் பக்கத்தில் கதிரைகளை இழுத்துக் கொண்டு வந்து போட்டுவிட்டு மேசையை சுற்றி அமர்ந்தனர். அந்த மதுபானவிடுதியில் இருந்தவர்கள் எல்லோரும் அந்த இரு பெண்களையும் பார்த்தார்கள். வந்த இருவரும் இருபது வயதிற்கு சற்று மேல் இருக்கும் அழகிய இளம் பெண்கள். அத்துடன் நொரோலின் நேர்ஸுக்கான வெள்ளை உடையுடன் இருந்தாள். அவள் மார்பில் குத்தியிருந்த அவளது பெயருள்ள பட்ஜ் அவளை காட்டிக் கொடுத்தது. அவளை அவர்கள் பார்த்த பார்வையில் பலவித அர்த்தங்கள் இருந்ததாக சுந்தரம்பிள்ளை உணர்ந்தான். மனதில் எழுந்த சங்கடத்தை மறைத்தபடி 'பியர் வேண்டுமா?' எனக்கேட்டான்..

'நாங்கள் வேண்டுகிறோம்' என நொரோல் சொல்லிவிட்டு 'இவள் ஜோ' என்று மற்றவளை அறிமுகப்படுத்தினாள்.

காலோஸ் தனது பொக்கட்டில் இருந்து பணத்தை எடுத்து சாமிடம் கொடுத்து, இரண்டு கிளாஸ் பியர் வேண்டிவருமாறு கொடுத்தார். அதைப் பார்த்துவிட்டு நொரோால் எழும்ப முயல 'நீ எழும்பாதே. சாம் வேண்டிக்கொண்டு வரட்டும். பியர் பரிமாறும் பெண்கள் இன்று மேலாடை அணிய மறந்து விட்டார்கள்'. மெதுவான சிரிப்புடன் பெண்களின் முகத்தை பார்த்தபடி சொன்னார்.

இதைக் கேட்டதும் இரண்டு பெண்களின் முகத்திலும் சிவப்பு தாமரை பூத்தது. அன்ரூ வாயை பொத்தியபடி சிரிக்க, சுந்தரம்பிள்ளை கீழே ஏதோ எடுப்பது போல் பாவனை செய்தான். சாம் பியர் வாங்கச் சென்றுவிட்டான்.

'இதைத் தெரிந்துதான் வந்தீர்களா? காய்ந்த மாடுகளே. நீங்கள் புதிதாக வந்த சிவாவையும் கெடுக்கிறீர்கள்' என்றாள் நொரோலின். அவளது பெரிய கண்கள் மேலும் அகலமாக விரிந்தன. முகத்தில் வெட்கம் மறைந்து பொய்யான கோபம் புதிதாக மனை புகுந்தது..

'அன்ரூ தனது மனைவியிடம் விவாகரத்து வேண்டி இப்பொழுது ஆறுமாதம் பிரிந்து தனியாக இருக்கிறான். அவன் கண்ணுக்கு பச்சைபட்டு பல காலம் ஆகி விட்டது. இப்படியே விட்டால் அவனது அந்தரங்கத்து ஈரம் காய்ந்து மரத்து விடாதா? அதன்பின் எவ்வளவு பாடுபட்டாலும் கருவாடு மீனாகுமா?' என்று காலோஸ் மிகவும் சீரியசாக முகத்தை வைத்துக்கொண்டு சொன்னபோது எல்லோரும் சிரித்தார்கள்.

சுந்தரம்பிள்ளைக்கு பியர் புரைக்கேறியது.

நொறேல் அவன் தலையில் தட்டி 'இவன்களோடு சேர்ந்தால் இப்படித்தான்' என சிரித்தாள்.

சாம் கொண்டு வந்த பியரை குடித்துக் கொண்டு, ஜோ தனது வேலை அனுபவங்களையும் கல்வித் தரங்களையும் காலோஸுக்கு கூறினாள்.

மேலாடை அணியாத பெண்கள் பரிமாறும் மதுபானச்சாலையில் அன்று நடந்த நேர்முகப்பரீட்சையில் ஜோ வேலைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டாள்.

'இந்தமாதிரி இடத்தில் வேலைக்கான நேர்முகத்தை வைப்பதற்கு காலோஸால்தான் முடியும்' என்றான் சாம்

பெண்கள் இருவரும் முன்னே சென்றுவிட்டார்கள்.

இன்றைக்கு வைத்தியசாலையில் நாங்கள் இந்த மதுச்சாலைக்கு போன விடயம் நொரோராலால் சொல்லப்படும் என நினைத்த படி சுந்தரம்பிள்ளையும் சாமும் மீண்டும் தமது வேலைக்குத் திரும்பினார்கள். அங்கே வேலை செய்பவர்கள் மத்தியில், இவர்கள் மதிய நேரத்தில் அந்த மதுச்சாலைக்கு சென்ற விடயம் நினைத்தபடி நொரோரால் மூலமாக தெரிந்துவிட்டது. ஒவ்வொருவர் சிரிப்பும் பார்வைகளும் பல கோணங்களில் இருந்தன. ஆனால் ஒருவரும் நேரடியாகக் கேட்கவில்லை என்பது சுந்தரம்பிள்ளைக்கு ஆறுதல் அளித்தது.

வேலை முடிந்ததும் தனது காரில் வரும்படி ஜோன் ரிங்கர் சுந்தரம்பிள்ளையை அழைத்தான். அவனது காரின் பின் சீட்டில் இருந்த அழகான பெண்ணை தனது பாட்னர் என அறிமுகப்படுத்தினான். அவளது பெயர் மிஷேல். அவளது மடியில் ஒரு வெள்ளை நிறமான இங்கிலிஷ் புல்டோக் வகையைச் சேர்ந்த நாய் ஒன்று மிகவும் உரிமையுடன் படுத்திருந்தது.

மிஷேலின் பெரிய உதடுகளும் சிறிது தூக்கலான தாடைகளும் நீண்ட கழுத்தும் நடிகை சோபியா லோரனை நினைவுக்கு கொண்டு வந்தது. அந்த அகலமான கண்களில் தெரிந்த தீர்க்கமான நேரிய பார்வையில் அவளது தைரியம் வெளிப்பட்டது. ஆனால் ஜோன் ரிங்கர் நடத்தையிலும் கதையிலும் அதற்கு நேர்மாறாக இருந்தான். அடக்கமான குழந்தைத்தனம் அவனில் தெரிந்தது.

இவர்கள் இருவேறு குண இயல்புகளைக்கொண்ட ஜோடி எனத் தெரிந்தது.

“மிஷேல் சுப்பர் மார்கற்றில் செய்யும் வேலையை ராஜினாமா செய்துவிட்டு நாய்களை அழகு படுத்தும் மற்றும் குளிப்பாட்டும் வேலையை சொந்தமாக செய்யப் போவதாக’ ஜோன் சொன்னான்.

அவள் உடனே ‘இதுதான் ஜோன். எல்லோருக்கும் எதையும் செய்ய முதல் பறை தட்டுவது’. என்றாள்.

‘அதில் என்ன தவறு. சிவா என் நண்பன்’.

‘இருவரும் வீட்டுக்குப் போகும் வழியில் வாக்குவாதம் செய்ய வேண்டாம். பின்னர் படுக்கையிலும் சண்டை தொடரும்’.

‘சிவா சண்டையில் தான் எங்கள் காதல் தொடங்கியது’ என்றான் ஜோன்

‘அதெப்படி சண்டையில் தொடங்கியது?’

‘இப்ப ஜோன் எல்லாம் அவிட்டுவிடப் போகிறார்’ என்றபடி செல்லமாக தலையில் தட்டினாள் மிஷேல்.

அதைப் பொருட்படுத்தாமல் ‘இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஸ்ரார் நைட் கிளப்பிற்கு நான் போய் மது அருந்திக் கொண்டு இருந்தபோது எதிர்பாராமல் ஒரு வெறுமையான பியர் ரின் பறந்து வந்து முகத்தில் அடித்தது. நான் திரும்பிப் பார்த்த போது மிஷேல் ஒருவனுக்கு எறிந்த அந்த ரின், அவன் குனிந்தமையல் எனது முகத்தில் மோதியது. மிஷேல் வந்து வழிந்த இரத்தத்தை தனது கர்சிப்பால் துடைத்த விட்டு “அந்த குண்டனுக்கு எறிந்தது தவறுதலாக பட்டது” மன்னிப்புக் கேட்டாள்.

‘நான் நெற்றியில் கையைவைத்த படி ‘யார் அந்த குண்டன்?’ எனக்கேட்டேன்.

‘அவன் நியூசிலாந்தைச் சேர்ந்த மோட்டார் சைக்கிள் குரூப்பை சேர்ந்தவன்’.

‘அவன் என்ன செய்தான்?

‘நான் குடித்த பியருக்குள் ஏதோ மருந்து போட்டது போல் பாவனை செய்தான். அதுதான் நான் அவனில் எறிந்தேன்’.

‘அவனைத் தெரியுமா?’

‘எனக்கும் அவனோடு ஆறு மாத காலமாக பழக்கமுண்டு. இன்றைக்கு அதிகம் குடித்துவிட்டான். இன்றைக்கு இவனோடு மோட்டார் சைக்கிளில் போக முடியாது.”

‘ஓஹோ... நீயும் அந்த பைக்கி குரூப்பை சேர்தவள்தானா.?’

‘இதைக் கண்டு பிடிக்க இவ்வளவு நேரம் ஆனதா?’ எனக்கூறி சேர்ட்டில் பிடித்தாள்.

‘ஏய் சேட்டை விடு’ நான் ஏதோ உனக்கு செய்து விட்டது போல் எல்லோரும் என்னைப் பார்க்கிறார்கள்’ என்றேன்.

அதைக்கேட்டு விட்டு ‘ஹஹ்ஹஹ்ஹ’ என்றாள் மிஷேல்

‘அன்று என்னைப் பிடித்தவள் இன்னும் விடவில்லை. இரண்டு வருடத்துக்கு மேலாகிவிட்டது’ எனச் சொல்லி ஜோன் சிரித்தான்.

இப்படி தனது காதல் கதையை ஜோன் சொல்லும்போது பின்னால் இருந்து ஜோனின் கழுத்தில் அழுத்தியபடி மிஷேல் ‘ஜோன், உன்னிடம் ஒரு இரகசியம் இருக்காதே. நான் இரகசியம் பேசுவதென்றால் என் செல்லத்திடம் தான் பேசமுடியும்’ எனச் சொல்லி மடியில் இருந்த நாயைக் கொஞ்சினாள்.

ஜோன், அந்தக் காரை சுந்தரம்பிள்ளையின் வீட்டு வாசலில் நிறுத்தி அவனை இறக்கிவிட்டபோது, மிஷேல் முன்னே வந்து முன் சீற்றில் ஏறிக்கொண்டாள்.

# 7

சுந்தரம்பிள்ளையின் மூன்றாவது நாளில் வேலை ஐந்து மணிக்கு ஆரம்பமாகி நடுநிசியில் முடிவது எனக் கூறப்பட்டது. இரவு வேலை தனித்து ஒரு வைத்தியராக செய்ய வேண்டும். அதைவிட அவசர சிகிச்சைகள் செய்ய வேண்டி இருக்கும் என்பது மனதில் அச்சத்தை கொடுத்தது. அன்று முழுவதும் அதே நினைவால் நிம்மதியாக வீட்டில் இருக்க முடியவில்லை. புதிதாக வேலையில் சேர்ந்த என்னை தனியாக இரவில் வேலை செய்ய சொன்னது சரியா என சிந்தனை ஓடியது.

சமுத்திரத்தில் வீழ்ந்த பின்பு எப்படியும் சமாளிக்க வேண்டியதுதானே? பதற்றமும் சமாதானமும் எதிரும் புதிருமாக அலைகளாக மனதில் ஓயாமல் அடித்துக் கொண்டிருந்ததால் வீட்டில் இருந்து அரை மணிக்கு முன்னராகவே வைத்தியசாலைக்கு சென்றிருந்தான்

வைத்தியசாலை சென்றதும் என்னோடு இன்று இரவு சேர்ந்து வேலை செய்யப் போகும் நர்ஸ் யாராக இருக்க முடியும் என்ற ஆவல் மனதில் ததும்பியது. நேற்று சாமிடம் கேட்டபோது புதிதாக ஒருவரை போடுவதாக காலோஸ் கூறியதாக சொன்னான்.

அந்த மாலை நேரம் பலரும் தங்கள் வேலையை முடித்துக்கொண்டு வீடு சென்றனர். மற்றவர்கள் தங்களது வேலைகளில் பிசியாக இருந்ததால் ஒருவரையும் கேட்க முடியவில்லை.

சரி, யாராவதாகவும் இருக்கட்டுமே. இப்ப என்ன வந்தது?

வைத்தியசாலையின் லாண்டரி அறையில் இருந்தவற்றில் சுத்தமான வெள்ளையான மேலங்கியை எடுத்துக்கொண்டு, இன்னும் வேலை ஆரம்பிப்பதற்கு சிறிது நேரம் இருப்பதால் தேனீர் அறைக்கு செல்வோம் என நினைத்து, கொறிடோர் வழியாக சென்ற போது

வழியில் உள்ள ஒபரேசன் தியேட்டரில் யார் இன்று வேலை செய்கிறார்கள் என அறியும் ஆவல் மனதில் முளைவிட்டது. அதை நிறைவேற்ற நினைத்து உள்ளே எட்டிப் பார்த்த போது ‘உள்ளே வரலாம் நண்பரே’ என்றார் ரிமதி பாத்தோலியஸ்.

சிலமாதங்களுக்கு முன்பாக குயின்ஸ்லண்ட் மாநிலத்தில் இருந்து வந்து, இந்த வைத்தியசாலையில் சேர்ந்த ரிமதி பாத்தோலியஸ் மற்ற வைத்தியர்களில் இருந்து தோற்றத்தில் வித்தியாசமாக இருந்தார். அந்த வைத்தியசாலையில் முற்றாக தலையை மழித்தவர் அவர் மட்டுமே. நீள் வட்டமான அவரது முகத்திற்கு அந்த சவரம் செய்யப்பட்ட தலை பொருத்தமாக இருந்தது. உச்சித் தலையில் இரண்டு அங்குலத் தடிப்பான தழும்பு கத்தியால் கொத்திப் பார்த்த செவ்விளனியை நினைக்க வைத்தது. உதடுகள் பென்சிலால் வரைந்தது போல் சிறிதாக அமைந்திருந்தது. கண்கள் பெரிதாக சிவந்து இருந்தது. இதைவிட மனிதர் ஓடுவதற்கு பாவிக்கும் அடிடாஸ் காலணி அணிந்திருந்தார். வைத்தியருக்குரிய தோற்றம் அவரில் இருக்கவில்லை. சரி அவர் எப்படியும் இருந்து விட்டு போகட்டுமே. இப்படித்தான் வைத்தியர் உடையணிய வேண்டும், காலணி அணிய வேண்டும் என சட்டம் இருக்கிறதா?

கடந்த இரண்டு தினங்களில் தேநீர் கூடத்தில் சிலமுறை சந்தித்தபோது ஒரு சிரிப்பையும் காணமுடியவில்லை. கண்களிலும் முகத்திலும் இரத்தத்தை பரவ விட்டபடி வலம் வந்தார். யார் மீதோ கடுப்புடன் இருக்கிறார் என எண்ணத் தோன்றியது.

ரிமதி பாத்தோலியஸ் நண்பரே என கூறினாலும் அந்தத் தொனியில் நட்பு இருக்காததை சுந்தரம்பிள்ளையால் அவதானிக்க முடிந்தது. ரிமதி பாத்தோலியசுடன் ஏற்கனவே அறிமுகமான இங்கிலாந்தை சேர்ந்த ஜெனட் நேர்சாக உதவி செய்து கொண்டிருந்தாள்.

உள்ளே சென்ற போது ஒபரேசன் மேசையில் அவுஸ்திரேலியாவின் மாட்டுப்பண்ணைகளில் வேலை செய்யும் புளூ கீலர் இனத்து நாய் பச்சை நிறத்து துணியால் மூடப்பட்டு இடது பின்னங்கால் மட்டும் வெளித் தெரிந்தது. அந்த காலில் தொடையில் தசைகள் வெட்டப்பட்டு விலக்கப்பட்டு, முறிந்த எலும்பில் ஒரு உருக்கு பிளேட்டை வைத்து ஆணியை செலுத்திக் கொண்டிருந்தார் ரிமதி பாத்தோலியஸ்.

இப்படியான எலும்புகளை இரும்பு பிளேட்டால் ஒருங்கிணைக்கும் வேலையை சுந்தரம்பிள்ளை படித்திருந்தாலும் இதுவரை செய்வதைப் பார்க்க சந்தர்ப்பம் கிடைத்ததில்லை.

'ரிமதி, இது பெரிய ஆப்பரேசன் போல இருக்கிறது?' ஆவலுடன் பார்த்தபடி சொன்னாள் ரிமதி.

'ஆமாம் இடது பின்னங்காலும் வலது முன்னங்காலும் கார் விபத்தால் உடைந்திருக்கிறது. பின்னங்காலுக்கு பிளேட்டை பொருத்திவிட்டு முன்னங்காலில் உருக்கு கம்பியை வைக்கப்போகிறேன்' எனப் பெருமிதமாக தலையை நிமிர்த்தி கூறினான்.

வாகன விபத்தில் முன் ,பின் இரண்டு கால் முறிந்தால் அந்த இரண்டு கால்களை இணைக்கும் முதுகுதண்டில் காயம் ஏற்படுவதற்கு சாத்தியக்கூறு உண்டு என்பது எங்கேயோ படித்த ஞாபகத்தில் கேட்க விரும்பினாலும் ஒரு கணம் சுந்தரம்பிள்ளை சிந்தித்தான்

கிரேக்க அறிஞர்கள் அறிவின் வளர்ச்சி கேள்விகளில் இருந்து தொடங்குகிறது என சொன்னார்கள் இல்லையா? ஆனால் இந்த கேள்வி இராமர் மந்தாரையின் கூனான முதுகை நோக்கி களிமண் உருண்டைகளை, எய்தது போன்ற விடயம் என அப்போது சுந்தரம்பிள்ளைக்கு தெரிந்திருக்கவில்லை.

'இரண்டு கால்களில் முறிவு இருப்பதால் முதுகுத்தண்டில் பிரச்சினை எதுவும் இல்லையா?'

எதுவித பதிலும் சொல்லாததால் குனிந்தபடி தனது வேலையை தொடர்ந்து செய்ததால் இந்தக் கேள்வி ரிமதிக்கு பிடிக்கவில்லை என்பது புரிந்தது. அந்தக் கேள்வியால் அவனுக்கு ஏற்பட்ட சங்கடத்தை தவிர்ப்பதற்ககாக ரிமதி மெச்சக்கூடிய அடுத்த கேள்வியை கேட்டு விட்டு சுமுகமாக அந்த இடத்தை விட்டு நகர தீர்மானித்தான்.

'இன்று இரவுவரையும் வேலை செய்யவேண்டி இருக்குமே?

'வேலைக்கு வந்தால் அப்படித்தான் வேலை செய்யவேண்டும். உங்களைப் போல் மதிய இடைவேளையில் மதுச்சாலைக்கு போய் பெண்களின் முலைகளை பார்த்துக் கொண்டிருந்தால் இப்படி

வேலை செய்யமுடியாது'. சொல்லிய போது முகத்தில் சிரிப்பு இல்லாமல் தொனியில் கடுமை தெரிந்தது.

'ரிமதி அப்படி பேசாதே. காலோஸ்தான் சிவாவை கூட்டிக்கொண்டு சென்றிருக்க வேண்டும். மதுபானசாலை எங்கிருக்கிறது என்பது சிவாவுக்கு தெரிந்திராது'.

'நான் அந்த பாஸ்டட்டையும் சேர்த்துத் தான் சொல்கிறேன்'. மீண்டும் அதே காட்டத்துடன்

அந்த வார்த்தைகளை சொல்லும்போது ரிமதி பாத்தோலியஸின் முகத்தில் சிவப்பு படர்ந்தது. கண்களில் இருந்த வெறுப்பும் வார்த்தைகளில் இருந்த வெப்பமும் சுந்தரம்பிள்ளையை திடுக்கிட வைத்தன. நாக்கு விறைத்து வார்த்தைகளை தற்காலிகமாக தொலைத்து விட்டது. ஜெனட்டின் வார்தைகள் வந்து தற்காலிகமாக அந்த இடைவெளியை நிரப்புவதற்கு உதவியது. அந்த இடைவெளியில் தன்னை சுதாரித்த போது நாக்கு மீண்டும் உயிர்பெற்று உதவிக்கு வந்தது.

'ரிமதி நீ தவறான மரத்தைப் பார்த்து குரைக்கிறாய்' என கூறிவிட்டு ஆப்பிரேசன் தியேட்டரின் வாசலை திறந்து கொண்டு வெளியே வந்த சுந்தரம்பிள்ளைக்கு நாகரிகத்துக்காக வார்த்தைகளை மேலும் தவிர்த்துக் கொண்டாலும் மனதில் கோபம் கொதி நிலையில் மூடிய உலை போல பொங்கிக் கொண்டு வந்தது. நான் பெண்களின் முலையை பார்த்தாலும் மதுசாலைக்கு போனாலும் நீ யார் கேட்பது என்று கேட்டு விடவேண்டுமென மத்தியில் உள்ள மூளையின் பகுதி நினைத்தாலும் முன் பக்கத்து மூளை அதிக கோபத்தில் எக்காலத்திலும் பதில் சொல்லாதே எனக்கூறி சாந்தப்படுத்தியது.

கோபத்தில் வெளிவரும் வார்த்தைகளில் அறிவார்ந்த பதில் இருக்க முடியாது. ஏற்கனவே கோபம் மூளையின் பகுத்தறியும் பகுதியான முன் மூளையை இரும்புத்திரைபோல் மூடிவிடுகிறது. ஆத்திரத்தில் வரும் வார்த்தைகள் எதிரியின் இரும்பிலான மார்புக்கவசத்தை குத்தி மழுங்கும் அம்பின் கூர்முனைகள் ஆக எது வித பிரயோசனம் அற்றுவிடுகின்றன. எதிரிக்கு நட்டத்தை உருவாக்குவதில்லை. ஆனால் பகை உணர்வு மேலும் வளர்ப்பதில் முடியும். இந்த உண்மையை சிவா சுந்தரம்பிள்ளை உணர்ந்திருந்ததால் மனதின் சினத்தை அடக்கிக் கொண்டு தத்துவ ரீதியாக சிந்தித்தான்.

இந்த வைத்திய சாலையில் கடந்த இரண்டு நாட்களில் பல நண்பர்கள் கிடைத்திருக்கிறார்கள். மிகவும் நட்பார்ந்த சாம், ஜோன், அன்ரூ மத்தியில் பழகுவதற்கு இலகுவான மேலாளாராக டாக்டர் காலோஸ் சேரம் இருக்கும் போது ரிமதி பாத்தோலியஸ் என்ற ஒரு வில்லனும் உருவாகியிருகிறார். கருப்பும் வெள்ளையும் நன்மையும் தீமையும் கொண்டது தான் உலகம். மனிதர்களிலும் இது காணப்படுகிறது என்ற சீனர்களின் ஜின்-யாங் தத்துவம் இந்த விடயத்தில் உண்மையாகிறது.

மனக்கொதிப்புடன் அந்த வைத்தியசாலையின் தாழ்வாரத்தில் நடந்து வரும் போது எதிரே வந்த பெண் சுந்தரம்பிள்ளையை பார்த்து சிரித்தது மனதில் புகைந்த கோபத்தை உடனே தண்ணீராக அணைத்துவிட்டது. அவள் கூந்தல் தங்கத்தின் நிறத்தில் இருந்தது. தலைமயிர்களை உயர்த்தி டயானா இளவரசி போல வெட்டியதால் கழுத்து நீண்டு இருந்து. அவளது கூர்மையான நாசியும் அதற்கு கீழ் சிறிது குவியலாக அமைந்த சிவந்த உதடுகளும் கொண்ட அந்த பெண் சிரித்தபடி மாலை நேரத்தில் தரையில் நடந்து வரும் முழுநிலவாக எதிரே சிறிது மெதுவாக நடந்து வந்தாள். இடுப்புக்கு கீழ் கொஞ்சம் அதிகமான தசைப்பிடிப்பு அவளை கொஞ்சம் மெதுவாக நடக்க வைக்கிறது. ஆனால் அது கூட அவளுக்கு கவர்ச்சியைக் கொடுக்கிறது என எண்ணும்படி இருந்தது.

அவள் சுந்தரம்பிள்ளையை பார்த்து ‘நான் போலின், இன்று இரவு உங்களுடன் வேலை செய்கிறேன்’ மென்மையான குரலில் கூறினாள். அந்தக் பெண்ணின் அழகுடன் ஒரு பாட்டிசைக்கும் பறவை போல இருந்த அவளது குரலும் சுந்தரம்பிள்ளையின் காயம்பட்ட மனதின் மேல் மை தடவினது போன்று இருந்தது. பெண்களின் அழகும் சங்கீதமும் ஆண்களின் மனக்காயத்தை மாற்றும் ஆற்றல் கொண்டது எனக் கேள்விப்பட்டாலும் இங்கே இரண்டும் ஒன்றாக இவளில் ஒன்றாக இருக்கிறது.

இருவரும் ஒன்றாக தேநீர் அருந்தும் அறைக்கு சென்றபோது சற்று நேரத்துக்கு முன்பு நடந்ததை கொதித்து புழுங்கிய நெல்லை கலத்தில் இருந்து பாயில் கொட்டியது போல் விவரித்த போது , ‘இந்த விடயத்தை பொருட்படுத்த வேண்டாம். ரிமதிக்கு காலோஸ் மேல் உள்ள ஆத்திரத்தை உங்களில் காட்டிள்ளார்’.

‘ஏன் இவ்வளவு வன்மம்?’

‘பல காரணங்கள் உண்டு. முக்கியமானது. ரிமதி இரவு பகலாக அதிக மணித்தியாலங்கள் வேலை செய்வதால் வைத்தியசாலைக்கு பணம் விரயமாகிறது என்றும் இதோடு வெகுவிரைவில் சொந்தமாக தொழில் செய்ய இருபதாக கூறி இருப்பதால் ஓவட்டைமுக்காக வேலை செய்வதாக சொல்லி காலோஸ் ஒரு முறை நேரடியாக கூறியது ரிமதிக்கு பிடிக்கவில்லை. இதை விட பல விடயங்கள் அவர்களது பகைமைக்கு காரணமாக இருக்க வேண்டும்’.

‘நான் இவர்களது அரசியலில் பந்தாகிறேன்’.

‘இந்த வைத்தியசாலையில் எல்லோருக்கும் எல்லோரையும் பிடிக்காது. ஆனால் ஐம்பது பேருக்கு மேல் வேலை செய்வதால் இது வேலை செய்வதை பாதிக்காது. ஒவ்வொருத்தருக்கும் பத்து நண்பர்கள் இருப்பார்கள்.ஒருவரில் ஒருவர் தங்கியில்லாமல் இங்கு வேலைசெய்ய ஒழுங்கு பண்ணப்பட்டு இருக்கிறது. எல்லோரிடம் நட்பு வைத்திருக்கத் தேவையில்லை. அவரது வேலைகள் வேறுபடுத்தி பிரிக்கப்பட்டு இருப்பதால் எந்த பிரச்சினையும் இல்லை’.

‘நீ எவ்வளவு காலமாக வேலை செய்கிறாய்?’

‘நாலு வருடங்கள் நாய்களை பராமரிக்கும் பகுதியில் வேலை செய்தேன். இன்று முதல்தான் நேர்சாக வேலை தொடங்குகிறேன்’.

கதிரையில் அமர்ந்தபடி மேசையில் வைத்திருந்த போலினின் இடது கையை கவனித்தபோது மிக அவதானமாக தேர்ந்த ஓவியனால் வரையப்பட்ட ஓவியப்பெண்ணின் விரல்களைப் போல் மிகவும் அழகான நீண்ட விரல்கள். பாதியாக்கிய கடல் முத்துக்கள் போன்ற நகங்கள். அவை மெதுவான ரோசாநிறத்தில் நகச்சாயம் பூசப்பட்டு இருந்தது. அந்த இடது கையின் மோதிர விரலில் வெள்ளையான வளையமாக மோதிரம் போட்ட அடையாளம் இருந்தது.

‘என்ன என் விரலைப் பார்க்கிறாய்? என்றாள் மெதுவான புன்னகையுடன்.

என் கனவுகளில் வந்த இராஜகுமாரியின் விரல்கள் போல் இருக்கிறது என சொல்ல நினைத்தாலும் நாகரீகம் கருதி அந்த வார்த்தைகளை விழுங்கிவிட்டு ‘இவ்வளவு அழகான விரல்களை நான் வாழ்க்கையில் பார்த்ததில்லை. என்கேஜ் பண்ணி இருந்தாயா?’

‘எப்படி தெரியும்? இந்த இடத்துக்கு வந்து இரண்டு நாட்களில் இதை எப்படி தெரிந்து கொண்டாய்? என கேட்டபோது கன்னத்தில் படர்ந்த சிவப்பு, மூக்கு காது என கட்டுக்குள் நில்லாத அவுஸ்திரேலிய காட்டிடைத்தீ போல் வேகமாக பரவியது.

‘எனக்கு ஒருவரும் சொல்லவில்லை. உனது விரலில் பலகாலம் மோதிரம் கிடந்த அடையாளம் இருக்கு. சமீபத்தில்தான் கழட்டி இருக்கிறாய்’.

‘அது பெரிய கதை’ என சிரித்துவிட்டு அடையாளம் இருந்த விரலை பார்த்து வலதுகையின் விரல்களால் மெதுவாக நீவி விட்டபடி ‘ஐந்து மணியாகிவிட்டது. நாம் வேலைக்கு செல்லவேண்டும்’. என்றாள்.

இவ்வளவு அழகான இவளை கழட்டி விட யாருக்கு மனம் வரும் என மனதில் நினைத்தபடி அவளை பின் தொடர்ந்தான் சுந்தரம்பிள்ளை.

இரவு எட்டரை மணிவரை தொடர்ச்சியாக வேலை இருந்தது. எந்த ஓய்வும் இருக்கவில்லை.மீண்டும் அந்த தேநீர் அருந்தும் பகுதிக்கு வந்த போது வைத்தியசாலை அமைதியாகிவிட்டது. வெளிக்கதவு சாத்தப்பட்டது. இனி வருபவர்கள் அழைப்பு மணியை,அடித்து அனுமதியுடன், அங்கேயுள்ள சிறிய கதவை திறந்தால்தான் உள்ளே வரமுடியும். கதவுக்கு அருகில் இருக்கும் அறையில் சிறிய கமராவில் வெளியே நிற்பவரை உள்ளே இருப்பவர்களால் பார்த்துக் கொள்ள முடியும். வேலை செய்பவர்களின் பாதுகாப்புக் கருதி இந்த நடைமுறை உள்ளது.

ரிசப்சனின் மேல் மாடியில் இந்த வைத்தியசாலையை சுத்தப்படுத்தும் குடும்பத்தினர் இருப்பதாகவும் அந்த குடும்பத்தினருடனே கொலிங்வூட் வசிக்கிறது எனவும் கூறப்பட்டிருந்தது. கொலிங்வூட்டை மீண்டும் சந்திப்பதற்கு சுந்தரம்பிள்ளை ஆவலாக இருந்தான்.

சிறிது நேரத்தில் அழைப்பு மணி அடித்த சத்தம் கேட்டது. கதவுக்கு அருகே உள்ள ரிசப்சன் கவுண்டரில் இருக்கும் போலினால் கதவை திறக்க முடியும் என்றாலும் இதுவே சுந்தரம்பிள்ளைக்கு எமேர்ஜென்சி நேரத்தில் வரும் முதலாவது அழைப்பாக இருப்பதால் சிறிது ஆவலுடன் எழுந்து சென்றான். ஆனால் அங்கு சென்றபோது ஏற்கனவே உள்ளே வந்தவர்கள் வரவேற்பு அறையில்

நின்றிருந்தார்கள். கவுண்டரின் உள்ளே போலின் அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தாள்.

பதினெட்டு வயதான மெல்லிய இளம் பெண் ஊதா நிறத்தில் தலைமயிரை வர்ணமடித்து காது மூக்கு உதடு என வெளித்தெரியும் அங்கங்களை எல்லாம் அழகுபடுத்த எண்ணி வெள்ளி வளையங்கள் அணிந்திருந்தாள். கருமையான இறுக்கமான உடைகளுக்கு மேல் தளர்ச்சியான நரை நிற கம்பளி சுவெட்டர் அணிந்திருந்தாள். அவளுடன் வந்தவன் தலை மயிருக்கு ஜெல் வைத்ததால் கடற்கரையில் வளரும் கத்தாளை போன்ற தோற்றத்தை அவனது தலை மயிர் கொடுத்தது. ஓட்டைகள் அமைந்த டெனிம் அணிந்து கருத்த பெனியன் போட்டிருந்தான். இருவரிடமும் செல்லப்பிராணிகள் எதுவும் இல்லை.

‘எங்களுக்கு ஒரு நாய்குட்டியொன்றை தத்தெடுக்க வேண்டும் என்றாள் அந்தப் பெண்

‘அதற்கு நீங்கள் காலை நேரத்தில் வந்திருக்கவேண்டும்’ போலின்.

‘நாங்கள் காலையில் படிக்கப் போவதால் நேரம் இருப்பதில்லை’

‘இப்பொழுது நாங்கள் எமேஜென்சிக்காக மட்டுமே வேலை செய்கிறோம்’

‘நாளை மல்கத்திற்கு பிறந்த நாள். அதற்கு பரிசாக அளிப்பதற்கு ஒரு நாய்குட்டி வேணும். அதிலும் மற்றவர்களால் கைவிடப்பட்ட நாய்க்குட்டி வேண்டும்’..

‘உங்களது ஆசை நியாயமானது. இப்பொழுது அங்கெல்லாம் நான் போக முடியாது. இந்த தொலைபேசியை எடுத்து எமேஜன்சி உதவிகளை சொல்வதும் கொண்டு வந்த செல்லப்பிராணிகளை வைத்தியம் பார்க்க வைத்தியருக்கு உதவி செய்வதுமே இந்த நேரத்தில் எனது கடமையாக கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது நான் தங்களுக்கு எதுவித உதவியும் செய்யமுடியாது’.

தேனில் தடவி வந்த வார்த்தைகள் மென்மையாக அத்துடன் உறுதியாக இருந்தது. வார்த்தைகளைவிட கண்களில் தெரிந்த தெளிவும் தொலைபேசியை கையில் வைத்தபடி பேசும் உடல் மொழியும் போலினை முதல் நாள் வேலைசெய்பவளாக காட்டவில்லை.

பலவருடங்கள் வரவேற்புத்துறையில் பட்டப்படிப்பும் பின் பயிற்சியும் பெற்றவள்போல் தோற்றமளித்தாள்.

'நாய்குட்டிகளை பார்த்து விட்டாவது போகிறோம்' என அந்தப் பெண் கெஞ்சினாள்.

இளைஞன் போவதற்கு தயாராக இருந்தான். ஆனால் அந்த இளம் பெண்ணின் உடல்மொழியில் அவள் நாய்குட்டியை பார்க்காமல் நகரமாட்டாள் என்பது தெரிந்தது.

சுந்தரம்பிள்ளை மனதில் இந்த சிக்கலை போலினுக்கு சங்கடம் கொடுக்காமல் எப்படி தீர்க்கலாம் எண்ணிக்கொண்டிருந்தது. இந்த நேரத்தில் வாசல் மணி அடித்தது

'மன்னிக்கவேண்டும்' என கூறிவிட்டு கதவை திறப்பதற்கு சென்றாள் போலின்

'என்னை மன்னித்து விடு' என கூறிக்கொண்டு அந்த இளம் பெண் அவளது நண்பனை கட்டிப் பிடித்து தென்னைமரத்தில் தேங்காய்க்கோ கள்ளுக்கோ ஏறுவது போல் கைகளால் தோளை பிடித்து ஏறி தன் இரண்டு கால்களாலும் இடுப்பை சுற்றி வளைத்தபடி அமர்ந்தபடி உதட்டோடு முத்தம் கொடுத்தாள் கடைசிச் சொட்டு வழுக்கலை விழுங்குவதற்கு இளநீர் கோம்பையை உறிஞ்சி குடிப்பது போல் உறிஞ்சினாள். நிற்கும் இடத்தையோ அல்லது சுற்றி நிற்பவர்களையோ கருத்தில் கொள்ளாது தனது நண்பனை சந்தோசப்படுத்துவதில் அந்த இளம் பெண்ணின் கவனம் இருந்தது.

போலின் கதவைத் திறந்ததும் ஒரு மத்திய வயதுப் பெண் உள்ளே வந்தாள். அந்தப் பெண்ணின் கையில் பூனையை வைத்திருக்கும் பெட்டி இருந்தது. வரவேற்பு அறையில் இந்த காதல் காட்சியை கண்டதும் சிறிது திகைத்தபடி நின்றாள்.

'மன்னிக்க வேண்டும்' எனக்கூறியபடி போலின் அந்த ஜோடியின் கவனத்தை திருப்பினாள்.

அந்தப் பெண் சிறிது வெட்கத்துடன் அவனது தோளில் இருந்து கையை எடுத்து கால்களை இடுப்பில் இருந்து விலக்கி இறக்கினாள்.

பூனையைக் கொண்டு வந்த பெண்ணிடம் இருந்து விபரங்களை எடுத்து கொண்டிருக்கும் போலினிடம் சுந்தரம்பிள்ளை முன்னால்

சென்று 'நான் இவர்களை கூட்டிக்கொண்டு தத்தெடுக்க இருக்கும் நாய்க்குட்டிகளை காட்டுகிறேன்' என்றான்

போலினுக்கு விருப்பமில்லை என்பது முகத்தில் தெரிந்தாலும் அவள் எதுவும் சொல்லவில்லை.

'வாருங்கள்' என சொன்னதும் பலமுறை நன்றி சொன்னபடி அந்தப் பெண் சுந்தரம்பிள்ளையை தொடர அந்த இளைஞனும் அவளைத் தொடர்ந்து வந்தான்.

'நாளைக்கு பிறந்த தினம் என்றால் இன்றைக்குத் தானா நாய்குட்டி வேண்டுவது?. அதைவிட நாய்க்குட்டியின் சாப்பாடு, மற்றைய தேவைகள் இருக்கிறது. அதற்கு தயாராக இருக்கிறீர்களா?'

'ஏற்கனவே ஒரு நாய்க்குட்டி ஒன்றை கடையில் சில நாட்களுக்கு முன்பாக வாங்கி இருந்தோம். அந்த நாய்க்குட்டியின் இதயத்தில் ஓட்டை என இன்று மாலை எமது மிருக வைத்தியரால் கண்டுபிடிக்கப்பட்டு ஒரு மணித்தியலத்திற்கு முன்புதான் கருணைக்கொலை செய்யப்பட்டது என்றாள் அந்தப்பெண்.

'எனக்கு நாய் பிறந்த தினத்துக்கு தேவை இல்லை'. என்றான் அந்த இளைஞன்

'நான் வாக்குறுதி அளித்திருந்தேன்'

இருவரும் ஒருவரை ஒருவர் பின்னிப் பிணைந்தபடி வந்தார்கள்.

நாய்களை வைத்திருக்கும் இடத்தில் லைட்டுகள் அணைக்கப்பட்டு இருந்தது. வாசலில் இருந்த லைட்டை போட்டதும் இருட்டில் அமைதியாக இருந்த நாய்கள் வருபவர்களை வரவேற்று குரைத்தன. அங்கே பத்துக்கும் குறைவான நாய்கள் மட்டும் தத்து எடுப்பவர்களுக்குத் தயாராக இருந்தன.

'இதில் ஏதாவது உங்களுக்கு பிடித்திருந்தால் அந்த நாய்களின் நம்பரை ஒவ்பீசில் கொடுத்து விட்டு போங்கள்' எனக் கூறி வாசலில் நின்றான் சுந்தரம்பிள்ளை.

சிறிது நேரத்தில் 'நன்றி' எனக் கூறிவிட்டு அந்த ஜோடிகள் மீண்டும் கலவி கொள்ளும் பாம்புகள் போல் நெருங்கி பிணைந்தபடி சென்றனர்.

காதலனுக்கு கொடுத்த வார்த்தையை காப்பாற்ற துடிக்கும் இளம் பெண்ணுக்கு உதவி செய்த திருப்தி சுந்தரம்பிள்ளைக்கு ஏற்பட்டது.

வரவேற்பு அறையில் வைத்தியருக்காக காத்திருந்த மத்திய வயது பெண்ணை அவரது பூனையுடன் ஆலோசனை அறைக்கு அழைத்தான் சுந்தரம்பிள்ளை. மேசையில் வைத்து பரிசோதித்த போது அந்தப் பெண்ணின் பூனையின் தலையில் ஒரு கட்டியிலிருந்து சீழ் வடிந்தது.

அந்தப் பெண் 'இது பொசம் கடித்தது' என அவசரமாகக் கூறினாள்.

'இது பொசம் கடிக்கவில்லை. மூன்று அல்லது நாலு நாட்களுக்கு முன்பு வேறு பூனை ஒன்றுடன் ஏற்பட்ட சண்டையினால் ஏற்பட்ட காயத்தால் சீழ் பிடித்திருக்கிறது'.

ஒவ்வொருவரும் தங்களுக்கு தெரிந்த வகையில் ஒவ்வொரு விடயத்திற்கும் மிகவும் இலகுவான நேரடியான விளக்கங்கள் வத்திருப்பார்கள். சீழ் பிடித்த சிறிய காயமாக இருக்கட்டும் அல்லது மிக சிக்கலான கான்சர் போன்ற விடயமாக இருந்தாலும் ஏதாவது சாப்பாடு அல்லது சூழல் என சுலபமான விடைகளை வைத்து விடுவது மனிதர்களுக்கான மருத்துவத்தில் ஏராளமாக அறியமுடியும். இந்தளவு இல்லாவிட்டாலும் புறக்கணிக்க முடியாத அளவு விலங்குகளுக்கான வைத்தியத்திலும் இப்படியாக விளக்கங்கள் தெரிவிக்கப்பட்டு ஐந்து வருட மருத்துவ பயிற்சியை கூட திணறடித்துவிடுவார்கள்.

சுந்தரம்பிள்ளையின் கூற்றை நம்பாதது அந்த பெண்ணின் கண்களில் தெரிந்தது. அதை பொருட்படுத்தாமல் அந்த சீழ் வடிந்த புண்ணை கழுவிவிட்டு அன்ரி பயற்றிக் மருந்தை ஊசியால் அந்த பூனைக்கு ஏற்றிவிட்டு பெண்ணிடம் மீண்டும் ஒப்படைத்தான்.

'நீங்கள் வளர்க்கும் ரைகருக்கு இரண்டு உலகங்கள் உண்டு. உங்கள் வீடு' சோபா கட்டில் என நீங்கள் விலை கொடுத்து ஒரு சூழலை உருவாக்கியிருக்கிறீர்கள். அந்த சூழலில் வாழும் ரைகர் இதைவிட தானும் உங்கள் வீட்டை சுற்றி ஒரு பிரதேசத்தை தனது வாசனைத் தன்மையால் உருவாக்கியுள்ளது. அந்தப் பிரதேசம் உங்களுக்கு தெரியாது. அந்த இடத்தை மற்ற பூனைகள் ஆக்கிரமிக்கும்போது உங்கள் ரைகர் உண்மையில் பெங்கால் ரைகராக மாறும். இந்த யுத்தத்தின் விழுப்புண்தான் இந்த காயம்'

‘ரைகருக்கு ஏற்கனவே விதையை எடுத்தாகிவிட்டதே?

‘பெண்பூனைகளை தேடி செல்வதை மட்டும்தான் நீங்கள் விதையை எடுப்பதால் கட்டுப்படுத்தமுடியும் மேலும் இந்த வசந்த காலத்தில் பூனைகள் சினை கொள்ளுவதற்கு தேடித்திரியும் காலம். அலைந்து திரியும் ஆண் பூனையொன்று ரைகரின் பிரதேசத்தை ஆக்கிரமித்திருக்கலாம்.நில ஆக்கிரமிப்புக்கு எதிராக ஆண் மட்டுமல்ல பெண் பூனையும் போராடும்’

‘சில நாட்களுக்கு முன் நடு இரவில் பூனையின் சத்தம் கேட்டேன்’.

இப்பொழுது அந்தப் பெண்ணின் அமைதி தெரிந்தது

‘அன்றுதான் நடந்திருக்கு. நீங்கள் இரவுகளில் ரைகரை வீட்டின் உள்ளே வைத்திருப்பதன் மூலம் இப்படியானவற்றை குறைக்க முடியும்’.

‘முன்பும் இப்படி சீழ்வடியும் புண் வந்திருக்கிறது. ஆனால் காரணத்தை ஒருவரும் இப்படி சொல்லவில்லை.

‘இன்று இரவில் நீங்கள் வந்ததால் அதிக நேரம் என்னால் பேசமுடிந்து’ எனக் கூறிய அந்த பெண்ணை வெளியே அனுப்பி வைத்தான்.

# 8

இன்று இரவு வைத்தியசாலையில் அதிகம் வேலையில்லை என இளைப்பாற நினைத்த கொரிடோரில் நடந்தது சுந்தரம்பிள்ளைக்கு ஒரு வேலை அறுபது கிலோவில் வந்து கொண்டிருந்தது. ரொட்வீலர் நாயை வைத்தியசாலையில் உள்ள தள்ளுவண்டியில் வைத்து, அதை தகப்பனும் மகனுமாக தோற்றமளித்த இருவர் தள்ளிக் கொண்டு வந்தார்கள். மயக்கமாகிய அல்லது இறந்த நாயை மட்டும்தான் வண்டியில் வைத்து தள்ளமுடியும். மனித நோயாளர்கள்போல் அவை ஒத்துழைப்பு கொடுப்பன அல்ல. இந்த நாய் மயக்கத்திற்கு அல்லது இறப்புக்கு அருகாமையில் இருப்பதாலே இவர்களால் அமைதியாக தள்ள முடிகிறது. நாயின் தலையை தவிர மற்றைய பகுதிகள் சிவப்புத் துணியால் போர்த்தப்பட்டு மறைக்கப்பட்டாலும் அதனது பெரிய உடல், போர்த்திய துணியை மீறி வெளித் தெரிந்தது. முன்னிரண்டு கால்களும், தலை, கழுத்து பாகங்கள் வெளித் தெரிந்தன. அதனது கருமையான கண்கள் அந்த நாய் உயிருடன் விழித்திருப்பதை தெரிவித்தது. பரிசோதனை அறைக்குள் வண்டி தள்ளிவரப்பட்டு நிறுத்தப்பட்டதும் அருகில் அந்த நாயை பார்த்ததும் சுந்தரம்பிள்ளைக்கு அளவற்ற கோபம் தள்ளி வந்தவர்களில் ஏற்பட்டது.

காலம் காலமாக ஐரோப்பாவில் இறைச்சி வண்டிகளை இழுத்து இறைச்சிக் கடைகாரர்களுக்கு உழைத்து வந்த இனத்தை சேர்ந்த நாய் ஒன்று மூட்டைபோல் வண்டியில் வைத்து தள்ளப்படுகிறது. ஏற்கனவே போஸ்ட் காட் அளவு சிவப்பு அட்டையில் கருணைக்கொலை செய்யவேண்டும் என எழுதி பெயர் விலாசத்தோடு கையொப்பம் இட்டிருந்தார்கள். இதற்கு மேல் சுந்தரம்பிள்ளைக்கு எதுவும் செய்யமுடியாது. அவர்களது கோரிக்கையின் படி கருணைக்கொலை மட்டுமே செய்யமுடியும். அவர்கள் பெயர், தோற்றம், பேசும் தோரணை இத்தாலி பரம்பரையில் இருந்து வந்தவர்கள் என்பதை காட்டியது.

அப்பாவியாக அந்த சூழ்நிலையில் முகத்தை வைத்துக்கொண்டிருந்த அந்த நாயின் கண்களைப் பார்க்க பரிதாபமாக இருந்தது. தலையை தூக்க முடியாமல் கண்களை மட்டும் அசைத்தபடி படுத்திருந்தது.

அந்த சிவப்பு கார்டை எடுத்து வயதைப் பார்த்த போது அந்த இருவர் மேல் சுந்தரம்பிள்ளைக்கு ஆத்திரம் போய் வெறுப்பு மனதில் குடிவந்தது. நாயை வீட்டு பின் வளவில் அடைத்து உணவை கொடுத்து, பன்றியை கொழுக்க வைப்பது போல் உடலைப் பருக்க வைப்பது மூலம் அவசரமாக கொலைக்களத்திற்கு தள்ளி இருக்கிறார்கள். உணவு மட்டும் போதும் என நினைத்து உடற்பயிற்சியோ அல்லது நடக்கவைத்தோ எதுவித முயற்சியும் இல்லாது வளர்த்திருக்கிறார்கள். இவர்களின் தவறால், இவர்களின் நாய் நாலு வருடங்கள் முன்னதாக மரணத்தை நோக்கி தள்ளப்பட்டு வந்திருக்கிறது. எட்டு வயதே உள்ள அந்த நாயை தங்கள் வளர்ப்பு பிழையால் தோல் மூடிய கொழுப்பு மூட்டையாக மாற்றி இருந்தார்கள்.

என்ன முட்டாள்த்தனம் செய்து இருக்கிறார்கள்?

ஐம்பத்தைந்து வயதில் இவர்களது உறவினர் ஒருவர் இறந்தால் எவ்வளவு கவலையைத் தரும்? நாயை வளர்ப்பது என்ற கடமையில் தவறியவர்கள் என்ற காரணத்தால் அவர்கள் மேல் வெறுப்பை வெளிக்காட்ட முடியாமல் மனம் புகைந்தான் சுந்தரம்பிள்ளை.

ஜேர்மன் நாட்டில் ரொட்வீலர் என்ற பிரதேசத்தில் இருந்து அறிமுகமான இந்த நாய் கறுத்த உடலும் முகத்தில் சில இடத்தில் செம்மை நிறமும் கொண்டு திண்ணியமான தோள்களும் ,அகலமான முகமும், இரும்பில் வார்த்தெடுத்தது போன்ற மிக உறுதியான அகலப் பாவிய கால்களையும் கொண்ட போர் வீரனைப் போன்றது. மார்புப் பகுதி மல்லர்களைப் போல் வீங்கிப் புடைத்திருக்கும். இந்த ரொட்வீலர் நாய்கள் காலம் காலமாக பிறக்கும் போதே கம்பீரத்தை மேலும் கூட்டுவதற்காக குட்டியில் வால்களை வெட்டி விடுவார்கள். ஆரம்ப காலத்தில் மாடுகளை மேய்க்கவும் பின்பு இறைச்சி விற்பவர்களின் இறைச்சி வண்டியை இழுப்பதற்கும் அத்துடன் ரோமனிய சாம்ராச்சியத்தின் காலத்தில் பாதுகாப்பு பணியையும் செய்தன.

காலம் காலமாக உடலால் உழைக்கும் பாட்டாளி வர்க்கத்து நாய் இனம். தற்போது செல்லப்பிராணியாக உடற் பயிற்சியற்று வளர்க்கப்படும்போது புளி மூட்டையாகிவிடுகிறது. இதனால்

மிக விரைவில் முடக்கு வாதம், இரண்டு இடுப்பு மூட்டிலும் ஏற்படுவதால் நடக்க முடியாமல் போகிறது. நடக்க முடியாத போது மேலும் கொழுப்பு ஏறி நிறை கூடுகிறது. இதைவிட இந்த நாய்களை கீழ்ப்படிவு பயிற்சி இல்லாமல் வீட்டில் வளர்த்தால் ஆக்கிரோசமாக கடிக்கும் நாய்களாக மாறுகின்றன. பல தடவைகளில் இவற்றை நெருங்கி வைத்திய சோதனை செய்ய முடியாமல் போய் விடுகிறது.

கம்பீரமான இனத்தை சேர்ந்த நாயொன்றை எட்டு வயதில் தள்ளு வண்டியில் தள்ளியபடி வருவது இந்த நாய்க்கு இவர்கள் செய்த மாபெரும் துரோகமாகும். ரோம சாம்ராச்சியத்து போர் வீரனோடு பக்கத்தில் கம்பீரமாக தலையையும் நெஞ்சையும் நிமிர்த்தியபடி வலம் வரும் சரித்திர காட்சிக்குப் பதிலாக அதே நாட்டுக்கார்களால் கேவலமாக வண்டியில் வைத்து அழுக்கு துணி மூட்டைபோல் தள்ளப்பட்டு கருணைக் கொலைக்காக கொண்டு வரப்படுவது உண்மையிலே பரிதாபமான காட்சியாக இருந்தது.

மலை உச்சியில் மழை மேகங்கள் படிந்து ஈரலிப்பை உருவாக்குவது போன்ற தனது மனதில் ஏற்பட்ட விருப்பு வெறுப்பு உணர்வுகளை பலமாக வீசிய காற்று தள்ளியது போல் அகற்றிவிட்டு சுந்தரம்பிள்ளை அந்த ரொட்வீலரை சோதனை செய்யும் மேசைக்கு மாற்றாமல் அந்த தள்ளு வணடியிலே வைத்து போலின் உதவியுடன் கருணைக்கொலை செய்தான். பச்சைத் திராவகத்தை உடலில் ஏற்றியதும் சுவாசத்தை இருமுறை பலமாக இழுத்து கடைசி மூச்சை வெளித்தள்ளி விட்டு அமைதியாகியது, அந்த ரொக்கி எனப் பெயர் கொண்ட ரொட்வீலர்.

உங்கள் ரொக்கி இன்னும் நாலு வருடம் உயிர்வாழ்ந்திருக்க வேண்டியது என குறைந்த பட்சமாக சொல்ல நினைத்து திரும்பிய போது அந்த இளைஞனின் கண்களில் இருந்து கண்ணீர் வந்துகொண்டிருந்தது. அதைப் பார்த்துவிட்டு சொல்ல வந்த வார்த்தையை விழுங்கிவிட்டான்

இவர்கள் அன்பு காட்டியே அவர்களது நாயை கொன்றிருக்கிறார்கள்.

அவர்களை கதவைத் திறந்து வெளியில் அனுப்புவதற்காக போலின் அவர்களுடன் சென்றாள்.

இறந்த றொக்கியோடு அந்த அறையில் தனித்து விடப்பட்ட போது சுந்தரம்பிள்ளைக்கு இப்பொழுது இந்த பெரிய உடலை தள்ளிக் கொண்டு குளிர் அறைக்கு செல்லவேணடும் என்ற எண்ணம்

வந்தது.ஆனாலும் குளிர் அறை எங்கு என்று தெரியாததால் போலினுக்கு காத்திருந்தான்.

அப்போது அறையின் பின் பகுதியால் கொலிங்வூட் உள்ளே வந்தது

'நல்ல குண்டு நாய்' அறுபது கிலோ இருக்குமா? இதில் எவ்வளவு கொழுப்பு? என வார்த்தைகளை உதிர்த்து வழமையான நளினத்தை காட்டியது.

'உன்னைப்போல் பத்து மடங்கு பெரிதாக இருக்கும். இறந்த நாயை பற்றி இகழ்வாக பேசுவது பண்பாடு இல்லை. சடலத்திற்கும் மரியாதை அளிப்பது மனிதர்களது பண்பாடு தெரியுமா? இந்த நாய் உயிரோடு இருந்தால் உன்னால் பக்கத்தில் வரமுடியுமா? தயவு செய்து கொஞ்சம் கௌரவத்தை கொடு' என சுந்தரம்பிள்ளை ஏற்கனவே நாயின் சொந்தக்காரரில் இருந்த வெறுப்பும் காட்டமாக கொலிங்வூட்டில் வெளிப்பட்டது.

கொலிங்வூட்டுக்கு அந்த வார்த்தைகள் பிடிக்கவில்லை என்பதை பரிசோதனை மேசையில் ஏறி வாலை மேலும் கீழும் ஆட்டியதில் தெரிந்தது. தனது பின்பகுதியை உயர்த்தி எரிச்சலை வெளிக்காட்டியபடி 'பிரேத அறைக்கு நாயின் உடலைத் தள்ளிக்கொண்டு போகவேண்டியது தானே. அதுக்கும் போலின் உதவி தேவையா? ஏன் பார்த்துக் கொண்டு நிற்கிறாய்' என எகத்தாளமாக கேட்டது.

'எனக்கு பிரேத அறை இருக்குமிடம் தெரியாது'

'இந்த மூன்று நாளில் அதை அறிந்து கொள்ளவில்லையா? நான் காட்டுகிறேன்' என முன்னால் சென்றது.

'சிவா உதவி தேவையா?' என போலீன் கேட்டாள் ரிசப்சன் அருகே போனில் பேசியபடி. 'இல்லை' என்று சொன்னாலும் மனதில் இரண்டு பேர் சேர்ந்து தள்ளினால் இலகுவாக இருக்கும் என சுந்தரம்பிள்ளை நினைத்தான்.

வண்டியைத் தள்ளி வெளியே வந்தபோது தள்ளுவண்டி பழசாகிவிட்டதால் கிரீச் கிரீச் என சத்தம் போட்டபடியே தனியாவர்த்தனம் வாசித்தது. பழைய சக்கரங்கள் தள்ளிய திசையில் நேராக செல்ல மறுத்தன. ஒரு திசையில் தள்ளும் போது நான்கு சக்கரங்களும் நாலு திசையில் செல்தற்கு பிடிவாதமாக இருந்தன.

பகலில் மவுனமாக இருக்கும் இந்த சக்கரங்கள் இரவில் மட்டும் ஏன் மவுனத்தை குலைத்து சத்தம் போடுகின்றன? இரவின் நிம்மதியை குலைக்க தீர்மானமாக இருக்கின்றன என நினைத்தபடி சக்கரங்களை ஒவ்வொருமுறையும் நேராக்கியபடி தள்ள வேண்டி இருந்தது. சக்கரங்களின் ஓசையை கேட்டபடி எவ்வளவு தூரம் தள்ள வேண்டியிருக்குமோ என்று நினைத்தபோது முன்னால் நடந்து சென்று கொண்டிருந்த கொலிங்வூட் மெதுவாக நின்றது.

கொலிங்வூட் நின்ற திசையில் தள்ளிய போது அதிக தூரமில்லை. அங்கு ஒரு கதவு இருந்தது. அந்தக் கதவைத் திறந்த போது லைட் எரிந்தது. கிறிமற்ரோரியம் என்ற மிருகங்களின் சுடலை செங்கல் சூளைபோல் காணப்பட்டது. செங்கல்லால் அடுக்கப்பட்டு வட்டமான தளத்தில் எரிவாயுவில் மிருகங்களின் உடலை எரிக்கும் இடம். சாம்பல், எலும்புத் துண்டுகள் எதுவும் அற்று துடைத்து சுத்தமாக இருந்தது. செங்கல் சூளையின் முன்பாக தள்ளுவண்டியை விட்டு அதன் சக்கரத்தில் இருந்த பிரேக்கை போட முயன்றபோது ‘அங்கில்லை. இங்கே விட்டால் முழு வைத்தியசாலையும் துர்நாற்றம் அடிக்கத் தொடங்கிவிடும். எதிர்த்தால் போல் இருக்கும் கதவை திற. உள்ளேதான் குளிர்பதன அறை இருக்கிறது’ என்றது கொலிங்வூட்.

கதவு திறந்ததும் தள்ளு வண்டியின் சக்கரங்களின் இடையாக பாய்ந்து கொலிங்வூட் உள்ளே வந்தது.

மனிதர்களில் சிலரோ மற்றவர்கள் எப்போது தவறு செய்வார்கள் எனக் காத்திருந்து அவர்களைத் திருத்தி தங்கள் மேதாவித்தனத்தை அவ்வப்போது காட்டுவார்கள். இதே குணம் கொலிங்வூட்டுக்கும் அமைந்திருக்கிறது. இந்த வைத்தியசாலையில் வளரும்போது பல மனிதரின் வார்த்தைகளை மட்டுமல்ல அவர்களின் குணங்களுடன் குறைகளையும் கொலிங்வூட் பெற்றிருப்பது ஆச்சரியத்தை அளித்தது.

அந்த கிறிமட்ரோறியத்தின் உள்ளே தெரிந்த கதவைத் திறந்ததும் அங்கும் தானாக லைட் எரிந்தது. உள்ளேயிருந்து குளிர்காற்று பிணவாடையுடன் முகத்தில் முத்தமிட்டு விட்டு நாசித் துவாரங்களால் உள்ளே சென்று சுந்தரம்பிள்ளையின் நுரையீரலை நிறைத்து ஆத்மாவைத் தொட்டது. அந்த துர்வாடை வாந்தியெடுக்க வைக்கும் போல் இருந்தது. நல்ல வேளையாக பலமணிநேரமாக வெறும் வயிறாக இருந்தது. அந்த மணம் சுந்தரம்பிள்ளை குழந்தையில் குடித்த தாய்ப்பாலைக் கூட வெளிக் கொண்டுவரும்

போல் இருந்தது. இந்த அறையில் குளிர்பதனம் சரியாக வேலை செய்யவில்லையோ? இந்த இடத்தை விட்டு உடனே வெளியேற வேண்டும் என்று நினைத்துக்கொண்டான்.

விஞ்ஞான சிந்தனையில் இந்த பிணத்தின் மணத்தில் மனிதன், மிருகம் என வித்தியாசம் இல்லை. இறந்த பிணங்களின் குடலில் உள்ளே வாழும் பக்டீரியாக்கள் குடலில் உள்ள புரதப் பகுதியை தாக்குவதால் வெளிவரும் காற்றின் கலவையே இந்த பிணவாடை. இதே வாடைதான் கூழ்முட்டையில் இருந்து வருகிறது.

இலங்கையில் மிருக வைத்தியம் படிக்கும் காலத்தில் கண்டி நகரில் வீட்டொன்றில் புகுந்து வீட்டில் கொள்ளை அடித்தவர்கள், அவர்களின் வீட்டில் நின்ற அல்ஷேசன் என கூறப்படும் ஜேர்மன் செப்பேட் வளர்ப்பு நாயை உணவில் நஞ்சு கலந்து முதல் நாள் கொலை செய்திருந்தார்கள். அந்த வீட்டுக்காரர்கள் ஏதோ நோயில் மரணமடைந்ததாக எண்ணி இறந்த நாயை வீட்டின் பின்பகுதியில் புதைத்து விட்டிருந்தார்கள். அடுத்த நாள் நாய்க்கு நஞ்சூட்டிய அதே திருடர்கள், அந்த வீட்டின் உள்ளே புகுந்து கத்தி முனையில் கொள்ளையடித்திருக்கிறார்கள். இந்தக் கொள்ளை விசாரணையின் போது கொள்ளைக்கும் இறந்த நாய்க்கும் தொடர்பு உள்ளதாக கருதிய பொலிஸ் அந்த புதைக்கப்பட்ட இடத்தில் நாயை தோண்டி எடுத்து பரிசோதிக்கும் பொறுப்பை பல்கலைக்கழகத்திற்கு ஒப்படைத்த போது அந்த நாயை மீள நிலத்தில் இருந்து தோண்டி எடுக்கும் வேலையில் பெரும் பகுதி சுந்தரம்பிள்ளைக்கு கிடைத்தது. அந்த ஜெர்மன் செப்பேட் நாயை நாலு நாட்களுக்கு பின்னர் தோண்டிய போது பிணவாடை என்ற பதத்தின் முற்றான அர்த்தத்தை வாழ்க்கையில் முதல்முதலாக உணர்ந்தான். அந்த வாடை பலகாலமாக நினைவில் தொடர்ந்து வருகிறது. பிற்காலத்தில் முகர்ந்த வாடைகள் எல்லாவற்றிற்கும் அந்த வாடை உயர் மட்டத்தின் அளவு கோலாகியது

அந்த குளிர் அறையின் உள்ளே பல தள்ளு வண்டிகளில் லாபிரடோர், ஜெர்மன் செப்பேட் என்ற பெரிய நாய்களும் பொமரேனியன், ஜக் இரஸ்சல் ரெரியர் போன்ற சிறிய இன நாய்களுமாக, பல இன நாய்கள் விறைத்தபடி ஒன்றுடன் ஒன்று உராய்ந்தபடியும், ஒன்றின் மேல் ஒன்றாக சமாதானமாக கிடந்தன. இவ்வளவு நாய்கள் அமைதியாக இருப்பது இந்த அறையில்த்தான் சாத்தியமாகிறது. நிஜமாக இவை இந்த சிறு அறையில் உயிராக இருந்தால் எப்படி இருக்கும்?

மனிதர்கள் பார்வைகளை முதற்புலனான கொள்வது போன்று நாய்கள் மூக்கை தங்கள் புலனாக கொண்டவை. அத்துடன் இருட்டில் அவைகளின் பார்வை மனிதர்களிலும் கூர்மையானது.. இந்த இரண்டு புலன்களின் தொழிற்பாடு இங்கே ஒரு மகாயுத்தத்தை உருவாக்கியிருக்கும். ஒன்றை ஒன்று அடையாளம் கண்டு யார் குழுத் தலைவர் என்பதை நிலை நிறுத்த போர் நடந்திருந்தால் நிச்சயமாக ஜெர்மன் செப்பேட் வென்றிருக்கும். நாய்கள் மட்டுமா? பூனைகள் இதை அங்கீகரிக்குமா? அவைகள் தங்களுக்குள் குழுவாக சேராத தன்மையினால் என்ன நடந்திருக்கும்? பல பிணங்களாக மாறி இருக்கும். மீண்டும் இது சவ அறைதான்.

பல பூனைகள் ஒன்றின் மேல் ஒன்றாக சுப்பர் மார்க்கட் சாமான்களை போல வரிசையாக அடுக்கப்பட்டு கிடந்தன. பூனைகள் எல்லாம் ஒரே அளவில் இருப்பதால் அது இலகுவாக இருந்தது. சில பூனைகள் நாய்களின் கால் இடைவெளியில் புகுத்தப்பட்டு இடம் மிச்சம் பிடிக்கப்பட்டிருந்தது. ஒரு சிவப்பு சிறியசடையான கலப்பு இன நாயும் கருப்பு -வெள்ளை பூனையிலும் “சாம்பல் தேவை” என பெரிய எழுத்தில் எழுதி சிறிய எழுத்தில் அவர்களின் பெயருடன் உரிமையாளர்களின் பெயர் விலாசம் வெள்ளைத்தாளில் எழுதப்பட்ட கடிதம் அவற்றின் உடம்பில் செலோரேப்பால் உடலை சுற்றி ஒட்டப்பட்டு இருந்தது. இந்த இரு உடல்களும் சற்று ஒதுக்கமாக தனியாக இருந்தன. அவை தனித்தனியாக எரிக்கப்பட்டு சாம்பல்கள் உரிமையாளருக்கு கொடுக்கப்படும். இப்படியாக பல சடலங்கள் அங்கு தள்ளு வண்டிகளில் வைக்கப்பட்டிருந்தன. சில நாட்களுக்கு முன்பாக மனிதர்களுக்கு நெருங்கிய தோழர்களாக நேசிக்கப்பட்ட செல்லப்பிராணிகள் தள்ளு வண்டிகளில் நாளைய தகனத்திற்காக தங்களுக்குள் சமரசமாக காத்திருக்கின்றன.

இந்த அறையில் ஏற்கனவே சடலங்கள் வைக்கப்பட்ட வண்டிகளால் நெருக்கடியாக இருக்கிறது. இந்த இடத்தில் சுந்தரம்பிள்ளையின் ரொட்வீலர் நாய் உள்ள வண்டியை இங்கு நிறுத்த இடைவெளி உருவாக்கவேண்டும். வெவ்வேறு திசையில் நிறுத்தப்பட்டிருந்த மற்ற வண்டிகளை புறம் தள்ளி ஒதுக்கினால் மட்டுமே இது சாத்தியப்படும் என்பதால் வாசலருகே நின்ற வண்டியை உள்ளே தள்ளி வாசலுக்குள் விட்டு விட்டு உள்ளே சென்ற சுந்தரம்பிள்ளையை தொடர்ந்து கொலிங்வூட்டும் குளிர் அறைக்குள் வந்தது. இரண்டு வண்டிகளை வேறுதிசையில் தள்ளி இடைவெளியை உருவாக்க முனைந்த போது பூனைகள் இருந்த

வண்டியில் இருந்து ஒரு வெள்ளைப் பூனையின் பிணம் கீழே விழுந்தது.

'கோலிங்வூட் எல்லாம் உன்னால்தான்' எனத் திட்டிக்கொண்டே குனிந்து வலது கையால் அந்த பூனையின் பிணத்தை தூக்கிய போது அந்த பூனையின் இதயம், ஈரல் என உள்ளங்கங்கள் வெளியே வந்து நிலத்தில் விழுந்து. குடல் சரிந்து மாலைபோல் தொங்கியது.

'யாரோ போஸ்மோட்டம் செய்து போட்டு உடலை பிளாஸ்டிக் பையில் போடாமல் வண்டியில் போட்டிருக்கிறார்கள் தாயோழி' என்றது கொலிங்வூட்

'உனது வார்த்தைகளை கவனமாக பாவி'

'நீ இப்பதான் அவுஸ்திரேலியா வந்திருக்கிறாய். வார்த்தைக்கு வார்த்தை தூசணம் பேசும் மற்றவர்களை கேட்டால் எனது வார்த்தைகளை எவ்வளவு நாகரீகமாக பாவிக்கிறேன் என்பதை போகப் போக புரிந்து கொள்வாய்'

'அப்படியா? அதை சமயம் வரும்போது அறிந்து கொள்கிறேன். இப்பவுள்ள சூழ்நிலை கற்றுக் கொள்வதற்கோ உன்னை மெச்சுவதற்கோ ஏற்றது அல்ல. என்றாலும் பூனைக்கு இவ்வளவு வாய்க் கொழுப்பு கூடாது' என்றபடி மெதுவாக பனிக்கட்டி போல் குளிர்ந்து கைவிரல்களை விறைக்கப் பண்ணிய அந்தப் பூனையின் உள்ளங்கங்களை எடுத்து வண்டியின் மேல் வைத்து விட்டு குடலை கையால் அள்ளி அதன் வயிற்றுள் வைத்துவிட்டு, தள்ளி வந்த தள்ளு வண்டியை கதவில் இருந்து முற்றாக உள்ளே இழுத்ததும் அந்த பிணவறையின் கதவு மூடி அந்த அறையின் லைட்டு அணைந்து அந்த அறை இருளால் நிறைந்தது. மிருகங்களின் பிணங்கள் மத்தியில் கொலிங்வூட்டும் சுந்தரம்பிள்ளையும் தனித்து விடப்பட்டார்கள். திரும்பினால் எந்த செத்த பூனை நிலத்தில் விழுமோ அல்லது நாய்களின் சடலங்களில் இடறுவோமோ இல்லை நிலத்தில் சிந்திய இரத்தத்தில் வழுக்கி விழுந்துவிடுவோமோ என்று நினைத்தபோது சுந்தரம்பிள்ளையின் உடல் குளிரில் சில்லிட்டது.

'லைட் எங்கிருக்கு?. கதவு மூடினால் லைட் இல்லாமல் போகும் என ஏன் சொல்லவில்லை' எரிச்சலுடன். கொலிங்வூட் நின்ற திசையை நோக்கி ஆற்றாமையில் குரல் கொடுத்தான்.

‘கதவு திறக்கும்போது எரிந்த லைட், மூடும்போது இல்லாமல் போகும் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை என நினைத்தேன்’

‘நக்கலா?’ எனக் கேட்டாலும் உண்மையில் அதை சிந்தித்திருக்கவேணடும் என்பது மூளையில் உறைத்தது

வாசலை அனுமானித்து கைகளால் தடவியபோது அந்த கதவின் உள்பக்கம் அலுமினியத்தால் ஆனதால் பனிப்பாறையாக சில்லிட்டது. இடது கையால் கதவின் கைபிடியைத் தேடியபோது ‘கொஞ்சம் மேலே’ என்றது கொலிங்வூட்.

வலது கையில் பூனையின் இரத்தம் பிசுபிசுத்தபடியால் இடது கையால் தடவினான்.

‘இடது பக்கம்’

‘உனக்கு தெரிகிறதா?

‘எனது கண்ணுக்கு தெரியாமல் எப்படி உனக்கு சொல்லமுடியும்?’

“இந்தப் பூனை மிகவும் விதண்டாவாதம் பிடித்தது” மனதுக்குள் நினைத்தான்.

‘நீ என்ன நினைக்கிறாய் என்று எனக்கு புரிகிறது. உன்னிலும் பார்க்க பல மடங்கு உணரமுடிவதால் இந்த துர்மணத்துக்குள் என்னால் நிற்க முடியவில்லை’ என்றது கொலிங்வூட்

‘எனக்கு மட்டும் விருப்பமா? எரிச்சலுடன் கூறிய போது கதவின் பிடி தட்டுப்பட்டது. அதை இழுத்ததும் திடீரென பாய்ந்து கண்களை கூசவைத்த அந்த பிரகாசமான ஒளியில் இன்று வரை வாழ்ந்த அந்த மிருகங்களுடன் இன்றும் வாழும் கொலிங்வூட்டை சுந்தரம்பிள்ளை கண்டான்.

மெதுவாக கதவைத் திறந்ததும் கொலிங்வூட் வெளியே எய்த அம்புபோல் பாய்ந்தது.

உள்ளுக்கு விட்டு உன்னை மூடி விடுவேன் எனப் பயம் இல்லையா? எனக் கேட்ட போது எதிரே போலின் வந்து ‘சிவா கூல் ருமுக்கு போய் இவ்வளவு நேரமாகிவிட்டது என்ன நடந்தது?

‘நானும் கொலிங்வூட்டும் உள்ளே செல்ல கதவு மூடிவிட்டது. திறப்பதற்கு இருளில் மிகவும் கஷ்டப்பட்டோம்’.

‘சிவா இந்த முறை கொலிங்வூட்டோடு சேர்ந்து கூல்ரூமில் அகப்பட்டுக்கொண்டீர்கள். சில வருடங்கள் முன் ஒரு மிருக வைத்தியரும் நேர்சும் உள்ளே சென்ற பின் காதலர்களாக திரும்பி வந்தார்கள். இப்பொழுது கல்யாணமாகி ஒரு குழந்தையும் இருக்கிறது.

‘என் துரதிஸ்ட்டம் இந்தப் பூனையுடன்’

போலின் பதில் பேசாமல் சிரித்துவிட்டு ‘இன்னும் கார் வாங்கவில்லையா?’

‘நாளைக்குத்தான். கார் வேண்டுவதற்கு ஒரு நண்பனோடு கார் டீலரிடம் செல்வதற்கு உத்தேசித்துள்ளேன்‘

‘இன்றிரவுக்கு எப்படி வீடு செல்வதாக உத்தேசம்?‘

‘டாக்சியை நம்பியுள்ளேன்’

‘இந்த பிணவாடையோடு டாக்சிக்காரன் ஏற்றுவானா?’

‘என்னில் மணக்கிறதா’? என்று உடுப்புகளை மணந்த போது மீண்டும் பிணவாடைவந்தது.

‘டக்சிக்காரனுக்கு இவை பழக்கமாகி இருக்கும். ஒரு பறவை ஒன்றை ஒருவர் கொண்டு வந்திருந்து - தந்துவிட்டு சென்றார் அதை பரிசோதிக்கவும். நான் உனக்கு பதினைந்து நிமிடத்தில் டாக்சி வரவழைக்கிறேன்’ என்று சொல்லி விட்டு மீண்டும் ரிசப்சனை நோக்கி சென்றாள்.

அவள் வரும் போது ஒரு காட்போட் பெட்டியை கொண்டு வந்து மேசையில் வைத்து பெட்டியைத் திறந்தாள்.

‘இது என்ன?’

‘நான் திறந்து பார்க்கவில்லை.அப்படியே வாங்கி வைத்தேன். எனத் திறந்துவிட்டு

‘இது அவுஸ்திரேலியன் ரேயின்போ லொறக்கீட் என்றாள்

‘இந்த நாட்டில் படிக்காததால் எனக்கு அதிகம் இந்த நாட்டுப் பறவைகளை பற்றித் தெரியாது.

‘ஏதாவது காயம் இருக்கிறதா என பார்த்தால் போதும்’

தலையில் நீலமான தொப்பி அணிந்தது போன்ற நீலவர்ணம் கீழே ஆரஞ்சு வண்ணத்தில் கழுத்தும், பச்சையான இறக்கையுடன் நமது ஊர் கிளி போல் இருந்தாலும் இரத்த சிவப்பான அதன் அலகுகளும் மிகவும் கவர்ச்சியாக இருந்தது. இறக்கைகளை விரித்துப்பார்த்த போதும் எந்த காயமும் தெரியவில்லை. ஆனால் கொஞ்சம் மயங்கியது போன்ற நிலையில் தலையை சரித்து வைத்துக்கொண்டிருந்தது.

‘என்னைப் பொறுத்தவரை வெளிக்காயம் எதுவும் இல்லை. பறக்கும் போது கிளைகளில் அடிபட்டு விழுந்திருக்கலாம்’

‘ இவைகள் கூட்டமாக பறப்பதால் இப்படி அடிபடுவதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன. அப்படி என்றால் நான் வீட்டை கொண்டு போய் இரண்டு நாள் வைத்திருந்து அதை பராமரித்து விட்டு பின் பறக்க விடுகிறேன்.

‘என்ன சாப்பாடு கொடுப்பாய்?’

‘பழங்கள் கொட்டைகள் கொடுத்தால் போதும்’

‘சிவா இந்த லொறகீற்றுகள் சோடியாக இணைந்து வாழ்பவை என நான் நினைக்கிறேன் இது ஆணைப் பிரிந்து விட்ட பெண்ணாகும் என நினைக்கிறேன்’.

‘அதெப்படி உனக்கு இதெல்லாம் தெரியும்?’

‘நான் படித்திருக்கிறேன். குறைவான ஆரஞ்சு கழுத்துடன் சின்னதாக இருந்தால் பெண்’

‘உன் கருணைக்கு எனது வாழ்த்துக்கள்’

அழைப்பு மணியடித்தது

‘உனது டாக்சியாக இருக்கும் நீ போ’ என கூறியபடி அந்த துணையை பிரிந்த அவுஸ்திரேலிய லொறக்கீற்றை மெதுவாக மீண்டும் பெட்டியில் அடைத்தாள்.

# 9

ரிமதி, நீ இன்று செய்தது தேவையில்லாத விடயம். உனக்கும் காலோசுக்கும் இடையில் ஏற்பட்ட பிரச்சினையை முழு வைத்தியசாலைக்கும் எடுத்துச் செல்லாதே. சிவாவுடன் நீ முரண்பட்ட விடயம் வைத்தியசாலையில் பெரிதாக்கப்படும். இன்னும் ஆறு மாதத்தில் உனது கிளினிக் தயாராகிவிடும். இது உனக்கு தேவைதானா? என்றாள்.

அவளது கைகள் அந்த புளூகீலரது கால்களை ரிமதி பாத்தோலியஸ் ஆணிகளைப் போட்டு உருக்கு பிளேட்டை இறுக்கமாக பொருத்துவதற்கு வசதியாக தூக்கி பிடித்தபடி கீழ் உதட்டை ஒன்றாக குவித்தபடி அவனை கண்களால் துளைத்தாள்.

'உனக்கு இலகுவாக கேள்வி கேட்டு விட்டு ஆலோசனை சொல்ல முடிகிறது. எனக்குத்தானே தெரியும். நான் பட்ட அவமானத்தின் காந்தல்,' தலை நிமிராமல் தொடர்ந்து எலும்பில் ஆணியை திருகி இறுக்கியபடி.

'நான் அதை மறுக்கவில்லை. காலோஸின் முதலாவது பிரச்சினை ஆட்களோடு மரியாதையாக பேசத் தெரியாது. இந்த பத்து வருடத்தில் நான் பலமுறை சண்டைக்கு போயிருக்கிறேன். நான் கேட்பது உனது பிரச்சினையை பலரது பிரச்சினையாக மாற்றதே என்பதுதான்'.

''நான் சிவாவிடம் கேட்ட கேள்வியை காலோசிடம் கேட்டிருக்க வேண்டும் என்கிறாயா?

'அப்படி கேட்டால் உனது கேள்வியில் நியாயமிருக்கிறது என்பேன்'

'மற்றவர்கள் பொறுப்பெடுத்து செய்யாமல் விட்டதால்தான் காயம்பட்ட செல்லப்பிராணிகள் கருணைக்கொலை

செய்யப்படுகிறது. இப்படியான பிராணிகளை நான் எடுத்து ஒபரேசன் செய்வது கலோசுக்கு பிடிக்கவில்லை என்றால் என்னிடம் நேரடியாக சொல்லி இருக்கலாம். அதை விட்டு தேனீர் அறையில் ரிமதி ஓவர்டைமுக்காக செய்வதாக பலருக்கு முன்பு கூறியது என்னை அவமானப்படுத்தும் விடயம்'.

'இரவு பதினொரு மணிவரையும் ஓவர்டைம் போட்டிருந்ததை, ஜோன் லிஸ்மோர் அழைத்து விசாரித்தபோது நான் விளக்கம் அளித்தேன். போன புதன் கிழமை நாங்கள் ஒபரேசன் செய்த பூனைக்கு இரண்டு இடத்தில் குடலை வெட்டவேண்டி இருந்தது. அடுத்த நாள் பிற்போட்டிருக்க முடியாத விடயம் என்பதை விபரித்தேன்'

ஜெனட்டின் கேள்வியின் நியாயம் புரிந்தாலும் தனது தவறை ஏற்காமல் ரிமதி அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தாலும், அவன் மனதில் காலோஸின் மேல் ஏற்பட்ட ஆத்திரம் அடங்கவில்லை. மனதில் எரிமலை தொடர்ந்து குமுறிக் கொண்டிருந்தது. காலோஸ், சிவா மட்டுமல்ல எந்த வெளிநாட்டவர்களிலும் நல்ல அபிப்பிராயம் கிடையாது என்பதை அவனால் சொல்ல முடியாது. சொன்னாலும் அதை ஜெனட் ஏற்காமல் மேலும் எதிர்ப்பாள். தொடர்ச்சியாக அந்த ஒபரேசன் வேலையில் கண்ணும் கருத்துமாக ஈடுபட்டு இருப்பது அவனது எண்ணங்களை அவள் அறியாது திரைபோட இலகுவாக இருந்தது.

ரிமதி பாத்தோலியஸசின் தந்தைவழி பாட்டனார் இங்கிலந்தில் இருந்து வந்தாலும் இத்தாலிய வம்சாவளியை சேர்ந்தவர். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் கப்பலில் இளைஞனாக பிரிஸ்பேன் துறைமுகத்தில் வந்திறங்கி, குயின்ஸ்லாண்டில் கரும்புத்தோட்டத்தில் வேலை செய்யத் தொடங்கி பின்பு கடும் முயற்சியால் கரும்புத் தோட்டத்துக்கு சொந்தக்காரர் ஆகினார். இவரது கரும்புத் தோட்டம் மகனது காலத்தில் இன்னும் பெரிதாகியது. இரண்டு தலைமுறையில் பெரிய கரும்புத்தோட்ட விவசாயக் குடும்பமாகியது. சிறுவயதில் ரிமதி இந்த கரும்பு தோட்ட வேலைகளில் ஈடுபட்டாலும், கரும்பு விவசாயம் மனதிற்கு பிடிக்கவில்லை. பிரிஸ்பேனுக்கு சென்று மிருக வைத்தியம் படிப்பதையே குறிக்கோளாக இருந்தான். பாட்டனுக்கும் தகப்பனுக்கும் இந்த ஆயிரம் ஏக்கர் நிலத்தை விட்டு விட்டு ரிமதி படிக்க சென்றது அவர்களுக்கு புதுமையாக இருந்தது. பல தடவை சொல்லிப் பார்த்தார்கள். ரிமதி பிடிவாதமாக இருந்தான். ரிமதியின் தம்பி ஜேம்ஸ் முழு நேர கரும்பு விவசாயியாக மாறிவிட்டான்.

ரிமதியின் தந்தை ரெவர் பாத்தோலியஸ் பல காலம் அவுஸ்திரேலிய தேசியக்கட்சியில் அங்கத்தவராக இருந்தாலும் கட்சியின் கொள்கைகளில் பிற்காலத்தில் அதிருப்தி கொண்டு கட்சியின் அங்கத்துவத்தில் இருந்து விலகிக் கொண்டார். எழுபதில் அவுஸ்திரேலிய கரையில் வியட்னாமியர் அகதிகளாக வந்து ஒதுங்கிய போது அக்காலத்தில் ஆட்சியில் இருந்த லிபரல் அரசாங்கத்தின் அகதிகளை வரவேற்கும் நடவடிக்கைகளை அவுஸ்திரேலிய தேசிய கட்சி எதிர்க்கவில்லை. அக்காலத்தில் பிரதமரான மல்கம் பிரேசர் இந்த அகதிகளை அரவணைத்து குடியுரிமை கொடுத்து புதிய அத்தியாயத்தை இந்த நாட்டில் தொடக்கி வைத்தார். அதுவரையும் ஐரோப்பியர்களது நாடாக இருந்த அவுஸ்திரேலியாவில் பெருமளவில் ஆசியர்கள் குடிவந்தது பலரது மனங்களில் அச்சத்தை உருவாக்கியது. ஒருகாலத்தில் இந்த நாடு ஆசிய மக்களால் நிரம்பிவிடும் என்ற பய உணர்வு உருவாகியது. இதற்கு காரணம் பெருந்தொகையான ஆசியமக்களை கொண்ட பிரதேசத்தில் இந்த நாடு இருப்பதும் பூகோள அமைப்பு. அஸ்திரேலியா பரந்த நிலப்பரப்பில் குறைந்த மக்களையே கொண்டு இருப்பதாலும் இப்படியான பய உணர்வுகளை தங்களுக்குள் நியாயப்படுத்தி மனக்கசப்போடு கட்சியில் இருந்தார்கள். ரெவர் பாத்தோலியஸ் போன்றவர்கள். அதன் பின்பு நடந்த விடயம் விவசாயியான ரெவரால் பொறுக்க முடியவில்லை. வெளிநாடுகளில் இருந்து அவுஸ்திரேலியாவுக்கு உணவு பண்டங்கள் திறந்த பொருளாதார கொள்கையில் இறக்குமதியாவதால் அவுஸ்திரேலிய விவசாயம் நலிவதையும் ரெவர் எதிர்த்து கட்சியில் இருந்து வெளியேறினார். சிறுவயதில் ரிமதிக்கு தந்தையின் அரசியல் கொள்கைகள் பல மனதில் பதிந்துவிட்டது. அபோரிஜின தொழிலாளர்களும் சில பசிபிக் தீவுகளை சேர்ந்த மெலனீசிய மக்களும் கூலிகளாக கரும்பு வெட்டும் போது அவர்களது தோட்டத்திற்கு வரவழைக்கப்படுவார்கள். கருப்பு நிறத்தவர்கள் கருப்பாக இருப்பதற்கு காரணம் அவர்கள் குளிக்காமல் அழுக்காக இருப்பதுதான் என ரிமதி சிறுவயதில் நினைத்த காலமும் உண்டு. கறுப்பானவர்கள் கூலி வேலை மட்டும்தான் செய்வார்கள் என்ற சிந்தனையில் பல்கலைக்கழகத்தில் படிக்கும்போது மாற்றங்கள் நிகழ்ந்தாலும் அவுஸ்திரேலிய அரசாங்கங்கள் அதிக அளவில் வெளிநாட்டவர்களை அதிலும் ஆசியர்களை அனுமதிக்கிறது தவறு என்ற அவனது கருத்தில் மாற்றம் நிகழவில்லை. விவசாயத்தில் ஈடுபடும் அவுஸ்திரேலியர்கள் பலர் இந்த சிந்தனை உடையவர்கள். குயின்ஸலாண்ட் மாநிலத்தில் பெரும்பான்மையினர் நகரத்தை

விட்டு விலகி வாழ்வதால் இந்த சிந்தனை மற்ற மாநிலங்களைவிட பலமாக உள்ளது. இதன் காரணத்தால் ஆசியர்கள் வருகைக்கு எதிரான கொள்கையை மட்டுமே கொண்ட ஒரேநாடு என்ற கட்சியை போலின் கான்சன் எனும் பெண்மணி ஆரம்பித்து பல இலச்சம் வாக்குகளை பெற்று செனட்டராக முடிந்தது. பொருளாரத்தில் மந்தமான நேரத்தில் வேலை வாய்ப்புகள் குறைந்து போகும்போது புதிதாக குடிவருபவர்கள் அவுஸ்திரேலியரின் வேலைகளை எடுத்து கொள்கிறார்கள் என்ற கருத்து அவுஸ்திரேலிய தொழிற்சங்கத்தை சேர்ந்தவர்கள் மத்தியில் கூட ஏற்படுகிறது.

இப்படியான கசப்பு உணர்வுகள் மனிதமனங்களில் துளிர்விடும்போது ஐரோப்பா மற்றும் இங்கிலாந்தில் இருந்து வருபவர்கள் மேல் இந்த வேற்றுமை உணர்வு ஏற்படுவதில்லை. தோற்றத்தில் ,கலாச்சாரத்தில், மொழியில், மதத்தில் வேறுபடும், ஆசியர்கள் மற்றும் அரேபியர்கள் மட்டும் குறி வைக்கப்படுகிறார்கள். அவர்கள் மிகவும் சிறிய தொகையாக இருந்தபோதும்.

இப்படியான சிந்தனையில் உள்ளவர்கள் வாழும் பிரதேசத்தில் இருந்து வந்த ரிமதி பாத்தோலியஸ் மிருக வைத்தியராக படித்து முடிந்ததும் பிரிஸ்பேனில் வேலை செய்யும் காலத்தில் மெல்பனை சேர்ந்த கைலியை சந்தித்து திருமணம் புரிந்து கொள்கிறான். பிரிஸ்பனை விட்டு இடம் பெயர்ந்து மெல்பனில் வாழ விரும்பும் கைலியால் தூண்டப்பட்டு ரிமதி மெல்பனில் சொந்தமாக கிளினிக் வைக்க முயலுகிறபோது பல தடவை வேலையில் இருந்து விடுப்பு எடுத்தான். சில நாட்கள் அதிகமாக மெல்பனில் தங்கி சொந்த வேலையை பார்த்ததால் வேலையில் இருந்து நீக்கப்பட்டான்.

மெல்பன் வந்து கைலியின் வீட்டில் இருந்தபடி வேலை தேடிய போது இந்த வைத்தியசாலையில் வெற்றிடம் இருப்பதாக பழைய நண்பன் ஒருவன் மூலம் தெரிந்துகொண்டதால் தற்காலிகமாக வேலைக்கு சேர்ந்து கொண்டான் ரிமதி வேலையில் சேர்ந்த அன்று தனது மேலதிகாரியாக ஒரு ஆசியன் இருப்பதை எதிர்பார்க்கவில்லை. ஆனால் அதை மிக கஷ்டத்துடன் பொறுத்துக் கொண்ட போது காலோஸின் நடத்தைகள் அவனுக்கு அநாகரிகமாக இருந்தது. பெண்களுக்கு முன்பு காமம் கலந்த நகைச்சுவையாக பேசுவது, மதிய நேரத்தில் மதுபான விடுதிக்கு போவது போன்ற இயல்புகள் விவசாய குடும்பத்தில் இருந்து வந்த ரிமதியினால் சகிக்க முடியவில்லை. ஆறுமாதம் அல்லது ஒருவருடம் எனது கிளினிக் தயாராகும் வரை இந்த இடத்தில் வேலை செய்யவேண்டியது என்று

பொறுமையை கடைப்பிடித்தான். அந்த பொறுமையை சோதிப்பது போல் அன்று நடந்த சம்பவம் இருந்தது.

ஒரு நாள் காலை நேரத்தில் காலோஸ் ரிமதியை அழைத்து 'நேற்று இரவு பதினொரு மணிவரையும் ஓவர்டைம் செய்தது என கணக்காளர் ஜோன் லிஸ்மோர் சொன்னார். அதிக ஓவர்டைம் செய்வது வைத்தியசாலை பணத்தை விரயமாக்கும் என்பதால் அனுமதிக்கப்படுவது இல்லை' என்றார்

'அரைவாசியில் நான் எடுத்த வேலையை விட முடியாது. அந்தப் பூனைக்கு வயிற்றில் நூல் சிக்கியிருந்ததால் இரண்டு இடத்தில் குடலை எடுக்கவேண்டி இருந்தது'.

'ரிமதி, இந்த வைத்தியசாலை பொது மக்கள் நன்கொடையில் இயங்குவது. பெரிய சத்திர சிகிச்சைகளை இங்கே செய்யமுடியாது. அதற்காக வெளியே விசேட ஸ்பெசலிஸ்ட்டுகள் உள்ளார்கள்'.

'அப்படியானால் அந்த பூனையை கருணைக்கொலை செய்ய வேண்டி இருந்திருக்கும்'.

'அது பரவாயில்லை'.

'அந்த பூனையை காப்பாற்றக் கூடியதாக இருந்து அதை செய்யாவிட்டால் எனக்கு மிருக வைத்தியராக இருக்க தகுதி இல்லை என நான் நினைத்தேன்'.

கோபத்தில் கண்ணும் முகமும் சிவந்தபடி ஆனால் வார்த்தையின் ஒலியை உயர்த்தாமல் அமைதியாக

'அந்தப் பூனையை காப்பாற்ற உனக்கும் உனக்கு உதவியாக இருந்த ஜெனட்டுக்கும் கொடுத்த ஓவர்டைம் பணத்தை இந்த வைத்தியசாலை நிர்வாகம் இழந்திருக்கிறது. ஆனால் அந்த ஒப்பரேசனுக்கு சரியான பணத்தை அந்த உரிமையாளரிடம் நாங்கள் வாங்க முடியாது. நீ செய்த செய்த ஒப்பரேசன் உனது திறமையை பரீட்சிக்க செய்த சாகசம். உனது சொந்த செலவில் செய்தால் இதை யாரும் கேட்கப் போவது இல்லை'. மீண்டும் சிரித்தபடி காலோஸ்.

பொறுமையாக இருவரும் குரலை மெதுவாக வைத்தபடி பேசினாலும் இருவர் மனங்களிலும் ஒரு நிழல் யுத்தம் நடைபெற்றது.

‘நீங்கள் சொல்லுவதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது’. ரிமதி இறுதியாக ‘இங்கே பார். உனக்கு விருப்பம் என்றால் வேலை செய். இல்லையேல் போய்க் கொண்டு இரு’என சொல்லி விட்டு காலோஸ் அந்த அறையை விட்டு வெளியேறினார்.

ரிமதிக்கு ஆத்திரத்துக்கு அளவில்லை. முகத்திலும் கண்களிலும் கோபம் கொதித்தது. அந்த அறையில் பல முறை நாலா திசையும் நடந்தபடி சுவர்களை முஷ்டியால் பலமுறை குத்தினான். கால்களால் நிலத்தில் உதைந்தான். தனது கோபம் அடங்கும் வரை அந்த இடத்தில் சிறிது நேரம் நின்று பார்த்தும் பிரயோசனம் இல்லை. நேராக ஒப்பரேசன் தியேட்டருக்கு வந்து அங்கும் கோபத்தில் ஒப்பரேசன் மேசையில் பலமுறை குத்தியடி இருந்தான். வேலையைவிட்டு விலகி விடுவோமா என நினைத்தபோது குழந்தையை சுமக்கும் கைலியின் ஞாபகம் வந்து அவனைத் தடுத்தது.

இரண்டு நாட்களின் பின் தேநீர் அறைக்கு சென்றபோது காலோஸ் - ‘சொந்த கிளினிக்கை தொடங்குவதற்காக இங்கு ஓவர்டைம் செய்கிறார் போல’ என கணக்காளர ஜோன் லிஸ்மோரிடம் சொல்லி சிரித்தது மெதுவாக காதில் விழுந்தது. அந்த இடத்தில் சென்று வாக்குவாதப்பட்டால் கைகலப்பில் முடியும் என்ற நினைப்புடன் ரிமதி தேநீர் அறைக்கு செல்லாமல் தனது வேலையை செய்ய திரும்பி சென்றான். அன்றில் இருந்து ரிமதி காலோசுடன் பேசுவதைத் தவிர்த்தான். சந்திக்கும் போதெல்லாம் தலையை திருப்பியபடி சென்றான். இருவரும் ஒருவருடன் ஒருவர் பேசாமல் இருந்தாலும் அந்த வைத்திய சாலையில் ஒரு நிழல் குருசேத்திரம் ஆரம்பமாகியது. போர் வியூகங்கள் வகுக்கப்பட்டு இருவர் பகுதிக்கும் பலர் சேனாதிபதிகளாகவும் காலாட்படை வீரர்களாகவும் சேர்ந்து கொண்டனர்.

□ □ □

**சு**ந்தரம்பிள்ளை வேலைக்கு சேர்ந்த மறுதினம் புதிதாக சேர்ந்த மிருகவைத்தியர் ஷரன் பேட் - காலோஸ் கூறியது போல் அழகானவள். இருபத்தைந்து வயதில் மெல்பன் பல்கலைக்கழகத்தில் பயிற்சியை முடித்து விட்டு வேலைக்கு வந்திருந்தாள். புதிதாக சுந்தரம்பிள்ளையும் ஷரனும் பெரும்பாலான நாட்கள் ஒன்றாக அடுத்த அறைகளில் வேலை செய்தார்கள். அடிக்கடி இருவரும் அபிப்பிராயங்கள் கேட்பதற்கோ ஒருவருக் கொருவர் உதவிகள் செய்வதற்கோ சந்திக்க வேண்டி வந்தது. ஷரனது சிரிப்பும் அதைவிட முக்கியமாக இடுப்புக்கு கீழாக இறுக்கமான பாண்டை போட்டு

இடுப்பை நகர்த்தும் விதம் ஆண்களை கிறுங்கப் பண்ணும். மெல்பன் வசந்தத்தின் ஆரம்ப காலம் கொஞ்சம் குளிராக இருந்ததால் அவளது அழகிய கால்கள் மறைக்கப்பட்டு இருந்தன. நிச்சயமாக இன்னும் சில மாதங்களில் மெல்பன் காலநிலையில் மாற்றம் ஏற்படும்போது இந்த வைத்தியசாலையில் பலவீனமான இதயங்கள் துடிப்பதை மறந்து விடலாம் அல்லது சிறிய உள்நாட்டு கலவரம் ஏற்பட வழியுண்டு என சிவா சுந்தரம்பிள்ளைக்கு நினைப்பு வந்தது. ஆனால் ஷரனுக்கு கைக்குழந்தை ஒன்று இருப்பதாக கேள்விப்பட்டதும் சுந்தரம்பிள்ளைக்கு உண்மையிலே ஆச்சரியமாக இருந்தது. தாயாகிய எந்த அறிகுறியும் அவளது உடலில் இருக்கவில்லை.

அழகான - கன்னிமை குன்றாமல் தாயாவது விவிலியத்தில் மேரிக்கு மட்டும் தனியுரிமையா?

வேலைக்கு வந்த சிலநாட்களில் சுந்தரம்பிள்ளையிடம் ‘சிவா நான் நாளைக்கு வருவதற்கு சிறிது நேரம் செல்லும். தயவு செய்து எனது வோட் இரவுண்டையும் செய்கிறாயா’ என கேட்டு தோளில் கை போட்டாள்.

காலையில் எனது வேலையுடன் இவளது வேலையை சேர்த்து செய்வது இரட்டிப்பு வேலையாக இருக்குமே? இப்படி கேட்கிறாளே?

இவ்வளவு நெருக்கமாக வந்து நம்பிக்கையில் கேட்கும் போது எப்படி மறுப்பது என நினைத்தபடி சரி என சுந்தரம்பிள்ளை தலையாட்டினான்.

‘நன்றி’ எனக் கூறி மீண்டும் இறுக்கமாக தோளை அழுத்திவிட்டு சென்றாள்.

உண்மையில் பெண்களால் தேவையானபோது மற்றவரிடம் எப்படி வேலை வாங்குவது என்ற கலை தெரிந்திருக்கிறது. அழகை எந்த அளவில் பிரயோகிப்பது என்பது ஒரு கலை. மருந்து மாதிரி பாவிக்க வேண்டியது. அளவை மீறும்போது மற்றவர்களால் சாகசக்காரி என இனங் கண்டு ஒதுங்கி விடுவார்கள். நிச்சயமாக ஷரனிடம் அந்த கலைத் திறமை கைவந்து உள்ளது.

ஷரன் கேட்டதையும் சுந்தரம்பிள்ளையின் தோளை அழுத்தியதையும் தூரத்தில் இருந்து அவதானித்த சாம் அருகில் வந்து ‘என்ன இவ்வளவு நெருக்கமாகி விட்டீர்கள்’ எனக் கூறி புன்னகையை

தவழ விட்டான். அந்தப் புன்னகையில் பல கோடி அர்த்தங்கள் இருந்ததை வேண்டுமென்றே கவனிக்காமல் சுந்தரம்பிள்ளை 'நாளைக்கு தான் வர சிறிது நேரமாகும் என தனக்கும் சேர்த்துவோ வாட் இரவுண்டை செய்யட்டாம்'.

அப்ப நீங்கள் என்ன சொன்னிர்கள்?

'ஓம் என சொன்னேன். சிறிய குழந்தையின் தாயானதால் வீட்டில் ஏதாவது பிரச்சினையாக இருக்கலாம்?'

'இங்கே இப்படி உபகாரங்கள் செய்யத் தொடங்கினால் எல்லோரும் உமது தலையில் கட்டி விடுவார்கள். மேலும் எனக்கு ஷரனில் நல்ல அவிப்பிராயம்.இல்லை'.

'ஒரு கிழமையில் அவளோடு மூன்று நாட்கள் சேர்ந்து வேலை செய்கிறேம். பரஸ்பர நல்லெண்ணம் இருந்தால் தானே நல்லது'.

அதற்கு பதில் சொல்லாவிட்டாலும் பழைய புன்னகை மாறவில்லை. மேலும் சாமுக்கு பெண்கள் விடயத்தில் தனது கணிப்பில் எப்பொழுதும் அபார நம்பிக்கை இருந்தது.

அடுத்த நாள் தனது வாட் இரவுண்டை சாமின் உதவியுடன் முடித்து அந்த அறிக்கையை சாமிடம் கொடுத்து அனுப்பி விட்டு மீண்டும் ஷரனுக்காக அவளது நேர்சான நொரோலுடன் சென்றபோது நொறேல் மூலம் பல தகவல்கள் தெரியவந்தது.

ஷரன் தன்னிலும் பார்க்க பதினைந்து வருடம் வயது கூடியவரை திருமணம் செய்துள்ளாள். பல்கலைக்கழகத்தில் படிக்கிற காலத்திலே இருவருக்கும் குழந்தை பிறந்து விட்டது. ஷரனது கணவனுக்கு தலையில் வழுக்கல்; தற்பொழுது நாற்பது வயது இருக்கும்.

'இதையெல்லாம் இவ்வளவு சீக்கிரம் எப்படி அறிந்து கொண்டாய்?' ஆவலுடன் கேட்டான்.

'நேற்று பிள்ளையோடு வந்து கிறிஸ்ரியன்தான் ஷரனை வேலையில் இருந்து கூட்டி சென்றது. அழகான ஆண் குழந்தை. பார்ப்பதற்கு மொழு மொழு என்றிருந்தான்'

அவளது வார்த்தையில் குழந்தைகள் மேல் அவளது ஆசை தெரிந்தது.

‘இவ்வளவு தெரிந்த உனக்கு ஷரனின் கணவர் எங்கு வேலை செய்கிறார் என்பது தெரிந்திருக்குமே?

‘விட்டேனா? அதை மட்டும். தீ அணைப்பு படையில் உத்தியோகம் பார்க்கிறார். இதைவிட முக்கிய விடயம் உனக்கு தெரிய வேண்டும்.

என்ன கதை விடுகிறாய்?

‘ஷரனுக்கு கராத்தே தெரியும். அதை பழக்கியது கிறிஸ்ரியன்‘

”உண்மையாகவா? ஆச்சரியத்துடன்‘

‘அந்தக் காலத்தில் வந்த காதலில்தான் இருவரும் ஒன்றாகினார்கள்’.

ஷரனது வோட் இரவுண்டை செய்ய ஒப்புக் கொண்டது சாமுக்கு பிடிக்கவில்லை. ஆனால் இவ்வளவு முக்கியமான விடயங்களை அறிந்து கொள்வதற்கு இந்த சந்தர்ப்பம் உதவி இருக்கிறது என நினைத்தபடி சுந்தரம்பிள்ளை வேலையை முடித்தபோது ஷரன் வந்து சேர்ந்தாள்.

‘இது உனது வாட் இரவுண்ட் அறிக்கை’ என பச்சைப் புத்தகத்தைக் கொடுத்தார்.

அதில் எந்த செல்லப்பிராணி குணமாகிவிட்டது, எதற்கு தீவிர சிகிச்சை வேண்டும், எதனை சத்திர சிகிச்சைக்கு உட்படுத்த வேண்டும் என குறிக்கப்பட்டிருந்தது.

இம்முறை ஷரனிடம் இருந்து சிவாவினது ஒரு மணிநேர வேலைக்கு விலையாக கன்னத்தில் முத்தம் கிடைத்தது.

பார்த்துக்கொண்டிருந்த நொறேல் சிரித்துவிட்டு ஷரன் அந்த இடத்தை விட்டு விலகியதும் ‘ லிப்ரிக் அடையாளத்தை துடைத்துக் கொள். அதிகம் வழியாதே. சிவா, ஷரனின் கணவன் கராட்டியில் கருப்பு பெல்ட்காரன் என்பதை நினைவு வைத்திரு’ எனக் கூறி கண்ணைச் சிமிட்டினாள்.

‘அவள் கொடுத்தாள். நான் மறுக்கக் கூட அவள் அவகாசம் தரவில்லை. எதற்கும் உனது ஆலோசனைக்கு நன்றி’ எனக்கூறிவிட்டு தேநீர் அருந்துவதற்காக சாமுடன் ஓய்வு அறைக்கு சென்றான்.

□ □ □

தேநீர் அருந்தும் அறையில் அன்று எல்லோருக்கும் இடையில் ஒரு முக்கியமான விடயம் பேசப்பட்டது. முக்கியமாக பெண்கள் உரத்த தொனியில் பேசினார்கள்.

'வைத்தியசாலையில் பாதுகாப்புத் தேவை'.

'அத்துடன் ஆணும் பெண்ணுமாக வேலை செய்யவேண்டும்'.

சுந்தரம்பிள்ளைக்கு அடி நுனி புரியவில்லை. ஆனால் ஏதோ முக்கியமான விடயம் நடந்து விட்டது என்பது புரிந்தது. அதே வேளையில் சாம் அதை தெரிந்து கொண்டோ அல்லது பெரிதாக நினைக்காமல் புறக்கணிக்கிறான் என்பது புரிந்தது. அவன் தனது காப்பியை போடுவதில் கரிசனையாக இருந்தான். அவனுக்கு காப்பியில் பால் விடக்கூடாது. கருநிறமாக தடிப்பாக இருக்கவேண்டும். அடிப்பகுதியில் குடித்து முடிந்த பின்பு வண்டல் மண்போல் காப்பி தேங்கி இருக்கவேண்டும். இதற்காக விசேடமான காப்பித்தூள் தனக்கு பிரத்தியேகமாக வைத்துள்ளான்.

லீசா என்ற இளம் நர்சு வந்து 'சிவா, இரவு நடந்தது தெரியுமா?'

'இல்லையே?'

'நல்ல வேளை நீங்கள் வேலை செய்யவில்லை. கற்றரீனாவும் லியான்னும் இரவு வேலை பார்த்திருக்கிறார்கள். இரவு பதினொரு மணிக்கு இருவர் வந்து, தங்களது சிறிய பொமரேனியன் நாய்க்கு மலசிக்கல் போல் இருக்கிறது. உடனே எனிமா கொடுக்கவேண்டும் என்றார்கள். இந்த இரவு செய்யமுடியாது. நாளை செய்கிறோம். என சொல்லி மறுத்திருக்கிறார். அவர்கள் ஆத்திரத்தில் இருந்த போது லியான் உங்களுக்கு நாங்கள் சொல்வது போல் நடக்க விருப்பம் இல்லையானால் வேறு வைத்தியசாலைக்குப்போகலாம் என்றாள். இதை கேட்டுக்கொண்டிருந்த ஒருவன் லியான்னுக்கு ஓங்கி குத்துவிட்டான். நல்ல வேளையாக அந்த குத்து லியான் விலகியதால், அவனது முஷ்டி பரிசோதனை அறைச் சுவரில் ஓட்டை போட்டது'.

லீசா நாடக இயக்குனர் போல் காலை கையை அசைத்து குத்து தனக்கு விழுந்தது போல் குனிந்து, விலகி விபரித்ததை இரசிக்க கூடியதாக இருந்தது.

'உண்மையாகவா ஓட்டை விழுந்திருக்கு?'

‘நம்பிக்கை இல்லையென்றால் போய் பார்க்கவும்;’.

‘நல்ல வேளை லியான்னின் முகம் அடி விழுந்திருந்தால் லாரியில் மோதிய கார்போல் முகம் சப்பையாக வந்திருக்கும். பார்க்க இன்னும் சகிக்காது’ என்றான் சாம்.

‘நீ ஒரு இரக்கமில்லாதவன்’ எனக்கூறி விட்டு மற்றவர்களுக்கு இந்த விடயத்தை விவரிக்க அந்த இடத்தை விட்டு லீசா விலகி சென்றாள்.

சாமுக்கு லியான்னில் பிடிக்காது. லியான் மெல்பனில் இருந்து நூறு கிலோமீட்டருக்கு அப்பால் உள்ள சிறு நகரத்தில் இருந்து வருபவள். தாட்டியான விரிந்த தோள்களும், பரந்த மார்புகள், இடையற்ற ஆறடி உயரமான உடலுக்குரியவள். பலவருடங்கள் பருமனாகிய மரத்தில் அறுக்கப்பட்ட மரக்குத்தி போல் இருப்பாள். பேசும்போது கண்ணில், முகத்தில், அசைவுகள் அல்லது நளினங்கள் எதுவும் தெரியாமல் நேராக நோக்கியபடி கறாரான குரலில் பேசுவாள். நினைவிலும் கனவிலும் அழகின் உபாசகராக இருக்கும் சாமுக்கு அவளை பிடிக்காதது ஆச்சரியமில்லை. சாமின் வார்த்தையில் கூறினால் இரண்டு பெரிய முலைகளைத் தவிர பெண்மையின் அடையாளம் எதுவும் லியான்னில் இல்லை என நினைப்பவன்.

‘சாம் நீ அப்படி சொல்லி இருக்கக்கூடாது’.

‘உங்களுக்கு தெரியாது. கற்றரினாவுக்கும் லியான்னுக்கும் ஆட்களோடு பேசத் தெரியாது. நோயுள்ள நாயை கொண்டு வருபவர்களிடம் பக்குவமாக பேசவேண்டும். எடுத்தெறிந்து பேசக்கூடாது. கற்றரீனா பணக்கார குடுப்பத்தில் பிறந்து வளர்ந்தவள். சாதாரண மனிதர்களோடு பேசிப்பழகத் தெரியாது. ஆனால் லியான் அப்படி இல்லை. நாட்டுப் புறத்தில் பிறந்து வளர்ந்தவள். அப்படி பேசி இருக்கக் கூடாது. பிரச்சினையை தேடி வாங்கினால் நாங்கள் என்ன செய்யமுடியும?’.

சாம் இந்த இடத்தில் ஐந்து வருடங்கள் வேலை செய்வதால் அவனது வாதங்களை எதிர்க்க முடியாது. மேலும் சாமின் அளவு கோல்கள் சிறிது வேறுபட்டாலும் இந்த வைத்திசாலையில் பலரோடு நட்பாக இருப்பவன். இதேவேளையில் பெண்கள் மத்தியில் செல்வாக்கும் சாமுக்கு உண்டு.

## 10

சுந்தரம்பிள்ளைக்கு தொடர்ச்சியாக இரண்டு பகல் வேலை செய்துவிட்டு அதன் பின் தொடர்ந்து இரவு வேலை செய்ததால் ஏற்பட்ட சோர்வு, அதன் பின்பாக இரண்டு நாட்கள் கிடைத்த ஓய்வின் பின்னர் நீங்கியதோடு புத்துணர்வை அளித்தது. வேலை இடத்தில் வேலை செய்பவர்களை மனதிற்கு பிடித்துக் கொண்டுவிட்டதும் அதற்கு ஒரு காரணமாக இருந்தது.

காலையில் வழக்கம்போல் வோட் றவுண்ட் செய்ய வேண்டியதாக இருந்தது. சாமுடன் தீவிர சிகிச்சை பிரிவுக்கு சென்ற போது அங்கேயுள்ள கூட்டில் பக்கவாட்டில் படுத்தபடியே ஆவுஸ்திரேலியாவில் மாட்டுப் பண்ணைகளில் வேலை செய்யும் ஒரு ஆண் நாய் படுத்துக் கிடந்தது. அது சுந்தரம்பிள்ளை சாமுடன் உள்ளே வந்ததால் ஏற்பட்ட கதவின் ஓசை கேட்டு தலையைத் திருப்பி பார்த்தது. அதன் கண்களில் வரவேற்பு உணர்வு தெரியாத போதும் வெறுப்பு தெரியவில்லை. பெரிய மருத்துவ ஆஸ்பத்திரிகளில் கான்சர் என்ற குணமடையாத நோய் பீடித்தவர்கள் இருக்கும் வாட்டின் பக்கம் போய் நாம் பார்க்க போனவரை பார்த்து விட்டு மற்றவர்களைப் பார்த்தால், அவர்கள் கண்களில் எதையும் பொருட்படுத்தாத ஏகாந்தமான தன்மை தெரிவதை அவதானிக்க முடியும். நாங்கள் எப்படியும் சில நாட்களில் இறக்கப்போகிறோம். இந்த மனிதனின் அறிமுகம் நமக்கு தேவையற்றது என்ற உணர்வு அவர்கள் கண்களில் தெரியும். அதே மாதிரியான உணர்வைத்தான் சுந்தரம்பிள்ளையால் அந்த நாயின் கண்களில் உணரமுடிந்தது.

வந்தவர்களை அடையாளம் கண்டுகொண்டேன் என நினைத்து விட்டு கூண்டின் உட்பக்கம் மீண்டும் தலையை திருப்பிக் கொண்டது.

புளூகீலர் என சொல்லப்படும் அந்த நாய்கள் ஆயிரம், இரண்டாயிரம் ஏக்கர் நிலத்தில் சிதறியோடும் பண்ணை மாடுகளை

கணுக்காலின் கீழ் பகுதியில் கடித்து நிரைப்படுத்தும். அவை கடிக்கும் போது இரத்தம் வடியாது. ஆனால் வலி ஏற்படும். அதிகம் குரைக்காது, அமைதியாக செயலில் ஈடுபடும் இந்த நாயொன்று இரண்டு மனிதர்களின் வேலையை செய்யும். அக்காலத்தில் இருவர் குதிரையிலும் இக்காலத்தில் மோட்டார் சைக்கிளிலும் முன்னே செல்லும் போது இரண்டு நாய்கள் பின்னாலே ஆயிரம் மாடுகளை ஒன்று சேர்த்து நிரைப்படுத்தி பட்டிக்கு கொண்டு செல்லும் காட்சியை வட அவுஸ்திரேலிய மாட்டுப் பண்ணைகளில் காணலாம். இந்த நாய்கள் உரிமையாளர்களுக்கு மிக்க நன்றி விசுவாசம் உள்ளவையாக இருக்கும். மாடுகளின் பிரசவவேளையில் நரிகள், காட்டு நாய்களிடம் இருந்து கன்றுகளை பாதுகாக்கும். ஆயிரக்கணக்கில் இறைச்சி மாடுகள் உள்ள பண்ணையில் ஒரே நேரத்தில் திறந்த வெளியில் இரவு பகலென பல மாடுகள் கன்றுகளை ஈனும் போது மனிதர்களால் காவல் இருக்க முடியாது. இந்த நாய்கள் இன்றியமையாத துணையாக பண்ணையாளருக்கு இருக்கின்றன. இந்த நாய்கள் மேலும் ஆரோக்கியமானதாக திறந்த வெளிகளில் சீவிப்பதும் பல மைல் தூரம் நடக்கவும் தோதான உடல் வலிமை உள்ளவை. இந்த நாய்கள் நகரப்புறத்தில், வீடுகளின் பின் வளவுகளில் வளர்க்கும் போது பயிற்றப்படாமல் கடிநாய்களாகவும், உடற் பயிற்சியற்ற குண்டு நாய்களாகவும் மாறிவிடுகின்றன.

அந்த புளூகீலரின் நோய் குறிப்பை பார்த்த போது வாகனத்தில் செல்லும் போது வெளியே பாய்ந்ததால் நடந்த விபத்தில் முன்காலும் பின்காலும் முறிந்திருக்கிறது. இடது பின்னங்கால் தொடையில் உருக்கு பிளேட் ஒன்றையும் வலது முன்னங்காலில் உருக்கு கம்பியையும் வைத்து ரிமதி பாத்தோலியஸ்சால் சிகிச்சை செய்யப்பட்டிருந்தது.

சுந்தரம்பிள்ளையால் அந்த நாயை அடையாளம் காணமுடிந்தது. இரண்டு நாட்களின் முன்பு ஒபரேசன் தியேட்டரில் இந்த நாயைதான் ஒபரேசன் செய்து கொண்டிருந்தான். அந்த வேளை முள்ளம்தண்டைப்பற்றி கேட்டதும் ஆத்திரப்பட்டு மதுச்சாலைக்கு சென்றதைக் குறிப்பிட்டான். இது திறமையாக செய்ய வேண்டிய கடினமான வேலையானதால் இதை செய்ய பல மணி நேரங்கள் எடுத்திருக்கும். இப்படியான வேலைகளால் தலைமை வைத்தியர் காலோஸுக்கும் ரிமதிக்கும் வாக்குவாதம் ஏற்படுகிறது.

அந்தப் பகுதிக்கு பொறுப்பாக இருந்த ஜோனை அழைத்து ஜோன் இந்த நாயின் உடலை அடுத்த பக்கம் திருப்பி விட்டீர்களா

என கேட்டபோது ‘ஆம் ஆனால் அதனது உடல் பகுதி அதிக அசைவில்லை. மேலும் கடிக்க வருகிறது’. என்றான்.

‘காலும் கையும் உடைந்திருந்தால் நீ கூட அப்படித்தான் இருப்பாய் ஜோன்’ என்றான் சாம்

‘சாம், நாயின் தலையில் பெரிய பெட்சீட்டால் மூடு’ என்றதும் சாம் அருகில் இருந்த பெரிய தடிப்பான பெட்சீட்டால் தலையில் போட்டு அமர்த்தியதும் சுந்தரம்பிள்ளை நாயின் அருகே குனிந்து கையில் இருந்த கத்திரிக்கோலின் பிடியால் ஒன்றன் பின் ஒன்றாக வலது , இடது முழங்கால் சிரட்டையின் சிறிது கீழே மெதுவாக அடித்தான். அந்த இரண்டு பின்னங்கால்களிலும் எந்த அதிர்வும் ஏற்படவில்லை. ஏற்கனவே ஏற்பட்ட சந்தேகத்தை உறுதி செய்ய பின்னங்கால்களின் விரல்களில் பலமாக கிள்ளினான். எதிர்பார்த்தது போல் எந்த அதிர்வும் இல்லை. ஆனால் முன்னங்கால்களின் விரல்களில் கிள்ளிய போது உடனே கால்களை உள் இழுத்து வலியின் உணர்வுகளை காட்டியது.

‘இந்த நாயின் முதுகு தண்டில் முறிவு ஏற்பட்டதால் பின்னங்காலில் உணர்வு இல்லை’ என்றான் சுந்தரம்பிள்ளை. அவனது மனதில் ஒரு பெருமிதம் நிழலாடியது. ரிமதியின் தவறான செய்கை இங்கு வெளிவந்துவிட்டது.

‘இது ரிமதியின் வேலை. அப்பிடியே அவரிடம் பொறுப்பு கொடுப்போம்’. என்றான் சாம்.

‘இன்று மாலை ஐந்து மணிக்குத்தான் ரிமதி வேலைக்கு வருகிறான். இந்த வாட் ரவுண்டை முடித்து விட்டு எக்ஸ்ரே எடுப்போம்’.

வாட் ரவுண்டை முடித்ததும் அந்த புளூ கீலருக்கு மயக்க மருந்தை கொடுத்து தள்ளு வண்டியில் தூக்கி வைத்து தள்ளியபடி இருவரும் வந்தபோது எதிரே வந்த காலோசிடம் ‘இது ரிமதியின் வேலை. முதுகெலும்பு முறிந்த நாய்க்கு கால்களை பொருத்தி இருக்கிறார்’ என்று சாம் கூறியதும் ‘அப்ப இதுவே ரிமதி பாத்தோலியஸின் பெரிய சாதனையாக இருக்கும்’ என்று சொன்ன போது காலோஸுக்கு சிரிப்பை அடக்க முடியவில்லை. ஆனாலும் முகத்தை சீரியசாக வைத்துக் கொண்டு ‘எக்ஸ்ரேயை எனக்கு கொண்டு வரவும்’ என சொல்லி விட்டு போனான்.

எக்ஸ்ரேயை எடுத்ததும் தானே அதை டெவலப் பண்ண இருட்டறையுள் சென்றான் சுந்தரம்பிள்ளை. இரண்டு முறை எக்ஸ்ரே எடுத்த போதும் அந்தப் படம் அதிக துலக்கமாக இருக்கவில்லை. ஒன்று அதிக கறுப்பாகவும் மற்றையது வெள்ளையாகவும் இருந்ததால் அவற்றை எறிந்து விட்டு மூன்றாவது முறையாக டெவலப் பண்ணியதும் முதுகெலும்பில் நெஞ்சுக்கும் இடுப்புக்கும் இடையில் உள்ள ஏழு நாரி எலும்புகளில் மேலிருந்து மூன்றாவதுக்கும் நாலாவது முதுகெலும்புக்கும் இடைப்பகுதி சிறிது விலகி இருந்தது.அந்த இடத்தில் எலும்புக்கிடையில் இருக்கும் டிஸ்க்கெனும் பகுதி வெளித்தள்ளி இருந்தது. இதைப் பார்த்ததும் ரிம்மின் தவறால் அவன் அவமானப்படப் போவது சுந்தரம்பிள்ளைக்கு மனதுக்கு மகிழ்ச்சியை கொடுத்தது. பழி வாங்கும் மனித உணர்வு மிக அடிப்படையான தொன்று. சாதாரண மனிதர்களில் இருந்து படித்தவர்கள் என இந்த உணர்வில் வேற்றுமையில்லை. கூனியின் பழிவாங்கும் உணர்வு இராமாயணத்தை தந்தது. இதே உணர்வு சுந்தரம்பிள்ளைக்கு தோன்றியதில் வியப்பில்லை. ஆனால் நாகரீகமடைந்த சமூகத்தில் அதற்கு வேறு காரணங்களும் காட்டப்படவேண்டும்.

இவ்வளவு விரைவில் ரிமதி பாத்தோலியஸ்சுடன் ஒரு குத்து சண்டையில் ஈடுபட வேண்டும் என சுந்தரம்பிள்ளை நினைத்திருக்கவில்லை. அறிவுசால் தொழில் செய்பவர்கள் தொடர்ச்சியாக அறிவை விருத்தி செய்வது அவசியம். அதிலும் மருத்துவ சிகிச்சை விடயங்களில் ஈடுபடுபவர்களுக்கு கட்டாயமாக இருக்க வேண்டிய ஒரு நினைப்பு - நாம் எப்பொழுதும் எல்லாவற்றையும் தெரிந்து கொண்டவர்களில்லை. தொடர்ச்சியாக புதியவற்றை அறிந்து கொள்ளுதல் அவசியம். மற்றவர்களிடம் இருந்து அறிந்து கொள்ள எப்பொழுதும் வாய்ப்பு உண்டு. இதைத்தான் இரண்டாவது கருத்தை அறிந்து கொள்ளுதல் என்று மருத்துவத்தில் கூறுவார்கள். பத்துக்கு மேற்பட்ட மிருகவைத்தியர்கள் வேலைசெய்யும் இடத்தில் இரண்டாவது கருத்தை ஒருவரிடம் கேட்டு அறிந்து கொள்ளும் வாயப்பை பயன்படுத்தாத தனது செயலுக்கான விலையை ரிமதி பாத்தோலியஸ் கொடுக்கும் நேரம் வந்தது. அவனது கெட்டகாலம் எனது வடிவில் வந்துள்ளது என சிவா சுந்தரம்பிள்ளையை நினைக்க வைத்தது

ஒபரேசன் செய்து கொண்டிருக்கும் போது முதுகெலும்பு பிரச்சினையை சுந்தரம்பிள்ளை எழுப்பியபோது அதைப் பற்றி பேச ரிம்மினது கர்வம் இடம் கொடுக்கவில்லை. கால்களில் உருக்கு

பிளேட்டை வைத்து எலும்பை பொருத்திய பின் அதை எக்ஸ்ரேயில் எடுத்த போது முதுகெலும்பையும் எக்ஸ்ரே எடுத்திருக்கலாம்?

கர்வமா அல்லது அலட்சியமா?.

எதுவாக இருந்தாலும் விலை கொடுக்க வேண்டியிருக்கும். தவறுகள் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. விதைத்த பயிர்போல் அவை அறுவடைக்கு வந்தே தீரும். அவற்றை அலட்சியம் செய்வது இந்த தொழிலில் நன்மை பயக்காது.

இந்த நாயின் கால்களில் உணர்வு இல்லை என்ற தகவல் உரிமையாளருக்கு அறிவிக்கவேண்டும். அத்துடன் ஒபரேசன் செய்ய முன்பு இதை ஏன் தெரிந்து கொள்ளவில்லை என்பதற்கு திருப்திகரமான காரணம் உரிமையாளருக்கு தெரியப்படுத்த வேண்டும். ஒப்பரேசன் செய்த ரிமதி பாத்தோலியஸ்சின் தவறாக இருந்தாலும் இறுதியில் வைத்தியசாலையே பொறுப்பேற்க வேண்டும்.

இந்த பிரச்சினையை சுந்தரம்பிள்ளை எதிர் நோக்கிய போது அனுபவசாலியான சாமின் கருத்து உதவிக்கு வந்தது. 'தலைமை வைத்தியரான காலோஸ் சேரத்திடம் விட்டு விடுவோம். காலோஸ்சுக்கு இது அதிர்ஸ்டவசமாக கிடைத்த ஆயுதம். ஏற்கனவே ஸ்ரிவனும் ரிமதியும் பலரிடம் கையெழுத்து கடிதம் காலோஸுக்கு எதிராக மறைமுமாக சேகரித்து வருகிறார்கள். எதிர்வரும் செவ்வாய்க்கிழமைகளில் நடக்கவிருக்கும் போட் மீட்டிங்கில் அவற்றை சமர்பிப்பதற்கு தயாராகிக் கொண்டிருக்கிறார்கள் என்ற விடயத்தை ஏற்கனவே பலர் காலோஸின் காதில் போட்டு வைத்திருக்கிறார்கள்'.

'சாம் இந்த யுத்தத்தில் யார் தோற்றாலும் அதன் விளைவாக பலர் காயமடையப் போகிறார்கள். என்பதுதான் முக்கியமான விடயம்' என சுந்தரம்பிள்ளை கூறிவிட்டு, நாயை சாமுடன் கூட்டுக்கு அனுப்பி விட்டு எக்ஸ்ரேயை கொண்டு காலோசை பார்க்க சென்றான். நான் இங்கு வந்து சில நாட்களில் இந்த யுத்தத்தில் பங்காளியாக இருக்க வேண்டியதாக உள்ளது. இங்கே பாண்டவர்கள் நல்லவர்கள் துரியோதனர்கள் கெட்டவர்கள் என்பது போல் பிரித்து பார்க்க முடியாது. அப்படியான கருப்பு வெள்ளைத் தன்மை இதிகாசத்துக்கு சரியாக இருக்கலாம். இந்த நிகழ்காலத்தில் அப்படியான நிலை இல்லை. இரண்டு பக்கத்திலும் நல்லவர்களும் கெட்டவர்களும் கலந்தே இருப்பார்கள். கெட்டவர்களில் நல்லதும்

கெட்டதும் கலந்தே இருக்கிறது. இதேபோல் நல்லவர்கள் என கருதப்படுபவர்கள்; வாழ்க்கையிலும் நுழைந்து பார்த்தால் இருள் சூழ்ந்த பகுதி உள்ளது. இதை மேலும் நுட்பமாக அணுகும் போது ஒவ்வொருத்தரிலும் நல்லதும் கெட்டதும் கலந்து இருக்கும் என்பதே நவீன காலத்தில் பொருத்தமானது. சுந்தரம்பிள்ளையின் குறுகிய வாழ்நாள் காலத்தில் இலங்கை, இந்தியா மற்றும் அவுஸ்திரேலியாவின் பல பாகங்களிலும் வேலை செய்தபோது அறிந்து கொண்ட உண்மை.

தலைமை வைத்தியரான காலோஸ் சேகரத்தைத் தேடிய போது வைத்தியசாலையின் செயலாளரின் அறையில் இருப்பதாக அன்ரூ மூலம் அறிந்து அங்கே சென்று கதவைத் தட்டிய சுந்தரம்பிள்ளைக்கு அதிர்ச்சி காத்திருந்தது. அங்கு அந்த வைத்தியசாலையை கொண்டு நடத்தும் முகாமைத்துவத்தின் செயலாளர் ரொன் ஜொய்ஸ்ஸு, கணக்காளர் ஜோன் லிஸ்மோரும் இருந்தனர்.

‘நான் பின்பு சந்திக்கிறேன்’ என காலோசை பார்த்து சொல்லிவிட்டு வெளியேற எத்தனித்த போது ‘பிரச்சினையில்லை மிஸ்டர். வந்த விடயத்தை சொல்லும்’

‘இந்த நாயின் முதுகெலும்பில் உள்ள டிஸ்க் விலகி இருக்கிறது. இரண்டு முழங்கால் சில்லில் அதிர்வு இல்லை. உணர்வு இல்லாத விடயத்தை உரிமையாளருக்கு சொல்லவேண்டும். ஆனால் இந்த நாயை தொடர்ச்சியாக பார்த்து, எலும்பு ஒப்பரேசன் செய்தது ரிமதி பாத்தோலியஸ். இந்த விடயத்தை நான் செய்ய விரும்பவில்லை. மேலும் ஒரு வைத்தியர் இதை பரிசோதித்து உறுதிப்படுத்த வேண்டும் என விரும்புகிறேன்’.

‘இது ரிமதி செய்த அடுத்த வேலை ரொன்’ என ஒரு அட்டகாசமான சிரிப்புடன் ஜோசே சொன்ன போது சுந்தரம்பிள்ளைக்கு புரியவில்லை ‘வேறு என்ன வேலை செய்திருக்க முடியும்?’

‘நான் வருட இறுதியில் வேலையில் இருந்து ஓய்வு பெற்று பேரப் பிள்ளைகளுடன் செலவிடுவோம் என நினைத்துக்கொண்டிருக்கிறேன். அது வரையில் சிலமாதங்கள் நிம்மதியாக கோப்புக்களை பார்த்து காலத்தை கடத்துவதற்கு நினைத்துக்கொண்டிருந்தேன். ஒன்று மாறி ஒன்று என பிரச்சினை வந்து கொண்டிருக்கிறது’. என்றார் அந்த செயலாளராகிய ரொன் ஜொஸ்.

அப்பொழுது மேசையில் இருந்த கோப்பு ஒன்றை கையில் தூக்கி 'இதுதான் எனக்கெதிராக ரிமதியும் ஸ்ரிவனுமாக சேர்ந்து இந்த வைத்தியசாலையில் உள்ள சிலரிடம் இருந்து தயாரித்த கடிதக் கோவை. இதனால்தான் வேலைக்கு சேர்ந்த அன்று எந்த வேலைத்தல அரசியலிலும் தொடர்பு படவேண்டாம் என எச்சரித்தேன்'.

ஏற்கனவே ரிமதியினால் காலோஸின் அணிக்கு தள்ளிவிடப்பட்ட விடயம் இவர்களுக்குத் தெரியாது. இந்த நாயின் கருணைக் கொலையின் பின் ரிமதி என்னை எவ்வளவு வெறுப்பான் என்பது மனதுக்குள் நினைத்துப் பார்த்தபோது சிறுவயதில் சுந்தரம்பிள்ளையின் தாத்தா கூறிய ஒரு பழைய பாட்டின் சிறுபகுதி நினைவுக்கு வந்தது. 'வேதியரும் கோழிகளும் வேசியரும் வைத்தியரும் ஒருவருக்கொருவர் ஒற்றுமையாக இருக்கமாட்டார்கள் என்ற கருத்தில் சொல்லியது. இது இக்காலத்தில் இந்த பண்பாடு நாகரீகம் வளர்ந்த மெல்பன் நகரில் அந்தப் பாட்டின் பொருள் புரிந்தது. விஞ்ஞானம், நாகரீகம் என மனித குலம் எவ்வளவு முன்னேறினாலும் மனிதர்களின் அடிப்படைக்குணங்களான சாம, பேத, குரோதங்கள் மாறுவதில்லை.

'இதை இரண்டு விதமாக செய்யலாம் ரொன். இதில் உப்பு சப்பில்லை என இந்த பெட்டிசனை தூக்கி குப்பைக் கூடையில் போடலாம். அதற்கு உமக்கு அதிகாரமிருக்கு. அதைத்தான் நான் செய்வேன். அப்படி இல்லையென்றால் முகாமைத்துவ கூட்டத்தில் இதை சமர்பித்து அவர்களது முடிவுக்கு விடலாம். அவர்கள் தேவையெனில் காலோசை அழைத்து விளக்கம் அளிக்கும்படி கேட்டுக்கொள்ள முடியும்' எனக் கூறிவிட்ட ஜோன் லிஸ்மோர் தனது தடித்த மீசையைத் தடவியபடி கதிரையை விட்டு எழுந்தார்.

இப்பொழுது ஜோன் லிஸ்மோர் எந்தப் பக்கம் என சுந்தரம்பிள்ளைக்கு புரிந்தது. ஆனால் அறுபத்தைந்து வயதான ரொன் ஜொய்ஸ் என்ன செய்யப் போகிறார் என்பதை அவரது முகமோ உடல் மொழியோ காட்டிக்கொடுக்கவில்லை. அவரது வழுக்கை விழுந்த தலையும் முழுமையாக சவரம் செய்யப்பட்ட முகம் புதிதாக குயவன் ஒருவனால் வனையப்பட்ட பானை போல இருந்தது. அந்தப் பானை முகத்தில் மூக்கு கண்ணாடி அணிந்து கிறீம் நிற கம்பளி சுவெட்டர் அணிந்திருந்தார். அவரது வயிறு நிறைமாத பெண்ணின் வயிறு போல் இருந்தது மட்டுமல்ல மேலும் கீழும் அசைந்த விதம் அவர் சிரமத்துடன் பிராணவாயுவை

தேடுபவராக காட்டியது. இவர் ஓய்வு பெற்றாலும் பலகாலம் பேரக்குழந்தைகளோடு வாழப்போகிறவராக தெரியவில்லை.

‘எனக்கு இன்னும் சிந்திக்க சில நாட்கள் இருக்கின்றன’ எனக் கூறிவிட்டு இப்பொழுதுதான் சுந்தரம்பிள்ளையை பார்த்தார்.

அவரது பார்வை உனக்கு என்ன வேண்டும் என்பது போன்று இருந்தது. இவ்வளவு நேரமும் சுந்தரம்பிள்ளை காலோசிடம் மட்டும் பேசினாலும் அந்த சிறிய அறையில் இருந்தவர்கள் எல்லோருக்கும் பேசிய விடயம் புரிந்திருக்கும். சுந்தரம்பிள்ளை இதை இவருக்கு மீணடும் திரும்ப சொல்லவேண்டுமா என நினைத்துக்கொண்டிருந்த போது ‘இது ரிமதியின் வைத்திய சாகசம். முதுகெலும்பு முறிந்த நாய்க்கு இரண்டு கால்களில் ஐந்து மணி நேரமாக ஒபரேசன் செய்திருக்கிறார். இதை என்ன செய்வது என இந்த புதிய வைத்தியரான சிவா வந்து என்னிடம் ஆலோசனை கேட்கிறார். இந்த நாயை கருணைக்கொலை செய்வதுதான் ஒரே வழி. ஆனால் இதை நான் செய்யப் போவதில்லை. எனக்கு அடுத்தபடியாக அதிக காலம் இங்கு வேலை செய்யும் மாக்கிரட் ஓடயனிடம் அந்த நாயை மீண்டும் பரிசோதித்து பார்த்து விட்டு மேற்கொண்டு செய்ய வேண்டியதை செய்ய சொல்லப் போகிறேன்’ என காலோஸ் சேரம் வெளியேறினார். அவரைத் தொடர்ந்து ‘அது நல்லது’ என ஆமோதித்த படி ஜோன் லிஸ்மோர் வெளியேறிய போது அவர்களை பின் தொடர்ந்தான் சுந்தரம்பிள்ளை.

□ □ □

**கா**லோஸின் மனதில் இன்று பல விடயங்கள் ஓடிக்கொண்டிருந்தன. இன்று இரவு நண்பன் ஒருவனின் விருந்துக்கு போக வேண்டும் எனவே விரைவாக வேலையில் இருந்து வரும்படி மனைவியின் கட்டளை நீதிமன்றத்தின் பிடியாணை போல் இருந்தது. இதேவேளையில் இன்று இரவு ஒன்பது மணிக்கு மெல்பன் விமான நிலையத்தில் பழைய தோழி மரியா வந்து இறங்குகிறாள். போர்த்துக்கல்லில் இருந்து படிக்கும் காலத்தில் நண்பியாக இருந்த மரியா சிலமாதங்கள் மெல்பனில் உள்ள உறவினருடன் தங்கியிருக்க வருகிறாள். இன்றைக்கு அவளை பார்க்கவேண்டும். அவளது நினைவுகள் காலேசின் உடலில் புது இரத்தத்தை ஏற்றி கதகதப்பை உண்டாக்கியது. மனதில் அவளது நினைவுகள் பட்டாம்பூச்சியாக சிறகடித்தது. புதினைந்து வருடத்துக்கு முன்பு அவளுடன் லிஸ்பன் பல்கலைக்கழகத்தில் சிலகாலம் பழகி தன்னை மறந்து திரிந்தகாலம் வாழ்க்கையின் வசந்தகாலம். எந்த நிபந்தனையில்லாமல் இருந்தது

அவளது நட்பு, ஏற்கனவே தீமோரில் காதலியாக இருந்த லுயிசா ஊரில் இருந்து வந்ததால் மரியாவின் தொடர்பு துண்டிக்கப்பட்டது.

மரியாவின் தொடர்பு ஒரு விதமான காட்டாறு போன்ற உடலெங்கும் பாய்ந்து ஓடிய காம உணர்வு. அது திடீர் என நிறுத்தப்பட்டது, சிறு குழந்தையிடம் காகம் தட்டிப்பறித்த பட்சணமாக நெஞ்சுக்கு நிறைவாக இல்லை. பிரிந்த சில மாத காலத்தில் மரியா ஒரு காலோஸின் நண்பனோடு பழகி அவனைத் திருமணம் செய்து கொண்டாள். காலோசும் லுயிசாவும் அவுஸ்திரேலியாவுக்கு வந்தார்கள்.

பதினைந்து வருடகாலத்தின் பின் மீண்டும் அவளது குரலை திடீரென தொலைபேசியில் கேட்டபோது இன்ப அதிர்ச்சியாக இருந்தது. எதுவும் சொல்லாமல் 'நான் மெல்பனுக்கு வருகிறேன். என்னை சந்திப்பாயா?' எனக்கேட்டு விட்டு தான் வரும் திகதியையும் விமான நேரத்தையும் சொல்லிவிட்டு தொலைபேசியை வைத்து விட்டாள்.

கடந்த சில மாதங்களாக ஸ்ரீவனாலும் ரிமதி பாத்தோலியசாலும்; இந்த வைத்தியசாலை நிர்வாகத்துகக்கு ஏற்படும் தொல்லைகள் மிசேலுடன் ஏற்பட்ட விவகாரம் எல்லாவற்றையும் தனது தனியான பிரச்சினையாக எடுத்து ஆத்திரப்பட்டுக் கொண்டிருக்கும் ஜோசேக்கு மரியா வருவது சந்தோசமான மாற்றமாக, மருந்தாக இருந்தது. இந்த மாற்றம் ஒரு வலியால் துடிக்கும் ஒருவனுக்கு வலி நிவாரணமாக இருந்தது. காமத்தை விட கொடிய வியாதி உலகில் இல்லை. ஆனால் காமம் இல்லாத உலகு எவ்வளவு வெறுமையானது என நினைத்த போது, சிறு துணியும் அற்ற நிர்வாணமான தேவதையாக மரியா வந்து பிரித்தானிய நாட்டு விமானத்தில் இறங்குவதாக தெரிந்தது. ஒலிவ் நிறத்தில், இத்தாலிய பளிங்கில் செதுக்கிய உடலுடன், காற்றில் பறக்கும் கரிய கூந்தலுடன் கொஞ்சம் சராசரிக்கு சிறிதான முலைகளை வலது கையாலும் மறைத்தபடி இடது கையால் இடைக்கு கீழ் அம்மணத்தை மறைக்க மறு கையால் போராடி தோற்றபடி வந்து இறங்கி வந்தாள். அவளது யோனியை மறைத்த கரிய கேசங்களை அவளது கைகளால் மறைக்க முடியவில்லை.

பதினைந்து வருடங்களுக்கு முன்பு லிஸ்பனில் அவளோடு நட்பாக இருந்த அந்த சம்மர் காலத்தில் பல தடவை நீச்சலுடை அணிவதற்கு யோனி மயிரொதுக்க சிகையலங்காரத் கடைக்கு அவளை கொண்டு சென்றதும், ஒருநாள் கடற்கரை வீதியில் இருந்த

சிறிய மூலைக் கடையில் அவள் பச்சை குத்திக்கொண்ட கருந்தேள், அவளது இடது தொடையில் பளிச்சென்று தெரிந்தது.

‘காலோஸ்’ என சுந்தரம்பிள்ளை தோளில் தட்டினான்.

‘நல்லதொரு கனவை தொலைக்கப் பண்ணிவிட்டாய். சிலகணத்தில் அவளை அணைத்துக் கொண்டு காற்றிடை நீராவியாக கலந்து கொள்ள தயாராக இருந்தேன். என்ன வேணும்.?’ படபடப்பாக கேட்டாள்.

‘நீ பகல் கனவு காண்கிறாய். அங்கே இந்த முதுகெலும்பு முறிந்த நாயை சாம் றொலியில் வைத்துக் கொண்டிருக்கிறான். நான் என் செய்ய?’

‘நான் சொன்னதென்று இந்த நாயை பரிசோதிக்க சொல்லி மார்கிரட்டிடம் சொல்லு’

‘அது உமது வேலை. தயவு செய்து மார்கிரட்டிடம் வந்து சொல்லவும்’

‘உன்னோடு பெரிய பிரச்சினை’ என சலித்துக் கொண்டு இருவருமாக அந்த வைத்தியசாலையின் இடது பக்கத்தில் இருந்த பரிசோதனை அறைகளில் முதலாவதாக இருந்த அறைக்கதவை இரண்டு முறை தட்டிவிட்டு உள்ளே சென்றனர்.

அந்த அறையின் பரிசோதனை மேசையில் ஒரு ஜேர்மன் செப்பேட் நாய் படுத்திருந்தது. அந்த நாய் மயக்கத்தில் இருந்தது போல் அசைவற்று இருந்தது. இரண்டு கண்களும் அகலமாக திறந்திருந்தது. மேசையின் அருகில் அந்த நாயின் சொந்தக்காரப் பெண் சிரித்தபடி மார்க்கிரட் அருகே நின்று கொண்டிருந்தார்

மார்க்கிரட்டை சிலமுறை எதிர்ப்பட்ட இடங்களில் பார்த்து ஹலோ சொல்லி இருந்தாலும் சுந்தரம்பிள்ளை அதிகம் பேச வாய்ப்பு கிடைக்கவில்லை. பேசிய ஒரு சில வார்த்தைகளின் தொனியில் இருந்து அயர்லாந்தில் இருந்து வந்த மிருக வைத்தியர் என நினைக்க வைத்தது. வழக்கமாக பெண்கள் சம்பந்தபட்ட விடயங்களை கேட்காமலே அள்ளி வழங்கும் வள்ளலான சாமும் மார்க்கிரட்டை பற்றி கூறாததால் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு இருக்கவில்லை.

மார்கிரட்டை பார்க்கும் போது அந்த வயது பெண்களுக்குரிய எந்த அலங்காரமுமில்லாமல் டெனிம் பாண்டிலும், மேல் உடலில் நீல நிறத்தில் சாதாரண சுவெட்டரும் அணிந்திருந்தாள். முப்பத்தைந்து வயதிருக்கும். தலையை ஒட்ட கிராப் பண்ணியிருந்தாள். பல நரைத்த மயிர்கள் தலையில் தெரிந்தன. எந்த ஒரு ஒப்பனையோ அல்லது பாவனையோ அற்று இருந்தது அவளது தோற்றம்.

'என்ன காலோஸ்?' என விளித்தாள்.

'சிவா ஒரு எக்ஸ்ரேயை வைத்துக் கொண்டு என்னிடம் அபிப்பிராயம் கேட்கிறார். இந்த நாய் ஏற்கனவே எனது நண்பர் டாக்டர் ரிமதி பாத்தோலியஸால் ஒப்பிரேசன்; செய்யப்பட்டது. தற்போது இங்கு நிலவும் அரசியல் சூழ்நிலையில் நான் இதில் தலையிட விரும்பவில்லை. எனக்கு அடுத்த சீனியர் நீர்தான் மார்கிரட். இந்த பொறுப்பை உன்னிடம் ஒப்படைக்கிறேன்' என சொல்லிவிட்டு வெளியேறினான்.

'நான் பார்த்துக் கொள்கிறேன். சிவா, சில நிமிடம் அவகாசம் வேண்டும்' என்றாள்.

சுந்தரம்பிள்ளையை அந்த அறையில் விட்டு விட்டு காலோஸ் வெளியேறினார்.

மேசையில் கிடந்த அந்த சிவப்பும் கருப்புமான செப்பேட் நாய்க்கு கழுத்து, இடுப்பு கால்கள், என பல இடங்களில் சிறிய ஊசிகள் குத்தப்பட்டிருந்தன. அந்த நாய்க்கு பக்கத்தில் நின்ற எஜமானி நாயின் முகத்தை தடவினார். மார்க்கிரட் 'இனனும் சில நிமிடத்தில் ஊசிகளை எடுத்து விடுவேன்' என்றாள்.

மார்க்கிரட் செய்வது அகியுபங்சர் என்ற சீன மருத்துவ முறை என்று சுந்தரம்பிள்ளைக்கு புரிந்தாலும் 'என்ன நோய்க்காக அக்கியுபங்சர் செய்கிறீர்கள்? என்றான்.

'ஷீபாவுக்கு தற்பொழுது பத்து வயது. இப்பொழுது ஆத்திரையிற்றிஸ் என்ற முடக்கு வாதம் வந்து விட்டது. முடக்கு வாதத்திற்கு அக்கியுபங்சர் குணப்படுத்தும் என்பது எனது அனுபவம்'.

'எத்தனை முறை செய்யவேண்டும்?'

‘வாரத்துக்கு ஒரு தடவையாக மூன்று வாரம் செய்துவிட்டு அதன் பின் தேவைக்கு ஏற்றபடி செய்தால் போதும்’ எனக் கூறிக்கொண்டு நாயின் இடுப்பிலும் முதுகுப்பகுதிலும் இருந்த ஊசிகளை அகற்றினாள்.

ஊசிகளை அகற்றியதும் ஷீபா உறக்கத்தில் இருந்து விழித்தது போல் எழுந்ததும் மார்கிரட்டின் உதவியுடன் மெதுவாக தரையில் இறங்கி மிகவும் நாகரீகமாக தனது ஏஜமானியின் அருகே நின்று, தன்னை சுற்றியுள்ளவர்களைப் பார்த்தது. சுந்தரமூர்த்திக்கு வியப்பாக இருந்தது. இந்த ஷீபாவின் நடை பார்வை பாவனை எல்லாம் பார்ப்பதற்கு மேன்மையாக இருந்தது.

வடஆசியாவில் ஒரு காட்டுப்பகுதியில் பதினைந்தாயிரம் வருடங்களுக்கு முன்பு வேட்டையாடும் மனிதன் தனக்கு வேட்டைக்கு உதவியாக ஓநாய் இனத்தில் இருந்து வந்த காட்டு நாயை வளர்த்து தனது தேவைக்கு மட்டுமல்ல, உற்ற தோழமைக்கும் வளர்த்தான். தொடர்ச்சியான வளர்ப்பும் பயிற்சியும் அவைகளது மரபணுவில் மாற்றத்தை உண்டு பண்ணி, காட்டு மிருகத்துக்கு உரிய தன்மையை இழப்பது மட்டுமல்லாது மனிதர்களின் பல தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு ஏற்ப பல்வேறு வடிவங்கள், குணங்கள் என புதிய வர்க்கங்கங்களாக உருமாற்றமடைந்துள்ளன. நாய் வர்க்கங்களின் பரிணாம வளர்ச்சி மனிதர்களின் படைப்புத்திறனுக்கு மகத்தான சாட்சியம்.

ஆவலை அடக்கமுடியாமல் ‘ஷீபாவை யார் பயிற்சி கொடுத்தது?’

‘ஷீபா விக்ரோரிய பொலிசில் பல வருடங்கள் சேவை செய்துவிட்டு மூட்டுவாதம் காரணமாக இரண்டு வருடத்துக்கு முன்பு ஓய்வு பெற்றது. அப்பொழுது நான் தத்தெடுத்தேன்’ என்றார் அந்தப் பெண்.

நோய் வந்த நாயை தத்தெடுத்து அதற்கு வைத்தியம் செய்யும் அந்த பெண்ணை ‘மிகவும் நல்ல வேலை செய்கிறீர்கள்’’ என பாராட்டியபோது அந்தப் பெண் ‘எனது அதிஸ்டம் ஷீபா கிடைத்தது. இதற்கு முன்பு மூன்று ஜேர்மன் செப்பேட் நாய்களை வளர்த்தேன். ஆனாலும் அவையொன்றும் ஷீபாவுக்கு அருகில் வரமாட்டா’ என கூறிக்கொண்டு அந்த அறையை விட்டு வெளியே சென்றார்.

‘சிவா எக்ஸ்ரேயை பார்ப்போம் ‘என வாங்கி பார்த்து விட்டு உதட்டை பிதுக்கியபடி சிறிதுநேரம் யோசித்து விட்டு

எதுவும் பேசாது அந்த அறையின் பின் கதவை திறந்து கொண்டு பார்மசி வழியே வெளியே சென்ற மார்கிரட் வெகு வேகமாக சுந்தரம்பிள்ளையிடம், எதுவும் பேசாமல் பரக்க பரக்க அந்த கொரிடோரால் நடந்தார். நடக்கும் போது ஏதோ சில வார்த்தைகள் அவரது உதட்டை விட்டு வெளிவந்த போதும் அவை காற்றில் கலந்துவிட்டன. அந்த அயர்லர்து ஆங்கிலம் பின்தொடரும் சுந்தரம்பிள்ளைக்கு புரியவில்லை. நேர் எதிரே நின்று பேசும் போது உதடுகளின் அசைவை வார்த்தைகளுடன் இணைத்து புரிந்து கொள்ளமுடியும். பின்னால் தொடரும்போது அது முடியாது.

இருவரும் நாய்க்கூட்டை அடைந்ததும் மார்கிரட் சாமின் உதவியுடன் அந்த நாயின் பின்னங்கால்களை தட்டியும் அழுத்தியும் பரிசோதித்து விட்டு ‘இது உண்மையில்; பெரிய முட்டாள்தனம். சாம், உரிமையாளரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு எனக்கு தா’ எனக் கூறினாள்.

‘இந்த நாயை அவசரப்பட்டு ஒபரேசன் செய்தது தவறு. நாலு நாட்கள் வீணாக இந்த நாய் வேதனையடைந்திருக்கிறது. உடனடியாக கருணைக்கொலை செய்திருக்க வேண்டும்’ என்ற போது உரிமையாளரின் தொடர்பை சாம் ஏற்படுத்தி கொடுத்தான்.

‘மிஸ்டர் தொம்சன் உங்களது நாய்க்கு முள்ளந்தண்டில் காயம் ஏற்பட்டிருக்கிறது. இதனால் கால்களை ஒபரேசன் செய்தும் பிரயோசனம் இல்லை. எங்களுக்கு கருணைக்கொலை செய்ய அனுமதி கொடுக்கவேண்டும் என சொல்லி அந்த அனுமதியை பெற்று விட்டு அந்த நாய்க்குரிய கோப்பில் அதை எழுதி கையெழுத்து வைத்து விட்டு ‘சிவா நீங்களே அதை செய்யுங்கள்’ என சொல்லிட்டு சென்றாள்.

மார்கிரட் சென்ற அந்த கதவு வழியால் நுழைந்த கொலிங்வூட் உடலை நீட்டி வில்லாக வளைத்து வாலை கொடிக்கம்பம்போல் நேராக்கி தினவெடுத்து விட்டு ‘தம்பியின் கதை கந்தல். ரிமதி கடித்து குதறப் போகிறான்’ என்றது. அதை பொருட்படுத்தாமல் சுந்தரம்பிள்ளை தனது வேலையில் ஈடுபட்டு அந்த நாயின் வாழ்க்கைக்கு முற்றுப் புள்ளி வைத்தான்.

ஏற்கனவே போர் பிரகடனப்படுத்தப் பட்டிருப்பதால் தவிர்க்க முடியாது. இந்த விடத்தில் அவமானப்படும் ரிமதியின் ஆத்திரத்துக்கு ஆளாவது நிச்சயமானது. இதை கொலிங்வூட் சொல்லித்தான் புரியவேண்டும் என்பதில்லை.

## 11

டாக்டர் காலோஸ் சேரத்தை தலைமை வைத்தியர் பொறுப்பில் இருந்து நீக்குவதற்காக பலர் முழு மனதாக விரும்பினார்கள். பத்து வருடமாக தலைமை வைத்தியரை திட்டமிட்டு வேலை செய்து அவர் மீது குற்றச்சாட்டுகளை வைத்துத்தான் வெளியேற்ற முடியும். பலருக்கு அந்த சதிச் செயலில் ஈடுபடுவது விருப்பமில்லை. விரும்பியவர்கள் அதை பகிரங்கமாக வெளிக் காட்ட விரும்பவில்லை. இது புதியதல்லவே? இந்த பொதுவான மனித சுபாவம் வைத்தியசாலையில் வேலை செய்பவர்களிடம் இருந்தது ஆச்சரியமானதல்ல.

இந்த நிலையில் யாராவது ஒருவர் இதற்கான செயல்களை முன்னெடுத்து செல்லவேண்டும். அவர் திறமையானவராகவும் இருக்கவேண்டும். குருஷேத்திரத்தில் தளபதியாக பீஷ்மர் நியமிக்கப்பட்டார். அதேபோல இங்கு தளபதி பொறுப்பு வைத்தியசாலையில் நேர்சாக பல வருடங்களாக வேலை செய்யும் ரீவன் ஸ்ரெயின் மேல் சுமத்தப்பட்டது. ரீவன், டாக்டர் காலோசை வெறுக்கும் ஒருவன். அத்தோடு இப்படியான வேலையை விரும்பி செய்பவன். அவனுக்கு தொழிற் சங்க பிரதிநிதியாக அந்த வைத்தியசாலையில் வேலை செய்வது வசதியாகி இருந்தது. பலரை சந்தித்து காலோஸ் சேரத்தின் தவறுகளை சொல்லி அவரை இந்த வேலையில் இருந்து விலக்குவது இந்த வைத்திய சாலையின் முன்னேற்றத்திற்கு எவ்வளவு முக்கியமானது எனவும் அதே நேரத்தில் தனிப்பட்ட முறையில் எந்த கோபமும் காலோஸ் மீது இல்லை என அழகாக பேசி இந்த கழுத்தறுப்பு வேலையை முன்னெடுத்தான். மற்றவர்களை போல் சம்பளத்துக்கு வேலை செய்யும் ஒருவராக ரீவன் தன்னை காட்டிக் கொள்வதில்லை. சிறுவயதில் வைத்தியசாலையில் சேர்ந்து வேலை செய்வதுடன் ஒருவிதமான ஆத்மார்த்த உறவுடன் வேலை செய்யும் ரீவனை தனிப்பட்ட ரீதியில் வெறுப்பவர்கள் கூட வேலையில் குறை

சொல்ல துணியமாட்டார்கள். இந்த வைத்தியசாலையில் அவன் வைத்துள்ள விசுவாசமே அவனுக்கு காலோஸ் மேல் அளவு கடந்த வெறுப்பை உருவாக்கியது.

ரீவன் பதினேழு வயதிலே இந்த இடத்தில் வேலைக்கு சேர்ந்து இப்பொழுது பதினெட்டு வருடமாக இந்த வைத்தியசாலையில் வேலை செய்கிறான். வைத்தியசாலையில் அதிக காலம் வேலை செய்யும் ரீவன் ஒரு யூத இனத்தை சேர்ந்தவன். அவனுக்கு ஒபரேசன் உபகரணங்கள் மற்றும் எக்ஸ்ரே மெசினுகளை பற்றி சங்கதிகள் தலை கீழாக தெரியும். எந்த உபகரணம் வேலை செய்யாத போதும் எல்லோருக்கும் ரீவனது தேவை ஏற்படும். முக்கியமாக இளம் பெண் வைத்தியர்களுக்கு ஆரம்ப காலத்தில் உபகரணங்களால் சங்கடங்கள் ஏற்படும் போது அவனது உதவி தேவைப்படும்.

ரீவன் தொழில்நுட்ப அறிவுடன் அனுபவத்தாலும் பல வைத்திய விடயங்களை அறிந்து வைத்திருப்பதால் லைசென்ஸ் பெறாத மிருக வைத்தியரைப் போல தொழில்ப்பட்டான். இந்த விடயங்களால் காலோஸ்சுக்கும் சாமுக்கும் ரீவனைக் கண்ணிலே காட்டமுடியாமல் இருந்தது. இதை விட சாம் ஒரு இஸ்லாமியன். காலோஸ் ஒரு தீவிர கத்தோலிக்க மதத்தையும் போப்பையும் ஆதரிப்பவன். இப்படி இவர்கள் வெறுப்பில் மத வேறுபாடும் இருக்கலாம் என சுந்தரம்பிள்ளையால் ஊகிக்க முடிந்தது.

மத வேறுபாடுகள் பெரிதாக தலைகாட்டாத இடம் இந்த வைத்தியசாலை. ஆனாலும் இந்த விடயங்கள் கண்களுக்கு தெரியாத போதும் காற்றுப்போல் மத வெறுப்புகள் இருப்பதை பேச்சுகளில் உணர முடிந்தது.

ஒரு நாள் காலோஸ் சுந்தரம்பிள்ளையிடம் ‘நான் மிருக வைத்தியராக வந்திருக்காவிட்டால் கத்தோலிக்க மத குருவாக வந்திருப்பேன்’ என்றான்.

அதைக்கேட்டுக் கொண்டிருந்த அன்ரூ ‘நல்ல வேளை கத்தோலிக்க மதம் தப்பியது’ என்றான்.

‘இப்பொழுது மட்டும் நல்ல நிலையிலா இருக்கிறது. நேற்றுக் கூட அவுஸ்திரேலிய ஆதிவாசிக் குழந்தைகளை பல வருடங்களுக்கு முன் செமினறிகளில் வைத்து கல்வி புகட்டும் போது அவர்கள் மீது பாலுறவு வன்செயல் புரிந்ததாக செய்தி வந்துள்ளதே’

என சுந்தரம்பிள்ளை கூறிய போது அந்த இடத்தில் காலோஸ் இருக்கவில்லை.

மீண்டும் சுந்தரம்பிள்ளை 'சாமானிய மனிதர்களில் இருந்து மதகுருவாக வந்தவர்கள் காமத்தில் மட்டுமல்ல மற்றைய குணங்களிலும் சாதாரணமானவர் போல்தான் நடப்பார்கள். ஆனால் சமூகம் அவர்களிடம் சமூக கோட்பாட்டின் கடிவாளத்தை கொடுத்து நீங்கள் கண்ணியமானவர்களாக நடக்க வேண்டும் என எதிர்பார்க்கிறது. இந்த எதிர்பார்ப்பு வெறும் கற்பனையால் ஆனது என காலம் காலமாக சகல மத பீடங்கள் நிரூபித்த வண்ணம் இருக்கின்றன. என்றான்

'சிவா நீ மதங்களை வெறுப்பவனா? என்றான் அன்ரூ.

'மதங்கள் மனிதர்களின் மனசாட்சியாலும் கனவுகள் மற்றும் இறப்பின் பயத்தால் உருவாக்கிய ஆன்மீக சிந்தனையின் விளைவாக உருவாகியவை. இந்த சிந்தனை ஒரு பரிணாம வளர்சியாகிறது. மதங்கள், இந்த ஆன்மீக வளர்ச்சியில் தொற்றிய நோய்க்கிருமி போல் சீவிக்கின்றன. அதைக்கூட மனிதர்கள் சர்க்கரைவியாதி இரத்த அழுத்தம் போன்ற நோய்களுடன் வாழ்வது போல் சகித்துக்கொள்ளமுடியும். இதில் விருப்போ வெறுப்போ எனக்கு இல்லை. ஆனால் மதத்தின் பேரால் காலம்காலமாக நடக்கும் கொடுமைகள் சகிக்கமுடியாதவை'.

'உண்மையான வார்த்தைகள். ஆனால் இதைக் கேட்க காலோஸ் இந்த இடத்தில் இல்லை என்பதுதான் எனது கவலை என்றான்'.

சுந்தரம்பிள்ளைக்கு ரீவனை சந்தித்த போது விரும்பவோ வெறுப்பதற்கோ மனம் வரவில்லை.காரணம் அது சுந்தரம்பிள்ளையின் இயல்பில்லை. அத்துடன் முதலாவதாக சந்தித்ததும் - நீங்கள் தான் புது வைத்தியரா? உங்கள் வரவு நல்வரவாகுக எனக் கூறி இறுக்கமாக கையை குலுக்கினான். மெலிந்த தோற்றம், கலைந்த தலை, கூர்மூக்கு கொண்டு இடது காதில் பெரிய வெள்ளி வளையமும் அணிந்து இருந்தான். இடுங்கிய கண்கள், ஒட்டிய கன்னங்கள். ஆனால் தீர்க்கமான பார்வையுடன் அவனை மற்றவர்களில் இருந்து வேறுபடுத்தியது. பெரும்பாலான நேரத்தில் கையில் ஏதாவது ஒரு புத்தகத்தை வைத்திருந்தான்.

ரீவன் பெரும்பாலும் இரவு வேளைகளில் வேலை செய்வதால் அவனை கிழமைக்கு சில தடவைகள் மட்டுமே சந்திக்கும்

சந்தர்ப்பம் கிடைத்தது. காலோஸ் சம்பந்தமான விடயத்தில் ரீவன் சுந்தரம்பிள்ளையை அணுகவில்லை.

□ □ □

மாதத்தில் முதலாவது செவ்வாய்கிழமை காலை நேரத்தில் அவுஸ்திரேலியாவின் தலைநகரான கான்பராவில் மத்திய வங்கி கூட்டம்கூடி நாட்டின் பணப்புழக்கம், வட்டி வீதம் சம்பந்தமான கொள்கைளை மறு பரிசீலனை செய்யும். அந்த கூட்டம் முடிவதற்கு நண்பகல் இரண்டு மணியாகும். நாட்டில் உள்ள சகல தொலைக்காட்சி வானெலி பத்திரிகைகள் அந்த கூட்டத்தின் முடிவுகளை மக்களுக்கு வெளிப்படுத்தும். இந்த கூட்ட குறிப்புகளில் இருந்து நாட்டின் ஏற்றுமதி இறக்குமதியில் மாதாமாதம் ஏற்படும் மாற்றங்கள் நாட்டில், வழங்கப்படும் வட்டிவிகிதம், மற்றும் நுகர் பொருட்களின் விலையேற்றம் பற்றி மக்கள் தெரிந்து கொள்ள முடியும். அதை வைத்து சாதாரணமக்கள் வாழ்க்கைத் தரம் நிர்ணயிக்கப்படுகிறது. சராசரி அவுஸ்திரேலியன் இந்த செவ்வாய்க்கிழமையின் முக்கியத்துவத்தை புரிந்து கொள்கிறானோ இல்லையோ இந்த நாள் அவனது தலைவிதியை நிர்ணயிக்கும் நாளாகும்.

மாதத்தின் இரண்டாவது செவ்வாய்கிழமை இன்னொரு கூட்டம் ஒன்று மெல்பனில் இந்த வைத்திய சாலையின் மீட்டிங் அறையில் நண்பகல் இரண்டு மணிக்கு தொடங்கும். மத்திய வங்கி கூட்டம் போல் முக்கியத்துவம் இல்லாத போதும் இந்த வைத்தியசாலையில் வேலை செய்யும் ஐம்பதுக்கு மேற்பட்டவர்களுக்கு இந்த வைத்திய சாலையின் நிர்வாக குழு இரண்டு மணி நேரம் கூடி எடுக்கும் முடிவுகள் முக்கியமானது.

மெல்பனின் கிழக்கு புறநகர்களில் வாழும் வசதி படைத்தவர்களில் அறுபத்தைந்து வயதுக்கு மேல் வேலைகளில் இருந்து ஓய்வு எடுத்தவர்கள் இந்த நிர்வாக குழுவில் அங்கத்தினராக இருக்கிறார்கள். இவர்களில் பலர் முதுமையால் நடக்க முடியாத போதும் இந்த கூட்டத்தில் கலந்து கொள்வார்கள். பெண்கள் பெரும்பாலானவர்கள் உயர்ந்த தோற்றம் அளிக்க உயர்ந்த குதியோடு கூடிய பாத அணியுடன் சிறிதளவு கூனியபடி முழங்காலுக்கு கீழே வரையும் மறைக்கும் மேற்சட்டை அணிந்திருப்பார்கள். கடும் சிவப்பான உதட்டுசாயமும் மூக்கு கண்ணாடியும் எல்லோருக்கும் பொதுவாக இருக்கும். அவர்களின் சராசரி வயது எழுபத்தைந்து இருக்கும். சுருக்கமாக சொன்னால் அகதா கிறிஸ்டியின் கதைகளில் வரும் மிஸ்

மாப்பிள் போன்று தோற்றமளிப்பார்கள். அவர்கள் எல்லோரும் ஒரு தகுதியை பெற்றிருப்பார்கள். பெரிய தொகையை இந்த வைத்தியசாலைக்கு அளித்தவர்களாக இருப்பார்கள்.

இந்த செவ்வாய்கிழமை நிர்வாகக் குழுக் கூட்டத்தில் வைத்தியசாலையின் வழக்கமான நிர்வாகம் சம்பந்தமான விடயங்களோடு தலைமை வைத்தியரைப் பற்றிய புகார் விசாரணைக்கு எடுக்கப்படுகிறது என்ற விடயம் அங்கு வேலை செய்வோர் எல்லோரிடமும் செய்தியாக பரவியிருந்தது. எப்படி இப்படியான விடயங்கள் வெளித் தெரிகின்றன என்பது புதிரானது.

புகார் செய்தவர்களே இந்த பரப்புரைகளையும் செய்திருக்க வேண்டும் என நினைப்பதற்கு காரணம் உண்டு. ஒருவனை தண்டிப்பதற்கு முன்பு அவனது துர்நடத்தையை வெளிப்படுத்தி அவன் மற்றவர்கள் மத்தியில் தண்டனைக்கு உரியவன் என்ற கருத்தை உருவாக்கிய பின்புதான் தண்டனை வழங்கவேண்டும் என்பது மிகப் புராதனமான கருத்தியல். ஏதோ காரணத்தால் அவன் தண்டனையில் இருந்து நிரபராதி என தப்பித்தாலும் கூட இந்த பிரசாரம் அவனுக்கு பாதிப்பை அளித்துவிடும். இந்தப் பாதிப்பால் தன்னம்பிக்கையை, சுற்றத்தின் நம்பிக்கையை இழந்து விடுகிறான். இந்த நம்பிக்கையில் காலோஸ்சுக்கு எதிரான புகார் விடயத்தையும் புகார் கொடுத்தவர்கள் வெளியில் கசிய விட்டிருப்பார்கள்.

அந்த செவ்வாய்கிழமை காலை பத்து மணியளவில் வழக்கம் போல் இரண்டாவது ஆலோசனை அறையில் ஒரு லபிரடோர் நாயை பரிசோதித்துக் கொண்டு சுந்தரம்பிள்ளை இருக்கும் போது திடீர் என பின்பக்க கதவால் கொலிங்வூட் உள்ளே வந்தது.

லபிரடோரின் கழுத்தில் வேறு ஒரு நாய் கடித்ததால் ஏற்பட்ட காயத்தை கழுவுவதற்கு மட்டுமே தேவையாக சிறிதளவு மயக்கமருந்து கொடுத்து விட்டு, காயத்தை கழுவிக் கொண்டிருந்த போது அந்த நாய் அசையாமல் கண்களை மட்டும் விழித்துக்கொண்டிருந்தது. ஆனால் அரை மயக்கத்தில் இருந்த லபிரடோர் கொலிங்வூட்டைக் கண்டதும் உடனே தலையை உயர்த்தி குரைத்தது. ஆனால் மயக்க மருந்தால் கால்களை நிமிர்த்தி எழும்ப முடியவில்லை.

எல்லோரிடமும் நட்புடன் வாலையாட்டியபடி வளைய வரும் இந்த லபிரடோர் நாய்களுக்கு ஏன்தான் பூனைகளை தங்கள் ஜன்ம விரோதிகளாக நினைக்கின்றன?.

'கொலிங்வூட் வெளியே போ' என்று துரத்திய போது கொலிங்வூட் வந்து சுந்தரம்பிள்ளையின் காலை பிராண்டியபடி 'உடனே வா. இது எமேர்ஜன்சி'

'நான் மயக்கமடைந்த நாயை விட்டு விட்டு வரமுடியாது. உன்னை மாதிரி ஓசியில் சாப்பிடுபவன் அல்ல. வேலை செய்ய வேண்டும்'.

இந்த மாதிரி சுந்தரம்பிள்ளை பூனையுடன் பேசுவதை பாரத்து வியப்புடன் சிரித்தபடி நின்றாள் அந்த லபிரடோரின் பெண் உரிமையாளர். லபிரடோர் அரைமயக்கத்தில் இன்னும் இருமுறை வவ் வவ் என்றது. கொலிங்வூட் விடுவதாக இல்லை. முன் இரண்டு கால்களையும் பாவித்து சுந்தரமூர்த்தியின் பாண்ட்டை இழுத்தது. அதைப் பொருட்படுத்தாமல் தொடர்ச்சியாக வேலையை செய்த போது கொலிங்வூட் இப்பொழுது நகத்தால் காலை பிராண்டியதால் நகங்கள் கால்களில் கீறத் தொடங்கியது. என்ன என்றுதான் என சென்று பார்ப்போம் என நினைத்து அந்த உரிமையாளரிடம் மன்னிப்பு கேட்டு விட்டு வெளியே வந்த சுந்தரம்பிள்ளை கொலிங்வூட்டை பின்பற்றி பல் வைத்திய அறைக்கு சென்றபோது அங்கு கண்ட காட்சி சுந்தரம்பிள்ளையை அதிர வைத்தது.

அந்த சிறிய அறையில் பல் வைத்திய உபகரணங்கள் ,மேசை, காஸ் சிலிண்டர் என்பன வைக்கப்பட்டிருப்பதால் அதிக இடம் இல்லை. திறந்த கதவின் உள்மூலையில் மட்டும் இரண்டு பேர் நிற்க இடம் உள்ளது. அந்த மூலைக்குள் கொலிங்வூட் பாய்ந்து சென்றது. அங்கு சுந்தரம்பிள்ளை கண்களைத் திருப்பிய போது சாமின் வலது கையின் இரண்டு கைவிரல்கள் ரீவனது இடது காதில் அணிந்துள்ள பெரிய வெள்ளி வளையத்துக்குள் கொக்கியபடி இருந்தன. சாமின் கையை பிடித்தபடி அழாக்குறையாக ரீவன் விடும்படி மன்றாடினான். கோலிங்வூட்டுக்கு பின்னால் சென்ற சுந்தரம்பிள்ளையை இருவரும் எதிர்பார்க்கவில்லை.

'சாம் தயவு செய்து ரீவனை விட்டு விடு'

'இந்த பாஸ்ரட்டுக்கு என்ன துணிவு இருந்தால் என்னை காலோஸுக்கு எதிராக கையெழுத்து கேட்பான்'. என்று விரல்களை எடுக்காமல் கேட்டான்.

நல்லவேளையாக வேறு ஒருவரும் அந்த சம்பவத்தை பார்க்க முடியாத மறைவான மூலையாக இருந்தது.

‘தயவு செய்து விரல்களை எடு சாம்’ என்று மீண்டும் கடுமையான குரலில் கூறிய போது சாம் விரல்களை எடுத்தான்.

‘ரீவன் நீங்கள் போகலாம்’ என்ற சுந்தரம்பிள்ளைக்கு அவனைப் பார்க்க பரிதாபமாக இருந்தது. அவனது முகம் இரத்த சிவப்பில் இருந்தது. அது கோபத்திலோ அல்லது அவமானத்திலோ அல்லது இரண்டாலும் இருக்கலாம்.

‘ஏன் இப்படி செய்தாய். ரீவன் காது பிய்ந்திருந்தால் வீண் பிரச்சினையாகி இருக்கும்’.

‘பயப்பட வேண்டாம் நான் வெருட்டவே அப்படி செய்தேன். என்னை கொரிடோரில் வைத்து கடிதத்தில் கையெழுத்து வைக்கும்படி கேட்ட போது மெதுவாக உள்ளே வர சொல்லி விட்டுத்தான் செய்தேன் ஆனால் இந்த சம்பவம் எப்படி உங்களுக்கு தெரியும்?’

சாமின் சிரிப்பில் ஒரு சாதனையாளன் மற்றும் திருடன் என ஐம்பது வீதம் கலந்து இருந்தது,

‘இதோ இந்த கொலிங்வூட் தான் எமெர்ஜன்சி என என்னைக் கூப்பிட்டது’.

‘பிளடி கொலிங்வூட்’

‘நீ கொலிங்வூட்டுக்கு நன்றிதான் சொல்லவேண்டும். தேவையில்லாமல் பிரச்சினையில் மாட்டி இருப்பாய். நான் மயக்கமடைந்த நாயின் புண்ணை சுத்தப்படுத்திக் கொண்டிருந்தேன். கொலிங்வூட் நகத்தால் பிராண்டி அழைத்ததால் நான் அரைவாசியில் வந்தேன்’.

□ □ □

நண்பகல் இரண்டு மணிக்கு முன்பாக சகல குழு அங்கத்தினரும் வந்து விட்டனர். செயல் குழு அங்கத்தவர்கள் வந்ததும் சடங்கு சம்பிரதாயம் போல் சில வேலைகளில் ஈடுபடுவார்கள். ஆண்கள் பலர் வைத்தியசாலையை சுற்றிப் பார்ப்பார்கள். கூட்டில் அடைக்கப்பட்டு அனாதையாக எத்தனை நாய்கள் பூனைகள் புது உரிமையாளருக்காக காத்திருக்கிறது என்பதை அறிவது அவர்களுக்கு முக்கியமான ஒரு விடயமாக இருக்கும்.

மெல்பனில் பல காரணங்களால் பராமரிக்க முடியாத மற்றும் வீடுகளில் இருந்து தப்பியோடும் நாய்களும் பூனைகளும் இங்கே கொண்டு வரப்படும். அவை விக்டோரிய மாநில சட்டத்துக்கேற்ப ஒரு கிழமை வைத்து பாராமரிக்கப்படும். இதில் நோயுற்றவை, வயதானவை, மூர்க்க குணம் உள்ளவை ஏழு நாட்களின் பின் கருணைக்கொலை செய்யப்படும். மற்றவை சுவீகாரத்துக்காக இங்கே கூடுகளில் இருக்கும். இவைகளின் எண்ணிக்கை காலத்துக்கு காலம் வேறுபடும். மார்கழி, தை போன்ற விடுமுறை மாதங்களில் எண்ணிக்கை கூடிவிடும். அவுஸ்திரேலியாவில் விடுமுறைகாலத்தில் உரிமையாளர்கள் விடுமுறைக்கு போவதால் அவர்களின் வீடுகளை விட்டு தங்களுக்கும் சுதந்திரமான விடுமுறையை நாடி ஓடிய நாய்கள், பூனைகள் தெருக்களில் ஓடும் வாகனங்களுக்கு உயிர் தப்பும் போது இங்கு கொண்டு வரப்படும். ஆண்விலங்குகளும் பெண்விலங்குகளும் மனிதர்களின் எல்லைகளையும் கட்டுப்பாடுகளை மீறும் இனப்பெருக்க காலத்திலும் இந்த வைத்தியசாலையில் அவைகளின் எண்ணிக்கை அதிகமாகிறது.

செயற்குழு அங்கத்தினரான திருமதி கிளிபேட் பூனைகளை விரும்புபவர். அவர் பூனைகளை வைத்திருக்கும் பகுதிக்கு சென்று சிலவற்றை எடுத்து மார்போடு அணைத்து முத்தம் கொடுத்து அவற்றோடு கலந்துரையாடல் செய்வார். இவரது அன்புத் தொல்லையை பல பூனைகள் விரும்பினாலும் சில விரும்புவது இல்லை. கூட்டில் தங்களது சுதந்திரத்தை தொலைத்து விட்டு சிறையில் இருப்பது போன்ற மனஅழுத்தத்தில் இருப்பவை. இப்படியான அணைப்புகளை விரும்பாததால் சீறுவதும், கீறுவதும் ஆக புரட்சியில் ஈடுபடும். திருமதி கிளிபேட் பல முறை நகங்களாலும் பற்களாலும் கீறப்பட்டு, கடிக்கப்பட்டு இரத்த காயமடைந்துள்ளார். இதற்காக பூனைப்பகுதியில் வேலை செய்யும் ஹெதரும், மோரினும் செவ்வாய்க்கிழமை காலையிலே பூனைக் கூட்டில் எச்சரிக்கையாக அணைப்புகளை விரும்பாத பூனைகளை அடையாளம் கண்டு அவைகள் இருக்கும் கூடுகளில் ‘இவைகளை தொடவேண்டாம்’ என எழுதிப் போட்டுவிடுவார்கள். இந்த செய்கையால் திருமதி கிளிபேட்டின் காயங்கள் குறைந்தாலும் முற்றாக தடை செய்ய முடிவதில்லை. ஹெதருக்கம் மோரினுக்கு சாதுவாக காட்சியளித்து விட்டு திருமதி கிளிபேட்டை மட்டும் வெறுக்கும் பூனைகள் இந்த மெல்பனில் இருக்கத்தான் செய்கின்றன.

பூனைகள் நாய்களோடு ஒப்பிடும்போது விசித்திரமான குணம் உடையவை. தங்களுக்கு உணவு தேவைப்பட்டால் மனிதனைத் தேடி வந்து வீட்டு மிருகமானவை. அவைகளின் சரித்திரம் நாய்களில் இருந்து வேறுபடுகிறது. பத்தாயிரம் வருடங்களுக்கு முன்பு மனிதர்கள் வேட்டையாடுவதிலும், காய்கனிகளை தேடுவதிலும் சலிப்படைந்ததாலோ இல்லை பற்றாக்குறை நிலவியதாலோ விவசாயத்தின் மூலம் உணவைப் பயிரிட்டார்கள். அடுத்த வருடத்திற்கு உபரி தானியங்களை மீண்டும் விதைத்து பயிர் வளர்த்தார்கள்.

மேற்காசியா எனப்படும் தற்போது ஈராக் மற்றும் சிரியா முதலான பகுதிகளில் முதல் முறையாக உணவை பயிரிட்ட நிலப்பண்பாடு கொண்ட மனித குலம் வாழ்ந்தது. உணவு தானிய உற்பத்தியாக கோதுமை அங்கேதான் பயிரிடப்பட்டது.

மனிதர்கள் மிருகங்களை காட்டில் தேடிப் போய் பிடித்து தமது தேவைக்காக வீட்டில் ஆடு, மாடு, குதிரை என வேறு காலகட்டத்தில் வளர்த்தார்கள். ஆனால் பூனைகள் உணவுக்காக மனிதர்களை நாடிவந்து வீட்டு மிருகங்களாகின. இன்றும் தனது உணவு நேரம் வரும்போது மனிதர்களின் கால்களில் உராய்ந்து உணவு கேட்டு அருந்தி விட்டு தன்பாட்டிலே போய்க் கொண்டிருக்கும் பூனைகளின் சந்தர்ப்பவாதமான குணத்தில் பத்தாயிரம் வருடங்கள் சென்றாலும் சிறிதளவாவது மாற்றமில்லை.

தானியங்களை உற்பத்தி செய்துவிட்டு அதில் தனது குடும்பம் உற்றார் உறவினர்களுக்கு கொடுத்து உபரியானதை சேமித்து எதிர்காலத்துக்காக வைத்த போது அதை நாடி வந்த எலிகளை உணவாக உண்ண தேடி வந்த பூனைகள் அப்படியே வீடுகளில் தங்கிக் கொண்டு வீட்டுப் பெண்களின் செல்லப்பிராணியாகி தங்களையும் வீட்டு மிருகமாக்கி கொண்டன. வயலுக்கு விவசாயத்துக்கு ஆணுடன் போகாத பெண்களுக்கு துணையாக இருந்தன.

திருமதி கிளிபேட் பூனைகளின் மேல் கரிசனையுடன் இருப்பதுபோல் திருமதி ரிச்சாட் நாய்களின் இரசிகை. அவர் குறைந்த பட்சம் செயற்குழுக் கூட்டத்திற்கு அரைமணிக்கு முன்பாக வந்து ஒரு நாயையாவது சங்கிலியில் கட்டி தெருவால் பதினைந்து நிமிடமாவது நடந்த பின்பு தான் அவரது பொச்சம் தீரும். அப்படி ஒன்றை நடத்தி கொண்டு போகும் போது அந்த நாய்க்கு கழுத்தில் ஒரு ஸ்காவ் போன்ற துணியை கட்டி அலங்கரித்தபடிதான் வெளியே

தெருவுக்கு கொண்டு செல்லுவது வழக்கம். அவரது இந்த செய்கை பலருக்கு சிரிப்பை உண்டாக்கும். ஆனால் அவர் இதை பற்றி சிறிதும் பொருட்படுத்துவதில்லை.

திருமதி ஓச்சட் டாக்டர் காலோஸ் சேரத்திடம் தனது ரொய் ஸ்னுசர் நாயை கொண்டு வந்து ஒவ்வொரு மாதமும் வைத்திய ஆலோசனை கேட்பார். அவரை பொறுத்தவரை டாக்டர் சேரம் மட்டும்தான் மிருகவைத்தியம் தெரிந்தவர். அவருக்காக பல நிமிட நேரம் காத்திருந்து ஆலோசனை பெறுவார். வைத்திய சாலையில் உள்ள மற்றவர்கள் எழுபத்தைந்து வயதான திருமதி ஓச்சட்டுக்கும் நாற்பது வயதான டாக்டர் சேரத்திற்கும் ஆத்மரீதியான காதல் உள்ளதாக தங்களுக்குள் பேசிக் கொள்வார்கள்.

அன்று நடந்த நிர்வாக குழு கூட்டத்தில் இளைப்பாறிய அக்கவுண்டன்ட் திரு லோட்டன் தலைமை தாங்கினார். வழக்கமான அன்றாட விடயங்களோடு புதிய விடயமாக வைத்தியசாலைக்கு பக்கத்தில் உள்ள ரயர் கடையிருக்கும் நிலம் விற்பனைக்கு வந்திருப்பதாகவும் அதை வாங்கினால் பழைய வைத்தியசாலையை இடித்து விட்டு புதிய வைத்தியசாலையை கட்டலாம் என்ற விடயம் எடுத்துக்கொளளப்பட்டது. அறுபது வருடமாக இருந்த பாரம்பரியமான கட்டிடத்தை இடிப்பதற்கு பலருக்கு உடன்படு இல்லை. பல செயற்குழு மீட்டிங்கில் இந்த விடயம் பேசப்பட்டு உடன்பாட்டுக்கு வரமுடியவில்லை. ஆனால் பக்கத்து நிலத்தை வாங்குவதில் ஒருவருக்கும் எதிர் கருத்து இருக்கவில்லை.

ஒரு மணி நேரமாக இந்த விடயம் அலசி ஆராயப்பட்டது. இதன் பின்பு இந்த வைத்தியசாலைக்கு டொனேசன் கொடுப்பவர்களுக்கு வருமானவரி விலக்கு எடுப்பதாக மற்றைய அரைமணி நேரம் பேசப்பட்டது. இந்த விடயம் இலகுவானது அல்ல. அவுஸ்திரேலியாவின் மத்திய அரசாங்கமே இந்த வரிவிலக்கு விடயத்தை தீர்மானிக்க முடியும். காலம் காலமாக மனிதர்களுக்கு தொண்டாற்றும் நிறுவனங்களுக்கே இந்த வரிவிலக்கு உள்ளது. இந்த வழக்கத்தை மாற்றி சட்டத்தில் திருத்தத்தை ஏற்படுத்த பாராளுமன்ற அங்கத்தவர்கள் பலரிடம் பேசவேண்டும். இதற்கு ஒரு செயற்குழு அமைத்து செயற்படவேண்டும் என முடிவு எடுக்கப்பட்டது.

தொடர்ச்சியாக நடந்த மீட்டிங்கில் பலர் களைத்து போய்விட்டார்கள். திருமதி ஒச்சாட்டுக்கு இரண்டு நிமிடம் தொடர்ந்து பேசினால் மூச்சு வாங்கும். சிலர் மட்டும் கேக்குகளை

உண்ணும் போது பலர் அவற்றை தொடவில்லை. அவர்களுக்கு சர்க்கரை வியாதி இருக்கலாம். தேநீரை அருந்த தொடங்கும் போது 'இன்னும் ஒரு விடயம் இருக்கிறது. அதை பற்றியும் பேசவேண்டும்' என ஆரம்பித்தார் செயலாளர் ரொன் ஜோஸ். அவரது தோல்பையில் இருந்து ஒரு கோப்பு உருவி வெளியே எடுக்கப்பட்டது.

'என்ன? என விளித்தார் லோட்டன்

'டாக்டர் சேரத்திற்கு எதிராக புகார் வந்திருக்கு'

'என்ன மாதிரியான புகார்' மீண்டும் லோட்டன்

'பெண்களை இழிவாக நடத்துவதாகவும் பெண்களை துன்புறுத்துவதாகவும் இதில் எழுதப்பட்டிருக்கு'.

'யார் இதை கையெழுத்து இட்டு இருக்கிறார்கள்?'

'இதில் பெண்கள் சிலர் கையெழுத்திட்டிருக்கிறரர்கள். அத்துடன் ரீவன் ஸ்ரெயின் டாக்டர் ரிமதி பத்தோலியஸ் கையெழுத்துப் போட்டிருக்கிறார்'.

'இது ஒரு குப்பை. டாக்டர் காலோஸ் சேரத்தை எனக்கு நன்றாக தெரியும். பதினைந்து வருடங்களாக இந்த வைத்தியசாலையில் வேலை செய்கிறார். அவர் இப்படி எதுவும் செய்யக்கூடிய மனிதரில்லை' எனக் கூறிவிட்டு திருமதி ஓச்சட் தனது ஆசனத்தில் இருந்து எழுந்தார்..

அவரது வாதத்தை பெரும்பாலான பெண் அங்கத்தினர் ஆமோதித்து தலையாட்டினார்கள் லோட்டன் சிறிது சிந்தித்து விட்டு 'இதைப்பற்றி காலோஸிடம் கேட்டீர்களா?'

'கேட்டேன். அப்பொழுது அவர் இது ரிமதியும் ரீவனும் தனிப்பட்ட விரோதத்தால் தனக்கு எதிராக எடுத்த நடவடிக்கை என்றார்'.

'நாங்களும் காலோஸை அழைத்து கேட்டால் இதே போல்தான் பதில் வரும். மேலும் இந்த குற்றச்சாட்டுகளில் எதுவும் பிரத்தியேகமாக எவராலும் வைக்கப்படாமல் பொதுவானதாக இருப்பதால் இதை இப்படியே விடுவது தான் நல்லது' என்று லோட்டன் விளக்கியபோது எல்லோரும் ஆமோதித்தார்கள்.

‘பத்துவருடங்கள் தலைமை வைத்தியராக எந்த பிரச்சினையும் இல்லாது இந்த வைத்தியசாலையை ஒழுங்காக நடத்தும் ஒருவரை நாங்கள் கௌரவிக்கா விட்டாலும் அவமானப்படுத்தக் கூடாது’ என்று திருமதி ஓச்சட் சொல்லியபோது அதுவே அந்த நிர்வாக குழுவின் கடைசி வார்த்தையாக இருந்தது.

ரொன் ஜொஸ் முகத்தில் சிறிது ஏமாற்றம் நிழல் ஆடியது. காலோஸை குறைந்த பட்சம் நிர்வாக குழுக்கூட்டத்தில் விசாரித்திருக்கலாம் என்பது அவரது அபிப்பிராயமாக இருந்தது. இதே நேரத்தில் ஓய்வுபெற சில மாதங்களே இருக்கும் போது தனது அபிப்பிரயத்தை வெளிக்காட்டி அது ஏற்றுக்கொள்ளப்படாமல் போவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதென்பதால் இது விடயத்தில் மேலும் தன்னை வெளிக்காட்டிக் கொள்ளவும் அவர் தயாரில்லை.

## 12

அமெரிக்காவில் மேற்குப் பகுதியில் உள்ள கலிபோர்னியாவில் ஒரு கிழமையாக எரிந்து கொண்டிருந்த காட்டுத் தீ அவுஸ்திரேலிய தொலைகாட்சியில் மணிக்கொரு தடவை விபரமாக காட்டப்படுகிறது. அமெரிக்கா நட்பு நாடு என்பதாலா? உண்மைதான். ஆனால் அதை விட இருநூறு அவுஸ்திரேலிய தீயணைப்பு வீரர்கள் அங்கு தீயை அணைக்க உதவி செய்வதற்கு தொண்டர்களாக அமெரிக்கர்களுக்கு உதவி செய்கிறார்கள் என்பதே அதற்கு முக்கிய காரணமாகும்.

அவுஸ்திரேலியாவில் உள்ள யூகலிப்ரஸ் காடுகளில் கோடைகாலத்தில் திடீர் என ஏற்படும் காட்டுத்தீ மிகப் பயங்கரமானவை. பெற்றோல் நிரம்பியுள்ள டாங்கரில் நெருப்பு பற்றியது போல் ஆரம்பித்து, அந்த நெருப்பு உருண்டையான தீ பிளம்புகளாக பல கிலோ மீட்டர் வேகத்தில் வெடித்துக் கொண்டு வேகமாக செல்லும். இந்த பிளம்புகள் அக்கினிக் கோளங்களாக உருண்டு செல்லும் வழியில் எது இருந்தாலும் உடனே பஷ்பமாகி விடும். வீடுகள், கிராமங்களை அழித்து மனித உயிர்களையும் மற்றும் பண்ணை மிருகங்களையும் சாம்பலாக்கிவிடும். வருடாவருடம் கோடைகாலத்தில் அடிக்கடி காட்டுத்தீ ஏற்படுவதால் இந்த தீயணைப்பு நடவடிக்கையில் ஈடுபடும் அவுஸ்திரேலியர்கள் தீவிரமான பயிற்சி உள்ளவர்கள். விக்டோரியா மாநிலத்து தீயணைப்பு படையில் ஒரு குழுவினர் கலிபோர்னியாவில் ஏற்பட்டுள்ள காட்டுத்தீயை அணைப்பதற்கு அமெரிக்கர்களுக்கு உதவியாக அவுஸ்திரேலிய அரசாங்கத்தால் அனுப்பப்பட்டுள்ளார்கள்

பல நாட்களாக காட்டுத்தீ இன்னும் கலிபோர்னியாவில் எரிந்து கொண்டிருக்கிறது என்பதையிட்டு ஆனந்தப்படும் ஒரே சீவன் தானாகத்தான் இருக்கமுடியும் என்பது ஷரனுக்கு உள்ளத்து உணர்வில் ஒரு புறத்தில் வெட்கமாக இருந்தது. மற்ற மனிதர்களின்

துன்பத்தை இட்டு ஆனந்தப்படுவது நாகரிகமானது அல்ல என்றாலும், தனிப்பட்ட ரீதியில் இந்த காட்டுத் தீ தொடர்ச்சியாக கட்டுக் கடங்காமல் இருப்பதனால் தனக்கு நல்லது என்ற மனநிலையை தவிர்க்க முடியாது அவள் இருந்தாள். தன்னளவில் அதற்கு நியாயமும் கற்பித்துக் கொண்டாள். மற்றவர்களது துன்பத்தில், அழிவுகளில் இன்பமடைவது பெரிய முரண்பாடான விடயமாக அவளுக்கு தெரியவில்லை. அந்த மனநிலைக்கு காரணம், அங்கு எரியும் காட்டுத் தீயால்தான் இங்கு மெல்பனில் அவளுக்கு சுதந்திர காற்றை சுவாசிக்க முடிகிறது. நோயால் துன்பப்படுவர்களது பணத்தில் வைத்தியர்கள் வாழ்கிறார்கள். அதே போல் மற்றவர்களின் வாழ்க்கைத் துன்பங்களை வைத்து வக்கீல்கள் பணம் பண்ணுகிறார்கள். படைவீரர்களது அழிவில் அரசியல்வாதிகள் அதிகாரத்தை பெறுவதும் தொழிலாளிகளின் துன்பத்தில் முதலாளி இலாபமடைவது போல்தான் கலிபோனிய காட்டுத்தீயால் தனக்கு கிறிஸ்ரியனிடம் இருந்து தற்காலிகமாகவேனும் ஒத்தி வைக்கப்பட்ட விடுதலை கிடைத்துள்ளது என்பதால் காட்டுத்தீயால் அவதியுறும் கலிபோனிய மக்கள் மீது தனக்கு அனுதாப மேற்படவில்லை என தனக்குத் தானே சமாதானம் கூறிக்கொண்டாள். என்னை வக்கிரமானவள், குரூரமான மனநிலை கொண்டவள் என மற்றவர்கள் நினைத்தால் தன்னை இந்த நிலைக்கு தள்ளி வைத்தவர்களே பொறுப்பாகும் என தனக்கே சமாதானம் கூறியபடி மனசாந்தியும் தேடினாள்.

காட்டுத்தீ சில நாட்களில் அணைந்து விடும். அழிந்த காடும் மீண்டும் துளிர்த்து காடாகிவிடும். ஆனால் எனது துன்பம் அப்படியானது அல்ல. மற்றவர்களால் தீராது. அதை நான் வருடங்களாக அனுபவித்து வருகிறேன். அதை யாருக்கு சொல்வது?

மெல்பனின் மேற்கு பகுதியின் பிரதான வீதியால் செல்லுபவர்கள் தொழிற்சாலைகளினதும், நகரங்களினதும் கழிவுகளும் கலந்து பலநாள் இறந்த மிருகத்தின் வாடைக்கும் மல வாடைக்கும் இடைப்பட்டதான ஏதோ இரசாயன மணத்தை அனுபவிக்க வேண்டும். அந்த பிரதான வீதியில் அமைந்து துர்வாடையை வெளிவிடும் தொழிற்சாலைகளுக்கு சிறிது தூரத்தில் நகரக் குடியிருப்புகள் அமைந்து இருந்தாலும் காற்று பலமாக வீசும் போது லவுட்டன் நகரத்தில் உள்ளவர்கள் அசுத்த வாடைக்கு தப்ப முடியாது.

இரண்டு நாட்களாக ஷரனது இரண்டு மாடி வீட்டில் வீசும் காற்று அசுத்தமான வாடையுடன் குளிராக இருந்தாலும், பகல் நேரத்தில் யன்னல்களை திறந்தே வைத்திருந்தாள். அந்த அசுத்தக் காற்று அவளது வீட்டை எங்கும் நிறைத்து உடலைத் தழுவி கழுத்தில் இருந்து கால் வரையும் உள்ள உரோமங்களின் துவாரங்களின் உள்நுழைந்து புல்லரிக்க வைக்கிறது. இனம் புரியாத இன்பமான ராகம் இதயத்தில் மீட்டப்படுகிறது. கிறிஸ்ரியன் இல்லை என்ற நினைப்பினால் ஏற்படும் கிளர்ச்சி, முழுமையான உடலுறவில் ஏற்படும் காம உணர்வில் ஏற்படும் உன்மத்தமான இன்பத்துக்கு நிகராக இருந்தது. இந்த இரண்டு நாட்களில் பல தடவை ஷரன் நிர்வாணமாக படுக்கை அறைக்கும் குளிப்பறைக்கும் வளைய வந்தாள். குளிரோ, அசுத்த வாடையோ எதுவும் தடையாக இருக்கவில்லை. தனது உடல், மனம் இரண்டிலும் தனது ஆட்சி உரிமையை நிலைநாட்ட அந்த நிர்வாணகோலம் அவளுக்கு உதவியாக இருந்தது. தனது உடலை தன்கைகளால் தடவி தான் ஒரு சூனியமில்லை. உயிரும் உணர்வும் கொண்ட பெண் என குளியலறையின் பெரிய கண்ணாடி முன்பாக பலதடவை உறுதிப்படுத்திக் கொண்டாள். தன் அழகை இரசிப்பதற்காக நிர்வாணமாக நிலைக்கண்ணாடி முன்பு நின்ற காலம் மறந்து, இப்பொழுது தனது இருத்தலை உறுதிப்படுத்தி பார்ப்பதற்காக நிலைக்கண்ணாடி முன் நிற்பது கேவலமாக இருந்தது.

சுதந்திரத்தை இப்படி இழந்தது யாரால்?

சுதந்திரம் என்பது கூட அவரவர் மனம் சார்ந்த அகவயமான விடயம். சிறையில் சந்தோசமாக இருப்பவர்களும் வீட்டில் சிறைப்பட்டு இருப்பவர்களும் உண்டு. உண்மையில் புள்ளிவிபரம் எடுத்தால் வீட்டில் சிறை இருப்பவர்களே அரச சிறையில் இருப்பவர்களை விட அதிகம். இதில் இவள் இரண்டாம் வகையை சேர்ந்தவள்.

சில காலங்களாக ஷரனுக்கு கிறிஸ்ரியனுடன் வீட்டில் இருப்பது காற்று புகாத அறையொன்றில் இருப்பது போன்று மூச்சுத் திணறுகிறது இந்த சிறைவாசத்தில் இருந்து தப்ப நெருக்கடியான மனித கூட்டமொன்றில் தவறிவிட்ட சிறு குழந்தை, அந்தக் கூட்டத்தில் நிற்கும் மனிதர்களின், ஆயிரக்கணக்கான கால்களிடையே வெளியேறுவதற்கு சிறிய இடைவெளியை தேடுவது போன்ற மனநிலையில் தவித்தாள். தனது மனநிலையை பகிர்ந்து கொள்ளவோ,

சொல்லி தோளில் தலைவைத்து ஆறுதலடைவதற்கும்கூட ஒருவர் அவளுக்கு கிடைக்கவில்லை.

அவளது நாய் லைக்கா அடிக்கடி தனது முகத்தை அவளில் தேய்த்து ஆறுதல் அளித்து துணையாக இருந்தாலும் அதனால் அவளைப் புரிந்து கொள்ள முடியுமா? ஆறுதல் வார்த்தை பரிமாற முடியுமா?

கிறிஸ்ரியன் இல்லாத அந்த குளிர்காலத்து இரவுகள் அவளுக்கு அவனைத் துணையாக அடைய முன்பு இருந்த சுதந்திரத்தை நினைவுபடுத்தின. அந்த மனவோடையில் ஓடும் சுதந்திர நீரோட்டத்தை வீட்டில் நிம்மதியாக அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மூன்று வயதே நிரம்பிய மகன் மார்க்கை சிறிது தூரத்தில் உள்ள அம்மாவின் வீட்டிற்கு அனுப்பிவிட்டு, லைக்கா என்ற தனது நாயை மட்டும் துணையாக வைத்துக்கொண்டு அந்தப் பெரிய வீட்டில் இருக்கிறாள்.

இப்பொழுது அனுபவிக்கும் சுதந்திரம் நிரந்தரமானது அல்ல. இரண்டு கிழமைகள் மட்டுமே என்பது ஷரனுக்கு தெரியும். கிறிஸ்ரியன் கலிபோர்னியாவில் இருந்து வந்தால் மீண்டும் பழைய நிலைக்கு வந்து விடுவான். அடி, உதை, அதட்டல், மிரட்டல் எனும் வன்முறையின் வட்டத்தில் மீண்டும் சிக்கி சுதந்திரத்துக்கு ஏங்கும் அடிமை போல் ஆகிவிடுவாள். வெளியே சொல்ல முடியாத உடல் வன்முறை மட்டுமல்லாது அவனது பார்வை, பேச்சு ஏன் அவனது மூச்சு காற்று கூட அவளுக்கு அக்கினியாக தெரிகிறது.

கட்டிலில் படுத்தபடியே தனக்கு நடந்தவையை நினைத்தபோது அவளுக்கு நம்ப முடியவில்லை.

பலவற்றிற்கு தானே காரணம் என புரிந்தாலும் ஆத்திரமும் அகங்காரமும் மனதில் அமைதியை ஏற்பட விடவில்லை. எங்காவது ஓடி விடவோ அல்லது எதையாவது உடைக்கவோ அவளது மனம் விரும்பியது. யாரையாவது வார்த்தையால் துன்புறுத்த வேண்டும் அல்லது கராத்தே முறையால் யாருக்காவது நாலு உதை விடவேண்டும் என்ற நினைப்பு திடீரென வந்தது. இரு வருடங்களாக அனுபவித்த கொடுமையை நினைத்து அழுவதற்கே இடைவெளி இல்லாமல் போய்விட்டது என்ற நினைப்பு அவளை பைத்தியமாக்கியது. காயம்பட்ட மிருகத்திற்கு அழுவதற்கும், கூக்குரலிடவும் காட்டில் கிடைக்கும் சுதந்திரம் தனக்கு வீட்டில் இல்லை. தனது துன்பங்களை அம்மாவிடம் சொல்ல முடியாது.

சொன்னால் நீயாக தேடிக்கொண்ட வினை என்பாள். மனதின் படபடப்பால், நினைவுகளிள் தொடர் பலகாலமாக உக்கிய கயிற்றை கையில் எடுத்தது போல் அறுந்தபடி இருந்தது. மன நிலை அதற்கேற்றபடி அமைதி ,குழப்பம் என இரு வேறு நிலைக்கு மாறி மாறி நிலத்திற்கும் கொப்புக்கும் தாவும் குரங்காகியது.

ஷரனின் கணவன் கிறிஸ்ரியனுக்கு கலிபோர்னியாவில் ஏற்பட்ட தீயை அணைப்பதற்கு அவுஸ்திரேலியாவில் இருந்து அனுப்பப்பட்ட இருநூறு தீயணைப்பு வீரர்களில் ஒருவன் மட்டுமல்ல அந்த குழுவுக்கு கப்டனாக அவனே சென்றுள்ளான். ஆரம்பத்தில் போகும் போதே அவள் தன்னை வெறுப்பது தெரியும். கலிபோர்னியாவில் இருக்கும் நாட்களில் ஷரன் பெற்றோர் வீட்டுக்கு சென்று சந்தோசமாக இருப்பாள் என நினைத்தான். ஆனால் இப்படியாக தனது வீட்டிலே இருந்து தனிமையை விரும்பி அனுபவிப்பாள் என எதிர்பார்த்திருக்கமாட்டான். அவனைப் பொறுத்தவரை தனது தவறுகளை தவறுகளாக ஏற்றுக்கொள்வது அவனுக்கு சுபாவமாக இருக்கவில்லை. தேவையில்லாமல் பொய் சொல்லுகிறாள் என்பது கிறிஸ்ரியனுக்கு ஷரன் மீது ஆத்திரத்தை அளிக்கும் விடயமாக இருந்தது.

ஷரனுக்கு சிறு தவறுகளையும் பெரிதாக்கும் தந்தை மிகவும் கண்டிப்பானவர். முன்னாள் இராணுவத்தில் கடமையாற்றிய தகப்பன் சிறுவயதில் அவளுக்கு ஒரு சர்வாதிகாரியாக நடந்து கொண்டார். அப்படியாக கண்டிப்பான சூழ்நிலையில் வளரும் போது சிறிய குழந்தைத்தனமான தவறுகளை மறுப்பது, மறைப்பது தேவையாக இருந்தது. அதே வேளையில் சிறுவயதிலே புத்திசாதுரியமாக இருந்ததால் அது அவளுக்கு இலகுவாக இருந்தது. சிறுவயதுக் குறும்புகளை கெட்டித்தனமாக மறைப்பதில் தனது சாதுரியத்தை தானே மெச்சினாள். அழகையும், அறிவையும் அளவுக்கு அதிகமாக பெற்றிருந்ததால் எதையும் சாதித்துவிடலாம் என்ற எண்ணம் ஷரனுக்கு இருந்தது. தன்னை அளவுக்குமீறி நம்பத் தொடங்கி அந்த உணர்வு வரம்பை மீறி பாயும் வெள்ளம் போல அவள் மீது அவளுக்கு காதலாகிவிட்டது. பாடசாலையில் ஆசிரியர்கள் பலராலும் அவள் உற்சாகப்படுத்தப்பட்டு “ரொம்போய்” என செல்லமாக அழைக்கப்பட்டாள். இப்படியான பாராட்டுகள் அவளது மனதில் நானும் ஆண்களைப் போல் உடல் வலிமை பெற வேண்டும் என்ற ஆர்வத்தை உருவாக்கியதால், பதினைந்து வயதில் கராத்தே பயில வேண்டும் என வீட்டில் நச்சரித்து ஏற்கனவே பழகிய பலே நாட்டிய வகுப்பை இடைநிறுத்தி விட்டு புதிதாக

கராத்தே வகுப்பில் சேர்ந்தாள். அந்த கராத்தே வகுப்புகளை நடத்த வந்த கிறிஸ்ரியன் காதலனாக, கணவனாக, இப்பொழுது காலனாக தெரிகிறான்.

முப்பது வயதைக் கடந்த கிறிஸ்ரியன் ஏற்கனவே திருமணம் செய்து பிரிந்து இருந்த காலத்தில்தான் மெல்பனில் பகுதி நேரப் பயிற்சியாளராக இருந்த வேலையில் இருந்து விலகி தனது வீட்டருகில் ஒரு கராத்தே வகுப்பை சொந்தமாக தொடங்கியபோது ஒரு ரீன் ஏஜ் பெண்ணாக அந்த வகுப்பில் வந்து சேர்ந்தாள். மற்ற பிள்ளைகள் எல்லாம் சிறுவர்களாகவும் சிறுமியர்களாகவும் இருந்தபோது இவள் மட்டும் தனியாக நடப்பட்டு உரம்போட்டதால் மதாளித்து வளரும் செவ்வாழைக் கன்று போல் தோன்றினாள். அவுஸ்திரேலியாவில் தாராளமாக கிடைக்கும் உணவு, விட்டமின்களுடன் சிறுவயதில் இருந்தே செய்த உடற்பயிற்சிகள், வருடக்கணக்காக பயின்ற பலே நடனம் அவளுக்கு விரிந்த தோள்கள் அழகாக, செதுக்கியது போன்ற இடுப்பு என பதினைந்துவயதில் அழகை அமோகமாக அள்ளி வழங்கி இருந்தது. அவளது தேகத்தின் வளர்ச்சியால் நாலு வயது கூடுதலாக மதித்து எட்டாவது வகுப்பில் இருந்த போது பல தடவை பதினோராவதா அல்லது பன்னிரண்டாவது வகுப்பா என பலரால் கேட்கப்பட்டிருக்கிறாள்.

பலே நடனம் பயின்றதால் இவளது கால்களும் கைகளும் சுதந்திரமாக இயங்கி கராத்தே பயிற்சியை இலகுவாகின. ஷரன் கராத்தே பயிற்சியில் விரைவில் தேறியதால் அவளுக்கு தனியாக பயிற்சி கொடுக்கவேண்டி இருந்தது.

அந்த நாள் எப்படி மறக்கமுடியும்?

□ □ □

அவுஸ்திரேலியாவுக்கு உரிய யுகலிக்கப்டஸ் மரங்கள் இலையுதிர் காலத்தில் இலைகளை உதிர்ப்பதில்லை. அவை என்றும் இளமையாக காட்சி தரும் பெண் தெய்வங்கள் மாதிரி எக்காலத்திலும் பருவகாலங்களை வென்று பச்சைப் பசேலன காட்சி தரும். ஆனால் ஐரோப்பியர்களால் இங்கு கொண்டு வரப்பட்ட மரங்கள் இலையுதிர்காலத்தில் மஞ்சளாகி இலைகளை உதிர்த்து குளிர்காலத்தில் நிர்வாணமாக பருவகாலத்தை வெளிப்படுத்தும். நாங்கள் பகலவனுடன் புணர்சிக்கு தயாராகிவிட்டோம் என பகிரங்கமாக விளம்பரப்படுத்தும் போது உள்ளூர் யுகலிக்கப்டஸ்

மரங்கள் மட்டும் பச்சை சீலை போர்த்தியபடி சொல்லும் செய்தியென்ன?

நாங்கள் இந்த நாட்டின் ஆதிகுடிகள். வந்தார் வரத்தாரான உங்களைப் போல் வெட்கம் கெட்டவர்கள் அல்ல என்பதா?

அது ஒரு இலையுதிர்காலத்து சனிக்கிழமையின் மாலை நேரம். மேற்குத்திசையில் சென்னிற மேகங்கள் அவசரமற்று நகர்ந்து கொண்டிருந்தன. ஆனால் பகலவன் அவசரமான வேலைக்கு செல்வது போல விரைவாக மறைந்து கொண்டிருந்தான். வெரபி கொமியுனிட்டி சென்ரரின் அருகே சிவப்பு நிற ஹோல்டன் கார் அங்கு பரந்து விரிந்து மஞ்சள் கலந்த சிவப்பு இலைகளை உதிர்த்தபடி நின்ற மப்பிள் மரத்தின் கீழ் நிறுத்தப்பட்டதும் பிரயாணிகள் சீட்டில் இருந்து இறங்கிய ஷரன் தோளில் சிறிய பையை கொழுவியபடி தயங்கித் தயங்கி உள்ளே நடந்தாள்.

அவளது மனதில் நினைவுகள் சிறிது தூரத்தில் உள்ள பிளாசாவில் உல்லாசமாக படம் பார்க்கும் தோழிகளுடன் இருந்தது. இந்த கிளாஸ் இல்லாவிடில் தோழிகளுடன் பிளாசாவில் படம் பார்க்க திட்டமிட்டு இருந்தாள். கடந்த கிழமையில்தான் அவசரமாக இவளுக்கு அடுத்த கிழமை நடக்க இருக்கும் கராத்தேயின் மஞ்சள்பட்டி தேர்வுக்காக இந்த விசேட வகுப்பு ஒழுங்கு செய்யப்பட்டது.

அவளது ஹைகீல் அணிந்த பாதங்கள், அந்த சென்ரரின் முன்பகுதியில் உதிர்க்கப்பட்டு, மஞ்சள் சிவப்பு கலந்த கம்பளமாக தரையை மூடியிருந்த மப்பிள் மரத்தின் இலைகளை இரண்டாக பிரித்துக் கொண்டு சென்றன. ‘ஒரு மணி நேரத்தில் சொப்பிங்கை முடித்து விட்டு வருகிறேன்’ எனத் தாய் அவளை நோக்கி கூறிய வார்த்தைகள் அவளில் எந்த சலனத்தையும் ஏற்படுத்தவில்லை. பதினைந்து வயதில் தாய் தந்தையரை முதலாவது எதிரியாக பார்க்கும் ரீன் ஏஜ் குணத்தோடு காரில் இறங்கி நடக்கும்போது புதிதாக ஒரு கவலை அவள் நினைவில் வந்து சேர்ந்தது. அவள் அலட்சியத்தோடு போட்ட மேலாடை உடலை இறுக்குவது போல் இருந்தது. அந்த இறுக்கத்துக்கு காரணம் புதிய பிராவா இல்லை வெளியாடையா என்பதே அவளது கவலையாக இருந்தது.

கராத்தே பயிற்சி வகுப்பு நடக்கும் கொம்மியுனிற்றி ஹாலின் கதவை திறந்து உள்ளே சென்றவளுக்கு அங்கு வெளிச்சம் இல்லாமல் இருளாக இருந்தது ஏமாற்றமாக இருந்தது. தோள் பையை கழற்றி ஓரத்தில் வைத்து விட்டு வோசிங் அறையில் சென்று அங்குள்ள

கண்ணாடியில் தனது ஆடை அலங்காரத்தை மீண்டும் பார்க்க சென்றாள். உள்ளே சென்று உடலை வளைத்து திருப்பி பார்த்தபோது பிராதான் இறுக்குவது என முடிவாக தெரிந்தது. அந்த இறுக்கம் கராத்தே பயிற்சிக்கு தடையாக இருக்கும் என்பதால் மேலாடையை கழற்றிவிட்டு முன்பக்கத்தை பிடித்து இழுத்து பெரிதாக்க முடியமா எனப் பார்த்தாள். அது சரி வராததால் பின்பகுதியை சிறிது சுண்டி இழுத்தபோது பிராவின் பின்பகுதியில் உள்ள இரண்டு கொக்கியில் கீழ் கொக்கி தெறித்தது. கண்ணாடியில் ஒரு முலை மேலும் மற்றது கீழுமாக தோற்றமளித்தது. 'ஷிற் மம், மலிவாக வாங்கினால் இப்படித்தான்' என கூறிவிட்டு பிராவை கழற்றி குப்பைக் கூடைக்குள் எறிந்து விட்டு தலைமயிரை ஒதுக்கிவிட்டு முகத்தையும் உதட்டையும் கண்ணாடியில் பார்த்து விட்டு கழுத்தை திருப்பி நளினத்தை வரவழைத்து தன் அழகை வியந்தபடி சில நிமிடங்கள் நின்றாள். பின்பு வெறும் உடல் மேல் மேலாடையை மட்டும் அணிந்து அதற்கு மேல் கராத்தே உடுப்பை போட்டபோது முலைக்காம்புகள் துருத்திக் கொண்டு நிற்பதை பார்த்து, பதினைந்து வயதில் எனக்கு இது அதிகம் என மார்பகங்களை பார்த்து கூறி விட்டு கிளாசை இரத்து செய்து விட்டு வீட்டுக்கு செல்வோம் என நினைத்தாலும் இப்பொழுது அம்மா வரமாட்டள். கிறிஸ்ரியனுக்கு என்ன காரணம் சொல்லி கிளாசை இரத்துப் பண்ணுவது என தன்னை நொந்து கொண்டு வாசிங் அறையின் கதவை திறந்து கொண்டு வெளியே வரும்போது 'லேட்டானதற்கு என்னை மன்னிக்க வேண்டும்' எனக்கேட்டபடி உள்ளே வந்தவன் வாசலில் இருந்த லைட்டின் சுவிச்சை தட்டி எரியவிட்டான். ஷரனுக்கு அவன் முன்பு நிர்வாணமாக நிற்பது போன்ற உணர்வு ஏற்பட்டு தலை குனிந்து விட்டாள். சில வினாடியில் தன்னை சுதாரித்துக்கொண்டு 'இன்று கிளாசை இரத்து பண்ணுவதற்கு ஏலுமா? என்றாள்.

'ஏன் என்ன பிரச்சினை? உடம்புக்கு முடியவில்லையா?

'இல்லை'

'அப்ப என்ன?'

சிறிது நேர மவுனத்தின் பின் 'இன்று கிளாஸை நடத்தலாம். ஆனால் ஒரு நிபந்தனை'

கிறிஸ்ரியனுக்கு மனதில் சிறிது ஆத்திரம் ஏற்பட்டது. இவளுக்கு என்ன வந்தது? நிபந்தனைகள் வைக்கிறாளே?

‘இன்று என்னைப் பார்க்காமல் கிளாஸ் எடுக்க வேண்டும். எனது பிரா அறுந்து விட்டது. அதை சுழற்றி எறிந்து விட்டு வந்திருக்கிறேன்’

பதினைந்து வயதுப் பெண்ணிடம் இப்படியான பெரிய வார்த்தைகளா?

இந்த வார்த்தைகளை கிறிஸ்ரியன் எதிர்பார்க்காததால் மவுனமாகிட்டான்.

அவனைக் கண்களால் துளைப்பதுபோல் பார்த்தபடி நின்றாள் ஷரன்.

சிறிது நேரத்தில் தன்னை சுதாரித்துக் கொண்டு ‘நான் எனது மாணவிகளை அப்படி பார்ப்பது இல்லை. நீ வெட்கப்பட வேண்டியது இல்லை. பயிற்சியை தொடங்குவோம் ‘என்று சொல்லி விட்டு தனது கராத்தே உடையை அணிவதற்காக ஆண்களின் வாசிங் அறைக்கு சென்றுவிட்டான்.

இந்தப் பதிலை ஷரன் எதிர்பார்க்கவில்லை. தன் அழகு, இளமை அந்த இடத்தில் உதாசீனப்படுத்தப்பட்டு குப்பைக் கூடையில் தனது பிரா போல் தூக்கி வீசப்பட்டதான உணர்வு அவளுக்கு ஏற்பட்டது. பத்து சிநேகிதிகளுடன் செல்லும் போது எதிரில் வரும் ஆண் தன்னை மட்டுமே பார்க்க வேண்டும் அல்லது பார்பான் என்பது ஷரனின் உறுதியான நம்பிக்கையாக இருந்தது. பல முறை இந்த விடயத்தில் பந்தயம் கட்டி விட்டு மற்றைய நண்பிகளிடம் இருந்து விலகிச் செல்லும் போது எதிரில் வரும் ஆண் தன்னை பார்ப்பதாக நினைப்பதுடன், மற்றவர்களுக்கு சொல்லி காட்டுவது வழக்கம். இப்படியான தற்பெருமை பல முறை ஷரனை சிநேகிதிகளிடம் இருந்து அன்னியப்படுத்துவது இவளுக்கு புரிந்தாலும் அதை பொருட்படுத்துவதில்லை. என்னிடம் இருப்பதை விளம்பரப்படுத்துகிறேன். நீங்கள் அதற்கு எரிச்சல் அடைய வேண்டாம் என்பதே இவளது பதிலாக இருக்கும்.

கிறிஸ்ரியன் வார்த்தைகள் அவளது கர்வத்தில் ஊசியால் குத்தியது போல் வலித்தது. அவளது அழகிய வதனத்தை ஆத்திரமும் அவமானமும் கிரகணம் போல் கவ்வின. கோபத்தால் சிவந்த முகத்துடன் அங்கிருக்காமல் அந்த இடத்தை விட்டு ஓடி விட விரும்பினாள். இவனிடம் இருந்து கராத்தே கற்றுக் கொள்வதை நிறுத்தவேண்டும். இங்கிருந்து ஓடுவதுதான் நல்லது.

ஓடினால் ஐந்து கிலோமீட்டரில் இருக்கும் வீட்டுக்கு ஓடவேண்டும். அம்மாவுக்கு எப்படி காரணத்தை சொல்லுவது? இதை எப்படி புரியவைப்பது என்பதால் மனதை மாற்றிக்கொண்டாள். வேறு விதமாக இதற்கு முடிவு கட்டவேண்டும். 'ஷரனை அவமானப்படுத்தியவர்கள் தப்ப முடியாது. அதற்கு பதிலாக அவர்கள் பலமடங்கு அவமானப்படவேண்டும். நான் யார் என்பதை சில காலத்தில் காட்டுகிறேன். அழகையும் அறிவையும் ஒருங்கு சேர வைத்திருக்கும் நான் இவனை எனக்கு பின்னால் வர வைக்கும் வரையும் கராத்தே வகுப்புக்கு பிராவே கட்டப் போவதில்லை' என சபதம் போட்டு வாய் விட்டு சொல்லி சிரித்தாள்.

ஷரனது முக பிரதிபலிப்புகளை காணவோ, வார்த்தைகளை கேட்கவோ கிறிஸ்ரியன் அவள் எதிரே இருக்கவில்லை. இருந்திருந்தால் இப்பொழுது என்ன சொல்லி விட்டேன்? இவளுக்கு என்ன நடந்துவிட்டது? என தன் தலையை பிய்த்துக் கொண்டிருப்பான். அவன் வாசிங் அறையில் இருந்து கராத்தே உடையணிந்து வந்த போது ஷரனும் தன்னை சுதாரித்தக் கொண்டு பயிற்சிக்கு தயாரானாள்.

பல பிரத்தியேக வகுப்புகள் மூலம் கராத்தேயின் கறுப்பு பட்டியை பெற்றுக்கொண்டதோடு உயர்தர பரீட்சையிலும் தேறி பல்கலைக்கழகத்தில் முதல் வருட மிருகவைத்திய மாணவியாகி விட்டாள். நினைத்தது போல் கிறிஸ்ரியின் காதலியாகவும் ஆகிவிட்டதின் மூலம், நினைத்ததை முடித்த பெருமை அவளது கர்வத்தையும் அகங்காரத்தையும் கூட்டிவிட்டது.

ஷரன் பல்கலைகழகம் புகுந்தவுடனே வீட்டை விட்டு வெளியேறி கிறிஸ்ரியனுடய வீட்டில் வந்து வசிக்கத் தொடங்கியதற்கு காதலுக்கு அப்பால் ஒரு காரணம் இருந்தது. பாட்ணராக ஒன்றாக ஒரு வீட்டில் வாழும் போது சொத்துரிமை வந்துவிடுகிறது. அவுஸ்திரேலிய சட்டத்தில் ஒன்றாக கூடி வாழும் பாட்ணர்கள் மனைவிக்கு சமமாக அங்கீகாரம் கிடைக்கிறது. பதினெட்டு வயதில் கிறிஸ்ரியனுடய சொத்துகள் மூலம் பல மில்லியன்களுக்கு சொந்தக்காரியாகிய விடயம் ஷரனின் பெற்றோர்கள்கூட அறிந்திருக்கவில்லை.

□ □ □

**ப**ல்கலைக்கழகம் முடிந்தவுடன் கருவுற்றதால் வேலைக்கு போகவில்லை. வீட்டில் இருந்தபடி தனது வாழ்க்கையை சந்தோசமாக கழித்தாள். அந்த காலத்தில் கிறிஸ்ரியன் அவளை

பட்டுத் துணியில் பொத்தி வைத்து வைரமாக நடத்தினான். ஷரன் பட்டத்து இளவரசியை போல் அவனது வீட்டில் வலம் வந்தாள்.

அமைதியாக சென்ற அவளது வாழ்க்கையின் நீரோட்டத்தில் அலைகள் மோதியது. குழந்தை பிறந்தவுடன் வாழ்க்கையின் நுனிகரும்பு வாயில் கசந்தது. கிறிஸ்ரியனுக்கு நீண்ட நேரம் வேலை, இரவு வேலை, மற்றும் அவசர அழைப்பு போன்றவை உள்ள தீயணைப்பு படை வேலையில் ஏற்படும் உடல் களைப்புடன், ஏற்படும் மனத் தளர்வோடு வீட்டுக்கு வரும் போது முக மலர்ச்சியோடு தன்னை உபசரிக்கும் சாதாரண ரக மனைவியை தேடுபவனுக்கு, தனது ரீன்ஏஜ் வருடங்களை தன்னிலும் பதினைந்து வயது கூடிய ஒருவனுக்காக தொலைத்து விட்ட அறியாமையை எண்ணி பச்சாபத்தில், விட்டதை பிடிக்கும் மனநிலையில் தனது அழகையும் அறிவையும் மேர்கூரி வெளிச்சம் போட்டு விளம்பரப்படுத்த நினைக்கும் ஷரனது செயல்கள் பிடிக்கவில்லை. ஷரனது இளம் வயதின் பலதரப்பட்ட சிறு பிள்ளை விளையாட்டுகளை பொறுத்துக்கொண்டு விட்டுக்கொடுப்புகளுடன் நடந்துகொள்ள தயாராகிய கிறிஸ்ரியனுக்கு பொறுத்துகொள்ளமுடியாத விடயம் அவனது காம உணர்வுகளுடன் பூனை - எலி விளையாட்டு காட்டுவது. தனக்கு பிடிக்காதது வீட்டில் நடந்தால் அல்லது தனக்கு விரும்பிய கவனிப்பு கிறிஸ்ரியனிடம் இருந்து கிடைக்காவிடில் வேறு அறைக்குள் குழந்தையுடன் படுத்துக் கொள்வது, தலையிடி என சொல்லிவிட்டு மாத்திரை போடுவது போன்ற விடயங்கள் ஆரம்பத்தில் சிறுபிள்ளை விளையாட்டு போல் ஆரம்பித்தாலும் போகப் போக கிறிஸ்ரியனை பொறுமையை இழக்க வைத்தது. கைக்குழந்தைக்காரி என்றதால் மனதுக்குள் திட்டியபடி இருந்தான். வெளிப்படையாக விரக்தியை காட்டவில்லை. ஆனால் வேலைக்கு போகவேண்டும் என ஷரன் பேசத் தொடங்கிய போது இரண்டு பேருக்கும் இடையில் உருவாகிய வாய்த்தர்க்கம் ஷரனது இடது கன்னம் கண்டி சிவப்பாகியதில் முடிந்தது. இந்த சம்பவத்தின் பின் ஒரு கிழமை குழந்தையுடன் தாய் வீட்டுக்கு சென்றாள். அங்கு அதிக நாள் இருப்பதற்கான வரவேற்பு இல்லாததால் வீடு திரும்பி, வீட்டுக்கு அருகாமையில் பகுதி நேர மிருகவைத்தியராக வேலையொன்றில் சேர்ந்தாள். இரண்டு வருடங்களாக நிழல் யுத்தம் நடைபெறுகிறது. சொத்துகள் பற்றிய சிந்தனையும், சிறுகுழந்தையும் விவாகரத்தில் ஈடுபடாமல் இரண்டு வருடத்தை தள்ள வைத்தது.

இந்த இரண்டு வருடத்தில் தாய் வீட்டுக்கு செல்வதையும் தவிர்த்தாள். தந்தை இறந்தபோது தாயுடன் ஏற்பட்ட வாய்த்தர்க்கம்

அவளை அப்படி செய்யவைத்தது. மனதின் சோகங்களை சொல்லி ஆறுவதற்கு வடிகாலாககூட தாயால் இருக்க முடியவில்லை. அதற்கு காரணம் தான் என்பது ஷரனுக்கு நன்றாகத் தெரியும்.

கருவுற்று இருந்த போது ஷரனது தந்தை இறந்ததாக தாயின் தொலைபேசி வந்தபோது 'உன் புருஷனுக்காக நான் வந்தாலும் அழமாட்டேன். அப்படி இருக்க நான் வந்து போவது அர்த்தமில்லாத விடயம்'.

'இதுதான் உனது முடிவா?'

'உனக்காக வேணுமென்றால் வருகிறேன்' என்றாள்.

'உனது தகப்பன் என்பதை நினைத்துக்கொள்'

'அம்மா ,அவர் என்னையும் உன்னையும் கொடுமைப் படுத்தியதையும் சேர்த்து நினைத்துக் கொள்கிறேன்'

'அவர் காலத்து ஆண்கள் அப்படித்தான் வாழ்ந்தார்கள். அதுவும் இராணுவத்தில் இருந்ததால் கரடுமுரடாக இருந்தார்'.

'அந்த கரடுமுரட்டுத்தனத்தை நான் பேசவரவில்லை. உனக்கு தெரியாமல் வேறு தொடர்பு வைத்திருந்ததை நான் நினைத்துப் பார்க்கிறேன்'.

'அது ஒரு மின்னல்போல். ஆண்கள் பலருக்கு அப்படி தொடர்புகள் இருந்தது. அவரது தொடர்பு தானாக இல்லாமல் போய்விட்டது.மேலும் அதைப்பற்றி கவலைப்படவேண்டியது நான். உனக்கு என்ன வந்தது?'

'உன்னால் அவரை இலகுவாக மன்னிக்க முடிகிறது. நான் கொலையே செய்திருப்பேன்'.

'அப்படி கொலை செய்ய முனைந்தால் தொண்ணூறு வீதமான ஆண்கள் இறந்தும் தொண்ணூறு வீதமான பெண்கள் சிறையிலும் இருக்கவேண்டி இருக்கும். தெரியுமா?'

'என்னால் மன்னிக்க முடியாது. நான் அதற்காக சிறை செல்வதற்கும் தயார்'

'உன்னோடு தர்க்கம் செய்ய நான் தயாரில்லை. நீ வருகிறாயா இல்லையா?

‘அதுதான் உனக்காக வருகிறேன் என சொன்னேன்’.

‘அப்படியானால் நீ வரவேண்டாம்’

‘உனது விருப்பம்’

‘இப்படியான விட்டுக் கொடுப்பில்லாமல் நீ வாழ நினைத்தால் அது முடியாமல் இருக்கும் என்பதை பிற்காலத்தில் புரிந்து கொள்வாய்’ என்று கூறியது நினைவில் வந்தது.

மெல்பன் சிட்டி வைத்தியசாலையில் வேலை கிடைத்தபோது பல வருடங்களுக்கு பின் உண்மையான சந்தோசத்தை அடைந்தாள். இந்த பதினைந்து வைத்தியர்கள் கொண்ட இடத்தில் விதம் விதமான சர்ஜரிகளும், நோய்களும் கொண்ட செல்லப்பிராணிகள் வந்து சிகிச்சை பெறுவதால் இங்கு பெறப் போகும் பயிற்சி எதிர்காலம் முழுதும் தொடர்ந்து வரும் என்பதும், இந்த பயிற்சியை வைத்து வரும்காலத்தில், சொந்தமாக தொழில் தொடங்க முடியும். அதுவே தனக்கு சுதந்திரமான எதிர்காலத்தை தோற்றுவிக்கும் என்பது அவளது எதிர்கால கனவாக இருந்தது. அவளது கனவை அறிந்ததால் கிறிஸ்ரியனுக்கு அவள் வேலைக்கு செல்வது பிடிக்கவில்லை. முழு நேர வேலை செய்தால் அது அவளது கர்வத்தையும் அகங்காரத்தையும் அதிகப்படுத்தும். அதைவிட மார்க்கை கவனிப்பது குறையும். ஆனாலும் கடந்த இரண்டு வருடங்களும் பகுதி நேர வேலை செய்தவள் இப்பொழுது முழு நேரம் செய்ய போவதை தடுக்க முடியாது என்பதால் அவளது இஷ்டத்துக்கு விட்டிருந்தான்.

கலிபோர்னியாவுக்கு கிறிஸ்ரியன் போனதால் ஷரனுக்கு தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு சிந்திக்க நேரம் கிடைத்தது. இரண்டு நாட்கள் பகலும், மூன்றாவது நாள் இரவும் தொடர்ந்து வேலை செய்யும் போது கிடைத்த இரண்டு நாள் விடுமுறை அவளுக்கு வரப்பிரசாதமாக இருந்ததது. முதல் நாள் சிகை அலங்காரத்துடன் கால், கை நகங்களை ஒழுங்கு படுத்தி கால்களின் மயிரை வக்சினால் அகற்றுவதற்கு பெரும்பாலான பகல் நேரம் கழிந்து விட்டது. கடந்த நான்கு வருடங்களாக தன்னை கவனிக்காது தவறவிட்டதை நினைத்த போது அவளுக்கு கண் கலங்கியது. ரீன்ஏஜ் காலத்தில் இருந்து பல்கலைக்கழக காலத்திலும் கிறிஸ்ரியனோடு இருந்த நாட்கள் கொன்ரயினரில் வைத்து அனுப்பப்பட்ட அகதியை போல் குறைந்த பிராணவாயுவை சுவாசித்துக் கொண்டு மூச்சுத் திணறியபடி

வாழ்ந்திருக்கிறேன். எனக்கு நானே கைவிலங்கு இட்டுக் கொண்டது என்று அம்மா சொன்னது எவ்வளவு உண்மையானது?.

எப்படி தொலைத்த நாட்களை திரும்பிப் பெறப்போகிறேன்?

நிர்வாணமாக படுத்துக் கிடந்தவளுக்கு கட்டிலின் அருகே உள்ள சிறிய மேசையில் அடல்ற் சொப்பில் நேற்று வாங்கி வந்த டில்டு பாக்கட் உடைக்கப்படாமல் கிடந்தது. எடுத்து உடைத்து பார்த்தாள். அது ஆபிரிக்க ஆணின் ஆண்குறி போல் கருமையான இரப்பரால் செய்யப்பட்டு இருந்தது. ஏற்கனவே வீட்டில் வெள்ளை ஆண்குறி இருக்கிறது. கடையில் வேண்டும் போதாவது வித்தியாசமாக இருக்கட்டுமே என்றுதான் அதைத் தேர்ந்தெடுத்தாள்.

கடந்த ஒருமாதமாக எந்த உடல் அணைப்பு இல்லாமல் இரவுகளை கழித்தாள். பல இரவுகள் வேலை என கிறிஸ்ரியன் வராமல் இருந்தான். மற்றைய இரவுகளில் கட்டிலின் மறுபக்கத்தில் முகத்தை திருப்பியபடி ஷரனில் உடல்படாமல் தூங்கினான். ஷரனுக்கு அவன் நடத்தைகள் வித்தியாசமாக இருந்தாலும், இவள் வீம்பு அதை பொருட்படுத்த மறுத்தது. முழுநாள் வேலையான நாட்களில ஏற்பட்ட உடலின் களைப்பு, உடல் உறவு எண்ணத்தையே இல்லாமல் பண்ணி இருந்தது. இதனால் கிறிஸ்ரியன் புறக்கணிப்பு ஒரு விதத்தில் அவளது தேவையாக இருந்தது.

பியூட்டி பார்லருக்கு போய் வரும் வழியில் அந்த அடல்ற் சொப்பின் விளம்பரப் பலகையின் கவர்ச்சியில் உள்ளே சென்றாள். விற்பனைக்கு அங்கு நின்ற அந்த இளம் பெண், நத்தார் காலத்துக்காக வளர்க்கப்பட்ட பன்றிபோல் பருத்து கொழுப்பாக இருந்தாள். அவளது இரண்டு கைகளிலும் கறுப்புக் கலரில் டிராகன் மிருகத்தை பச்சை குத்தி இருந்தாள். இறுக்கமான கருப்பு பெனியன் அவளது பருமனை மேலும் வெளிக்காட்டியது. உடலை ஒழுங்காக பராமரித்து வைத்துக்கொள்ளத் தெரியாத ஜன்மமாக இருக்கிறாளே? இறுக்கமாக கட்டிய மூட்டைபோல் பிதுங்கி இருக்கும் இலச்சணத்தில் இவளுக்கு என்ன பச்சை குத்தல் வேண்டி இருக்கிறது? அந்தப் பெண் மீது இனம் புரியாத வெறுப்பு ஏற்பட்டது. நேராக டில்டோ வைத்திருக்கும் செல்புக்கு சென்று ஒரு டில்டோவை எடுத்துக் கொண்டு அந்த விற்பனைப் பெண்ணை நோக்கி வந்தாள். அந்த டில்டோவை எடுத்ததைக் கண்டு 'இதைப் பாவித்த அனுபவம் உண்டா' எனக் கேட்டபோது 'இல்லை' என உதடுகளை பிதுக்கி

ஒன்றாக குவித்து சொன்னதும் அந்தப் பெண்ணின் முகத்தில் ஒரு சிரிப்பு வந்தது.

'முதல் தடவையா?' என சொல்லி முடிக்க முன்பாக இடைமறித்து 'நான் ஒரு சேர்ஜன். இதை எப்படி பாவிப்பது என கண்டு பிடிப்பேன். உமது உதவி தேவைப்படாது'. எனக்கூறி விட்டு, வாய் பேசாது திகைத்து சிலையாகிப் போன அந்த பெண்ணின் கைகளில் காசை திணித்து விட்டு வெளியே சிறிது தூரம் நடந்து விட்டு, மீண்டும் கடையின் உள்ளே சென்று அந்தப் பெண்ணிடம் வந்து 'உமது முகம் இப்படி போனது எனக்கு பிடித்திருக்கு'என ஏளனம் கலந்த புன்னகையுடன் மிகுதிப் பணத்தை வாங்கினாள். காரில் ஏறிய போது அந்தப் பெண்ணுக்கு அப்படி சொல்லி இருக்க கூடாது என நினைக்கவும் தவறவில்லை.

பல முறை சண்டை நடந்தாலும் ஒரு கிழமைக்கு மேல் உடலுறவு கொள்ளாமல் ஒதுங்கி இருப்பது கிறிஸ்ரியனின் வாடிக்கையல்ல. இந்த முறை ஒரு மாதமாகிவிட்டது. சிட்டி வைத்தியசாலைக்கு சேர்ந்தபின் இரண்டாம் முறையாக நான் சனிற்றறி பாட் கட்டவேண்டி இருந்தது. அப்படியானால் நாலு கிழமைக்கு மேலாக இருக்கவேண்டும். வேலையில் நான் மறந்து போய் இருக்கலாம். கார்த்திகை மாதத்து நாய் போல் பன்னிரண்டு மாதமும் இருக்கும் கிறிஸ்ரியனால் எப்படி மறக்க முடியும்? நான் நிறைமாதத்தில் இருந்தபோது கூட தேடி அலைந்தானே? என்ன நடந்தது? ஏதாவது இரகசியத் தொடர்புகள் வேறு பெண்களுடன் ஏற்பட்டுவிட்டதா? எதற்கும் கலிபோர்னியாவில் இருந்து வரட்டும்.

மனதுக்குள் சினம் கொப்பளித்தது. பாஸ்டட் நான் அடிவாங்கிக் கொண்டு அவனுக்காக அடிமை போல் இருக்கிறேன். இவனுக்கு வேறு பெண் தொடர்பு ஏற்பட்டால் இரவில் ஆளை முடிக்க வேண்டியதுதான். இதை எப்போதோ செய்திருக்க வேண்டும். மூன்று வருடத்துக்கு முன் விவாகரத்து செய்தால் நான் என்பாட்டில் போய் கொண்டிருப்பேன் என சுய கழிவிரக்கம் அவளை பீடித்தது.

எழும்பி அந்த டில்டோவை எடுத்துப் பார்த்தாள். நிர்வாணமாக நின்ற தன்னையும் கையில் இருந்த டில்டோவையும் பார்த்து விட்டு வாய்விட்டு சிரித்தாள் 'இந்தளவு கீழ் நிலைக்கு நான் போய் இருக்கக் கூடாது. வீணாக அந்த பச்சை குத்திய பெண்ணுக்கு அலுப்புக் கொடுத்தது தான் மிச்சம் ' எனக் குப்பைக் கூடைக்குள் போட்டு அந்த குப்பை பையை கட்டி போட்ட பின்பு மீண்டும் கட்டிலில்

வந்த இருந்து கொண்டு கிறிஸ்ரியன் வேறு பெண்ணொருத்தியிடம் தொடர்பு ஏற்படுத்தி பிரச்சினைப்படுத்தாமல் விபசாரியிடம் போய் வந்தால் அதை என்னால் மன்னிக்க முடியும். அப்படியானாலும் ஆண் உறையை உபயோகித்திருப்பான் என நம்புகிறேன். தனது உடலை கவனமாக உடற் பயிற்சி செய்து பாதுகாத்து வருபவன் இந்த விடயத்தில் கவனமாக நடப்பான். இல்லாவிடில் இரத்த பரிசோதனையின் மருத்துவப் பத்திரத்தை கேட்டு விட்டுதான் உன்னோடு உடலுறவு கொள்வேன் என சொல்வேன். தன்னை நம்பவில்லை என அடிப்பான். இப்ப மட்டும் அடிக்காமல் இருக்கிறானா? என தனக்குத்தானே பேசிக்கொண்டாள்.

லைக்காவை இன்றைக்கு வாக்கிங் கொண்டு செல்லவேண்டும் என்ற சிந்தனை வந்ததும் உடைமாற்றிக்கொண்டு வெளிக் கிளம்பினாள். முகத்தில் பாதி கறுப்பும் பாதி வெள்ளையுமான புல்ரெரியர் இனத்து லைக்கா அவளை எதிர்பார்த்தபடி வாலை ஆட்டியபடி அவளது கால்களை சுற்றிவந்தது.

# 13

'**சா**ண்ட்ரா வேலையை ராஜினாமா செய்துவிட்டு சிட்னிக்கு போய் விட்டாள்' என்றான் சாம்

'என்ன அப்படி அவசரமாக?'

'சாண்ட்ராவின் காதலி மெலிசா ஆண் நண்பரோடு சென்றுவிட்டதால் இருவரது உறவும் சண்டையில் முடிந்தது'

'மெலிசா விட்டு போனால் ஏன் சிட்னி போக வேண்டும்? தனது வேலையை விடவேண்டும்?

'அது உங்களுக்கு புரியாது. இவர்களது உறவில் ஒருவரை ஒருவர் விட்டு விலகுவதை ஏற்றுக் கொள்வார்கள். ஆனால் ஆண்களோடு செல்வதை மிகவும் பாரிய துரோகமாக மன்னிக்க மாட்டார்கள்'.

'இது புதுமையானது. எனது அறிவுக்கு அப்பாற்பட்ட விடயம் என நினைக்கிறேன்'எனறான் சுந்தரம்பிள்ளை

சாண்ட்ரா லெஸ்பியன் உறவு வைத்திருக்கும் பெண். சாமுக்கும் சுந்தரம்பிள்ளையும் சாண்ட்ராவை சினேகிதியாக நினைத்து பழகி வந்தனர். அவளோடு மறக்க முடியாத சம்பவம் சிலகாலத்திற்கு முன்பு இருவருக்கும் நடந்தது.

இந்த மிருக வைத்திய சாலைக்கு ஒரு அம்புலனன்ஸ் சேவை உண்டு. வயதானவர்கள் மற்றும் நடக்க முடியாதவர்களின் வீடுகளுக்கு சென்று அவர்களின் நோயுற்ற செல்லபிராணிகளை வைத்தியசாலைக்கு கொண்டு வந்து வைத்தியம் பார்த்து விட்டு மீண்டும் கொண்டு போய் சொந்தக்காரர்களிடம் ஒப்படைக்கும் வேலை இந்த அம்புலன்ஸால் சாத்தியப்படும்.

இந்த வைத்திய சேவை வைத்தியசாலையின் சுற்று வட்டாரத்திலே உள்ளவர்களுக்கு மட்டும்தான் செய்வது வழக்கம். இந்த சேவைக்கு ஒரு குறைந்த அளவு பணத்தை அறவிடுவார்கள். இந்த அம்புலன்ஸின் சாரதியான சாண்ட்ராவுக்கு முப்பத்தைந்து வயது இருக்கும். மிகவும் வேடிக்கையானவர். கள்ளம் கபடம் இல்லாமல் நேரடியாக பேசுவதும் அதே வேளையில் தன்னை சீண்டுபவர்களிடம் எடுத்து எறிந்து தூசண வார்த்தைகளை பாவிப்பதும் இவரது சுபாவம். இவர் ஒரு லெஸ்பியன். அதாவது பெண்களிடம் மட்டும் உறவு வைத்துக் கொள்பவர்.

ஆண்வர்க்கம் அலட்டிக் கொள்ளாத சாராசரிக்கும் குறைவான அழகுதான். ஆனால் சிரிப்பதும் கண்ணை விழித்து கதைப்பதும் கழுத்தை வெட்டுவதும் கவர்ச்சியாக இருக்கும். அவளது முகத்தில் மோதகத்திற்கு வைத்த முளை போன்ற சிறிய மூக்கில் ஒரு வெள்ளி வளையம் அவளது முகத்திற்கு அழகு சேர்த்து பார்ப்பவரை மீண்டும் பார்க்கச் சொல்லும். எப்பொழுதும் பாண்டு, சட்டை அணிந்திருப்பாள். தலையும் குறிப்பாக மயிரை வெட்டிய தோற்றம்.

சாண்ட்ரா ஒரு நோயுற்ற பிராணியை கொண்டு வந்தால் அந்த பிராணிக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பது வைத்தியசாலை நடைமுறை. அதற்கு காரணம் சாண்ட்ரா வேறு நோயுற்ற மிருகங்களை கொண்டு வர மீண்டும் வாகனத்தில் திரும்பி செல்லவேண்டும்.

சில வைத்தியர்கள் சாண்ட்ராவை புறக்கணித்து காத்திருக்க வைப்பார்கள். இதை தாங்க முடியாமல் கண்டபாட்டில் தூசண வார்த்தைகளால் சாண்ட்ரா மற்றவர்களிடம் பேசுவார். சாண்ட்ராவின் லெஸ்பியன் பாலியல் உறவு பல பேருக்கு வெறுப்பைக் கொடுக்கிறது என்பது அவர்கள் சாண்ட்ரா இல்லாத போது புறம் பேசுவதில் இருந்து வெளிப்படையாக தெரிந்தது.

இப்படி வெறுப்பை காட்டுபவர்களில் சிலர் மட்டுமே ஆண்கள். பெரும்பாலானவர்கள் சாண்ட்ராவைப் பற்றி ஏளனமாக பேசி தங்கள் மன அழுத்தங்களை தீர்த்துக்கொள்வார்கள். மற்றவர்கள் வெளியே சொல்லாமல் மவுனமாகவும், மற்றவர் கூற்றுக்கு ஆமாம் போட்டும் புறக்கணிப்புகள் செய்தார்கள். ஒரு விதத்தில் தலித் சமூகத்தினரை இந்தியாவில் புறக்கணிப்பு செய்வது போன்றது என எடுத்துக் கொள்ளலாம்.

ஒரு பால் உறவுக்காரரை புறக்கணிப்பு செய்யமுடியாது என அவுஸ்திரேலியாவில் சட்டவிதிகள் இருந்தாலும் இந்த மாதிரியான புறக்கணிப்புகள், ஏளனங்களை பொறுத்துப் போக வேண்டிய நிலைதான் உள்ளது. இவர்களை சட்டை செய்யாமல் தனது வேலையை பார்த்துக் கொள்வதே சாண்ட்ராவின் தனித்தன்மை. சாண்ட்ரா மேல் இருந்த இந்த அழுத்தம் பிற்காலத்தில் லெஸ்பியனான பெண் மிருக வைத்தியர் ஜெசிக்கா வந்த போது ஆரம்பத்தில் இருந்ததை விடக் குறைந்ததை உணர்ந்து கொள்ளமுடிந்தது. ஒரு விதத்தில் இங்கேயும் இந்தியா இலங்கை போன்ற நாடுகளில் உள்ள சாதிப் புறக்கணிப்பு மாதிரியான ஒற்றுமையை சுந்தரம்பிள்ளையால் பார்க்க முடிந்தது. பொருளாதாரத்தில் கீழ் மட்டத்தில் உள்ள தாழ்தப்பட்ட சாதியில் பிறந்தவர்கள் உயர்சாதியினரால் புறக்கணிப்பவர்கள் அதே வேளையில் உயர்மட்ட உத்தியோகத்தில் தாழ்த்தப்பட்ட ஜாதியினர் இருந்தால் உயர்ஜாதியினர் அடங்கி தங்கள் காரியத்தைப் பார்ப்பார்கள்.

சுந்தரம்பிள்ளையை பொறுத்த விடயத்தில் சாண்ட்ரா கொண்டு வந்த செல்லப் பிராணிகளுக்கு முன்னுரிமை அளித்து விடுவான். இந்த பாலியல் விடயம் அவர்களது தனிப்பட்ட சுதந்திரம் மட்டுமல்ல, வேலையிடத்தில் இந்த விடயங்கள் அவசியமற்றது என்பது சுந்தரம்பிள்ளையின் கருத்து. இதைவிட தன்னை லெஸ்பியன் என மறைக்காமல் சொல்லிய அவளது நேர்மையும் பிடித்திருந்தது. ஒரு முறை தியேட்டரில் ஒபரேசன் செய்து கொண்டிருந்த போது உள்ளே வந்ததும் சுந்தரம்பிள்ளை சாண்ட்ராவின் மூக்கு வளையம் நன்றாக இருக்கிறது எனச் சொன்னதும் அங்கு வேலை செய்து கொண்டிருந்த சாம் ‘சாண்ட்ராவின் அடுத்த வளையத்தை நீங்கள் பார்க்கவில்லை. பார்க்காததால்தான் மூக்கு வளையத்தைப் பாராட்டுகிறீர்கள்’. பீடிகை போட்டான்.

மர்மமான புன்னகை அவனது முகத்தில் மலை மேல் மழை முகில் என படிந்திருந்தது.

சுந்தரம்பிள்ளை பதில் சொல்லு முன்பு ‘அதைப் பற்றி பேசாதே பாஸ்ரட்’ என சாண்ட்ரா கூறிவிட்டு வாயைத் திறக்க முற்பட்ட சாமின் வாயை பொத்தினாள்.

சாண்ட்ரா சராசரி பெண்களிலும் பார்க்க உயரமும் உறுதியான உடலும் கொண்டதால் சாமினால் அவளது கையை உடனே தள்ளி விடமுடியவில்லை. இரண்டு நிமிடங்கள் ஒருவரில் இருந்து

ஒருவரை விடுவிக்க சிறிய மல்யுத்தம் ஒப்பரேசன் தியேட்டரில் நடந்தது.

இருவருக்கும் நடந்த இழுபறியால் மறைக்கப்பட்ட விடயத்தில் பெரிய சூக்குமம் இருப்பதாக தோன்ற, அதை அறிய சுந்தரம்பிள்ளையின் மனம் ஆவல் கொண்டது. நெக்ரரீன் பழத்தின் கொட்டையை விழுங்கி, அந்தக் கொட்டை வயிற்றில் அடைத்து மூன்று நாளாகிய பின்பு வைத்தியசாலைக்கு கொண்டு வந்த மால்ரீஸ் நாயின் குடலில் அந்த கொட்டையை வெளியே எடுப்பதற்காக நாயின் வயிற்றை வெட்டி செய்த ஒப்பரேசனைத் தொடர்ந்து செய்து கொண்டிருந்தான். அவனது கைகள் நாயின் வயிற்றின் உள்ளேயும் கண்கள் சாண்ட்ராவிலும் இருந்தன.

'சரி, நான் சிவாவுக்கு சொல்லவில்லை' என சரணடைந்து சாம் சாண்ட்ரா பிடியில் இருந்து விலகினான்

'கமோன் சாண்ட்ரா என்னிடம் என்ன மறைக்கிறாய்?. சாமுக்கு தெரிந்தது ஏன் எனக்கு தெரியக்கூடாது? என நாயின் குடலில் சிக்கிய நெக்ரரீன் கொட்டையைத் தேடியபடி சொன்னான்.

'என்ன நாய் குடலையெல்லாம் வெளியால் எடுத்து போடுகிறாய்?' என்றபடி மேசையின் அருகே வந்து நாயின் வயிற்றை உற்றுப் பார்த்தாள் சாண்ட்ரா.

'நாயின் வயிற்றில் சிக்கிய நெக்ரரீன் கொட்டையை தேடுகிறேன். இது கடலில் மீன் பிடிப்பது போல் பொறுமையாக செய்யவேண்டும். நீ கதையை மாற்றாமல் நான் கேட்ட கேள்விக்கு பதில் சொல்' என சொல்லிக் கொண்டு இருந்த வேளையில் சுந்தரம்பிள்ளை யின் கைவிரல்கள் இரைப்பையில் இருந்து துவங்கி நாயின் குதம்வரையும் உள்ள குடலை மெதுவாக இரண்டாவது தடவையாக வருடிக்கொண்டு வரும்போது நடுக்குடலில் தடிப்பாக அந்த கொட்டை பிடிபட்டது. மெதுவாக இழுத்து அந்த குடல் பகுதியை நாயின் மேல் விரித்த துணிமேல் பரப்பி விட்டு சாமிடம் விசேசமான குடல் இடுக்கியை எடுக்கச் சொல்லி அதனால் அந்த நெக்ரரீன் கொட்டை இருந்த பகுதியின் இருபக்கத்திலும் செருகிவிட்டு குடலை வெட்டத் தொடங்கினான். ஆவலாக அருகே வந்து கண் வெட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த சாண்ட்ரா 'ஏன் வெட்டுகிறய்'? என்றாள்

‘இந்த கொட்டை அடைத்திருந்த பகுதி பழுதாகிவிட்டது. இந்த பகுதிக்கு இரத்த ஓட்டத்தைக் கொடுக்கும் இரத்தகுழாய்கள் உடைந்து விட்டதால் இந்தப் பகுதி இறந்து விடும். இந்தப் பகுதியை எடுத்தால் மட்டுமே இந்த நாய் உயிர் வாழும்’.

வெட்டிய குடலின் பகுதிகளை மீண்டும் ஒன்றாக தைக்கும் போது சாம் உதவி செய்தான். சாம் இப்பொழுது ஒப்பரேசனில் பங்கு பற்றியதால் சாண்ட்ரா குடலை தைப்பதற்கான உபகரணங்களை எடுத்து தருவது போன்ற மற்றைய உதவிகளை செய்து கொண்டிருந்தாள். இரண்டு மணிநேரமாக நடந்த ஒப்பரேசனில் மூவரும் கவனம் செலுத்தியபடியால் ஒருவரும் அதிகம் பேசவில்லை. தைத்த குடலை சேலையினால் கழுவி வயிற்றுள் போட்டதும் சாம் மீண்டும் ‘சாண்ட்ரா அந்த வளையம் பற்றி சொல்லவில்லை’ என கிண்டினான். சுந்தரம்பிள்ளை தன் பங்குக்கு ‘சாண்ட்ரா இந்த விடயம் எனக்குத் தெரியாவிட்டால் இந்த ஒப்பரேசன் செய்து இந்த நாயை காப்பாற்றிய திருப்தி எனக்கு கிடைக்காது’.

‘சாம் களிசறை. நீர் டீசண்டானவர்’.

‘இதை அறிந்து கொள்ள நான் களிசறையாகிறேன்’

‘ஓகே போய்ஸ்’ என கூறிவிட்டு சத்திர சிகிச்சை மேசையின் அருகே வந்து தனது ஒற்றை முலையை இலங்கையில் வடமாகாணத்தில் அந்தக்காலத்தில் பஸ் ரிக்கட்டை கண்டக்டர் கொடுத்த போது வயதான பெண்கள் சிலர் மார்புக்குள் இருந்து மணிபர்ஸ்ஸை எடுப்பது போல் வலது கையால் இடது பக்கத்து முலையை வெளியெடுத்தாள்.

மிகவும் அருகாமையில் நடந்த விடயம் எதிர்பாராதது. சுந்தரம்பிள்ளைக்கு வாயில் எச்சில் காய்ந்துவிட்டது.இதயம் ஒரு முறை துடிக்க மறந்துவிட்டது. கையில் இருந்த ஒபரேசன் உபகரணங்கள் கையை விட்டு விலகின. இரண்டு அல்லது மூன்று விநாடிகள் மட்டும் நீடித்தது அந்த காட்சி. மனதில் வண்ண படமாக பதிந்து விட்டது. பொன்னிற முலையின் சிவந்த காம்பில் அரை அங்குல விட்டத்தில் சிறிய வெள்ளி வளையம் மேல் கீழாக போடப்பட்டிருந்தது. அத்துடன் முலை காம்பின் மேல்ஓரத்தில் இருந்து மேல் நோக்கி சிவப்பு ரோஜா இரண்டு இலைகளுடன் மலர்ந்து இருப்பது போல் பச்சை குத்தப்பட்டிருந்தது. மனித குலத்தின் ஆதாரமானதும் அழகானதுமான அந்த இடத்தில் சிவப்பு

பச்சையில் வண்ணம் தீட்டி வெள்ளியாபரணம் போட்டு மேலும் அழகுபடுத்தி இருந்தாள்.

இப்பொழுது சாம் 'நான் பார்க்கவேண்டும்' என பின்னால் இருந்து அருகில் வந்த போது முலையை மறைத்து விட்டு ' உனக்கு இல்லை' எனக்கூறி விட்டு சாமின் முதுகில் ஓங்கி அடித்து விட்டு சாண்ட்ரா வெளியே சென்றாள்.

சுந்தரம்பிள்ளை அதிர்ச்சியில் இருந்து மீண்டு அடி முடி ஆராய்ச்சியில் இறங்கினான்

'சாம், இதை எப்படி தெரிந்து கொண்டாய்?'

'சாண்ட்ரா வளையம் போட்டவுடன் வைத்திய சாலையில் வந்து தகவலை சொல்லியபோது நான் காட்டச் சொன்னேன். வெகு சாதாரணமாக எனக்கு காட்டினாள்'.

'சாண்ட்ரா எவ்வளவு காலமாக இங்கே வேலை செய்கிறாள்'?

'ஐந்து வருடத்துக்கு மேலே'

'தொடர்ச்சியாக லெஸ்பியன் தானா? இல்லை இடையில் ஏற்பட்டதா?'

எனக்கு தெரிந்தவரை இப்படித்தான். நிலையான ஒரு பெண் துணை இல்லை. இதனால் பல விசித்திரமான சம்பவங்கள் இங்கே நடந்துள்ளன. லீசாவுக்கு சாண்ட்ராவைக் கண்டால் பயம்.

'ஏன் பயம்?

'ஒரு நாள் பார்மசியில் லீசா குட்டையான சட்டை அணிந்தபடி கதிரையில் ஏறி உயரமான செல்புகளில் மருந்துகளை அடுக்கிக் கொண்டிருக்கும் போது அந்த வழியால் வந்த சாண்ட்ரா 'எவ்வளவு அழகான கால்கள்' என சொன்னதை கேட்டதும் லீசா பயத்தில் கதிரையில் இருந்து விழ முயற்சித்தாள். இதைப்பார்த்து சாண்ட்ரா லீசாயை விழாமல் பிடித்தாள். இந்தப் பிரச்சினையை பெரிதாக்கி லீசா நிர்வாக குழு செயலாளரிடம் புகார் செய்தாள். பின்பு இருவரும் ஒருவரோடு வேலை செய்யக்கூடாது. நெருங்கி இருக்கக் கூடாது என முடிவு எடுக்கப்பட்டது.

'இது கொஞ்சம் அதிகமாக இருக்கிறது. நான் இப்படியான விடயத்தை கேள்விப்படவில்லை'.'

‘இன்னொரு கதையை கேட்டால் ஆச்சரியத்தில் மூழ்கி விடுவீர்கள். இந்த நாயை மயக்கிவிட்டு சொல்கிறேன்’ என கூறிய சாம் ஒரு கரிய டோபமான் நாயை கொண்டுவந்தான். அது இடது பின்னங்கால்கள் இழுத்தபடி நடந்தது.

‘இதுதான் குறுசியேற் லிகமென்ரை அறுத்த நாய்’

‘இதைத் தொடங்கினால் இன்று மாலை முடிக்க முடியுமா’? என கேட்ட படி சுந்தரம்பிள்ளை முன்கால் இரத்த குழாய் வழியே மயக்க மருந்தை செலுத்தி விட்டு அந்த காலில் சோதனை செய்தான். வழக்கப்படி அந்த லிகமென்ற் அறுந்ததால் முழங்கால் ஈடாட்டம் அந்த மூட்டில் தெரிந்தது.

அந்த டொபமானை மேசையில் கிடத்தி மயக்க வாயுவையும் ஒட்சிசனையும் கொடுத்து விட்டு நான் அந்த முழங்காலை வெட்ட தொடங்கியதும் சாமுக்கு அதிக வேலை இல்லை. மயக்க மருந்தின் ஆழத்தையும் சுவாசம் சீராக நடக்கிறதா என பார்ப்பதுதான். அதைக்கூட செய்வதற்கு மெசின் இணைக்கப்பட்டு இருப்பதால் சாம், சுந்தரம்பிள்ளைக்கு கதை சொல்வதைதான் பெரும்பாலும் செய்து கொண்டிருந்தான். இலங்கையின் வட பகுதியில் சுருட்டு தொழிலாளர்கள் வேலை செய்யும் போது இராமாயணம், பாரதம் படிக்க என ஒருவர் ஒவ்வொரு கொட்டிலுக்கும் இருப்பார்கள். இங்கு சாம் அது போல் சாம் சாண்ட்ராவின் கதையின் இரண்டாம் பாகத்தை தொடங்கினான்.

‘வைத்திய சாலையில் உள்ளவர்களில் பல பேர் கடந்த வருடம் நத்தார் பண்டிகையை முந்திய நாள் நோரேலின் வீட்டில் விருந்து வைத்தார்கள். பல வகையான மது பானங்களும் பரிமாறப்பட்டது. நடந்த விருந்தில் பங்குபற்றிய சில பேர் கஞ்சாக்காரர். விருந்தின் முடிவில் அங்கு சிலர் எழும்ப முடியாமல் தங்கிவிட்டார்கள். இதின் நொரோலின் தம்பி குடிவெறியில் பக்கத்தில் படுத்து கிடந்த சாண்ட்ராவோடு உடல் உறவு கொண்டுவிட்டான். விடியத்தான் விடயம் சாண்ட்ராவுக்கு தெரிந்ததும் அவனை கடிந்துவிட்டு, ஒரு கிழமையாக வேலைக்கு வரவில்லை. எவருடனும் தொலைபேசித் தொடர்பு வைக்கவில்லை. அவளது நண்பர்கள் சாண்ட்ராவை தேடி வீட்டுக்கு போன போது வீட்டை பூட்டிக்கொண்டு இருளில் கட்டிலில் படுத்திருந்ததாக கூறினார்கள். அந்த ஒரு கிழமை சாப்பிடவில்லை. தண்ணீர் மட்டும் குடித்துக்கொண்டு உயிர் வாழ்ந்ததாக தெரிகிறது. அதன் பின்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு வைத்தியம்

நடந்தது. அதிர்ச்சியில் இருந்து மீண்டு வருவதற்கு சாண்ட்ராவுக்கு சிலகாலம் சென்றது'.

'நொரோலின் தம்பிக்கு ஏதாவது பிரச்சினை வந்ததா?'

'இது வன்முறையாக நடந்தது அல்ல. கஞ்சா மற்றும் மதுவெறியில் இருவரும் இருந்ததாலும் ஓரளவு சாண்ட்ராவின் சம்மதம் இருந்ததாக அவன் கூறினான்'.

'அப்ப என்ன பிரச்சினை இதில்'.

'லெஸ்பியனாக இருந்த சாண்ட்ராவால் தனது தவறை ஏற்றுக்கொள்ளமுடியவில்லை. ஆண் தொடர்பை தனக்கு நேர்ந்த அவமானமாக கருதி தண்டனையை அளித்து இருப்பதாக மனவியலாளர் கூறியதாக கேள்விப்பட்டேன்'.

'இது ஒரு சிக்கலான மனநிலை. இதை நாங்கள் புரிந்து கொள்வது கடினம்'.

சாண்ட்ராவின் கதையை கேட்டபடி சுந்தரம்பிள்ளை மாலை நேரத்தில் அந்த டோபமானின் முழங்கால் மூட்டை சத்திர சிகிச்சையால் சரிப்படுத்தி முடிக்கும் போது மீண்டும் சாண்ட்ரா வந்தாள்

'எப்படி நண்பர்களே' என மகிழ்வுடன் கேட்டபடி வந்து அந்தப் பெரிய டோபமானை மேசையில் இருந்து இறக்க சாமுக்கு உதவி செய்தாள்.

'என்ன சாண்ட்ரா இன்று எங்களுடன் டின்னருக்கு வருகிறாயா? என கேட்டு சாம் கண் சிமிட்டினான்.

'நேரமில்லை. இன்று நான் ஒயிஸ்ரர் பாருக்கு போகிறேன்'.

'அதென்ன விசேடம் அந்த பாரில்' என்றார் சுந்தரம்பிள்ளை.

'அது மெல்பனில் லெஸ்பியன்கள் போகும் பார்' எனக்கூறி சிரித்தான் சாம்

அவுஸ்திரேலியாவில் சிட்னியிலும் மெல்பனிலும் ஒரு பால் உறவுகளில் ஈடுபடுவர்களுக்காக தனியாக கபேக்களும் பார்களும் உண்டு. மற்ற நகரங்களிலும் நாட்டுப்புறத்திலும் இருந்து இளைஞர்களும் யுவதிகளும் சிட்னி, மெல்பனுக்கு வேலை

தேடி வருவார்கள். சட்டரீதியாக இவர்கள் பாதுகாக்கப்பட்டாலும் மறைமுகமான புறக்கணிப்பு உண்டு. இரவுகளில் இரு ஆண்கள் கைகோர்த்துக் கொண்டு சென்றால் அவர்கள் மற்றைய இளைஞர்களால் கேலிக்குள்ளாகி அவமானப்படுத்தப்பட்டு தாக்குதலுக்கு உள்ளாவது நடக்கும். பெண்களது லெஸ்பியன் உறவு ஒப்பீட்டு அளவில் பொறுத்துக்கொள்ளப்படுகிறது.

வைத்தியசாலையில் வேலை செய்பவர்களில் ஒருபால் உறவு உள்ள ஆண்கள் இருந்தாலும் தங்களை இனம் காட்டுவதில்லை. பெண்களில் சாண்ட்ரா மற்றும் புதிதாக வந்து சேர்ந்த டொக்டர் ஜசிக்கா மட்டுமே வெளிப்படையாக தங்களை வெளிக்காட்டிக் கொள்பவர்கள்.

□ □ □

**சா**ண்ட்ராவுடன் சாமும் சுந்தரம்பிள்ளையும் அந்த ஓயிஸ்ரர் பாருக்கு செல்லத் தயாராகினார்கள். ஆரம்பத்தில் சாண்ட்ரா மறுத்துவிட்டாள். ‘உங்களை கொண்டு சென்றால் எனது நண்பர்களுக்கு பிடிக்காது. நீங்கள் எல்லாம் ஸ்ரெயிட்டானவர்கள். உங்கள் நடத்தை உங்களை காட்டிக்கொடுத்து விடும். சாம் அங்கு வந்து லெஸ்பியன் பெண்களை தன்னுடன் டேற்றுக்கு கூப்பிடக்கூடியக் ஒரு காவாலி. எனது பெயர் கந்தலாகிவிடும்’ என்றாள்.

‘கமோன் சாண்ட்ரா அந்த கிளப்புக்கு ஸ்ரெயிட்டானவர்கள் போகக் கூடாது என எந்தச் சட்டமும் இல்லை. நீ முன்னால் போ, நாங்கள் பின்னால் வருகிறோம். நீ எங்களை தெரியாது என்று சொல்லு’ என்றான் சிறிது கோபமாக.

சாண்ட்ராவுக்கு முகம் களையிழந்து போய் விட்டது. இரண்டு கைகளையும் சுவரில் வைத்துக் கொண்டு சுவரை பார்த்தபடி சில வினாடிகள் நின்றாள். ஏதோ குற்றம் செய்து விட்டவள் போல் தனக்குள் உணர்ந்து விட்டாள் என்பதை அவளது உடல் மொழி காட்டியது.சாமின் வார்த்தைகள் அவளைப் பாதித்துவிட்டது.

மவுனமாக சில நிடங்கள் குறுக்கும் நெடுக்குமாக நடந்தாள். பின்பு ஒரு முடிவுக்கு வந்தவளாக‘மன்னிக்கவும் நண்பர்களே. உங்களை கூட்டி செல்கிறேன். ஆனால் ஒரு வேண்டுகோள்.நீங்கள் அமைதியாக நடக்கவேண்டும்’.

‘எங்களுக்கும் ஒரு விண்ணப்பம் உள்ளது’ என்றான் சாம்.

‘என்ன?’

‘நாங்கள் ஒயிஸ்ரர் கிளப்புக்கு வந்த விடயம் இங்கே ஒருவருக்கும் தெரியக் கூடாது’.

‘ஒகே அப்படியானால் என்னை இந்த வைத்தியசாலையின் வாசலில் இரவு ஏழு மணியளவில் சந்திக்கவும்’.

□ □ □

ஒயிஸ்ரர் கிளப்புக்கு வருவதாக சுந்தரம்பிள்ளை சொன்னாலும் அவன் மனதில் பயம் தொற்றிக் கொண்டது. இப்படி ஒரு கிளப்புக்கு செல்வதாக வீட்டில் சொல்லிவிட்டு போக முடியாது. சொல்லாமல் சென்று விட்டு இரவு வீடு சென்று ஓவர்டைம் செய்ததாக பொய் சொல்லவேண்டும். அவுஸ்திரேலியாவுக்கு வந்த மூன்று வருடங்களில் சாதாரண நைட் கிளப்புகளுக்கே போன அனுபவம் இல்லை. மெல்பன் நைட்கிளப்புகளுக்கும் இரவுக் கேளிக்கைகளுக்கும் பெயர் பெற்ற இடமாகும் என்பதை அறிந்தே இருந்தாலும் புலம் பெயர்ந்த பின்பு சாதாரண வாழ்க்கை தொடங்குவதே கடினமாக இருந்த போது இப்படியான கேளிக்கைகளுக்கு நேரமும் பணமும் இருக்கவில்லை. பெரும்பாலான புலம் பெயர்ந்தவர்களின் வாழ்க்கை அவுஸ்திரேலியா போன்ற புகலிடங்களில் நுனிக்கரும்பை சுவைப்பது போல்தான். பலருக்கு அடியில் சுவையான பகுதி இருப்பது தெரியாத அப்பாவித்தனமாக இருப்பார்கள். புலம் பெயர்ந்த வாழ்வு ஒரு விதத்தில் ஆழமான கடலில் விழுந்தவனது நிலை போல் தொடர்ச்சியாக கால் கைகளை அடித்துக்கொண்டிருந்தால்தான் மிதக்க முடியும். அழகிய சுண்ணாம்பு பாறைகளும் வண்ண வண்ண மீன்களும் விலைமதிபற்ற முத்துக்களும் அந்தக் கடலில் நிறைந்து இருப்பது அவர்கள் கண்களுக்கு தெரிய வாய்ப்பில்லை.

சாண்டராவிடம் வேடிக்கையாக கேட்ட ஒரு விடயம் இப்படி விபரீதமாக மாறிவிட்டது.அவளும் சீரியசாக இதை எடுத்து ஒப்புக் கொண்டுவிட்டாள். சாம்மால்தான் இதெல்லாம் வந்தது. ரொப் லெஸ் பாருக்கு சென்ற பின் வேலை இடத்தில் தெரிய வந்தது மாதிரி இதுவும் தெரிய வராது என்பது என்ன நிச்சயம்?. இதை வைத்துக்கொண்டு ரிம் பாத்தோலியஸ் போன்றவர்கள் வாயை மெல்லப் போகிறார்கள் என்பதும் வயிற்றில் புளி கரைத்தது. இதே வேளையில் சுந்தரம்பிள்ளையின் மனதில் ஒப்புக் கொண்ட ஒரு விடயத்தில் இருந்து பின் வாங்குவது கோழைத்தனம் என்பதும்

அத்துடன் புதியதை தெரிந்து கொள்ளும் ஆவலும் சேர்ந்து தயக்கத்தையும் பயத்தையும் பின் தள்ளிவிட்டது.

மூன்று பேரும் ஒன்றாக காரில் மெல்பனின் பிரதான நகர பகுதியில் உள்ள அந்த கிளப்பை அடைந்த போது மெதுவாக தூறல் விழுந்தது. இரவு நேரமானதால் கூட்டத்திற்கு குறைவில்லை. நைட்கிளப்புகள் உள்ள பிரதேசமானதால் இளையவர்கள் கூட்டத்தையே பார்க்க முடிந்தது.ஒரு நகரம் பகலிலும் இரவிலும் விளித்திருக்கும் போதுதான் முழுமை பெறுகிறது. சில நகரங்கள் அலுவலகங்களை மட்டும் கொண்டதால் மாலையானதும் வெறித்து விடுகின்றன. இப்படியான இடங்களில் இரவில் நடமாட முடியாது போய்விடுகிறது. அப்படி வெறிச்சோடி விடுகிறது. பெரிய கடைகள், அலுவலகங்கள், நைட் கிளப்புகள், ஹோட்டல்கள் எல்லாம் ஒருங்கே அமைந்திருப்பதும் அதற்கேற்றபடி பஸ், ட்ராம் என வாகன வசதிகள் பொது மக்கள் போய்வரக் கூடியவிதத்தில் மெல்பன் உள்ளது. முதலாவது பாராளுமன்றம் உருவாகி கால் நூற்றாண்டுகளாக அவுஸ்திரேலியாவின் தலைநகராக இருந்ததும் இதற்கு காரணமாகும்.

காரை சிறிது தூரத்தில் நிறுத்தி விட்டு கிளப்பை நோக்கி சென்ற போது வாசலில் உள்ள பவுன்சர் சாண்ட்ராவை பார்த்து சிரித்து விட்டு சுந்தரம்பிள்ளையை உற்றுப் பார்த்தான். அந்தப் பார்வை சுந்தரம்பிள்ளையை சுரண்டி நேரடியாக உனக்கு இங்கு என்ன வேலை எனக் கேட்பது போல் இருந்தது. அவனைப் பொறுத்தவரை இந்தியனாக தோற்றமளிக்கும் ஒருவன் இப்படியான கிளப்புக்கு வருவது முதல் முறையாக இருக்கலாம்.

ஒடுங்கிய, இருளான பாதையில் சிறிய படிகளால் மேலே சென்றடைந்ததும் அங்கே வலது புறமாக இருந்த கண்ணாடிக் கூண்டுக்குள் இருந்த பெண்ணிடம் ஆளுக்கு தலா ஐந்து டொலரை கொடுத்ததும், வலது கையில் முழங்கைக்கு கீழே ஒரு மை தோய்த்துக் கொண்ட முத்திரை இட்டாள். அதில் அந்த கிளப்பின் பெயர் எழுதி இருந்தது. அது பணம் கொடுத்ததற்கான அடையாள முத்திரை. பணத்திற்கு பற்றுசீட்டு கொடுக்காமல் இப்படி முத்திரை அடையாளம் கடுதாசிகளை மிச்சப்படுத்தி மரங்களின் சிதைவைக் குறைக்கும் அதே வேளையில் பணம் பெற்றதற்கான பற்றுசீட்டு இல்லாதது அரசாங்கத்திற்கு வரி கட்டுதலையும் மிச்சப்படுத்தும்.

உயரமான படிகளில் மேலே சென்றதும் அந்த கிளப் இருந்தது. புதன்கிழமையானதால் அதிக கூட்டம் இல்லை. பத்துக்கு குறைந்த ஆண்களும் பெண்களுமாக இருந்து குடித்தார்கள். சிலர் உணவை உண்டார்கள். ஒரு புறத்தில் சிறிய மேடை இருந்தது. அது நிகழ்சிகள் நடத்தும் இடம். ஆனால் அப்பொழுது வெறுமையாக இருந்தது. அதற்கு இடது பக்கத்தில் மதுபானம் விற்கும் பார் இருந்தது. அங்கு சென்று ஆளுக்கு ஒரு கிளாஸில் பியரை வாங்கி வந்து காலியாக இருந்த இடத்தில் மூவரும் உட்கார்ந்த சில நிமிட நேரத்தின் போது ஒரு இளம் பெண் வந்து சாண்ட்ராவை கட்டி அணைத்து உதட்டோடு முத்தம் கொடுத்தாள். பெண்ணுக்கு ஆண் கொடுக்கும் முத்தத்தில் எவ்வளவு ஆசையிருக்குமோ அதற்கு சற்றும் குறைவில்லாமல் மெதுவான சத்தத்தோடு இச் இச் என பொறாமைப்படும்படி இருந்தது.

இருபது வயதைக் காட்டும் வட்டமான முகத்துடன் அவள் காதிலும் கழுத்திலும் வெள்ளி வளையங்கள் போட்டிருந்தாள். தலைமயிரை குறோப்பாக வெட்டி இருந்தாள். அவளது உடல் அளவுக்கு மேல் உப்பியிருந்தது. கடவுள் கழுத்தை வைக்க மறந்து விட்டது தெரிந்தது. இரண்டு பருத்த மார்பகங்கள் எப்பொழுதும் மேற்சட்டையை விட்டு வெளியே வரத் தயாராக இருப்பது போல் அவள் உடை இருந்தது. அவளது உடல் அங்கங்கள் அனைத்தும் அவள் அணிந்திருந்த உடைகளை எதிரியாக நினைத்து சுதந்திரத்தை தேடித் திமிறின. மெலிசா என்று மெதுவாக கூறிவிட்டு அவளுக்கு சாண்ட்ரா, சாமையும் சுந்தரம்பிள்ளையையும் தன்னுடன் வேலை செய்பவர்கள் என அறிமுகப்படுத்தினாள். நான்கு பேரும் பியர் அருந்தும் போது சங்கீதம் தொடங்கியதும் சாண்ட்ராவின் கைகள் அந்த பெண்ணின் இல்லாத இடுப்பைத் தேடி வளைத்தது. சாம் முகத்தை திருப்பிக் கொண்டு சுந்தரம்பிள்ளையின் காதில் ‘ஆண்களின் அதிஸ்டம் மெலிசா லெஸ்பியனாக இருப்பது’ என்ற போது கெவி மெட்டல் சங்கீதம் அந்த இடத்தை புயல் போல் வந்து நிறைத்தது. இதற்காக காத்துக்கொண்டிருந்தவர்கள் போல் பலர் ஆடத் தொடங்கினார்கள்.

சங்கீதம் இப்பொழுது உச்சத்தை அடைந்தபோது பலர் இணைந்து பிணைந்து ஆடத் தொடங்கியதும் ‘நண்பர்களே, எங்கள் பியரை பார்த்துக் கொள்ளுங்கள் என கூறிவிட்டு சாண்ட்ராவும் நடனமாட சென்றுவிட்டாள். இருளாக இருந்தாலும் அந்த ஹாலின் மேலே தொங்கிய கண்ணாடி குமிழின் சுழலும் வெளிச்சத்தில் அங்கு ஆண்களும் ஆண்களும் பெண்களும் பெண்களும் முத்தமிட்டபடி

ஆடுவது தெரிந்தது. சுந்தரம்பிள்ளைக்கு சிரிப்பு வந்தது. அதை பார்த்து விட்டு சாம் 'இன்று இங்கு வந்தது தவறு. என்னால் இதை பார்க்க முடியாது. அருவருக்கிறது'. என கூறிவிட்டு எழுந்தான். ஏற்கனவே அவனது மன நிலை புரிந்த சுந்தரம்பிள்ளைக்கு அது வியப்பாக இருக்கவில்லை.

'கொஞ்சம் பொறு. இந்த பாட்டு முடிய சாண்ட்ரா வந்ததும் போவோம்'.

இரு இளைஞர்கள் வந்து ஹலோ சொல்லி விட்டு மேசையில் எதிரே இருந்தனர் அவர்களை சாம் பொருட்படுத்தவில்லை. அவர்கள் சிரித்தபடி சுந்தரம்பிள்ளையிடம் உங்களுக்கு பியர் வேண்டுவதாக கூறியதும் சுந்தரம்பிள்ளை இப்பொழுது குடித்தாக மறுத்தான். அவர்களில் ஒருவன் சுந்தரம்பிள்ளையின் தோளில் கை வைத்தபடி சிரித்தான். அந்த சிரிப்பு சுந்தரம்பிள்ளைக்கு பிடிக்கவில்லை. மெதுவாக அவனது கையை தனது தோளில் இருந்து எடுத்தார். அந்த விலக்கப்பட்ட கை தோளில் இருந்து விலகி முதுகை நோக்கி சென்ற போது அந்த கையை சாம் பிடித்து பலமாக முறுக்கினான். அவனது காதில் 'பாஸ்ரட் நாங்கள் உன்னைப் போல் புவ்தா இல்லை'.

அவன் வலியால் குனிந்தபடி மன்னிப்பு கேட்டான். ஆனால் சாம் கையை விடவில்லை

'சாம் அவனது கையை விடு'என சுந்தரம்பிள்ளை விடுவித்த போது மேசையில் இருந்த பியர்கள் தட்டுப்பட்டு சிதறியது. நல்ல வேளை கிளாசுகள் நிலத்தில் விழவில்லை. இருளில் நடந்ததால் இந்த சம்பவம் ஒருவரதும் கவனத்தை ஈர்க்கவில்லை.

'இந்த இடத்தை விட்டு நாம் வெளியேறி அடுத்த தெருவில் இருக்கும் பெண்கள் நடனமாடும் கிளப்புக்கு செல்வோம். இங்கே நாம் வந்தது வீண்' என கூறிவிட்டு சுந்தரம்பிள்ளையின் பதிலை எதிர்பார்க்காமல் வெளியேறினான் சாம். சுந்தரம்பிள்ளையை பொறுத்தவரை சாண்ட்ராவை தேவையில்லாமல் வலியுறுத்தி இந்த கிளப்புக்கு வந்தது ஆரம்பத்திலே பிடிக்கவில்லை. இப்படியான விடயத்தில் சாமை குருவாக நினைத்ததால் எதிர்ப்பு கூறாமல் வந்தது தவறு. அதிலும் இந்த விடயம் தேவையில்லாமல் நடந்தது என எண்ணியபடி பேசாமல் சாமை பின் தொடர்ந்தான்.

ஆண்களுக்கான பிரத்தியேகமான கிளப்பிற்கு அதிக தூரம் நடக்க வேண்டிஇருக்கவில்லை. அடுத்த வீதியில் அமைந்திருந்தது.

மாலைநேரத்தில் இருந்த மழைத் தூறல் நின்று விட்டது. இந்தக் கிளப்புக்கு செல்லும் பாதை வெளிச்சமாகவும் அதிக கூட்டமாகவும் இருந்தது. மேலும் வாசலில் நின்ற பவுன்சர் எந்த வித்தியாசமான பார்வையும் பார்க்கவில்லை. மனதில் தயக்கமற்று, சாவகாசமாக உள்ளே சென்ற போது ஆண்களுக்கு மட்டும் பிரத்தியேகமான அந்த கிளப்பிலும் கட்டணத்தை வசூலித்துவிட்டு உள்ளே செல்லவிட்டார்கள். சிறு மேடையின் மத்தியில் உள்ள கம்பில் பெண் மார்பு, இடுப்பு கச்சை மட்டும் அணிந்து நடனமாடிக் கொண்டிருந்தாள். அங்கு சென்றது சாமின் கண்கள். அகல விரிந்து முகம் மலர்ந்தது. இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துவிட்டு ஒரு வாய் பியரை உறிஞ்சி காய்ந்த உதடுகளை நனைத்து விட்டு ‘இதை விட்டு விட்டு ஒருமணித்தியாலத்தை வீணாக்கி விட்டோம். எவ்வளவு அழகான உடம்பு’ என அந்த ஆடும் பெண்ணைப் பார்த்து கூறினான். சாமை போல் பேச கூச்சப்பட்ட சுந்தரம்பிள்ளை சிரித்தபடி கண்ணால் அந்தப் பெண்ணை கட்டி அணைத்தபடி ஆட்டத்தின் முடிவில் இடுப்பு கச்சையை கழற்றும் தருணத்துக்காக காத்திருந்தான். அவள் ஆட்டத்தின் போது மேடையின் அருகே வந்த போது அருகில் இருந்தவர்கள் டொலர் நோட்டுகளை இடுப்பு கச்சையில் செருகினர். அப்படி செருகியவர்கள் அருகே சென்று உடலை உராய்வதும் அவர்கள் மடியில் இருப்பதுமாக அவர்களது பணத்துக்கான சேவையை செய்தாள். அவளது உடலில் தொட முயன்ற சிலரை கைகளை சிரித்தபடியே இலாவகமாக விலக்கினாள்.

சாம் இவள் எப்பொழுது இடுப்புக் கச்சையை கழட்டுவாள்? எனக்கூறிக்கொண்டு கையில் உள்ள வாச்சைப் பார்த்தான்.

சாமுக்கு சிறு குழந்தையுண்டு. மாலையில் வேலை முடிந்த பின் குழந்தையை பராமரித்தால்தான் மனைவியால் சமைக்க முடியும். சாமின் மனைவி இளம் வயது மிகவும் செல்லமாக வளர்க்கப்பட்டதால் ஒழுங்காக சமைக்கக் கூட தெரியாது என சொல்லி இருந்தான்.

‘சாம் போவோமா?’

‘இல்லை இவள் இடுப்பு கச்சையை கழட்டிய பின்பு போவோம்.

‘அவள் கழட்டின பின்பு போனால் உனக்கு சாப்பாடு கிடைக்காதே?’

‘இன்று பிற்சா எடுத்துக் கொண்டுதான் வீட்டுக்கு போக வேண்டும்’

ஆணின் மனதில் இப்படியான சிந்தனைகள் கம்பியுட்டரில் புரோகிராம் செய்வது போல் இருக்கின்றன. மறைப்பதும் மறுப்பதும் போலித்தனமாகிவிடுவது மட்டுமல்ல அப்படி செய்யும் போது வக்கிரமானவர்களாக பலரை மாற்றிவிடுகிறது.

அப்பொழுது ஒரு இளம் பெண் மார்பிலும் இடுப்பிலும் கச்சை மட்டும் அணிந்தபடி பார்வையாளர் மத்தியில் வந்து சாமுக்கும் சுந்தரம்பிள்ளைக்கும் இடையில் நாற்காலியை இழுத்துப் போட்டு அமர்ந்தாள். அவளது மேனியில் வேர்வையின் ஈரம் காயாது இருந்தது. உருக்கிய தங்கத்தில் குளித்து விட்டு ஈரம் எடுக்காமல் வந்தவள் போல் காட்சியளித்தாள். தற்பொழுது நடனமாடும் பெண்ணுக்கு முன்பாக இவள் ஆடி இருக்கலாம். அவளது உடலில் எந்த இடத்திலும் அளவுக்கு மீறிய தசைப்பிடிப்போ வயிற்றில் மடிப்போ தெரியவில்லை. மார்புகள் தெறித்து விழுவது போல் இருந்ததை பார்க்காமல் இருக்க எந்த ஆணாலும் முடியாது.

குழைந்த குரலில் ‘நண்பர்களே உங்களுக்காக நான் தனிமையில் நடனமாடி எனது மார்பு கச்சையையும் இடுப்பு கச்சையையும் கழட்டுவேன். அது உங்களுக்கு வேணுமா?’

‘அதற்கு எவ்வளவு பணம் தரவேண்டும்’ என்றான் சாம் சிரித்தபடி

‘இருபது டொலர்கள் மட்டுமே’

‘தொடமுடியுமா. நான் ஹொனி மூட்டில் இருக்கிறேன்’ என பர்சை திறக்க முயற்சித்தான்.

‘கட்டாயமாக தொடமுடியாது ,நோட்டி போய்’ என்று சாமின் தலையில் செல்லமாக குட்டினாள்.

‘எவ்வளவுக்கு பணம் கொடுத்தால் தொடமுடியும்?’

‘தற்போதைக்கு எவ்வளவு கொடுத்தாலும் முடியாது. எனது போய் பிரண்தான் இந்த கிளப்பின் மனேஜர்’ என சாவகாசமாக கூறினாள்.

'இப்பொழுது நடனமாடும் பெண் இடுப்பில் இருந்து கச்சையை கழட்டியபின் உனது விடயத்தை யோசிக்கிறேன்' என்றதும் அந்தப் பெண் எழும்பி சென்று விட்டாள்

அந்த நேரத்தில் மேடையில் ஆடிய பெண் இடுப்பு கச்சையை கழற்றி சுற்றி இருந்தவர்களை நோக்கி எறிந்து விட்டு அந்த கம்பத்தை சுற்றி வேகமாக சுற்றினாள். பலரது கூக்குரல் உச்சஜதியில் எழுந்து அங்கு நிரம்பி இருந்த சங்கீதத்தை அமிழ்த்திவிட்டது.

அடுத்த பெண் ஆடுவதற்கு பதினைந்து நிமிடங்களாவது செல்லும். அவள் ஆடத் தொடங்கினால் எழும்புவதற்கு மனம் வராது. அப்படியாக இங்கு இருந்தால் இன்று இரவு சாப்பாடு கிடையாது என சாம், சுந்தரம்பிள்ளையை அழைத்தபடி வெளியே வந்தான். சுந்தரம்பிள்ளை சுயநிலைக்கு திரும்ப சில நிமிடங்கள் எடுத்தன.

'சாம் இந்தப் பெண்கள் தங்களது அழகை முதலாக்கி பணமாக்குகிறார்கள். அதே வேளை ஆண்களை எப்படி கையாளுவது என்பதும் புரிந்திருக்கிறது'.

'அதை விட இந்த மாதிரியான கிளப்புகளை நடத்துவது மெல்பன் அண்டவேல்டை சேர்ந்தவர்கள். கறுப்புப்பணத்தை வெள்ளையாக்க இந்த கிளப்புகள் பயன்படும்'.

'உண்மையாகவா?'

'நான் கேள்விப்பட்டது' என சாம் கூறியபோது வீட்டில் என்ன பொய் காரணத்தை சொல்லலாம் என சுந்தரம்பிள்ளை சிந்திக்க தொடங்கிவிட்டான். அப்போது இவ்வளவு நேரமும் மனதில் மோதியபடி இருந்த காம உணர்வு முற்றாக விடைபெற்று விட்டது.

◻ ◻ ◻

**வெ**ளிப்படையான சாண்ட்ராவின் பேச்சும் நடத்தையும் சுந்தரம்பிள்ளைக்கு பிடித்திருந்தது. ஒளிவு மறைவு இல்லாமல் நட்புறவோடு இனிமையாக பழகும் சாண்ட்ரா வைத்தியசாலையை விட்டு சென்றது சாமுக்கும் கவலையை அளித்தது. அன்று மதியம் சுந்தரம்பிள்ளையும் சாமும் மதுசாலைக்கு சென்று பியரை அருந்தும் போது சாண்ட்ராவின நட்பை மட்டுமல்ல அவளோடு தொடர்பான சம்பவங்களையும் இரை மீட்டினர். வைத்தியசாலையில் பலர் சாண்ட்ராவை ஒரு பெண்ணாகப் பார்க்காமல் இரண்டும் கெட்டானாக

பார்த்ததால் அவள் வைத்தியசாலையை விட்டு விலகியது அவர்களுக்கு மனதில் நிறைவைக் கொடுத்தது. சாண்ட்ராவின் வேலையை புதிதாக ஒருவர் செய்ததால் வைத்தியசாலைக்கு அவளது இராஜினாமா பாதிப்பை கொடுக்கவில்லை. அறுபது வருடத்திற்கு மேலாக இயங்கும் இந்த வைத்தியசாலையை எவரது இழப்பும் பாதிக்காது.

# இரண்டாம் பாகம்

# 14

சுந்தரம்பிள்ளை வேலைக்கு சேர்ந்து எட்டு மாதங்கள் ஆகிவிட்டன. மனைவியும் வேலையில் சேர்ந்து பணம் சம்பாதிப்பதால் குடும்பம் வசதியாக வாழ முடிந்தது. இரண்டு பேரின் சம்பளப் பணத்தில் பிள்ளைகளின் பாடசாலை, வீட்டு வாடகை, குடும்பச் செலவு என செலவு செய்த பின்பும் கையில் பணம் சேமிப்பாக மிஞ்சியது. இதனால் வீட்டுக்குச் சொந்தக்காரராக வேண்டும் என்ற ஆசை தொத்திக் கொண்டது. எலி வளையானாலும் தனி வளை தேவை என்ற நினைப்பில் தற்பொழுது இருக்கும் வாடகை வீட்டை விட்டு சொந்தமாக வீடு வேண்டும் என்ற நினைப்பு மனதில் வந்துவிட்டது. அவுஸ்திரேலியாவில் குடி வந்தவர்களின் பொதுவான கனவை, மெய்ப்படுத்த விரும்பி வீட்டுக் கடனுக்கு, வங்கிகளை அணுகிய போது 'கவலை வேண்டாம்' எந்த பிரச்சினையும் இல்லாமல் கடன் தருவதாக கூறினார்கள்.

பிரித்தானிய காலனியாக இருந்த காலத்தில் காணிக்குச் சொந்தக்காரர்கள் மட்டுமே வாக்காளர்களாக இருக்கலாம் என்ற நியதி விக்ரோரியாவில் இருந்த காரணத்தினால் பிற்காலத்தில் வந்த குடியேற்றவாசிகளுக்கும் அதே மனநிலை தொடர்கிறது.

சிட்னிப் பெருநகரம் குற்றவாளிகளின் குடியேற்றத்தால் உருவாக்கப்பட்டது. ஆனால் மெல்பன் அப்படியானவர்களின் குடியேற்றத்தால் உருவாகிய நகரமல்ல. மிகவும் வித்தியாசமான சரித்திரத்தை தன்னுள் கொண்டது. அவுஸ்திரேலியாவின் மற்றைய இடங்களை ஆங்கிலேய காலனியினர், ஆதிவாசிகளை, மனிதர்களாகவே கருதவில்லை. எனவே எந்த மனிதர்களும் இல்லாத நிலப்பரப்பு என்ற கருத்தியலை தங்களது மனநிறைவுக்கான கொள்கைப் பிரகடனமாக வைத்துக் குடியேறிய போது, ஜோன் பற்மேன் எனும் ஆரம்ப குடியேற்றவாசி ஆதிவாசிகளிடம் பண்டமாற்றாக மெல்பனை 1835ல் வாங்கியதாக ஒப்பந்தப்

பத்திரம் உள்ளது. இது ஆங்கிலேய கவர்னரால் பின்னால் இரத்து செய்யப்பட்டாலும் அவுஸ்திரேலிய சரித்திரத்தில் முதலாவதாக இந்த நிலம் ஆதிவாசிகளுக்கு சொந்தமென ஒரு ஆங்கிலேயரால் அங்கீகரிப்பட்ட சரித்திரம் உண்டு.

1851இல் பெண்டிகோ, பாலரட் முதலான இடங்களில் தங்கம் கிடைத்ததால் தொழிலாள வர்க்கத்தை சேர்ந்த ஆங்கிலேயர்கள் கப்பலில் வந்து குடியேறியதால் உருவான இந்த மெல்பன் நகரத்தில் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் மற்ற ஐரோப்பியர்கள் முக்கியமாக இத்தாலியர்கள், கிரேக்க தேசத்தவர்கள் குடியேறினார்கள். ஆசியர்களில் சீனர்கள் மட்டும்தான் தங்கம் தோண்ட ஹொங்கொங்கில் இருந்து வந்தார்கள். தங்கத்தை தேடி வந்தவர்களால் உருவான இந்த மெல்பனில் தற்பொழுது நூற்று நாற்பது உலக நாடுகளை சேர்ந்தவர்கள் வசிக்கிறார்கள்.

இலண்டன் அளவு நிலப்பரப்பில் உள்ள மெல்பனில் இப்பொழுது எந்த இடத்தில் வீடு வேண்டுவது என்ற கேள்வி சுந்தரம்பிள்ளை குடும்பத்தில் எழுந்தது. சுந்தரம்பிள்ளையின் மனைவி சாருலதா வேலை செய்யும் மருத்துவமனை மெல்பனின் தெற்கு திசையில் இருக்கிறது. சுந்தரம்பிள்ளை சிற்றியில் வேலை செய்யும் போது இரண்டுக்கும் இடைப்பட்டதான இடத்தில் வாங்குவது தான் நியாயமாக இருக்கும். ஆனால் அதுதான் நடக்கவில்லை. இதை விட முக்கியமானது மெல்பனில் குடியேற்ற வாசிகள் மனதில் கொள்ளுவது பிள்ளைகள் படிப்பதற்கான பாடசாலைகள். மெல்பனில் சிறந்த அரசாங்க பாடசாலைகளும் தனியார் பாடசாலைகளும் அதிக அளவில், மத்திய வகுப்பினரும் உயர்வகுப்பினரும் வாழும் மெல்பனின் கிழக்கு பகுதியில் அதிகம் இருக்கிறது. தொழிலாள வர்க்கத்தினர் வசிக்கும் மேற்கு அல்லது வடக்கு பக்கங்களில் இப்படியான பாடசாலைகள் அதிகம் இல்லை. மெல்பனின் தென்கிழக்கு பகுதியில் உள்ள கிளன்வேவலி புற நகரத்தில் வீட்டை வாங்க முடிவு செய்தார்கள்

சாருலதாவின் தாய் தந்தையினர் மழைக்கால அட்டைகள் ஒன்றோடு ஒன்றாக ஒட்டுவது போல் மகளுடன் ஒட்டிக் கொண்டு கூட்டுக் குடும்பமாக வாழ்வதால் அவர்களும் சேர்ந்து இருப்பதற்கு பெரிய வீடாகப் பார்க்க வேண்டியதாக இருந்தது.

மெல்பனில் சனிக்கிழமைகளில்தான் வீடு விற்பனைகளும், வீட்டு ஏலங்களும் நடைபெறும். இது ஒரு சட்டம், சம்பிரதாயம் என

இரண்டும் கலந்த சடங்கு போல் நடைபெறும். வசந்த காலத்திலும் இலையுதிர்காலத்திலும் பெரும்பாலான ஏலமும் கோடை மற்றும் குளிர்காலத்தில் குறைவாகவும் நடைபெறும். வீடுகள் ஏலத்திலே விடப்பட்டு அதிக பணத்துக்கு கேட்பவருக்கு கொடுக்கப்படும். இதே வேளையில் உரிமையாளர் எதிர்பார்த்த தொகை கிடைக்காவிட்டால் வீடு விற்பனையாகாது. சனிக்கிழமையில் வேலை செய்வதால் இந்தச் சடங்கில் ஈடுபடுவதற்கு சுந்தரம்பிள்ளையால் ஒன்றுவிட்ட ஒரு சனிக்கிழமைதான் முடிந்தது.

வீடு வேண்டுவதற்கு விருப்பமான புறநகரமாக கிளன்வேவலியை தெரிவு செய்து விட்டு பாடசாலைக்கு பக்கத்தில் வீடு பார்க்கும் போது வீடு எல்லோருக்கும் பிடித்திருக்கவேண்டும். வீடு பிடித்திருந்தால் சமையல் அறை பிடித்திராது. எல்லாம் எல்லோருக்கும் பிடித்திருந்தால் இவர்களது வீட்டின் விலை பட்ஜட்டுக்கு மேல் இருந்துவிடும்.

வசந்த காலத்தின் இளம் காலை நேரம் மெதுவாக மெல்பனின் மெல்லிய துகிலை மெதுவாக உரியத் தொடங்கிய போதே சுந்தரம்பிள்ளையின் வீடு அல்லோகலப்பட்டது. ஒருவரை ஒருவர் முந்திக் கொண்டு காலைக் கடன்களை முடித்துக் கொண்டார்கள். புதிதாக வாங்க எண்ணும் வீட்டை தரிசிப்பதற்காக அந்த சனிக்கிழமை முழுக் குடும்பமும் அவசரமாக காலையுணவை முடித்துக் கொண்டு பழைய ஹொண்டா காரில் வீடு விற்கும் இடத்திற்குப் போனார்கள்.

சுந்தரம்பிள்ளையின் குழந்தைகள் பிக்னிக் போவது போன்ற மனநிலையில் இருந்தனர்.

அந்த வீட்டை சுற்றிய இடத்தில் ஏற்கனவே ஆண்களும் பெண்களுமாக நூறு பேருக்கு மேல் நின்றார்கள். வீதி, நடை பாதை எங்கும் புவியில் வாழும் சகல இன மனிதர்களும் அந்தக் கூட்டத்தில் இருந்தார்கள். அந்த இடத்தில் நிற்பவர்கள் ஒருவருக்கொருவர் மனதிலும் ஏதோ ஒலிம்பிக்கில் போட்டி போடுபர்களாக நினைக்க வைத்தது. இப்படியான ஏலத்தில் அனுபவம் அற்ற சுந்தரம்பிள்ளை குடும்பத்தினருக்கு இவர்கள் மத்தியில் சென்று ஏலத்தில் வீடு எங்களுக்கு கிடைக்காது என்ற அவநம்பிக்கை உணர்வே இருந்தது.

கோயிலுக்கு வந்தவர்களில் சிலர் ஆலய முன்றலில் வேடிக்கை பார்த்துக்கொண்டு நிற்பதுபோல் நின்றுவிட, பெரும்பான்மையானவர்கள் வரிசையாக வீட்டினுள் ஆலய

தரிசனத்துக்கு செல்பவர்கள் போல் மவுனமாக சென்று பார்த்தார்கள். அவர்களோடு வந்த சிறுவர்கள் மட்டுமே ஓடிக் குதித்து அந்த இடத்திற்கு உயிர் கொடுத்தார்கள். இரண்டு சீனப் பெண்குழந்தைகள் ஒளிந்து விளையாடினார்கள். ஆமாம் குழந்தைகளுக்கு பணத்தைப் பற்றிய அல்லது வீட்டைப் பற்றிய சிந்தனை அற்று மகிழ்ச்சியாக இருக்கமுடியும். பெரியவர்களால் இருக்கமுடியுமா? பெரியவர்கள் மனதில் சுமையோடு மவுனமாக வீட்டை சுற்றி பார்த்தார்கள். சுந்தரம்பிள்ளை குடும்பத்தினர் அந்த கூட்டத்தோடு சேர்ந்து கொண்டனர். நாலு அறைகள் கொண்ட பெரிய வீடு. சுத்தமான தரைவிரிப்புகள் உள்ள அறைகள். விசாலமான, புதிய சமயலறை. அதே போல் குளியலறையும் புதிதாக இருந்தது. சில வருடங்களுக்கு முன்பாக சமயலறையும் குளியலறையும் புதுப்பிக்கப்பட்டதாக வீட்டு ஏஜன்ட் சொன்னது காதில் விழுந்தது. பின்னால் பெரியவளவும் இருந்தது. அதில் பெரிய எலுமிச்சை காய்கள் பழங்கள் என காய்த்து நிலத்தை தொடுவது போல் தொங்கியது. எலுமிச்சைக்கு சிறிது தள்ளி கரட் மற்றும் சில கீரை வகைகளும் பயிரிடப்பட்டிருந்தது. வளவை சுற்றிவர இரண்டு மீட்டர் உயரத்திற்கு வேலி எழுப்பப்பட்டிருந்தது.முன்பாக அமைந்திருக்கும் கார் நிறுத்தும் இடத்திற்கு செல்ல சிறிய மரப்படலை இருந்தது.

வீடு எல்லோருக்கும் பிடித்திருந்தது. பத்து மணியில் இருந்து பதினொருமணி வரையும் வீட்டை பார்ப்பதற்கும் அதன் பின்பு பதினொரு மணியளவில் ஏலம் தொடங்குவதாக ரியல் எஸ்ரேற் ஏஜெண்ட் கூறி இருந்தார்.

ஒன்பது மணியில் இருந்து வீட்டை பார்த்ததும் ஏஜென்டின் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த புதுவிதமான அனுபவம், பதினொரு மணியில் இருந்து ஏலமாக தொடர்ந்தது. இரண்டு ஏஜென்டில் குண்டாக, வெள்ளைச் சட்டையணிந்து நீல கோட் போட்டிருந்த மனிதர் கழுத்து ரையின் இறுக்கத்தை குறைத்துவிட்டு ஒரு தொகையைச் சொல்லி கூவினார். ஆரம்பத்தில் பத்துக்கு மேற்பட்டவர்கள் கைகளை உயர்த்தி விலைகளை ஏற்றிய போது சுந்தரம்பிள்ளையின் இதயத்துடிப்பு கூடி நாவறண்டு விட்டது. இவர்கள் மத்தியில் மெதுவாக கையை உயர்த்தி ஒரு விலையை கேட்ட போது ஏலக்காரரர் அந்த தொகையை இரு முறை கூறினார். அதைக் கேட்ட இரண்டு சீனாகாரரர் விலையை கேட்டு உயர்த்திவிட்டார்கள். இதைப் பார்த்த சாருலதா தெருவில் சிவப்பு விளக்கு வருவது போல் ஏலத்தில் கலந்து கொள்ளவேண்டாம் எனக் கையைச் சுண்டியதும் ஏலத்தை கைவிட்டு விட்டான்

சுந்தரம்பிள்ளை. காலம் காலமாக சுந்தரம்பிள்ளை குடும்பத்தின் சாரதியாகவும் சாருலதா பிரேக்காகவும் இயங்கியதால் குடும்பம் பல விபத்துகளில் இருந்து தப்பியது.

போட்டியாக கேட்ட சீனர்களும் சொல்லி வைத்தது போல் கையை விட்டார்கள். ஏலம் போடுபவர் திரும்பி திரும்பி வளர்த்த நாய் மாதிரி சுந்தரம்பிள்ளையின் முகத்தைப் பார்த்த போது சங்கடமாகி விட்டது. சுந்தரம்பிள்ளைக்கு வங்கி தர சம்மதித்த விலையிலும் பார்க்க சில ஆயிரத்தால் கூடி விட்டபோது ஏலத்தில் பங்கு பற்றும் விருப்பத்தை கைவிட்டு மற்றவர்களை வேடிக்கை பார்க்கத் தொடங்கிய போது மனதில் ஒரு அமைதி ஏற்பட்டது. ஆனாலும் தேவையில்லாமல் விலையை உயர்த்திய சீனர்களில் ஆத்திரம் ஏற்பட்டது. கடைசியில் யாரும் வாங்காமல் அந்த வீடு அடுத்த மாதம் ஏலத்துக்கு வருமென அறிவிக்கப்பட்டது.

இப்பொழுது மதியமாகிவிட்டது. இருந்த கூட்டமும் மெதுவாக கலைந்து விட்டதும் சுந்தரம்பிள்ளை குடும்பம் தனித்து விடப்பட்டது.

அவுஸ்திரேலியர்களில் மீசை வைத்தவர்கள் மிகக் குறைவு. ஆனால் ஏலம் கூறாது பக்கத்தில் நின்ற கறுத்த கோட் அணிந்த இரண்டாவது றியல் எஸ்ரேட் ஏஜெண்டுக்கு தலையில் மருந்துக்கேனும் மயிர் இல்லாவிடிலும் கம்பளி பூச்சி போல் கறுத்த மீசை இருந்தது. அத்துடன் வீட்டை விற்க முடியாத சோகமும் அவரது முகத்தில் தெரிந்தது. அவரை மெதுவாக அணுகிய சுந்தரம்பிள்ளை ‘இந்த வீட்டை ஏலத்தில் இல்லாது வாங்க முடியுமா? என்று கேட்டபோது அடுத்த சனிக்கிழமை வந்து தன்னைப் பார்க்கும்படி சொன்னான். அப்பொழுது, இரண்டாவது சனிக்கிழமை வருவதாக சுந்தரம்பிள்ளை நாள் குறித்து விட்டு சென்றான்.

மறு சனிக்கிழமை வந்து, வீட்டைப் பார்த்த போது மீசைக்கார ஏஜெண்ட் வெள்ளி நிற பி.எம்.டபிள்யு காரில் காத்திருந்தார். காரில் இருந்து இறங்கி வந்தவர் சுந்தரம்பிள்ளையையும் மனைவியையும் உள்ளே அழைத்து சென்றார். அந்த வீட்டின் உட்புறம் சுருட்டுப் புகையின் நாற்றமாக இருந்தது.

இங்கிலாந்தில் இருந்து வந்து கால் நூற்றாண்டுகள் அவுஸ்திரேலியாவில் வாழும் வயதானவர்களுக்கு சொந்தமானது அந்த வீடு. வயதான மனிதர் இங்கிலாந்து ஆமியில் இருந்து ரிட்டயரான மிலிடரிக்காரர். சுந்தரம்பிள்ளை குடும்பத்தினர் வீட்டைப் பார்க்கச் சென்ற போதும் ஆறடிக்கு மேலான அந்த

மனிதர், வீட்டுக்கு முன் பகுதியில் நின்றபடி சுருட்டு புகைத்துக் கொண்டிருந்தார். அவர் ஒரு மரியாதைக்காக வெளியே நின்று புகைத்தார். மற்றப்படி முழுப் புகையும் திறந்த வீட்டின் கதவூடாக சிறிய மேகக் கூட்டங்களாக உள்ளே சென்றன.

மீண்டும் வீட்டைப் பார்த்து விட்டுச் சுருட்டுப் புகைக்காக விரும்பிய வீட்டை விட முடியாமல் வீட்டின் தரைவிரிப்பை சில காலத்தில் மாற்றுவது என முடிவு செய்தபடி, வீட்டு விற்பனை ஏஜன்டிடம் ஏலத்துக்கு வராமல் வீட்டை எடுக்கமுடியுமா என கேட்டபோது, அந்த ஏஜண்ட், "உங்களுக்கு வீடு பிடித்திருக்கா? சுருட்டுமணம் பிரச்சினை இல்லையா?" எனக் கேட்டார்.

'வீடு பிடித்திருப்பதால் தரைவிரிப்பை வெகு சீக்கிரத்தில் மாற்ற விரும்புகிறேம்'.

'இதற்கு முதல் வந்த ஒரு இளம் குடும்பத்தினர் சுருட்டு மணம் என வேண்டாம் எனக் கூறிவிட்டார்கள்'.

'நாங்கள் சுருட்டுக்கு பயப்படவில்லை. ஆனால் நீங்கள் வீட்டை ஏலத்துக்கு போடாமல் பேரம் பேசவேண்டும்'

அந்த ஏஜன்ட் உடனே அந்த மிலிட்டரிக்காரரிடம் சென்று பேசிவிட்டு ஒரு தொகையைச் சொன்ன போது சுந்தரம்பிள்ளை அதற்கு சம்மதித்து விட்டான். காரணம் எதிர்பார்த்த தொகையிலும் சிறிது குறைவாக இருந்தது.

அந்த வீட்டைப் பேசி முடிவாக்கப்பட்டபோது அந்த ஏஜென்ட் சொன்னார், 'சுருட்டு மணத்தால் உங்களுக்குப் பத்தாயிரம் டொலர்கள் இலாபம் அடைந்திருக்கிறீர்கள். வீட்டை விற்பதற்காக இரண்டு முறை ஸ்ரீம் கிளீனிங் செய்து ஏலம் போட்டோம். ஏலமும் போகவில்லை அந்த மணமும் போகவில்லை. பலர் இதன் காரணமாக வீட்டைப் பார்த்துவிட்டு வேண்டாம் என்று சொல்லி விட்டார்கள். வீட்டை விரைவில் விற்று விட்டு அந்த தம்பதிகள் இங்கிலாந்துக்கு திரும்பவும் போக விரும்புகிறார்கள். அது உங்களுக்கு சாதகமாக முடிந்து விட்டது'.

ஒருபடியாக நாலு அறை கொண்ட பெரிய வீடு, பாடசாலை, பெரிய பூங்கா, சொப்பிங் சென்ரருக்கு அருகாமையில் அமைந்தது எல்லாருக்கும் மன நிம்மதியாக இருந்தது. வீட்டை

வைத்துக்கொண்டே மற்றைய விடயங்களான பாடசாலை, போக்குவரத்து என்பவற்றைத் திட்டமிடவேண்டி இருக்கிறது.

□ □ □

ஷரன் புதிதாக வேலைக்கு சேர்ந்ததோடு சிறிய குழந்தைக்குத் தாயாக இருந்ததால் பல அசௌகரியங்களைச் சுந்தரம்பிள்ளை ஒன்றாக வேலை செய்யும் நாட்களில் கண்டும் காணாமல் இருக்க வேண்டி இருந்தது. அதற்கு மேலால் ஒருவித காந்தம் போன்ற கவர்ச்சி அவள் மேல் இருந்தது என்பதை வெளிப்படையாக ஏற்றுக்கொள்ள மறுத்தாலும் சாம் போன்று நெருங்கிப் பழகியவர்களுக்குப் புரிந்திருந்தது. வைத்தியசாலையில் பலரது புரிந்துணர்வுகளை ஷரனது செய்கைகள் ரப்பரைப்போல் இழுத்துச் சங்கடப்படுத்தியது.

வேலைக்கு ஒரு மணி நேரம் ஷரன் பிந்தி வந்தால் பலருக்கு சங்கடத்தை ஏற்படுத்தும். செல்லப்பிராணியை கொண்டு வந்தவர்கள் வெளி நோயாளர் பிரிவில் காத்திருக்கவேண்டும். நோய் குணமாகி தங்கள் செல்லப்பிராணிகளை வீட்டுக்கு கொண்டு செல்ல விரும்புபவர்கள் ஆவலுடன் காத்திருப்பார்கள். இதனால் மனிதர்கள் மட்டுமல்ல மிருகங்களும் பொறுமை இழந்துவிடும். இதன் விளைவால் பல நாய்கள் ஒன்றை ஒன்று பார்த்து குரைக்கத் தொடங்கும். பூனைகள் தங்களுக்கிடையே இருந்த சமாதான ஒப்பந்தத்தை மீறி ஒன்றுடன் ஒன்றும் நாய்களைப் பார்த்தும் சீறும். உரிமையாளர்களுக்கு இடையில் வாய்த் தர்க்கங்கள் கூட ஏற்படும். காலை வேளைகளில் சம வெளியில் ஓடும் ஆறு போல் வேலைகள் நடக்க வேண்டும். சிறிது தேக்கம் ஏற்பட்டால் ஆறு அணைகரையை உடைத்து விடுவது போல். இப்படியான தாமதங்களால் ஏற்படும் குழப்பங்களை தவிர்க்க மற்றைய வைத்தியர்கள், நர்சுகள் வேகமாக செயல்படவேண்டும்.வேகமாக செயல்படும் போது அவர்களது மனதின் அவசரம் அவர்களது வேலையைப் பாதிக்கும். இதைவிட முக்கியமானது ஷரன், சில செல்லப்பிராணிகளின் உரிமையாளர்களுடன் அதிக நேரம் எடுப்பதால் மற்றைய வைத்தியர்கள் அதிக வேலையை செய்யவேண்டிய நிர்பந்தம் ஏற்படுகிறது. இப்படியாக பலதடவை சுந்தரம்பிள்ளை பதிக்கப்படுவது உண்டு.

ஷரன் வேலைக்குப் பிந்தி வருவதால் பலருக்கு ஷரனைப் பற்றி நக்கலாக பேசுவது பொழுது போக்காகிவிட்டது. சாப்பிட்ட பிறகு வாய்க்குப் போடும் வெற்றிலை போல் அவளது விடயங்கள் மற்றவர்களுக்கு அமைந்து விடுகிறது. வேலைக்குத் தாமதமாக வந்த

பின், அதற்காக ஷரன் சொல்லும் காரணங்கள் நகைச்சுவைக்குரியதாகி விடுகிறது. உண்மையைச் சொன்னாலும் மற்றவர்கள் நம்பத் தயாராக இல்லை என்ற நிலை வந்து விட்டது.

மிகவும் பிரபலமாக பலரும் சிரித்த கதை ஒன்று உள்ளது. மெல்பனின் மேற்குப்பகுதியை கிழக்குப் பகுதியோடு இணைக்கும் மிகப் பெரிய பாலம் வெஸ்ட் கேட் பிரிஜ். அதைக் கடந்து தான் ஷரன் வேலைக்கு வரவேண்டும். ஒரு நாள் வரும் போது வெஸ்ட் கேட் பிரிஜ்ஜில் ஒரு பெண்ணின் கார் ரயர் வெடித்து விட்டது. அதனால் மற்ற கார்கள் அந்த பகுதியால் வருவதற்கு தடை ஏற்பட்டு சில மணித்தியாலம் போக்குவரத்து தடைப்பட்டுவிட்டது எனக் கூறியதோடு நிற்காமல் நகைச்சுவையோடு அந்தப் பெண் மினிஸ் கேட் உடை அணிந்தபடி ரயரை மாற்ற மிகவும் கஷ்டப்பட்டாள். அவளது அழகிய தொடைகளை காரில் போனவர்கள் பார்த்து இரசித்தபடி மெதுவாக சென்றதால் ரோட்டு போக்குவரத்து நிலவரம் மேலும் மோசமாகி விட்டது. இதைக் கேட்டு விட்டு வெளியே வந்த காலோஸ் சேரம் இது ஒரு பொய். இந்த குளிர்காலத்தில் எந்தப் பெண் மினிஸ்கேட்டை போடுவாள் என நம்ப மறுத்தது மட்டுமல்ல, இதை அன்று முழுவதும் சந்திக்கும் பலரிடம் நகைச்சுவையாக சொல்லி சிரித்தார். சுந்தரம்பிள்ளையின் அடி மனதில் ஷரனை நகைச்சுவைப் பொருளாக மாற்றுவது உறுத்தியது. இனம்புரியாத கவலையாக இருந்தது. ஆனால் ஷரன் தொடர்சியாக இப்படியான செயல்களிலும் பேச்சுகளிலும் ஈடுபடுவது சிறு பிள்ளைத்தனமாகவும் அதேபோல் பலரது கவனத்தை கவர்வதற்காகவும் போல் இருந்தது. சிறுபிள்ளைகள் பெற்றோர் கவனத்தை கவரச் செய்யும் குறும்புகளுக்கு சமனாக இருந்தது.

□ □ □

இந்த வைத்தியசாலைக்கு பல வேளைகளில் காட்டுப் பூனைகள் கொண்டு வரப்படுகிறது. இந்தக் காட்டு பூனைகள் வீடுகளில் வளரும் பூனைகளில் இருந்து உற்பத்தியாகி பின்னர் அந்தப் பூனைக்குட்டிகள் கவனிப்பற்று கட்டாக்காலியாக நகரத்தை அண்மித்த சிறிய இயற்கைக் காடுகளில் வளரும். இவை உணவுக்காக பறவைகள், சிறிய மிருகங்களை வேட்டையாடி உண்ணும். ஆதிகாலத்தில் இருந்தே அவுஸ்திரேலியாவில் வேட்டையாடும் மிருகங்கள் இல்லை என்பதால் அவுஸ்திரேலியாவுக்கே உரிய மிருகங்கள், பறவைகள் தப்பிவாழும் திறமை குறைந்தவை. பிரித்தானியர் காலத்தில் கொண்டுவரப்பட்ட நரிகளுடன் இந்தப் பூனைகளும்

விரைவாகத் தொடர்ந்து இனப்பெருக்கத்தில் ஈடுபட்டு பல்கிப் பெருகி பறவைகள் மற்றும் சிறிய அவுஸ்திரேலியாவுக்குரிய மாசூப்பியல்களை உணவுக்காக அழித்து விடுவதால் சூழலுக்கு பாரிய இழப்பை ஏற்படுத்துகின்றன. இதையிட்டுத்தான் வீட்டுப் பூனைகளை கருக்கட்டாத ஒபரேசனை செய்வதும் மைக்கிரோசிப்பின் மூலம் அடையாளம் இடுவதன் மூலம் இப்படியாக உருவாகும் காட்டுப்பூனைகளின் தொகையை குறைக்க முயற்சிகள் எடுக்கப்படுகிறது. பொறி வைத்துப் பிடிக்கப்பட்ட காட்டுப்பூனைகள் மிருகவைத்தியர்களால் கருணைக்கொலை செய்யப்படும்.

இப்படி கருணைக்கொலை செய்யக் கொண்டு வந்த ஒரு காட்டுப் பூனையை கைகளால் எடுத்து கருணைக்கொலை செய்யமுடியாது. அவைகள் புலிகளைப் போன்று மூர்க்கமானவை. சீறிக் கொண்டு கடிக்க வரும். விசேடமான கூட்டுக்குள் வைத்து அந்தக் கூட்டை சிறிதாக்கி அதற்குள் வைத்தே ஊசியை ஏற்றி கருணைக் கொலை செய்வதுதான் பாதுகாப்பான முறையாகும். அப்படி கருணைக் கொலை செய்வதற்காக வந்த ஒரு காட்டுப் பூனையை வெளியில் ஷரன் எடுத்து பரிசோதிக்க முற்பட்டபோது அந்தப் பூனை அவளது கையில் ஆழமாக கீறிவிட்டுத் தப்பிவிட்டது. இவ்வளவுக்கும் அந்த பரிசோதனை அறைக் கதவுகள் மூடித்தான் இருந்தன. ஆனாலும் அந்தக் காட்டுப் பூனை மாயமாகி மறைந்துவிட்டது. காட்டுப் பூனையால் காயப்பட்ட ஷரனின் மேல் எவரும் அனுதாபப் படவில்லை. ஏற்கனவே இருந்த வழக்கத்தை மீறியதற்கான கடுப்பில் பலர் ஷரனைக் குறை கூறி, ஷரனுக்கு செல்லப் பெயராக டிராமாக் குயின் என்ற பட்டப் பெயர் இந்தச் சம்பவத்தின் பின்பாகச் சூட்டப்பட்டது.

தப்பிய காட்டுப் பூனையை ஒருவராலும் கண்டுபிடிக்க முடியவில்லை. மேலும் அதற்கு உரிமையாளர் இல்லாததால் அதைத் தேடவேண்டிய பொறுப்பு அந்த வைத்தியசாலையில் வேலை செய்பவர்களுக்கு இருக்கவில்லை. எல்லாம் டிராமாக் குயினின் பொறுப்பு எனச் சகலரும் அந்தச் சம்பவத்தை கடலில் எறிந்த கல்லாக மறந்து போய்விட்டார்கள்.

இந்த விடயத்தில் வைத்தியசாலையில் வேலை செய்யும் மனிதர்களின் ஞாபக மறதியை பிடிக்காத ஒரு சீவன் அந்த வைத்திய சாலையில் வாழ்கிறது. பத்து வருடத்துக்கு மேல் தனிக் காட்டு ராஜாவாக அந்த வைத்திய சாலையில் தன்னை

விட இரண்டாவதாக ஒரு பூனை இருப்பது கொலிங்வூட்டுக்கு பிடிக்கவில்லை. "வேதியரும் வேசிகளும் விதிநூல் வைத்தியரும் கோழிகளும் பூனைகளும் பகையாக இருப்பார்கள்" என்ற பழைய சொல்லுக்கிணங்க ஒரு கிழமையாக விசர் நாய் கடித்த பூனை போல் அந்த வைத்தியசாலையின் மூலை முடுக்கெல்லாம் தேடியது.

பகலில் நாய்கள், மனிதர்கள் அங்கும் இங்கும் செல்வதால் கொலிங்வூட்டுக்கு சுதந்திரமான நடமாட்டம் கட்டுப்படும். வைத்தியசாலையின் இரவுகள்தான் கொலிங்வூட்டுக்கு சொந்தமானவை. கருமையான இருளை தனது உடலில் பூசியபடி காட்டில் கரந்துறையும் கெரில்லா போராளி போல் ஒளி பாச்சும் தனது கண்களுடன் மூலை முடுக்கெல்லாம் வலம் வரும். இரவில் நடுநிசியின் பின்பு வைத்தியசாலையின் ஓர் இரு லைட்டுகளைத் தவிர மற்றவை அணைக்கப்படுவதால் இருளுக்கும் கொலிங்வூட்டுக்குமே அந்த இடம் சொந்தமாகிறது. இடங்களை பகுதி பகுதியாக பிரித்து ஒவ்வொரு இடமாக துப்பறியும் பொலிசாராக காட்டுப்பூனையின் தடயங்களைத் தேடியது. நேரடியாக ஒளிந்திருக்கும் பூனையைத் தேடாமல் பூனைகள் வெளியேற்றும் குண்டிச்சுரப்பியின் வாசனையைத் தேடியது. பூனைகள் மட்டுமல்ல எந்த ஊண் உண்ணும் மிருகங்களும் தங்களது வாழும் இடத்தை அந்த சுரப்பின் மூலம் அடையாளப்படுத்தும் என்பது கொலிங்வூட்டுக்கு தெரிந்திருந்தது.

ஏழு நாட்களாக மோப்பம் பிடித்து கூரைப் பகுதி அலுமாரியின் இடுக்குகள், சவஅறை என எந்தப் பகுதியையும் விட்டு வைக்காமல் சென்று துப்புத் துலக்கியது. கபடமான நட்புடன் பூனையை அழைப்பது போலவும் பெண் பூனையை ஆண் பூனை புணர்வுக்கு குரல் கொடுத்து அழைப்பது போலவும் பின்னிரவில் குரல் கொடுத்து அழைத்தது. ஆனால் எதுவித பலனும் கிடைக்கவில்லை. கொலிங்வூட்டின் எல்லா முயற்சிகளும் விழலுக்கு இறைத்த நீராகின. அந்தப் பூனை இங்குதான் எங்கோ ஒளிந்து இருக்கிறது என உள்மனம் சொன்னாலும் காட்டுப் பூனையை பற்றி எந்த தடயமும் கொலிங்வூட்டுக்கு கிடைக்கவில்லை.

இப்படியாக ஒரு கிழமை கஷ்டப்பட்டு ஒழுங்காக சாப்பிடாமல் தூக்கமில்லாமல் அலைந்து திரிந்து தேடியதால் கொலிங்வூட்டின் வயிற்றில் தொங்கிக் கொண்டிருந்த கொழுப்பு மறைந்து விட்டது. ஆனால் வயிற்றில் தொங்கிய கொழுப்புக் குறைந்தாலும் பொறாமை தீயாக வயிற்றின் உள்ளே தொடர்ந்து எரிந்து கொண்டிருந்தது.

வெளிக்கொழுப்பு பொறாமைத் தீயால் எரிந்ததா இல்லை காட்டுப் பூனையை தேடித் திரிந்ததால் குறைந்ததா என்பது விவாதத்துக்கு உரியது. இந்த வைத்தியசாலையில் தனது செல்வாக்கான சுதந்திரமான வாழ்வுக்கு மறைந்து வாழும் அந்த காட்டுப் பூனையால் இடர் ஏற்படலாம் என்றோ அல்லது தான்மட்டும்தான் இங்கு வாழும் உரிமையை பெற்றிருப்பதாக நினைத்தோ மனம் புகைந்தபடி அலைந்து திரிந்தது.

எல்லோரும் கொலிங்வூட் சிலிம்மாக வந்தது பற்றி வியப்புடன் பேசிக் கொண்டிருந்தார்கள். சிலர் வைத்தியத்துக்கு வந்த பூனைகளில் இருந்து வியாதி ஏதாவது தொற்றி விட்டதோ என சாடை மாடையாக கூறியதும் கொலிங்வூட் காதில் விழுந்தது.

அவர்கள் மேல் கொலிவூட்டுக்கு எரிச்சல் ஏற்பட்டது.

‘கையாலாகதவர்கள். சோம்பேறிகள்’ என திட்டியது

‘இவன்கள் தங்கள் வேலையை ஒழுங்காக செய்திருந்தால் இவன்களின் கொழுப்பும் கரைந்திருக்கும். என்னுடைய கொழுப்பு தன்பாட்டில இருந்த இடத்தில் இருந்திருக்கும்’. எனச் சொல்லி அவர்கள் முன் தனது வாலை உயரத்தி பிஷ்டத்தைக் காட்டித் தனது அதிருப்தியைத் தெரிவித்தது.

□ □ □

**ஞா**யிற்றுக்கிழமை நள்ளிரவு. வெளியே மழை தொடர்ச்சியாக தூறலாக பெய்து கொண்டிருந்தது. செல்லப்பிராணிகளைக் கொண்டு வந்தவர்கள் தொகை குறைவாக இருந்ததால் விரைவாக வீட்டுக்கு போய் விடலாம் என்ற எண்ணத்துடன் இரவு வேலையை முடித்து விட்டு தண்ணீர் குழாயில் ஷரன் கையை கழுவிக் கொண்டிருக்கும் போது அந்த அறையின் பின்புறமாக பார்மசி கதவு வழியாக கொலிங்வூட் மெதுவாக உள்ளே வந்தது.

திரும்பிப் பார்த்த ஷரன் ‘என்ன கொலிங்வூட் வர வர மெலிந்து கொண்டு வருகிறாய். ஏதாவது தொற்று நோய் பிடித்து விட்டதா? இல்லை சாப்பிடுவதற்கு கஷ்டமாக இருக்கிறதா?’ எனக் கேட்டாள். நகைச்சுவை மட்டுமல்ல அத்துடன் நக்கலும் கலந்திருந்தது.

வழக்கமான உதாசீனத்துடன் ‘இந்த டிராமா குயினால் தான் வந்தது’ என கூறிவிட்டு மீண்டும் திரும்பி செல்ல நினைத்த போது திடீரென வெளிச்சமும் மறைந்து’ வைத்தியசாலையின் சகல

லைட்டுகளும் அணைந்து போய்விட்டன. எங்கும் இருள் பரவி முழு வைத்தியசாலையையும் முற்றாக மூடிக்கொண்டது. அந்த நேரத்தில் கதவை நோக்கி நடந்த ஷரனது கால் கொலிங்வூட்டின் மேல் பட்டதும் பலத்த சத்தத்துடன் கொலிங்வூட் சீறியது.

'என்னை மன்னிக்க வேண்டும்' என குனிந்த ஷரன் கொலிங்வூட்டை தூக்க முற்பட்டபோது வேறு ஒரு பூனை சீறும் சந்தம் கேட்டது. திடுக்கிட்டு ஷரன் நிமிர்ந்தாள். அந்த நேரத்தில் மீண்டும் லைட் வந்து அந்த இடம் ஒளி வெள்ளமாகியது.

மூலையில் சீறிய படி நின்ற கொலிங்வூட்டின் கழுத்தில் இருந்து இரத்தம் வழிந்தது. எதிரில் ஒரு கரிய நிறத்தில் மெலிந்த பூனை வாலை உயர்த்தி பதிலுக்கு சீறிக் கொண்டு சிங்கம் போல நின்றது. கரிய உரோமங்கள் முள்ளம்பன்றியின் முட்கள் போல் குத்திட்டுக் கொண்டன. ஏற்கனவே ஒரு தாக்குதலை வெற்றிகரமாக முடித்துவிட்டதால் மறு தாக்குதலுக்கு இடது முன்னங்காலை உயர்த்தியபடி பின்னங்கால்களை சிறிது பிரித்து வைத்து கழுத்தை உள்நோக்கி இழுத்தபடி கோரைப்பற்களைக் காட்டியபடி புதிய தாக்குதலுக்கு தயாராகியது.

ஷரனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. இந்தப் பூனைதான் சில நாட்களுக்கு முன்னால் தன்னிடம் இருந்து தப்பியது. மீண்டும் அடுத்த தாக்குதலுக்கு தயாராக காற்றில் கொலிங்வூட்டை நோக்கி பாய்ந்த அந்தப் பூனையை காலால் எத்திவிட்ட போது மூடப்பட்ட கதவில் பட்டு நிலத்தில் விழுந்தது. அந்த நேரத்தில் பாய்ந்து கொலிங்வூட்டை அள்ளி தூக்கிக் கொண்டு பின் கதவால் பார்மசி பகுதிக்கு சென்று அந்தக் கதவை அடைத்ததும் அந்தக் காட்டுப்பூனை அந்த அறையில் சிறைப் பிடிக்கப்பட்டது.

இரத்தம் வடிந்தபடி இருந்த கொலிங்வூட்டை பாதுகாப்பாக பூனைப்பகுதியில் ஒரு கூட்டில் அடைத்துவிட்டு திரும்பி வந்த போது ஷரனது நேர்சான நோறேலும் சேர்ந்து கொண்டு இப்பொழுது அந்தக் காட்டுப்பூனையை அந்த அறையில் தேடினர்.

'என்னால் நம்ப முடியவில்லை எப்படி இந்தப் பூனை பத்து நாட்கள் உயிர்வாழ்ந்தது?

'இது வேறு பூனையாக இருக்கலாம்' என்றாள் நோறேல்

'இல்லை இது அந்தப் பூனைதான். பூனைகள் பலநாட்கள் உணவு தண்ணீர் இல்லாமல் சீவிக்கும். ஆனால் இது ஒரு உலக சாதனை'.

இருவரும் பேசிக்கொண்டு தேடினாலும் அந்த காட்டுப்பூனையைக் காணவில்லை.

பூனை நின்ற இடத்தில் கொலிங்வூட்டின் இரண்டு இரத்த துளிகள் கரும் பச்சை நிலத்தில் உறைந்து இருந்தன.

ஷரனுக்கு நம்ப முடியவில்லை. வெறுமையான அறை. அங்கு பரிசோதனை மேசை மற்றும் ஒரு சிறிய வாஷ் பேசின் பொருத்திய அலுமாரி மட்டும்தான் அந்த அறையில் உள்ள பொருட்கள். சுவர்கள் ஆள் உயரத்திற்கு நாலுபக்கமும் வழுவழுப்பான ரைல்ஸ்கள் பதித்தவையானதால் சுவரால் ஏறி கூரைக்கு செல்ல முடியாது.

எப்படி ஒளித்திருக்க முடியும்?

வாஷ் பேசினின் கீழுள்ள அலுமாரியை ஷரன் திறந்த போது வால் ஆடியது போன்று நிழல் ஆடியது. மிருகங்களின் கண்களைப் பரிசோதிக்கும் சிறிய லைட்டின் வெளிச்சத்தை அலுமாரியுள்ளே செலுத்தி குனிந்து பார்த்தபோது அந்தப் பூனை வாஷ் பேசினுக்கும் சுவருக்கும் இடையில் தண்ணீர் குழாயின் வளைவில் மறைந்திருந்தது.

பத்து நாட்களுக்கு மேல் அந்த இடத்தில் உணவு தண்ணீர் இல்லாமல் வாழ்ந்து வந்திருக்கிறது. பாதுகாப்பு படையினது உயிர் குடிப்பதற்காக மரத்தின் கிளையில் பல நாட்கள் மறைந்திருக்கும் கெரில்லா போராளி போல் அந்தத் தண்ணீர்க் குழாயின் வளைவில் வாழ்ந்திருக்கிறது. அப்படியாக திடசங்கற்பம் கொண்டு வாழ்க்கையை வாழ்வதற்காக உறுதியுடன் இருந்த அந்த காட்டுப்பூனையை தேடியலைந்து கண்டு பிடித்தது கொலிங்வூட்டின் சாதனைதான்.

'எனது கால்பட்டு கொலிங்வூட் சீறியதால் அந்த காட்டுப்பூனை வெளிவந்திருக்க வேண்டும். இல்லையென்றால் இன்னும் எத்தனை நாட்கள் இங்கிருக்குமோ? அல்லது கொலிங்வூட் அதைக்கண்டுதான் சீறியதா'

'இந்த பூனையை நாங்கள் வெளியில் எடுப்பது கஷ்டம்' என்றாள் நோறேல்

ஷரன் வழக்கமாக இதை ஏற்றுக்கொள்ள மாட்டாள். காட்டுப் பூனையை பிடித்துக் கருணைக் கொலை செய்யவேண்டும் எனத்தான்

சொல்லி இருப்பாள். தனது கடந்த காலத் தவறால் கொலிங்வூட் காயமடைந்தது. அத்துடன் நடு இரவைத் தாண்டிவிட்டது. ஷரனின் மனதில் கொலிங்வூட்டுக்கு மருத்துவம் பார்க்க வேண்டும் என்ற சிந்தனையுடன் இருந்ததால் நோறேலுடைய ஆலோசனைக்கு ஏற்ப மயக்க மருந்து கொண்ட ஊசியால் அந்தக் குழாயின் மீதிருந்த பூனைக்கு நீண்ட ஊசியைப் பாவித்து கருணைக்கொலை செய்தாள்.

சில நிமிட நேரத்தில் வெளியே விழுந்த அந்த காட்டுப்பூனை ஒரு எலியளவில் இருந்தது. உயிரோடு பார்த்த போது சிலிர்த்த மயிர்கள் பெரிதாகக் காட்டி இருந்தன.

இருவரும் மீண்டும் கொலிங்வூட்டைத் தேடிச் சென்றனர்

'ஆகா என்னருமை கொலிங்வூட்' என மார்போடு தூக்கி அணைத்தாள் நோறேல்.

'கொலிங்வூட்டுக்கு தேவை இல்லாதது இந்த துப்பறியும் வேலை. மனதில் துப்பறியும் பொலிஸ் என்ற நினைப்பு. வேண்டாத வேலையைச் செய்து காயப்பட்டிருக்கிறது. அந்தப்பூனை எலியளவில் இருக்கிறது. ஆனால் இந்தப் பெரிய உடம்புடன் நீ கடிவாங்கி இருக்கிறாய். எதுக்கும் லாயக்கு இல்லை' என திட்டிக் கூறியபடி காயத்தை சுத்தம் செய்தாள் ஷரன்.

கொலிங்வூட் "இவளால்தான் எல்லாம் வந்தது. டிராமாகுயின், டிராமாக் குயின்" என மனதில் பலமுறை திட்டியது.

அப்பொழுது ஷரன் அன்ரிபயற்றிக்கை ஏத்தியபோது கொலிங்வூட் கத்தியது

'கமோன் கொலிங்வூட் மெதுவாக எடுத்துக் கொள். தேவையில்லாத வேலையில் ஏன் ஈடுபட்டாய்' என சிரித்தபடி

நோறேல் மெதுவாக ஊசிபோட்ட அந்த இடத்தை விரல்களால் தடவி விட்டது இதமாக இருந்தது.

கொலிங்வூட்டை பூனைக் கூட்டுக்குள் அன்றிரவு அடைத்து விட்டார்கள்.

கொலிங்வூட் திட்டியபடியே இருந்தது. வைத்திய சாலையில் சுதந்திரமாக திரிந்த தன்னை கூட்டில் அடைத்து வைத்தது

பாதிப்படைந்த தனக்கு தரப்பட்ட, மேலதிக தண்டனையாகக் கருதியது.

□ □ □

அடுத்த நாள் சுந்தரம்பிள்ளைக்கு வழக்கம் போல காலை எட்டரை மணிக்கு வேலை. பூனை வாட்டில் வேலை தொடங்கியதும் சிவா, சிவா என உயிர் போகவிருக்கும் நிலையில் கடைசியாக வெளிவரும் வார்த்தை போன்ற ஒரு அனுங்கலான குரல் மெல்லியதாக கேட்டது. திரும்பிப் பார்த்தபோது எவரும் அருகில் இல்லை. தொடர்ந்து மற்றப் பூனைகளைப் பரிசோதித்துக் கொண்டிருந்தபோது நாய்வோட்டில் மருந்துகளைக் கொடுத்துத் தனது வேலைகளை முடித்துவிட்டு உள்ளே வந்த சாம், புதிய செய்தியைச் சொல்லும் பரபரப்புடன் ‘ ஒரு கிழமைக்கு முன்பு தப்பியோடிய காட்டுப்பூனை கொலிங்வூட்டை கடித்து விட்டது. இங்கு ஒரு கூட்டில்தான் இருப்பதாக சொன்னார்கள். நீ கண்டாயா சிவா?’ என்றான்.

அப்பொழுது மீண்டும் ‘சிவா’ என்று வலது பக்க மூலையில் அதே ஈனஸ்வரத்துடன் குரல் கேட்டு, சுந்தரம்பிள்ளை அங்கே சென்றபோது பரிதாபமாகக் கழுத்தைக் கீழே போட்டுக் கொண்டு மூலையில் கசக்கி எறியப்பட்ட சாம்பல் கம்பிளித் துணிபோல சீவனற்ற நிலையில் கொலிங்வூட் கிடந்தது. கழுத்தில் பெரிய வீக்கம் ஒரு திராட்சைப் பழம் அளவில் இருந்தது.

‘கொலிங்வூட் என்ன நடந்தது?’

‘இரவு அந்த காட்டுப் பூனை கடித்துவிட்டது. அந்த டிராமாக்குயின் அவசரத்தில் எனது காயத்தை துப்பரவாகத் துடைக்கவில்லை. அதனால் மீண்டும் சீழ் பிடித்து இப்பொழுது எனக்கு காய்ச்சல் அடிக்கிறது’.

‘சரி நான் உன்னைப் பார்த்துக்கொள்கிறேன். கவலையை விடு’

‘எனக்கு மயக்க மருந்து கொடுக்காமல் தோலை மட்டும் விறைக்கப் பண்ணிவிட்டு இந்த சீழை எடு’.

‘நீ சொல்லி நான் செய்யிறதான நிலை. என்ன செய்வது?’

‘உன்னோடுதான் என்னால் பேசமுடியும். அந்தப் பூனையில் எந்த தொற்று நோய் இருந்ததோ?

‘மூன்று மாதத்தில் இரத்த பரிசோதனை செய்வோம். எயிட்சுக்கும் லுயிக்கீமியாவுக்கும் சோதனை செய்யவேண்டும்’.

‘அது வரையும் நான் மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதியாக இந்த வைத்தியசாலையில் உலாவ வேண்டும். இது கொடுமையானது. அந்த டிராமாக்குயினின் தவறு எனது உயிருக்கு உலைவைத்திருக்கிறது’ எனப் புலம்பியது.

‘மரணம் இந்த உலகத்தில் படும் கஷ்டங்களில் இருந்து விடுதலை செய்கிறது என சொல்வார்களே’

‘மற்றவர்களுக்கு சொல்லும்போது இலகுவாக இருக்கிறது. உங்களுக்கு பரிகாசமாக இருக்கிறது எனது நிலை’.

‘சரி. சரி. கொலிங்வூட் புலம்பாதே. இது சாதாரணமானது. சாம் கொலிங்வூட்டின் உடல் வெப்பத்தை பார்’என்றதும் கொலிங்வூட்டின் வாலை உயர்த்திவிட்டு குதத்துக்குள் தேமாமீட்டர் சாமினால் செருகப்பட்டது. அதே நேரத்தில் ஊசி மருந்தை சுந்தரம்பிள்ளை முதுகில் ஏற்றிய போது ‘ஏன் இரண்டு பேரும் ஒரே நேரத்தில் செய்யிறீர்களே இது நல்லாவா இருக்கு?’ மீண்டும் ஈனஸ்வரத்தில் சொன்னது கொலிங்வூட்.

‘நாங்கள் மற்ற மிருகங்களையும் பார்த்து அவைகளுக்கும் மருத்துவம் செய்ய வேண்டும். சாம் என்ன வெப்பம்?’

‘நாற்பது காட்டுகிறது’

‘புண்ணை துணியினால் சுத்தம் செய்து விட்டு மீண்டும் அதே கூட்டில் அடைத்து விடு.

‘கொலிங்வூட் இந்தக் கூட்டில் இளைப்பாறு’ எனச் சொல்லிவிட்டு சாமுடன் சுந்தரம்பிள்ளையும் பூனை வாட்டில் இருந்து வெளியேறினார்கள்.

கொலிங்வூட்டை பற்றி அன்று சுகம் விசாரிப்பதற்காக வைத்தியசாலையில் வேலை செய்பவர்கள் பலர் வந்தனர். போலின் அன்று மாலை ஐந்து மணிக்கு இரவு வேலை தொடங்கவிருந்தாள் எனினும் கருணை உள்ளத்துடன் மதியமே வந்து கொலிங்வூட்டை மடியில் வைத்து கொஞ்சினாள். அன்று பலராலும் சுகம் விசாரிக்கப்பட்டு கவனிக்கப்பட்டது உள்ளூர சந்தோசத்தை அளித்தாலும் கழுத்து காயத்தால் ஏற்பட்ட வலியும், காய்ச்சலால்

ஏற்பட்ட உடல் வெப்பமும் சேர்ந்து யாரோ வாகனத்தால் அடித்துப் போட்டது போன்ற உணர்வை கொடுத்தது. இதை விட பூனைக்கடியில் தொற்றும் நோயான எயிட்ஸ் வந்தால் தன்னைக் கருணைக் கொலை செய்து விடுவார்கள் என்ற பயமும் மனதில் புகைந்து கொண்டிருந்தது.

'கொலிங்வூட்டைப் பராமரிக்க வந்தாயா? எனக் கேட்டாள் அந்த வழியால் வந்த சுந்தரம்பிள்ளை'

'எனக்கு இரவே நோறேல் தொலைபேசியில் சொன்னாள்'

'நீ இரவு வேலையில் இருப்பதால் பார்த்துக் கொள்வாய். சாப்பிட மறுத்தால் கரண்டியால் சயன்ஸ் திரவ டையற்றை கொடு. இன்று இரவும் கூட்டுக்குள் தான் இருக்கவேண்டும்'

கொலிங்வூட் போலின் மார்பில் படுத்தபடி ஷரனை சபித்துக் கொண்டிருந்தது. சுந்தரம்பிள்ளை அதை பொருட்படுத்தாமல் சிரித்தபடி அந்த இடத்தை விட்டு அகன்றான்.

## 15

அந்த ஞாயிற்றுக்கிழமை சுந்தரம்பிள்ளைக்கு விடுமுறை நாள். வீட்டில் மனைவி, பிள்ளைகளுடன் ஒன்றாக இருக்க கிடைத்த அந்த நாளை ஓவர்ரைம் செய்வதற்கு ஒப்புக்கொண்டதால் வேலைக்கு வந்தது மட்டுமல்லாது விடுமுறையில் இருந்த சாமையும் துணைக்காக இழுத்து வந்ததான். அன்று விசேடமான வேலை நாள். பெண் பூனைகளை மட்டும் கருத்தடை ஒபரேசன் செய்வதற்கு வேதனத்துக்கு அப்பால் விசேடபோனசாக பணம் கிடைக்கும் என்பதால் அன்று வேலை செய்ய ஒப்புக்கொண்டிருந்தான்.

சொந்தமாக வீடு வங்கியதால் ஏற்பட்டுள்ள பெரிய வங்கிக்கடனில் இந்தப் பணம் சிறு துளியாக உதவும் என்ற சிந்தனையில் ஒப்புக்கொண்ட வேலையிது. மற்றைய நாட்களைப் போல் காலை வந்து இரவுவரை வேலை செய்ய வேண்டிய கட்டாயம் இல்லை. இருபது பெண் பூனைகளும் ஒரு ஆண் பூனையும் கருத்தடை ஒபரேசன் செய்ய வேண்டி இருந்தது. அதை செய்து முடித்தால் எப்போதும் வீடு செல்லலாம். ஒவ்வொரு பூனைக்கும் இவ்வளவு பணம் என்பதுதான்.

அந்த இருபத்தியொரு பூனைகள், பூனைப்பகுதியில் தயாராக இருந்தன. சாம் அனுபவம் உள்ள நேர்சானதால் மயக்க மருந்தைக் கொடுத்து ஒவ்வொன்றின் வயிற்றுப்பக்கத்தை சவரம் செய்து சுத்தப்படுத்தி தயாராக மேசைக்கு கொண்டுவந்து கிடத்தியதும் சுந்தரம்பிள்ளையால் இடை நிறுத்தாமல் ஒபரேசனை விரைவாக செய்ய முடிந்தது. மூன்றுமணி நேரத்தில் பதினைந்து பூனைகளைக் கருத்தடை செய்து விட்ட போது மதியம் ஒரு மணியாகிவிட்டது. இன்னும் ஆறு பூனைகளையும் ஒருமணித்தியாலத்தில் செய்தால் இரண்டு மணிக்கு முடித்து விட்டு வீடு செல்லலாம் எனக் கணக்கு போட்டிருந்த சுந்தரம்பிள்ளையிடம் சாம் வந்து 'நாங்கள்

சாப்பாட்டுக்குப் போய் வருவோம்'என்ற போது சுந்தரம்பிள்ளைக்கு அது சம்மதமாக இருக்கவில்லை.

'சாம் இன்று விடுமுறை நாள். காலநிலையும் நன்றாக இருக்கிறது. வீட்டுக்கு போனால் பிள்ளைகளை சொப்பிங் சென்ரருக்கு கொண்டு செல்ல வேண்டும். அவர்களை அங்கு கூட்டி செல்வதாக வாக்குறுதி அளித்து விட்டு வந்தேன்'.

'அது பரவாயில்லை. சாப்பிட்டு வந்து சீக்கிரம் வேலையை முடித்து விடலாம்'

'என்ன அவசரம்? அவ்வளவு பசிக்கிறதா?

'இங்கே வா' என கையில் பிடித்து பூனை வாட்டிற்கு அழைத்து சென்று 'இந்தப் பூனைகளை இடையில் நிறுத்தி அவற்றை ஒபரேசன் செய்ய மனமில்லை. இவற்றை பிரித்தெடுக்கும் பாவத்தை நான் எப்படி செய்ய முடியும்?'

கறுத்த கால்மேசு போட்டது போன்ற இரண்டு கருமையான கால்களுடன் சற்று வெண்பழுப்பு நிறமான அழகிய ஆண் சயாமிய பூனை தனது தலையை திருப்பி நீலநிறகண்களால் கூட்டுக்கு வெளியே பார்த்தபடி அதே சயாமிய இன பெண் பூனையை புணர்ந்து கொண்டிருந்தது. அதனது நீளமான உடல் அசைவுகளை ஏற்றபடி பெண்பூனை மெய் மறந்திருந்தது. அந்தச் சிறிய கூட்டில் புறச்சூழலை பொருட்படுத்தாது அவை உறவு கொள்ளும்போது பெண்பூனை மெதுவாக முனகியபடி, கண்ணை மூடியபடி இருந்தது. ஆண் பூனை இதுதான் கடைசிச் சந்தர்ப்பம் என நினைத்து அவசரமாகக் காரியத்தில் இறங்கியிருந்தது.

ஐம்பது வயதான மோறின் சிரித்தபடி சிறிது தூரத்தில் இருந்து பார்த்துக்கொண்டு நின்றார். இதைப் பார்த்த சாமின் கண்களில் பரிதாப உணர்வு இருந்தது. பெண்கள் சம்பந்தமாக தொடர்ச்சியாக, நகைச்சுவையாகப் பேசும் சாமிடம் இப்படி பூனைகளிடம் அனுதாபத்தை காட்டும் மனநிலையை சுந்தரம்பிள்ளை எதிர்பார்க்கவில்லை.

"யார் இவற்றை ஒன்றாக கூட்டிலடைத்தது?' என்றான் சுந்தரம்பிள்ளை.

பூனைகள் இரண்டும் ஒரே வீட்டில் வளர்வதால் ஒரே கூட்டில் வைக்கச் சொல்லி உரிமையாளர் எங்களிடம் கேட்டுக்கொண்டார் என பூனை வாட்டில் வேலை செய்யும் மோறின் விளக்கம் தந்தார்.

பெண் பூனைகளைப் புணர்வு காலத்தில ஒபரேசன் செய்யும் போது அதிக இரத்தப் போக்கு ஏற்படும் என்ற கவலை சுந்தரம்பிள்ளையைப் பற்றிக்கொண்டது.

அந்த இரு பூனைகளுக்கும் இடையூறு இருக்கக் கூடாது என்பதில் கருத்தாக இருந்தான் சாம்.

'சாம் உன்போல மத்தியதரைக் கடல்பகுதி நாடுகளில் இருந்து வருபவர்கள் எல்லாம் இப்படி இந்த விடயத்தில் கரிசனையாக இருக்கிறீர்கள்? இத்தாலி, கிரிஸ் போன்ற நாடுகளில் இருந்து வந்த ஆண்கள், தங்களது ஆண்நாய்களுக்கு கருத்தடை ஒபரேசன் செய்யமாட்டார்கள். ஆனால் பெண் நாயாக இருந்தால் பரவாயில்லை என்பார்கள்'

'என்னை அப்படியாக நினைத்து விடாதே. கடைசியாக அந்தப் பூனைகளுக்கு கிடைக்கும் புணர்வுச் சந்தர்ப்பத்தைக் கெடுத்து உடனே ஒபரேசன் செய்வது எப்படி?

'சரி சாப்பாட்டுக்குப் போவோம். உனது ஆசையை ஏன் கெடுப்பான்?'

சாமுடன் சாப்பாட்டுக்கு வெளியே வந்த போது ஜோன் சேர்ந்து கொண்டான்.

'ஜோன் உனக்கு எப்பொழுது கல்யாணம்?' சாம் அவனது தோள்களை அழுத்தியபடி கேட்டாள்.

'அடுத்த ஞாயிற்றுகிழமை பேண்ரீகலி தேவாலயத்தில் வைத்திருக்கிறோம்'

'மிஷேலைப் பார்த்தால் தேவாலயம் போகிறவரா தெரியவில்லை'.

மிஷேலின் தாய் இறக்கும்போது மகளிடம் தேவாலயத்தில் திருமணத்தை நடத்த வேண்டுமென வாக்குறுதியை கேட்டு பெற்றுக் கொண்டாள். எனது பக் நைட் வருகிற வெள்ளிக்கிழமை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. நீங்கள் இருவரும் வரமுடியுமா?

நாங்கள் என்ன செய்ய வேண்டும்? சுந்தரம்பிள்ளை அந்த விடயத்தில் எதுவும் புரியாததால் ஆச்சரியத்துடன் கேட்டாள்.

'நீங்கள் ஒன்றும் செய்யத் தேவையில்லை. தேவையான அளவு மது இருக்கும். உடைகளைக் கழற்றி ஆடுவதற்கு ஒரு பெண்ணை ஒழுங்கு பண்ணியாகிவிட்டது'.

பக் நைட் பற்றிய விடயம் புரியாத போதிலும் சுந்தரம்பிள்ளை சாமுடன் செல்ல சம்மதித்தான்.

காரில் விக்ரோரியா பரேட் என்ற அந்தச் சாலை இரண்டாக மத்தியில் மரங்களால் பிரிக்கப்பட்டிருந்தது. இரண்டு பக்கமும் பூங்காக்கள், கட்டிடங்கள் என ஒன்றின் பின் ஒன்றாக அமைந்திருந்த அந்தத் தெரு நகரத்தின் முக்கியமான தெருவாகும். நகரத்தின் மத்தியபகுதியூடாக செல்ல விரும்பாமல் தென்பகுதியில் இருந்து வடபகுதிக்கு செல்பவர்கள் அதிலும் ஏர்போட் செல்பவர்கள் பாவிப்பதால் எப்பொழுதும் வாகனங்கள் நிறைந்த சாலை. அந்த சாலை வழியாக மெல்பன் கிரிக்கட் கிளப் பக்கம் சென்ற போது வழக்கத்துக்கு மாறாக அந்தத் தெரு அமைதியாக இருந்தது. கிழமை நாட்களில் சாலை எங்கும் கார்கள் நிறைந்து மெதுவாக நகர்ந்து கொண்டிருக்கும். இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகலுக்கு மேலானதால் புட்போல் தொடங்கிவிட்டதால் விக்டோரிய மாநிலத்தின் இயக்கம் குறைந்து விட்டது. கிட்டத்தட்ட ஒரு லட்சம் மனிதர்கள் அந்த மைதானத்துக்குள் குவிந்துவிட்டதால் வீதிகள் மெல்பன் நகரம் தூக்கமாத்திரையை விழுங்கியது போன்ற அமைதியான ஒரு தோற்றத்தை கொடுத்தது. மைதானத்துக்குள் செல்லாதவர்கள் வீடுகளில் தொலைக்காட்சி முன்பாக இருப்பார்கள்.

சில வருடங்கள் வரையும் ஞாயிற்று கிழமைகளில் புட்போலை நடத்த கிறீஸ்த்துவ தேவாலயங்கள் எதிர்த்தன. அவர்களைக் கருத்தில் எடுத்து கிறீஸ்த்தவ தேவாலயங்களில் காலை வழிபாடுகள் முடிந்ததும் புட்போல் என்ற 'மதத்தில்' மக்கள் ஒருங்கிணைவதற்கு வசதியாக என நண்பகலுக்கு மேல் விளையாட்டு தொடங்கும். புட்போல் இங்கு வேறு மதத்தவர்களை மட்டுமல்ல பல நாடுகளில் இருந்து வந்தவர்களையும் இணைக்கிறது. முதல்பரம்பரையினர் புட்போலை புரிந்து கொள்ள சிறிது தடுமாறினாலும் இரண்டாவது தலைமுறையினரை வசீகரித்து உள்வாங்கி விடுகிறது. ஒரு அவுஸ்திரேலியனோடு சில நேரம் பேசுவதற்கு புட்போலை பற்றிக்

குறைந்த பட்சமாவது தெரிந்திருக்க வேண்டும். இரண்டாவது இடத்தில்தான் கிரிக்கட் விளையாட்டு உள்ளது.

'இன்று நான் புட்போல் விளையாட்டுக்கு போய் இருக்க வேண்டும். எனது அணியான எசன்டன் இன்று விளையாடுகிறது'.

'ஜோன் புட்போல் பந்தாட்டத்தை பற்றி எங்களுக்கு தெரியது. கால்பந்தாட்டத்தையோ அல்லது பெண்களை பற்றியோ பேசினால் கேட்க நன்றாக இருக்கும் என்றான் சாம்

அதே நிலையில்தான் சுந்தரம்பிள்ளையும். ஆனால் சுந்தரம்பிள்ளையும் ஜோனும் கிரிக்கட்டைப் பற்றிப் பேசும்போது, சாம் அமைதியாகி விடுவான். அவுஸ்திரேலியாவுக்கு மட்டுமே உரிய இந்த புட்போல் எனும் உதைபந்தாட்டம், ஆரம்பத்தில் ஆதிவசிகள் கங்காரு தோலுக்குள் புல்லை திணித்து விட்டு அதை கால்களால் உதைத்து ஆடியது. இப்பொழுது வளர்ச்சியடைந்து அவுஸ்திரேலிய ரூல் புட்போலாக மாறிவிட்டது. இதே வேளையில் மற்ற நாடுகளில் விளையாடப்படும் கால்பந்து சொக்கர் என்ற பேரில் வெளிநாட்டில் இருந்து வந்த வந்தேறு குடிகளால் விளையாடப்படுகிறது.

மூவரும் மெல்பன் கிரிக்கட் கிளப் அருகாமையில் உள்ள மதுச்சாலையில் விக்டோரிய பிற்றர் என்ற அவுஸ்திரேலியாவுக்கே சொந்தமான நாக்கில் துவர்ப்பைக் கொடுக்கும் பியரை அருந்தி விட்டு 'பை' எனப்படும் அவுஸ்திரேலிய கேக்கைத் தின்றார்கள். இந்த பியரும் பையும் வைத்தியசாலை அருகில் கிடைக்காது என்பதில்லை. வார இறுதி நாட்களில் இந்த மதுசாலையில் மேலாடையற்ற பெண்கள் பரிசாரகர்களாக இருப்பதுதான் வேலை இடத்தில் இருந்து நாலு கிலோமீட்டரில் காரில் வந்ததன் இரகசியமாகும்.

□ □ □

ஷாரனது பிரச்சினை இப்பொழுது கலிபோர்னியாவில் பற்றிய தீயை அணைத்து விட்டு வந்த அவுஸ்திரேலிய ஹீரோவான கிரிஸ்றியனை எப்படி எதிர் கொள்வது என்பதே. அவன் வீட்டுக்கு வந்து ஒரு வாரமாகிவிட்டது. அந்த வாரத்தில் சில நாட்கள் அவனுக்கு இரவு வேலை. ஒரு நாள் இரவில் அவளுக்கு வேலையாகிவிட்டது. மிஞ்சியுள்ள நாட்களில் வீட்டுக்குத் தாமதமாக வந்து படுக்கையில் படுத்து விடுவான். இருவரும் தங்கள் உடல்கள் ஒருவருடன் ஒருவர் படாமல், கால்கள் கைகள் முட்டாமல் கவனமாக பார்த்துக்

கொண்டார்கள். ஒரே படுக்கையில் இரு சிறைகளை இருவருக்கும் அமைத்துக் கொண்டு படுக்கும் போது வெவ்வேறு பக்கம் திரும்பிப் படுத்தாலும் அவன் நித்திரை கொள்ளவில்லை என்பது ஷரனுக்கு தெரியும். ஒரு நாள் இரவு, நடு இரவில் கட்டில் ஆடுவதால் விழித்துப் பார்த்த போது அடுத்த பக்கம் திரும்பி கரமைதுனம் போட்டதையும் தெரிந்துகொண்டு தனது கண்ணை இறுகமூடி போர்வையால் போர்த்துப் படுத்துக்கொண்டாள்.

பாஸ்ரட் நான் பக்கத்தில் படுத்திருக்கும் போது என்னை உதாசீனம் செய்து தனது காமத்தை தீர்த்துக்கொள்கிறானே. இது என்னை அவமானபடுத்துவதற்காக செய்கிறான். இந்த நேரத்தில் நிச்சயமாக என்னை நினைக்கமாட்டான். யாராவது தன்னோடு வேலை செய்யும் வேசைகளைத்தான் நினைத்துக் கொண்டிருப்பான். இவனது செயலுக்கு இவனைக் கொன்று போட்டாலும் எனது கோபம் குறையாது என ஆத்திரத்தில் மனதில் குமுறியபடி இருந்தவள், சிறிது நேரத்தில் சாந்தமடைந்ததும் தன்னை சுயவிசாரணைக்கு உட்படுத்தினாள்.

இவன் என்னை வெறுக்கிறானா?

யாரில் பிரச்சினை இருக்கிறது?

இதற்கு நானா காரணம்?

இல்லை வேறு பெண்ணுடன் தொடர்பு வைத்திருக்கிறானா?

என்னை நேசிக்கிறானோ இல்லையோ வெறுக்காமல் இருந்தால் தனது காம உணர்வை தீர்த்துக்கொள்ள என்னிடம் வந்திருப்பான். இவனை இப்படி விட முடியாது.

அடுத்த சில நிமிடங்கள் அவளைச் சோகத்தின் எல்லைக்கே இழுத்துச் சென்றன. இப்படியான ஒரு வாழ்வு எனக்குத் தேவையா? அவளுக்குக் குலுங்கி குலுங்கி அழவேண்டும் போல் இருக்கிறது. கண்ணீர் கண்களில் இருந்து வெளியேறி தலையணையை நனைத்தது. பின்பு அழுகையை நிறுத்திவிட்டு எனது பலவீனத்தை இவனிடம் காட்டினால் அதைப் பாவித்து தனது கட்டுப்பாட்டில் என்னை வைத்திருக்க முயலுவான். அடுத்ததாக எனது வேலைக்கு வேட்டு வைத்து விடுவான். இதை ஏற்க முடியாது. எதற்கும் நாளைக்கு ஒரு முடிவு கட்டவேண்டும்.

ஆனால் இதற்கான பேச்சை எப்படி ஆரம்பிப்பது? வேறு பெண்ணோடு தொடர்பு உள்ளது என நேரடியாக சொன்னால்

விவாகரத்துக்காக நான் தயாரா?. பிரிந்து வாழ நான் என்னைத் தயார் பண்ணிக் கொண்டேனா? அப்படி இல்லாமல் உனது தவறுகள்தான் என்னை இப்படியான நிலைக்கு கொண்டு வந்ததென்று விவாதித்தால் என்ன செய்வது? அதை நம்ப முடியுமா?

கேள்விகளை கேட்பது இலகுவாக இருந்தாலும் விடை தெரியாமல் மாறும் மன உணர்வுகளுடன் படுக்கையில் தூக்கமின்றித் தவித்தாள்.

கட்டிலின் அருகே உள்ள கடிகாரத்தில் நடு இரவுக்கு சில நிமிடங்கள் மட்டுமே இருந்தது. மெதுவாக போர்வையை விலக்கி எழுந்து பாத்ரூமுக்கு சென்றுவிட்டு கூடத்திற்கு வந்து வைத்தியசாலை இலக்கத்தை எடுத்தபோது ரிவனின் குரல் கேட்டது.

'என்ன ஷரன் இந்த நேரத்தில்'

'நாளைக்கு வேலைக்கு வரமுடியாது. உடல் நலமில்லை'

'இப்போது சொன்னால் யாரை அழைக்கமுடியும்?

'சிவா நாளை மாலை செய்வதால் காலை செய்யச் சொல்லிக் கேட்கிறேன்'

'இது சிவாவுக்கு பதினெட்டு மணிநேர வேலையாகும். அதைச் செய்வதற்கு அவனுக்கு சந்தோசமாக இராது.

'தயவு செய்து நீ சொல்லு. இல்லாவிடில் அவனது வீட்டிலக்கத்தை தந்தால் நான் பேசுகிறேன்''

'நீயே பேசு'

இலக்கத்தை வாங்கி, தொலைபேசியில் சிவாவிடம் 'தயவு செய்து இதை செய். இதற்காக உனக்கு பெரிய வெகுமதி தருவேன்' என்ற அந்தக் குரலின் இனிமை, சிவாவின் நித்திரை குலைந்த சீற்றத்தை அணைத்தது.

மெதுவாக மகனின் அறைப்பக்கம் சென்று அவனது கால் பக்கம் விலகி இருந்த போர்வையை இழுத்து கால்களை முற்றாக மூடிவிட்டு படுக்கையறைக்குச் சென்ற போது கிறிஸ்ரியன் உண்மையாகவே உறங்குவதை அவனது குறட்டையில் இருந்து தெரிந்து கொண்டாள். நாளை நடக்கவிருக்கும் மோதலை

எதிர்பார்த்தபடி கனத்த இதயத்தோடு மீண்டும் போர்வைக்குள் நுழைந்து கொண்டாள்.

□ □ □

லிஸ்பனில் இருந்து மரியாவின் வரவை எதிர்பார்த்து காலோஸ் மெல்பன் தலமறின் சர்வதேச விமான நிலையத்தில் காத்திருந்தான். இவனது அவசரத்தைப் பரிசோதிப்பதற்கு என அந்தப் பிரித்தானிய எயர் வேஸ் விமானம் ஒருமணி நேரம் தாமதமாக வருவதாக எதிரில் இருந்த விளம்பரப் பலகையில் அறிவித்தல் இருந்தது. ஒரு மணிநேரம் விமானத்திற்குக் காத்திருக்க வேண்டும் என்பது கசப்பாக இருந்தது. இன்று வைத்தியசாலையில் அவசரமாக ஒரு கூட்டம் எனக் கூறி லுயிசாவையும் பிள்ளைகளையும் உறவினர் ஒருவரின் பிறந்த நாள் கொண்டாட்டத்திற்கு போகச் சொல்லி விட்டு, வைத்தியசாலையில் இருந்து ஏர்போட்டுக்கு வந்திருந்தான். வைத்தியசாலையில் இருந்து வேகமாகக் காரைச் செலுத்திக் கொண்டு பலகாலமாகப் பிரிந்திருந்த தேவதையைக் காண வந்தபோது, கடந்து வந்த சிவப்பு விளக்குகளை திட்டியபடி வேகமாக வந்தது பிரயோசனமில்லாமல் போய்விட்டது என்ற ஏமாற்றம் கசந்தது. அவசரத்தில் காரை நிறுத்திய இடத்தை நினைத்துப் பார்க்க மறந்தது நினைவுக்கு வந்தது.

மரியா எப்படி இருப்பாள்? பதினைந்து வருடங்கள் பெரிய இடைவெளியல்லவா? உறையவைத்த வெண்ணையாக இருந்தவள் இப்பொழுது உருகி இருப்பாளா?

விமானத்தின் தாமதம் எவரது சக்திக்கும் அப்பாற்பட்டது என்ற நினைப்பு மரியாவின் நினைப்புடன் வந்ததும் மனம் சிறிது அமைதியடைந்தது.

மெல்பன் ஏர்போட்டில் சுங்கப் பரிசோதனைகளை முடித்துக்கொண்டு வெளியே வருபவர்கள் உள்ளிருந்து வந்து, இரண்டு பக்கத்தால் பிரிந்து வரலாம். இரண்டு பக்கத்தையும் பார்ப்பதற்காக நடுப்பகுதியில் அரைமணித்தியாலம் காத்திருந்தான். அந்தப் பகுதியில் இருந்து இரு பக்கத்தால் வருபவர்களையும் பார்க்க முடிந்ததால் எப்பொழுதும் அந்த இடம் கூட்டமாக இருந்தது.

வாசல் அருகில் உள்ள தடுப்புக் கம்பியைப் பிடித்துக் கொண்டிருந்த காலோஸின் கால்கள் இரண்டும் மாறி மாறி ஆடியது. உணர்வுகளில் வசப்படும் போது காலை ஆட்டிக்கொண்டு

நிற்பதும் இருப்பதும் காலோஸின் இயல்பு. அங்கு நிற்கும் அரைமணியில் அவன் காலையாட்டிக் கொண்டு நிற்பதை அந்தக் கூட்டத்தில் குறைந்தது ஐந்து பேராவது திரும்பிப் பார்த்தார்கள். அதில் ஆண்களின் உதடுகளில் மெதுவான புன்னகை தெரிந்தது. சுற்றி நின்றவர்களை சட்டை செய்யும் நிலையில் காலோஸ் இருக்கவில்லை. முகத்தில் சுருக்கமும் கண்களில் குறும்பும் தளும்ப ஒரு எழுபத்தைந்து வயதான அவுஸ்திரேலியர் மிகவும் நிதானமாக சில நிடங்கள் உற்றுப் பார்த்துவிட்டு தோளில் தட்டி 'நண்பரே நீர் உமது காதலிக்காக காத்திருக்கிறீர் போல இருக்கிறது. உமது முகத்தில் மகிழ்ச்சி நிறைந்து கண்கள் மலர்ந்து இருப்பதுடன் உமது கால்கள் நடனமாடுகிறது. மனைவிக்காக காத்திருப்பவனது முகத்தில் அளவு கடந்த சோகம் முகத்தில் மட்டுமல்ல கால்களிலும் தெரியும்' எனக்கூறி பெரிதாக சிரித்தபோது பலர் திரும்பி பார்த்தார்கள்.

'நீங்கள் சரியாகத்தான் சொன்னீர்கள். எனது முகத்தில் அந்த விடயம் எழுதி இருக்கிறதா?" எனச் சங்கடமான சிரிப்பை உதிர்த்தபடி அவருடைய கையைக் குலுக்கினான்.

'உமது கால்களும் முகமும் கண்ணாடி போன்றவை. பல கதைகளைப் பேசுகின்றன.

'எனது முகத்தில் என்ன வேறு தெரிகிறது?'

'காதலிக்காக மட்டுமல்ல இன்றைய இரவுக்காகவும் காத்திருக்கிறீர். எனது கால்கள் எவ்வளவு அமைதியாக மனைவிக்காக காத்திருப்பது தெரியவில்லையா'. எனக்கூறி தனது கால்களை தடவியபடி மீண்டும் சிரித்தபோது 'டாட் வாயை மூடுங்கள். உங்களது ஜோக்குகளை எங்கும் சொல்லி விடுவீர்கள்'என பக்கத்தில் நின்ற முப்பது வயதான மகள் கண்டித்தாள்.

அதைபற்றிக் கவலைப்படாத அந்த மனிதர் 'ஆத்தரயிற்றிஸ் உள்ள எனது காலை ஆட்டினால் விழுந்து விடுவேன்" என்றார்.

'இப்ப உண்மையை சொல்கிறீர்கள் டாட்'

அப்பொழுது அந்த எலக்ரோனிக் விளம்பரப்பலகையில் பிரித்தானிய எர்வேஸ் விமானம் வந்து இறங்கியதாக தகவல் வந்தது.

'நான் ரொயிலட் பக்கம் போக வேண்டும். பிளேன் இப்பதான் தரை இறங்கி இருக்கிறது. குறைந்தது ஒரு மணித்தியாலம் சுங்க சோதனைகளை முடித்து வர எடுக்கும்.

‘பேசியதற்கு நன்றி குட் லக்’; எனக் கூறி நக்கலான சிரிப்பை முகத்தில் தவழ விட்டார் அந்த எழுபது வயதான மனிதர்.

‘பிளடி ஓல்ட் பாஸ்ரட்’ எனத் தனக்குள் கூறிவிட்டு கன்ரீன் பக்கம் சென்றான் காலோஸ்.

இன்று இரவு மரியா உறவினர் வீட்டுக்குச் செல்லாமல் ஹோட்டலில் தங்குவதாக ஏற்கனவே ஒழுங்கு பண்ணப்பட்டிருந்தது. நானும் வீட்டுக்கு இரவு பன்னிரண்டு மணிக்குப் பின்புதான் செல்ல முடியும். நல்லதொரு பொய்யை நம்பும்படி வீட்டில் சொல்ல வேண்டும். காலோஸின் சிந்தனை இடைவேளையில் வைத்தியசாலையில் தனக்கெதிராகச் சதி செய்யும் ரீவனும் ரிமதி பாத்தோலியஸ்சும் இடைக்கிடை வந்து இனிமையான கனவுகளில் ஒரு நாள் பந்தய கிரிக்கட்டை காண்பித்துக் கொண்டிருக்கும் தொலைக்காட்சிகள் கடைசி ஓவர்களில் தடங்கல் போல் வந்துகொண்டிருந்தது. பதவியில் இருந்து நீக்க எதிர்பார்த்து எடுத்த அவர்களது ஒரு முயற்சி தோற்றுப் போய்விட்டது. அடுத்த முயற்சியை எடுக்காமல் விடமாட்டார்கள்.

தேநீரைக் குடித்தபடி கற்பனைக் குதிரையை ஓடவிட்டவாறு, சிறிது நேரம் கன்ரீனில் நின்றுவிட்டு மீண்டும் அதே இடத்துக்குச் சென்ற போது அங்கே பெரிய கூட்டம் நின்றது. மேலும் அந்தக் கிழவனது நக்கலை சிரித்தபடி ஏற்றாலும் ஒருவிதமான வெட்கத்தை உள்ளூர ஏற்படுத்தியதால் அந்த இடத்தைத் தவிர்த்து விட்டான். பெரும்பாலனவர்கள் வலது பக்கத்தால் வருவதைப் பாரத்தபடி வலது பக்கத்தில் காத்திருந்தான்.

மரியாவோடு தெற்கு ஐரோப்பா முழுவதும் செய்த ரெயில் பயணத்தை நினைவு கூர்ந்தான். தீவிரமான கத்தோலிகரான மரியாவின் தாய் தந்தையினரிடம் லூட்ஸ் மாதாவிடம் போவதாக சொல்ல அங்கிருந்து பாசலோனா, மட்ரிட் என போய் அங்குள்ள ஹோட்டல்களில் தங்க பணம் இல்லாமல் ரெயில்வே நிலையங்களில் படுத்த வியங்கள் மனதை ஈரமாக்கி கொண்டு சென்றன.

திடீரென இவ்வளவு நேரமாக வரவில்லையா என நினைத்தபடி இடது பக்கத்துக்கு சென்ற போது இடையில் ஒரு பெண்ணைப் பார்த்ததும் நெருங்கிச் சென்றான்

‘மரியா என்னைத் தெரியவில்லையா?’

‘தெரியுது. இங்கே அரைமணி நேரமாக இருக்கிறேன் எனக் குற்றசாட்டுடன் கட்டி அணைத்து இரு கன்னத்திலும் மாறி மாறி முத்தமிட்டாள். அவளது இறுக்கமான அணைப்பு அந்த விமான நிலையத்தையே படுக்கையறையாக்கினால் என்ன என அவனை நினைக்கவைத்தது. மோகத்தில் சூழலை மறந்து அவளைவிட மறுத்தான்.

‘இது விமான நிலையம் தெரியுமா’ எனச் சிரித்தபடி மெதுவாக மரியா விலகினாள்.

‘உன்னை நினைத்தபடி ஒரு மணி நேரமாக அடுத்த பக்கத்தில் காத்திருந்தேன். எல்லோரும் அந்தப் பக்கமாக வந்தார்கள்’

‘எனக்குத் தெரியாது. நான் இந்தப் பக்கமாக வந்தேன்’.

நாற்பது வயதாக இருந்தாலும் நீள் வட்டமான முகத்தில் அகலமான கருமையான விழிகள் இன்னும் ஒளி மங்காமல் அப்படியே இருந்தன. கருமையான மேல் சட்டையணிந்து அவள் அணிந்த சாயம் மங்கிய நீல நிற ஜீன்ஸ் அணிந்திருந்தாள்.

‘இத்தனை வருடத்துக்கு பிறகு சந்தித்தாலும் இவ்வளவு அழகாய் இருக்கிறாயே. உன்னை விலக்கி விட கொன்சாலஸ்க்கு எப்படி மனம் வந்தது’ என அவளது பிருஸ்டத்தில் இடது கையால் தடவியபடி அவளது கையில் இருந்த பெரிய பெட்டியை தனது வலது கையில் வாங்கினான்.

‘ஆண்கள் எல்லோரும் உன்னை மாதிரித்தானே. கொஞ்காலத்தில் மனைவிமார்கள் அலுத்து விட்டால் வேறு இளம் பெண்ணை தேடிப் போவது வழக்கமாகிவிடுகிறது. அவனது நடத்தையில் சந்தேகப்பட்டு நான்தான் கொன்சலஸை வீட்டை விட்டு போக சொன்னேன்’.

‘எப்படி பிள்ளைகள்?‘‘

‘இருவரும் பல்கலைக்கழகத்தில் படிக்கிறார்கள்‘‘

இருவரும் நடந்தபடி பாலத்தின் மூலம் விமான நிலையத்தைக் கடந்து, கார் தரிப்பு இடத்துக்கு வந்தனர். காரை எந்த இடத்தில் நிறுத்தியது எனப் புரியாமல் சில நிமிடம் தடுமாறிய காலோஸ் அவசரத்தில் நிறுத்திய இடத்தை குறிப்பாக பார்த்துக்கொள்ள மறந்ததை நினைத்து தன்னை நொந்து கொண்டு கால்மணி;

தேடிய போது 'காலோஸ் உனக்கு வயதாகிவிட்டது' என்றவளை 'உன்னை நினைத்தபடி வந்ததால்தான் இது நடந்தது' என்றபடி சிறிது தூரம் நடந்தபோது தனது காரைக் கண்டுபிடித்தான். காரை எடுத்துக்கொண்டு மெல்பனில் உள்ள நட்சத்திர ஹோட்டலை அடைந்த போது இரவு ஒன்பது மணியாகிவிட்டது.

'வவ் எனது ஹனிமூனுக்கு கூட இந்தளவு பெரிய ஹோட்டலை கொன்சாலஸ் எடுக்கவில்லை. எவ்வளவு அழகான கட்டில்? என் மேல் உனது ரசனை இன்னும் அப்படியே இருக்கும் என நான் எதிர்பார்க்கவில்லை' எனக் கூறியபடி காலோஸின் முன் உடையை கழற்றிவிட்டு 'விமானத்தில வந்த களைப்பு போக நான் குளிக்கவேண்டும். நீ வருகிறாயா ஒன்றாக குளிப்போம்' என்றபடி குளியலறையை நோக்கி சென்றவளைச் சிரித்தபடி பின் தொடர்ந்தான்.

□ □ □

ஷ்ரிமதி பாத்தோலியஸ் வைத்தியசாலையில் காலை வாட் ரவுண்டுக்கு சென்ற போது ஒரு கருப்பு வெள்ளை நிறமான பூனை யொன்று சடலமாகக் கிடந்தது. நெருங்கி, உற்றுப் பார்த்தபோது அதனது சுவாசம் மிகவும் மெதுவாக இருந்தது. ஆரம்பத்தில் மயக்க மருந்து கொடுக்கப்பட்டதோ எனச் சந்தேகத்தில் நெருங்கி அதனது உதடுகளை விலக்கி முரசுகளைப் பார்த்த போது வெள்ளையாக இருந்தது. சாகும் தறுவாயில் இருக்கிறது எனப் புரிந்து கொண்டு அதைப் பற்றிய மருத்துவ குறிப்பை தேடியபோது எந்தக் குறிப்பும் அதற்குரிய கோப்பில் இல்லை. எப்பொழுது, என்ன காரணத்தால், யாரால் அனுமதிக்கப்பட்டது? மட்டுமல்ல அத்துடன் ஏதாவது மருத்துவமும் ஏற்கனவே நடந்ததா? என்பதும் எழுதப்படவில்லை. அந்த வாட்டில் உள்ள ஹெதரை விசாரித்த போது "நேற்று மாலை டொக்டர் சேரத்தால் அனுமதிக்கப்பட்டது" எனக் கூறினாள். ரிமதி அந்தப் பூனைக்கு முதல் உதவி செய்து ஒட்சிசனைக் கொடுத்தபோது அதனது முரசின் வெள்ளை நிறம் சிவப்பாக மாறியதும் சேலையினை நாளத்தினால் ஏற்றிக்கொண்டிருந்த போது அந்தப் பூனையின் உரிமையாளர் வந்தார்.

'எப்படி எனது ஜிவ்' என அவர் விசாரித்த போது 'நான் இன்றுதான் பார்க்கிறேன் நிலைமை மோசமாக இருக்கிறது' என்றான்.

'நான் நேற்று இங்கு கொண்டு வந்த போது இந்தளவு பாரதூரமாக இருக்கவில்லை. என்ன நடந்தது?

அவரை ஏற இறங்கப் பார்த்து விட்டு 'நான் இன்று காலைதான் உங்கள் ஜிவ்வைப் பார்த்தபடியால் தற்போது எதுவும் கூறமுடியாது. தலைமை வைத்தியர் டொக்டர் காலோஸ் சேரம்தான் நேற்றைய தினம் ஜிவ்வைப் பார்த்தவர். அவர் இரண்டாம் அறையில் இருக்கிறார். அவரைப் போய் சந்திக்கவும். தற்போது நான் எதுவும் சொல்ல முடியாது. என்னால் முடிந்ததைச் செய்கிறேன்'

ரிமதியின் வார்த்தை பட்டர் துண்டுகள் போல் மிருதுவாக இருந்தது.

இரண்டாவது அறையை நோக்கிச் சென்ற உரிமையாளரைப் பார்த்து 'ஜிவ் இன்று சுப நேரமானதால் எப்படியும் உயிர் தப்பி விடும் போல் தெரிகிறது. ஆனாலும் இன்றைக்கு காலோஸ் நேரம் நன்றாக இல்லை. மனிதன் துலைந்தது மாதிரித்தான்' என வாய் விட்டு சொல்லிவிட்டு சிரித்தான். பக்கத்தில் நின்றபடி கேட்டுக்கொண்டிருந்த ஹெதருக்கு இந்த விடயம் நல்லதாக முடியப்போவது அல்ல எனப் புரிந்தது.

ஜிவ்வின் உரிமையாளர் உயரமான அவுஸ்திரேலியர். அந்த மனிதருக்கு பெண்களைப் போன்ற பெரிய கண்களை கொண்ட நீள்வட்டமான முகம், தற்போது ஆத்திரத்தால் காது மடல்கள்வரை சிவந்து விட்டது. முப்பத்து ஐந்து வயது மதிக்கத்தக்க அந்த மனிதர் தனது நீளமான கைகளை ஒரு வித நாட்டிய முத்திரை கலந்து நளினமாக அசைத்தபடி நடந்தார். அதற்கேற்ப இடையை இரண்டு பக்கமும் நகர்த்தி சிறிய சுழற்சியை இடுப்பில் காட்டியபடி நடந்தார். அந்த மனிதருக்கு வந்திருந்த ஆத்திரத்தில் அவரது பெரிய நீல கண்கள் சிவப்பாகியது. கண்களில் கண்ணீர் மழை பெய்து நீர் நிரம்பிய குளம் போல கண்ணீர் நிறைந்து இமைகளை மோதியபடி வெளியேறத் தயாராக இருந்தது.

இவர் போவதைப் பார்த்த ஹெதர் இந்த மனிதர் நிச்சயமாக ஹோமோசெக்சுவல் தன்மையுள்ள மனிதராகவும் இந்த பூனையை மிகவும் நெருக்கமாக நேசிப்பவராகவும் இருக்க வேண்டும். இவருக்கு ஏற்கனவே ரிமதி உருவேற்றி இருப்பதால் பெரிதாக பிரச்சினை வர சாத்தியம் உண்டு. காலோஸை எச்சரித்து வைப்பது நல்லது என முடிவு செய்து அந்த மனிதர் கொரிடோரால் சென்று இரண்டாவது ஆலோசனை அறையின் மூடியிருந்த கதவின் முன்பு

நின்ற போது பூனைக் கூண்டுப் பகுதியில் இருந்து வெளியே வந்து மூன்றாம் அறையுள் சென்று பார்மசி ஊடாக சென்ற ஹெதர் இரண்டாம் அறையின் பின்பக்கத்தால் சென்றாள். அங்கு நாயொன்றை பரிசோதித்துக் கொண்டிருந்த காலோஸின் கையில் மெதுவாக தட்டி கண்களால் பார்மசிக்குள் வரும்படி அழைத்தாள்.

சிரித்தபடி ‘எனது அதிஸ்டம் எல்லா பெண்களும் ஒரே நேரத்தில் அழைக்கிறார்கள்’ என நகைச்சுவையாக சொல்லியபடி ஹெதரை பின் தொடர்ந்து பார்மசிக்குள் சென்றான் காலோஸ்.

‘உமக்கு எந்த நேரத்திலும் இடுப்புக்கு கீழேதான் சிந்தனை’ எனக்கூறி அந்தப் பூனை பற்றியும் ரிமதி பாத்தோலியஸ் சொன்னதைப் பற்றியும் கூறிவிட்டு ‘இந்த மனிதர் மிகவும் ஆத்திரத்தில் உள்ளார். அவரை அவதானமாக கையாளவேண்டும். மேலும் இந்த மனிதர் ஹோமோசெக்ஸ்வல் மனிதர் போல இருப்பதால் வார்த்தைகளை அவதானமாக பேசவேண்டும்’எனவும் எச்சரித்து விட்டுச் சென்றாள்.

‘நான் பார்த்துக்கொள்கிறேன்’ என அவளுக்குச் சொல்லிவிட்டுத் தனது வேலையைத் தொடர்ந்த போது நோறேல் மூடியிருந்த முன்கதவைத் திறந்து, காலோஸைப் பார்க்க ஒருவர் காத்திருக்கிறார் எனச் சொல்லி விட்டுச் சென்றாள்.

வேலையை முடித்து நாயையும் உரிமையாளரையும் வெளியனுப்பிய காலோஸ், கையைக் கழுவி விட்டு வெளியே வந்து, அந்த மனிதரிடம் தன்னை அறிமுகப்படுத்தி ‘நேற்று நான் உமது பூனையை பார்த்து அன்ரிபயரிக்கும் கொடுத்தேன். ஆனால் அதை ஏர்போட்டுக்கு போகும் அவசரத்தில் குறிப்பு எழுத மறந்து போனேன்’. குரல் மன்னிப்பு கோரும் விதமாக இருந்தது.

‘நீர் ஒரு பாஸ்ரட். எனது பூனை உம்மால் இறக்கும் தறுவாயில் உள்ளது’ என கண்ணீர் வழிந்தோட கைகளை அசைத்து பறவையொன்றின் குரல்போல கிரீச்சிட்ட குரலாக அவர் வாயில் இருந்து வந்தது.

‘எனது தவறு அதை எழுதாதது மட்டும்தான். நாகரீகமாக வார்த்தைகளைப் பாவிக்க தெரியாத உம்மோடு இதற்கு மேல் பேச நான் தயாரில்லை’ எனக் கூறிவிட்டு அந்த இடத்தை விட்டு விலகி பூனைப் பகுதிக்கு செல்ல முயன்ற போது ‘எனக்கு பதில் சொல்லிவிட்டு போக வேண்டும்’ என அந்த மனிதர் பின் தொடர்ந்து வந்து காலோஸின் சேட்டின் காலரைப் பிடித்தார்

‘நீ ஒரு புவ்தா. எனது சேட்டையா பிடிக்கிறாய் ’ என கூறியபடி முஷ்டியை தூக்கியபடி காலோஸ் அந்த மனிதனை நோக்கி திரும்பியபோது இப்படி ஆக்கிரோசமான எதிர்ப்பை எதிர்பார்க்காத அந்த மனிதர் பின்வாங்கினார். அந்தக் கொரிடோரில் மருந்துகளை கையில் கொண்டு வந்த சாம் ‘இந்த இடத்தில் வன்முறை வேண்டாம்’ என வந்து இருவருக்கும் இடையில் புகுந்ததால் அந்த இடத்தில் உருவாக இருந்த ஒரு கைகலப்பு தவிர்க்கப்பட்டது. முறுகிய படி இருவரும் வேறுதிசைகளில் சென்றனர்.

# 16

மெல்பனின் தெற்கேயும் தென்கிழக்கேயும் இருக்கும் டன்டினோங் மலைத்தொடர் ஒரு விதத்தில் நகரின் எல்லைச் சுவராக செல்கிறது. மெல்பனின் வடக்கு, மேற்குப் பகுதிகள் சமவெளியாக பல கிலோமீட்டர் தூரம் செல்கின்றன. மெல்பனின் கிழக்கில் மலையடிவாரங்களில் பல புற நகர்கள் அமைந்துள்ளன. மலையடிவாரங்களில் ஐந்து ஏக்கர், பத்து ஏக்கர் என காணிகளில் வீடுகட்டி வாழ்வது பலரது இலட்சியமாக இருப்பதால் டன்டினோங் மலைப் பகுதியில் பல புறநகர்கள் தோன்றியுள்ளன. இந்தப் பகுதிகளில் வாழ்வதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. நகரின் சந்தடிகளில் இருந்து ஒதுங்கி வாழ விரும்புவர்கள்' சிறிய தோட்டங்களை உருவாக்கி அதன் நடுவே தங்கள் மூதாதையாரால் தொலைத்துவிட்ட கிராமிய வாழ்கையை மீண்டும் தேடுபவர்கள். குதிரை, பசு, ஆடு என மிருகங்களை வளர்க்க விரும்புவர்கள். இதைவிட கண்களுக்கு ரம்மியமான காட்சிகள் தேடும் வேறு சாரரரும் இந்த மலைப் பகுதிகளைத் தேடுகிறார்கள்.

இப்படியான மலைப் பகுதிகளை அண்டிய தென்கிழக்கு மெல்பனில் அமைந்த ஒரு புறநகரான பேன்ரீகலி என்னும் இடத்தில் ஜோனும் மிஷேலும் வசிக்கிறார்கள். இருவரும் கடந்த இரண்டு வருடங்களாக இந்த வீட்டில் ஒன்றாக வசிக்கிறார்கள். இப்படிப் பல வருடங்கள் ஆணும் பெண்ணும் ஒன்றாக வாழ்ந்த பின்புதான் இருவரும் ஒருவருக்கு ஒருவர் பொருத்தமானவர்கள் என்பதை இந்த நாட்டில் தாங்களே உறுதி செய்து கொண்ட பின்புதான் கல்யாண பந்தத்தை நோக்கி செல்கிறார்கள்.

இதற்குப் பின் ஏன் கல்யாணம்? அது தேவையற்ற செலவு என நினைக்கும் ஜோடிகள் பெருகிவருவதால் அவுஸ்திரேலிய அரசாங்கம் இருவர் ஒரு வீட்டில் தம்பதிகளாக இருந்தால் சட்டரீதியாக இருவருக்கும் ஒருவர் மீது உள்ள உரிமையை

அங்கீகரிக்கிறது. இதனால் சொத்துக்கள், குழந்தைகள் இக்காலத்தில் வரும்போது சட்டரீதியான அங்கீகாரம் கிடைப்பதால் திருமணம் செய்யாமல் சேர்ந்து வாழ்வது கூடிக்கொண்டு வருகிறது. சிலர் தங்கள் குழந்தைகள் திருமணமான பின்னால் தாங்கள் உத்தியோக பூர்வமாக திருமணம் செய்த சம்பவம் நடந்துள்ளது. இப்படியான ஒரு செய்தியாக தாங்கள் மாறாமல் ஜோனும் மிஷேலும் திருமணம் செய்வதற்கு அடுத்த கிழமை இருவரும் நிச்சயித்து இருப்பதால் இந்த வார இறுதியில் ஜோனுக்கு பக் நையிற்றும் அதே இரவில் மிசேல் தனது சினேகிதிகளுடன் கென் நைட்டும் கொண்டாடுகிறார்கள்.

சுந்தரம்பிள்ளையும் சாமும், ஜோனினது வீட்டுக்குச் சென்ற போது ஏற்கனவே ஜோனின் பல நண்பர்கள் வந்திருந்தார்கள். அதில் வைத்தியசாலையில் வேலைசெய்யும் மாவின் மட்டுமே அறிமுகமான முகமாக இருந்தது. மற்றவர்கள் ஜோனின் பாடசாலை நண்பர்கள். திருமணம் செய்யாத இளம் வயதினர்.

சுந்தரம்பிள்ளை ஒப்பீட்டு ரீதியில் சங்கோசியாக இருந்தபடியால் ஜோன் இழுத்துப் பிடித்து 'எனது வைத்தியசாலையில் வேலை செய்யும் டொக்டர்' எனவும் சாமை தனது நண்பன். ஆனால் இருவரும் திருமணம் செய்தவர்கள், எனவும் அறிமுகப்படுத்தியபோது சாம் 'இதை யாராவது கேட்டார்களா?' எனக் கூறிவிட்டு அங்கே இருந்த பியரை எடுத்தான்.

அப்பொழுது அந்த இடத்தில் ஒரு தலைமயிர் வளர்த்த இளைஞர் சாமிடம் 'வீட்(கஞ்சா) வேணுமா' என்றான்

'நான் ஒழுங்காக வீடு செல்ல விரும்பகிறேன்'எனச் சாம் மறுத்தான்.

'அது நல்லது நண்பரே' என சொல்லியபடி மீண்டும் தனது நாற்காலிக்கு சென்று சிகரட்டுபோல் சுற்றப்பட்டு இருந்த கஞ்சாவை கொழுத்தினான்

மாவின் அந்த நேரத்தில் 'எல்லோரும் ஒழுங்காக இருந்தால்தான் டான்ஸ் பார்க்க முடியும்'.என்றான்.

பத்துப் பேர் இருந்த அந்த வீட்டின் ஹாலில் பெயர் தெரியாத அவுஸ்திரேலிய பாடகர்களது பாடல் ஒலியோடு கஞ்சாமணமும் கலந்து மயக்கத்தைக் கொடுத்தது. ஜோன் மட்டும் மதுவை பாவிக்காது, மற்றவர்களை உபசரித்தபடி இருந்தான். பாடசாலை

மற்றும் வேலைத்தல நினைவுகள், வழக்கமான விருந்துகள் போல் பகிரப்பட்டன. இரண்டு கஞ்சாகாரரர்கள் புகைத்தபடி மோனநிலையில் ரப்பர்போல் வார்த்தைகளை இழுத்து இழுத்து வாயிலிருந்து வழிய விட்டார்கள்.

இரவு ஒன்பது மணியளவில் கதவு தட்டும் சத்தம் கேட்டபோது வாசலுக்குச் சென்று ஜோன் கதவைத் திறந்தபோது, ஒரு பெண் நின்றாள். முகத்தை மட்டும் வெளிக் காட்டியபடி நின்ற அவள் பாதம்வரை நீளமான கறுப்பு கோட் அணிந்திருந்தாள். அவளது இளம் முகத்தில் நட்சத்திரங்கள் போல் ஜிகினாத் துகள்கள் மின்னியது. முகத்தின் மேக்கப்பில் ஒட்டியிருக்கிறாள் என்பது ஊகிக்க முடிந்தது.

வாசலுக்கு சென்று உள்ளே அவளை அழைத்து வந்த ஜோன் ‘ஏய் போய்ஸ். இது வெண்டி. உங்களுக்கு நடனம் ஆடுவாள். இவள் முக்கியமாக மிசேலின் சினேகிதி என்பதால் கவனமாக நடந்து கொள்ளவேண்டும். இல்லையென்றால் எனது கதி அதோகதிதான். அடுத்த கிழமை எனக்கு கல்யாணமில்லாமல் போய்விடும்’ என்றான்.

அந்தப் பெண் ஒரு குறுந்தட்டை மியுசிக் பிளேயரில் போடும்படி மெல்வினிடம் கொடுத்தவுடன் அங்கு இப்பொழுது நைட்கிளப்பின் ரொக்கன்ரோல் சங்கீதம் குபீர் என வந்து புதிய உதிரத்தை எல்லோரிலும் ஒரே நேரத்தில் ஏற்றியது. கஞ்சா தூள்களை கவனமாக சிகரட் கடுதாசியுள் வைத்து உருட்டி மாறிமாறி புகைத்துக் கொண்டிருந்த ஜோனின் நண்பர்களது கஞ்சாவின் மயக்கத்தை குலைத்து அவர்களை விழிப்புக்கு அந்த சங்கீதம் கொண்டு வந்தது. தலையை நிமிர்த்தி தங்களை நிமிர்த்தி ஆசனங்களில் உறுதியாக்கி அமர்த்திக் கொண்டார்கள்.

வெண்டி கறுப்பு கோட்டைக் கழற்றியதும் அவளது அழகிய உடலை மார்புக்கச்சையாலும் மிகவும் கட்டையான காற்சட்டையாலும் மட்டுமே மறைத்திருந்தாள்.தலையில் மயிரை ஒதுக்கி உச்சிக் கொண்டை போட்டிருந்தாள். அந்த ஒளி குறைந்த சூழ்நிலையில் மேகக் கூட்டத்தின் மத்தியில் ஒளிரும் முழுமதி போல் காட்சியளித்தாள். அவளது மார்புக்கச்சையும் காற்சட்டைகளும் விசேடமாக ஒளிர்ந்தன. சிறிது நேரத்தில் அந்த வீட்டின் ஹாலில் சோபாக்களை நகர்த்தி உருவாக்கப்பட்ட சிறிய இடைவெளியில் அவளது நடனம் தொடங்கியது. அந்த நடனத்தை

எந்த வகையறாவிலும் சேர்க்க முடியாது. நைட்கிளப்பில் ஆடும் நடனம் இல்லாமல் வித்தியாசமாக இருந்தது. சிலவேளை பார்த்தால் பொலிவுட் டான்ஸ் மாதிரியாக இருந்தது. மருந்துக்கும் கொழுப்பில்லாத அவளது உடம்பின் நெளிவுகள் அந்தச் சங்கீதத்திற்கு ஏற்ற மாதிரி இருந்தது. குடிவெறி, கஞ்சா இருந்த போதையுடன் பெண்ணுடலின் காம போதையும் சேர்ந்து கொண்டு அங்கிருந்தவர்கள் மனங்களை வான்வெளியில் ஈரமேகங்களுக்குள் கொண்டு சென்றது. எல்லோரும் கிறங்கியபடி கண்களால் அவளைப் புணர்ந்து கொண்டிருந்தார்கள்.

பதினைந்து நிமிடம் நடந்த ஆட்டம் முடிவுக்கு வந்ததும் சாம் மட்டும் அவளது ஆட்டத்திற்கு கை தட்டினான். மற்றவர்கள் மெய்மறந்து இருந்ததால் கைதட்ட முடியவில்லை. அப்பொழுது அவள் கட்டியிருந்த வெள்ளை மார்புக் கச்சையைக் கழற்றிப் பார்த்துக் கொண்டிருந்தவர்களை நோக்கி வீசிய போது அது வெண்புறாப் போல் வந்து சாமினது முகத்தில் மாலையாக விழுந்தது. மற்றவர்கள் வாவ் என்றார்கள். சுந்தரம்பிள்ளை இரண்டு பியரினால் வந்த போதையா, அவளது உயரத்துக்கும் உடலுக்கும் சற்று அதிகமாக இருந்த மார்பகங்கள் கொடுத்த போதையா அதிக மயக்கத்தைக் கொடுத்தது என தீவிரமான ஆய்வில் இருந்தான்.

பாட்டு முடிந்தவுடன் நடனத்தை நிறுத்திவிட்டு வியர்வையின் ஈரமான உடலுடன் ஒவ்வொருவரினதும் அருகில் வந்து மார்பால் உராய்ந்தபடி கோடைகாலத்து மோகக்காடுகளின் மத்தியில் தீப்பந்தம் ஏந்திய மோகினியாக வலம் வந்தாள். சுந்தரம்பிள்ளையின் சோபாவிற்கு அருகில் வந்து அதன் கைப்பிடியில் இருந்துகொண்டு அவளது முலைகள் தாராளமாக முகத்தில் மயிலிறகாக தடவியதும் மூச்சுத் திணறியபடி எழுந்து பொக்கட்டில் இருந்து இருபது டொலர்கள் நோட்டை அவளது இடுப்பில் செருகியதும் மற்றவர்களிடம் சென்றுவிட்டாள். ஜோனைத் தவிர மற்றவர்கள் எல்லோருக்கும் அவளது அழகிய முலைகளால் அர்ச்சினை செய்தபோது பத்து இருபது என காணிக்கை இடுப்பில் செலுத்தினார்கள். இதில் சுந்தரம்பிள்ளைக்கு ஆச்சரியமான விடயம், ஒருவராவது அவளது தங்கத்தில் வார்த்த உடலைத் தொட முயற்சிக்கவில்லை. பதினைந்து நிமிடமாக காணிக்கை செலுத்தும் சடங்கு நடந்த முடிந்த பின் அந்தச் சிறிய வீட்டின் கூடத்தில் திடீர் என இருள் கவ்வியபோது அவளது உடலை மட்டும் எங்கிருந்தோ கூரையில் இருந்து வந்த ஒளி நேராக வந்து குளியலறையின் சவர் போல் நனைத்து அவளது உடலின் வியர்வையை பளிச்சிடவைத்தது. அந்த ஒளியில் குளித்தபடி

நெளிந்து தனது காற்சட்டையையும் அதன்பின் உள் கச்சையையும் கழற்றி, தனது ஆட்டத்தின் கிளைமாக்ஸை முடித்ததும் குளிப்பறை சவர்போன்ற அந்த வெளிச்சம் திடீர் என மறைந்ததும் ஏற்பட்ட இருட்டில் அவளும் மறைந்து விட்டாள்.

எல்லோரிடமும் இருந்த காமம் கலந்த உற்சாகம் பனிகட்டிக்குள் வைத்த வெப்பமானியின் பாதரசமாக கீழே வந்து உறைந்துவிட்டது. மீண்டும் வெளிச்சம் வந்ததும் எவருக்கும் மகிழ்ச்சியில்லை. முகங்களில் எதையோ பறிகொடுத்த உணர்வுடன் ஏமாற்றம், வெறுமை கலந்து தெரிந்தது. ஜோன் எங்கிருந்தோ தோன்றி ‘கனவான்களாக நடந்து கொண்டதற்கு நன்றி. ஏய் சாம் அந்த பிராவை வீட்டுக்கு கொண்டு போகாதே. வெண்டிக்கு தேவை’ என கேட்டு வாங்கினான்.

சில நிமிட நேரத்தில் மீண்டும் தனது கறுத்த ஓவர்கோட்டுடன் தோன்றிய வெண்டி ‘நன்றி’ சொல்லிவிட்டு சென்ற போது ஜோன் வாசல் அருகே சென்று அவளை வழியனுப்பினான்.

‘எங்களது மண்டையைக் காயவைத்து விட்டு வெண்டி வீட்டுக்கு சென்று நிம்மதியாக உறங்குவாள். நான் இரவு போய் மனைவியை நித்திரையால் எழுப்பவேண்டும். இல்லையேல் மெத்தையை சீசன் வந்த பூனை மாதிரி பிராண்ட வேண்டும்’. என்றான் சாம்.

‘இவள் ஏன் இந்த தொழில் செய்கிறாள்’ சுந்தரம்பிள்ளை.

‘போய்ஸ்; நீங்கள் அவளை பற்றி கவலைப்படவேண்டாம். அவள் மிசேலுடன் சுப்பர் மார்கட்டில் வேலை செய்கிறாள். அவளது போய் பிரண்ட் பலகாலம் வாகன போக்குவரத்து குற்றங்களுக்கு தண்டம் கட்டாதபடியால் சிறையில் இருகிறான். இன்னும் ஒரு கிழமையில் வெளியே வருவான். வெண்டி சொந்தமாக வீடு வேண்டுவதற்காகத்தான் இப்படி மேலதிகமாக வேலைசெய்கிறாள்’ என்றான் ஜோன்.

□ □ □

**த**லைமை வைத்தியர் காலோஸ் சேரம் ஒருவரது ஹோமோசெக்சுவாலிட்டியை இழிந்து பேசி அவரை வன்முறையாக தாக்குவதற்கு முயன்றதாக முறைப்பாடு எழுத்து மூலம் செய்யப்பட்டது. அந்த முறைப்பாடு நிர்வாகச் செயலாளரிடம் போனது. சில மாதங்களே ஓய்வுக்கு இருக்கிறது என நாட்களை எண்ணிக் கொண்டிருந்த ரொன் ஜொய்ஸ்சுக்கு இந்த விடயம் அவர்

மனதிற்கு புத்துணர்வு அளித்தது. காலோஸ்ஸை இந்த வைத்திய சாலையில் இருந்து நீக்குவதன் மூலம் தனது வேலையின் இறுதி காலத்தில் ஒரு நல்ல காரியத்தை சாதித்து விட்டு இளைப்பாற அவரும் தனக்குள் உறுதி மொழி எடுத்தார். கடந்த முறை காலோஸ் மேல் வைத்த குற்றச்சாட்டை விசாரிக்க மறுத்ததால் திருமதி கிளிபேட்டிடமும் திருமதி ஒச்சேட்டிடமும் அவருக்கு அதிக கோபம் இருந்தது. ஆரம்பகாலத்தில் இருந்து காலோஸின் நடத்தைகள் ரொன் ஜொய்ஸ்சுக்கு ஏற்றதாகவில்லை. நாகரீகமடையாத நாட்டில் இருந்து வந்த மனிதன் என்பதோடு தனிப்பட்ட விதமாக காலோஸ் மீது தீர்க்க வேண்டிய வன்மங்களையும் மனதில் வைத்து பல வருடகாலமாக அடைகாத்துக் கொண்டிருந்தார். அதை தீர்ப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. காலோஸின் தைரியத்தை உள்ளூற பலகாலமாக மனதில் வெறுத்துக்கொண்டு இருந்தார்.

அவுஸ்திரேலியாவில் நிர்வாகத்தில் இருக்கும் ஆண்கள் அவர்களுக்கு கீழே வேலை செய்யும் பெண்களை பாலியல் விடயத்தில் வார்த்தைகளாலோ செயல்களாலோ பலவந்தப்படுத்துவதாக குற்றம்சாட்டினால் அவர்களைத் தண்டிக்க ஏற்படுத்தப்பட்ட சட்டத்தின் பிரகாரம் அந்த நிர்வாகிகள் மீது வழக்கு தொடரப்படுவதும் அவர்கள் தண்டிக்கப்படுவதும் உண்மையாக பாதிக்கப்பட்ட பெண்களுக்கு பாதுகாப்பை கொடுத்தது. அதேவேளையில் இந்தச் சட்டத்தை தனக்கு பிடிக்காத ஆண் மேலதிகாரி மேல் பழி வாங்குவதற்கும் ஒரு கருவியாக சில பெண்கள் பாவிப்பது உண்டு.

அவுஸ்திரேலியாவில் உள்ள பெரிய கொம்பனியில் உள்ள தலைமை அதிகாரி மீது அவரது பிரதான அலுவலரான பெண்ணால் பாலியல் ரீதியாக அந்தத் தலைமை அதிகாரி தன்னை இம்சைப்படுத்தினார் என வழக்கு தொடரப்பட்டு அந்த வழக்கு பத்திரிகை, வானொலி, தொலைகாட்சி என பிரபலமாக பலரது வாய்களில் அடிபட்டுக் கொண்டு இருந்தது.

இப்படியான பிரபலமான விடயங்கள் வைத்தியசாலை தேநீர்க் கூடத்தில் அக்குவேறு ஆணி வேறாக கராச்சி துறைமுகத்தில் பழைய கப்பல்கள் பிரிக்கப்படுவது போல் பிரிக்கப்பட்டு அலசி ஆராயப்படும். வைத்தியசாலையின் காலை நேரத் தேநீர் இடைவெளியில் வெவ்வேறு கோணத்தில் பாலியல், மதம், அரசியல் என அலசப்படும். இந்த நேரத்தில் சகலரும் வந்து கலந்து கொள்வார்கள். காலோஸின் பாலுறவு கலந்த நகைச்சுவையை ரசிக்க

பெண்கள், ஆண்கள் என இருக்கும் அதே வேளையில் இப்படியான பேச்சு நாகரீகமற்றது என்ற எண்ணத்திலும் காலோஸ்ஸை வெறுக்கும் கூட்டம் இந்தப் பேச்சில் கலந்து கொள்வதையும் தவிர்க்கும். இவர்கள் தேநீர்க் கூடத்தின் வேறு பகுதியில் இருப்பார்கள். அல்லது அந்த நேரத்தில் தேநீர் அருந்துவதை தவிர்ப்பார்கள்.

இப்படிச் சில வருடங்கள் முன்பாக ஒரு நாள் பாலியல் இம்சை வழக்கு தொடரும் பெண்களை பற்றிப் பேசிக்கொண்டிருந்த போது அந்த இடத்திற்கு ரொன் ஜோய் தேனீர் கோப்பையுடன், வழக்கமான மஞ்சள் சுவெட்டர் போர்த்த உப்பிய வயிற்றை முன்னே அனுப்பி விட்டு பின்னால் கொல்லன் உலை துருத்தியின் ஓசையுள்ள சுவாசத்துடன் வந்தார்.

‘இந்த பாலியல் இம்சை விடயத்தில் செயலாளர் ரொன் ஜோய்சின் மட்டும்தான் இந்த வைத்திய சாலையில் பாதுகாப்பானவர். அவருக்கு எதிரான ஒரு குற்றசாட்டு வந்தாலும் உடல் அமைப்பு அவரை பாதுகாக்கும்’ என காலோஸ் கூறியதை கேட்டு ‘ஹஹ் ஹஹா’என மற்றவர்களுடன் சேர்ந்து அவர் சிரித்தார். முகத்தில் மாற்றத்தை காட்ட விரும்பாமல் அந்த இடத்தை விட்டு வெளியேறிவிட்டார்.

காலோஸின் இந்த விவரணை அத்துடன் நிற்கவில்லை ‘இவரது உப்பிய வயிற்றின் கீழ் இவர் தனது குஞ்சாமணியை கண்டே பல வருடங்களாகி விட்டது என்பதால் இவரை எந்தப் பெண்ணும் தன்னைப் பாலியல் இம்சைப் படுத்தியதாக குற்றம் சாட்டமுடியாது’ என மேற்கொண்டு கூறிய வார்த்தைகளும் அதைக் கேட்டு மற்றவர்கள் சிரித்ததும் பதவியில் இருந்து இளைப்பாறக் காத்திருந்த செயலாளரை, காற்றில் மிதந்து வரும் தும்பி போல் ரீங்காரமாக வந்து அடைந்த போது அவரால் இரசிக்க முடியவில்லை. இந்த வார்த்தைகள் அவரது இறந்த காலத்து ஆண்மையை சீண்டி, கோபத்தை கிளறியது மட்டுமல்ல, அவரது இரத்த அழுத்தத்தின் கீழ் மட்ட அளவை மேலும் கூட்டி மூச்சை இரைக்க வைத்ததால் அரைநாளுடன் வீடு திரும்பி விட்டார். அன்று இரவு வழக்கமான இரத்த அழுத்த, தூக்க மாத்திரைகள் வேலை செய்ய மறுத்து விட்டன..

காமத்தை அடக்கிய ஆண்கள் மனதில் வக்கிரம் கலந்த சிந்தனை உருவாகுவது போல் ஆண்மையை சீண்டும் போது குரோதம் உருவாகிறது. இப்படியான குரோதம் ஏற்படுவதற்கு வயது எல்லை இல்லை என்பதை ரொன் ஜோய்ஸ் நடத்தை வெளிக்காட்டியது.

□ □ □

சுந்தரம்பிள்ளை பல நாய்களிலும் பூனைகளிலும் எலும்பு முறிவுகளை ஒபரேசன் செய்வது மூலம் மிருக வைத்தியத்தின் கடின பகுதியான ஓதோபற்றிக்ஸ் என்ற எலும்பு முறிவில் தேர்ச்சியடைவது மனதில் நிறைவைக் கொடுத்தது. நாலு கால் பிராணிகளுக்கு பெரும்பாலும் கார் விபத்துகளில் இந்த முறிவுகள் ஏற்படும்போது பெரும்பாலான நேரத்தில் ஸ்பெசலிஸ்டிடம் எடுத்து செல்லும் போது அதிக பணம் செலவாகும். மற்றைய நோய்களை விட அதிக நேரமும் பணமும் தேவையாவதால் வசதி குறைந்தவர்கள் தங்கள் செல்லப்பிராணியை கருணைக் கொலை செய்து விடுவார்கள். இந்த வைத்தியசாலையில் ஸ்பெசலிஸ்டுகள் இல்லாவிடினும் குறைந்த பணத்தில் சிகிச்சை செய்யலாம் எனப் பலர் தங்கள் கால்கள் முறிந்த செல்லப்பிராணிகளைக் கொண்டு வருவார்கள். இதனால் இங்கு வேலை செய்யும் வைத்தியர்கள் பலவிதமான எலும்பு முறிவுகளைச் சீர் செய்து தேர்ச்சி பெறுவார்கள். ஆரம்பத்தில் உருக்கு கம்பிகளை பொருத்தி சிறிய நாய் பூனைகளின் எலும்பு முறிவுகளை பொருத்துவது இலகுவாக இருந்தது. உருக்குத் தகடுகளை, முறிந்த எலும்புகளில் பொருத்தி பெரிய நாய்களில் வேலை செய்யத் தொடங்கிய போது பிரச்சினை தொடங்கியது. உடல் நிறை கூடிய மிருகங்களின் நடக்கும், பாயும் வேகத்தை கணித்துக்கொண்டு அதற்கு முன்னேற்பாடாக உறுதியான உருக்கு தகடுகள் பொருத்த வேண்டும். அதைவிட அவற்றின் எலும்போடு சேர்ந்து ஒரே அமைப்பாக பொருத்தப்பட்ட இரும்புத் தகடுகள் அவற்றோடு சேர்ந்து இயங்கிக்கொண்டு இருக்க வேண்டும். இப்படி பொருத்திய தகடுகள் ஆறு கிழமைகள் எலும்பு முற்றாக குணமடையும்வரை உறுதியாக இருக்கவேண்டும். அதுவரை உரிமையாளர்கள் எவ்வாறு அந்த நாய்களை பாயாமல், ஓடாமல் அவற்றை பராமரிக்கிறார்கள் என்ற பல விடயங்களில் எலும்புகள் பொருந்துதல் தங்கி இருக்கிறது. மனிதர்கள் போல் கட்டிலில் இருப்பதோ, சொல்வதைக் கேட்பதோ என்ற விடயங்கள் அவைகளுக்கு பொருந்தாது.

சுந்தரம்பிள்ளை ஒரு ஜெர்மன் செப்பேட்டின் முன்கால் முறிவை பொருத்தியபோது எலும்பு பொருந்தி நாய் நடந்தாலும் முன்கால் நடக்கும் போது நேராக இருக்க வேண்டிய பாதங்கள் வெளித் தள்ளியபடி இருந்தது. காரணம் உடைந்த எலும்புகள் தவறாகப் பொருந்தி விட்டது. எலும்பு பொருந்தி நாய் குணமாகி நடந்ததால் உரிமையாளருக்கு சந்தோசமாக இருந்தாலும் பல காலமாக சுந்தரம்பிள்ளைக்கு மனதில் அந்த விடயம் தொழிலின் தோல்வியாக அரித்துக் கொண்டிருந்தது. தனக்கு தெரியாமல் பலர்

இந்த நாயை உதாரணம் காட்டி தன்னை குறை கூறுவதாக உணர்வு ஏற்பட்டது. தொழிலில் ஏற்பட்ட தவறுகள் நிழலாக பலகாலம் தொடரும். அது தொடரும் போது எச்சரிக்கையாக அந்த தவறுகள் வராமல் எதிர்காலத்தில் பார்த்துக் கொள்ளமுடியும். அந்த நாயின் எக்ஸ்ரே ரிப்போட்டை பற்றி ரிமதி பாத்தோலியஸ் தேனீர்கூடத்தில் பேசியதாக காற்று வாக்கில் செய்தி வந்ததால் சுந்தரம்பிள்ளை சிலவாரங்களாக உருக்கு தகடுகளைப் பொருத்தும் எலும்பு முறிவுகளை எடுக்காமல் இருந்தான்.

அன்று மெல்பனில் காரத்திகை மாதத்துக்கு முதல் செவ்வாய் கிழமை குதிரைப் பந்தய நாள். அவுஸ்திரேலியா முழுவதும் சில நிமிடங்கள் ஸ்தம்பித்துவிடும். அத்துடன் விக்டோரிய மாநிலத்தில் விடுமுறை நாளாக பிரகடனப்படுத்தப்பட்ட நாள். விடுமுறை நாள் வேலை செய்வதற்கும் சுந்தரம்பிள்ளையும் போலினும் ரொஸ்ரர் பண்ணப்பட்டு இருந்தார்கள்.

அவுஸ்திரேலியாவுக்கு வந்த காலத்தில் இருந்து சுந்தரம்பிள்ளைக்கும் மெல்பன் குதிரைப் பந்தயத்திற்கும் பொருத்தமில்லாமல் இருந்தது. புலம் பெயர்ந்து வந்த இரண்டாம் வருடத்தில் குயின்ஸ்லாண்ட் பல்கலைக்கழகத்தில் மிருக வைத்தியத்தில் நேர்முக பரீட்சை எடுப்பதற்காகச் சென்றபோது பத்துக்கு மேற்பட்ட வெளிநாட்டவர்கள் காத்திருந்தார்கள். அதில் இருந்தவர்களில் பெரும்பாலானவர்கள் ஆங்கில எழுத்துகளின் கிரமத்தில் நேர்முகப் பரீட்சைக்காக உள்ளே சென்றுவிட்டார்கள். அத்துடன் மதிய உணவு இடைவெளி வந்து விட்டது. தனது தருணத்துக்காக காத்திருந்த சுந்தரம்பிள்ளைக்கு ஒரு மணிநேர இடை வெளிதான் என காத்திருந்த போது மதியம் இரண்டு மணிக்கு மெல்பனின் குதிரை பந்தயம் தொடங்கிவிட்டது. அந்த நேரம், குதிரையோட்டம் நடைபெறுவதால் பரீட்சை வைத்துக்கொண்டிருக்கும் பேராசிரியர்கள் எல்லாம் குதிரைப்பந்தயத்தைத் தொலைக்காட்சியில் பார்க்கப் போய் விட்டார்கள். தொலைக்காட்சியில் குதிரை ஓட்டத்தைப் பார்ப்பதோடு சம்பைனும் சீஸ்சும் அவர்களுக்கிடையே பரிமாறப்பட்டது.

பரீட்சை நேர்முகத்திற்காக காத்திருந்த சுந்தரம்பிள்ளைக்கும் சம்பைனும் சீஸ்சும் கிடைத்தது. ஆனால் குதிரைப்பந்தய அனுபவத்தை கொண்டாடும் நிலையில்லை. மனதில் பரீட்சையை எப்போது முடிப்பேன்? எப்பொழுது தேர்வு பெற்று வேலை கிடைக்கும்? என்ற எண்ணங்களில் மிதந்தபடி இருந்ததுடன் பொறுமையிழந்து குதிரைப் பந்தயத்தைச் சபித்தபடி இருந்தபோது

இரண்டு மணித்தியாலங்கள் கடந்து சென்றது. மீண்டும் நேர்முகப் பரீட்சை தொடங்க மாலை நாலுமணியாகிவிட்டது. சுந்தரம்பிள்ளை தொடர்ச்சியாக இருந்த மன அழுத்தத்தோடு பரீட்சையைச் செய்து முடித்தாலும் கடைசியில் ஒரு பாடம் கோட்டை விட்டாகியது. இதனால் ஒரு வருடம் வீணாகிவிட்டது. இதோடு போகாமல் அடுத்த வருடம் சிட்னியில் உள்ள பல்கலைக்கழகத்தில் படித்தபோது வாய் மொழிப் பரீட்சை நேரத்தில் மெல்பன் குதிரைப்பந்தயம் வந்து எரிச்சலைக் கொடுத்தாலும் இந்த முறை எதுவும் நட்டம் வரவில்லை.

பல மில்லியன் டொலர்கள் பெறுமதியான பந்தயக் குதிரைகள் கலந்து கொண்டு பலநூறு மில்லியன் டொலர்கள் கைமாறும் இந்த பந்தய நாள் என்பது, அவுஸ்திரேலியர்களுக்கு ஒரு களியாட்டநாள். இந்த ஒரு நாளுக்காக வருடம் முழுவதும் காத்திருப்பார்கள். சுந்தரம்பிள்ளைக்கு அந்த நாள் வெறுப்பை கொடுத்தது. மனரீதியாக குதிரைகளுடன் பழகவோ குதிரை வைத்தியத்தில் தேர்வு பெறவோ இலங்கையில் சந்தர்ப்பம் கிடைக்காத சுந்தரம்பிள்ளைக்கு, குதிரைகளில் ஒரு கவர்ச்சி இருந்தாலும் குதிரை வைத்தியத்தில் தேர்ச்சி பெறவில்லை என்ற உணர்வு இதற்கு காரணமோ என நினைப்பதுண்டு. சிலமாத காலங்கள் தென் அவுஸ்த்திரேலியாவில் ஒரு சிறிய நகர்ப்புறத்தில் வேலையில் இருந்த போது குதிரை வைத்தியத்தில் ஈடுபட்டாலும் அது நிறைவாக இருக்கவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்தது. அக்காலத்தில் குதிரையின் உரிமையாளர்களுக்கு குதிரை பற்றிய அறிவு பல மடங்காக தன்னிலும் பார்க்க இருந்தது என்ற விடயம் புரிந்தபோது கசப்பாக இருந்தது. அவர்கள் அறிவைப் புரிந்தும் கடந்தும் வைத்தியம் பார்ப்பது என்பது இலகுவான விடயமாக இருக்கவில்லை.

அக்காலத்தில் நடந்த ஒரு விடயம் இன்னமும் நினைவில் பசுமையாக இருக்கிறது. தென் அவுஸ்திரேலியாவில் வேலை செய்யும் காலத்தில் ஒரு நாள் இரவு படுக்கையில் இருந்தபோது நடு நிசியில் ஒரு குதிரைக்கு வயிற்றுவலி என தொலைபேசி அழைப்பு வந்தது. மிகுந்த தயக்கத்துடன் மருந்துகளையும் உபகரணங்களையும் சரிபார்த்துவிட்டு காரை எடுத்துக் கொண்டு நாட்டுப்புறமாக வந்த போது பண்ணைகளை தேடுவது கடினமாக இருந்தது. நட்சத்திரங்கள் அற்ற அந்த இரவில் கருமையான இரவு சர்வாதிகாரமாக ஆட்சியில் இருந்தது. எந்த உயிரினங்களின் சத்தமற்று அமைதியாக இருந்தது. ஒவ்வொரு பண்ணைகளையும் அடையாளம் கண்டு பாதையில்

இறங்கிப்போய், காரை நிறுத்தி அடையாளம் கண்டு கடைசியில் அந்த பண்ணையைக் கண்டு பிடிக்க இரண்டு மணித்தியாலங்களாகி விட்டது.

தென் அவுஸ்திரேலியாவில் விலங்குப் பண்ணைகள் பல கிலோ மீட்டர் நீள அகலமானவை. இலக்கத்தால் வரைபடத்தில் அடையாளம் இடப்பட்டிருக்கும். வரைபடத்தில் தேடி பின்பு வெளிச்சமற்ற நிலையில் இலக்கங்கள் மிக சிறிதாக அந்தப் பண்ணைகளின் வாசலில் தபால் பெட்டிகளில் பொறிக்கப்பட்டிருக்கும். பகலில் கூட அவற்றை தேடுவது இலகுவானது அல்ல.

இரண்டுமணி நேரமாக நோய் வாய்ப்பட்ட குதிரையோடு விழித்திருக்கும் குதிரையின் உரிமையாளர் எப்படியான மனநிலையில் இருப்பார்?

குதிரைக்கு வயிற்றுவலி பல காரணத்தால் ஏற்படும். ஒரு பார தூரமான நோயை விரைவில் குணமாக்காவிடில் இறந்து விடும் என்ற கவலையோடு அந்தப் பண்ணையை அடைந்த போது செங்கட்டியின் சிகப்பு நிறத்தில் நெற்றியில் மட்டும் வெள்ளை சுட்டியுள்ள அழகான ஆண் குதிரை நிலத்தில் படுப்பதும் எழும்புவதும் பின்பு நிலத்தில் கால்களால் மாறிமாறி உதைத்துக்கொண்டும் நின்றது. மூக்கில் வேர்வை சிறிய மணிகளாக இருந்தது. ஓரளவு மத்திமமான வலியாக இருக்க வேண்டும். கடுமையான வலியெனில் நாலு கால்களையும் ஆகாயத்தில் உதைத்தபடி துடிக்கும் குதிரைகளை சுந்தரம்பிள்ளை கேள்விப்பட்டிருந்தான். இந்த சிவப்பு நிற ஸ்ரான்ரேட் பிரீட் குதிரை அவர்களது சிறிதளவு வெளிச்சம் மட்டும் உள்ள லயத்தில் நின்றது. லயத்தின் வாசல் அருகே மீசை வைத்த இத்தாலியரும் அவரது மனைவியும் நீண்ட கறுப்பு கோட்டணிந்தபடி குளிரின் நடுக்கத்துடன் நின்றார்கள் தாமதத்திற்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டு சுந்தரம்பிள்ளை குதிரையின் இதயத்துடிப்பைப் பரிசோதித்தான். இதயத்துடிப்பிற்கும் வலிக்கும் நேரடியான தொடர்பு உள்ளதால் வலியின் வேகத்தை அளக்கமுடியும். வலி மத்திம அளவானது என உறுதியாகியதும் மருந்தை எடுத்து அதனது கழுத்தில் உள்ள நாளத்தில் கொடுக்கவேண்டும். நாலுகாலில் நிற்கும் குதிரைக்கு வைத்தியம் செய்வது இலகுவானது. வீழ்ந்த குதிரையை எழுப்புவது கடினமான காரியம்.

அந்த தொழுவத்திற்கு வெளிச்சம் போதுமானாதாக இருக்கவில்லை. வேறு இரண்டு குதிரைகள் அந்த இரவில் தங்களுக்கு

இந்த பின்னிரவு நேரத்தில் மனிதர்களாலும் நோய்வாய்ப்பட்ட குதிரையாலும் ஏற்பட்டுள்ள தொந்தரவை ஆடசேபித்து அடிக்கடி கனைத்தபடி நின்றன. அதிக வெளிச்சம் வேண்டும் என்ற போது புதிதாக மின்சார லைட்டைப் தொழுவத்தில் பொருத்திவிட்டு கணவன், மனைவி இருவரும் வலி கொண்ட குதிரையின் கழுத்தைப் பிடித்து உயர்த்தினார்கள். ஊசி மூலம் வலி மருந்தை கழுத்தில் உள்ள இரத்த நாளத்துக்குள் ஏற்றியதும் சில நிமிடத்தில் குதிரை அமைதியடைந்தது. குதிரையின் வலி தீர்க்கப்பட்டுவிட்டது என்பது அது நிலத்தை உதைப்பதை நிறுதியதன் மூலம் தெரிந்தது. ஆனால் ஏன் குதிரைக்கு வலி ஏற்பட்டது என்பதைத் தெரிந்து கொண்டு அதற்கு மருந்து செய்யவேண்டும். அதற்காக குதிரையின் குதத்துக்குள் கையை விட்டு பரிசோதிக்க வேண்டும். அதற்காக கைச் சட்டையை மடித்து தயாராகிய போது அந்த மீசை வைத்த இத்தாலியர் ‘டொக்டர் இந்தப் பகுதியில் சொரியல் மண்ணைப் புல்லோடு சேர்த்து மேய்வதால் மணலால் ஏற்படும் வயிற்றுவலிதான் ஏற்படுகிறது. நீங்கள் பரபின் ஒயில் கொடுத்தால் நல்லது’ என்றார்.

அவர் சொல்லிய வைத்திய ஆலோசனை சுந்தரம்பிள்ளை எதிர்பார்க்காத, வரவேற்காத விடயம். என்றாலும் பின்னிரவு நேரத்தில் வேலையை இலேசாக்கியது. குதிரையின் குதத்திற்குள் கை வைத்து அந்த இரவில் பரிசோதிப்பது சந்தோசத்தையளிக்கும் விடயம் அல்லவே.

காருக்குள் இருந்து பரபின் ஆயிலை எடுத்து வாளிக்குள் ஊற்றிவிட்டு குதிரையின் மூக்குக்குள் ஒரு ரப்பர் குழாயைச் செலுத்தும்போது மேல் உதட்டில் உரிமையாளர் கயிற்றுத் தடத்தால் இறுக்கி பிடித்துக்கொண்டிருந்தார். ரப்பர் குழாய் இரைப்பைக்குள் சென்று இருந்தால் புல்லுமணம் அந்த குழாயின் அடுத்த முனையில் மூக்கை வைத்து நுகரும் போது வரவேண்டும். இல்லாவிடில் குழாய் நுரையீரல் உள்ளே இருக்கிறது என்பதாகும். நுரையீரலுக்குள் பரபின் ஒயில் போனால் குதிரை உடன் இறப்பது நிச்சயம். புல் மணத்தை உறுதிப்படுத்திவிட்டு சைக்கிள் பம்பால் ஒரு லீட்டர் பரபின் ஒயிலை இரைப்பையுள் செலுத்திவிட்டு, வேலை முடிவடைந்தது என்ற திருப்தியுடன் வெளியே வந்தாலும் குதிரைக்கு எதனால் வயிற்றுவலி என தெரிந்து கூறியது அந்த மீசைக்கார இத்தாலியர்தான் என்ற விடயம் சுந்தரம்பிள்ளைக்கு மனதில் இருந்து அகலவில்லை. அது இந்த நடு இரவில் பல கிலோ மீட்டர் தூரம் வந்து செய்த மருத்துவத்திற்கு நிறைவற்ற தன்மையை கொடுத்தது. அந்த

இத்தாலியர் சொன்னதைச் செய்தேன். இதில் அதிக பெருமை அவருக்கே சார்கிறது அல்லவா?

வீடு திரும்பும் போது வானம் வெளுத்து அந்தப் பிரதேசம் உயிர் பெறத் தொடங்கி விட்டது. போகும் போது இருந்த இரவின் அமைதிக்கும் தற்போது இருக்கும நிலைக்கும் எவ்வளவு பெரிய மாறுதல்?. மரங்கள் குறைந்து தட்டையாக நிலப்பரப்பாக தெரிந்தது அந்த பிரதேசம். இன்னும் முற்றாக அடையாளம் தெரியாத இருள் இருந்தாலும் கிளிகளின் வர்க்கத்தைச் சேர்ந்த கொக்கற்றோ இளம் பச்சை வர்ண பறவைகள் அங்கும் இங்கும் பறந்து வானத்தையே மறைத்ததுடன் அவற்றின் குரல் அந்தப்பிரதேசத்தை ஆக்கிரமித்தது மிகவும் புதுமையாக இருந்தது. அந்தக்காட்சி அந்த பரந்த சாம்சன் பாலைவனப்பகுதியின் விளிம்பு பிரதேசத்தில் அதிகாலையாகிவிட்டது என்பதை தெரிவித்தது.

அதன்பின்பு சில மாதங்கள் மட்டும் அந்த தென் அவுஸ்திரேலியாவில் வேலை செய்ததால் சுந்தரம்பிள்ளைக்கு ஒரு சில குதிரை சம்பந்தமான வேலைகளே செய்ய வேண்டி இருந்தது. நாய் பூனைகளுக்கு மட்டுமே வைத்தியம் செய்ய வேண்டிய வேலை மெல்பனில் கிடைத்ததால் சிறிதளவு கிடைத்த குதிரை வைத்திய அனுபவம் கையை விட்டுப் போனது.

இப்படி குதிரைப் பந்தயம் மட்டுமல்ல குதிரை வைத்தியம் மீதும் கசப்பான அனுபவம் ஏற்பட்டதால் சுந்தரம்பிள்ளை வீட்டில் குதிரைப்பந்தயத்தை பார்த்து விடுமுறை தினமாக இன்புற்றிருக்க விரும்பவில்லை. வேலை செய்ய விரும்பியதற்கு மற்றைய காரணம் அன்று விக்டோரிய மாநிலத்தில் விடுமுறையானதால் வேலைசெய்யும் போது அதிக வேதனம் கொடுக்கப்படுவதுமாகும்.

மெல்பன் குதிரைப்பந்தய தினத்தில் வைத்தியசாலையில் அதிக வேலை இருக்கவில்லை. காலையில் சிலர் வந்து போனாலும் நடுப்பகலின் பின்பாக வைத்தியசாலை அமைதியாக இருந்தது. தேநீர் குடித்தபடி பத்திரிகையில் மூழ்கி, சுந்தரம்பிள்ளை இருக்கும்போது போலின் தொலைக்காட்சியில் குதிரைப்பந்தயத்துக்கு வந்திருந்த பெண்களின் உடை அலங்காரத்தையும் அவர்களது தொப்பிகளையும் பார்த்து கொண்டு அதை பற்றிய நேர்முகவர்ணனையில் இருந்தாள். அவளுக்கும் குதிரைகளிலோ அவைகள் வெற்றி பெறும் பணத்திலோ அக்கறை இல்லை. இந்த மெல்பன் குதிரைப்பந்தய நாளும் அதனைத் தொடர்ந்து வரும் சில நாட்களும் பெண்மணிகள்

தங்கள் உடையலங்காரத்தை காட்சிப்படுத்தும் நாட்கள். அதனால் போலினினது உடல் வைத்தியசாலையிலும் அவளது ஆத்மா பிளமிங்ரன் குதிரைப்பந்தய திடலிலும் சஞ்சரித்தது.

திடீரென அவளது நேர்முக வர்ணனைக் குரலை கேட்காததால் அவளைத் திரும்பிப் பார்த்த போது போலினை தொலைக்காட்சியருகில் காணவில்லை. எங்கே என நினைத்துக் கொண்டிருந்தபோது கிரேக்கத் தோரணையில் ஆங்கிலம் பேசிய ஒரு முப்பத்தைந்து வயது மதிக்கத்தக்க பெண்ணுடன் ஜெர்மன் செப்பேட் நாயொன்றை தள்ளு வண்டியில் வைத்து தள்ளியபடிவந்தவள் கொரிடோரை அடைந்ததும் “சிவா, சிவா” என ஏலம் போட்டபடி வந்தாள்.

பத்திரிகையையும் தேநீரையும் அப்படியே விட்டு விட்டு முதலாவது ஆலோசனை அறைக்கு வந்த போது சுந்தரம்பிள்ளையிடம் அந்தப் பெண் ‘ரோசியை கார் அடித்துவிட்டது டொக்டர்’ என்றாள். எதுவித மேக்கப் பூச்சும் இல்லாத அவளது முகத்தில் கோடிட்ட கண்ணீரைத் துடைத்தபடி மூக்கை சிறுபிள்ளைகள் போல் உறிஞ்சியபடி பேசினாள்.

ரோசி என்ற அந்த ஜெர்மன் செப்பேட் எதுவும் நடக்காதது போல் தனது தலையை தூக்கி அந்த தள்ளு வண்டியில் இருந்தபடி தான் இருக்கும் சூழ்நிலையை அளவெடுத்தது.

போலின் ரோசியை மெதுவாக மேசைக்கு மாற்றிய போது முதுகெலும்பு பகுதி பாதிக்கப்படவில்லை எனத் தெரிந்தது. ஆனால் எழுந்திருக்க முயற்சித்த போது ரோசியால் நிற்க முடியாது என்பது தெரிந்ததும். ஒவ்வொரு கால்களாக பரிசோதித்த போது இடது தொடையில் முறிவு தெரிந்தது. உடனே எக்ஸ்ரேயை எடுத்ததும் முறிவை உறுதிப்படுத்திவிட்டு அந்த எக்ஸ்ரேயை அந்தப் பெண்ணிடம் காட்டியதும் மீண்டும் கண்ணீர் மீண்டும் அவளது கன்னத்தில் ரவிவர்மாவாக ஓவியம் கீறியது.

‘எனது கணவர் சமீபத்தில் மரணம் அடைந்து விட்டார். அவர் இந்த நாயைக் இரண்டு மாதக் குட்டியாக கொண்டு வந்து எனது பிறந்த நாளுக்குப் பரிசாக நாலு வருடங்களுக்கு முன்பாக தந்தார். நான் ரோசியையும் இழப்பதற்குத் தயாரில்லை. எப்படியும் இதைக் குணப்படுத்தித் தாருங்கள்’ என மன்றாடினாள்.

அவளது மன்றாட்டத்தைப் பார்த்து போலினுக்கு கண்ணீர் வந்து விட்டது. அவளை அணைத்து ஆறுதல் வார்த்தைகள் சொன்னாள். போலினோடு வேலை செய்யும்போது சுந்தரம்பிள்ளைக்கு இலகுவாக இருக்கும். செல்லப்பிராணிகளின் பிணி, துன்பத்தின் கவலையில் துவளும் உரிமையாளர்களுக்கு ஆறுதல் அளிப்பதில் அவளுக்கு நிகரான நேர்ஸ் அந்த வைத்தியசாலையில் இல்லை. கண்கள், வார்த்தைகள், உடல் மொழிகள் மூலம் அவளது வைத்தியம் உரிமையாளரைச் சாந்தப்படுத்தும் போது வைத்தியர்களால் செல்லப்பிராணிகளின் பிரச்சினையில் மட்டும் கவனம் செலுத்தமுடியும். அல்லாத போது இரண்டு விடயங்களையும் செய்ய வேண்டிய நிலைக்கு மிருகவைத்தியர் தள்ளப்படுவார்.

'நாங்கள் இந்த எலும்பு இரண்டையும் உருக்கு பிளேட்டை பாவித்து பொருத்தலாம். நாளை இதைச் செய்கிறேன்' என சுந்தரம்பிள்ளை உறுதி மொழி கொடுத்த போது சுந்தரம்பிள்ளையினதும் போலினதும் கைகளைப் பிடித்தபடி 'உங்களைத்தான் நம்பியுள்ளேன்' என மீண்டும் கூறிவிட்டு தயக்கத்துடன் திரும்பிப் பார்த்தபடி வெளியேறினாள்.

17

காலோஸ் மீதான அந்தப் புகார் ஜிவ் என்ற பூனையின் உரிமையாளரான விக்டர் வில்லியத்தால் வைக்கப்பட்டது. அவுஸ்திரேலியாவில் நூறு பேர் வாயால் குறை கூறும் போது ஏற்படும் தாக்கத்திலும் பார்க்க எழுத்தில் அளிக்கப்படும் மனுவுக்கு அதிக தாக்கம் உண்டு. விக்டர் வில்லியம் எழுத்தில் கொடுக்கப்பட்ட மனுவுக்கு நிர்வாகம் எப்படியும் பதில் கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் தள்ளப்பட்டது.

பூனைகள் ஒன்பது தரம் உயிர் தப்பும் என்ற ஆங்கில கூற்றுக்கு ஏற்ப ஜிவ் ஒரு விதமாக உயிர் மீண்டது. வைத்தியசாலையில் வைத்து அளிக்கப்பட்ட தீவிர சிகிச்சையால் குணமாகி வீடு சேர்ந்தாலும் விக்டருக்கு ஏற்பட்ட கோபம் தீரவில்லை. காலோஸின் கையால் உடலில் அடி விழுந்தால் கூட பொறுத்திருக்க முடியும். புவ்தா என்ற ஹோமோசெக்சுவல் ஆண்களை இழிவாக பேசும் அந்தச் சொல், நெஞ்சில் நெருப்பால் சுட்டது போல் இருந்தது. சாதாரணமான ஆணுக்கு அவனது ஆண்மையை பழிக்கும் போது ஈகோவில் ஏற்படும் தாக்கம் மற்றவர்களால் புரிந்து கொள்ள முடியும். ஆனால் ஹோமோசெக்சுவல்காரரை இப்படியான சொற்களால் தாக்குவது வழமையானது. விக்டர் அந்தச் சொல்லால் ஏற்பட்ட அவமானத்திற்கு எதிர் நடவடிக்கையை நீதிமன்றத்தில் எடுக்க நினைத்து தனது ஒரு பால் நிலையை இழிவு செய்ததாக வழக்கொன்று போடுவதற்கு ஆரம்பத்தில் தீர்மானித்தார். அதற்காக வழக்கறிஞரான நண்பன் ஒருவனைத் தொடர்பு கொண்ட போது வைத்தியசாலையில் இந்த விடயத்தை பார்த்தவர்கள் உனக்கு ஆதரவாக சொல்லமாட்டார்கள். உனக்குச் சாதகமான சாட்சிகள் இல்லாத போது வழக்கு வெல்லாது. வெல்ல முடியாத விடயத்தை எடுத்துக் கொண்டு நீதிமன்றம் போவதில் பிரயோசனம் இல்லை எனக் கூறி சமாதனப்படுத்தியதால் விக்டர் சிறிது குளிர்வடைந்து கடிதத்தில் தனது புகாரை எழுதி நிர்வாகத்திடம் கொடுத்தார். அந்தக்

கடிதத்தைப் பெற்றுக்கொண்ட ரொன் ஜோய்ஸ் இதற்கு நிச்சயமாக நடவடிக்கை எடுப்பதாக உறுதி மொழி கொடுத்தார். காலோஸ் மீதான இந்தப் புகாரை விசாரணைக்கு எடுக்க வேண்டுமென்பதில் செயலாளரான ரொன் ஜோய்ஸ் விடாப்பிடியாக நின்றார். இம்முறை எவராலும் தடுக்க முடியவில்லை. மனிதர் இதைச் சாதித்து விட்டுத்தான் இளைப்பாறுவது என்று தனிபட்ட சவாலாக எடுத்துவிட்டார்.

கடந்த முறை பத்து வருடத்துக்கு மேலாகத் தலைமை வைத்தியராக இருந்த ஒருவரை விசாரணைக்கு எடுக்க நிருவாக சபை மறுத்துவிட்டது. இந்தக் கடிதத்தை விசாரணைக்கு எடுக்காது விட்டால் தனது வேலையை விட்டு விலகுவதாக அந்தக் கூட்டத்தில் கூறிய போது இருபது வருடமாக இருந்த வைத்திய சாலை செயலாளரை இழக்க விரும்பாமல் அரைமனதுடன் நிருவாக சபையினர் காலோஸ்ஸிடம் விளக்கம் கேட்க சம்மதம் தெரிவித்தார்கள்.

வழமை போல் மாலை இரண்டு மணியளவில் தொடங்கிய கூட்டத்தில் அரை மணித்தியாலத்தில் வெளியே வந்த ரொன் ஜோய் வைத்திய சாலையின் தேநீர் கூடத்தில் இருந்த காலோஸ்ஸிடம் ‘உம்மை வரும்படி அழைக்கிறார்கள்’ என்ற போது அதை சட்டை செய்யாமல் எதிரே இருந்த கதிரையை காட்டி அதில் இருக்கும்படி காலோஸ்’ ரொன்னைக் கேட்டது அவருக்கு வியப்பாக இருந்தது.

இவன் என்னை ஆழம் பார்க்கிறானா? இம்முறையும் திருமதி கில்பேட் திருமதி ஒச்சாட் போன்றோரின் துணையுடன் தப்பிவிடலாம் என்று இலகுவாக எடுக்கிறானா?

இருவரும் ஒருவர் முகத்தை பார்த்து மனநிலைகளை புரிந்து கொள்ள முயற்சித்தார்கள். பரஸ்பரம் கண்கள் ஊடாக எண்ணங்கள் தெரிகிறதா என யோசித்தனர். இருவரது முகத்திலும் பரஸ்பரமான வெறுப்பு மட்டும் தெரிந்தது. மனங்களில் வெறுப்பு ராட்சத மரமாக வேர்விட்டு, கிளைவிட்டு இருப்பதை எப்படி மறைக்க முடியும்? அப்படியான மறைப்பு முயற்சியில் ஈடுபட இருவரும் தயாராக இல்லை. வார்த்தைகளைப் பரிமாறினால் காலோஸ்ஸிடம் வார்த்தைகள் வேகமாக வரும் என்பது ஏற்கனவே ரொன் ஜொய்ஸ்ஸுக்கு தெரிந்த விடயம். நேரடியாக முரண்பட்டால் தோற்பது தானாகத்தான் இருக்கும் என்பதால் என்ன நடக்கிறது பார்ப்போம் என்று நினைத்தபடி அமர்ந்தார்.

‘தயவு செய்து உங்களது பேனையைத் தரமுடியுமா? என்று காலோஸ் அப்பாவி போல முகத்தை வைத்துக் கொண்டு கையை நீட்டி கேட்டபோது ரொன் ஜொய்ஸ்ஸின் கழுத்துப்பட்டை கட்டிய அவரது கழுத்தில் சிறிது வியர்த்தது. வெறுப்பு மறைந்து மனதில் குழப்பம் ஏற்பட்டது.

ஏதோ திட்டம் வைத்திருக்கிறான் என நினைத்தபோது இதயத்தின் துடிப்பு அதிகரித்து, இரத்த அழுத்தம் கூடுவதாக உணர்ந்தார். தேவை இல்லாத பலப்பரீட்சையில் இறங்கி விட்டேனோ?

இனிமேல் பின்வாங்க முடியாது. இரண்டில் ஒன்றை பார்க்க வேண்டும் என தனக்கு தைரியத்தை தானே மனதுக்குள் சொல்லிக் கொண்டார். குழப்பத்தை முகத்தில் காட்டாது சிறு பிள்ளை போன்ற அப்பாவியாக சிரித்தபடி பேனையை கொடுத்தபோது ‘அழகான பேனை’ எனக் கூறிய படி பொக்கட்டில் இருந்து எடுத்த கடிதத்தில் அந்த பேனாவால் கையெழுத்துப் போட்டு அதை ரொன் ஜோய்சிடம் நீட்டிய போது ‘இது என்ன?’ எனக் கேட்டபடி வாங்கிக் கொண்டார்.

‘இது எனது தலைமை வைத்தியர் பதவியில் இருந்து விலகும் கடிதம். இந்த கடிதத்தை நிர்வாகக் குழு ஏற்றுக் கொண்டபின் எனது நிலையை விளக்க விரும்புகிறேன்’’

‘காலோஸ் ரிலாக்ஸ். நீர் வந்து விளக்கிவிட்டால் பிரச்சினை முடிந்து விடும். இதற்காக ஏன் பதவியை விலகவேண்டும்? என்றார் தனது ஏமாற்றத்தை வெளிக்காட்டாமல்.

இவன் விலகினால் புதிய ஒருவரைத் தேட வேண்டிய வேலை தனது தலையில் வந்து முடியும். அதைச் செய்வது மிகவும் கடினமானது. மேலும் காலோஸை அவமானப்படுத்தி நிற்க வைத்து, அவன் தன் நிலையை விளக்குவதைக் கேட்க வேண்டும் என்ற எண்ணத்தில் போட்ட சிறிய வியூகத்தில் இருந்து காலோஸ் இலகுவாக தப்பி செல்வதும் அவருக்கு பிடிக்கவில்லை.

பதவியில் ஆசைப்பட்ட ஒருவனை அவமானப்படுத்த முடியும். பதவி வேண்டாம் என காலோஸ் தூக்கி எறிந்த போது ரொன் ஜொய்ஸ்சின் அவமானப்படுத்தும் ஆசை நிராசையாகி விட்டது.

‘நான் வந்து விளக்கம் சொல்ல விரும்புகிறேன். எனது தேநீரை குடித்து விட்டு இன்னும் கால் மணிநேரத்தில் வந்து சந்திக்கிறேன்.

ஆனால் அதற்கு முன்பு எனது இராஜினாமா கடிதத்தை நீங்கள் நிர்வாக குழுவில் தாக்கல் செய்யவேண்டும் இரண்டும் வேறான விடயங்கள்' என உறுதியாகக் கூறினான் காலோஸ்.

வேறு வழியில்லாததால் அந்தக் கடிதத்துடன் எழுந்து போனபோதே இந்த இரவுண்டிலும் காலோஸ் வென்றதும் தான் தோற்றுப் போனதும் புரிந்தாலும் குறைந்த பட்சமாக தலைமை வைத்தியர் பதவியில் இருந்து காலோஸ் விலகியதை ஒரு ஆறுதல் பரிசாக எடுத்துக் கொள்ள வேண்டும் என அவரது உள்மனம் சொல்லியது.

உள்ளே சென்றதும் நிர்வாகக் குழுவிடம் விடயத்தை சொல்லும் போது வார்த்தைகளில் உற்சாகம் இருக்கவில்லை. வெறுமையான மன உணர்வே இருந்தது.

ஆனால் திருமதி ஒச்சட் 'பத்து வருடம் பொறுப்பாக இருந்து இந்த வைத்தியசாலையை நடத்திய ஒரு டொக்டரின் மேல் ஒருவர் ஏதோ ஒரு குற்றசாட்டு எழுதிவிட்டதும் அவரிடம் உடனே விசாரிக்க முடிவு செய்தது சரியானது அல்ல. மேலும் இப்பொழுது ரொன் ஜொய்ஸ்சின் அவசரத்தால் வைத்தியசாலை ஒரு நல்ல மனிதனை இழந்து விட்டது' என நேரடியாக குற்றம் சாட்டியதும் திருமதி கிளிபேட் அதை ஆமோதித்தார். மற்றைய அங்கத்தவர்களும் மவுனத்தால் ஆமோதித்தது போல இருந்தது. லோட்டன் மிஸ்டர் 'ஜொய் நீர் அவசரப்பட்டுவிட்டீர். ஆனால் ஏற்கனவே நடந்ததை மாற்ற முடியாது. மேலும் என்ன செய்வது என்பதை சிந்திப்போம் என்றார்.

செயலாளர் ரொன் ஜோய்ஸ் திருடன் முதலாவது தடவையாக திருட முயன்று கையும் களவுமாக பிடிபட்டது போன்று அவமானத்தில் தலையைக் குனிந்து கொண்டார். இந்த விவகாரம், இப்படி முடியும் ஒரு சாத்தியத்தை எதிர்பார்க்காதது தனது தப்பு என்பதும் அவருக்குப் புரிந்துவிட்டது. இளைப்பாறவிருந்த சில மாதத்தில் தேவையில்லாமல் இந்த விடயத்தில் காலை விட்டது தவறு. அப்படிச் செய்ய முயலும் போது பின் விளைவுகளை யோசிக்காதது தனது பிழை என்ற சுய கழிவிரக்கம் அவரைப் பீடித்துக் கொண்டது. தனிப்பட்ட முறையில் காலோஸ் மீது கொண்ட காழ்ப்புணர்வு எனது சிந்தனையை மழுங்கப்பண்ணி இருக்கிறது. கடந்த இருபது வருடத்தில் செய்த சேவை எல்லாம் இறுதியில் அவமானத்தில் முடிந்தது என மனதை உறுத்தியது.

புண்பட்டு சீழ் வடியும் கர்வத்துடன் அவரும் செயற்குழு அங்கத்தவர்களோடு சேர்ந்து காலோசுக்காக காத்திருந்தார். அந்த கால் மணிநேரம் பல ஆண்டுகள் காத்திருந்தது போல் அவருக்கு மனச்சோர்வைத் தந்தது. அந்த இடத்தில் இருந்து திடீரென மறைந்து விடவேண்டும் என உள்மனது கூறியது. அது சாத்தியம் இல்லை என ஆறுதலாக நினைத்துக் கொண்டு இருந்தார்.

ஓட்டப்பந்தயத்தில் இறுதிப்புள்ளியை முதலாவதாக அடைந்த சிறுவன் பூரணமான வெற்றி சிரிப்புடன் கைகளை ஆட்டியபடி பெற்றோரை நோக்கி வருவதுபோல் காலோஸ் உள்ளே நுழைந்தபோது செயலாளருக்கு வெறுப்பு முகத்தில் வடிந்தது. நிர்வாகக்குழு அங்கத்தினருக்கு காலோஸ்ஸின் அந்தநிலை வியப்பைக் கொடுத்தது. உள்ளே நுழைந்ததும் ப வடிவில் இருந்த அந்த மேசையின் இடது பக்கத்தின் நடுப்பகுதியில் திருமதி கில்பேட்டுக்கு பக்கத்தில் கதிரையை இழுத்து இருந்து கொண்டு அவருக்கு குட் மோனிங் சொன்ன விதம் செயலாளருக்கு வயிற்றில் புளியைக் கரைத்தது.

திரு லோட்டன் ‘மன்னிக்க வேண்டும் காலோஸ். இந்த கடிதத்தைப் பற்றிய அபிராயத்தை கேட்க நாங்கள் நினைத்தோம். ஆனால் நீங்கள் பதவி விலகுவதாக கடிதம் எழுதி கொடுத்திருக்கிறீர்கள். இதன் அர்த்தம் புரியவில்லை. இந்த இராஜினாமாக் கடிதத்தை நாங்கள் ஏற்கவில்லை’ என்றார்.

உட்கார்ந்திருந்த நாற்காலியை முன்னால் இழுத்துவிட்டு சிரித்தபடி பரந்த தோள்களை அசைத்துவிட்டு சகலரையும் ஒரு சில கணங்கள் கண்களால் காலோஸ் பார்த்துவிட்டு மீண்டும் திரு லோட்டனை நோக்கி ‘நான் பதவியில் இருந்து விலகுவது இந்த விடயத்தால் மட்டுமல்ல. தற்பொழுது சிலர் என்னை இந்தப் பதவியில் இருந்து விலத்துவதற்குப் பல வழியில் முயல்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் வைத்தியசாலையில் மற்றவர்கள் என்னில் நம்பிக்கை வைத்து ஒத்துழைப்புக் கொடுத்தால்தான் நான் இந்த பொறுப்பில் தொடர்ந்து இருக்கமுடியும். நான் பத்து வருடங்களாக இந்தப் பதவியை என்னால் முடிந்தவரை சரிவரச் செய்திருக்கிறேன். இதைச் செயலாளர் ரொன் ஜொஸ் கூட ஒப்புக் கொள்ளுவார். வேறு ஒருவர் வந்து இந்த வேலையைச் செய்தால் நான் அதற்கு ஒத்துழைப்புக் கொடுப்பேன். அதில் எவரும் எந்தச் சந்தேகமும் படத் தேவையில்லை. இந்த வைத்தியசாலையும் அதனது நோக்கமும் உன்னதமானவை என்பதால் இதை நடத்தும் உங்களுக்கு

என்னால் எதுவித சிரமமும் வராமல் பார்த்துக்கொள்வேன். இப்பொழுது என் மேல் வைக்கப்பட்ட புகாருக்கு வருகிறேன். மாலை ஐந்தே முக்கால் மணி போல் வந்த அந்தப் பூனைக்கு நான் மருந்து கொடுத்து விட்டுத்தான் சென்றேன். ஆனால் எனக்கு தெரிந்தவர் ஒருவரை ஏர்போட்டில் பார்க்கும் அவசரத்தில் மருத்துவக் குறிப்பு எழுத மறந்து விட்டேன். காலை அந்தப் பூனையை பார்த்ததும் ரிமதி பாத்தோலியஸ்; என்னிடம் வந்து பேசி இருக்கவேண்டும். அதற்குமாறாக என்னில் குற்றம்சாட்டி அந்த உரிமையாளருக்கு ஆத்திரத்தை கூட்டியதால் அந்த மனிதர் எனது விளக்கத்தை கேட்காமல் எனது சேட்டை பிடித்தார். என்னை அடிக்க கையோங்கிய போது நான் என்னைப் பாதுகாக்க முயற்சித்தேன். மேலும் அவசரத்தில் எனது வாயால் புவ்தா என்ற வார்த்தை வந்தது உண்மை. ஆனால் எனது சேட்டை பிடித்து தாக்க முயற்சித்த பின்புதான் நான் அந்த வார்த்தையைப் பேசினேன்’.

‘அப்படியானால் இதை ஏன் ரொன் ஜொஸ்சிடம் கூறவில்லை? என கேட்டார் லோட்டன்.

‘என்னிடம் இந்தப் புகார் கடிதம் வந்ததாக ரொன் சொல்லி இருந்தால் நான் பதில் கூறலாம். ரொன் நான் குற்றவாளி என முடிவு எடுத்து இந்த புகாரை உங்களிடம் கொண்டு வந்த பின்பு நான் எதுவும் செய்யமுடியாது’.

‘இப்பொழுது என்னால் உமது நிலையை புரிந்து கொள்ளமுடிகிறது. இந்த நேரத்திலும் உமது ராஜினாமா கடிதத்தை நீங்கள் மீள்பரிசீலனை செய்தால் நல்லது. இரண்டு கிழமை உங்களுக்கு அவகாசம் தருகிறோம்’ எனக் கூறிய போது ‘நன்றி’ எனக் கூறிவிட்டு காலோஸ் வெளியேறிய போது, ரொன் ஜொய்ஸ்ஸ் தலை நிமிர்ந்து பார்க்கவில்லை. மானம் மரியாதை என்பனவற்றை இழந்து தான் ஒரு சடலமாக இருப்பதாக உணர்ந்தார்.இம்முறையும் காலோஸ் தான் வகுத்த வியூகத்தை உடைத்து வெளியேறியது மட்டுமல்ல தன்னை அந்த பொறியில் சிக்கவைத்து விட்டதாக அவரது மனம் நினைத்தது.

□ □ □

சுந்தரம்பிள்ளை ஹெலன் என்ற அந்த பெண்ணுக்கு வாக்களித்தபடி மெல்பன் குதிரைப் பந்தயத்திற்கு அடுத்த நாளான புதன்கிழமை அந்த ஒபரேசனை செய்ய காத்திருந்தான். முன்பாக உருக்குத்தகடு வைத்து பொருத்திய ஜெர்மன் செப்பேட்டின் நினைவு

இடைக்கிடை வந்து மனதில் மரம் கொத்தி போல் துளையை போட்டுக்கொண்டே இருக்கும். பல விதத்தில் வைத்தியராக விட்ட தவறுகள் மனத்தளர்ச்சியை கொடுத்த போதும் எதிர்காலத்தில் அந்தத் தவறைப் பாடமாக எடுத்துக் கொள்ள உதவி இருக்கிறது.

சுந்தரம்பிள்ளை தொடர்ச்சியாக அறிந்து கொண்ட உண்மை இந்த வைத்திய துறையில் தவறுகளை மூடி மறைக்க முடியாது. கொலை செய்து விட்டு கடலில் போட்ட சடலம் அடுத்த சில நாட்களில் மீண்டும் அலையால் கரையில் ஒதுங்குவது போன்று தவறுகள் வெளிப்படும். தவறுகள் ஏற்பட்டால் அதை நேர்மையாக எதிர் கொள்ளுவது நேர்மையானது மட்டுமல்ல சிக்கலற்றது என்பது தெளிவாகப் புரிந்து கொண்ட பாடம்.

சுந்தரம்பிள்ளை காலையில் வேலைக்கு வந்ததும் நாய் கூடுகள் இருக்கும் பகுதிக்கு சென்று ரோசி என்ற அந்த ஜெர்மன் செப்பேட் நாயை சென்று பாரத்தான். அது மூன்று கால்களில் நின்றாலும் தனக்கு எதுவும் நடக்கவில்லை நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள் என்பது போல் நின்றது. வாலை மட்டும் அசைத்தபடி "தேவையில்லாமல் என்னை இந்தக் கூட்டில் போட்டு அடைத்திருக்கிறீர்கள். என்னை சுற்றி நிற்கிற நாய்கள் பைத்தியம் பிடித்தவை போல் இரவு முழுக்க குரைத்துக்கொண்டிருந்தன. இவைகளுக்கு வாய் வலிக்கவில்லையா? கால் உடைந்த எனக்கு வலியை மறந்து ஒரு கண்ணுக்கும் நித்திரை கொள்ள விடவில்லை. அதிலும் எதிரில் நிற்கும் இந்த பொமரேனியன் என்னைப் பார்த்து ஏதோ பேயை பார்த்து குரைப்பது போல் இரவு முழுவதும் தொடர்ச்சியாக குலைத்தது. உண்மையில் என்னைப் பார்த்துத்தான் குரைத்ததா இல்லை நாளை தான் இழக்கப்போகும் ஆண்மையை நினைத்ததால் ஏற்பட்ட சோகத்தால் குலைத்ததா என எனக்குப் புரியவில்லை. இரவு எனக்குக் கிடைத்த சாப்பாட்டை எந்த நாயும் சாப்பிடாது. அப்படியாக வயிற்றை குமட்டும் மணம். ஆனாலும் பசிக்கிறது. என்ன செய்வது என சாப்பிட்டதால் இப்பொழுது வயிறு சரியில்லை. கட புட என வாய்வு வயிற்றுள் ஏதோ எலி ஓடுவதுபோல் சத்தமாக இருக்கிறது. நான் வீட்டுச் சாப்பாடுதான் வழமையாக சாப்பிடுவது. இங்கு எல்லாம் மாறி நடக்கிறது. இப்பொழுது காலை ஒன்பது மணியாகிவிட்டது. காலை ஆகாரம் தரவில்லை. வாயில்லாத எங்களை இப்படி பட்டினி போடுவது இந்த நாட்டில் குற்றமானது. போதாததற்கு நாக்கை நனைக்க எனக்குப் பச்சைத் தண்ணீர கூடத் தரவில்லை. இது என்ன கொடுமையாக இருக்கிறது" என புலம்புவது போல் வாயை அசைத்தது.

சுந்தரம்பிள்ளை திறந்து வைத்த கதவு வழியால் நாய்கள் அடைத்து வைத்த கூட்டுப்பகுதி இருந்த இடத்துக்குள் மக்சி தனது சந்தன கலரான அடர்ந்த வாலை ஆட்டியபடி வந்து சுந்தரம்பிள்ளையின் கால்களை மூக்கால் உராய்ந்து கொண்டு நின்றது. அதன் தலையைத் தடவிய படி 'மக்ஸி என்ன ஏதாவது சாப்பாடு மிகுந்திருக்கும் என்றா இங்கு வந்தாய்? எல்லா நாய்களும் நக்கி வழித்து விட்டன. உன்பாடு ஏமாற்றம். அது போதாமல் எல்லாக் கூட்டையும் ஒரு பருக்கையில்லாமல் நன்றாக தண்ணீர் விட்டு கழுவி இருக்கிறார்கள்'.

'நான் சாப்பட்டுக்கு வரவில்லை. எனக்கு வயிறு நிரம்பி இருக்கிறது எனக்கூறி மக்ஸி ஏப்பம் விட்டது'.

'அப்படியானால் ஏன் உள்ளுக்கு வந்தாய்?

'நீ என்ன செய்ய போகிறாய் எனப் பார்க்கலாம் என்றுதான்..'.

'அதென்ன உனக்கு என் மேல் கரிசனை?'

'நீ மட்டும்தான் என்னையும் கொலிங்வூட்டையும் புரிந்து கொள்ளபவன் என்பதால் எங்கள் மன வெளிப்பாட்டை உன்னிடம் வாய்விட்டு சொல்ல முடிகிறது. இந்த சுயநலத்தால் உம்மில் எமக்கு கரிசனை'.

'அப்படியா? மக்ஸி, டார்லிங்'

'உனது நண்பன் இப்பொழுது மேலதிகாரியில்லை. உனக்கு சப்போட் இல்லாததால் உனக்கு எதிராக சிலர் சதி செய்கிறார்கள். செய்யும் வேலையை கவனமாக செய்யாவிட்டாலும் கூட செய்த வேலையை திறமையாக எழுதுவது முக்கியம் தெரியுமா?' உனக்கு எழுதத் தேவையான அளவு ஆங்கிலம் தெரியும் தானே?

'என்ன நக்கல் போல இருக்கு?'

'உண்மையான கரிசனை'.

'மக்ஸி இதெல்லாம் எனக்குத் தெரியும். நீ சொல்லத்தேவையில்லை. என்னை பார்த்துக் கொள்ள என்னால் முடியும். உன்னிடம் இருந்து அறிவுரை பெறும் நிலையில் இல்லை. உன் வேலையைப் பார்த்துக்கொள் எனப் பொரிந்தான்.

'கொஞ்சம் பொறுமையாகக் கேள். விடயம் புரியும்'

‘நீ கவலைப்படாதே. எதற்கும் குறையச் சாப்பிட்டு விட்டு அதிகம் நடப்பது உனக்கு நல்லது’.

‘இதைத்தான் எல்லோரும் சொல்லுவீர்கள். அதுவும் எனக்குத் தெரியும்’ எனத் திரும்ப முயற்சித்த போது ‘மக்ஸி திருட்டு முண்டம். உன்னை இந்தப்பகுதியின் உள்ளே வரவேண்டாம் என சட்டம் போட்டது தெரியாதா’ என மல்வின் காலை ஓங்கி அடிப்பது போல் பாவனை செய்த போது ‘போடா குண்டா’ எனக்கூறிவிட்டு மக்ஸி வெளியே சென்றது.

சுந்தரம்பிள்ளை மக்ஸி கூறியதை அலட்சியம் செய்வது போல் வெளிக்காட்டினாலும் மனதில் ஒரு கிலேசத்தை உருவாக்கியது. காலோஸ் இராஜினாமா செய்த இடத்திற்கு இன்னும் ஒருவரும் நியமிக்கப்படவில்லை. காலோஸ் ஒரு மேலதிகாரியாக நடக்காமல் உற்ற நண்பனாக நடத்துவதும் அவனது வீட்டு விசேடங்களுக்கு அழைப்பது மூலம் நெருங்கிய நட்புணர்வு இருவருக்கும் ஏற்பட்டிருக்கிறது. அந்த உணர்வு வேலைத்தலத்தில் ஒரு பாதுகாப்பாக இருந்தது உண்மை என்பதும் இப்பொழுது அந்த நிலைமை இல்லை என்பதும் ஏற்கனவே புரிந்திருந்தது.

வழக்கமாக செய்ய வேண்டியிருந்த கருத்தடை ஒபரேசன்கள் நாய் பூனைகளுக்கு செய்வதன் மூலம் சுந்தரம்பிள்ளைக்கு அன்றைய காலை நேரம் கழிந்தது. மதிய உணவுக்கு மதுச்சாலைக்கு வரும்படி காலோஸ் அழைத்தபோது இன்று நான் வர முடியாது என மறுக்கையில், வழக்கமாக இலேசில் விட்டுப் போகாத காலோஸ் அன்று அன்ரூவோடு மட்டும் சென்றது ஆச்சரியத்தை கொடுத்தது. தலைமை மருத்துவர் வேலையிலிருந்து இராஜனாமா செய்த நாளிலிருந்து சுய கழிவிரக்கத்துடன் மற்றவர்களுடன் பேச்சை குறைத்துக் கொண்டது மட்டுமல்ல. நான் பலருக்கு உதவி செய்தேன். தனக்கு ஒருவரும் உதவவில்லை என்ற ரீதியாகக் காலோஸ் பேசிக்கொண்டது சுந்தரம்பிள்ளைக்கு ஆச்சரியத்தை கொடுத்தது. சாமும் அன்ரூவும் அதற்கு வேறு விளக்கம் கொடுத்தார்கள். மரியாவுடன் காதல் செய்யவே காலோசுக்கு நேரம் போதவில்லை. இந்த நிலையில் தலைமை வைத்தியர் வேலை இல்லாமல் போனது சந்தோசத்தையும் நேரத்தையும் கொடுத்திருக்கும் என்றார்கள். மற்றவர்கள் ஒருவரும் எதுவும் இதைப் பற்றி பேசவில்லை. காலோஸ்ஸை பிடிக்காதவர்களும் யார் புதிதாக தலைமை வைத்தியராக வரப்போகிறர்கள் என்று ஆவலாக காத்திருந்தார்கள். அதேவேளையில் காலோஸ்ஸை

மீண்டும் பதவி ஏற்கும்படி நிர்வாக குழு வற்புறுத்தலாம் என நினைத்தார்கள். நிர்வாக குழுவில் சகலருக்கும் காலோஸ் மேல் மரியாதை இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

மதியத்துக்கு மேல் ரோசிக்கு மயக்க மருந்துக்கு முன்பு கொடுக்கும் வலி போக்கும் மருந்தைக் கொடுத்து விட்டு சுந்தரம்பிள்ளை ஒபரேசன் அறைக்கு அழைத்து வருகையில் ரோசி மெதுவாக மூன்று கால்களால் நடந்து வரும் போது தலையை தடவியபடி அழைத்து வந்தான். பின்பு ஒபரேசனுக்கு தேவையான உபகரணங்களை தயாராக வைத்துவிட்டு எலும்பில் துளை போடுவதற்கான மிசினுக்கு தேவையான காஸ் சிலிண்டரைக் கொண்டு வந்தான். சிலிண்டரில் இருந்து வரும் காற்றுத்தான் எலும்பைத் துளைபோடும் டிரில்லை இயக்குவது. மயக்க வாய்வுகளை பாவிக்கும் இடத்தில் மின்சாரத்தால் இயங்கும் டிரில்லை பாவித்தால் ஏதாவது வெடி விபத்து ஏற்பட சாத்தியம் உண்டு என்பதால் காற்றால் இயங்கும் டிரில் மட்டும் பாவிக்கப்படும்.

‘சாம் தேவையான அளவு அந்த சிலிண்டரில் எயார் இருக்கிறதா?

‘அப்படித்தான் நினைக்கிறேன். உபரியாக வேறு ஒரு எயார் நிரம்பிய சிலின்டர் உள்ளது’.

ரோசி இப்பொழுது நிலத்தில் நாலுகால்களையும் நீட்டியபடி படுத்து விட்டது. அதனது கண்கள் கஞ்சா அடித்த மனிதன் போல் உட்சொருகின. கொடுத்த மருந்துகள் வேலை செய்யத் தொடங்கிவிட்டது என உறுதிப்பட்டதும் ரோசியை மேசையில் தூக்கி வைத்து மேற்கொண்டு மயக்க மருந்தை இரத்தக் குழாயில் ஏற்றி முற்றாக மயக்கம் அடைந்தவுடன் தொண்டைக்குள் குழாயை செலுத்தி அந்த குழாயை மயக்க மருந்து வாயுவாக உள்ள மெசினோடு பொருத்தியதும் ஒபரேசனுக்கு தயாரான நிலையை ரோசி அடைந்தது. ஆரம்பத்தில் சுவாசம் அதிகமாக இருந்தது. அதை அவதானித்த மயக்க வாயுவை சிறிது சாம் கூட்டிய போது சுவாசம் மீண்டும் சாதரணமான நிலைக்கு வந்தது. உடைந்த காலில் இருந்து மயிரை சவரம் செய்து அந்தப் பகுதியை பல தடவை நுண்ணுயிர் கொல்லி திரவத்தால் சுத்தப்படுத்தி விட்டு ஒப்பரேசன் மேசையில் கிடத்தி விட்டதும் எனது வேலை முடிந்தது, இனி உன்பாடு என்பது போல் சாம் சுந்தரம்பிள்ளையை பார்த்தான்.

கைளைப் பலமுறை உராய்ந்து கழுவிவிட்டு சுத்தமாக பச்சை கவுனுடன் கண்களைத் தவிர்த்து முகத்தை முழுவதும் மறைத்து மாஸ்க் போட்டு ஒபரேசனுக்கு தயாராக சுந்தரம்பிள்ளை இருந்தான்.

சுந்தரம்பிள்ளைக்கு இந்த ஒப்பரேசன் ஒலிம்பிக் எடை தூக்கும் பந்தயத்தில் வெற்றியை அடைவதற்காக கடைசியாக தூக்க வேண்டிய எடையை பார்க்கும் அந்த எடை தூக்குபவரது மனநிலை போன்று இருந்தது. முன்பு செய்த தவறான இடத்தில் கால் பொருந்திய அந்த ஜெர்மன் செப்பேட், வைத்தியசாலையின் நீண்ட கொறிடோரில் காலைத் திருப்பியபடி நடப்பதாக நினைவு நிழல் போல் தொடர்ந்து வந்தது. நல்ல சேர்ஜனாக விரும்பும் ஒவ்வொருவர் மனதில் எப்பொழுதும் தோல்விகள் வடுக்காளாக தங்கி விடுகின்றன. பல வெற்றியளித்த ஒபரேசன்கள், சந்தித்த மனிதர்கள், அவர்களது செல்லப்பிராணிகள் காற்றோடு கலந்து போய்விடுகிறது.

ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் காலோஸ் சொன்னது அந்தச் சந்தர்ப்பத்தில் நினைவுக்கு வந்தது. ‘தவறுகள் விடாமல் தேர்ச்சியடைந்த எந்த வைத்தியரையும் நான் பார்ததில்லை. அந்த தவறுகளும், அந்த தவறினால் உருவாகும் மன அழுத்தமும் தான் அடுத்த தவறில் இருந்து உன்னைக் காப்பாற்றுவது. மேலும் இந்த வைத்தியத்துறையின் தவறுகள் மறைக்க முடியாதவை’.

ரோசியின் தொடைப்பகுதியை வெட்டி முறிந்த இரு எலும்புத்துண்டுகளையும் தசைகளில் இருந்த தனிமைப்படுத்த கிட்டத்தட்ட முக்கால் மணி நேரமாகி விட்டது. இப்பொழுது அந்த எலும்புக்கு இசைவான உருக்குத் தகட்டைப் போட்டு உருக்கு ஸ்குறு ஆணியால் இறுக்கி எலும்பை உறுதிப்படுத்தவேண்டும். உடைவின் இரண்டு பகுதிகளிலும் தலா இரண்டு என நான்கு ஆணிகளைப் போட்டாகி விட்டது. ஆனால் இரண்டு பக்கத்திலும் மூன்று ஆணிபோட்டால்தான் நல்லது என நினைத்துக்கொண்டு டிரில்லை எடுத்தபோது காற்று வரவில்லை. சிலிண்டரில் இருந்து காற்று முடிந்துவிட்டது. டிரில்லை ரோசியின் போர்த்திய உடலில் வைத்து விட்டு இரண்டு கையையும் விரித்து இப்பொழுது என்ன செய்வது என்ற தொனியில் சாமை சுந்தரம்பிள்ளை பார்த்தான்’.

எலும்பை பிடித்து உதவி செய்து கொண்டிருந்த சாம் பரபரப்பாக வெளியே சென்று புதிய ஒரு சிலிண்டரைக் கொண்டுவந்தான். இப்பொழுது அந்தச் சிலிண்டரை மயக்க மருந்து மிசினில்

பொருத்துவதற்கு, அந்தச் சிலிண்டரைத் திறப்பதற்கான சாவி வேண்டும். சாவியைத் தேடிய போது சாவி இருக்கும் இடத்தில் இல்லை. சாம் மற்றவர்களிடம் விசாரித்த போது சாவியை கடைசியாக பாவித்தது ரீவன் என சொல்லப்பட்டது. எல்லோரும் தங்களுக்கு தெரியாது எனக் கையை விரித்துவிட்டார்கள்.

ரீவன் மாலை ஐந்து மணிக்குத்தான் வேலைக்கு வருவதானதால் அவனால் எதுவித உதவியும் கிடையாது. ரீவனுக்கு அடுத்து சீனியரான நேர்சாக முக்கியமான வேலை வந்தால் சாமிடம் தான் உதவி கேட்பது வழக்கம். இதனால் சாமுக்கு மனதில் இது அவமானமாகவும் இருந்தது. தலையறுந்த கோழி மாதிரி அங்கும் இங்கும் ஓடி, சாவியைத் தேடிய சாமைக் கண்டு பலர் அனுதாபத்துடன் உதவி செய்ய வந்தாலும் அந்தச் சிலின்டரைத் திறக்க முடியவில்லை. வைத்தியசாலை முழுவதும் இந்த விடயம் பரவியதால் பலர் தங்களது வேலைகளை விட்டு வந்து நிலமையை வேடிக்கை பார்த்தும் சில அனுதாப வார்த்தைகளை உதிர்த்தும் சாமையும் சுந்தரம்பிள்ளையையும் கொல்லாமல் கொன்றார்கள். அனுதாபப் பார்வைகள், வார்த்தைகளை விட பல மடங்கு கூரானவை. இரத்தம் வழியாமல் கர்வத்தையும் மனத்துணிவையும் குத்திக் கிழித்து கந்தலாக்க கூடியவை என்பதை அன்று உணரமுடிந்தது. எதுவும் செய்யமுடியாமல் அரைவாசியில் நிறுத்தப்பட்ட அந்த ரோசியின் ஒபரேசனைப் பார்த்தபடி மற்றவர்களின் அனுதாபங்களை ஏற்றுக் கொண்டு மரணவீட்டுக்கு வந்தவர்கள், இறந்தவரின் பிள்ளைகளுக்கு அனுதாபம் தெரிவிப்பதும், அதை பெற்றுக்கொள்ளுவது போன்ற மனநிலையில் சுந்தரம்பிள்ளை அந்த இடத்திலே நின்றான். கணக்காளர் ஜோன் கூட வந்து தனது பங்கிற்கு உதவி செய்ய முடியாவிட்டாலும் இதமாக இரண்டு வார்த்தை பேசிவிட்டு சென்றார்.

மதிய உணவு அருந்திவிட்டு தாமதமாக காலோஸ் வந்ததும் வழக்கான எக்காளமான சிரிப்புடன் ‘இது என்ன நாடகம் நடக்கிறது?. இவ்வளவு பேரின் உதவி எலும்பை நேராக பொருத்த தேவைப்படுகிறாதா?’ என்றது சுந்தரம்பிள்ளைக்கு இதயத்தில் ஊசியாக குத்தியது. என்றாலும். பொறுமையைக் காத்தபடி விடயத்தை விளக்கிய போது ‘நாலு ஸ்குருவில் எலும்பு குணமாகியதை நான் பார்த்திருக்கிறேன். எலும்பு முறிவுக்கு இரண்டு பக்கம் தலா இரண்டு ஸ்குறு போட்டாகிவிட்டது. இப்படியே காத்திருந்தால் எலும்பில் தொற்று வந்துவிடும். உடனே ஒப்பரேசனை முடித்துவிடு’

‘இந்த நாய் மிகவும் துடியாட்டமானது; இதற்கு நாலு ஸ்குறு தாங்காது. எப்படியும் இந்த எலும்பு இணையாது’.

‘எலும்பு இணையாது விட்டாலும் மீண்டும் ஒபரேசன் செய்யலாம் எலும்பில் தொற்று நோய் வந்தால் எக்காலத்திலும் எலும்பு இணையாது’

அப்பொழுது சுந்தரம்பிள்ளை காலோஸின் ஆலோசனையில் உள்ள உண்மையை ஒத்துக்கொள்ள வேண்டியிருந்தது. ஒப்பரேசனை நிறுத்தி முக்கால் மணி நேரமாகிவிட்டது. பலர் தியேட்டருக்குள் வந்தும் பேசியும் போனதால் அவர்களது வாய்களில் இருந்து தொற்று கிருமிகள் வர சாத்தியம் உண்டு. புதிய சிலிண்டரை திறக்கும் சாத்தியக் கூறு ரீவன் வரும்வரையில் இல்லை. புதிதாக ஒன்று கடையில் வாங்கி வர நேரமாகும் என்பதால் காலோஸின் யோசனையைக் கேட்பதைத் தவிர இப்பொழுது வேறு வழியில்லை. ஒபரேசனை முடித்து தசை, தோல் என்பவற்றை தைத்து விட்டு உடனே எக்ஸ்ரே எடுத்த போது எலும்பு பொருந்தியது போல் இருந்தாலும் மனதில் நிம்மதியில்லை. நடந்த விடயத்தை உரிமையாளருக்கு தெரிவிக்க வேண்டியது தனது பொறுப்பு என்பதால் ‘சாம், தயவு செய்து ஹெலனின் தொலைபேசி இலக்கத்தை எடுத்து டயல் பண்ணு. நான் பேசுகிறேன்’.

அடுத்த முனையில் தொலைபேசியில் ஹெலன் கிடைத்தவுடன் சாமிடம் இருந்து பெற்றுக் கொண்டு நடந்த விசயத்தை விளக்கி விட்டு, ரோசிக்கு இரண்டு கிழமையில் நாங்கள் எக்ஸ்ரே எடுத்துப் பார்ப்போம். ஒபரேசன் சரியாகாது விட்டால் திரும்ப ஒபரேசன் செய்வோம். அதனது செலவை நாங்கள் பார்த்துக் கொள்வோம். நாளை நீங்கள் வந்து ரோசியைக் கூட்டிக்கொண்டு செல்லலாம். மிக முக்கியமான விடயம் ரோசியைத் துள்ளாது பார்த்துக்கொள்ள வேண்டும்.

அரைமணி நேரத்தில் ரோசி கண்களைத் திறந்தது.

‘சாம் வா நாங்கள் ரோசியைக் கொண்டு போய்க் கூட்டில் விடுவோம்’

‘என்னை மன்னிக்கவேண்டும் சிவா. நான் அந்தச் சாவி இருக்கிறதா என பார்த்திருக்கவேண்டும்’

அதுக்கு என்ன செய்வது? இப்படி ஒருவரும் எதிர்பார்த்திருக்க முடியாது.

'என்னத்தைச் சொன்னாலும் என் மனதில் சமாதானம் ஏற்படாது'

சாம் சுந்தரம்பிள்ளையுடன் ரோசியை மீண்டும் நாய்களின் கூட்டுப்பகுதிக்கு ரொலியில் தள்ளிக் கொண்டு சென்றான்.

## 18

நிர்வாகக் குழு காலோஸின் ராஜினாமா முடிவை மறுபரிசீலனை செய்யும்படி கொடுத்திருந்த இரு கிழமைகள் வைத்தியசாலையில் தற்காலிகமாகவேனும் ஒரு தலைமை வைத்தியர் நியமிக்கப்படவில்லை. தலைமை வைத்தியர் இல்லாமல் சகல வேலையும் வழமைபோல் நடந்து கொண்டிருந்தது. கப்டன் இல்லாத போதும் எந்தத் தங்கு தடையின்றிச் செல்லும் கப்பலைப் போல வைத்தியசாலை சீரான வேகத்தில் சென்று கொண்டிருந்தது. ஒவ்வொருவரும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வேலைகளைச் செய்வதால் அறுபது வருடமாக இந்த வைத்தியசாலை அவுஸ்திரேலியாவில் முன்மாதிரியாக நடந்து கொண்டிருந்தது. ஒவ்வொரு நாளும் வரும் நூற்றுக்கு மேற்பட்ட செல்லப்பிராணிகளைக் கொண்டு வருபவர்களைக் கவனித்து, அவற்றின் பிணி தீர்க்கும் உன்னதமான கடமையாற்றுவது என்பதாலும் மற்றும் இலாப நோக்கமற்று நியாயமான பணத்தில் இந்தச் சேவை நடப்பதாலும் மெல்பனில் வாழும் பலருக்கு இந்த வைத்தியசாலையில் மரியாதையும் பற்றும் உள்ளது. சில செல்வந்தர்கள் தங்களது செல்லப்பிராணிகளைக் கொண்டு வந்து மணிக்கணக்காக காத்திருப்பார்கள். தங்கள் செல்லப்பிராணிகளில் அதிக அன்பு செலுத்தியவர்கள் தங்களது சொத்துக்களை இறக்கும் போது வைத்தியசாலைக்கு எழுதி வைத்துள்ளார்கள். பத்திரிகைகள், தொலைக்காட்சிகளில் காயமுற்ற செல்லப்பிராணிகள் இங்கு வைத்தியம் பெறுவது அடிக்கடி தகவல்களாக வெளிப்படுத்துவதால் பலரது கவனத்தைப் பெறும் இடமாகிறது. இந்த அளவு முக்கியத்துவம் பெற்ற இடத்தை தலைமை வைத்தியர் இல்லாமல் இரண்டு கிழமை நடத்தியது நிர்வாக குழு, காலோஸ் சேரத்தின் மேல் வைத்த மரியாதையை காட்டுகிறது என சுந்தரம்பிள்ளையால் புரிந்து கொள்ள முடிந்தது.

அன்று இரவு போலினுடன் வேலை செய்த போது ‘சிவா உனது நண்பர் ரிமதி பாத்தோலியசை காலோஸின் இடத்திற்கு

தெரிவு செய்யலாம் எனச் சிலர் பேசுகிறார்கள்' சிறு புன்னகையைத் தவழவிட்டபடி சொன்னாள்.

'அது நடந்தால் நான் வேறு இடத்தில் வேலை தேட வேண்டி இருக்கும்'

'காரணமில்லாமல் ஒருவரை வேலையில் இருந்து நிறுத்த முடியாது"

'காரணங்களைச் சுலபமாகத் தேடமுடியும். மேலதிகாரி தனக்கு விருப்பமில்லாத ஒருவரை மனரீதியாக துன்புறுத்தி வெளியேற வைக்கமுடியும். இப்படியாக பல விடயங்கள் நடக்கும் நாடுகளில் இருந்துதான் இங்கு வந்தேன்'.

'நாங்கள் எல்லோரும் உனக்கு ஆதரவாக இருப்போம் கவலைப்படாதே" என அவளது பூங்கொத்து போன்ற வலது கை விரல்களால் சுந்தரம்பிள்ளையின் தலையில் ஆறுதலாகத் தடவினாள். தடவிய அவளது விரல்களில் அந்த மோதிரம் இருந்த அடையாளம் இன்னும் போகவில்லை. அவளது கைகளைப் பற்றியபடி 'இன்னும் வெறுமையகவா இருக்கிறது?"

"அந்த இடத்தில் மறுகையால் நீவியபடி 'இனிமேல் அவசரப்படப் போவதில்லை' என்றாள்.

சுந்தரம்பிள்ளை சிரித்தபடி 'பத்துவருடத்துக்கு முன்பு பிரம்மச்சாரியாக நான் அவுஸ்திரேலியாவுக்கு வந்திருக்கவில்லை என்பது எனக்கு மிக கவலையாக இருக்கிறது'.

'நான் அப்போது பாடசாலையில் இருந்திருப்பேன்' எனக் கூறி சிவந்த முகத்துடன் சிரித்தபடி எழுந்து இருவருக்கும் தேநீர் தயாரித்தாள்.

'உன்னைப்போல் ஒரு தேவதைக்கு எப்படியும் ஒரு இராஜகுமாரன் எங்கோ பிறந்துதான் இருப்பான். அவன் வெள்ளைக் குதிரையில் வந்து உன்னை தூக்கிச் சென்று புதிதாக ஒரு வைர மோதிரத்தை உனது அழகான விரல்களில் அணிவிக்கத்தான் போகிறான். அப்பொழுது இந்த மோதிர அடையாளம் மறைந்து விடும்'.

'என்ன இன்று வார்த்தைகள் கவிதைவரிகளாக உதிர்கின்றன'

‘இல்லை எனது மனதில் இருப்பதைச் சொல்கிறேன். உன்னைப்போல் ஒருத்தியை ஒருவன் அடைவதற்கு அதிஷ்டம் செய்யவேண்டும்’.

‘என்னை வேலை நேரத்தில் வெட்கப்பட வைக்காதே சிவா’ என முகம் சிவந்தாள்.

தேநீர் இடைவேளை முடிந்ததால் போலீன் ரிசப்சனுக்கும் சுந்தரம்பிள்ளை ஆலோசனை அறைக்கும் சென்றார்கள்.

இரவு எட்டரை மணிக்கு மேலாகி விட்டது. வைத்தியசாலையில் போலினையும் சுந்தரம் பிள்ளையையும் தவிர மனிதர்கள் எவருமில்லை. வழக்கமாக இரவில் நடமாடும் கொலிங்வூட்டைக் கூட காணவில்லை என நினைத்துக்கொண்டு சுந்தரம்பிள்ளை அறையில் இருந்து வெளியே வந்து நீளமான கொரிடோரில் மெதுவாக நடந்தபோது கொலிங்வூட் எதிரில் வந்தது.

‘என்ன போலின் மீது காதலா?’ என்றபடி இடது பக்கத்து காதை இடது முன்கால்களால் சொறிந்தது.

‘கொலிங்வூட் நான் திருமணமானவன். இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள்’

‘பின் ஏன் அவளின் கையை பிடித்து வசனம் பேசியது?

‘அது உனக்கு எப்படித் தெரியும்?’

‘நான் அப்பொழுது மேசைக்கு கீழ் இருந்தேன்’

‘திருட்டு முண்டம்’;

‘நீங்கள் செய்தது மட்டும் திருட்டு இல்லையா?

‘இதைப்பற்றி உனக்குத் தெரியாது. பிளட்டோனிக் காதல் என்று சொல்வது. மனிதர்களால் மட்டும்தான் செய்யமுடியும். இது அடிமனதில் அல்லது கனவுலகத்தில் வைத்து காதலிப்பது. இங்கே உடலுறவோ தாம்பத்தியமோ நடப்பதில்லை. இவை எல்லாம் உனக்கு புரியாது. உனது விதையில் செக்ஸ் ஹோமோன் வந்து உனது மூளையில் படிவதற்கு முன்பே உனது விதையை வெட்டி எடுத்து விட்டார்கள்’.

‘நீங்கள் நினைப்பதைப் போல் நான் முட்டாளில்லை. இப்படி கையை பிடித்து கதைத்தவர்கள் பலர் ஒன்றாகியதை நான் பார்த்திருக்கிறேன். சில காலத்துக்கு முன்பு ஒரு வைத்தியரும் நேர்சும் இரவில் நின்று ஓவர்ரைம் செய்வதாக சொல்லிக் கொண்டு அதன் பின் இருவரும் தாம்பத்தியம் செய்தார்கள். அவர்கள் இன்பமாக இருந்த நேரத்தை கணக்கு வைத்து அதற்கு வைத்தியசாலையில் ஓவர்டைம் எழுதி எடுத்தது எனக்கு தெரியும். அவர்களது திருவிளையாடல் எல்லாம் பக்கத்தில் தெரிந்து கொண்டேன். அவர்கள் நடத்தையில் சிறிதும் நாகரீகம், நேர்மை என்பன இருக்கவில்லை. அந்தக்காலத்தில் அவர்கள் ஆடிய ஆட்டம் என்ன? இப்போது நினைத்தால் எனக்கு உடலில் எரிச்சல் வருகிறது.

‘நீ சில மனிதர்களைப் போல் மற்றவர்கள் சந்தோசத்தை கண்டு எரிந்து புழுங்கும் பிராணியாக இருக்கிறாயே. ஒவ்வொருவரும் தங்கள் இன்பத்தை தேடிப்போக வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அதுவும் அவர்களது மனசாட்சியைக் காவலனாக வைத்து அதற்கு அடங்கித் தங்களது சுகங்களைத் தேடுகிறார்கள். மற்றவர்கள் இன்பமாக இருப்பது நல்லது தானே? அதனால் உனக்கு என்ன பிரச்சினை வந்தது?“

‘இந்த வைத்தியசாலையில் வாழும் நான் இங்கு தரப்படும் உணவை உண்ணுகிறேன். இங்கு இருபத்தினாலு மணித்தியலமும் பாதுகாப்பாக வாழுகிறேன். எனக்கு உணவு, உறையுள் இரண்டையும் தந்த வைத்தியசாலைக்கு நன்றி உணர்வோடு இருப்பது தவறா? நீங்கள் எல்லோரும் உங்களது வேலைக்கு வேதனம் வேண்டுகிறீர்கள். அது போன்றுதான் இதுவும். நான் எனது நன்றியை இந்த வைத்தியசாலைக்கு காட்ட விரும்புவதில் உங்களுக்கு என்ன பிரச்சினை?

‘காலோஸின் தலைமைப் பதவிக்கு உன்னை நியமித்தால் நல்லாத்தான் இருக்கும். என்ன மிருக வைத்தியர் என்ற பட்டம் உனக்கு இல்லை என்பதுதான் குறை’.

‘நக்கலாக இருக்கு. எனக்கு ரிமதி பாத்தோலியஸ் பொறுப்பை எடுத்தால் இந்த வைத்தியசாலை நாறப் போகிறது என கவலையாக உள்ளது’ என்றது.

அந்த நேரம் பார்த்து இரு இளைஞர்கள் ஒரு டோபமான் நாயை மெதுவாக நடத்தியபடி கொண்டு வந்தார்கள். அதைப் பார்த்த கொலிங்வூட் ‘இன்று இரவு நீங்கள் இரவு முழுவதும் இந்த

வைத்தியசாலையில்தான். ஒழுங்காக நடந்தால் சரி. எனக் கூறிய படி அந்த இடத்தை விட்டு நகர்ந்தது.

அந்த நாயின் முலைகள் தொங்கிக் கொண்டும் வயிறு வீங்கியும் இருந்ததால் நிறை மாதமான நாய் என உடனே புரிந்து, அவர்களின் பின்னால் வந்த போலின் ‘சிவா இன்றைக்கு வீட்டை போனபாடில்லை. இது சிசேரியனாகத்தான் இருக்கும்’ என்று சுந்தரம்பிள்ளையின் காதருகே கூறினாள்

டோபமானைப் பரிசோதித்துப் பார்த்து விட்டு ‘கருவாகிய நாள் தெரியுமா’ எனச் சுந்தரம்பிள்ளை கேட்டபோது, அந்த இளைஞர்கள் அண்ணன் தம்பியுமாக இருக்க வேண்டும்.

சிரித்தபடியே ‘எங்களுக்குத் தெரியாது. ‘நாங்கள் பார்க்கவில்லை’ என்று பதில் கூறினார்கள்.

இந்தப் பதில் திருப்தியாக இருக்கவில்லை. ‘இந்த கருவுக்கு சொந்தமான ஆண் நாய் உங்களுடையதா’ என மீண்டும் போலின் அழுத்தமாகக் கேட்ட போது ‘இல்லை சினோவி வெளியே சென்ற போது இது நடந்தது’.

கருமையான டோபமானுக்கு சினோவி என்ற பெயர் வைத்தவர்களிடம் வேறு கேள்வி கேட்டு பதில் பெறுவது கடினம் என நினைத்து ‘ இந்த நாய்க்கு சிசேரியன் செய்யவேண்டி இருக்கும் என நினைக்கிறேன். அதற்கு முன்பாக ஒரு ஊசி மருந்து கொடுத்து பார்க்க விரும்புகிறேன்.“

“உங்கள் சினேவி கடிக்குமா?’

‘நிச்சயமாக கடிக்காது’.

இரண்டு சகோதரர்களும் ஒரே குரலில் பதில் கூறினார்கள்.

சுந்தரம்பிள்ளை வயிற்றில் கைவைத்து பார்த்த போது வயிற்றின் இரண்டு புறத்திலும் பல குட்டிகள் நெளிந்தன. இதைவிட அடிப்புறத்தில் இருப்பவையையும் கணக்கு பார்த்தால் பத்துக்கு மேல் இருக்கும். இன்று இரவு இந்தக் குட்டிகளுடன் கழிந்துவிடும் எனப் போலின் சொன்னதில் தவறு இல்லை என்று சொல்லியபடி வாயைத் திறக்க முற்பட்டபோது கையைக் கவ்வியது. வலியில் கையை உடனே இழுத்த போது அந்த இளஞர்கள் ‘சொறி’ என்றார்கள்.

நீளக்கை சட்டை மற்றும் அதன் மேல் வெள்ளை மேல் கோட்டு என இரண்டு துணிகள் கையைப் பாதுகாத்தபடியால் ஒரு பல்லு மட்டுமே கையில் பதிந்து இரத்தம் கசிந்தது.

'கடிக்குமா எனச் சிவா கேட்ட போது கடிக்காது என்று ஏன் பதில் சொன்னீர்கள்' என போலின் காட்டமாக கேட்டபோது 'நாங்கள் எதிர்பார்க்கவில்லை' என்றார்கள்.

'அப்படி என்றால் தெரியாது என பதில் சொல்லி இருந்தால் நாங்கள் கவனமாக இருப்போம்' போலின் சொல்லிய போது இருவரும் சங்கடத்தில் தலையை குனிந்தபடி மீண்டும் 'சொறி' சொன்னார்கள்.

'நாங்கள் விடயத்தை கவனித்துக் கொள்கிறோம் ஒப்பரேசனுக்கு முன் பணம் கட்டி விட்டுச் செல்லுங்கள். ஊசிமருந்து வேலை செய்யாவிடில் ஒபரேசன் செய்வோம்' எனக் கூறி அவர்களை வெளியே அனுப்பினாள் போலின்.

சினோவிக்கு ஊசியைப் போட்டுவிட்டு நாய்களுக்கான கூட்டில் அடைத்து விட்டு நீண்ட இரவுக்கு தயாராகினான் சுந்தரம்பிள்ளை.

இரவு பன்னிரண்டு மணிக்கு மேல் ஒபரேசன் செய்த போது அந்த டோபமான் நாய்க்கு பன்னிரண்டு குட்டிகள் இருந்தன. அந்தக் குட்டிகளை சுற்றி இருக்கும் பிளசன்ராவில் இருந்து பிரித்து ஒவ்வொன்றாக அவற்றினது உடலை ரேக்கிஸ் ரவலால் துடைத்து அவைகளுக்குச் சுவாசத்தை உருவாக்கினாள் போலின். பன்னிரண்டு குட்டிகளும் உயிர்தப்பி கீச்சு மூச்செென கத்தத் தொடங்கி விட்டன. போலினுக்கு இரண்டு கைகள் போதவில்லை அப்பொழுது வைத்திய சாலையின் பாதுகாவலர்களாகவும் சுத்தப்படுத்துபவர்களாகவும் இருக்கும் பமலாவும் அவரது கணவன் வில்மட்டும் உதவி செய்தார்கள்.

வில்மட் மிகவும் நகைச்சுவையாக கதை சொல்வதில் வல்லவர். அவரது கதைகள் பல வித்தியாசமானவை. பகல் நேரத்தில் வில்மட் பிரேதங்களை அடக்கம் செய்யும் கம்பனிக்கு வேலை செய்தார். அங்கு அவரது அனுபவங்களில் ஒன்று, ஒரு ஐம்பது வயதானவருக்கு காலை வேலைக்கு செல்ல புறப்படும் போது வீட்டில் இதயவலி வந்து வாசலருகே இறந்து விட்டார். அவரது மனைவி அந்த மனிதனின் பிரேதத்தை காரில் ஏற்றி காரை விளக்கு கம்பத்தை நோக்கி எஞ்ஜினை ஸ்ராட் பண்ணி ஓடவிட்டார். கார் விளக்கு

கம்பத்தில் அடிபட்டு விபத்தாக மாறியது. அவுஸ்திரேலியாவில் வீட்டில் இருந்து வேலைக்கு வெளிக்கிட்ட பின்பு ஒருவருக்கு விபத்து நடந்தால் அதற்கு வேர்க் கேயர் என அரசாங்கம் இன்சூரன்ஸ் பணம் கொடுக்கும். இந்த முறையில் பணம் பெற நினைத்ததால் அந்தப் பெண் பிரேதத்தை வைத்து காரை ஓட வைத்தாள். இறுதியில் ஏற்கனவே இறந்த பிரேதமாகி விட்ட மனிதருக்கு கார்விபத்து நடந்தால் கூட இரத்தம் வெளிவராது என போஸ்மோட்டத்தில் இலகுவாக தெரிந்து விட்டது. இறந்த மனிதர் கார் ஓட்டி இருப்பது இலகுவாக கொரனருக்கு தெரிந்து. பெண் சிறைக்கு சென்றதோடு இனிமேல் வேலைத்தலத்தில் நடக்கும் விபத்துக்கு மட்டும்தான் இன்சூரன்ஸ் என சட்டம் மாற்றப்பட்டது. என்று வில்மட் சொன்ன கதையோடு ஒபரேசனை முடிக்கும்போது அதிகாலை நாலு மணியாகிவிட்டது.

□ □ □

நேற்று பகல் வேலை செய்த போது சிறிய தூறலாக பெய்த மழை அங்காங்கு துப்பியவாறு இருந்ததாலும் இரவு வேலையை முடிக்கும் நேரத்தில் பெருமழையாக வந்ததால் நனைந்தபடியே வைத்தியசாலை கார் நிறுத்தும் இடத்திற்கு ஷரன் ஓடி வந்தாள். அந்த நேரத்தில் பெய்யும் மழையை மனதுக்குள் சபித்தாலும் தனது வீட்டை நினைத்ததும், அவை அதை விட கசப்பாக இருந்தது. அம்மாவின் வீட்டுக்குச் சென்று அங்கிருந்து மாக்கஸ்சை வீட்டுக்கு கொண்டு செல்ல வேண்டுமென்ற எண்ணம் மட்டும் இல்லையென்றால் வைத்தியசாலையில் இன்னும் சிலமணிநேரம் வேலை செய்திருக்க முடியும் என்று படுக்கையில் இருந்தபடி முதல்நாள் இரவை நினைத்தாள்.

இரவு குளிரில் நடுங்கிய மாக்கஸ்சை அம்மா வீட்டில் இருந்து கூட்டிக் கொண்டு வீடு வந்தவளது மனதில் இன்றாவது வீட்டில் கிறிஸ்ரியன் இருப்பான். நடந்த விடயங்களுக்கு மன்னிப்புக் கேட்டுக்கொண்டு அவனோடு ஒன்றாகக் கசப்புகளைக் கடந்து செல்லலாம் என்ற உணர்வு சிறிது முளைவிட்டது. மழையில் நனைந்த தேகத்திற்கும் ஏக்கமான இதயத்திற்கும் மெதுவான அவனது சூடான அணைப்பு கிடைத்தால் அதுவே போதுமானது என்று பழையவற்றை மறந்துவிட தயாராக இருந்தாள். சிறிய சைகையை காட்டினாலே சரணடைய நினைத்திருந்தாள். அவன் ஒரு அடி முன்னே வந்தால் நான் ஒன்பது அடிகள் அவனை நோக்கி செல்லத்தயார் என வாய்விட்டு முணுமுணுத்தாள்

சிலமாதங்களின் முன்பு எனது வாழ்வு எவ்வளவு சுவையாக இருந்தது. கிறிஸ்ரியன் மாக்களை வீட்டுக்கு கொண்டு வந்ததுடன் இரவு உணவை சமையல் செய்து விட்டு எனக்காகக் காத்துக்கொண்டோ இல்லை மகனோடு விளையாடிக்கொண்டோ இருப்பான். இப்பொழுது பத்து மணிக்கு வீட்டுக்கு வருவதும் பின்னர் இரண்டு மணி நேரம் தொலைக்காட்சி பார்த்து விட்டு பன்னிரண்டு மணியளவில் வந்து கட்டிலில் படுத்து துங்குவதும் அவனது அன்றாட நிகழ்ச்சியாகிவிட்டது. வேலை முடிந்ததும் மாக்கஸ்சை அம்மா வீட்டில் இருந்து அழைத்து வந்து அவனை படுக்க வைப்பது ஷரனது நாளாந்த வழமையாகி விட்டது.

ஆவலுடன் நேற்று இரவு உள்ளே வந்தவளுக்கு வீடு முற்றாக இருளில் மூழ்கி இருந்ததை பார்த்ததும் அவன் வீட்டில் இல்லை என்பது புரிந்தது. இளகி இருந்த அவளது இதயமும் உடலும் துருவப்பனியில் பல வருடங்கள் புதைந்து கிடந்த இறந்த மிருகத்தின் சடலத்தின் தன்மையை அடைந்தது. மாக்களை அவனது அறையில் படுக்கவைத்து விட்டு இரண்டு துண்டு பாணை பட்டருடன் மருந்து விழுங்குவது போல் தொண்டைக்குள் தள்ளி, தூக்கமாத்திரையை விழுங்கி விட்டு படுத்தாள். அப்படியே படுத்த சில நிமிடங்களில் கிறிஸ்ரியனை சந்தித்த இளம்பருவத்து நினைவுகள் கனவுகளாக வந்தன.

இன்று காலை கண் விழித்த போது படுக்கையில் அவன் இல்லை. அந்த காலை நேரத்தில் இரவு முழுவதும் பெய்த மழை தொடர்ந்து பெய்து கொண்டிருந்தது. ஜன்னல் வழியாக மழை மேக மூட்டம் தெரிந்தது. மழைநீர் மண்ணை நனைத்து எழுந்த வாசனை மூடிய சாளரங்கள் வழியாக மூக்கை மெதுவாக தடவியது. கூரை வழியே விழுந்த நீரின் சத்தம் கனமான மழை என்பதை அழுத்தமாக தெரிவித்தது. கலங்கியிருந்த மனதிற்கு குளிரும் மழையும் சேர்ந்து தலைக்குள் வண்டுபோல் குடைந்து எடுத்தன.

கிறிஸ்ரியனது நடத்தையை இனி பொறுக்கக் கூடாது. முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமானால் அவனை இன்று எப்படியும் முரண்பட்டு எதிர் கொள்ள வேண்டும் என மனதை ஒருமுகப்படுத்தி தீர்மானித்தாள்.

பெயருக்கு மட்டுமே கணவன்-மனைவி உறவு. இருவரும் உடலுறவு கொள்ளாமல் கிட்டத்தட்ட பல மாதங்கள் ஆகிவிட்டது. வேறு பெண்ணுடன் தொடர்பு வைத்திருக்கிறானா என

உறுதிப்படுத்த கடந்த சில நாட்களாக பல ஆய்வுகளை மேற்கொண்டு பார்த்திருக்கிறாள். வெளி உடைகளான பாண்டு சேட்டுகளில் மற்றைய பெண்களின் நீளமான தலைமயிர்கள், வித்தியாசமான வாசனைத் திரவியங்களின் நறுமணங்கள், உதட்டுச் சாயங்களின் அடையாளங்கள் போன்ற தடயங்கள் உள்ளனவா என்பதற்காக அவனது சேட்டுகள், பாண்டுகளை எடுத்து வெளிச்சத்தில் அங்குலம் அங்குலமாகப் பார்த்து விட்டு அத்துடன் அமைதியடையாமல் அவனது உள்ளாடைகளில் ஏதாவது தடயம் கிடைக்குமா என ஆராய்ந்தாள். உள்ளாடைகளில் வட்டங்கள், கோலங்களைத் தேடியதுடன் கொலை நடந்த இடத்தில் தடயங்களை தேடி மருத்துவ நிபுணர் ஆராய்வது போல் அவைகளில் உடலுறவு கொண்ட ஏதாவது அடையாளங்கள் இருக்கிறதா எனத் தேடினாள். கிறிஸ்ரியனின் கைத் தொலைபேசியின் பில்லை ஆராய்ந்து ஏதாவது புதிய இலக்கங்கள் அடிக்கடி வந்திருக்கிறதா என பார்த்து விட்டு அந்த இலக்கங்கங்கள் சென்ற மாதங்களில் பாவிக்கப்பட்டிருக்கிறதா என ஒப்பிட்டு பார்த்தாள். ஒரு இலக்கம் மட்டும் புதிதாக இருந்தது அதற்கு போன் செய்த போது ஆண்குரல் கேட்டது. அந்த குரலுக்கு உடையவர் சில மாதங்களுக்கு முன்பு புதிய வீடு ஒன்றை வாங்கிக் கொண்டு சென்ற கிறிஸ்ரியனின் வேலைத்தல நண்பரான டக்ளஸின் குரல் என்பது புரிந்ததும் உடனே போனை மெதுவாக வைத்துவிட்டாள். சில மாதங்கள் கடன் அட்டையின் படிவங்களைத் தேடி எடுத்து ஏதாவது ஹோட்டலில் பணம் செலவளித்திருக்கிறானா என்பவைகளை ஆராய்ந்தாள். அவளது எந்த ஒரு தேடுதலிலும் கிறிஸ்ரியனுக்கு புதிதாக பெண் உறவு இருப்பதை உறுதி செய்யவில்லை என்பது ஒரு புறத்தில் மழை வெள்ளத்தில் தோன்றும் நீர்குமிழி போன்று சந்தோசத்தை கொடுத்தாலும் மறுபக்கத்தில் தன் மீது காட்டும் அவனது உதாசீனத்தை அவை உறுதி செய்வதால் சாட்டையடியாக உடலில் விழுந்து காயப்படுத்தியது.

இவ்வளவு நாட்களும் தனது அழகால் அடிமையாக வைத்திருந்த அடிமை இப்பொழுது கை கால் தளைகளை உடைத்து அவன் விடுவித்துக்கொண்டது, அவளது அழகிய உடலை யாரோ நெருப்பால் சுடுவது போல் இருந்தது. நெருப்பு சுட்டால் அந்த இடத்தில்தான் எரிவு ஏற்படும்? தனக்கு ஏற்படும் எரிவை உச்சம் தலையில் இருந்து காலின் சிறுவிரல் வரையும் உணரமுடிகிறதே?.

இது பலமாதங்களாக உடலுறவுக்காக ஏங்குவதால் ஏற்படும் உணர்வாக இருக்கலாமா? இருக்காது. இது முற்றிலும் வித்தியாசமானது. இந்த உணர்வு உடல் முழுக்க ஈரத் துணியை

முறுக்கி பிழிவது போல் இருக்கிறதே? காமத்தின் உணர்வுகளை என்னால் கண்டு கொண்டு தீர்த்துக்கொள்ள முடியுமே? இது அதுவல்ல.

அவளது மருத்துவ அறிவுக்கு காம உணர்வை பிரித்துப் புரிந்து கொள்ளமுடிந்தது. ஆனால் தனது உடலை கிறிஸ்ரியன் உதாசீனம் செய்ததால் ஏற்பட்ட ஈகோவின் தாக்கம் அவளது மருத்துவ அறிவுக்கு அப்பாற்பட்டிருந்தது. வழக்கமாக உடலுறவுக்கு அலையும் கிறிஸ்ரியன் தன்னை வெறுக்கும் போது தன் உடலைப் புறக்கணிக்கிறான் என்பதைப் புரிந்து கொள்வது அவளுக்கு கடினமாக இருந்தது. மாணவப் பருவத்தில் இருந்து அவனோடு உறவாக இருந்ததால் காமமும் கர்வமும் ஒன்றாக தீர்க்கப்பட்டது என்பதிலும் பார்க்க அந்த உணர்வுகள் கூர்மையாக செதுக்கப்பட்டது. இளவரசி போல் அவளது தேவைகளைக் கேட்காமல் தங்கத் தட்டில் வைத்து பரிமாறப்பட்ட விடயங்கள் இப்பொழுது குருட்டு பிச்சைக்காரிபோல் தேடித் தேடி ஏங்கும் நிலையில் இருப்பது அவளால் சகிக்க முடியவில்லை. அந்த வலி அவளது உடலின் ஒவ்வொரு உயிர் அணுவிலும் கலந்து அவளைப் பைத்தியமாக்கியது.

‘கிறிஸ்ரியனை உதாசீனம் செய்தது அவன் என் அந்தரங்கத்தைத் தேடி அவனை வரவழைப்பதற்காக நான் நடத்திய நாடகம், இப்பொழுது பொறுக்க முடியாத வலியாக மாறியிருப்பதை என்னால் தாங்க முடியவில்லையே. நான் பைத்தியக்காரியாகவோ, கொலைக்காரியாக மாறுவேனோ என்ற உணர்வு தாங்க முடியாதிருக்கிறதே’ என்று உள்ளுக்குள் வெம்பினாள்.

வேலைக்குச் சென்ற நாட்களில் வலி குறைந்திருப்பது போல் தெரிந்தாலும் ஓய்வு நாட்கள் அவளை உடைந்த கண்ணாடித் துண்டுகளாக உடலெங்கும் கீறித் துன்புறுத்தத் தொடங்கின. இப்பொழுது ஓய்வு நாட்கள் வராமல் இருக்காதா? தொடர்ந்து வைத்தியசாலையில் வேலை செய்தால் என்ன? காமம், ஈகோ, மற்றும் தனிமை என்பன பல தலைப்பாம்பாக கனவிலும் நனவிலும் கொத்துவதாக உணர்ந்தாள். ஒரு உணர்வில் இருந்து மற்றதில் அடைக்கலம் தேடும்போது அங்கு காயப்படுகிறாள். தீப்பிடித்த கப்பலில் இருந்து சமுத்திரத்துக்கு பாயும் அபலையாகினாள்.

கிறிஸ்ரியனை வார்த்தையால் முரண்பாடு கொள்ளும்போது அவனிடம் வார்த்தைகள் குறைவாகவும், வன்முறைகள் அதிகமாக வெளிவருவதையும் அனுபவத்தில் பார்த்திருக்கிறாள்.

வழக்கமாகவே குறைவாக பேசுவது அவனது வழக்கம். அதிலும் கோபம் வந்துவிட்டால் அவனிடம் வார்த்தைகளுக்குப் பஞ்சம் ஏற்பட்டுவிடும். அந்த பஞ்ச நிவாரணமாக அடி உதைகளை வினியோகிப்பான். இம்முறை நிச்சயமாக அடி உதைகளுக்கு தயாராக இருக்க வேண்டியதுடன் வீட்டை விட்டுப் போவதற்கும் தயாராக இருக்க வேண்டும். கடந்த முறை கன்னத்தில் அடித்ததால் கண்டிப்போன முகம் ஒரு பகுதி நிலத்தில் விழுந்து அழுகிப்போன அப்பிள் போன்றாகிவிட்டது. அந்த முகத்துடன் வேலைக்குச் சென்றதும் வேலைத்தலத்தில் தனக்கு பின்னால் மற்றவர்கள் ஊகித்து பேசியதும் மார்கஸ் விளையாட்டாக தேநீர் கோப்பையை எறிந்ததாக பொய் சொல்லியதையும் அவளால் மறக்க முடியவில்லை. நேரே கேட்டவர்களுக்கு பொய்களை கூறி சமாளிக்க முயற்சித்தாலும் அவர்கள் நம்பவில்லை என்பது அவர்கள் முகங்களில் தெளிவாக எழுதி ஒட்டியிருந்தது. அந்த நினைவுகள் மீண்டும் மனதில் தோன்றிய போது உடல் நத்தை கூட்டுக்குள் செல்வது போன்ற உணர்வு ஏற்பட்டது. இம்முறை அடிக்க முற்படும் போது முகத்தில் அடி விழாமல் கைகளாலோ குனிந்தோ பாதுகாக்க வேண்டும் என ஷரன் முடிவு செய்தாள்.

கட்டிலில் படுத்துக் கிடந்தவளை மார்கஸ் வந்து ‘மம்மி மம்மி’ என அவனது காலையாகாரத்துக்கு எழும்பிய போது தயக்கத்துடன் கட்டிலை விட்டு எழும்பி ‘உனது அப்பா எங்கே தொலைந்து விட்டார்?’ எனக் கடிந்தாள். அதே அறையோடு சேர்ந்த குளியலறையில் நின்று சவரம் செய்து கொண்டிருந்த கிறிஸ்ரியனுக்கு கேட்க வேண்டும் என்பதற்காகவே சிறிது அழுத்தமாக சொன்னாள். கிறிஸ்ரியன் அதைப் பொருட்படுத்தாமல் நின்றதால் சில நிமிடத்தின் பின்பு தயக்கத்துடன் படுத்திருந்த நைட்டியுடன் மேல் மாடியில் இருந்து கீழே உள்ள சமயலறைக்கு வந்து காலை உணவை மாக்கஸ்க்கு கொடுத்து விட்டு தனக்கு அவசரமாக ஒரு கோப்பியைக் கலக்கிக் கொண்டு மீண்டும் மேலே வந்த போது வேலைக்குச் செல்லத் தயாராக உடைகளை அணிந்து கொண்டு படுக்கை அறையில் கிறிஸ்ரியன் நின்றான்.

படுக்கையறையின் கட்டிலில் அமர்ந்தபடி கோப்பியை குடித்துக்கொண்டு ‘இன்றைக்கு இருவரும் பேசவேண்டும். வேலைக்கு போகாதே’

‘நான் எப்படியும் வேலைக்கு போய்தான் ஆகவேண்டும். நான் பார்ப்பது அத்தியாவசியமான வேலை. வேறு ஒருவரையும் உடனே

அமர்த்த முடியாது. திடீர் என வேலைக்கு போகாதே என்றால் சரிவாராது'.

அவனது முகம் எதுவித உணர்வுகளையும் காட்டவில்லை.

'இன்றைக்கு நீ வீட்டுக்கு வரும் போது நான் மாக்கஸ்சோடு அம்மா வீட்டுக்கு சென்று விடுவேன்'

'நீ போவதென்றால் எனக்கு பிரச்சினை இல்லை. பிள்ளையை கொண்டு போனால் உனக்கு உயிர் சொந்தமில்லை' என முகத்தை திருப்பியபடி சொல்லி விட்டு வெளியேறினான்.

'எவ்வளவு நாள் இப்படிப் பயமுறுத்துவாய் எனப் பார்க்கத்தான் போகிறேன் பாஸ்ரட்' என்று சொல்லியதும் வெளியே போனவன் உள்ளே வந்து அவள் கழுத்தைப் பிடித்த போது ஷரன் அவனைத் தள்ளி விட்டாள். கோப்பிக் கிண்ணம் நிலத்தில் விழுந்து சிதறி தரைவிரிப்பெங்கும் கோலமிட்டது. கட்டிலில் இருந்து விலகிச் சென்றவளை, தன்னை சுதாரித்தபடி அவளை எட்டி இடது காலால் கிறிஸ்ரியன் உதைத்தபோது அந்த உதை வயிற்றில் விழுந்தது. வயிற்றைக் கையால் பற்றிக் கொண்டு கட்டிலிலருகே இருந்த நாற்காலி ஒன்றில் அவள் சுருண்டதும் தனது பையை எடுத்துக் கொண்டு வெளியே சென்றான்.

எதிர்பார்த்ததைவிட தன்னால் தொடங்கிய வரையறுக்கப்பட்ட சண்டை அதிக அளவில் சேதம் ஏற்படாது முடிந்து விட்டது என்பதோடு முகத்தில் காயமோ கண்டலோ ஏற்றபடவில்லை என்பது ஷரனுக்கு திருப்தியை அளித்தது. இன்றைய வேலை நாளை அவனால் நிம்மதியாக செய்யமுடியாது ஆக்கியது. எனது போனஸ் புள்ளிகள் என்று சிந்தித்தபடி, சில நிமிடத்தில் கதிரையில் இருந்து எழுந்து நைட்டியை தளர்த்தி கீழே விட்டு நிர்வாணமாக நின்று நிலைக் கண்ணாடியில் வயிற்றில் உதை விழுந்த இடத்தில் ஏதாவது கண்டலாக இருக்கிறதா எனப் பார்த்தாள். வலியில்லாமல் போய் விட்டதுடன், அடையாளமும் இல்லை என்பதை உறுதி செய்தாள். கூடவே, மீண்டும் அடி வயிற்றில் மாக்கஸ் வயிற்றில் இருந்தபோது கர்ப்பத்தால் உண்டாகிய வெள்ளிக் கோடுகள் இப்பொழுது மழை காலத்தில் காட்டில் உருவாகிய சிற்றோடைகள் கோடையில் மறைவது போல் அடையாளமும் இல்லாமல் மறைந்து விட்டதையும் தனக்குள் பெருமிதம் பொங்க விரல்களால் அந்த இடங்களை தடவினாள். பின்பு சிரித்தபடி கீழே தரையில் போட்டிருந்த நைட்டியை படுக்கையில் சுழட்டி விட்டு

குளியலறைக்கு சென்று காலைக்கடனுடன் சவரில் அரை மணி நேரம் குளித்தாள். அந்த நேரம் அவள் இனி என்ன செய்வது என எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திப்பதற்கு அவகாசத்தையும் கொடுத்தது.

ஒரு வெள்ளைச் சேட்டையும் நீல டெனிம் ஜீன்சையும் அணிந்து கொண்டு தனது விருப்பமான சில உடைகளையும் மற்றும் அத்தியாவசிய தேவையான பொருட்களையும் அவசரமாக இரண்டு பெட்டிகளில் அடைத்துக் கொண்டு கீழேவந்தாள். காலை ஆகாரத்தை வாய் முகம் என பூசி வைத்திருந்த மாக்கஸ்ஸை இழுத்துக்கொண்டு குளியலறைத் தண்ணீரில் கழுவிவிட்டு காரில் புறப்பட்டவள் நேராகத் தாயின் வீடடில் மாக்கஸ்ஸையும் பெட்டிகளையும் இறக்கி விட்டு அருகே உள்ள பொலிஸ் நிலையத்துக்கு சென்றாள்.

கிறிஸ்ரியனால் அடிக்கப்பட்டதை புகாராக எழுதிக் கொடுத்த போது அங்கு உள்ள பொலிஸ் அதிகாரி உடனே அவனைக் கைது செய்ய முடிவு செய்த போது ஷரன் ‘அதற்காக நான் இதை செய்யவில்லை. எதிர்காலத்தில் ஏதாவது நடந்தால் எனக்கும் மாக்கஸ்ஸுக்கும் பாதுகாப்பு தேவை என்பதற்காக இதை எழுதிக் கொடுத்தேன். எனது கணவனாக இருக்க மறுத்தாலும் மாக்கஸ்ஸின் தகப்பனாக இருப்பான் என நினைக்கிறேன. இந்தப் புகாரை என்னைப் பொறுத்தவரை முன் எச்சரிக்கை நடவடிக்கையாகவே செய்கிறேன்’ என அழுத்தமாகக் கூறிவிட்டு திருப்தியுடன் வெளியே வந்தாள்.

# 19

இரண்டு நாட்கள் ஓய்வுக்கு பின்னால் மீண்டும் வேலைக்கு சென்று, வழக்கம் போல் சாமுடன் வேலை செய்து கொண்டிருந்தான் சுந்தரம்பிள்ளை. மாதத்தில் முதலாவது செவ்வாய்க்கிழமையாக இருந்ததால் நிர்வாக குழு உறுப்பினர் கூட்டத்திற்கு வருவார்கள். என்பதால் வைத்தியசாலையில் வேலை செய்பவர்கள் மத்தியில் வழக்கத்தை விட இறுக்கமான தன்மை தெரியும்.

வேலை செய்பவர்களின் மனங்களில் பதற்றம்,அவர்கள் நடக்கும் வேகம் வழக்கத்திலும் அதிகமாக இருப்பதில் தெரிந்து கொள்ள முடிந்தது. நாய் பகுதி மேற்பார்வையாளரான மேவிஸ் அரைக்கால்சட்டையும் நீல பெனியனும் அணிந்து கொண்டு கரகரத்த குரலில் கட்டளைகளை இட்டுக்கொண்டிருந்தார். அந்தப் பகுதியில் வேலை செய்யும் ஜோனும் மாவினும் சிரித்தபடியே தங்கள் வழக்கமான விடயங்களைச் செய்து கொண்டிருந்தார்கள். பூனைப்பகுதியில் ஹெதர் வழக்கத்திலும் பார்க்க அந்த பகுதியைச் சுத்தமாக வைத்திருந்தார். அங்குள்ள பரிசோதனை மேசையை முகம் தெரிவது போல் துடைத்து வைத்திருந்தார்கள். கிருமிநாசினி கலந்த நறுமணம் அந்த இடத்தில் நிறைந்து இருந்தது.

பூனை, நாய் பகுதியை பராமரிப்பவர்கள் வழக்கத்திலும் பார்க்க பதற்றமாக இருப்பதற்கு காரணம் அந்தப் பகுதிகள் நிர்வாக உறுப்பினர்களின் சுற்றுலா மையங்களாகும். பிணிக்கும், வைத்தியத்திற்கு கொண்டு வந்த மிருகங்கள் வழக்கம்போல் தங்களின் இருப்பை வெளிக்காட்டியபடி சீறுவதும் குரைப்பதுவுமாக இருப்பதால்தான் அது மிருக வைத்தியசாலை என்பது தெரிந்தது. அவைகளுக்கு மனிதர்கள்போல் பாவனை செய்யத் தெரியாது.

பெரும்பாலான உறுப்பினர்கள் மதியத்திற்கு வந்து வைத்தியசாலையை சுற்றி பார்த்தே களைத்து விடுவார்கள். அவர்கள் வந்ததும் வழக்கமாக தன் அறையில் அடைகாக்கும் செயலாளர்

தனது வயிற்றை தூக்கிக் கொண்டு உற்சாகமாக ஓடியாடி வேலை செய்வது போல் காட்டிக்கொண்டு திரிவது பார்ப்பதற்கு நாடகமாகத் தெரியும். அந்த செவ்வாய்கிழமை வைத்தியசாலையின் பரபரப்பு ஸ்லோமோசனில் நடைபெறும் நாடகம்போல் காணப்படும்.

வழமையாக நிர்வாகக் குழுக் கூட்டம் மணி இரண்டில் இருந்து நாலு மணிவரை நடைபெறும். அன்று மதியம் இரண்டு மணியில் இருந்து மூன்று மணிவரையும் நடந்த கூட்டத்தில் டொக்டர் காலோஸ் சேரத்தின் ராஜினாமாக் கடிதத்தை ஏற்பது பற்றிப் பேசப்பட்டது. இரண்டு கிழமையாகியும் தனது முடிவை காலோஸ் மறுபரிசீலனை செய்யாததால் நிர்வாகக்குழுவிற்கு வேறு வழி இருக்கவில்லை.

திருமதி ஒச்சாட் இந்தப் பிரச்சினைக்கு காரணம் நீர்தான் என செயற்குழுவின் காரியதரிசியான ரொன் ஜொய்ஸ்சை நோக்கி சொல்லத் தவறவில்லை. இந்த நிலையில் வெளியில் இருந்து ஒருவரைத் தலைமை வைத்தியராக நியமிப்பது சுலபமான விடயமில்லை என்பதால் குழுத்தலைவர் திரு லோட்டன் யாரை சிபார்சு செய்கிறீர் என ரோன்னிடம் கேட்டபோது ‘ரிமதி பத்தோலியஸ்தான் சீனியர். அவரை நாங்கள் கேட்போம்’ எனச் சொல்லப்பட்டது.

கூட்டத்தின் இடைவேளையில்ரொன்ஜொய்ஸ் , ரிமதி பத்தோலியஸ்சை தனது அறைக்கு அழைத்து ‘உம்மைத்தான் நான் தலைமை வைத்தியர் பதவிக்கு சிபார்சு கூறியுள்ளேன்’ என்றார்

‘நான் இன்னும் ஆறுமாதங்களில் எனது கிளினிக்கை தொடங்க போகிறேன். இந்த வேலையை என்னால் ஏற்க முடியாது. ’எனக் கூறி தனது தோளை அசைத்தான் ரிமதி.

‘நான் இன்னும் சில மாதங்களில் ஓய்வு பெறுகிறேன். அது வரையும் வைத்தியசாலையை பிரச்சினை எதுவும் இல்லாமல் நடத்த விரும்புகிறேன்’.

‘இந்த வைத்தியசாலையில் உள்ள சிக்கல்களை சீர்படுத்தி சுமுக நிலைக்கு கொண்டு வருவதற்கு ஒருவருடமாவது செல்லும்’. என சிரித்தபடி மொட்டையான தலையை தடவினான்.

அவனது வார்தைதைகளில் குத்தலாக வந்த நகைச்சுவையை சட்டை செய்யாமல் ரொன் ஜொய்ஸ் மேலும் தொடர்ந்து ‘நாங்கள்

வெளியில் இருந்து வேலையை விளம்பரப்படுத்தி அவர்கள் விண்ணப்பங்களை பரிசீலித்து நேர்முகப் பரீட்சை நடத்தி ஒருவரை உள்வாங்குவதற்கு ஆறுமாதங்கள் வேண்டும். அது வரையும் வைத்தியசாலையை பார்த்துக்கொண்டால் போதும். உமக்கு அதிக வேலையிராது என நினைக்கிறேன்'.

'அப்படி என்றால் நான் தற்காலிகமாக பதவியை எடுக்கிறேன்'

ரிமதி பத்தோலியஸ்சின் மனதுக்குள் இந்த வைத்தியசாலையில் குறைந்த பட்சமாக இங்குள்ள களைகள் நீக்குவதற்காகவாவது இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தவேண்டும் என்பது இப்பொழுது தீர்மானமாக இருந்தது.

ரொன்னோடு உள்ளே சென்ற ரிமதி பத்தோலியஸ் அங்குள்ளவர்களிடம் 'நான் இங்க வேலை செய்வதனானால் நீங்கள் சில உதவிகள் செய்யவேண்டும்'.

'என்ன உதவியை செய்ய வேண்டும் என விரும்புகிறீரகள்' என்றார் குழுவின் தலைவரான திரு லோட்டன்.

புதிய தலைமை வைத்தியருக்கு தேவையான உதவிகளை செய்வதற்கு முழு நிர்வாக குழுவும் ஆவலாக இருந்ததை அவர்களது பிரகாசமான முகங்களில் தெரிந்தது.

'நான் ஒரு வருடமாக இந்த வைத்தியசாலையில் வேலை செய்வதால் இங்கு பல விடயங்களை அவதானித்து வருகிறேன். இந்த வைத்தியசாலையை போல் அவுஸ்திரேலியாவில் ஒரு உன்னதமான நோக்கத்துடன் அமைக்கப்பட்ட வைத்தியசாலை வேறு எதுவுமில்லை. கொள்கை ரீதியிலும் அமைப்பு நீதியிலும் மிகச் சிறந்தது. நான் வேலை செய்யக் கிடைத்த இந்தச் சந்தர்ப்பம் எனது வாழ்க்கையில் ஒரு வரப்பிரசாதம். இங்கு ஒரு வருடத்தில் கிடைத்த அனுபவம் மற்ற இடங்களில் ஐந்து வருடங்கள் வேலை செய்திருந்தாலும் கிடைத்திராது. இங்கு வேலை செய்பவர்களில் ஏராளமானவர்கள் அர்ப்பணிப்போடு தங்கள் வேலையைச் செய்கிறார்கள். அவர்கள் பணத்துக்காக செய்வது போல் எனக்குத் தெரியவில்லை. ஆத்மார்த்தமாக மனநிறைவோடு தங்கள் வேலைகளை நிறைவேற்றுகிறார்கள். இந்த நிலையில் ஒரு சிலர் பழக் கூடையில் உள்ள அழுகிய அப்பிள்போல் மற்றவர்களையும் பழுதாக்கும் நிலை இருக்கிறது. அந்த அழுகிய ஒரு சில

அப்பிள்களை எடுத்து விட விரும்புகிறேன். அதற்காக குறைந்த பட்சமான உதவியை நீங்கள் செய்ய வேண்டும்'.

'நீங்கள் எவரையாவது குறித்து சொல்கிறீர்களா?'

'தற்பொழுது வேலை செய்யும் வைத்தியரில் இலங்கையில் இருந்து வந்த சிவா சுந்தரம்பிள்ளை இந்த வேலையை செய்வதற்கு சரியான ஆளில்லை. அவரது தொழில், தகுதி, வேலை செய்யும் விதம் என்பவற்றில் எனக்கு சந்தேகம் உண்டு. மதிய வேளையில் மது குடித்து விட்டு வருகிறார். அவர் மட்டும் மதுச்சாலைக்கு போனாலும் பரவாயில்லை. தன்னோடு வேலை செய்பவர்களையும் கொண்டு செல்கிறார். மெல்பனில் உள்ள கீழ்த்தரமான கிளப்புகளுக்கு செல்கிறார். அங்கே போவது அவரது தனிப்பட்ட விவகாரம். ஆனால் வேலை நேரத்தில் மது அருந்திவிட்டு வேலை செய்வது இந்த வைத்தியசாலைக்கு நல்லது அல்ல. பொது மக்களுடன் வேலை செய்யும் இந்த உன்னதமான தொழிலுக்கு ஏற்றதல்ல. இவ்வளவு காலமும் காலோஸ் அவரது நண்பனானதால் இங்கு வேலை செய்யும் போது அவரது தவறுகளை பொறுத்துக் கொண்டிருந்தார். அவரை வேலையில் இருந்து வெளியே அனுப்ப வேண்டும்.

'ஒருவரை இலகுவில் வேலையில் இருந்து நிறுத்த முடியாது. அதுவும் எச்சரிக்கையொன்றை செய்யாமல் வெளியேற்ற முடியாது' என்றார் லோட்டன்.

'பெரிய தவறுகள் செய்தால் உடனடியாக வெளியேற்ற முடியும். சட்டத்தில் இடம் உள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை ஒரு எலும்பு சத்திர சிகிச்சை செய்துள்ளார். அந்த எக்ஸ்ரேயை நீங்களே பாருங்கள். அந்த நாயின் எலும்பு குணமடையாது. நிச்சயமாக குடித்து விட்டுத்தான் இந்த ஒப்பரேசனை செய்திருப்பார் எனக் கருதுகிறேன் என தயாராக வைத்திருந்த ரோசியின் எக்ஸ்ரேயை காட்டியபோது பலருக்கு அதன் தாற்பரியம் விளங்காவிட்டாலும் இந்த மனிதர் தனது குற்றச்சாட்டுக்கு ஆதாரம் வைத்துக் கொண்டுதான் சொல்லுகிறார் என நினைத்து ஒருவரை ஒருவர் பார்த்தனர்.

'எவ்வளவு காலம் சிவா சுந்தரம்பிள்ளை இங்கு வேலை செய்கிறார்' மீண்டும் திரு லோட்டன்.

'ஒரு வருடமும் கூட ஆகவில்லை'

'இது மிருக வைத்தியர் சம்பந்தப்பட்ட விடயமாதலால் நாங்கள் தலையிட முடியாது. அவரை வேலையில் இருந்து நீக்கும் முடிவை நீர் எடுத்தால் அதில் நாம் தலையிடமாட்டோம்.

'அப்படித்தானே ரொன் 'எனக் கூறியபோது ரொன் ஜொய்ஸ் தலையசைத்தார்.

இந்த வாக்கியம் மூலம் நிர்வாகக் குழுவினர் தலைமை வைத்தியரின் முடிவினால் ஏற்படும் எதிர்கால பிரச்சினைகளில் இருந்து தாங்கள் விலகிக் கொண்டதோடு 'நீ எடுக்கும் முடிவின் விளைவுகளுக்கு நீயே பொறுப்பாளி' என மறைமுகமாக சொல்லியது அவசரத்தில் பழிவாங்கும் உணர்வில் இருந்த ரிமதி பத்தோலியஸ்ஸுக்கு புரிந்திருக்கவில்லை.

வெறுப்புடன் கோபமும் ஒன்றாகும்போது மனிதமனம் தனது எதிராளியை பழி வாங்க துடிக்கிறது. சந்தர்ப்பம் கிடைக்கும் போது அதை செய்து தனது மனதை சாந்தப்படுத்தத் துடிக்கிறது. நவீனகாலத்தில் வேலை இடங்களில் சட்டங்கள் இந்த உணர்வுகளைப் புரிந்து கொண்டு தண்டனை வழி முறைகளை வகுத்து எழுதி தனி நபர் செயல்களை மட்டுப்படுத்துகிறது. இப்படியான சட்டத்தின் தொழில்பாடு மெதுவாக இருப்பதால் பலர் காத்திருக்காது தண்டனையை தங்கள் கைகளில் எடுத்து விடுகிறார்கள்.

ரிமதி பத்தோலியஸ், சுந்தரம்பிள்ளை மேல் ஏற்பட்ட தனது கோபத்தை தீர்ப்பதற்கு இந்தப் பதவி பயன்படுகிறது என்பது அவருக்கு ஆனந்தத்தைக் கொடுக்கிறது. அதைவிட வைத்தியசாலையின் நன்மையும் இதில் கலந்து இருக்கிறது எனும் உணர்வு மனதில் அந்த பழிவாங்கலை அவனது மனசாட்சியில் நியாயப்படுத்த முடிகிறது.

தலைமை வைத்தியராக அவரது நியமனம் உறுதி செய்யப்பட்டு, அந்த கடிதத்தில் செயற்குழு செயலாளர் ரொன் ஜொய்ஸ்ஸின் ஒப்பமிட்டு ரிமதி பத்தோலியஸின் கையில் கொடுத்தார்கள்.இடது கையை இடுப்பில் வைத்துக்கொண்டு கடிதத்தைப் வலது கையால் புன்னகை கலந்த முகத்துடன் பெற்றுக் கொண்டதும், ரிமதி பத்தோலியஸ்சுக்கு ஆனந்தம் தங்கவில்லை. இவ்வளவு விரைவில் தன் எதிரிகளைப் பழி வாங்குவதற்குச் சந்தர்ப்பம் கூடி வரும் என நினைத்திருக்கவில்லை. காலோஸை தலைமைப் பதவியில் இருந்து இறக்குவதற்கு மட்டும் ரீவனுடைய உதவியைக் கேட்டிருந்தான். ஆரம்பத்தில் அது புஷ்வாணமாகியதால் விரக்தியடைந்து இந்த

வைத்தியசாலையை விட்டு விரைவாக விலகினால் நல்லது. இந்த இடம் நமக்கு பொருத்தமானது அல்ல என சோர்ந்து இருந்தவனுக்கு இப்பொழுது காலோஸ் பதவி இராஜினாமா செய்ததால் தனக்கு அந்தப் பதவி மரத்தில் கனிந்து கையில் விழுந்ததுபோல் கிடைத்திருப்பதே இரட்டை அதிஷ்டம். அதை விட சிவாவை வைத்தியசாலையை விட்டு அனுப்புவதன் மூலம் மேலும் காலோசுக்குப் பாடம் படிப்பித்து இந்த ரிமதி பத்தோலியஸ் யார் என நிருபித்து விட்டுத்தான் இந்த வைத்தியசாலையில் இருந்து விலகுவேன். சிவாவின் துரதிஷ்டமாக கடந்த வெள்ளிக்கிழமை அந்த சம்பவம் நடந்துவிட்டது. இந்த விடயத்தை எனக்கு விளக்கமாக சொன்ன ரீவனை தலைமை நேர்சாக்கி விடவேண்டியதுதான் என நினைத்துக்கொண்டு பல் வைத்திய அறையில் நாயோன்றின பல்லை சுத்தப்படுத்திய சுந்தரம்பிள்ளையிடம் சென்று "சிவா, இன்று நான் உம்மிடம் பேச வேண்டும். நான் செயலாளர் அறையில் இருப்பேன்'. என வார்த்தைகளை அதிகார தொனியில் உச்சரித்து விட்டு அந்த இடத்தை விலகிச் செல்ல முயன்றபோது 'ரிம் எதை சொல்ல வேண்டுமானாலும் இங்கே சொல்லாம்.எதுவானாலும் சாம் அறிந்து கொள்வதில் எனக்கு எதுவித பிரச்சினையும் இல்லை'. என்றான் சுந்தரம்பிள்ளை.

'இந்த வைத்தியசாலையில் உமக்கு ஒரு மாதம் மட்டும்தான் வேலை. அதற்கு பின்பு வேறு இடத்தில் வேலை தேடவேண்டி வரும்'

முகத்தை சீரியசாக வைத்துக்கொண்டு சொன்னாலும் ஏளனம் தொனிப்பதை சுந்தரம்பிள்ளையால் புரிந்து கொண்டான். அதனால் ஏற்பட்ட அதிர்ச்சியைச் சமாளித்தபடி 'யார் இந்த முடிவை எடுத்தது? என்ன காரணம்?'

'நிர்வாகக் குழுவுடன் ஆலோசித்து நான் இந்த முடிவை எடுத்தேன். என்னைத்தான் இப்பொழுது தலைமை வைத்தியராக நியமித்துள்ளார்கள். நான் சில முடிவுகளை எடுத்து இந்த வைத்தியசாலையை நல்ல நிலைக்குக் கொண்டு வர நினைத்துள்ளேன். காரணத்தை தெரியப்படுத்த அவசியம் இல்லை'

'ரிம், உமது நியமனத்துக்கு எனது வாழ்த்துகள். அதே போல் உமக்கு கிடைத்திருக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி எடுத்த முதலாவது முடிவுக்கு எனது நன்றிகள்' வெளியால் சாதாரணமாக சொன்னாலும் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டான்

அவரசப்படுவதோ ஆத்திரப்படுவதற்கோ இங்கு நேரமில்லை. விரைவில் அடுத்த விடயத்தை எப்படி செய்யவேண்டும் செய்யவேண்டும் என மனதில் நினைத்தபடி தனது வேலையை செய்து கொண்டிருந்தான்.

பக்கத்தில் நின்ற சாம் அதிர்ச்சியில சில நிமிடம் பேசவில்லை. அதன் பின் 'பாஸ்ரட் எதற்காக பழி வாங்குகிறான். உம்மோடு என்ன பிரச்சினை? நான் நினைக்கிறேன் முதுகெலும்பு முறிந்த நாயை கருணைக்கொலை செய்ததற்காக இருக்குமா? வேறு எதுவும் காரணமாக இருக்க முடியாதே?

'இல்லை சாம், இவன் அதற்காக எதுவும் செய்யவில்லை. அந்த நாயை பார்த்திருந்தால் வேறு வைத்தியரும் அதே முடிவைத்தானே எடுத்திருப்பார். அவனுக்கு நான் ஒரு பொருட்டல்ல.. காலோஸைப் பழி வாங்க என்னை கருவியாக பாவிக்கிறான்'.

'அப்படியானால் இவனை தட்டி வைக்கவேண்டும்'

'இவனது நாகரிகமான வழியில்தான் நாம் செயல்படவேண்டும். இரத்தம் காயம் என்பது அவுஸ்திரேலியாவுக்கு ஏற்றதல்ல. நான் உடனே நிர்வாக குழு உறுப்பினர்ளை சந்திக்க வேண்டும்'.

சாமோடு பேசிய, போது நிர்வாக குழுவினரோடு என்ன பேசுவது என மனதில் நினைத்தபடி செய்து கொண்டிருந்த நாயின் பல்லை சுத்தம் பண்ணி முடித்ததும் நேரடியாக நிர்வாக குழு கூட்டத்து அறைக்கு சென்ற போது பெரும்பாலான உறுப்பினர்கள் வீடு சென்று விட்டார்கள். திருமதி ஓச்சட் மற்றும் மூன்று நிர்வாக குழுவை சேர்ந்த பெண்கள் கேக் தின்றுகொண்டு தேனீரை அருந்தியபடி இருந்தனர்.

எல்லோரும் எழுபது வயதைக்கடந்தவர்கள். கூட்டம் முடிந்தாலும் அவசரமாக வீடு போய் என்ன செய்யப்போகிறார்கள்? சாவகாசமாக குடும்ப விடயங்களையும் பேரப்பிள்ளைகளின் குறும்புகளையும் தங்களது பேச்சில் கேக்கோடு சேர்த்து பரிமாறிக் கொண்டிருந்தார்கள்.

பாதி திறந்திருந்த கதவின் ஊடாக அந்த நிர்வாக கூட்டம் நடந்த அறைக்குள் பச்சை சேர்ஜரி கவுணுடன் பரபரக்க சென்று சுந்தரம்பிள்ளை 'இடையூறுக்கு மன்னிக்கவேண்டும். அவசரமாக உங்களிடம் பேசவேண்டும்' என மூச்சிரைத்தபடி கூறியதும் திருமதி ஓச்சட் கனிவான சிரிப்புடன் 'நீங்கள் யார் என எங்களுக்கு அறிமுகம்

செய்யவில்லையே? அறிமுகம் செய்த பின்பு நாம் பேசுவோமே' என்றார்.

அவர் சொன்ன விதம் சுந்தரம்பிள்ளையையும் அமைதிப்படுத்தியது. மற்ற பெண்களும் தேநீரை வைத்து விட்டு பேசுவதற்கு தயாராக முகத்தைத் திருப்பினார்கள்.

'ஒரு மணி நேரத்துக்கு முன்பாக நீங்கள் என்னைத்தான் வேலையில் இருந்து விலத்தினீர்கள். இந்த வைத்தியசாலையில் கிட்டத்தட்ட ஒருவருடங்களாக வேலை செய்து வரும் டொக்டர் சிவா சுந்தரம்பிள்ளை'.

'நாங்கள் உங்களை விலத்தவில்லை. அதற்கான அதிகாரமும் எங்களிடம் இல்லை. அதை செய்யக்கூடிய ஒரே ஒரு மனிதர் டொக்டர் ரிமதி பத்தோலியஸ் மட்டுமே.

'ரிம் உங்களால் நியமிக்கப்பட்டவர். அவர் தனக்கு கொடுத்த அதிகாரத்தை என்னை வேலையில் இருந்து நிறுத்துவதற்கு பயன் படுத்தியுள்ளார். இது ஒரு தனிபட்ட குரோதத்தால் நடந்த பழிவாங்கல். இதற்கு பல காரணங்கள் உண்டு. முக்கியமானது டொக்டர் காலோஸ்ஸுக்கு எதிராக நடந்த கையெழுத்து வேட்டையில் நான் கையெழுத்து போடாதது மட்டுமல்ல அவரோடு நண்பனாகவும் பழகினேன். அதை விட சமீபத்தில் டொக்டர் ரிமதி பத்தோலியஸ், நாயொன்றுக்கு கால்கள் இரண்டையும் ஒப்பரேசன் செய்தார். ஏற்கனவே அந்த நாய்க்கு முதுகு முறிந்திருந்தது என இரண்டு நாட்களின் பின் என்னால் கண்டுபிடிக்கப்பட்டது. இப்படியான பல விடயங்களால் ரிம்முக்கு என்னில் மனக்குரோதம் ஏற்பட்டுள்ளது. இப்படித் தனிப்பட்ட குரோதத்தால் இந்த வேலையில் இருந்து நான் நிறுத்தப்பட்டேன். செல்லப்பிராணிகளின் உரிமையாளர்களால் என்னைப் பற்றி செயலாளர் ரொன் ஜோய்சிடம் ஏதாவது புகார் கொடுக்கப்பட்டதா? சக வேலையாட்களிடம் தவறாக நடந்திருக்கிறேனா? எனது வேலையில் தவறு என யாராவது எனக்கு எச்சரிக்கை செய்தார்களா? நானும் ரிம்மும் ஒரே வயதுக்காரர். ஒரேகாலத்தில் பல்கலைக்கழக பட்டம் பெற்றவர்கள். எனது வேலையில் தவறு காண்பதற்கு எங்களிலும் பார்க்க சீனியரான ஒருவரை நீங்கள் நியமித்து எனது வேலையில் தவறு கண்டால் நான் வேலையை விட்டு உடனே இராஜினாமா செய்யத் தயார்'

சுந்தரம்பிள்ளை சொல்ல நினைத்த விடயங்களை இடைவெளி இல்லாமல் சொன்னபோது எந்தக் குறுக்கீடும் இருக்கவில்லை.

அவதானமாக நால்வரும் கேட்டனர். ஆறுதலாகவும் அமைதியாகவும் திருமதி ஒச்சட்டிடம் இருந்து பதில் வந்தது.

'உங்களது வார்த்தையில் உள்ள விடயங்கள் எங்களுக்கு புரிகிறது. டொக்டர் ரிமதி பத்தோலியஸ் தனது முடிவை எம்மில் திணித்து விட்டார். எதற்கும் கவலைப்படவேண்டாம். நாங்கள் முடிந்தவரை இதை மீண்டும் பரிசீலிக்கிறோம்'. என திருமதி ஒச்சாட்டால் உறுதியளிக்கப்பட்டது

சுந்தரம்பிள்ளைக்கு அந்த வார்த்தைகள் ஆறுதலாக இருந்தாலும் முற்றான திருப்தியை அளிக்கவில்லை. இந்தச் சதியில் ரொன் ஜொய்ஸுக்கும் பங்கு இருக்க வேண்டுமென்ற சந்தேகம் தட்டியதும் அவரை நேரடியாக சந்திக்க விரும்பிய சுந்தரம்பிள்ளை ரோன் ஜொய்சிடம் சென்றபோது அவரது அறைக்கதவு பாதி திறந்திருந்தது. உள்ளே கதவைத் தட்டாமல் நுழைந்தபோது நிர்வாக குழு கூட்டத்தில் முடிவுகளை எழுதியதால் ஏற்பட்டகளைப்பில் தனது கதிரையில் கண்களை மூடிக்கொண்டு பின்னோக்கி சாய்ந்தபடி கோழித் தூக்கத்தில் இருந்த மனிதர் அரக்கப் பரக்க விழித்தார். கையில் இருந்த பந்தை எதிர்பார்க்காமல் ஒருவரின் முகத்தில் விட்டு எறிவது போல் 'என்னை வேலையில் இருந்து தூக்கியதாக ரிமதி பத்தோலியஸ் மூலம் அறிந்தேன். நான் வேலையில் சேர்ந்தபோது எனக்கு நியமனம் உங்களது கையெழுத்துடன் கடிதமாக எனக்கு கிடைத்தது. அதே போல் வேலையை விட்டு தூக்கும் கடிதத்தை நீங்கள்தான் தரவேண்டும். நான் எனது வக்கீல் மூலம் எதுவித முன்னெச்சரிக்கையும் தராமல் வேலையில் இருந்து விலக்கியதாக உங்கள் மீதும் வைத்தியசாலை மீதும் வழக்கு தொடரவிருக்கிறேன்'.

தூக்கத்தில் எழுப்பி, கன்னத்தில் அடித்தது போன்று இருந்த வார்த்தைகளால் மனிதர் கலங்கி நெஞ்சை பிடித்துக்கொண்டு 'எனக்குக் கொஞ்சம் அவகாசம் தாருங்கள். ரிம்மிடம் பேசவேண்டும்' என சொல்லியபடி எழுந்தார்.

'உங்களுக்கு ஒரு நாள் அவகாசம் தருகிறேன். எனக்கு ரிம் எந்த அவகாசமும் தரவில்லை. எனக்கு கடிதம் நாளை தர வேண்டும். இல்லாவிடில் வைத்தியசாலையின் பெயரோடு உங்களதும் ரிம்மினதும் பெயரைப் போட்டு வழக்குத் தொடர்வேன்'. என கதவை அடித்து மூடிவிட்டு வைத்தியசாலையை விட்டு வெளியேறினான்.

*சிறிது தூரத்தில் நிறுத்தப்பட்டிருந்த காரை நோக்கி நடந்த போது மேற்கு நோக்கி பார்த்தபோது உச்சிவானம் மாலை வெயிலில் அதிக மேகங்களற்று நிர்மலமாக இருந்தது.தொடுவானப் பகுதி மட்டும் கருமேகங்கள் நிறைந்து அவற்றின் ஓரங்கள் சென்னிறமாக காட்சியளித்தன. கார் நிறுத்தும் இடத்தில் இரண்டு பெரிய மாடிக் கட்டிடங்களுக்கு இடையே நின்ற யுகலிக்கப்ட்டஸ் மரக் கிளைகள் சூரியனை மறைத்துக் கொண்டு அந்த இடத்திற்கு நிழல் கொடுத்து நின்றன. மற்றைய இடங்கள் மாலை வெயிலில் குளிக்கும் போது எப்படி இந்த இடத்தை யுகலிக்கப்ட்டஸ் தனது ஆட்சியால் நிழல் கொடுத்திருக்கிறது?*

*அந்த மரம் உயர்ந்த கட்டிடங்களின் இடைவெளியில் வளைந்து இருக்கிறது. இந்தக் காட்சியை எப்படி இந்த ஒரு வருடமாக தவறவிட்டேன் என நினைத்தடி காருக்குள் அமர்ந்தான்.*

*ரிம்மினால் ஏற்பட்ட கொதிப்பு மனதில் அடங்க இந்த சிந்தனை உதவியது.*

□ □ □

*இந்த அவசரமான வேலை நீக்கல் விடயம் பற்றிக் கேள்விப்பட்டதும் பலரும் நிர்வாகத்தில் அதிருப்தி அடைந்தார்கள். அவர்களது கருத்து சிவா ஓபரேசனில் தவறாக செய்ததா இல்லையா என்பது அல்ல. ஒருவரை வேலையில் இருந்து நிறுத்துவதற்கு முன்பாக எச்சரிக்கை கொடுக்கப்படவேண்டும். அது இல்லாமல் திடீரென வேலை நிறுத்துவது சரியானது அல்ல. அவுஸ்திரேலிய சட்டத்திற்கு புறம்பானது என்ற ரீதியில் இருந்தது. இதற்கு அப்பால் இப்படியான விடயம் யாருக்கும் நடக்கலாம் என்ற பயத்தையும் உருவாக்கியதால் சுந்தரம்பிள்ளையின்பால் அனுதாப அலை உருவாகியது. அதை வார்த்தைகளால் தெரிவித்தனர் பலர். போலின் கண்ணீரை உகுத்தபடி தனது ஆறுதலைத் தெரிவித்தாள். சாம் ஆத்திரத்தில் குமுறினான். அன்ரூ தனக்கே உரிய நக்கலினூடாக தனது மலத்தில் ரிம் காலை வைத்ததாக சொல்லிவிட்டுச் சென்றான். இப்படியான அனுதாபங்கள் சிறிது ஆறுதலை அளித்த போதும் அவமானத்தைக் கொடுத்தது.*

*ரிம் கொடுத்த ஒரு மாதம் சுந்தரம்பிள்ளைக்கு சில உண்மைகளைப் புரியவைத்தது. பலரது நிலைப்பாடுகள் நட்புக்கள் தெரியவந்தது. ஒரு மாதத்தில் இந்த இடத்தை விட்டு போகவேண்டும் என்பது வேதனையை அளித்தது. சிலர் சுந்தரம்பிள்ளைக்கு ஆதரவுக்*

கடிதம் எழுதி நிர்வாக குழுவிடம் கொடுத்தார்கள். வைத்தியர்கள் மத்தியில் இந்த விடயத்தைப் பேசுவதற்கு காலோஸ் சேரத்தால் நாள் குறிக்கப்பட்டது. அத்துடன் அந்தக் கூட்டத்திற்கு ரிமதி பத்தோலியஸ் சமூகமளிக்கும்படி கேட்கப்பட்டது. காலோஸ் மேல் அதிருப்தியான வைத்தியர்கள் வெளிப்படையாக இந்த விடயம் தங்களுக்கு அப்பாற்பட்டது மற்றும் தேவையற்றது என்றதுடன் கூட்டுச் சேராத கொள்கையை எடுத்தனர். வைத்தியசாலை இரண்டாகப் பிரிந்து இயங்கியது.

பல நம்பிக்கையூட்டும் அறிகுறிகள் வைத்தியசாலையில் தென்பட்டாலும் சுந்தரம்பிள்ளை அமைதியற்ற நிலையில் இருந்தான்.

□ □ □

**வே**லை நீக்கம் விடயமாக மெல்பனில் உள்ள ஒரு வழக்கறிஞரைப் பார்த்துச் சுந்தரம்பிள்ளை பேசிய போது அவர் ‘இந்த வேலை நீக்கம் தவறானது. திடீரென நிர்வாகத்தால் முடிவு எடுக்கப்பட்டு பழிவாங்கப்பட்டிருக்கிறது. இதில் இனவாதமும் கலந்திருக்கிறது என்பது நீர் சொல்லும் கதைகளில் இருந்து தெரிகிறது. சகல இன, மத, பால் வேறுபாடுகளுக்கு அப்பால் சகலரையும் சமமாக வேலைத்தலத்தில் நடத்தவேண்டும் என்ற சட்டத்தைக்கூட மீறி இருக்கிறார்கள். இப்படியான சட்டமீறலை அனுமதிக்க முடியாது. உமது நிலையில் இருந்தால் நான் வேலைக்கு செல்லாமல் இந்த வைத்தியசாலை மீது தவறாக வேலை நீக்கியதற்காக தண்டனைப் பணத்தை கேட்டு வழக்கைப் போட்டு விட்டு அந்தப் பணத்தில் வாழ்க்கையை சந்தோசமாக அனுபவிப்பேன். இந்த வழக்கை பணம் இல்லாமல் எடுத்து நடத்த நான் தயார். நீர் வழக்கு வென்ற பின்பு அதைக் கொடுத்தால் போதும்’ என்றார்.

வழக்கறிஞரினது வார்த்தைகள் உறுதியாக வெளிவந்த போது முகத்தில் சீரியஸ் தெரிந்தது. மனதில் அப்படிச் செய்து பார்ப்போம் என்ற நினைவு சில கண நேரத்தில் வந்து போனாலும் அதைத் தொடர்ந்து இலங்கை நீதிமன்றத்தில் காணிவிடயமாக பத்துவருடங்கள் சுந்தரம்பிள்ளையின் தந்தையார் இழுபட்டது, கடைசியில் தோற்றது நினைவுக்கு எச்சரிக்கையாக வந்தது.

‘இந்த விடயத்தை நான் ஆற அமரச் சிந்திக்க வேண்டும். போர்க் காரணங்களால் இலங்கையில் தொலைத்த எனது வாழ்க்கையை இந்த

நாட்டுக்கு வந்து தொடங்குவதற்காக இந்த வேலையில் சேர்ந்தேன். என்னை வேலையில் இருந்து நீக்கிய ரிமதி பத்தோலியஸ் மீதுதான் கோபம் உள்ளது. ஆனால் வழக்கை வைத்தியசாலையின் மேல்தான் நான் தொடரமுடியும். வைத்தியசாலை மீது எதுவித காழ்ப்புணர்வும் எனக்கு இல்லாததோடு மதிப்பும் மரியாதையும் உள்ளதால் வழக்கு தொடர தற்போது விரும்பவில்லை. மேலும் இது சம்பந்தமாக யோசிப்பதற்கு எனக்கு காலம் தேவை' எனக் கூறினார்.

'உமது சிந்தனையில் நியாயம் உள்ளது. இந்த நிலையில் வேலையை திரும்ப பெற நீர் முயலுவதானால் நான் தரும் கடிதத்தை நிர்வாக குழுவிடம் கொடுத்து பதிலைத் தரும்படி கேளும். இதன்மூலம் வைத்தியசாலை நிருவாகம் உமது விடயத்தை சீரியசாக எடுத்துக்கொள்ள சாத்தியக்கூறுகள் உள்ளது'. எனக் கூறி தந்த கடிதத்தில் வேலை நீக்கம் வாயாலே செய்தது. சட்ட ரீதியாக ஏற்க முடியாது. அதை எழுத்தில் தரும்படி எழுதப்பட்டிருந்தது.

அடுத்த நாள் காலையில் வேலை தொடங்குவதற்கு முன்பாக வழக்கறிஞரின் கடிதத்தை ரொன் ஜொய்ஸ்சிடம் கொடுப்பதற்கு அவரது அறைக்கு சென்ற போது கதவு மூடி இருந்தது. கதவைத் தட்டி செல்லும் மரியாதையைத் தவிர்த்து மூடியிருந்த கதவைத் தள்ளியபோது கோப்பைப் பார்த்துக் கொண்டிருந்த மனிதர் நிமிர்ந்து நாற்காலியில் உட்கார்ந்து சிறிது கோபத்துடன் பார்த்தார். அதை அலட்சியப்படுத்திவிட்டு கடிதத்தை அவர் கையில் கொடுக்காமல் சிறிது சத்தத்துடன் அவரது மேசையில் வைத்தபோது 'இது என்ன. என்ன' என்று பதற்றத்துடன் நாற்காலியை விட்டு அவர் எழுந்தபோது அவரது தொப்பை சிறிது தாமதமாக அசைந்தது. 'படித்துப் பாரும்' என அவமரிதையான தொனியில் சொல்லி விட்டு வெளியே வந்தபோது ஏற்கனவே வேலையில் இருந்து நீக்கப்பட்டு விட்டாகியது. இனி இவருக்கு என்ன மரியாதை என்ற எண்ணம் சுந்தரம்பிள்ளைக்கு மனதில் இருந்தது. வழமையான நாகரீகமாக நடக்கும் தன்மைக்கு மாறாக நடந்தது அந்தரமாக இருந்தது. ஆனாலும் ரிமதிக்கு இந்த வேலையைக் கொடுத்த முழுப் பொறுப்பும் ரொன் ஜொய்ஸ்ஸுக்குதான் சேருமென்ற தகவல் ஏற்கனவே நிர்வாக குழு அங்கத்தினர் மூலம் காலோஸ்ஸுக்குக் கசிந்து விட்டது. ஏற்கனவே ரொன் மேல் இருந்த வெறுப்பு பலமடங்காக பெருகி இருந்ததால் தனது நடத்தை நியாயமானது என்ற எண்ணமும் ஏற்பட்டது.

காலை ரவுண்டைச் செய்வதற்கு நாய்களின் கூட்டுக்குச் சுந்தரம்பிள்ளை சென்றபோது அந்த அவசர சிகிச்சைப் பிரிவில் திறந்திருந்த கூட்டினுள் ஒரு பெரிய பெண் ரொட்வீலர் நாய் இறந்தது போல அசைவுகள் அற்று கூட்டுக்குள் கிடந்தது. அந்த இடத்தில் நாய்களின் பகுதி மேற்பார்வையாளரான மேவிஸ் தனது வெள்ளை ரீ சேட்டும் காக்கி அரை கால்சட்டையுடன் உரத்த குரலில் 'இரவு ஒபரேசன் செய்த நாய் இறக்கும் தறுவாயில் இருக்கிறது. இன்னும் ஒரு வைத்தியர்களும் அதைக் கவனிக்க வில்லை' என தனது கட்டையான குரலில் மற்றவர்களுக்கு சொல்லிக் கொண்டு நின்றார். சுந்தரம்பிள்ளைக்கு மேவிசின் மேல் மதிப்பு உண்டு. கட்டையான குரலில் மற்றவர்களை அதட்டி வேலை வாங்கினாலும் எவரிலும் குறை சொல்வதோ பாரபட்சம் பார்ப்பதோ கிடையாது. வேலை முடிந்ததும் அந்த கட்டையான குரல் கூட அதிரசம் போல் இனிமையாகிவிடும்.

அருகில் சென்று பார்த்த போது நாலு கால்களையும் நீட்டியபடி கிடந்த அந்த நாற்பது கிலோ ரொட்வீலரின் சுவாசம், மெதுவாக நெஞ்சாம் கூடு அசைந்து கடைசி நிமிடத்திற்காக காத்திருப்பது போல் இருந்தது. உடலைத் தொட்ட போது பனிக்கட்டியை தொட்டது போல் விரல் நுனிகள் விறைத்தன. உதட்டைப் பிரித்து முரசைப் பார்த்த போது இரத்த ஓட்டம் அற்று வெளுத்து இருந்ததும் நாக்கு நீலம்பாரித்து தெரிந்தது. வாழ்வின் கடைசி நிமிடங்களில் உயிர் உடலில் இருந்து விடைபெற கையை அசைத்துக் கொண்டு நிற்பதைப் புரிந்து கொண்டதும், அந்த நாயை தூக்கிக் கொண்டு சேலையினையும் ஒட்சிசனையும் கொடுத்த அதை உயிர் பிழைக்க வைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் அந்த நாயை சாமுடன் ரொலியில் கொண்டு வந்து ஒபரேசன் தியேட்டரில் அரைமணி நேரம் ஒட்சிசன் கொடுத்த பின்புதான் அதற்கு சிறிது இதயம் பலமாக அடித்தது. இரத்த ஓட்டம் சீராகியது. சுவாசம் ஒழுங்காகியது. அப்படி இருந்தும் முன்காலில் உள்ள சுருங்கிய நாளத்திற்குள் கதீற்றரறை ஏற்ற முடியவில்லை. அதனால் தோலை சிறிது வெட்டி இரத்த நாளத்தை புதையல் தேடுவது போல் தேட வேண்டியதாக இருந்தது. அப்பொழுது சாம் ரிம்மை தூசணத்தால் ஏசியபடி 'இப்படி பொறுப்பில்லாமல் செய்திருக்கிறான். மற்றவர்களது தவறுகளைத் தேடியலைபவன் தனது விடயங்களை சரியாகச் செய்யவேண்டும்'. என்றான். சுந்தரம்பிள்ளை எதுவும் பேசவில்லை. மேலும் பேசும் மனநிலையில் இல்லை. ரொட்வீலர் நாயின் உயிரை பிடித்து வடக்கு நோக்கிய அதன் பயணத்தை தடுத்து நிறுத்த வேண்டும் என்பதே

இப்பொழுது ஒரே நோக்கம். ஏதாவது பிழை நடந்தால் முதலில் வைத்தியசாலைதான் பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பது அதன் பின்புதான் மற்றவை.

இரத்த நாளத்திற்குள் கதீற்றறை செலுத்தி சேலையின் ஓடத் தொடங்கியதும் நிலமை சீரடைந்தது மட்டுமல்ல மெதுவாகக் கண் இமைகளை அசைத்தது. சுந்தரம்பிள்ளை, இனிப் பயமில்லை என ஆறுதலடைந்து சாமிடம் இருந்த அதனது மருத்துவ ரெக்கோட்டை பார்த்த போது சீழ் பிடித்த கருப்பையை முதல் நாள் இரவு எமேஜன்சியாக ரிமதி பாத்ததோலியஸ் வெட்டி அகற்றி இருக்கிறான். ஆனால் அந்த நாய்க்கு சேலையினோ அல்லது வலியைப் போக்கும் மருந்தோ கொடுக்கவில்லை. நடு இரவில் வந்ததால் அவசரத்தில் இந்த ஒபரேசனைச் செய்து விட்டு வீடு சென்றிருக்கிறான். வைத்திய சாலையில் சில வியாதிகளை எப்படி கையாள வேண்டும் என்று அமைப்பு விதிப்படி நடக்கவில்லை.

மிருக வைத்தியத்துறை ஆரம்பத்தில் இராணுவத்தின் தேவைகள் சார்ந்ததாக இருந்தது. சண்டைக்குப் பாவிக்கப்படும் குதிரைகளுக்கு ஏற்படும் காயங்களுக்கு வைத்தியம் செய்வதற்குத் தொடங்கியது. ஆனாலும் இதற்காக தனிப்பட்ட பயிற்சி துறையாக ஆரம்பிக்கபடவில்லை. தலைமுறை தலைமுறையான அனுபவம் கொண்டவர்கள் மருத்துவத்தில் ஈடுபட்டார்கள். ஐரோப்பாவில் ஜிப்சிகள் மத்தியில் குதிரை மருத்துவர்கள் பலர் இருந்ததாக சரித்திரம் சொல்லுகிறது. ஐரோப்பிய பெருநிலப்பிரதேசத்தில் நாடோடிகளாக பல நூற்றண்டுகள் குதிரைகள் இழுக்கும் கரவன்களில் இவர்கள் செல்வதால் குதிரைகளுடன் அன்னியோன்னியமாக வாழ்ந்தார்கள். இவர்களில் பலர் குதிரைகளை பழக்குபவர்களாகவும் வைத்தியம் செய்பவர்களாகவும் இருந்தனர்.

பதினேழாம் நூற்றாண்டில் ரிண்டபெஸ்ட் என்ற வைரஸ் நோய் மனிதர்களுக்கு பிளேக் நோய்க்கு ஒப்பாக பல மில்லியன்கள் மாடுகள் ஐரோப்பாவில் அழிந்தது. பிரான்சில் இந்த வியாதி கொள்ளை நோயாக கால்நடைகளை அழித்தது. பால், இறைச்சிக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டால் பஞ்சம், பட்டினி வந்தபோது போப்பாண்டவரின் தனிப்பட்ட வைத்தியரின் ஆலோசனைப்படி கால்நடைகளின் நடமாட்டத்தை தடை செய்தும் நோயுற்ற மிருகங்களை கொலை செய்தும் இந்த கொள்ளை நோயின் பரம்பல் வேகம் குறைக்கப்பட்டது. ஆனாலும் இந்த நோயை முற்றாக ஒழிக்க முடியவில்லை. இந்தக் காரணத்தால் புதிதாக

இந்த நோயை ஆராய்வதற்கும் புதிய விஞ்ஞானத்துறையாக அங்கீகரிக்கப்பட்டு மிருக வைத்தியத்துறை லூயி மன்னனால் பிரான்சில் அங்கீகரிக்கப்பட்டது. அதன் பின் பலநாடுகள் பிரான்சைப் பின்பற்றின.

இரண்டு நூற்றாண்டுகளாக பூரணமான விஞ்ஞான துறையாக வளர்ந்த போது மனிதருக்கு உணவு அளிக்கும் மாடு, பன்றி, செம்மறி முதலான மிருகங்களையும் இராணுவ உபயோகத்திற்கான குதிரைகளின் நோய்கள் என்பவைதான் முதலாம் உலகப் போர்வரையும் முக்கியப்படுத்தப்பட்டன. குதிரைகளின் முக்கியத்துவம் மோட்டர் வாகனங்களாலும் டிரக்ரர்களின் வருகையின் மூலமும் அருகிவிட்டது. இரண்டாம் உலகப் போருக்கு பின் மேற்கு நாடுகளில் மனிதர்களின் செல்லப்பிராணிகளான நாய் பூனை என்பனவற்றின் வைத்தியம் முக்கியத்துவப்பட்டது. குதிரைகள் ஓட்டப்பந்தயத்தில் மட்டும் பங்குபற்றுவையாக மாறிவிட்டன.

தற்பொழுது மிருகவைத்தியர்களில் எழுபது வீதமானவர்கள் அவுஸ்திரேலியாவில் செல்லப்பிராணிகளின் வியாதியைத் தீர்ப்பதில் ஈடுபடுகிறார்கள். அவற்றிற்கான நோய்களை கண்டறியும் ஆராய்ச்சிகளில் மிருகவைத்திய பல்கலைக்கழகங்கள் ஈடுபடுகின்றன. ஆரம்ப காலத்தில் மனிதர்களின் மருந்துகளை மிருகங்களின் உடலில் செலுத்தி ஆராய்ந்தார்கள். அதனால் கண்டுபிடிக்கப்பட்ட ஆராய்ச்சி முடிவுகள்தான் மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் பயன்பட்டன. இப்பொழுது பெரும்பாலான ஆராய்வுகள், அந்தந்த மிருகங்களுக்காக பிரத்தியேகமாக செய்யப்படுகின்றன. தற்போது மிருகங்களின் நலன் பற்றிய விடயங்களில் மக்கள் விழிப்புணர்வு அடைவதால் மிருகங்களை விஞ்ஞான ஆராய்ச்சிக்குப் பயன்படுத்துவது, குரூரமான விளையாட்டுகளில் ஈடுபடுத்துவது போன்ற நடவடிக்கைகள் பல புதிய சட்டங்களால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

சில நோய்களை இப்படித்தான் அணுக வேண்டும் என விதிகள் உள்ளது. மிருகங்களின் வலியை முடிந்த அளவு சத்திர சிகிச்சையின் பின் குறைக்கவேண்டும். வலியைக் குறைத்தல் மனிதாபிமானமானது மட்டுமல்ல நோய் விரைவில் தீர வழி வகுக்கிறது. மனிதரை விட மிருகங்கள் வலியில் துன்பப்படும்போது பொறுத்துக் கொள்ளாமல் சத்திர சிகிச்சை செய்த இடத்தை கடித்துக் குதறிவிடும். வலி ஏற்படும்போது உடலில் சில இரசாயனப்பொருட்கள் சுரந்து இரத்தத்தை மற்றப் பகுதியில் இருந்து மூளைக்கு அனுப்பி

மூளையை பாதுகாக்கும். இது ஒரு பாதுகாப்பு நடவடிக்கை. இதனாலே காயம்பட்ட பகுதிகளில் இரத்த ஓட்டம் குறைந்து வெளிறிய தோற்றத்தை முரசு, நாக்கில் பார்க்கலாம். இதற்காக இரத்த ஓட்டத்தை கூட்ட சேலையின் என்ற இரத்தத்திற்கு சமமான உப்பு கலந்த திரவம் இரத்தக் குழாய்களில் செலுத்தப்படும்.

இந்த ரொட்வீலர் நாய்க்கு ரிமதி பாத்ததோலியஸ் ஒபரசனுக்கு முன்பாகவோ பின்பாகவோ வலி தீர்க்க மருந்து கொடுக்கவில்லை. அத்தோடு இரத்த ஓட்டத்தை அதிகப்படுத்த சேலையினும் ஏற்றாமல் ஒபரேசனை செய்திருக்கிறார். இந்த நோயைத் தீர்க்க எப்படி அணுகுவது என வைத்தியத்தில் கொடுக்கப்பட்ட விதிகளை மீறியது சுந்தரம்பிள்ளைக்கு ஆச்சரியமானது. அதற்கு ஒரே விளக்கம் களைப்பால் வரும் கவனக்குறைவு. இரவுக்கு பின்னால் பல மணி நேரம் வேலை செய்யும் போது நடந்திருகிறது. இந்த ரொட்வீலர் நாய் இறந்திருந்தால் இந்த காரணங்களை நாயின் உரிமையாளரால் ஏற்றுக் கொள்ளமுடியுமா?

# 20

ஒன்று விட்ட ஒரு வெள்ளிக்கிழமைகளில் காலோஸ், சுந்தரம்பிள்ளை இருவரும் அடுத்தடுத்த தியேட்டர்களில் ஒபரேசன் செய்வார்கள். அன்று வெள்ளிக்கிழமை காலோஸ் ஒரு ஒபரேசன் தியேட்டரிலும் மற்றைய தியேட்டரில் சுந்தரம்பிள்ளை சாமுடனும் ஒபரேசன்களை செய்து கொண்டிருந்தார். வெள்ளிக்கிழமைகளில் வேலை செய்யும் நொறேல் விடுப்பு எடுத்ததால் மருத்துவ ஆலோசனை அறையில் ரிமதி பாத்ததோலியஸ்ஸோடு வேலை செய்து வந்த ஜெனற், காலோஸ்ஸுக்கு உதவி செய்து கொண்டிருந்தாள். காலோஸ் அவளுடன் வழக்கம் போல் ஆபாச ஜோக்குகளை சொல்லியபடி ஒபரேசனை செய்து கொண்டிருந்தார். சாம் அடிக்கடி காலோஸ்ஸின் தியேட்டருக்கு சென்று அந்த ஜோக்குகளைக் காவிக் கொண்டு சுந்தரம்பிள்ளைக்கு சொல்லிக்கொண்டிருந்தான். ஆனால் சுந்தரம்பிள்ளை அவற்றை இரசிக்கக் கூடிய மனநிலையில் இல்லை. இன்னும் இரு கிழமைதான் இந்த வைத்தியசாலையில் வேலை செய்ய முடியும். இந்த வைத்தியசாலை, மற்றும் சக வேலை செய்யபவர்கள் என்று மனதில் எல்லாம் பிடித்திருந்தது. பல இடங்களில் வேலை பிடித்திருந்தால், உடன் வேலை செய்பவர்களைப் பிடிக்காது. இரண்டும் பிடித்தாலும் மேலதிகாரிகளைப் பிடிக்காது. காலோஸ் போன்ற மேலதிகாரி நண்பனாக பழகுவதால் வேலையின் அழுத்தம் தெரியாமல் இருந்தது. வேலையும் கைகளுக்கு படிந்து வருகின்ற நேரத்தில் இப்படி நிகழ்வு ஏன் நடந்தது? இந்தோனேசியா அருகே சில கிலோ மீட்டர் கடல் ஆழத்தில் ஏற்பட்ட சுனாமி இலங்கையின் கிழக்குக்கரையில் இருந்த கட்டிடங்களை அடித்து நொருக்குவது போல் காலோஸ் மீது தொடங்கிய பிரச்சினை தன்னில் முடிந்திருப்பது கவலையுடன் விசித்திரமாக இருந்தது. சங்கிலித் தொடர்ச்சியாக சம்பவங்கள் நடந்துள்ளது. இதன் விளைவாக வேலை இழக்க நேர்ந்த விதத்தை மனதில் அசைபோடும் போது விடைகள் அற்ற விடுகதையாக இருந்தது.

காலோஸ் அன்று ஏர்போட்டில் வந்து இறங்கிய முன்னாள் காதலி மரியாவை சந்திக்கும் அவசரத்தில் நோயுற்று அனுமதித்த பூனையைப் பற்றி பதிவு செய்ய மறந்ததும், அந்தப் பூனையை பார்த்த ரிமதி பாத்தோலியஸ் அடுத்த நாள் அதன் உரிமையாளரை காலோஸ்சுக்கு எதிராக கடுப்பேற்றி தூண்டி விட்டது, கோபத்தில் அந்த மனிதர் காலோஸின் சட்டையை பிடித்து இழுக்க முயன்ற போது, அவரை புவ்தா எனக் கூறியபடி காலோஸ் அடிக்க சென்றதும், அந்த சம்பவத்தை விசாரித்த நிரவாக குழுவிடம் காலோஸ் தனது தலைமை வைத்தியர் பதவியை இராஜினாமா செய்தது போன்ற சம்பவங்கள் சங்கிலித்தொடராக எனது சக்திக்கு அப்பாற்பட்டு நடந்த விடயங்கள். இவை எல்லாவற்றிற்கும் கிரீடம் வைத்தது போல் ரோசியின் கால் எலும்பை ஒபரேசன் செய்த போது சிலிண்டரில் காஸ் இல்லாமல் போய் அடுத்த சிலிண்டரை ஒருவராலும் திறக்க முடியாது போனது என்பது கூட காத்திராப் பிரகாரமாக நடந்தது.

அடுக்கடுக்காக பல சம்பவங்கள் ஒன்றின் பின் ஒன்றாக நடந்திருக்கிறது. இவை தற்செயலானவையா? அல்லது இதன் பின் ஒரு சதி வேலை நடந்ததா என்பதற்கு விடை கிடைக்காமல் மனம் குழம்பி இருந்தாலும் சுந்தரம்பிள்ளையின் கைகள் தொடர்ச்சியாக ஒபரேசனைச் செய்து கொண்டிருந்தது.

சராசரியான மனிதர்களின் மனதோடு இருந்தால் எல்லாம் கடவுள் செயல் என கடவுள் மேல் பாரத்தை இறக்கி வைத்திருக்கலாம். மிருகங்களில் நோய்க்கு காரணம் தேடி குணப்படுத்த விஞ்ஞான ரீதியாக சிந்திக்க பயிற்றப்பட்ட சுந்தரம்பிள்ளையால் கடவுளை சுமைதங்கியாக்கி விட்டுத் தப்பித்துக்கொள்ள முடியவில்லை. அதேநேரத்தில் மனதில் ஏற்பட்ட அல்லாட்டத்திற்கு பிடித்துக் கொள்ள எந்த பற்றுக்கோடும் கிடைக்கவில்லை. கடவுள் நம்பிக்கை இருந்தால் மன ஆறுதலாக இருக்கலாம்என கூட நினைக்கத்தோன்றியது. சரி அப்படி கடவுளைத்தேடி பார்த்தால் எந்தக் கடவுளை எங்கே தேடுவது? பழைய வேதாகமத்தில் யுதமக்களுக்கு துன்பம் வரும்போது தெய்வம் அடிக்கடி வந்து பேசுவாரே? காலோஸ்போல் கிறீஸ்தவனோ இல்லை சாமைப்போல் இஸ்லாமியனாக இருந்தால் ஒரே தெய்வம் - கொஞ்சம் இலகுவாக இருக்கும். இந்துவாக, ஊரில் பிறந்ததால் பல தெய்வம் - பேசுகிற விடயம் சிக்கலாகிவிடும். மேலும் இவ்வளவு காலம் ஏன் தம்மை கணக்கெடுக்கவில்லை என தெய்வம் கேட்டால்? எதிரில் நின்ற

சாமுக்கு தெரியாமல் சிரித்தபடி அந்த சிந்தனையை புறந்தள்ளினான் சுந்தரம்பிள்ளை.

தற்பொழுது சிறிய விடயமாக இருந்த போதிலும் மனதிற்கு கொஞ்சம் ஆறுதல் அளித்த விடயம் வேலையில் இருந்து நீக்கும் கடிதம் இன்னமும் வரவில்லை என்பதே. சட்டபூர்வமாக உன்னை அவர்கள் வேலை நீக்கம் செய்யவில்லை என சட்டத்தரணி சொல்லி இருந்தார். அது ஒரு விதத்தில் காயமான மனதிற்கு இதமாக, காயம் வலிக்காமல் இருந்த போதும் காயம் ஆறுவதற்கான மாற்றம் ஏதும் நடப்பதாக சுந்தரம்பிள்ளைக்குத் தெரியில்லை. காலோஸ்ஸைப் பொறுத்தவரையில் ரிம் வேலையில் இருந்து நீக்கிய விடயம் தவறு. இந்த வேலை நீக்கம் நடக்காது என அடித்துச் சொல்லியபடி இருந்தான். பல நிர்வாக குழு உறுப்பினரிடம் சிவாவை இந்த வேலையில் நிறுத்தியது சட்டத்துக்கு புறம்பானது எனச் சொல்லி இருந்ததுடன் தனக்கு எதிரான பழிவாங்கலாக இது நடந்திருக்கிறது என தொலைபேசியில் பேசியிருந்தது சுந்தரம்பிள்ளைக்குத் தெரியும். சில வைத்தியர்களுடன் சாம் போன்றவர்கள் நிர்வாக குழுவிடம் தங்கள் அதிருப்தியை கடித மூலம் தெரிவித்திருந்தார்கள்.

பலரது தார்மீகமான ஆதரவு மனதுக்கு சிறிது இதமாக இருந்தாலும் தேவையில்லாத பழிவாங்கல் நடவடிக்கை என்பதால் சுந்தரம்பிள்ளைக்கு கவலையுடன் கோபமும் மாறிமாறி வந்தன. குடும்பத்தின் பொருளாதர நிலை, மனைவி வேலை செய்வதால் தாக்குப்பிடிக்கலாம் என்றாலும் மன உளைச்சலால் இந்த இரண்டு கிழமைகளில் உடல் நிறையில் நாலு கிலோ குறைந்ததால் இடுப்பில் கால்சட்டைக்குரிய பெல்டில் உள்நோக்கி புதிதாக துளை போட வேண்டி இருந்தது.

வேலை நீக்க விடயம் பல நாட்களாக இழுபடுவதால் வேறு வேலைக்கு விண்ணப்பிக்க முடியாமல் இருந்தது. ரிமதி பாத்தோலியஸ் ஒரு மாத அவகாசம் தராமல் உடனடியாக வேலையில் இருந்து நீக்கியிருந்தால் இந்த மன உளைச்சல் இருந்திராது. வழக்கைப் போட்டுவிட்டு வேறு இடத்தில் வேலை தேடியிருக்கலாம். அப்படி வேறு இடத்தில் வேலை கிடைப்பதற்கு இந்த வைத்தியசாலையில் கிடைத்த அனுபவம் துணையாக வந்திருக்கும்.

புதிதாகச் சேர்ந்த லெபனிய மிருக வைத்தியரான முகம்மது ஜாபருக்கு மட்டும் இந்த விடயம் கருப்பு வெள்ளையாக இருந்தது.

‘ரிமதி பாத்தோலியஸ் ஒரு இனவாதி, அதனால்தான் உன்னை வேலையில் இருந்து விலத்தியுள்ளான்’ என்று சொல்லிக் கொண்டு இருந்தான்.

‘ரிம் ஒரு இனவாதியாக இருப்பான் என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை. பலரிடம் இனவாதம் அடி மனதில் புதைந்து உள்ளது. ஆனால் இனவாதம் என்பது சிந்தனை சம்பந்தப்பட்ட விடயம். இந்த தவறு நிரூபிப்பது கடினம். அதை எடுத்து நாங்கள் மற்ற அவுஸ்திரேலியர்களிடம் நியாயம் கேட்கமுடியாது. அந்த சிந்தனையால் சட்டத்தை மீறியதை வைத்துதான் எமது பக்க நியாயத்தை நாங்கள் கேட்க முடியும்’ என்பது சுந்தரம்பிள்ளையின் வாதமாக இருந்தது. அதைக் காலோஸ் ஆமோதித்தான்.

இனவாதம் என்பது எல்லோரிடமும் இருக்கிறது. யாருக்கு இல்லை? வெள்ளையர்கள் ஆசியர்களை வெறுப்பதும், சீனர்கள் கொரியர்களை வெறுப்பதும், இந்தியர்கள் ஆபிரிக்கர்களைக் கீழானவர்கள் என நினைப்பதும் பரவலான விடயம். தன்னையும் தனக்கு சுற்றமாக இருப்பவர்களைத் தவிர மற்றவர்கள் மேல் சந்தேகம், வெறுப்பு கொள்வதும் அதற்கு இனம், மதம், நிறம், சாதி என பல பேதங்களை துணைக்கு அழைப்பதும் காலம் காலமாக நடக்கிறது. மனதின் எண்ணங்களை சட்டம் போட்டு தடுக்க முடியாத போதும் இந்தப் பேதங்களைப் பாவித்து தனிநபர் ஒருவரை பழி வாங்குவதையோ, ஒதுக்குவதையோ சட்டத்தின் மூலம் நிவர்த்தி செய்ய முடியும் என்பதால் அவுஸ்திரேலியாவில் பல தளங்களில் பாதிக்கப்பட்டவர்கள் நியாயம் கேட்க வழியுள்ளது.

இன்று மதியம் வைத்தியர்களது கூட்டம் இருந்தது என்பது காற்று வாக்கில் செய்தியாக பரவி இருந்தது. பதினாலு வைத்தியர்கள் வேலை செய்யும் இந்த வைத்தியசாலையில் சுந்தரம்பிள்ளை அறிய இதுதான் முதலாவது கூட்டமாகும். வைத்தியசாலையில் ரிமதி பாத்தோலியஸ் ஆதரவானவர்கள் மிக குறைவு. ஆனால் காலோசில் அதிருப்தி கொண்டவர்கள், மற்றும் யார் வெல்வது என மதில் மேல்பூனையாக இருப்பவர்களும் கூட்டு சேராதவர்கள் கூட்டத்தில் இருந்தார்கள். அவர்கள் எல்லோரும் இந்த கூட்டத்தில் கலந்து கொள்ளாமலிருக்க முடிவு எடுத்ததாக தகவல் வந்தது.

மதிய உணவிற்கு பின்பாக நடக்கவிருந்த கூட்டத்தில் சுந்தரம்பிள்ளையின் ஆதரவாளர்களான முகம்மது ஜபார், காலோஸ், ஜுலியா பாக் ஆகியோர் இரண்டு மணிக்கு தயாராக வந்து தேனீர்

அறையில் இருந்தார்கள். ரிமதி பாத்தோலியஸ் இரண்டு மணிக்கு சில நிமிடங்கள் தாமதமாக வந்தான். வந்த போது முகக்தில் வெறுப்பு கலந்து சிவந்திருந்த இரண்டு கண்களையும் பார்த்த போது இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வது சந்தோசமில்லை என்பது தெரிந்தது.

தனது முடிவுகளை மற்றவர்கள் ஏற்றுக்கொள்ளாததை எதிர்த்து நிற்பதும் யாருக்கும் திருப்தியளிக்கும் விடயமாக இருக்காது. ஆனாலும் பொறுப்பான பதவியில் இருப்பவர்கள் அதைத் தவிர்க்கமுடியாது. ரிமதியை எதிர்ப்பவர்கள் அவனால் வெறுக்கப்படும் வேற்று நாட்டவர்கள் என்பதும் அவனுக்கு கசப்பாக இருந்தது. மேசையில் இருந்தவர்களில் ஜூலியாவைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் வெளிநாட்டவர்கள்.

ரிமதி பாத்தோலியஸ் முற்றாக தலைமயிரை சவரம் செய்த தலை, புதிதாக மரத்தில் இருந்து இறக்கிய செவ்விளனித் தேங்காய் போல் சிவந்திருந்தது. அந்த செவ்விளனி மேல் காதுகள், மூக்கு சிவப்பாக ஒட்டப்பட்டிருப்பது போல் சுந்தரம்பிள்ளைக்கு தெரிந்தது. ஒருவர் மற்றவர்களால் வெறுக்கப்படுவதாக உணர்வது அவரது மனதுக்கு கஷ்டமான விடயம். அதே போல் மற்றவர்களை ஆழமாக வெறுப்பது அதற்கு மேலான துன்பமான விடயமாக மனதை அரிப்பது மட்டுமல்ல ஆழமான காயத்தை உருவாக்கிவிடும். மனசாட்சியின் கேள்விகளுக்கு அவர்களால் பதில் அளிக்க முடியாது விடுகிறது.

தங்களைப் பிரித்தானியர் ஆளுவதை இந்திய மக்கள் வெறுப்புடன் ஒத்துழைக்க மறுக்கும் விடயத்தை போராட்ட உபாயமாக கொண்டுதான் மகாத்மாகாந்தி உபயோகித்து பிரித்தானியரை வென்றார். அந்த உபாயத்தை மாட்டின்லூதர் கிங் அமெரிக்காவிலும் நெல்சன் மண்டேலா தென் ஆபிரிக்கவிலும் பயன்படுத்தினார்கள். இங்கே எதிரியின் மனசாட்சி பாதிக்கப்பட்டவர்களது கதையாயுதமாகிறது. இராணுவம், கடற்படை பல குண்டு வீசும் விமானங்களைவிட இது வலிமையானது. இரத்த ஆறு ஓடாது. இதனால் எதிர்ப்பவனிடம் இழப்பதற்கு எதுவும் இல்லை.

இப்பொழுது அதேபோல் ரிமதி பாத்தோலியஸ், மற்றவர்கள்மேல் தனது இனவாதமான வெறுப்பை சட்டத்துக்கும் தர்மத்துக்கும் முன்பும் நியாயப்படுத்த வேண்டிய கடமையை அந்த மயிர்

வழிக்கப்பட்ட தலையில் சுமத்தப்பட்டிருக்கிறது. அந்த சுமையால் அவன் தலை சிவந்திருக்கிறதோ?

நாற்காலியில் ரிம் உட்காருவதற்கு முன்பாக ‘என்ன காரணத்தை வைத்து சிவாவை வேலை நீக்கம் செய்தாய்?’ காலோஸின் கேள்வி முகத்தில் அடித்தது போன்று இருந்தது.

‘வேலை நீக்கம் செய்வதற்கு காரணம் தேவையில்லை’ தலையை திருப்பி தனக்கு எதிராக இருந்த காலோஸை பார்க்காது, ஜுலியாவை பார்த்தபடி ரிம் பதில் சொன்னது பாடசாலையில் விருப்பமில்லாத ஒரு சிறுவனைப் பார்காமல் டூ விடும் மற்றைய சிறுவனைப்போல் இருந்தது. மேசையில் ரிமதி பாத்தோலியஸுக்கு எதிராக சுந்தரம்பிள்ளையும் காலோஸும் இருந்தனர். வலது பக்கத்தில் ஜுலியாவும் இடது பக்கத்தில் முகமது ஜப்பரும் இருந்தனர். இந்த நிலையில் ஜுலியாவின் அழகிய அவுஸ்திரேலிய பெண் முகத்தை பார்க்க விரும்பியது ஆச்சரியமானதன்று.

‘அப்படி யார் சொன்னது?’ கிண்டல் கலந்த குரலில்.

‘குயின்ஸ்லாண்டில் வேலை செய்த இடத்தில் என்னை வேலையில் இருந்து நிறுத்திய போது எனக்கு காரணம் சொல்லவில்லை’

அந்தப் பதில் தர்க்கமாக இருக்கவில்லை என்பதால் உடலை நெளித்து ஆசுவாசப்படுத்தினான்.

‘அப்படியானால் நான் உம்மை வேலைக்கு நியமனம் செய்தபோது நீர் பழைய வேலையில் இருந்து நீக்கப்பட்ட செய்தியை ஏன் சொல்லவில்லை?. இப்பொழுது பொய்யான தகவலுடன் இந்த வேலை எடுத்திருப்பதாக நான் சொல்லுகிறேன்’.

‘எனது விடயத்தை பேச இந்தக் கூட்டம் கூடவில்லை’. சொல்லும் போது எழுவதற்கு தயாராக இருப்பதுபோல் பாவனை செய்த ரிமதியை மீண்டும் அலட்சியம் செய்தபடி வந்த காலோஸ்ஸின் அடுத்த கேள்வி துப்பாக்கி குண்டுபோல் இருந்தது.

“சிவாவை வேலை நீக்கிய காரணம் என்ன?“ மீண்டும் காலோஸ் உறுதியாக.

மற்றவர்கள் எதுவும் போசாமல் காலோஸ்ஸின் வாதத்திறமையை பார்த்துக்கொண்டிருந்தார்கள். சுந்தரம்பிள்ளையின் மனதில் வேறு திசையில் விவாதம் போகிறது என்பது தவிப்பை கொடுத்தது.

சிறிது நேர மவுனத்தின் பின்பு ‘ ஹெலன் மீகோசின் ஜேர்மன் செப்பேட்டான ரோசியின் ஒபரேசனை செய்தது தவறு. அந்த எக்ஸ்ரேயை பார்த்தேன். அந்தக் காரணமே வேலையில் இருந்து விலத்துவதற்குப் போதுமானது’.

“கடந்த கிழமை கர்ப்பப்பையில் சீழ் பிடித்த அந்த ரொட்வீலரை சேலையின் மற்றும் வலி தடுப்பு மருந்து கொடுக்காமல் ஒப்பரேசன் செய்தது எப்படி சரியாகும்’என சுந்தரம்பிள்ளை வாயில் வார்த்தைகளை வெகு தூரத்தில் ஓடும் மானை நோக்கி இழுக்கப்பட்ட வேகமான அம்பாக வந்தன.

‘உங்களோடு வாதிட நான் தயாரில்லை. நான் போகிறேன்’ என ரிமதி பாத்தோலியஸ் நாற்காலியை விட்டு எழுந்தபோது முகம் காது எல்லாம் மேலும் சிவந்தன.

‘சிவா நீ பேசாது இரு’ என்று விட்டு காலோஸ் ‘சிவா அந்த ரோசியின் ஒப்பரேசனில் தவறு செய்திருந்தால் அதைப் பற்றி பேசி எச்சரிக்கை செய்திருக்க வேண்டும். குறைந்த பட்சமாக இப்படி செய்தால் அடுத்த முறை வேலையில் இருக்க முடியாது என்று கூறி இருக்க வேண்டும். சில மாதங்களுக்கு முன்பு முதுகெலும்பு ஒடிந்த நாய்க்கு ஒபரேசன் செய்து விட்டு அதற்கு வைத்தியசாலையில் ஓவர்டைம் கூட எடுத்திருந்தாயே. அதற்கு நான் என்ன செய்திருக்க வேண்டும்?’ எனச் சிரித்தபடியே கேட்டபோதுதான் பூகம்பம் வெடித்தது.

நாற்காலியை தள்ளிவிட்டு எழுந்து நின்றபடி ‘காலோஸ், நீ இந்த வைத்தியசாலையை ஒரு சந்தைக்கடையாக நடத்துகிறாய். அறிவற்றவர்களை வேலைக்கு வைப்பதன் மூலம் அவர்களை உனது கைப்பொம்மையாக நடத்துகிறாய். உன்னை இவ்வளவு நாட்கள் தலைமை வைத்தியராக வைத்திருந்தவர்கள் முட்டாள்கள். இந்தமாதிரி இடத்தை முன்னேற்ற நான் நினைத்தது எனது முட்டாள்தனம்’ என இடியோசை போல் முழங்கி விட்டு அந்த இடத்தை விட்டு வேகமாக சென்று விட்டான் ரிமதி.

இந்த மாதிரியான வார்த்தைகளையும் நடத்தையையும் எவரும் எதிர்பார்க்காததால் எல்லோரும் சிறிது நேரம் அசையவில்லை. வார்த்தைகள் அற்று சிலையாக இருந்தனர். ஜுலியா தூக்கத்தில் கெட்ட சொப்பனம் கண்டு பயந்த சிறுமியாகிவிட்டாள். சுந்தரம்பிள்ளையும் முகம்மது ஜப்பாரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். இந்த நேரத்தில் யாரும் எதிர்பார்க்காத

விடயத்தை காலோஸ் செய்தான். தனது காற்சட்டைப் பொக்கட்டில் இருந்து சிறிய பொக்கட் ரேப் ரெக்கோடரை மேசையில் வைத்து விட்டு எழுந்து நின்றபடி 'ரிமதி பாத்தோலியஸ் பேசியது எல்லாம் இதில் பதிவாகி உள்ளது. நிர்வாகக் குழுவினர் முட்டாள்கள் என சொன்னதை அவர்களே கேட்கட்டும்' என்ற போது மேசையில் இருந்த மற்றவர்களுக்கு அது இரண்டாவது பூகம்பம்பத்தின் அதிர்ச்சியாக இருந்தது.

முகம்மது ஜப்பார் 'இவன் ஒரு ரேசிஸட் பாஸ்ரட்' என சொல்லிவிட்டு தனக்கு கோப்பியை கலக்குவதற்கு எழுந்தான்

'இது மிகவும் கேவலமானது. இப்டியான நாகரிகமில்லாமல் ஒருவரால் நடக்க முடியும் என நான் எதிர்பார்க்கவில்லை. இந்த மாதிரி நடக்கும் ஒருவர் தலைமை வைத்தியராக மட்டுமல்ல மிருக வைத்தியராக இருக்கவே தகுதியற்றவர். இவரது நடத்தையைப் பற்றி நான் நேரிலே சென்று குழு அங்கத்தவர்களிடம் கூறுவேன்'. என்றாள் ஜூலியா.

மேல்பனில் மிகவும் செல்வந்த குடும்பத்தில் வெல்வெட் துணியால் பொத்தி வைத்து வளர்க்கப்பட்ட ஜூலியாவால் இப்படியான நடத்தையை ஏற்றுக்கொள்ளமுடியாதது ஆச்சரியமானது அல்ல.

மீண்டும் ஒபரேசன் செய்யத் தியேட்டருக்குப் போனதும், இந்த விடயத்தை சாமுக்கும் ஜெனட்டுக்கும் முன்னால் தனது ரேப்ரெக்கோடரை எடுத்து மீண்டும் மேசையில் வைத்து 'பாஸ்ரட் ரிம், இதோடு சரி, அவனது சரித்திரம்' என சொல்லிவிட்டு கூட்டத்தில் நடந்தவற்றை சாமிடம், காலோஸ் விவரித்தான். சாம் கண்களை அகல விரித்து 'நான் அந்த இடத்தில் இல்லாமல் போய்விட்டேனே. காலோஸ் 'நீ ஒரு ஹீரோதான்' என்றபடி கை குலுக்கி இருவரும் மார்போடு அணைத்துக் கொண்டார்கள். ஒருவர் குறும்பை மற்றவர் அதிசயமமாக மெச்சும் பள்ளிச் சிறுவர்கள் போல் இருவர்களதும் நடத்தை இருந்தது.

தனது மெல்லிய உதடுகளை பிரிக்காமல் சிரித்தபடி அவர்களது செய்கைகளைப் பார்த்த ஜெனட்டின் மனதில் மகிழ்ச்சியில்லை என்பது அவளது உடல் மொழியில் தெரிந்தது.

இப்பொழுது நடந்த நாடகத்தில் ரிமதி பாத்தோலியஸ் நடந்து கொண்டதும் அவன் காலோசால் மடக்கப்பட்டதும் எதிர்பார்க்காத

விடயம். ஆனால் இந்த விடயத்தால் தனக்கு என்ன நன்மை வரும் என்பது சுந்தரம்பிள்ளைக்கு புரியாத விடயமாக இருந்தது.

□ □ □

**கா**லோஸ் வேலை முடிந்ததும் வலுக்கட்டாயமாக மதுச்சாலைக்கு சுந்தரம்பிள்ளையை இழுத்துக் கொண்டு சென்றான். சாம், அன்ரூ இருவரும் சேர்ந்து கொண்டார்கள். அவுஸ்திரேலிய மதுச்சாலைகள் வர்க்க பேதங்களற்றவை. அன்னியோன்னியமாக பேசுவதற்கும் பழகுவதற்கும் நட்பை உருவாக்கவும் புதுப்பிப்பதற்கும் என பல விடயங்களுக்கு பயன்படுவதால் சமூகத்தில் கல்விக்கூடம், வைத்தியசாலை, தேவாலயம் போன்று இதுவும் தேவையான ஒரு பொது வெளியாக அமைந்து விடுகிறது. சுந்தரம்பிள்ளைக்கு அன்று மதுவின் போதை நிச்சயமாக தேவைப்பட்டது. வேலையின் நிச்சயமற்ற தன்மை இன்னும் இருந்தாலும் ரிமதி அவமானப்பட்டது, குத்துச்சண்டைப் போட்டியில் முதல் ரவுண்டில் வென்றது போன்ற திருப்தி மனதில் பொங்கியது. அந்த வெற்றியை கொண்டாடவேண்டும் என்று மனம் விரும்பியது.

‘எல்லோருக்கு இன்று நான் மது வாங்குகிறேன். என் கணக்கில் இன்று எவ்வளவும் குடிக்கலாம்’எனச் சொல்லிக் கொண்டு மதுசாலைக்குச் செல்லும் வழியில் காலோஸ் ‘ ஏய் போய்ஸ், அந்த ரேப்ரெக்கோட்டில் ரேப் இல்லை. பட்டரி இல்லை. இதைப்பற்றி எவரிடமும் பேசவேண்டாம். ஜெனற் இந்த விடயத்தை ரிமதிக்கு சொல்ல வேண்டும் என்பதற்காகத்தான் தியேட்டரில் வைத்து அவளிடம் சொன்னேன்’.என்றான்.

‘உண்மையாகவா? நம்ப முடியவில்லை’சுந்தரம்பிள்ளை ஆசசரியத்துடன்.

‘ஒருவரது சம்மதமில்லாமல் அவரது குரலை பதிவு செய்தது குற்றம். அதை எங்கும் பாவிக்க முடியாது. ஆனால் பாஸ்டட்டுக்கு இந்த விடயம் சேரும்போது வயிற்றைக் கலக்கும் என்பது எனக்குத் தெரியும்’.

‘காலோஸ், நீ பெண்கள் விடயத்தில்தான் கைவரிசைக்காரன் என நினைத்திருந்தேன். மற்ற விடயங்களிலும் பரவாயில்லை’. நகைச்சுவையாக சாம்.

‘உனக்கு என்னில் பொறாமை’

'ஒருவிதத்தில் உண்மை'.

மதுச்சாலையில் வந்து இருந்ததும் காலோஸ்,சிறிது முன்பாக ரிமதி பாத்தோலியஸ்சோடு நடந்த வாக்குவாதத்தை மறந்து, மரியாவை அடிலயிட்டுக்குக் கொண்டு சென்று ஹொட்டலில் போகத்தில் ஈடுபட்டது போன்ற விடயங்களை ஒளிவு மறைவற்று போர்னோ ஒலிச்சித்திரமாக விபரித்தான். மரியா படுக்கையில் எழுப்பிய சம்போக ஒலிகளைக் கூறும்போது தனது குரலை பெண்குரலுக்கு மாற்றிப் பேசினான். கடந்த இரண்டு கிழமைகள் எனது தலைமைப் பதவி போய்விட்டதை சிந்திக்கவே மரியா விடவில்லை. எனது உடலில் அவளது மணம் இன்னும் போகவில்லை என நெஞ்சை முகர்ந்தான். நான் விடுமுறை எடுத்தால் வீட்டில் தெரிந்துவிடும் என்பதால்தான் வேலைசெய்ய வந்தேன் எனக் கூறிவிட்டு மரியா ஹொலிடே முடிந்து மீண்டும் போர்த்துக்கல் சென்று விட்டதை கவலையுடன் நினைவு கூர்ந்தான்.

சாம், அன்ரூ ஒவ்வொருவரும் வழக்கம் போல் பியரை பருகியபோது விஸ்கியை பனிக்கட்டிகளோடு சுந்தரம்பிள்ளையும் காலோஸூம் அருந்தினார்கள். காலோஸின் அனுபவங்களை ரசித்தபடி வழக்கத்தை விட அதிகமாக பருகினார்கள்.

'மரியாவை நினைத்தும் முகர்ந்தும் கவலைப்படுவதிலும் பார்க்க அவளோடு போர்த்துகல் போய் வந்திருக்கலாம்தானே?. என சாம் சிறிது சீண்டலுடன்.

'வீட்டில் உள்ள எனது மனைவியை எந்த நேரத்திலும் விடமாட்டேன்' சொல்லும் போது சிறிது முகம் சிவந்தது.

'காலோஸ், இவ்வளவு கொள்ளையான காதல் உன் மனைவி மேல் இருக்கும் போது எதற்காக எல்லா இடத்திலும் பல் இல்லாத வெள்ளாடு போல் வாய் வைக்க வேண்டும்' என்றான் சுந்தரம்பிள்ளை.

காலோஸ் மீது நட்புடன் மரியாதையும் இருந்ததால் சாதாரணமாக அவனது பிரத்தியேக விடயங்களை பற்றி பொருட்படுத்தாத சுந்தரம்பிள்ளைக்கு இன்று பொறுக்கவில்லை. மதுபோதை அதற்கு உதவியாக இருந்ததாலும் அந்தக் கேள்வி குற்றச்சாட்டுப்போல் வெளிவந்தது.

‘மிஸ்டர் உமக்கு எங்களது உறவை சொல்லிப் புரியவைக்க முடியாது. எனது மனைவியை பதினேழு வயதில் காதலித்தேன். எங்கள் ஊரில் அவளை விட ஒரு அழகி இருக்கவில்லை. அவளோ இலேசில் என் காதலை ஒத்துக் கொள்ளவில்லை. கொன்வெண்டில் படித்துக் கொண்டிருந்தபோது அவள் கன்னியாஸ்திரியாக வேண்டுமென்ற இலட்சியத்துடன் இருந்தாள். அவளை எவ்வளவோ நாட்கள் முன்னாலும் பின்னாலும் திரிந்து என்னைக் காதலிக்க வைத்தேன். அது நடந்து இருபத்திரெண்டு வருடங்களாகிவிட்டது. அவள் மேல் பாசமும் அன்பும் இன்னும் அதிகமாகிக் கொண்டே செல்கிறது அல்லாது குறையவில்லை. அதேபோல் அவள், என்மீது அதற்கிணையான பாசம் வைத்திருக்கிறாள். உமக்கு ஒரு கதை சொல்லுகிறேன். கடந்த சனிக்கிழமை அதிகாலை வேலைக்கு அவள் போக சீக்கிரமாக எழுந்த போது எனது கால்கட்டை விரல் மட்டும் போர்வையின் வெளியே இருந்தது. எனக்கு அது தெரிந்தாலும் காலை போர்வைக்குள் இழுப்பதற்கு சோம்பலாக இருந்தது. அவள் அந்தப் போர்வையை இழுத்து எனது கட்டைவிரலை மூடிவிட்டு சென்றாள். அந்த அன்பு என் இதயத்தை சிலிர்க்க வைத்தது. ஆனால் அவளின் மேல் எனக்கு காம உணர்வு குறைந்து விட்டது. ஆரம்ப காலத்தில் ஒவ்வொரு நாளும் உடலுறவு கொண்ட நாங்கள் இப்பொழுது மாதத்திற்கு ஒருதடவை என்ற நிலைக்கு வந்து விட்டோம். பல நாட்கள் முத்தத்தோடு மோகவெள்ளம் வற்றி விடுகிறது. இந்த இடத்தில்தான் நுங்கும் நுரையுமாக மரியா, மிஷேல் போன்றவர்கள் தாகத்தை தீர்க்கும் அருவியாக இடைவெளியை நிரப்புகிறார்கள். நான் ஒருவரையும் ஏமாற்றவில்லை. பொய் சொல்லவில்லை அதேநேரத்தில் எனது செய்கை சரி என வாதிடவில்லை. இது எனது கத்தோலிக்க மதத்திற்கு ஏற்பு உடையது அல்ல என்பதும் எனக்கு தெரியும்’

‘உனது விளக்கம் கொஞ்சம் சிக்கலாக இருந்தாலும் புரிகிறது. இதை உன் மனைவி ஏற்றுக்கொள்வாளா என்பது தான் எனது கேள்வி? மீண்டும் வக்கீலின் தொனியில்.

‘ஆண்களது விளக்கத்தை பெண்கள் எப்பொழுது ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்? வேறு விதமாக ஆணும் பெண்ணும் டிசையின் பண்ணப்பட்டிருக்கிறார்கள். கருவில் எல்லா குழந்தைகளும் பெண்களாகத்தான் உருவாகிறார்கள். ஒரு மாதமானதும் அந்த வை நிறமூர்த்தம் விழித்துக்கொண்டு ஆணாக மாறுகிறது. அன்றில் இருந்தே சிந்தனை நோக்கத்தில் ஆண் வேறுபடுகிறான். எனது அம்மாவின் கருப்பை நிகழ்ச்சிக்கு

நான் பொறுப்பாக மாட்டேன்'.என்று சொல்லிவிட்டு மூன்றாவது விஸ்கிக்கு தயாராகினான்.

'கடைசியாக எப்பொழுது பாவ மன்னிப்புக்குப் போயிருந்தாய்.?" சாம் கிண்டலாக

'உமது கிண்டல் எனக்கு விளங்குகிறது. எனக்கே நினைவில்லை'

இதைக் கேட்டுக் கொண்டிருந்த அன்ரூ 'கமோன் சிவா, சாம் இதையெல்லாம் கேட்டு கார்லோசை சங்கடப்படுத்தாதே. வாழ்க்கை ஒரு முறைதான் வந்து போகிறது. இன்னும் சில வருடங்களின் பின் பல்லில்லாத கிழவராக படுக்கையில் ஒண்டுக்கடித்தபடி ஓய்வில்லத்தில் வெந்த உருளைக்கிழங்கை சாப்பிடும்போது என்ன செய்யமுடியும்? எதுவும் செய்ய முடியாத நேரத்தில், செய்யாமல் விட்ட விடயங்களை நினைத்து கவலைப்படத்தான் முடியும். செய்த விடயங்களை இட்டுத்தான் சந்தோசமாக நினைக்க முடியும்'. என வேறு விடயத்திற்கு பேச்சைத் திருப்பினான்.

□ □ □

**வீ**டு சென்ற ரிமதிக்கு எதுவும் செய்ய முடியவில்லை. எப்படிக் காரை ஓட்டிவந்தேன் என்பது அவனுக்கு புதிராக இருந்தது. வந்த வழி எதிரில் வந்த வாகனங்கள், ஏன் காரில் ஏறியதோ இறங்கியதோ நினைவில் இருக்கவில்லை. போட்டிருந்த உடையையோ காலணிகளையோ மாற்றத் தோன்றவில்லை. காலோஸின் வார்த்தைகள் இன்னமும் காதில் தற்செயலாக சென்ற வண்டுபோல குடைந்து கொண்டிருந்தன.

அந்தக் கூட்டத்திற்கு நான் போயிருக்க கூடாது. என்னைத் தனக்குப் பலமான இடத்திற்கு இழுத்து வந்து மற்றவர்கள் முன்னிலையில் குதறி இருக்கிறான். தாகசாந்திக்காக நீருக்குள் இறங்கிய யானையின் கால் முதலையின் வாயில் மாட்டியது போல் நான் அவனது வாயில் மாட்டிக் கொண்டேன். சிவாவை இரையாக வைத்து என்னை பொறிவைத்து விட்டான். காலோஸ் சாதாரணமான எதிரியல்ல. நரியைப் போன்றவன். நான் அவசரப்பட்டுவிட்டேன். இன்னும் குறைந்தது மூன்று மாதங்களாவது கிளினிக்கை கட்டி முடிப்பதற்கு எடுக்கும். அதுவரையும் வேலை செய்யவேண்டும். வங்கியில் அதிகம் கடன் எடுத்ததால் தொடர்ச்சியாக வட்டியுடன் பணம் கட்டவேண்டும்.வேலையை விட்டால் அதைச்செய்வது கடினம்.

வீட்டின் பிரிஜ்ஜில் இருந்து ஒரு பியர் போத்தலை எடுத்து குடித்துக் கொண்டு தொலைக்காட்சியில் என்ன பார்ப்பது என்ற நோக்கில்லாமல் சானல்களை மாற்றிக்கொண்டிருந்தவனுக்கு, தொலைபேசியின் சப்தம் கேட்டதும், பியரை தரையில் வைத்து விட்டு தொலைபேசியை எடுத்த போது அடுத்த முனையில் ஜெனட் வந்தாள்.

'எப்படி இருக்கிறாய்?'

'நான் இந்த நேரத்தில் போன் எடுத்ததற்கு மன்னிக்கவும். வேலையில் இருந்து இப்பொழுதுதான் வீடு வந்து சேர்ந்தேன்'

'அந்தக் கூட்டத்தை பற்றி கேட்க எடுத்தாயா? அது வீண்வேலை. காலோஸ் என்னை அவமானப்படுத்த திட்டம் போட்டு நடத்திய நாடகம். நான் அதற்கு போய் இருக்கக் கூடாது. நான் தவறு செய்து விட்டேன் என நினைக்கிறேன்'.

'அதைத்தான் நானும் சொல்ல வந்தேன். அவசரப்பட்டு வீணாக வார்த்தைகளைக் கொட்டிவிட்டாய்'.

'உனக்கு என்ன தெரியும்? யார் சொன்னது? என்ன சொல்கிறாய்?'

'வைத்தியசாலையை சந்தைக்கடை எனவும் நிர்வாக குழு அங்கத்தினரை முட்டாள்கள் எனவும் நீ சொன்னாயா'

'ஆத்திரத்தில் சொல்லி இருப்பேன். அதுக்கு இப்பொழுது என்ன?

'காலோஸ் அதை ரேப்பில் பதிந்துள்ளதாக எனக்கு சொன்னான்'

'என்ன ஒன்றும் பேசாமல் நிற்கிறாய்'

'காலோஸ்ஸின் கபடத்தனத்தை நான் புரிந்து கொள்ளவில்லை. நன்றி எனக்கு இதை சொன்னதற்கு. நான் இதைப்பற்றி யோசிக்க வேண்டும்'.

ரிம் தொலைபேசியை வைத்ததும் கைலி வந்து 'என்ன பிரச்சினை? என்றாள்.

கர்ப்பமாக இருந்த கைலியிடம் சொல்லி அவளை சங்கடப்படுத்த விரும்பாமல் 'அது ஒன்றும் இல்லை' என பியரை தொடர்ந்து குடிக்க முயன்றவனை அவள் விடவில்லை.

‘ஏன் சொல்ல மறுக்கிறாய். தயவு செய்து சொல்’ என கைகளைப் பிடித்து அருகில் உள்ள சோபாவுக்கு இழுத்தாள்.

அந்த சோபாவில் இருந்தபடி அவளது முகத்தை சில கணங்கள் பார்த்துவிட்டு நெற்றியில் முத்தமிட்டு, மேலும் இவளிடம் மறைப்பதில் அர்த்தமில்லை என நினைத்து அப்படியே நடந்த விடயத்தை சொன்னான்.

‘இப்பொழுது என்ன செய்யப்போகிறாய்?’ என ஏக்கமாக.

‘நான் செய்த முட்டாள்தனத்துக்கு நான் விலை கொடுக்கவேண்டும். எனது ராஜினாமா கடிதத்தை ரொன் ஜொய்ஸ்சுக்கு அனுப்பப் போகிறேன்.

‘அது தான் நல்லது என நினைக்கிறேன்.வீட்டில் நின்றால் வைத்தியசாலையை விரைவாக ஆரம்பிக்கலாம். எனக்கும் ஆறுதலாக இருக்கும்’ என தன் வயிற்றை தடவினாள்.

இடது கையால் பிடித்தபடி பியரை குடித்தபடியே எழுந்த ரிமதி பாத்தோலியஸ் தனது வலது கையால் மேசையில் இருந்த வெள்ளைத்தாளின் மேல் தலைமை வைத்தியர் பதவியையும் வைத்தியர் வேலையில் இருந்தும் முற்றாக விலகுவதாக கூறி எழுதிய போது அவனது கைகள் நடுங்கின. முழு உடலும் புயலின் வசப்பட்ட மரத்தின் கிளைகளைப் போல் ஆடியது. கண்களில் கண்ணீர் நிறைந்து இமைகளை முட்டியது. அவனது உள்ளத்தில் வெறுப்பு பெரும்புயலாக வீசியது. பந்தயத்தில் தோற்று அதன்தோல்விச் சுமையை ஒருவன் மட்டும் சுமந்து கொண்டு தனியாக நிற்பதாக தோன்றியது. இரண்டு கிழமைகூட காலோஸுக்கு எதிராக பதவியை தன்னால் தக்க வைக்க முடியவில்லை என்ற சுயவிரக்கம் சேர்ந்ததும் அப்படியே அந்த மேசைக்கு அருகில் இருந்த கதிரையில் சாய்ந்து கொண்டான். இப்பொழுது என்ன செய்வது என்பதை அவனால் சிந்திக்க முடியவில்லை.

சில நிமிடம் கண்களை முடியபடி இருந்த போது அந்த இடத்தை விட்டு கைலி விலகி சமயலறைக்குச் சென்றாள். மீண்டும் மனம் சிறிது தெளிவடைய கண்களை விழித்தபோது உள்ளத்தில் அமைதியான மாற்றம் ஏற்பட்டது. அந்த கடிதத்தில் கையெழுத்தை இட்டு அதை தொலைநகலாக அனுப்பிவிட்டபோது அவனது முகத்தில் இருந்த ஆத்திரம், ஆவேசம், பச்சாதாபம் எல்லாம் நீங்கி அமைதி குடிகொண்டது. பெரும்புயலாக மனதில் கடந்த

ஆறுமாதமாக அடித்துக் கொண்டிருந்த குரோதம் திடீரென அவனை விட்டு மரக்கிளையில் இருந்த பறவையொன்று இறக்கைகளை சடசட என அடித்துக்கொண்டு பறந்து சென்றது போன்று இருந்தது. அவனது சுமை நீங்கி இலேசாக வானத்தில் பறப்பது போன்ற நிர்வாண மனநிலையை கொடுத்தது. இந்த அமைதியான உணர்வு அவனுக்கே ஆச்சரியத்தைக் கொடுத்தது. இந்த மாற்றத்தின் பின் மதுவுக்கு வேலையில்லை என கையில் இருந்த மிகுதி பியரை தூக்கி எறிந்து விட்டு கைலி வதக்கிய ஆட்டிறச்சியின் நெடியைத் தேடி சமயலறைக்குள் சென்றான்.

# மூன்றாம் பாகம்

## 21

ரிமதி பாத்தோலியஸ் விலகியதும் ஆதர் அல்பிரட் என்ற இளைப்பாறிய மிருக வைத்தியர் வைத்தியசாலை மனேஜராக நியமிக்கப்பட்டார். இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பாக இந்த வைத்தியசாலையில் இளைஞராக வேலை செய்தவர். அதன் பின்பு சொந்தமாக வைத்தியசாலை வைத்து பல வருடங்களாக நடத்திக் கொண்டு இருந்தபோது அவரது இதயம் ஒரு நிமிடம் துடிப்பதற்கு மறந்து விட்டது. அந்த விடயம் அவரது கிளினிக்கில் நடந்ததால் உடனே அம்புலன்சில் கொண்டு செல்லப்பட்டார். வைத்தியசாலையில் அவரது இதயத்திற்கு உபரியாக பேஸ்மேக்கரை வைத்து இன்னும் பத்துவருடங்கள் வாழ்வதற்கு உத்தரவாதம் கொடுத்து வீட்டிற்கு அனுப்பினார்கள். இனி மேல் வேலை வேண்டாம் என வீட்டில் மனைவி கட்டளையிட்டுவிட்டாள்.

இப்படியான மருத்துவ விடுமுறையில் இருந்தவரை, நிர்வாக குழுத் தலைவரான திரு லோட்டன் பலவந்தமாக கட்டி இழுத்துக்கொண்டு வந்து ‘நாங்கள் பெரிய சிக்கலில் மாட்டி இருக்கிறோம். தற்பொழுது தலைமை வைத்தியரில்லாமல் வைத்தியசாலை நடக்கிறது.. இதற்கான பொறுப்பை ஏற்று நடத்த உங்களைத் தவிர ஒருவரையும் எமக்கு தெரியவில்லை’ என கெஞ்சாத குறையாக கேட்டுக் கொண்டதால் மறுக்காமல் ஒப்புக் கொண்டு இந்தப் பொறுப்பை ஏற்க வந்தார்.

வைத்தியசாலை நிலைமை அவருக்கு சொல்லப்பட்டது போல் மோசமில்லை என்பது அங்கு வேலை செய்பவர்கள் பலரோடு பேசிய போது புரிந்து கொள்ள முடிந்தது. மேலும் அவரது புரிதலில்,தொடர்ச்சியாக இருந்த தனிப்பட்ட கோபதாபங்கள் ஊதிப் பெருத்ததால் இந்த நிலைமை வந்துள்ளது. பெரும்பாலானவர்கள் மற்றைய இடங்களிலும் பார்க்க குறைந்த ஊதியத்தில் மன நிறைவுடன் அர்ப்பணிப்பாக வேலை செய்கிறார்கள். இப்படியானவர்களைப்

பாதுகாத்து வைத்திருக்க வேண்டும். புதிய வைத்தியசாலையைக் கட்டி முடிப்பதற்கு ஐந்து வருடமாவது செல்லும். இந்தக் காலத்தில் புதியவர்களை அதிகம் உள்வாங்காமல் ஏற்கனவே வேலை செய்பவர்களை வைத்து நடத்துதல் இலகுவானது என்ற முடிவுக்கு ஆதர் அல்பிரட் வந்தார். மேலும் இதில் முக்கியமானவர் காலோஸ் சேரம் என்பதை புரிந்து கொண்டதும் நேரடியாக காலோஸ் சேரத்திடம் சென்று பேசவிரும்பினார். காலோஸ் உடன் பேச விரும்பியதற்கு இரு காரணங்கள். ஒன்று சக வைத்தியர் என்ற விதத்தில் தொழில் முறையான மரியாதை காலம் காலமாக கடைப்பிடிக்கப்படுவது. இரண்டாவது இவ்வளவு காலமும் வைத்தியசாலையை நிர்வாகித்த மனிதனிடம் கேட்காமல் அந்த வேலையை எடுத்துச் செய்வது நியாயம் அற்றது என்ற அற உணர்வாகும்.

எழுபது வயதான ஆதர் அல்பிரட் ஆறடிக்கு மேலான உயரமும் நிமிர்ந்த தோற்றமும் கொண்டவர். இன்னமும் பொன்னிற தலைமையிர்கள் சில நரைக்காது இளமைக்காலத்து அழகை எடுத்துக் கூறியது. நீலக் கண்களின் மேலுள்ள மூக்கு கண்ணடி அவரது மூக்கின் மேல் சிறிது முன்தள்ளி விலகி விழுந்து விடும் என்பது போல இருக்கும். சிறு வயதில் இங்கிலாந்தின் தொழிலாளர் குடும்பத்தின் வழி வந்ததால் எந்தவிடயத்திலும் மனிதர் சிக்கனத்தை கடைப்பிடிப்பவர். ஆடம்பரம், படோடாபம் இல்லாத எளிமையான மனிதர். சிறுவனாக பெற்றோருடன் இங்கிலாந்தை விட்டு புலம்பெயர்ந்து மெல்பனில் ஆறுவயதில் இருந்து கல்வி கற்றாலும். சிறிய அளவில் பிரித்தானிய ஆங்கிலத் தொனி அவரது உச்சரிப்பில் இன்னும் தொக்கி இருக்கும். மிருகவைத்தியத்துறையை விட தச்சுவேலை, கார் மெக்கானிக் போன்ற வேலைகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தபடியால் எந்த ஒரு வேலைக்கும் எவரையும் எதிர்பார்க்காமல் உபகரணங்களை எடுத்துக்கொண்டு நேரடியாக வேலையில் இறங்கிவிடுவது அவரது பழக்கம். வேலையில் மனிதர்களில் உயர்வு தாழ்வு எதுவும் பார்க்காத மனிதர். அவரது நியமனதின் பின்பாக வைத்தியசாலையில் வேலை செய்வதற்கு அவருக்கு புதிகாக ஒரு ஆபிஸ் அறையை தெரிவு செய்து ஒழுங்கு படுத்திய பின் அடுத்த நாள் வேலை தொடங்கும்படிதான் மிஸ்டர் லோட்டன் கேட்டிருந்தார். ஆனால் முதல் நாள் காலை எட்டுமணிக்கு வைத்திய சாலைக்கு வந்து பல விடயங்களை தானாக சரிப்படுத்த விரும்பினார். அதிகாலையில் எவரும் எதிர்பார்க்காத நேரத்தில் பின்கதவு வழியே உள்ளே வந்தார். நாய்கள் பூனைகளின்

கூடுகளை கழுவி சுத்தம் செய்து உணவு அளிப்பவர்கள் மட்டுமே அந்த நேரத்தில் வைத்தியசாலைக்கு வந்திருந்தார்கள். நேரடியாக வைத்தியசாலையின் மேல் மாடியில் உள்ள பூட்டாமல் திறந்திருந்த பழைய சாமான்களைப் போட்டு வைக்கும் சிறிய அறையொன்றை தனது அறையாக்கிக் கொண்டார்.

அந்த அறையில் மேசையையும் கதிரைகளையும் தவிர பழைய ரைப்ரைட்டர், புத்தகப் பெட்டிகள், பாவிக்காத மருத்துவ உபகரணங்கள் குவிந்து கிடந்தன. அவற்றில் ஒரு மில்லி மீட்டருக்கு தூசி படிந்து கிடந்தது. மனத் தளர்ச்சியடையாமல் மேசையையும் கதிரையையும் துடைத்து ஒழுங்காக வைத்து விட்டு 'எல்லாவற்றையும் தூசு தட்டி ஒழுங்காக்க இன்று முழுநாளும் போய்விடும். இதில் நேரத்தை வீணாக்காமல் வந்த காரியத்தில் நேரடியாக இறங்க வேண்டும். முதல் விடயம் இந்த வைத்தியசாலையில் அமைதியை நிலை நாட்டவேண்டும்'' என நினைத்தபடி கீழே இறங்கி கொரிடோர் வழியாக தேநீர் கூடத்துக்கு சென்ற போது வைத்தியசாலையின் பின்கதவால் காலோஸ் வந்து கொண்டிருந்தான்.

'ஹலோ காலோஸ், காலை வணக்கங்கள்' என்றதும் 'நான் கேள்விப்பட்டது உண்மையா? நீங்கள்தான் இனி மேல் இந்த வைத்தியசாலையின் மனேஜர் என கேள்விப்பட்டேன்'.

'நான் நிர்வாகக்குழுவுக்கு காலோசிடம் பேசிவிட்டு எனது முடிவை சொல்வதாக சொல்லி இருக்கிறேன். அது சம்பந்தமாக பேச நினைத்து கீழே இறங்கி வரும் போது நீங்கள் எதிரில் வந்தீர்கள்.

'எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. ரிமதி பாத்தோலியஸ் வேலையை விட்டுப் போனது நான் எதிர்பார்க்காத ஒன்று. பத்துவருடம் தலைமை வைத்தியர் என தலையில் வைத்திருந்த முட்கீரிடத்தை இறக்கி வைத்ததும் எனக்கு இப்பொழுது வேலை இலகுவாக இருக்கிறது. அந்தப் பதவியையும் சேர்த்து நீங்கள் எடுத்துக் கொண்டால் நான் சந்தோசப்படுவேன்' என சிரித்தபடி.

'காலோஸ் இந்த வைத்தியசாலையில் மனேஜர் என்ற புதுப் பதவியை என்னிடம் எடுக்கும்படி நிர்வாக குழு கேட்டிருக்கிறது. இது சம்பந்தமாக உங்களது அபிப்பிராயத்தை கேட்க விரும்புகிறேன்'

'ஆதர், நான் இந்த வைத்தியசாலையில் பதினைந்து வருடங்கள் வைத்தியராகவும் அதில் பத்து வருடங்கள் தலைமை வைத்தியராகவும்

இருந்தேன். நாலு கிழமைக்கு முன்புதான் விலகினேன். என்னைப் பொறுத்தவரை ஒரு சிலர் தொடர்ச்சியாக பிரச்சினை கொடுத்தார்கள். எனக்கும் அலுத்துவிட்டது. என்னைப் பொறுத்தவரை சந்தோசமாக வேலை செய்ய வேண்டும். அந்த சந்தோசம் எனக்கு கிடைக்காத போது எனது நாற்காலியை பாதுகாக்க விரும்பியவனில்லை'

'எல்லா விடயத்தையும் பலரோடு பேசுவதன் மூலம் அறிந்து கொண்டேன். மேலும் நிர்வாக குழுவினர் உங்கள் மேல் மிகவும் மதிப்பும், மரியாதையும்; வைத்திருக்கிறார்கள். இந்த வேலையை மீண்டும் நீங்கள் பொறுப்பெடுத்துச் செய்யமுடியுமானால் நான் புதிதாக வாங்கிய பண்ணைக்கு சென்று விடுவேன். நூறு ஏக்கரான அந்தப் பண்ணையில் ஐம்பது இறைச்சி மாடுகள் வாங்கி விட்டிருக்கிறேன். வார விடுமுறைநாட்களில் அங்கு சென்று தங்கி இருப்பதற்காக அங்கிருந்த பழைய வீட்டையும் புதுப்பித்துக் கொண்டிருந்த போதுதான் லோட்டனின் தொலைபேசி வந்தது. எனது பழைய பாடசாலை நண்பராகியதாலும் இந்த வைத்தியசாலையில்தான் எனது ஆரம்ப வைத்திய பயிற்சியை பெற்றதாலும் என்னால் இந்த அழைப்பை மறுக்க முடியவில்லை. வீட்டில் மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் நான் மீண்டும் வேலை செய்வது பிடிப்பில்லை. வேலைக்கு போனால் எனது இரத்த அழுத்தம் கூடிவிடும் என்பது அவர்களது காரணமாக இருக்கிறது. ஏற்கனவே பேஸ் மேக்கர் வைத்திருக்கிறேன்'.

'என்னைப் பொறுத்தவரையில் நீங்கள் இந்த வேலையில் இருப்பது நல்லது. எனக்கெதிராக ரொன் ஜொய்ஸ்ஸ்சும் ரிமதி பாத்தோலியஸ¨ நடந்து கொண்டதில் இனவாதமான தன்மை இருந்தது. எனக்கு மேல் இருந்த காழ்ப்புணர்வால் அவர்கள் பழிவாங்க நினைத்ததும் என்னைப் போல் வேறு நாட்டில் இருந்து வந்த சிவாவைதான்'.

'சிவாவின் மேல் வைத்த குற்றச்சாட்டைப் பார்த்தேன். எந்த ஆதாரமும் இல்லாமல் நடந்து கொண்டிருப்பதைப் புரிந்து கொண்டேன். ரிமதியை நான் புரிந்து கொண்டாலும் ரொன் ஜொய்ஸ்சை புரிந்து கொள்ள முடியவில்லை. அந்த மனிதரின் வயதும் அனுபவமும் அவரைக் கைவிட்டு விட்டது. ரொன் வைத்திய விடுப்பில் நின்று கொண்டிருக்கிறார். அடுத்த கிழமை பதவி விலகுகிறார். அத்தோடு நிர்வாக குழு செயலாளர் என்ற அவரது வேலை இல்லாமல் போகிறது. அவரது வேலையையும் உங்களது வேலையையும் பார்த்துக் கொண்டு புதிய வைத்தியசாலையை

கட்டுவதற்கான நடவடிக்கையில் ஈடுபடுவது மிகவும் கடினமானது. இந்த வயதில் என்னால் அது இயலாது. இதனால்தான் தலைமை வைத்தியர் பதவியை நீங்கள் மீண்டும் பொறுப்பேற்றால் எனக்கு இலகுவாக இருக்கும்'.

'நான் எடுப்பதானால் இரண்டு நிபந்தனைகள் உண்டு. இனிமேல் நிர்வாக குழுவுக்கும் எனக்கும் எந்த தொடர்பும் இருக்காது. எனது விடயங்கள் உங்கள் மூலமாகத்தான் நடைபெறும். இரண்டாவது விடயம் என் மீது ஏற்பட்ட காழ்ப்புணர்வில் பழிவாங்கப்பட்ட அப்பாவியாகிய சிவாவை உள்ளெடுக்கவேண்டும்'.

'காலோஸ் நீர் கேட்ட விடயங்கள் ஏற்கனவே நடந்து விட்டன. நான் மனேஜர் என்ற முறையில் நிர்வாக குழுவில் அங்கத்தினராக நியமிப்பதாக சொல்லியிருக்கிறார்கள். அதற்கு முக்கிய காரணம் புதிய கட்டிடம் விடயமாக பேசுவதற்கு நான் அங்கு இருப்பது பல நடைமுறை சிக்கல்களையும் நேர விரயத்தையும் குறைக்கும். வைத்தியசாலை விடயங்களை நிர்வாகக் குழு என் மூலம் அறிந்து கொள்ளும். அடுத்ததாக நான் சிவாவிடம் சென்று ரிமதி பாத்தோலிஸ்சோடு நிர்வாககுழு தெரிந்தோ தெரியாமலோ துணை போனதற்காக நிர்வாக குழுவின் சார்பில் மன்னிப்பு கேட்கப் போகிறேன். தவறு நடந்தால் மன்னிப்பு கேட்டபின்புதான் நல்லிணக்கம் ஏற்படும்'.

'அப்பொழுது எனக்கு மீண்டும் பதவியை ஏற்பதில் எந்த ஆட்சேபனையும் இல்லை'.

□ □ □

**கா**லை நேர தேநீர் அறையில் வெளிப்புறத்தில் தனியாக இருந்து தேநீர் அருந்திக் கொண்டிருந்த போது ஷரன், சுந்தரம்பிள்ளையின் எதிரே சிரித்தபடி வந்து எதிரே இருந்த கதிரையில் அமர்ந்து கொண்டாள். இறுக்கமான கறுப்பு ஜீன்ஸ் அணிந்து அதற்கு மேல் பொருத்தமாக கருப்பு புள்ளி கொண்ட வெள்ளை நிறமான மேற்சட்டையும் அணிந்திருந்தாள். வைத்தியர்களுக்கான வெள்ளை மேலங்கியை தனது உடையின் மேல் அவள் அணிந்திருந்தாலும் அந்த மேலங்கி முன்பகுதி திறந்து விடப்பட்டிருந்ததால் அவளது முன் அழகுகள் அப்படியே தெரிந்தன. வழமையை விட பளிச்சென்று சற்று முன்னால் செய்து வைத்த தங்கச்சிலை போல் தெரிந்தாள். அவள் மிருக வைத்தியம் படிக்காமல் ஏதாவது பிரான்சு அழகுசாதானப் பொருட்களுக்கு மாடலாக சென்றிருந்தால்

பலரின் இதயவலிகளுக்கு மூலகாரணமாக இருந்திருப்பாள். சிறிய ஓலைக்குடிசைக்குள் பெட்ரோமக்ஸ் லைட்டை வைத்தால் அந்த குடிசையை மீறி வெளியே வரும் பிரகாசம் போல இந்த வைத்தியசாலைக்கு இவளது அழகின் ஒளி அதிகமாகிவிட்டது. இந்த வைத்தியசாலையில் வேலை செய்பவர்களில் போலின், ஜோவான் போன்ற நர்சுகள் சராசரிக்கு மேற்பட்ட அழகானவர். அதே போல் புதிதாக சேர்ந்த கத்தரின் என்ற வைத்தியரும் சிறிது உயரம் குறைந்தாலும் செந்தீ போன்ற தலையுடன் கண்ணை அள்ளும் அழகானவள். அவர்களுடன் பேசும் போதும் பழகும்போதும் சாவகாசமாக நட்பாக பேசும் சுந்தரம்பிள்ளைக்கு அவர்களிடம் இல்லாத கவர்ச்சி ஷரனிடம் இருப்பது உடல் மொழியா அல்லது மோகனமான சாகஸமா தெரியாது. உடலின் அசைவுகள் அவளை நித்திய நர்த்தகியாக பிரகாசிக்க வைத்தது. அவளது அருகே நிற்பவர்கள் அடையும் பாதிப்பு பிரகாசமான விளக்கின் அருகே செல்லும் போது உடலில் தகிக்கும் வெப்பம் போல் இருக்கிறது என மனதில் அச்ச உணர்வை கொடுத்தது.

போர்க்களத்தில் உடல் கவசங்களும், ஆயுதங்களும் திடீரென இல்லாமல் போய், நிராயுதபாணியாக்கப்பட்ட போர்வீரன் கூட மற்போர் புரிய முயற்சிக்கும் மனநிலையில் இருப்பான். ஆனால் இவள் மொத்தமான சரணாகதி கேட்டாலும் தவறில்லை என எண்ணும் போது இவளது அவயவங்கள் கூரிய போர்க்கருவிகளாக மாறி உயிர்ப்பலி கேட்கிறதே. இவள் ஒரு புராதன காலத்தில் உயிர்காவு வேண்டும் தேவதையோ?

இவளை விலத்தி போவதே பிரச்சினையை தவிர்க்க சிறந்த வழியாக இருக்கும் என சிந்தித்தான் சுந்தரம்பிள்ளை. அழகான பறவையாக இருந்தாலும் அதனது கூரிய அலகு நகம் போன்றவற்றை நினைத்து நெருங்கிப் பழகாமல் இருப்பது தூரத்தில் இருந்து பார்த்து ரசிப்பது அச்சம் மட்டுமல்ல முன்னெச்சரிக்கை காரணமானதுதான். சாம், நொறேல் போன்றவர்கள் ஏற்கனவே ஷரனைப்பற்றி கூறிய கதைகள் சுந்தரம்பிள்ளையின் மனதில் ஆழமாக பதிந்திருந்தது.

எதுவானாலும் குறைந்த பேச்சுடன் சிறிய காலை வணக்கத்தோடு அவளை கடந்து மீண்டும் வேலைக்கு போக நினைத்து விரைவாக தேனீரை குடித்த போது ‘சிவா உனது பிரச்சினைகளை கேள்விப்பட்டு மனம் வருந்தினேன். நான் அதைவிட பெரிய பிரச்சினையில் அகப்பட்டு இருந்ததால் அன்று நடந்த வைத்தியர் கூட்டத்துக்கு வர முடியவில்லை.

ஒவ்வொரு வார்த்தைகளும் உறையில் சுத்தப்படாத சுவிஸ் நாட்டு கருப்பு சொக்லட் போல் வெளிவந்து விழுந்தன. அவளது முகத்தில் வழக்கத்தைவிட பூரிப்பும் அலங்காரமும் தெரிந்தது. நேரடியாக அவளைப் பார்த்து பேசினால் 'என்ன அள்ளி விழுங்குவது போல் பார்க்கிறாய் என்று கேட்டு விடுவாளோ என்ற அச்சத்தில் அவளது இடுப்பைப் பார்த்தபடி 'என்ன உனது பிரச்சினை?' என்ற போது கண்களை சிறிது சுழற்றி விட்டு தோளை திருப்பி கொண்டு மேலும் அருகில் நாற்காலியை இழுந்து அருகில் வந்தாள்.

'என்ன கேட்டதற்கு பதில் பேசவில்லை?'

'நான் உனக்கு சொல்லி என்ன பிரயோசனம். நீ என்னைக் கவனிப்பதில்லையே'.

'என்ன புதிர் போடுகிறாய்?'

எதிரில் இருந்த சுந்தரம்பிள்ளையின் நாய்காலியில் தனது காலணிகளை கழற்றிய வெறும் பாதங்களால் உதைத்தபடி 'நான் கிறிஸ்ரியனிடம் இருந்து பிரிந்து பெற்றோருடன் இருக்கிறேன். நல்ல ஆம்பிளைகள் யாராவது உன்னைப் போல் அமைதியானவனாக இருந்தால் எனக்கு தகவல் சொல்' எனக் கண்களை சிமிட்டினாள்.

அதிர்ச்சியை வெளிக்காட்டாமல் இவளுக்கு அசாத்தியமான துணிவு மட்டுமல்ல ஆண்களை நித்தியமான காம உணர்வில் மூழ்கடிக்கும் வேலையை கால்விரல்களாலே செய்கிறாளே என நினைத்தபடி 'என்னைப்போல கறுப்பாக இருந்தால் பரவாயில்லையா?

'கறுப்பிற்கு நான் போனஸ் புள்ளிகள் தருவேன்' என சிரித்து இடது காதை மறைத்த அவளது கூந்தலை கைகளால் எடுத்து வலது பக்கத்தில் விட்டு அழகிய கழுத்தை சிறிது சாய்த்தாள்.

ஆண்கள் மனதில் விரகதாபத்தை ஊட்டும் செய்கைகளை காலையில் பத்து மணியளவில் செய்கிறாளே படுபாவி. இவளுடன் பேசினால் இன்றைய பொழுது எப்படி முடியுமோ 'ஷரன் நான் வேலைக்கு போகவேண்டும்' என்றதும் ' என்னை வெட்டி விட்டு போகிறாய்'. என்ற படி கால்களை நீட்டி வழியை குறும்பாக தடுத்தாள்.

அந்த வழியால் வந்த கொலிங்வூட் 'தம்பி கவனம். உடலையும் மனதையும் பார்த்துக் கொள். டிராமாக் குயினின் பேச்சுகளை உண்மையென நம்பாதே

'எப்படி கொலிங்வூட் இன்னும் பழைய பூனைக் கடியின் நினைவுதான் ஷரன்மீது கோபம் தீரவில்லையா? ' என சொல்லிய படி அந்த கொரிடோரில் திரும்பி மருத்துவ ஆலோசனை அறைக்கு சென்றான்.

அந்த அறையில் ஆதர் அல்பிரட் ,சுந்தரம்பிள்ளைக்காக காத்துக் கொண்டிருந்தார்.

பார்த்தவுடனே சுந்தரம்பிள்ளைக்கு முதல் சந்திப்பிலே அவரில் மதிப்பு வந்து விட்டது. ஆறடிக்கு மேற்பட்ட உயரத்துடன் தீர்க்கமான கண்களும் கூரிய மூக்கும் அவரை ஒரு சதாரணமான மனிதராக காட்டவில்லை.

'சிவா நான்தான் ஆதர். இன்றுதான் இந்த வைத்தியசாலைக்கு இருபது வருடங்களுக்கு பின்பாக வந்திருக்கிறேன். நானும் உங்களைப் போல்தான் பஞ்சம் பிழைக்க இந்த நாட்டுக்கு பெற்றோரால் ஐந்து வயதில் கப்பலில் கூட்டிவரப்பட்டேன். அந்தக் கப்பல் இரண்டு நாட்கள் கொழும்பில் சாப்பாட்டுப் பொருட்களை வாங்குவதற்காக தங்கி நின்றது. கண்ணுக்கு எங்கும் பச்சையாக தெரிந்தது மட்டும்தான் இப்பொழுதும் நினைவில் இருக்கிறது. அந்தக் காலத்தில் சிலோன் எனக்கூறினார்கள் இல்லையா?'

புதிதாக ஒருவருடன் பேசும் போது அவருக்கு இலகுவான விடயத்தையும் நெருக்கமான விடயத்தையும் பேசி பேச்சை ஆரம்பிக்கும் போது பேச்சுவார்த்தை இலகுவாக இருக்கும். பல அவுஸ்திரேலியர்களிடம் இந்தப் பழக்கம் உள்ளது. நேரடியாக விடயத்துக்கு வந்து விடுவது கீழைத் தேசத்தவரது பழக்கம். பேசப்படும் விடயம் விருப்பமற்ற விடயமாக இருக்கும்போது மேற்கொண்டு பேசமுடியாது பலருக்கு சங்கடத்தை ஏற்படுத்தி விடுகிறது. அதன் பின்னால் பேச்சுவார்த்தைகளை தொடர முடியாது போய்விடுகிறது. அடிப்படையில் எல்லோருக்கும் மொழி பேசுவதற்கு தெரிந்தாலும் அந்த மொழி சில மனிதர்களிடம் சிற்பியின் கையில் உளி போல் லாவகமாக பிரயோகிக்கப்படுகிறது. மற்றவர்கள் அதை கசாப்பு கடைகாரனின் கத்தி போல் பாவிக்கிறார்கள்.

‘எழுபதுகளில்தான் சிறிலங்கா என மாறியதும் அங்கு சண்டை தொடங்கியது. சண்டையால் என் போன்றவர்கள் குடும்பங்களாக வெளியேறும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது’.

‘சண்டை என்பது நாடுகள், இனங்கள் ஏன் தனிமனிதர்களை விட்டு வைப்பதில்லை. எவ்வளவு உயிர்சேதம் பொருட்சேதம் ஏற்படுகிறது? நல்ல வேளை நாங்கள் இந்த நாட்டில் குண்டு வெடிப்பின் சத்தங்கள் கேளாமல் கந்தக மனதை சுவாசிக்காமல் அமைதியாக வாழ முடிகிறது. ஆனால் அதைப் பலரால் உணரமுடியாதது துர்ப்பாக்கியம்’

‘உண்மைதான். என்னையும் ரிமதியையும் கூட விடவில்லை’

‘இங்கே இப்படியான சண்டைகள் தேவையற்றது. நமக்குச் சிலரைப் படிக்கும்.சிலரைப்பிடிக்காது. ஆனால் நமக்கு பிடிக்காதவர்கள் நம்மோடு வேலை செய்யக்கூடாது என நினைப்பது நல்லதல்ல. இந்த வைத்தியசாலையின் மனேஜராக இன்று முதல் நான் பொறுப்பு ஏற்கிறேன். பல விடயங்களை ஆராய்ந்து விசாரித்துப் பார்த்தேன். அந்த ரோசியின் எக்ஸ்ரேயை கூடப் பார்த்தேன். அந்த ஒப்பரேசனில் எந்தத் தவறும் இல்லை. அந்த விடயத்தில் ரிமதி பத்தோலியஸ் நடந்தது தவறானது. உமக்கு நடந்தவற்றிற்கு நான் நிருவாகத்தின் சார்பில் மன்னிப்பு கேட்கிறேன்’.

‘ஆதர், என்னைப் பொறுத்தவரை ரிமதி பத்தோலியஸ் ராஜினாமா செய்தவுடன் இந்த விடயம் முடிந்துவிட்டது. அத்துடன் இந்த விடயத்தை முற்றுப்புள்ளி வைத்து விட்டு அதை கடந்து போக விரும்புகிறேன். தீராத சண்டை நடக்கும் நாட்டில் இருந்து புகலிடம் தேடி வந்தேன். இங்கு இப்படி சிறிய சண்டைகளில் ஈடுபட்டு நேரத்தை வீணாக்க விருப்பமில்லை. என் வாழ்வுக்காலத்தை முடிந்தவரை பிரயோசனமாக செலவிடுவதை விரும்புகிறேன். இலங்கையில் இருந்து இங்கு வந்த பல மிருகவைத்தியர்கள் இங்குள்ள பரீட்சையில் தேர்வு பெறாமல் தொழிற்சாலைகளிலும், டாக்சி ஓட்டுனராகவும் வேலை செய்யும் போது நான், கடினமாக படித்து இங்கு வேலை செய்யத் தகுதி பெற்றேன். இதை வீணாக்க நான் விரும்பவில்லை. எனது வழக்கறிஞர் வேலை நீக்கத்திற்கு எதிராக வைத்தியசாலைமீது வழக்குப் போட ஆலோசனை கூறியபோது அதனாலே மறுத்தேன். என்னைப் பொறுத்தவரையில் உங்களைப் போன்ற ஒருவர் இந்த வைத்தியசாலைக்கு வருவது எனது விருப்பம். நான் நிர்வாகக் குழு அங்கத்தவர்களிடம்

என்னிலும் பார்க்க சீனியரான மிருகவைத்தியர் ஒருவர் நான் செய்தது தவறு என முடிவுக்கு வந்தால் நானே விலகுகிறேன் என்றேன். எனது செய்கையில் நியாயம் இருப்பது தெரிந்ததால் நான் இந்த ஒரு மாதம் மனம் தளராது போராடினேன். இந்த வைத்தியசாலையை நிர்வாகம் செய்ய புது இரத்தம் தேவை என்பது எனது விருப்பமும் ஆகும். இதைத்தவிர இந்த வைத்தியசாலையில் நாலு அல்லது ஐந்து வருடங்கள் காலோஸ் மற்றும் உங்களைப் போன்றவர்களுடன் வேலை செய்து, என்னை வெளியுலகிற்கு தயாராக்கிக் கொள்ள நான் விரும்புகிறேன். இதையே எனது இலட்சியமெனவும் நீங்கள் எடுத்துக் கொள்ளலாம்'

'சிவா உமது மன உறுதிக்கும் தெளிவான சிந்தனைக்கும் எனது பாராட்டுகள். புதிதாக குடியேறியவர்களது கஷ்டத்தை முற்றாக தெரியாவிட்டாலும் எனது தாய் தந்தையரைப் பார்த்து புரிந்து கொண்டேன். எனது தந்தை ஆறு நாட்களில் பன்னிரண்டு மணித்தியலங்கள் வேலை செய்து எங்களைப் படிக்கவைத்தார். ஞாயிற்றுக்கிழமை தேவாலயத்திற்கு போகவில்லை என்றால் அன்றும் வேலை செய்திருப்பார். அக்காலத்தில் ஞாயிற்றுக்கிழமை மட்டுமே எங்களுக்கு இலகுவான நாளாக இருக்கும்.அம்மாவின் மனம் தேவாலயத்துக்கு போவதை பற்றி சிந்திப்பதால் எங்களில் அதிக கவனம் இராது' என சொல்லிவிட்டு சிரித்தபடி காலைப் பொழுதிலே முக்கிய பிரச்சினைகளை தீர்த்த திருப்தியுடன் ஆதர் மீண்டும் தனது ஆபிசை தூசி தட்டி துப்பரவாக்கத் திரும்பி சென்றார்.

எழுபது வயதிலும் கம்பீரமாக செல்லும் ஆதரின் மனம்திறந்த பேச்சு சுந்தரம்பிள்ளைக்கு பிடித்திருந்தது. இந்த மனிதரின் வயதில் என்னால் இப்படி நடக்க முடியுமா என்ற சிந்தனை வந்து போக தவறவில்லை.

□ □ □

**நா**ட்களும் கிழமைகளும் வேகமாக கடந்து சென்ற பின் ஒரு மாலைப் பொழுது நாலு மணியளவில் சுந்தரம்பிள்ளை வழக்கமாக செல்லப்பிராணிகளின் மருத்துவ ஆலோசனைகளைச் செய்து கொண்டிருக்கும் போது இரண்டு இளைஞர்கள் உள்ளே வந்தார்கள். சிறிது உயரமாக இருந்தவர் தனது கையில் கறுப்புப் பூனையை வைத்து நெஞ்சோடு அணைத்தபடி உள்ளே வந்தார். இருவரிலும் அண்ணன் தம்பி போன்ற முகச்சாயல் இருந்தது. இருவரது தோள்களும் எடை தூக்கி பயிற்சி செய்பவர்களைப் போல வீங்கி விரிந்து புடைத்திருந்தது. அவர்களது நெஞ்சுப் பாகம்

விரிந்து இடுப்பு பகுதி ஒடுங்கி மல்லர்கள் போல் இருந்தார்கள். அவர்கள் இருவரும் மஞ்சளும் பச்சையுமான அவுஸ்திரேலிய தேசிய வர்ணத்தில் அரைக்கை ஸ்போட்ஸ் சேட் அணிந்திருந்தார்கள். விளையாட்டு வீரர்களாக பார்வைக்கு தெரிந்த அவர்களுக்கு இருபத்தைந்துக்கு வயதுக்கு கீழ்தான் இருக்கும் போல் தெரிந்தது. அவர்களது செல்லப்பிராணியின் கோப்பில் உள்ள அவர்களது பெயர் போலந்து நாட்டை சேர்ந்ததாக இருந்தது. இந்த வைத்தியசாலையில் பல நாட்டவர்கள் வருவதால் பெயரில் வைத்து எந்த நாட்டின் பாரம்பரியத்தை சேர்ந்தவர்கள் என்பதை அறிந்து கொள்வது சுந்தரபிள்ளையின் மனதில் குறுக்கெழுத்து போட்டி போன்று ஒரு வித மனக்கணிப்பு பயிற்சியாக மாறிவிட்டது.

அந்த இளைஞர்களில் பூனையை வைத்திருந்தவர் மேசையில் பூனையை விட்டதும் அந்தப் பூனையின் தலையை மற்றவர் கைகளால் தடவினார். அவர்களது அணைப்பு, தடவுதல் என்பன இருவரும் அந்தப் பூனையை அதிகமாக நேசிப்பவர்கள் எனக் காட்டியது. ஒரு வீட்டில் இரு சகோதரர்களால் அந்தப் பூனை அன்புடன் வளர்க்கப்படுவதாக அனுமானிக்க முடிந்தது.

'டொக்டர் இந்த ஸ்ரார் பேபியின் தலையில் ஒரு கட்டி உள்ளது' என சுட்டிக் காட்டியதும் அது என்ன என்பதை சுந்தரம்பிள்ளை உடனடியாகப் புரிந்து கொண்டான்.

'இது வேறு ஒரு பூனையின் கடியால் வந்தது. இந்த கட்டியில் இருந்து சிதலை எடுக்கவேண்டும். இதை இலகுவாக எடுக்க முடியும். ஆனால் நீங்கள் வெளியில் இருப்பது நல்லது. பூனையை பிடித்துக்கொள்ள எனக்கு ஒரு நேர்சின் உதவி வேண்டும்'.

'நாங்கள் உதவி செய்கிறோம். எங்களுக்கு பிடிப்பதற்கான திடகாத்திரம் உள்ளது' என உதவியாக வந்தவர் தனது கைகளை மடக்கி புஜபலத்தை காட்டினார்.

வீங்கிப்புடைத்திருந்த அந்தக் கைகளால் பூனையை மட்டுமல்ல பெரிய புலியைக் கூடப் பிடிக்கக் கூடிய பலம் பொருந்தியது என்பது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டது.

இந்த நேரத்தில் சாம், பின் பகுதியால் உள்ளே வந்ததால் அவர்களது உதவியை நேரடியாக நிராகரிக்காமல் 'எனது நேர்சுக்கு இதற்குதான் வைத்தியசாலை வேதனம் கொடுக்கிறது. ஆனால்

நீங்கள் இந்த அறையில் நின்று நாங்கள் செய்வதைப் பார்ப்பதற்கு எனக்கு ஆட்சேபனை இல்லை'

'நாங்கள் பார்த்துக் கொண்டிருந்தால் அடுத்த முறை நாங்களே இதை செய்யலாம். வைத்தியரும் தேவை இல்லை. எங்களுக்கு பணமும் விரயமில்லை. ஆனால் என்ன, உங்களுக்கு வேலை இல்லாமல் போய்விடும்' எனச் சிரித்தபடி கூறினார் பூனையை கொண்டுவந்தவர்.

தனக்குள் ஒரு நமட்டு சிரிப்புடன் சாம் 'அது நல்லதுதான் நண்பர்களே. நாங்கள் வேறு வேலை தேட வேண்டி இருக்கும். நீங்கள் ஒலிம்பிக்குக்கு பயிற்சி எடுக்கிறீர்களா?

'நாங்கள் ஏற்கனவே எடை தூக்கும் போட்டியில் அவுஸ்திரேலிய தேசிய குழுவில் தேர்ந்தெடுக்கப்பட்டு தற்பொழுது சிறப்பு பயிற்சிக்கு அடுத்த மாதம் கான்பரா செல்ல இருக்கிறோம்' என இளையவராக இருந்தவர் கூறினார்.

'உங்களுக்கு வெற்றி கிடைக்க வேண்டும். எங்கள் வாழ்த்துகள்' என சாம் சொல்லிவிட்டு பூனையை கையில் வாங்கினான்.

சாமின் கையில் மிருகங்கள் வரும் போது மிகவும் ஆறுதலடைந்துவிடும். அவன் செல்லப்பிராணிகளை கைகளில் எடுக்கும் போது அவைகள் அரை மயக்கத்தில் கண்ணை மூடிவிடும். மிருகங்களை தூக்குவது ஒரு கலை. ஒவ்வொரு மிருகத்தையும் வெவ்வேறு விதமாக தூக்கவேண்டும். இதைவிட மிருகங்கள் மனிதர்களின் உடல் மணத்தில் அவர்களது உணர்வை புரிந்து கொள்கிறது. முக்கியமாக குதிரைகள், நாய்கள் மனிதர்களின் பயத்தை இலகுவாக தெரிந்து கொள்ளும். இதே போல் பூனைகளாலும் தங்களுக்கு ஆறுதலளிக்கும் இடங்களையோ ஆபத்தான இடங்களையோ புரிந்து அடையாளம் கண்டு கொள்ளமுடியும்.

சாம் மேசையில் வைத்து அந்த ஸ்ரார் என்ற கறுப்பு பூனையை பிடித்த போது 'இந்த கட்டியின் முனையில் சிறிய கீறல் ஏற்படுத்தினால் முழுச் சீழும் வடிந்துவிடும். அதைச் சுத்தப்படுத்தி அன்றிபயற்றிக் தருவோம்' எனக் கூறினான். இரண்டு இளைஞர்களும் பரிசோதனை மேசையில் இருந்து விலகி நின்றார்கள்.

சுந்தரம்பிள்ளை கூரான பிளேட்டால் கட்டியின் கனிந்த பகுதியில் மெதுவாக வெட்டியதும் இரத்தம் கலந்த சீழ் வெளியே வந்தது.

அந்தச் சீழைப் பஞ்சால் துடைத்துச் சுத்தப்படுத்திய போது அருகில் இரண்டு பெரிய இடியோசை போன்ற சத்தங்கள் அடுத்தடுத்து கேட்டன. நிமிர்ந்து பார்த்த போது இரண்டு இளைஞர்களும் இப்பொழுது நிலத்தில் மயக்கமாக கிடந்தார்கள். இரண்டு மல்லர்கள் மல்யுத்தத்தின் இறுதியில் விழுந்து கிடப்பது போல் இருந்தது. மல்யுத்தச் சண்டையில் தோற்ற மல்லர் மட்டுமே விழுந்து கிடப்பார்கள். வென்றவர் நின்றுகொண்டிருப்பார். இங்கே அதுதான் வித்தியாசம். குனிந்து நெஞ்சுப்பகுதியை பார்த்தபோது அவர்களது சுவாசம் தெளிவாகவும் சீராகவும் இருந்தது.

சுந்தரம்பிள்ளை பூனையை விட்டு விட்டு பக்கத்து தண்ணீர் குழாயில் இருந்து இரண்டு கைகளால் குளிர்ந்த தண்ணீரை எடுத்து இருவரது முகத்திலும் தெளித்த போது இருவரும் இப்பொழுதுதான் நித்திரையிலிருந்து எழுவது போல் பரக்க பரக்க எழுந்தார்கள்.

‘நான் ஸ்ராரை விட்டு விட்டு உங்களுக்கு மருத்துவம் பார்க்கும் நிலை வந்து விட்டதே. ஆனால் ஸ்ராரின் வைத்தியத்துக்கு பணம் கொடுத்தால் போதுமானது ’ சுந்தரம்பிள்ளை சிரித்தபடி

‘மன்னிக்க வேண்டும்’ என்றபடி ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்தார்கள்.

அந்த சிரிப்பில் சங்கடம், அவமானம் கலந்து, குறும்பு செய்து அகப்பட்ட பாடசாலை சிறுவர்கள் போல் நெளிந்தார்கள்

‘உங்கள் ஸ்ராரை நீங்கள் கையில் பிடித்தீர்கள் என்றால் நான் மருந்து எடுத்து தருகிறேன்’ என சாம் அவர்கள் கையில் கொடுத்தான்.

‘எதாவது தேனீர் அல்லது காப்பி அருந்துகிறீர்களா’ என்று மீண்டும் சாம் கேட்ட போது சிவந்த முகங்களுடன் ‘வேண்டாம்’ என்றார்கள்.

‘அடுத்த முறை நீங்கள் வந்தால் உங்களை வெளியில் இருக்க வைத்துவிட்டுதான் உங்கள் பூனைக்கு வைத்தியம் செய்ய வேண்டும்’ என சொல்லி மருந்துகளை இளையவனது கையில் கொடுத்து சாம்‘ஒலிம்பிக்கில் உங்கள் வெற்றிக்கு எங்கள் வாழ்த்துகள்’என சொல்லி அவர்களை வெளியனுப்பினான்.

## 22

மெல்பனில் நகரின் மத்தியில் உள்ள ஒரு பிரபலமான மதுச்சாலைக்கு அன்ரூவின் பிறந்தநாள் அழைப்பை ஏற்று மாலை ஆறரை மணியளவில் வந்து சேர்ந்த சுந்தரம்பிள்ளைக்கு வாசலுக்கு சென்ற பின்பு, தனியாக உள்ளே செல்ல தயக்கமாக இருந்தது. பல தடவைகள் நண்பர்களுடன் சேர்ந்து சென்றிருந்தாலும் மதுச்சாலைக்கு தனியாக செல்வது என்பது இன்னமும் பழக்கத்தில் வரவில்லை. ஒரு கலாச்சாரத்தில் வளர்க்கப்பட்ட பின்பு மற்றைய கலாச்சாரத்தில் மாறுவது ஓடும் இரயிலில் இருளில் ஒரு கம்பாட்மென்ரில் இருந்து மற்றதற்கு செல்வது போன்று இலகுவான காரியமாக இருக்கவில்லை.

சனிக்கிழமையாதலால் மெல்பனின் சிறந்த மியூசிக் குழு ஒன்றின் சங்கீதம் இருந்தது. நிகழ்ச்சி மாலை ஆறுமணியில் இருந்தே ஆரம்பித்ததால் மதுச்சாலை சங்கீதத்தால் மட்டுமல்ல, கூட்டத்தாலும் நிரம்பி வாசல்வரை வழிந்தது. கோடைகாலத்தின் நீண்ட பகலாக இருந்தபடியால் எங்கும் மக்களின் கூட்டமாக இருந்தது. அதேபோல் கார்கள் எங்கும் நிறுத்தப்பட்டு எதுவித வெறுமையான இடமும் தென்படவில்லை. நல்லவேளையாக கார்கள் நிறுத்த இடம் இருக்காது என்பதால் ரயிலில் வந்தது புத்திசாலித்தனமானது என மனதுக்குள் தன்னை மெச்சிக் கொண்டான். சாருலதாவுக்கும் சேர்த்து விருந்துக்கு அழைப்பு இருந்தாலும் இப்படியான இடங்கள் அவளுக்கு ஒத்துவராது எனக் கூறி அவள் மறுத்ததும் நல்லதாகிவிட்டது. இருவர் வந்திருந்தால் நிச்சயமாக காரில்தான் வந்திருக்க வேண்டும்.

சிறிது நேரம் அந்த மதுச்சாலை வாசலருகே தயங்கியபடி நின்றபோது காலோசும் சாமும் வந்தார்கள். வரும் பொழுதே காலோஸ் ‘அன்ரூவின் நண்பர்கள் பைத்தியக்காரர்கள். ஆனாலும்

மறுக்க முடியாது. அன்ரூவுக்காக வந்தேன்' எனச் சொல்லியபடி சுந்தரம்பிள்ளையை உள்ளே அழைத்துச் சென்றான்.

அந்த மதுசாலையின் வாசலுக்கு எதிர்த்ததாக இருந்த கீழ்ப்பகுதியில் உள்ள மேடையின் கீழே, மேலும் சில வாத்திய கலைஞர்கள் தங்கள் வாத்தியங்களை ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தார்கள். அந்தக் கலைஞர்களுடன் பேசிக்கொண்டிருந்த அன்ரூ அதை விட்டுவிட்டு 'ஹலோ' எனக்கூறியபடி நண்பர்களுக்காக ஒதுக்கி வைத்திருந்த மேசையில் மூவரையும் அழைத்துச் சென்று இருத்திவிட்டு மீண்டும் மேடையை நோக்கிச் சென்றான்.

அன்ரூவினது மற்றைய நண்பர்கள் அருகே இருந்த நாலு மேசைகளில் கூட்டமாக இருந்தார்கள். பிறந்த தினத்துக்கு இருபதுக்கு குறைந்தவர்களே அழைக்கப்பட்டிருந்தார்கள். அதில் பெரும்பாலனவர்கள் மேற்கத்தைய சங்கீத குழுவைச் சேர்ந்தவர்கள். வழமையான மேற்கத்தைய விருந்துக்கு வரும் உடையலங்காரத்தில் இருந்து இவர்களது அலங்காரம் வேறுபட்டிருந்தது. ஆண்கள் பெரும்பாலும் லெதர் கோர்ட், நீண்டு வளர்ந்த தலைமயிர்களுடன் முழங்கால் உயரமான குதிரை சவாரிக்கு போடும் பூட்சுகளுடன் இருந்தார்கள். பெண்கள் ஒவ்வொருவரும் வித்தியாசமான வடிவமைப்பான உடையில் இருந்தார்கள். ஆனால் எல்லோரும் கறுப்பு நிறத்தில் உடையணிந்திருந்தார்கள்.

எந்த நாட்டிலும் சங்கீதக்காரர்கள் தங்களை சக மனிதர்களில் இருந்து வேறுபடுத்தி காட்ட வேண்டிய தேவை உள்ளதோ?

வைத்தியசாலையில் இருந்து அழைக்கப்பட்ட காலோசும்,சாம் மற்றும் சுந்தரம்பிள்ளையும் வழமையான கோட்டு, சூட் உடையுடன் இருந்ததால் அந்த ஹோட்டலில் அவர்கள் தனித்து வித்தியாசமாக இருப்பதாக உணர்ந்தார்கள்.

'அன்ரூவை விட்டு மனைவி பிரிந்து போனது எனக்கு ஆச்சரியம் அளிக்கவில்லை. இந்தக் கூட்டத்தோடு ஐந்து வருடம் சீவிச்சது பெரிய காரியம்' என்றான் காலோஸ்

'அன்ரூவை திருமணம் செய்யும் போது பாண்ட் வாத்தியக்காரரோடு, டிரம் இசைப்பது தெரியாதா?' என சாம் கேட்டான்.

‘அன்ரூ ஒரு கிளப்பில் டிரம் அடித்த போது சந்தித்துத்தான் அவர்கள் திருமணம் செய்தார்கள்’.

‘அப்ப பிறகு என்ன?. டிரம் அடிப்பவன் வேணும் என்றால் இப்படித்தானே இருக்கும்’.

‘நான் நினைக்கிறேன் இவர்களது உடைகள் பழக்க வழக்கங்கள் புளித்துப் போய் இருக்கும். அதை விட இந்த சங்கீதகாரர் பெரும்பாலும் ஏதாவது போதைவஸ்து பாவிப்பவர்கள். குறைந்தது கஞ்சாவாவது பழக்கமாக இருக்கும்.

‘நீங்கள் ஊக அடிப்படையில் பேசுகிறீர்கள். அன்ரூ எந்தப் போதையும் பாவிப்பதாக தெரியவில்லை’ என இதுவரையும் கேட்டுக் கொண்டிருந்த சுந்தரம்பிள்ளைக்கு அந்த குறற்றச்சாட்டை கேட்டு பொறுக்க முடியவில்லை.

‘சங்கீதக்காரர்களைப் பற்றிய அறிவு சிவாவுக்கு போதாது’என்று காலோஸ் சொல்லிக்கொண்டிருக்கும் போது அன்ரூ வாய் நிரம்ப சிரிப்புடன் பிரசன்னமானான்.

‘காலோஸ் வெள்ளிக்கிழமை நடந்ததை நான் சொல்ல மறந்து விட்டேன். ஷரன் வேலை முடிந்து வரும் போது எனக்கு கட்டிப்பிடித்து முத்தம் தந்துவிட்டு தனக்கு வாழ்க்கையில் விடுதலை கிடைத்து விட்டதாக சொன்னது மாத்திரமல்ல, அதை கொண்டாட என்னை மதுசாலைக்க வரும்படி அழைத்தாள். அழைத்த போது அவளது கையொன்று எனது பின் பகுதியை தடவியபடி இருந்தது. நான் மறுத்து விட்டேன்’.

‘ஏன் அன்ரூ, நீதான் பலகாலங்களாக மழை பெய்யாத பாலைவனம்போல் காய்ந்து வெடித்து காற்றில் பறக்கும் நிலையில் இருக்கிறய். உள்ளே புகுந்து வேட்டையாடி விளையாடியிருக்கலாமே’ சாம் கண்களில் குறும்புடன்

‘சாம், இதில் நான் இப்பொழுது மிகக் கவனம். இன்னும் எனது பழைய மனைவியிடம் இருந்து விவாகரத்து பெற முடியவில்லை. அதைவிட வேலையிடத்தில் எந்த காதல் உறவுகளிலும் ஈடுபடக்கூடாது என்பதை காலோஸின் அனுபவத்தில் இருந்து பெற்றுக்கொண்டு வேலைசெய்யும் இடம் ஒரு தேவாலயத்திற்கு சமன் என்பதை ஒரு கொள்கையாக கடைப்பிடிக்கிறேன்’ கண்களை காலோஸை நோக்கி சிமிட்டியபடி.

‘நீ ஒரு பாஸ்டட், நான் சொல்லட்டுமா? ஷரனை நீ விலத்தி சென்றதன் காரணம் அவளை உன்னால் கையாள முடியாது. அவள் தினவெடுத்த போர்க் குதிரை என்பது உனக்கே தெரியும். உதைக்குப் பயந்துவிட்டாய்’ என செல்லமாக அவனை காலோஸ் முறைத்தான்.

சுந்தரம்பிள்ளைக்கு ஷரனைப்பற்றி அன்ரூ கூறிய விடயம் நம்பக் கூடியதாக இருக்கவில்லை. மிகவும் ஆச்சரியத்தை அளித்தது. அதே நேரத்தில் அந்த மாதிரியான விடயங்களில் ஈடுபடமாட்டாள் என்று உறுதியாக சொல்லவும் முடியாது. நண்பர்கள் மூவருக்கும் அவளில் சிறிது கூட மதிப்பு இல்லை என்பதும் தெரிந்ததால் அந்த விடயத்தில் அவர்களுடன் கலந்து பேசுவதை தவிர்ப்பதே ஷரனுக்கு செய்யும் உதவி என அவர்களிடம் இருந்து தன்னை விலத்திக் கொண்டான்

‘ஒகே போய்ஸ் உங்களது சண்டையை பிறகு வைத்துக் கொள்ளுங்கள்’ என்ற சுந்தரம்பிள்ளை எழுந்து எல்லோருக்கும் மதுவை வாங்கி வரச் சென்றான்.

□ □ □

பூனைப்பகுதியில் உள்ளே செல்லும் போது இடது புறத்தில் இருக்கும் ஒரு அறையில் இருபது பூனைகள் வைக்கப்பட்டு விசேடமாக கவனிக்கப்படுகின்றன. இந்தப் பகுதிக்கு வைத்தியர்களோ, நேர்சுகளோ செல்வதில்லை. உணவுகளை வைத்து கூடுகளை சுத்தப்படுத்துவது அந்தப் பகுதியில் வேலை செய்யும் மோறின் மற்றும் கெதர் எனும் உதவியாளரது பொறுப்பாகிறது.

வைத்தியசாலையில் கடந்த ஐந்து வருடங்களாக பராமரிக்கப்பட்ட ஜீனின் பூனைகள் பொருளாதார ரீதியில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தாத போதிலும் அந்தப் பூனைகளை வைத்திருக்கும் பகுதியில் வேலை செய்யும் மோறின், கெதரிடத்தில் பலத்த மன உளைவை ஏற்படுத்தியுள்ளது. ஐந்து வயதுக்கும் பதினைந்து வயதிற்குமான அந்த பூனைகள் இருபத்து நாலு மணிநேரமும் கூட்டில் இருப்பதால் அவைகள் சீறியும் சினந்தபடியும் இருந்தன.

மனிதர்களைச் சிறையில் வைத்திருக்கும் போது அவர்களுக்கு எதற்காக உள்ளே வைத்திருக்கிறார்கள் என்பது புரிந்திருக்கிறது. குற்றம் செய்தவர் தங்களுக்கு இது தண்டனை என்பது புரிந்ததால் குறைந்தபட்சம் அமைதியடைய முடியும். மனிதர்களுக்கு மட்டும் தண்டனையை புரிந்து கொள்ளும் ஆற்றல் இருக்கிறது. ஆனால் மிருகங்களுக்கு அதைப் புரிந்து கொள்ள முடியாத நிலையில் அவற்றின்

மூளையின் பரிமாணம் இருக்கிறது. இதனால் அவைகளுக்கு பல மன சிக்கல்கள் ஏற்படுகின்றன. வளர்க்கும் வீட்டு மிருகங்களை இதற்காகத்தான் அடிப்பதோ, காயப்படுத்துவதோ தடுக்கப்பட்டு அது அவைகளை துன்புறுத்துவதாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. இப்படி துன்புறுத்துபவர்கள் சட்டத்தில் தண்டிக்க இந்த நாடுகளில் வழி உண்டு.

மதம் வந்த யானை கட்டப்பட்டிருக்கும்போது அந்த யானையால் கட்டப்பட்டிருக்கும் காரணத்தை புரிந்து கொள்ள முடியாது. அதனால் கட்டை அறுத்துக்கொண்டு சுதந்திரமாக நடமாட விரும்பி அட்டகாசத்தில் ஈடுபடுகிறது. பல நகரங்களில், விலங்கியல் பண்ணைகள் மற்றும் மிருகக்காட்சிசாலைகளில் வைக்கப்பட்டிருக்கும் பல மிருகங்கள் மன உளைச்சலால் துன்பப்படுகின்றன. செயற்கையாக காட்டை, மலையை, நீர்நிலைகளை எவ்வளவு திறமையாக அமைத்து அவைகளுக்கு இயற்கையான சூழ்நிலையை கொடுக்க முயற்சித்த போதும் அவை திருப்தி தருபவையல்ல. அவற்றின் இயற்கைச் சூழலை தரமுடியாதவை. இப்படியான வதிவிடங்களில் வைத்திருக்கும்போது ஏற்படும் மனஉளைச்சலால் மிருகங்கள் தங்களைக் கீறியோ கடித்தோ காயப்படுத்திக் கொள்கின்றன. சில சந்தர்ப்பங்களில் மனிதர்களுக்கு எதிராக இயங்கி பார்வையாளரையோ அல்லது பராமரிப்பவரையோ கொலை செய்கின்றன. இவை தற்போது பலருக்கு புரிந்தாலும் இவற்றை தவிர்க்க முடியாமல் விலங்கியல் பண்ணைகளை அமைத்துக்கொண்டு வருகிறார்கள்.

ஐந்து வருடங்களாக அடைத்து வைத்திருக்கும் இந்தப்பூனைகளால் பல முறை மோறினும் ஹெதரும் காயப்பட்டுள்ளார்கள். தடிப்பான கை உறைகளை மீறி இந்த காயங்கள் ஏற்படும். இந்த விடயத்தை ஒரு விதமாக சமாளித்தாலும் அவர்களால் தாங்க முடியாமல் இருந்தது அவற்றின் உரிமையாளரான ஜீனின் தொல்லை. காலை பத்து மணியளவில் ஜீன் வந்தால் மோறின் ஒளித்து விடுவார். கெதர் தான் பொறுப்பில்லை என சமாளித்து விடுவது அவர்களின் வழக்கம். ஆனால் பத்து மணிக்கு முன்பு வந்தால் அப்பொழுது பூனைக்கூடுகளை சுத்தப்படுத்தி உணவளிக்கும் நேரமானதால் இருவராலும் தப்பிக்க முடியாது. அரை மில்லியன் டொலர் பெறுமதியான வீடு ஒன்று வைத்தியசாலையின் பெயரில் எழுதப்பட்டு இருந்ததால் ஜீனின் தொல்லை வைத்தியசாலை நிர்வாகத்தால் பொறுக்கப்பட்டது.

இந்த விடயத்தை எப்படி கையாள்வது எனப் புரியாததால் இவ்வளவு காலமும் அந்தத் துன்பத்தைத் தங்களது வேலையின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொண்ட மோறின் இதைப் பற்றி ஆதரிடம் முறையிட்டபோது உண்மையில் ஆதர் திடுக்கிட்டார்.

'எப்பொழுதோ இந்தப் பூனைகள் கருணைக்கொலை செய்யப்பட்டிருக்க வேண்டும். அந்தப் பூனைகள் காரணமில்லாமல் சித்தரவதைப்படுகின்றன. அவற்றை ஒவ்வொன்றாக யாருக்காவது சுவீகாரம் கொடுக்க முடியுமா?

'அதில் ஒன்று மட்டும் தேறும். மற்றவைகள் பைத்தியம் பிடித்தவை போல் காட்டுப் பூனைகள் ஆகிவிட்டன'.

'காட்டுப் பூனைகள் வளர்ப்பு பூனைகள் ஆகினது பூனைகள் வரலாறு ஆனால் வளர்ப்புப் பூனைகள் இங்கு மீண்டும் காட்டுப் பூனைகள் ஆகியது துயரமானது' எனக் கூறி தன் அறையில் இருந்து கீழே இறங்கி அந்த அறைக்கு சென்றதும் அந்த இருபது பூனைகளும் ஒரு நேரத்தில் சொல்லி வைத்தாற்போல் ஒன்றாக சீறத் தொடங்கின. சில நிமிட நேரம் கூட அங்கு ஆதரால் நிற்க முடியவில்லை. இந்தப் பூனைகள் இங்கு துன்பப்படுகின்றன என்பதை ஆதர் உடனே புரிந்து கொண்டதும் அந்த இடத்தை விட்டு அகலும் போது 'இன்று ஜீன் வந்ததும் எனக்கு தகவல் சொல்லுங்கள்' என சொல்லிவிட்டு அந்த இடத்தை விட்டு போக எத்தனித்து திரும்பும் போது சிறிய பெண் உருவம் ஒன்று குனிந்தபடி கறுப்பு உடையில் பென்குயின் போல் நடந்து உள்ளே வந்து கொண்டிருந்தது.

எதிரில் வந்த ஆதரை நிமிர்ந்து பார்த்துவிட்டு புன்முறுவலுடன்

'டொக்டர் ஆதர் என்னை நினைவிருக்கிறதா'?

'நினைவில்லாமல்?'.

'யார் தெரிகிறதா?'

'ஜீன்தானே?'

பக்கத்தில் இருந்த மோரினிடம் ஜீன் உற்சாகமாக 'எனது பூனைகளை அந்தக் காலத்தில் வைத்தியம் பார்ப்பவர் டொக்டர் ஆதர்தான்'.

இருவரிடமும் அன்னியோன்னியமான வார்த்தை பரிமாறல் நடந்த போது மோறின் அந்த இடத்தை விட்டு விலகினாள்.

‘இங்கே பார். ஜீன். உன்னோடு ஒரு விடயம் பேச வேண்டும். என்னறைக்கு வரமுடியுமா’ என்று கையை தோளில் போட்டு தனது மாடி அறைக்கு கைத்தாங்கலாக அழைத்து சென்று நாற்காலியில் இருத்தினார்

எதற்காக தன்னை அழைப்பது என்று தெரியாவிட்டாலும் நாய்காலியின் ஓரத்தில் இருந்தபடி சிறு குழந்தை போல் அந்த அறையை மேலும் கீழும் பார்த்தார் ஜீன்.

சிறிது நேரம் ஜீனை உற்றுப் பார்த்துவிட்டு ‘நான் வைத்தியராக நேரடியாக பேசவிரும்புகிறேன். உனது மனதுக்கு கஷ்டமாக இருக்கும். ஜீன், இன்று உனது பூனைகளை நான் பரிசோதித்தேன். அவைகள் எல்லாம் மனரீதியில் பாதிக்கப்பட்டு உள்ளன. உன்னை எனக்கு எத்தனை ஆண்டுகளுக்கு முன்பாக தெரியும்? பூனைகளை எவ்வளவு உன்னால் நேசிக்க முடியும் என்பது எனக்கு தெரியும். இப்படியாக உன்னால் எப்படி இந்த செல்லப்பிராணிகளை சிறையில் வைப்பது போன்ற இந்த செயலை எப்படி தொடர முடிகிறது?

உடல் நடுங்கியபடி கண்களில் நீர் அருவியாக எழுந்து மேசையை பிடித்தபடி ‘எனது பூனைகளை நான் ஒழுங்காக பார்த்தேன். அவைகள் எல்லாம் சந்தோசமாக எனது வீட்டில் வாழ்ந்தன. திடீரென வந்து என்னிடம் இருந்து பலத்காரமாக அவைகளை பறிக்க முயற்சித்த போது நான் விடவில்லை. முடிந்தவரை போராடிப் பார்த்தேன். பொலிசை கொண்டு வந்து பயமுறுத்தி எல்லா பூனைகளையும் எடுத்து வந்தார்கள். அதன் பின்பு நான் எனது வழக்கறிஞர் மூலம் நடவடிக்கை எடுத்த போது இந்த மாதிரியான முடிவுக்கு வந்தார்கள். இந்த நிலையை நான் உருவாக்கவில்லை என்பதை தெளிவாக சொல்கிறேன்’. என்பதை நிறுத்தி நிறுத்தி மெதுவாக சொன்னாலும் வார்த்தைகள் தெளிவாக வந்தன.

‘ஐந்து வருடத்திற்கு முன்பு நடந்த சம்பவத்தை நான் பேச வரவில்லை. கடந்த கிழமைதான் இந்த வைத்தியசாலையின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றேன். என்னைப் பொறுத்தவரை அந்த பூனைகள் ஐந்து வருடமாக சிறிய கூட்டில் அடைக்கப்பட்டு சிறைத்தண்டனை அனுபவிக்கின்றன. அதனால் இப்பொழுது காட்டு பூனைகள் போல் ஆகிவிட்டன. அவற்றின் மேல் வைக்கப்பட்ட உனது அளவு கடந்த நேசம் அவற்றிற்கு பாதகமாகிவிட்டது’.

சிறிது நேரம் ஆதரை துளைப்பது போல பார்த்துவிட்டு ‘அவைகளை என்ன செய்ய உத்தேசம்?’

‘அவற்றில் ஒரு பூனை மட்டும் நல்லதாக இருக்கிறது. அந்தப் பூனையை நான் சுவீகாரம் எடுத்து எனது பண்ணை வீட்டில் வைத்திருக்க போகிறேன். மற்றவற்றை கருணைக்கொலை செய்ய வேண்டும் என நினைக்கிறேன்’

ஜீன் அந்த இடத்தில் இருந்த தனது கதிரையில் அமர்ந்துகொண்டு நிலத்தை பார்த்தார்.

ஆர்தரும் எழுந்து நின்று ஜீனைப் பார்த்தபடி நின்றார். பூனை மேல் கொண்ட கருணையால் ஜீனை காயப்படுத்தியதாக உணர்ந்ததால் வார்த்தைகள் எதுவும் வரவில்லை.

சிறிது நேரத்தில் ஜீன் எழுந்து படிகள் வழியாக கீழே போன போது தோளில் தாங்கலாக பிடிக்கப் போன ஆதரை மெதுவாக உதறிவிட்டு மாடிப் படிகளில் ஆமையின் வேகத்தில் இறங்கிய போது சுவர்களை ஊன்று கோலாக தடவியபடி மெதுவாக ஊர்வதுபோல் சென்ற காட்சி ஆதரின் மனதை விட்டுப் பல வருடங்களுக்கு மறையாது.

கீழே சென்றதும் தன்னைப் பின் தொடர்ந்து சென்ற ஆதரிடம் ‘நான் தனியாகச் சென்று எனது பூனைகளுக்கு பிரார்த்தனை செய்து விடைகொடுக்க விரும்புகிறேன்’ எனக் கூறி விட்டு மீண்டும் பூனைகள் இருந்த பகுதிக்குச் சென்றார். வழக்கத்தைப் போல் அந்த நேரம் அங்கு மனித நடமாட்டம் இருக்கவில்லை.

தனது பூனைகள் வைத்திருந்த அறைக்குள் போய், அங்குள்ள ஒவ்வொரு பூனை அருகில் சென்று சில நிமிடம் முணுமுணுப்பது எதிர் அறையில் குனிந்து கொண்டிருந்த மோறினால் இரகசியமாக பார்க்க முடிந்தது. ஐந்து வருடத்துக்கு முன்பாக அந்தப் பூனைகள் இங்கு வந்த போது அவற்றிற்கு ஒவ்வொரு பெயர் இருந்தது. காலப்போக்கில் அவற்றின் தனித்துவமான பெயர்களை தொலைத்து எல்லாம் பொதுவாக ஜீனின் பூனைகள் என நாமம் சூட்டப்பட்டது. ஆனால், நிச்சயமாக ஜீனுக்கு அந்தப் பெயர்கள் இப்பொழுதும் நினைவில் இருக்கும்.

ஜீன் கண்ணீருடன் நடுங்கியபடி தனது பூனைகளுக்கான கடைசிப் பிரார்த்தனையை முடித்துக்கொண்டு வெளிவரும் போது ஆன்மாவை

அந்த அறையில் தனது பூனைகளிடம் தொலைத்து விட்டு உயிரற்ற சடலமாக வெளியேறும் காட்சியை தனது கவனிப்பில் இருக்கும் பூனையொன்றை பார்ப்பதற்காக அந்த வழியில், ஜீனை கடந்து சென்ற சுந்தரம்பிள்ளைக்கு தெரிந்தது.

□ □ □

ஒரு செல்லப்பிராணியாக நாயையோ அல்லது பூனையையோ வீட்டில் வளர்ப்பது அவுஸ்திரேலியாவில் இலகுவான விடயம் அல்ல. இந்தச் செல்லப்பிராணி வளர்ப்பை சரியாகச் செய்வதற்கு ஒழுங்குபடுத்தப்பட்ட பல சட்டதிட்டங்கள் நடைமுறையில் உள்ளன. செல்லப்பிராணிகள் வளர்ப்பவர்கள் உள்ளூர் ஆட்சிமன்றங்களில் பதிவு செய்வார் கம்பியூட்டர் சிப்ஸ் ஒன்று நாய்கள் பூனைகளின் முதுகுத்தோலுக்கு கீழ் ஊசி மூலம் செலுத்தப்பட்டு அடையாளப்படுத்த வேண்டும். இந்த முறையால் வீடுகளில் இருந்து வெளியே தப்பிச் செல்லும் நாய் பூனைகளையும் அவற்றின் உரிமையாளர்களையும் உடனடியாக அடையாளம் கண்டு கொள்ளமுடியும். அவைகள் நோயுற்றால் வைத்தியம் செய்து குணப்படுத்தாமல் இருந்தால் அவற்றின் உடமையாளர் மேல் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். உங்களது நாய்கள் மற்றவர்களை கடித்தாலோ அல்லது மற்ற நாய்களை கடித்தலோ உரிமையாளர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். சண்டைக்கு என இன விருத்தி செய்யப்பட்ட குறிப்பிட்ட இன நாய் வகைகளை வளர்ப்பது தடுக்கப்பட்டுள்ளது. அவற்றிற்கு அப்பால் நாய்களின் பராமரிப்பு என்பது இலகுவானதல்ல. அவற்றிற்கான கவனிப்பு நேரம், வெளியே கொண்டு செல்லும் நேரம் என்பனவற்றை ஒதுக்குவதற்கு தயாராக வேண்டும்.

என்ன குழந்தை வளர்ப்பதிலும் பார்க்க கஷ்டமாக இருக்கிறது என நினைக்கலாம். சமூகத்தில் ஒவ்வொரு மனிதனுக்கும் தனது குடும்பம், உறவினர்கள் என்ற பந்தங்களில் எழுதி வைக்காத சமூக ஒப்பந்தம் காலம் காலமாக நடைமுறையில் உள்ளது. ஆரம்பத்தில் உணவுக்கு வேட்டையாடும் மனித உறவு இறுக்கமாக இருந்தது. காரணம், உயிர் பாதுகாப்புக்கு ஒருவரில் ஒருவர் தங்கி இருந்தார்கள். அவை, குலம் சாதி என உருமாறி பிற்காலத்தில் அரசினது தொடர்பு அற்று ஒருவரை ஒருவர் நம்பி வாழும் காலத்தில் இந்த ஒப்பந்தம் தொடர்ந்து இருந்தது. ஆனால் நவீன நகராக்கம், அரசாங்கம், பொருள் முதல்வாத சமூக அமைப்பு மற்றும் அரச உதவிகள்

முதலான புதிய விடயங்களால் தற்போது தளர்ந்தாலும் குடும்பம் என்ற வட்டத்தில் இன்னமும் உறுதியாக உள்ளது.

மனிதன் தனது செல்லப் பிராணியாக ஒரு ஜீவனை வளர்க்கும் போது அவர்களது பொறுப்பு அவர்களது கலாச்சாரம் நம்பிக்கை சார்ந்து வேறுபடுகிறது. சீனா மற்றும் பல ஆசிய நாடுகளில் நாய்கள் உணவாகின்றன. மேற்கத்தையர்களுக்கு அதைவிட சகிக்க முடியாத விடயம் உலகில் ஒன்று இல்லை. நோர்வே மற்றும் ஜப்பான் போன்ற நாட்டவர்கள் கூட்டமாக சென்று திமிங்கிலத்தை வேட்டையாடுகிறார்கள். அதை மற்றைய ஐரோப்பியர் காட்டுமிராண்டித்தனமாக நினைக்கிறார்கள்.

சுந்தரம்பிள்ளை நாய் ஒன்றை வீட்டில் வளர்க்க விரும்பினாலும் பல காரணத்தால் அது தள்ளிப் போடப்பட்டது. வீட்டில் பிள்ளைகளும் மனைவியும் ஒரு நாய்க் குட்டியை வளர்ப்பதற்காக நச்சரித்தபடி இருந்தார்கள். கிழமையில் நான்கு நாட்கள் மட்டும் வேலை செய்தாலும் மூன்று நாட்கள் பன்னிரண்டு மணித்தியாலம் வேலையும், ஒரு நாள் மாலையில் இருந்து இரவு பன்னிரண்டு மணிவரை வேலையானதால் அடுத்தநாள் ஓய்வு நாளாகிவிடும். மற்றைய நாட்களில் பிள்ளைகளை புட்போல், கிரிக்கட் என கொண்டு செல்லுவதால் வாரநாட்கள் கடிகாரத்தின் பெரிய முள்ளாக வேகமாக ஓடிமறைந்து விடும். இதை விட சட்டைப் பையில் ஐம்பது டொலர் நோட்டுடன் சிட்னி ஏயர் போட்டில் வந்து இறங்கிய சுந்தரம்பிள்ளை ரெஸ்ரோரண்ட் வேலை, தொழிற்சாலையில் வேலை என இரண்டு வருடங்கள் அலைந்து மீண்டும் படித்து பரீட்சைகள் பாஸ் பண்ணி இரண்டாம் முறையாக வைத்தியராகியதால் ஏற்பட்ட களைப்பு மனச்சோர்வுடன் இப்பொழுது வீட்டுக் கடனும் சேர்ந்து கொண்டது. தற்பொழுது வீடு என்ற பெயரில் கடன் கொலைத் தண்டனை விதிக்கப்பட்டவனின் கழுத்துக் கயிறாக நெரிப்பதால் புதிதாக ஒரு செல்லப்பிராணியின் சுமையை தலையில் ஏற்ற விரும்பவில்லை. எனவே, நாயொன்று வீட்டில் வேண்டும் என்ற பிள்ளைகளின் வேண்டுகோள் விருப்பமாக மட்டும் தொடர்ந்து இருந்தது.

மிருக வைத்தியசாலையில் வேலைசெய்பவர்கள் மத்தியில் மிருக வைத்தியர் ஒருவர் நாயோ பூனையோ வளர்க்காத விடயம் இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் சில வருடங்கள் திருமணமான பெண்ணுக்கு குழந்தை பிறக்காத போது அந்தப் பெண்ணை சமூகம் பார்ப்பது போன்ற கண்ணோட்டத்தில் பார்க்கப்பட்டது. அவர்கள் பார்வைக்கு நியாயமான காரணம்

உண்டு. நாய் பூனைகளில் பற்று உள்ளவர்கள் மட்டுமே இந்த வைத்தியம் சார்ந்த வேலைக்கு வருவார்கள். இந்த வேலையில் உள்ள பணமோ, சமூக மதிப்போ இங்கு முக்கியமானது அல்ல. விருப்பமான வேலை செய்வது மனதில் மகிழ்வை ஏற்படுத்துகிறது. இந்த மிருக வைத்தியத்தில் பயிற்சி பெற விக்ரோரியாவில் மட்டும் ஒவ்வொரு வருடத்திலும் ஆயிரம் பேர் விண்ணப்பித்தால் ஐம்பது பேருக்கு மட்டுமே மெல்பன் பல்கலைக்கழகத்தில் இடம் உள்ளது. இப்படி இடம் கிடைக்காதவர்கள் பலர் மிருக மருத்துவ நேர்ஸ்சாக பயிற்சி எடுப்பார்கள். இந்த நிலையில் சுந்தரம்பிள்ளை, நாய், பூனை வளர்க்காத வைத்தியராக வைத்தியசாலையில் வேலையை தொடர்வது சாத்தியமானதாக இருக்கவில்லை.

சுந்தரம்பிள்ளையின் மனதில் சொந்தமாக ஒரு செல்லப்பிராணி வளர்க்காமல் இருப்பது ஒரு வெற்றிடத்தை உருவாக்கியது. வீட்டில் மட்டுமல்ல வேலைத்தலத்திலும் மறைமுகமான நெருக்கடியில் இருந்தது. தொடர்ச்சியாக இந்த நெருக்கடியில் இருந்து தப்புவது ஒருவன் தனது நிழலில் இருந்து விலகி நடக்க முயற்சிப்பது போன்ற பிரயத்தனமாக இருந்தது.

வைத்தியசாலையில் ஏராளமான நாய்கள், பூனைகள் சுவீகாரத்துக்கும் வந்து கொண்டிருந்தன. அவற்றில் சில எவரும் தத்தெடுக்காமல் கருணைக்கொலை செய்யப்பட்டன. இவற்றை பார்த்த போது புதிதாக சிறிய நாய்க்குட்டியை வளர்ப்பதிலும் பார்க்க மற்றவர்களால் கைவிடப்பட்ட ஒரு நாயை எடுத்து வளர்ப்பது இலகுவாகவும் அதேவேளையில் அந்த நாய்க்கு புதுவாழ்வு கொடுப்பதாகவும் இருக்கும் என நினைத்தான்.

வைத்தியசாலையில் நாய்களின் பகுதியில் வேலை செய்யும் ஜோனிடம் இதைப் பற்றிக் கூறியதும் ஒவ்வொரு நாளும் ஜோன் புதிதாக கொண்டுவந்த நாய்களைப் பற்றிய விபரத்தை கூறுவான். அதில் ஒன்றை வீட்டுக்கு கொண்டு செல்லும்படி வற்புறுத்துவான். ஏதாவது ஒரு நாயை சிவாவில் தலையில் சுமத்துவது என முடிவு செய்த ஜோன் சிறிய நாய், பெரியநாய், சடைநாய் என்ற எந்த பாகுபாடும் இல்லாமல் சுந்தரம்பிள்ளையிடம் வந்து சொல்லுவான்

தினமும் அவனது வற்புறுத்தல் தாங்காமல் ‘சரி ஒரு சிறிய நாய் வந்தால் கூறு’ என்றதும் அடுத்த நாள் வந்து வைத்தியசாலைக்கு அருகில் உள்ள தெருவில் பிடிக்கப்பட்டு கொண்டு வரப்பட்ட ஒரு சிறிய ஜக் ரஸ்சல் ஜாதியும் கல்பி என்ற செம்மறிகளை

பார்த்துக் கொள்ளும் நாயினதும் கலவையான ஒரு சிறிய நாய் வைத்தியசாலைக்கு வந்து இருக்கிறது என அறிவித்தான். விக்டோரியா சட்டத்தின் படி ஏழு நாட்கள் அதன் உரிமையாளருக்காக காத்திருக்க வேண்டும். நாயை சென்று பார்த்த போது அது கூட்டுக்குள் இருந்தபடி எம்பி எம்பி குதித்தபடி நின்றதை பார்த்து விட்டு ‘ஜோன் இது மிகவும் துடிப்பான நாய், நமக்கு சரிவராது. வேலையில் ஓய்வு பெற்றவர்கள் அதிக நேரம் நாயோடு செலவிட விரும்புவார்கள். அப்படியானவர்கள், இப்படியான துடிப்பான நாயை தேடி வருவார்களா. அதுவரையும் பொறுத்திரு’.

ஏழு நாட்களாகிவிட்டது. அந்த சிவப்பு நாயை தேடி சொந்தக்காரர் எனவோ, சுவீகாரம் பண்ணுவதற்கோ ஒருவரும் முன் வரவில்லை. இந்த நிலையில் வைத்தியசாலைக்கு வேறு வழியில்லை. எட்டாம் நாள் மரணதண்டனை விதிக்கப்பட்டு, அந்தப்பகுதிக்கு அன்று பொறுப்பாக இருந்த சுந்தரம்பிள்ளை அதை செய்ய அலுக்கோசாக மாற வேண்டியிருந்தது.

சென்னிற உடலின் இடது வயிற்றுப்பகுதியில் மட்டும் வெள்ளைப் புள்ளிகள் இருந்தன. தலையை சாய்த்து வைத்தபடி தனது பிரகாசமான பழுப்பு கண்களால் இதயத்தை ஊடுருவி பார்த்தபடி சிறிய முன்கால்களால் இரும்புக் கூட்டின் கதவைத் தள்ளியது. பின் ரப்பர் பந்து போல் எம்பிக்குதித்தது. வாயால் ஏதோ சொல்ல முயன்ற அந்த நாயின் கண்கள் சுந்தரம்பிள்ளையின் இதயத்தை கவ்வி இழுத்தது. அந்த நாயை சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்து விட்டு ‘இன்னும் மூன்று நாட்கள் இந்த நாயை எனக்காக பராமரி’ என ஜோனை கேட்டுக் கொண்டதன் பேரில் அந்த நாய்க்கு வரவிருந்த மரணம் மூன்று தினங்கள் தள்ளிப் போடப்பட்டது. இந்த மூன்று நாளில் யாராவது வருவார்கள் என்ற நப்பாசை மனதில் இருந்தது. உணர்வுகளுக்கு அடிமையாகி சில விடயங்கள் நாம் நினைத்தபடி நடக்க வேண்டும் என விரும்புகிறோம். ஆனால் அந்த விருப்பம் நிறைவேறுவதற்கான சாத்தியகூறு இல்லை என அனுபவசாலியான ஜோன் உறுதியாக நினைத்தாலும், அதைச் சொல்லவில்லை.

மூன்று நாள் கடந்து விட்டது. எவரும் வராததால் ஜோன் வந்து ‘சிவா இதற்கு மேல் வைத்திருக்க முடியாது என மேவிசால் சொல்லப்பட்டுவிட்டது. அந்த நாய் இங்கு வந்து பத்து நாட்களாகி விட்டது. இன்றைக்கு கருணைக்கொலை செய்ய வேண்டும் அதுவும் நீங்களே செய்யவேண்டும்’

வேறு வழியில்லாமல் அந்த நாயை வீட்டுக்கு கொண்டு செல்ல முடிவு செய்தான்.

மரண தண்டனைக்குத் தயாராக இருந்த நாய் என்பதால் ஏற்பட்ட கருணையினாலும், நாய் ஒன்று வளர்க்க ஏற்கனவே எல்லோரும் விரும்பி இருந்ததாலும் வீட்டில் எல்லோருக்கும் சந்தோசம் கரை புரண்டு புதுப் புனலாக ஓடியது. புதிய ஜீவன் ஒன்று வீட்டில் குடி புகுந்தது பிள்ளைகளுக்கு சந்தோசம். அவர்களின் சந்தோசம் சாருலதாவுக்கும் மனநிறைவை கொடுத்தது. சிறிய நாய் என்பதால் பராமரிப்பு இலகுவாக இருக்கும் என சுந்தரம்பிள்ளை கணக்குப் போட்டான். அவனுக்குத் தெரியும் நாயினால் வரும் சந்தோசத்தை வீட்டில் எல்லோரும் பகிர்ந்து கொண்டாலும் அதனது பராமரிக்கும் வேலைகள் தன்னில் வந்து முடியும் என்பது. தென் இந்தியாவில், கும்பகோணத்தில் அதுவும், காவேரிக்கரையில் ஆறு மாதம் வாழ்ந்ததை நினைவு கொண்டு நாய்க்கு பொன்னி என தமிழில் நாமகரணம் சூட்டப்பட்டது. பொன்னி பலவிதத்தில் நல்ல பழக்கங்கள் கொண்டது. வீட்டிற்கு உள்ளே வந்தால் அசுத்தப்படுத்தாது. நடந்து வரும்போது எதுவித பிரச்சினையும் இல்லாமல் அமைதியாக நடந்து வரும். எதிரில் மற்றைய நாய்களை சட்டைசெய்யாது. மற்றையவர்களை கண்டு குரைக்கவோ பாயவோ முற்படாது. சாருலதாவுடனும் பிள்ளைகளுடனும் பாடசாலைக்குச் சென்று பின்பு சாருலாதாவுடன் திரும்பி வரும். ஆரம்பத்தில் பொன்னியுடனான வாழ்வு, கரையை மீறாத காவேரி நதி போல் அமைதியாகத்தான் இருந்தது. காவேரி எப்போதும் அமைதியாக ஓடுவதில்லைத்தானே?

ஒரு நாள் மத்தியான இடைவெளியில் வீட்டுக்கு தொலைபேசி அழைப்பு பிள்ளைகள் படிக்கும் பாடாலையில் இருந்து வந்தது. நல்ல வேளையாக அன்று ஒய்வு நாளானதால் சுந்தரம்பிள்ளை வீட்டில் இருந்தான். பொன்னி பாடசாலைக்கு வந்துள்ளது. அதை வந்து கூட்டி செல்லும்படி சொன்னார்கள். மதிய நேரத்தில் பாடசாலை குழந்தைகளின் சாப்பாட்டை பகிர்ந்து கொள்ள முயற்சித்திருக்கிறது. பூட்டிய பின் பக்கத்து கேட்டை எப்படி திறந்து கொண்டு சென்றது என்பது வியப்பாக இருந்தது. பாடசாலை நிர்வாகத்திடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டு வீட்டுக்கு கொண்டு வந்த போது பொன்னி எதுவும் நடக்காதது போல் சாதுவாக பின் தொடர்ந்தது.

பொன்னியின் இந்தப் பழக்கம் பல நாட்கள் தொடர்ந்தது. விடுமுறை நாட்களில் சுந்தரம்பிள்ளையும மற்ற நாட்களில் சகன்

பாடசாலையில் இருந்து மதியத்தில் கொண்டு வந்து விடுவதுமாக இருந்தது. மதிய நேரத்து பாடசாலையின் மணியை கேட்டவுடன் கேட்டுக்கு மேலாக பாய்ந்து செல்கிறது என துப்பு பக்கத்து வீட்டாரின் மூலம் கிடைத்தது. இரண்டு பின்கால்களை சங்கிலியால் பிணைப்பது போல் நாடாவால் பிணைத்துப்போட்ட போது சிலநாள் போக முடியவில்லை. ஒருநாள் திருந்திவிட்டது என நாடாவை அவிழ்த்து விட்டதும் மீண்டும் பாடசாலைக்குச் சென்று விட்டது

சகன் கேட்டான் ‘அப்பா எங்களுக்கு பாடசாலைக்கு போக விருப்பமில்லை ஆனால் பொன்னி ஏன் போக விரும்புகிறதோ?

இதைக்கேட்ட சாந்தி ‘அப்பா எனக்காக பொன்னியை பாடசாலைக்கு அனுப்பினால் என்ன?

சுந்தரம்பிள்ளை பதிலளிக்காமல் சிரித்துவிட்டு பொன்னியை ஒரு சங்கிலியால் கட்டி வைத்தான்.

பொன்னியை சங்கிலியில் கட்டியது பெரிய தொல்லையாகி விட்டது. பக்கத்து வீட்டு பீட்டர் ‘உங்கள் நாய் தொடர்ந்து குரைத்து எனது அமைதியை கெடுக்கிறது’ என கூறினார்.

ஆரம்பத்திலே பொன்னியை வைத்திருந்தவர்கள் இதே காரணத்தால் தொலைந்த போது தேடி வரவில்லை என்பது சந்தரம்பிள்ளைக்கு மட்டுமல்ல, வீட்டில் எல்லோருக்கும் புரிந்தது.

சந்தோசத்திற்காக வளர்க்க விரும்பிய நாய் இப்போது மொத்த குடும்பத்தின் மட்டுமல்ல பக்கத்து வீட்டாரின் அமைதிக்கும் இடையூறாகியது. சுந்தரம்பிள்ளையின் அயலார்களிலே வலது பக்கம் இருக்கும் பக்கத்து வீட்டு பீட்டர் கொஞ்சம் வித்தியாசமான மனிதர். அவர் வீட்டில் குழந்தைகளோ, நாய், பூனை எதுவுமோ இல்லாத மனிதர். ஒரு கிழமை முளைத்த தாடியுடன் ஓய்வூதியம் எடுக்கும் பேர்வழி. மனைவி கொஞ்சம் பரவாயில்லை. கண்டால் ஹலோ சொல்லுவார். பீட்டர் தலையாட்டத்தினால் மட்டும்தான் தன்னை வெளிப்படுத்துவார். தன்னை நட்புடன் எவரும் நெருங்காது தலையாட்டலால் பாதுகாத்துக் கொள்ளுவார். சாருலதா பொன்னியை பற்றி உள்ளூர் நகரசபையில் இந்த பீட்டர் தனது அமைதியை கெடுப்பதாக புகார் செய்வார் என நம்பினாள்.

சுந்தரம்பிள்ளையைப் பொறுத்தவரை பொன்னியை திரும்ப வைத்தியசாலைக்கு கொண்டு சென்றால் மரணம் நிச்சயம். ஏற்கனவே

மரணத்தை முத்தமிட்டு திரும்பிய உயிரை மீண்டும் மாய்ப்பதற்கு மனம் இடம் தரவில்லை. குறைந்த பட்சமாக நாய்களை பயிற்றும் ஒருவரின் பயிற்சியினால் பொன்னி திருந்தக் கூடும் என மனதில் ஒரு எண்ணம் இருந்ததால் பொன்னியை கீழ்ப்படிவு பயிற்சி காம்ப் ஒன்றிற்கு அனுப்பினார். ஒரு கிழமை இந்த காம்பில் இருந்து பயிற்சி பெற்றால் பொன்னிக்கு மறுவாழ்வு கிடைக்கும் என எல்லோரும் நம்பினர்.

அதுவும் பலனை அளிக்காததால் நாய்களை பயிற்றும் கிளப்பில் சுந்தரம்பிள்ளையும் சாருலதாவும் அங்கத்தினராகினர். ஞாயிற்று கிழமைகளில் பிள்ளைகளைக் கொண்டு செல்வது போல் ஒரு மணித்தியால பயிற்சிக்கு கொண்டு சென்றனர். அந்த பயிற்சியில் ஈடுபடும் போது மற்றைய நாய்களைவிட கெட்டித்தனமாக பல விடயங்களை பொன்னி செய்தது. இருத்தல், படுத்தல் என்ற ஆரம்ப விடயங்களைவிட கம்பி மேலால் பாய்தல், ரயர்களூடாக செல்லுவது என்ற செயல்கள் தண்ணிபட்டது போல் செய்தது. ஒலிம்பிக் வீரர்கள் தோற்றுவிடுவார்கள் என்பதுபோல் பல கலரான ரிபன்களை பெற்றுக்கொண்டது.

இப்படியான பயிற்சிக் காலத்தில் ஏற்பட்ட முன்னேற்றத்தால் வேலி பாய்ந்து ஓடுவதை பொன்னி கைவிட்டு விடும் என்ற நம்பிக்கை சாருலதாவுக்கு ஏற்பட்டாலும், சுந்தரம்பிள்ளை, தனது பொன்னி பற்றிய தீர்ப்பை சிலகாலத்துக்கு ஒத்திவைப்பது என முடிவு செய்தான்.

# 23

சுந்தரம்பிள்ளையால் ரோசியை மறக்க முடியவில்லை. வைத்தியசாலை நிர்வாகத்தால் நியமிக்கப்பட்ட ஆர்தரால் நீ செய்த ஒபரேசனில் தவறு எதுவும் இல்லை என சொல்லப்பட்டது மட்டுமல்ல. அங்கு நடந்த விடயங்களுக்காக நிருவாகக்குழு சார்பாக அவர் மன்னிப்பு கேட்டாலும் மனசாட்சி அமைதியடைய மறுத்தது. வாயில்லாப்பிராணி ஒன்றிற்கு சரியான விடயம் ஒன்றை செய்யவில்லை என்ற எண்ணம் தொடர்ச்சியாக மனதை அரித்தது. ஒரு தொழிலை தேர்ந்தெடுத்துச் செய்யும்போது, அந்தத் தொழிலுக்கு வாங்கும் வேதனத்தை விட, வைத்தியத்திற்கும் என வந்த பிராணி மீது ஒரு மனதில் ஒப்பந்தம் எழுதப்படுவதாகவும், இந்த ஒப்பந்தத்திற்கு சாட்சிகள் அற்ற போதும் அவற்றிற்கு முடிந்தவரை உண்மையாகவும் திறமையாகவும் செயல்படவேண்டும் என்ற விடயம் மீறப்பட்டது என்பதாக நினைக்க வைத்தது. ரிமதி பாத்தோலியசின் அதிகாரம் வைத்தியசாலையில் நடக்கும்வரை விசாரித்து மேற்கொண்டு ஒன்றும் செய்ய முடியாது என்பதால் உரிமையாளரான ஹெலனுடன் பேச விரும்பவில்லை. தற்பொழுது வைத்தியசாலையில் நிலமை சீரடைந்து விட்டது. திரும்ப ஒபரேசனை செய்யும் போது கையை மீறினால் உதவிக்கு காலோசையோ ஆதரையோ அழைக்கமுடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டதால் ரோசியின் உரிமையாளராகிய ஹெலனை போனில் அழைத்து ரோசியை பற்றி விசாரித்தபோது ‘டொக்டர் இன்னும் காலை நிலத்தில் பதித்து நடக்கவில்லை. சந்தோசமாக இருக்கிறாள். வெளிக்காயம் ஆறிவிட்டது’.

வெளியே தோல் காயம் குணமாகிவிட்டது. ஆனால் உள்ளே புது எலும்பு உருவாகி விட்டதா என்ற விடயம் எக்ஸ்ரேயில் மட்டும்தான் தீர்மானிக்க முடியும். அதுவும் வைத்தியர்களால் மட்டும்தான் தெரிந்து கொள்ள முடியும் எனும் போது இது ஒரு விசேட சுமையாக வைத்தியர்களின் பொறுப்பை அதிகரிக்கிறது. வாயால் தனது வலியை கூறமுடியாத மிருகத்தின் வலியை புரிந்து

வைத்தியம் செய்வது சாதாரணவிடயம் அல்ல. வைத்திய அறிவுடன் புரிந்துணர்வும் தேவையாகிறது.

'வீட்டுக்குள் தானே வைத்திருக்கிறீர்கள்'.

'எனது படுக்கையில்தான் படுக்கிறது'.

'நல்லது நான். ரோசியின் காலை ஒரு எக்ஸ்ரே எடுக்க விரும்புகிறேன்'.

'அதற்கென்ன நான் நாளை கொண்டு வருகிறேன்'

'காலையில் எந்த உணவும் கண்டிப்பாக கொடுக்காமல் வெறும் வயிற்றில் கொண்டு வாருங்கள்'.

'காலை உணவு இல்லாமல் ரோசி இருக்காதே'

'இன்று ஒரு நாள்தானே. மயக்க மருந்து கொடுக்கும் போது வயிற்றில் உணவு இருந்தால் வாந்தி வந்து பிரச்சினையாகிவிடும்'

ஹெலன் மறுநாள் காலை ரோசியை கூட்டி வந்தாள். அவளை வைத்தியசாலையின் வரவேற்பு அறையில் காத்திருக்கும்படி சொல்லிவிட்டு ரோசியை மட்டும் தனியே வைத்திசாலையின் நீண்ட கொரிடோர் ஊடாக அதனது கழுத்துப் பட்டியில் பொருத்திய சங்கிலியைப் பிடித்தபடி கூட்டிச் சென்றான் சுந்தரம்பிள்ளை. ரோசி மெதுவாக மூன்று காலினால் நடந்தபடி பின் தொடர்ந்தது. ரோசியைத் திரும்பிப் பார்த்தபோது ஜெர்மன் செப்பேட்டுகளுக்குரிய உறுதியான பார்வையும் மார்பை முன்னே தள்ளியபடி உயரமான முன்கால்களும் எப்பொழுதும் பாய்வதற்குத் தயாராக உறுதியாக நிலத்தில், நாணேற்றிய வில்லைப்போல் பதித்த ஒரு பின்னங்காலுடன் நடக்கும் கம்பீரத்தில் துளியும் குறையாமல் போரில் காயமடைந்த போர் வீரனைப் போல் பின் தொடர்கிறது என வியந்தபடி எக்ஸ்ரே அறையை நோக்கி நடந்தான்.

ரோசியின் மனதில் ஓடிய எண்ணங்கள் எப்படி இருக்கும்?

'இந்த முறை என்ன நடக்கப் போகிறதோ? போனதடவை அந்த கூட்டுக்குள் அடைத்து வைத்தது பெரிய சித்திரவதையாக இருந்தது. மெத்தையில் படுத்து பழகிய எனக்கு இது சரிவராது. காலை உணவும் சாப்பிடாததால் வயிறும் காலியாக இருக்கிறது என நினைத்துக் கொண்டு திரும்பிய போது வைத்தியசாலை

*சுவரில் கல்லறை வாசகம் போல பல பட்டயங்களாக ஒட்டப்பட்டு இருந்தது. அதில் ஒன்றில் மேரி எட்வேட் தனது ரோசியை உயிராக நேசிக்கிறாள். பிறப்பு 5.6.1980. இறப்பு 10.12.1984*

*'அடப்பாவிகள் இந்த ரோசியும் எனது வயதில் இறந்துள்ளது. என்ன பிரச்சினையாக இருக்கும்? ஏதாவது விபத்தாகத்தான் இருக்கும். ஆனாலும் வைத்தியசாலை கொரிடோர் எங்கும் கல்லறை வாசகங்களையும் பெயர்களையும் எழுதி வைத்தியசாலை சுவரை மயானத்தை போன்று ஆக்கி இருக்கிறார்கள். எங்களைப் போல் வைத்தியத்துக்கு வருபவர்களுக்கு எழுத்தறிவு இல்லாவிட்டாலும் எங்களை கொண்டு வருபவர்களுக்கு புரியும்தானே. மனிதர்களுக்கு மற்ற பிராணிகள் பற்றிய புரிந்துணர்வு இல்லை. தங்கள் உணர்வுகளை மட்டும் காட்டவேண்டும், அவற்றை எழுதவேண்டும் என்ற சுயநலம் மட்டும்தான் உள்ளது என்பதைக் காட்டுவதற்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்?. இப்படி தங்களது வைத்தியசாலை சுவர்களில் இவர்களால் எழுதமுடியுமா? படுபாவிகளே?' என நினைத்த போது மயக்க வாயுவை சுவாசித்தது போல் ரோசிக்கு தலை கிறுகிறுத்தது.*

*எது வித மயக்க மருந்தும் கொடுக்காமல் எக்ஸ்ரே மேசையில் சாம் பின்பகுதியிலும் சுந்தரம்பிள்ளை முன் பகுதியிலுமாக ஒரே நேரத்தில் தூக்கி படுக்கவைத்தபோது மட்டும் ரோசி வலியில் மெதுவாக முனகியது.*

*'கமோன் இதை பொறுத்துக் கொள்' என சாம் தலையை தடவியபோது அவனது தடவலில் அந்த நோ பறந்துவிட்டது. இவன் பெண்களைத் தடவுவதில் விண்ணனாக இருக்கவேண்டும் என நினைத்த போது அந்த கிளிக் சத்தம் எக்ஸ்ரே எடுத்தாகி விட்டதை ரோசிக்கு உணர்த்தியது.*

*சாம் எக்ஸ்ரேயை புரோசஸ் பண்ணும் இருட்டு அறையில் இருந்து இரண்டு நிமிடத்தில் திரும்பி வந்த போது அவனது கையில் இருந்த எக்ஸ்ரேயை வாங்கிய சுந்தரம்பிள்ளைக்கு நெஞ் சாங் கூட்டில் இருந்த இதயம் சத்தமில்லாமல் வயிற்றிற்கு இறங்கித் துடித்தது தெரிந்தது. எக்ஸ்ரேயில் பார்த்த காட்சி பொய்யாகாதா என சில விநாடிகள் மனதில் நினைக்க வைத்தது. சாம் இருட்டறையிலே இருந்த மஞ்சள் விளக்கின் ஒளியில் ஏற்கனவே பார்த்து உண்மையை புரிந்து கொண்டுவிட்டதால் எதுவும் பேசவில்லை.*

*அந்த கால் எலும்புகள் சரியாக பொருந்தவில்லை என்பது தெரிந்தது. ஆறு கிழமைகள் எலும்பு ஒன்றாகுவதற்கு தேவையான ஆறுகிழமைக்கான ஆதாரம் எதுவும் இல்லை. இன்னும் மூன்று கிழமைக்கு விட்டு பார்ப்பது நல்லது என சாம் சொன்ன போது சுந்தரம்பிள்ளைக்கு திருப்தியில்லை. 'எதற்கும் காலோசிடம் போய் வருகிறேன்' என வெளியே வந்தான்.*

*காலோசிடம் இரண்டாவது கருத்தைக் கேட்ட போது அவனும் இந்த எலும்புகள் ஒன்றாகும் சாத்தியம் இல்லை என்றான். இந்த எக்ஸ்ரேயை எடுத்துக் கொண்டு ஹெலனிடம் சென்று 'இந்த ஒபரேசனை மீண்டும் செய்ய விரும்புகிறேன். இந்த எலும்புகள் ஒன்றாக பொருந்தும் அறிகுறிகள் இன்னும் பெரிய அளவில் நடக்கவில்லை. இதற்கு நாங்கள் புதிய எலும்புகளை வேறு இடத்தில் இருந்து எடுத்து இந்த இடத்தில் வைத்து எலும்புகளை மீண்டும் வளர வைக்கவேண்டும். இதற்காக நீங்கள் எந்தப் பணமும் செலுத்த தேவையில்லை'.*

*'அடுத்த ஒபரேசனை ரோசி தாங்குமா?' என்றாள் முகத்தில் கலவரத்துடன்.*

*அவள் சமீபத்தில் கணவனை இழந்து இன்னும் ஆறுதல் அடையவில்லை என்பதை எதுவித முக அலங்காரம் இல்லாத ஒலிவ் நிறமான முகமும், கருவளையங்கள் சுற்றிப் படர்ந்திருந்து மதியத்து நேரத்தில் எரியும் மின்சாரக்குமிழ் போல் இருந்த கண்களும் மவுனமான மொழியில் அவளது சோகத்தை பெரும் காப்பியமாக்கின. காலம் காலமாக உள்ளத்து உணர்வுகளை துல்லியமாக வெளிகாட்ட பெண்களால்தான் முடிகிறது.?*

*அதைப் பற்றி நீங்கள் பயப்பட வேண்டியதில்லை. ரோசி மிகவும் இளமையான ஆரோக்கியமான நாய். நாங்கள் இன்றே ஒபரேசன் செய்யப்போகிறேம். ஒபரேசன் முடிந்ததும் நான் உங்களுக்கு தொலைபேசியில் தொடர்பு கொள்வேன்'.*

*ஹெலனிடம் பயப்பட வேண்டாம் என சொன்னாலும் சுந்தரம்பிள்ளைக்கு மனதில் ஒரு பயம் ஏற்பட்டது. இது ஒவ்வொரு செல்லப்பிராணியையும் ஒபரேசனுக்கு மயக்குவதற்கு முன்பாக ஏற்படும் பயம். மனிதனின் உயிர் மீதான பயம் அவனது தற்பாதுகாப்பிற்கு உதவுவது போல் வைத்தியர்களது பயமும் முன்னெச்சரிகையாக பல நடவடிக்கையை எடுப்பதற்கு உதவுகிறது. மனிதர்களை மயக்குவதற்கு முன் பல பரிசோதனைகள் செய்வார்கள்*

அதே போல் மயக்க மருந்து கொடுத்து அதை செய்வதற்கு தனியாக ஒரு வைத்தியர், அனஸ்தரிஸ்ட் ஆக இருப்பார். அப்படியான வசதிகள் மிருக வைத்தியத்தில் இல்லாததால் இங்கு ஒபரேசன் செய்பவரே சகலதற்கும் பொறுப்பேற்க வேண்டும்.

காலோஸை இந்த முறை உதவிக்கு அழைத்த போது 'ஓகே மிஸ்டர் இந்த ஒபரேசனை செய்தால் எனக்கு என்ன கிடைக்கும்?.

'உனக்கு என்ன வேண்டும்?'

'உமது செலவில் மதிய போசணமும் அதற்கு பின்பாக டெசேட் போல் ஸ்ரிப் ஷோவும் பார்க்கவேண்டும். சம்மதமா?'

சிரித்தபடி 'அது இலகுவானது. காலோஸ் உனது ஆசைகள் நேரடியானவை. சிக்கலற்றவை. நான் நிறைவேற்றுகிறேன். சமீபத்தில் படித்த விடலை பையனின் கதைதான் உன்னைப் பற்றி நினைக்கும் போது நினைவுக்கு வருகிறது;'

'அது என்ன மிஸ்டர்?'

'சிலவருடத்துக்கு முன்பு சிட்னி வைத்தியசாலை ஒன்றில் பதினைந்து வயதுப் பையன் இரத்த புற்று நோயால் விரைவில் இறக்க இருந்தான். அவனிடம் அவனைப் பார்த்த டொக்ரர்கள் உனக்கு என்ன வேண்டும் என கேட்டார்கள்.

அவன் நான் இன்னமும் பெண்ணுடன் உறவு கொள்ளவில்லை அதுதான் தேவை என்றான். வைத்தியசாலை வைத்தியர்கள் பெற்றோருக்கு தெரியாமல் விபசாரியை அவனுக்கு ஒழுங்கு படுத்தி கொடுத்தனர்'

'நானும் அவனைப்போல்தான் கேட்டிருப்பேன்'. என பலமாக சிரித்தான்

காலோஸின் ஆசைகள் மிகவும் சிறியவை. பணத்திற்கு அதிக மதிப்பு கொடுக்காத மனிதன். காலோஸின் வைத்திய அனுபவத்தை வேறு ஒருவர் பெற்றிருந்தால் சொந்தமாக தொழில் நடத்தியிருப்பார்கள். அல்லது வேறு யாராவது ஒருவரோடு இணைந்து தொழில் புரிய சென்றிருந்தால் அதிக பணம் பெற்றிருக்க முடியும். ஆனால் காலோஸோ ஒரு முறைதான் இந்த உலகில் வாழ்கிறோம். வாழ்வின் ஒவ்வொரு கணங்களையும் சந்தோசமாக கழிப்பதுதான் காலோஸின் இலட்சியம். நாளைக்கு

என்பது தேவையில்லை. அத்துடன் நட்புக்காக எதையும் செய்யும் தன்மையும் கொண்டிருந்தான்.

சாமினது உதவியுடன் ரோசியை மயக்கிய பின்பு வந்த காலோஸ் 'நீங்கள் இரண்டு பேரும் இந்த நாய்க்கு செய்த வேலையால் இந்த வைத்தியசாலையே தலை கீழாக மாறிவிட்டது. ஒரு விதத்தில் ரஷ்சியாவில் நடந்த புரட்சி போன்றது. பாவம், ரிமதி பாத்தோலியஸ் ஜார் மன்னன் மாதிரி துலைந்து போனான்'. சாமை பார்த்து கைகொட்டியபடி சிரித்தான்

'எங்களால் உமக்கு திரும்ப தலைமை வைத்தியர் பதவி கிடைத்ததற்கு எங்களுக்கு நீர் நன்றி சொல்லவேண்டும்' என்றான் சாம் விட்டுக்கொடுக்காமல்

'பதவி எனக்கு பெண் உறுப்பின் மயிர் போன்றது. விலத்தி விட்டு அப்படியே போய்க் கொண்டிருப்பேன். மற்றவர்கள் போல் அதில் எனது கவனத்தை செலுத்தமாட்டேன்.

'பாஸ்ரட் எப்பொழுதும் அந்த நினைவுதான்'

'கருவில் உருவாகி வந்த பாதையை மறக்கமாட்டேன்' என்ற படி அந்த ஒபரேசனை தானே செய்வதற்கு தாயாராகியதால் சுந்தரம்பிள்ளை அனஸ்தரிஸ்ட் ஆக ரோசியின் மயக்க மருந்தையும் அதன்படி நிலைமைகளையும் கவனிக்கும் வைத்தியராகினான்.

எலும்புகள் பொருந்துவது என்பது இயற்கையான செயல்பாடு. இதை தோட்டக்காரர், சிறு ரோஜா செடியை பதியம் வைத்து நடுவது போன்ற செயல் என அறுவை சிகிச்சை புத்தகம் கூறுகிறது. பதியம் வைக்கும் தோட்டக்காரன் சூரிய ஒளிபடும் இடத்தில் நல்ல பசளையைப் போட்டு நட்டுவிட்டு அதற்கு தண்ணீர் ஊற்றிவிட்டால் செடி வளர்வது இயற்கையின் செயற்பாடு. அதே போல் முறிந்த எலும்பு அதனோடு ஒட்டியுள்ள தசைநார்களின் இழுவையினால் ஒன்றில் இருந்து ஒன்று விலகி இருக்கும். அந்த விலகிய முனைகளை மீண்டும் அதே இடத்தில் வைத்து இரண்டு துண்டுகளை ஆடாமல் அசையாமல் பொருத்துவதே வைத்தியரின் வேலை. இதற்காக உடல் பகுதியில் தாக்கத்தை ஏற்படுத்தாத ஸ்ரெயின்லெஸ் ஸ்ரில் மற்றும் ரைற்ரேனியம் ஸ்குறு உபயோகிக்கப்படுகிறது. முறிந்த எலும்புக்கு மேல் ஸ்ரில் பிளேட்டை வைத்து ஸ்குரூ ஆணியால் பொருத்தி விடுதல்தான் முக்கியதாகும். இந்த எலும்புகள் அசைவுகள் அதிர்வுகள் இல்லாது இருந்தால் ஆறு கிழமையில் எலும்புகள் பொருந்திவிடும்.

ரோசியைப் பொறுத்தவரையில் பொருத்திய ஸ்குரூக்களின் பலம் ரோசியை போன்ற முப்பத்தைந்து கிலோ நிறையுள்ள ஜெர்மன் செப்பேட்டுக்கு போதாததால் அங்கே அசைவுகள் ஏற்பட்டதால் எலும்புகள் பொருந்துதல் நடக்கத் தொடங்கவில்லை. இந்த விடயத்தில் மனிதர்களைப்போல் மிருகங்களினது நடத்தைகளை வைத்தியரால் கட்டுப்படுத்த முடியாது. பாயாதே, துள்ளாதே என கட்டுப்பாடுகளை விதிக்க முடியாத நிலையில் ஒபரேசன் செய்யும் போது இவைகளையும் கணக்கில் எடுக்க வேண்டும். இந்த விடயத்தில் மனிதர்களுக்கு வைத்தியம் செய்வது இலகுவாகி விடுகிறது. மனிதர்களிடம் படுக்கையில் இளைப்பாறுங்கள் எனச் சொல்லி விடலாம்.

இம்முறை எலும்பின் முறிவுக்கு இரண்டு பக்கத்திற்கு இரண்டுக்கு பதிலாக தலா நான்கு ஸ்குரூக்கள் பொருத்திவிட்டு அத்துடன் ரோசியின் இடுப்பு எலும்பில் இருந்து சில எலும்பு துகள்களை அறுவடை செய்து அதனது கால் எலும்பு முறிந்த இடத்தில் வைக்கப்பட்டது. இந்த போன் கிறாவ்ரிங் மூலம் புதிய எலும்புகள் வளர்ச்சியை துரிதப்படுத்த முடியும்.

இரண்டு பேர் செய்ததால் ஒபரேசன் வெகுவிரைவில் முடிந்து விட்டது. காலோஸுக்கு சொல்லியபடி உணவருந்த சுந்தரம்பிள்ளை அழைத்துச் சென்ற போது, சாமும் அதன்பின் வந்த ஜோனும் சேர்ந்து கொண்டார்கள். மெல்பன் நகரத்தில் உள்ள கிங்ஸ் வீதிக்கு செல்வது என்பது முடிவாகியது. அங்குதான் காலோஸ் விரும்பிய ஸ்ரிப் கிளப்பும் உள்ளது. வைத்தியசாலையிலிருந்து பத்து நிமிடத்தில் காரில் செல்லமுடியும். ஒரு மணித்தியால உணவு இடைவேளையில் இவற்றை செய்யவேண்டும். ஏற்கனவே இப்படியான கிளப்புக்கு போவது சர்ச்சைக்குரிய விடயமாக்கப்பட்டதால் இந்த விடயம் மனேஜரான ஆதருக்கு தெரியப்படுத்தப்பட்டது. உங்களது உணவு இடைவேளையில் நீங்கள் என்ன செய்வது என்பது உங்கள் உரிமை. அதில் நான் தலையிடமாட்டேன். இரத்த கொதிப்புக்கு மருந்து எடுப்பதால் நான் உங்களோடு வருவதற்கு தயாரில்லை என நகைச்சுவையாக சொன்னார்.

இந்த கிளப்புகளுக்கு மதிய இடைவேளையில் வந்து உணவும் அருந்தி விட்டு செல்வதால் சுற்றியுள்ள வாகனத் தரிப்பிடங்கள் எல்லாம் நிரம்பிவிடும். கிளப்பின் உள்ளேயும் கூட்டம் நிரம்பிவிடும். நால்வரும் சிறிது நேர முயற்சியின் பின்பாக கிடைத்த காலியான இடத்தில் காரை நிறுத்திவிட்டு அவசரமாக உள்ளே சென்ற போது

காவலாளியாக வாசலில் நின்றவர் நால்வரையும் ஏற இறங்கப் பார்த்து விட்டு ‘நீங்கள் மூவரும் உள்ளே போகலாம் ஆனால் இவர் போக முடியாது’ என ஜோனைப் பார்த்துச் சொன்னான்.

சாம் ‘ஏன் அப்படி’ என்ற போது ‘இவர் ரண்ணிங் அடிடாஸ் காலணி அணிந்திருக்கிறார். இப்படியான பாத அணியுடன் இந்த ஜென்ரில்மன் கிளப்புக்கு உள்ளே போகக் கூடாது என்பது சட்டமாகும்’

அப்பொழுதுதான் ஜோனின் காலைப்பார்த்த போது நாய்க்கூடுகளில் தண்ணீரை ஊற்றி கழுவுவதற்காக காலில் அடிடாஸ் அணிந்திருந்தான்.

‘மன்னிக்க வேண்டும் நண்பர்களே, நீங்கள் போங்கள் நான் அப்படியே காலாற யாரா நதி கரையோரமாக நடந்துவிட்டு அரைமணி நேரத்தில் இந்த இடத்தில் உங்களைச் சந்திக்கிறேன். எமக்கு அதிக நேரம் இல்லை’.

‘ஜோன், பார்த்தால் எல்லோரும் ஒன்றாக பார்ப்போம் இல்லையென்றால் எல்லோரும் திரும்பிப்போவோம்’ என காலோஸ் கூறினார்.

அவசரமாக உணவை வயிற்றுக்குள் திணித்து விட்டு இந்த இடத்திற்கு வாசல்வரையும் வந்தவர்களை காலணியை காரணம் காட்டி திருப்பி அனுப்பப்பட்டது எல்லோருக்கும் ஏமாற்றம். அதில் தன்னால்தான் இது நடந்தது என்பதால் ஜோன் பலமுறை மற்றவர்களை செல்லும்படி வற்புறுத்திய போதும் எல்லோரும் மீண்டும் காரை நிறுத்தியிருந்த இடத்திற்கு சென்ற போது அதிர்ச்சி காத்திருந்தது.

காருக்கு சமீபமாக உள்ள மற்றைய கார்களில் தவறான இடத்தில் நிறுத்தியதற்காக தண்டனை ரிக்கட் வைத்துக்கொண்டிருந்தார் ஒரு மெல்பன் மாநகரசபை உத்தியோகத்தர். அப்பொழுது தான் தனது காரும் அவசரத்தில் நிறுத்தக் கூடாத இடத்தில் நிற்பது சுந்தரம்பிள்ளைக்கு தெரிந்தது. டிக்கட் வைக்க வந்து கொண்டிருந்தவர் நால்வரும் காரில் ஏறியதால் மற்ற காருக்கு சென்றுவிட்டார்.

‘நல்ல வேளையாக எனக்கு ஜோனினது அடிடாஸ் சப்பாத்தால் அறுபது டொலர்கள் மிச்சமாகியது, என்றான் சுந்தரம்பிள்ளை.

காமம் கண்ணை மறைக்கும் என்பது அன்று உண்மையாகியது.

□ □ □

**வை**த்தியசாலை வாசலில் நால்வரும் காரில் வந்து இறங்கி முன்வாசலால் செல்லாமல் சிறிய ஒழுங்கையில் திரும்பி நடந்து, பின்கதவால் உள்ளே வந்தபோது அங்கு ஆதரை காணமுடிந்தது. அவரது முகத்தில் சோகம் தெரிந்தது. வழக்கத்தில் எப்பொழுதும் சிரித்தபடி நகைச்சுவையாக பேசுபவரில் மாற்றம் கடந்த ஒருமணிநேரத்தில் ஏற்பட்டிருக்கிறதே?

சுந்தரம்பிள்ளையின் மனதில் ஆதரை காணும் போது தன்னையறியாத மதிப்பு ஏற்படுவதால் உணவோடு மது அருந்தி விட்டு ஸ்ரிப்ஷோவுக்கு போக எத்தனித்தது ஒரு குற்ற உணர்வாக மனதை உறுத்தியது. இப்படியான உணர்வுகள் காலோஸுக்கோ, சாமுக்கோ ஏற்படுவதில்லைப்போலும். கலாச்சார மூட்டைகளை தோளில் சுமந்து நாங்கள் இடம் பெயர்கிறோம் என நண்பன் ஒருவன் சொன்னது நினைவுக்கு வந்தது.

ஆதர் நேரடியாக எல்லோரையும் பார்த்து சிரித்துவிட்டு 'காலோஸ், ஜீன் தற்கொலை செய்து விட்டார்'.

'எப்போது நடந்தது?'

'நேற்று நடந்தது'

'என்ன திடீரென?'

'நான் நினைக்கிறேன் அவரது பூனைகளை நாங்கள் கருணைக் கொலை செய்தது அவரால் ஏற்க முடியவில்லை'.

எல்லோருக்கும் இந்த செய்தி அதிர்ச்சியாக இருந்தது. எல்லோரும் ஒருவரை ஒருவர் பார்த்தபடி மவுனமாக தேநீர் அறைக்கு ஒன்றாகச் சென்றார்கள்.

'எப்படித் தற்கொலை?' மீண்டும் காலோஸ்.

'அதிகமான தூக்க மாத்திரைகளை வைனுடன் கலந்து குடித்திருக்கிறார் என வைத்தியசாலையில் இருந்து சொன்னார்கள்'

'நீங்கள் வைத்தியசாலைக்குப் போனீர்களா?'

‘எனது பெயர் ஜீனின் டயரியில் எழுதப்பட்டு இருந்ததால் பொலிசார் எனக்கு அறிவித்தார்கள்’.

‘நல்ல வேளை ஆர்தர் நீங்கள் இந்த இடத்தில் இருப்பது. நான் இருந்தால் இதை எப்படி செய்திருப்பேனோ என நினைக்க முடியவில்லை’.

‘நான் இதை எதிர்பார்க்கவில்லை. ஆனால் ஜீனின் வைத்தியக் குறிப்புகள் ஏற்கனவே பல தடவை மனோதத்துவ வைத்தியரிடம் ஆலோசனை பெற்றதாக காட்டுகிறது. ஜீனுக்கு பழைய சாமன்களை சேர்த்து வைத்தல். பலவருடங்களாக பாவித்த பொருட்களை வெளியே எறியாதது போன்று சில மனோவியாதிக்கான குணக்குறிகள் இருப்பதாக அந்த ரீப்போட்டில் கூறப்படுகிறது. ஜீனினது வீட்டுக்கு சென்றவர்கள் சொன்னதை என்னால் நம்ப முடியவில்லை. மதிய உணவு வெளியில் இருந்து ஜீனுக்கு வரவழைக்கப்படுகிறது. வாசல் கதவு பூட்டி இருந்ததால் பொலிசுக்கு தெரிவித்ததும் பொலிஸ் சென்று பார்த்தும் அவர்களால் தாங்கள் பார்த்த காட்சியை நம்ப முடியவில்லை.

ஜீனின் வீடு மெல்பனின் மத்திய நகரத்தின் வடபிரதேசத்தில் பெரிய வைத்தியசாலைக்கு சமீபத்தில் இருக்கிறது. மெல்பன் நகராக்கத்தின் ஆரம்ப காலத்தில் இந்த பிரதேசம் நகரின் பிரதான பகுதியில் வாழ்பவர்களின் வாழ்வுத் தேவையை நிறைவேற்ற சிறிய தொழில் கூடங்கள் வைத்தியசாலைகள் அமைக்கப்பட்ட பிரதேசம். ஆரம்பகாலத்தில் சிறிய தொழிற்சாலைகள் முக்கியமாக கார் சம்பந்தமான மெக்கானிக் மற்றும் வெல்டிங் தொழிற்சாலைகள் இருந்தன. அவற்றிற்கு ஓரமாக தொழிலாளர்களை உத்தேசித்து பல வீடுகள் நிரையாக கட்டப்பட்டு உள்ளன. தற்பொழுது பல தொழிற்சாலைகள் மூடப்பட்டு புதிய மாடிக்கட்டிடங்கள் தோன்றியுள்ளன. மெல்பனில் பிரதான வைத்தியசாலைகளும் பல்கலைக்கழகங்களும் உள்ள பிரதேசமானதால் நிலத்தின் விலை உச்சத்திற்குப் போய் விட்டது. இந்த இடங்களில் ஐம்பதுகளில் கட்டப்பட்ட வீடுகள் காலத்தின் சுழற்சியை எதிர்த்துக் கொண்டு இன்னமும் தங்கள் தனித்துவத்தை வெளிப்படுத்திக்கொண்டு இருக்கின்றன. நகரத்தின் பழைய தோற்றத்தைப் பாதுகாப்பதற்காகவும் சில கட்டிடங்கள் பாதுகாக்கப்படுகின்றன. அப்படியான பழைய காலத்து வீடு ஒன்றுதான் ஜீன் குடியிருந்தது. மூன்று படுக்கை அறைகளும் சமயலறையும் வரவேற்பு கூடமும் உள்ளது. முன்னறையை படுக்கையறையாக பாவித்ததால் சமையலறையில்

இருந்து வெளியே ஜீனின் தள்ளுவண்டியுடன் வருவதற்கு ஒரு மீட்டர்க்கும் குறைவான அகலம் கொண்ட கொரிடோர் பாதை சுத்தமாக இருந்தது. மற்றைய வீட்டில் பகுதிகள் எல்லாம் வேறு சாமான்களால் நிரப்பப்பட்டு இருந்தன. படுக்கை அறைக்கு பக்கத்து அறைகளில் ஒன்றை பழைய கதிரைகள், பாத்திரங்கள் என ஆளுயரத்திற்கு நிரப்பப்பட்டுள்ளது. அந்த அறைகளில் உள்ள தூசி பல வருடங்களாக படிந்ததால் மிகவும் தடிப்பாக இருந்தது. வெள்ளெலிகள் சந்தோசமாக அந்த இடத்திற்கு உரிமை கொண்டாடி ஓடி விளையாடின. ஹாலுக்கு எதிரான அறையில் அறுபதாம் வருடத்தில் இருந்து பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் ஐந்தடி உயரம்வரையில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அந்தப் பத்திரிகைக் குவியல்களுக்கு இடையில் பல்வேறுபட்ட மதுப்போத்தில்கள் கிடந்தன. வைன், பியர் என சில போத்தில்கள் திறக்கப்படாமலும் பாதி அருந்தியபடியும் கிடந்தன. பல பியர், வைன் வகைகள் தற்காலத்தில் பாவனையில் இல்லாதவை. மூலையில் போடப்பட்டிருந்த இரு காட்போட் பெட்டிகள் பல மருந்து குப்பிகளால் நிரப்பப்பட்டு இருந்தன. அவற்றின் லேபல்களில் இருந்த திகதிகளை படித்த போது அறுபது எழுபதாம் ஆண்டுகளில் இருந்து டாக்டர்களால் கொடுக்கப்பட்ட மருந்துகள் எனத் தெரிந்தது. வரவேற்பு ஹாலில் இரண்டு பெரிய சோபாக்களுடன் ஒரு வட்டமான மேசையும் இருந்தது. அந்த மேசை மீது புத்தகங்களும் பழங்காலத்து கிராமபோன் இசைத்தட்டுகளும் குவிக்கப்பட்டிருந்தன. சோபாமீது துவைத்ததும், அழுக்கானதுமான உடைகள் கிடந்தன. அங்கு நவீனமானது - சோனி தொலைக்காட்சி ஒன்று மட்டுமே. பழைய கறுப்பு வெள்ளை புகைப்படங்கள் அந்த வரவேற்பு கூடத்தின் சுவரை அலங்கரித்தன. சில படங்கள் பூனைகளின் போட்டோக்கள். மற்றவைகள் ஜீனின் இளமைகாலத்து போட்டோக்கள். அவற்றில் ஒரு படத்தில் மட்டும் ஜீன் இராணுவ உடையணிந்த ஒருவருடன் காணப்பட்டார். கணவனாக அல்லது காதலானாக இருந்த போது எடுத்திருக்க வேண்டும். சமயலறை மற்ற இடங்களோடு ஒப்பீட்டளவில் சுத்தமாக இருந்தது. சமயலறையில் சமீபத்தில் சமைத்ததற்கான அடையாளங்கள் எதுவும் இல்லை. பல வருடங்களுக்கு முன்பு வாங்கிய பட்டர், தேன், ஜாம் என்பன திறக்கப்படாமல் குளிர்சாதனப்பெட்டியுள் இருந்தன. சமையல் பாத்திரங்கள் ஒழுங்காக சுத்தமாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. ஹொலிவூட் நடிகை மர்லின் மன்றோவின் காற்றில் கவுன் பறக்க குனிந்தபடி இருக்கும் புகழ்பெற்ற புகைப்படம் கொண்ட 1960

ஆண்டு கலண்டர் குளிர்சாதனப் பெட்டியின் கதவின் மேல்பாகத்தை அலங்கரித்தது.

வாசலருகே உள்ளே சென்றதும் இடதுபக்கத்தில் இருந்த படுக்கையறையில் இடது பக்கத்தில் ஜன்னல் ஓரமாக உயரமான நீள்முட்டை வடிவத்தில் மரத்தினால் சட்டமிட்ட நிலைக் கண்ணாடியும் அதன் மேலாக மெல்லிய வெள்ளை சற்றின் துணியும் தொங்கியது. அந்த கண்ணாடி மேசையின் மீதும் அதன் இரண்டு லாச்சிகளிலும் ஏராளமான விதம் விதமான மேக்கப் சாதனங்கள் அடைந்து கிடந்தன. கண்ணாடிக்கு எதிராக இருந்த - இருவர் படுக்க கூடிய படுக்கைக்கு பக்கமாக தலையோரப்பகுதியில் உள்ள சிறிய மர அலுமாரியில் பல வித மாத்திரைகள் பல வர்ணத்தில் இருந்தன. இரத்த அழுத்தம், ஆத்திரையிற்ஸ், மலசிக்கல், மன அழுத்தம் இப்படி சகல உடல் உறுப்புகளிலும் நோய் ஏற்பட்டதால் சிறிய ஒரு மருந்தகம் அந்த அலுமாரியுள்ளே இருந்தது.

அவுஸ்திரேலியாவின் மருத்துவசேவை உலகத்திலே மிக சிறந்தது. வைத்தியர், வைத்தியசாலை எல்லாம் இனாமாக கிடைப்பவை. மருந்துகளும் அரசாங்கத்தால் விலை குறைப்பு செய்யப்பட்டு மிகவும் குறைந்த விலையில் கிடைக்கும். ஓய்வூதியம் பெறுபவர்களாக இருந்தால் மருந்தின் விலைகள் இனாமாக கிடைப்பதற்கு சமானமானது.

ஜீனின் கட்டிலின் அடுத்த பக்கத்தில் சுவரோரமாக உடைகளை வைக்கும் மர அலுமாரிகள் இரண்டு உள்ளது. அந்த அலுமாரியின் உள்ளே உடுப்புகள் தொங்கியும் கீழ் லாச்சியில் உள்ளாடைகள் அடைத்தும் வைக்கப்பட்டுள்ளது. இந்த உடைகளில் பல ஐம்பது வருடத்திற்கு முன்பான டிசையின் கொண்டவை. இவற்றில் சில கைகளில் சுருக்கம் வைத்தவை.அதே வேளையில் நவீன மோஸ்த்தர்களில் அமைந்தவை இடைக்கிடை காணப்பட்டது. உள்ளாடைகளிலும் அந்தக் காலத்து மோஸ்தர் தெரிந்தன. ஐப்பது வருடத்துக்கான உடைகளின் மோஸ்தர் வரலாறு அங்கு காணப்பட்டது.

ஜீனின் வீட்டில் கடந்த ஐம்பது வருடத்தில் தனக்கு விருப்பமான பொருள்கள் எதையும் வெளியே எறியவில்லை. எல்லாம் சேகரிக்கப்பட்டு உள்ளது.இது ஒரு மனேவியாதியாக பீடித்திருக்கிறது என்பதை அறிந்து கொள்ள முடிந்தது.

‘இதை பொலிசார் எனக்கு சொல்லிய போது என்னை திடுகிடவைத்தது. ஐம்பது வருடங்களாக பத்திரிகைகள், உள்ளாடைகள் ஏன் பாவிக்காத மருந்துகளை வெளியே எறிய விரும்பாத ஜீனால் எப்படி தான் வளர்த்த பூனைகளை நாங்கள் கருணைக்கொலை செய்ததை தாங்க முடியம்? ஜீனின் வாழ்க்கையில் இது பெரும் அதிர்ச்சியாக இருந்து, அவரது தற்கொலைக்கு தூண்டுகோலாக இருந்திருகிறது’ என்றார் ஆதர்.

‘நீங்கள் கவலைப்படத்தான் முடியும். ஆனால் வேறு ஒன்றும் செய்யமுடியாது’

‘நான் வருகிற ஞாயிற்றுக்கிழமை தேவாலயத்தில் நடக்கும் மரண பூசையில் கலந்து கொள்கிறேன். காலோஸ் உங்களால் வரமுடியுமா?’

நாங்கள் எல்லோரும் சென்று வைத்தியசாலையின் சார்பில் மலர்வளயத்தை வைப்போம். இதை விட நாம் ஜீனுக்கு எதை செய்ய முடியும்? என கார்லோஸ் சொல்லியதும் அவரவர் தங்கள் வேலைக்குச் சென்றார்கள்.

□ □ □

அன்று ஞாயிற்றுக்கிழமையாதலால் காலோஸ், ஆதர் போன்றவர்கள் வேலை செய்யவில்லை. சுந்தரம்பிள்ளையும் மற்றும் இரண்டு புதிதாக வந்த வைத்தியர்களும் வேலை செய்து கொண்டிருந்தபோது வெளியில் கொரிடோரில் அதிகமான சத்தம் கேட்டது. வழக்கமான நாட்களாக இருந்தால் பொறுப்பானவர்கள் அதைப் பார்த்துக் கொள்வார்கள் என இருந்திருக்க முடியும். அப்படி இருந்தும் பதினைந்து நிமிடங்கள் வழமையான தனது வைத்திய ஆலோசனைகளை செய்து கொண்டிருந்துபோது கடைசியாக நாயை தடுப்பு மருந்துக்காக உள்ளே கொண்டு வந்த பெண்மணி ‘என்றாலும் இந்தளவு சத்தம் போடுவது ஏற்க முடியாது. அந்த வரவேற்பு அறையில் உள்ள பெண் பாவம் அவள் என்ன செய்வது. அரைமணிநேரமாக இந்த பெண் குரலை கூட்டிக்கொண்டு போகிறாள். அடங்குவதாக தெரியவில்லை’ என்றாள்.

‘எனக்கு ஒன்றும் தெரியது’ என கூறிவிட்டு தடைமருந்தை அந்த நாய்குட்டிக்கு போட்டு அனுப்பிவிட்டு வெளியே சென்ற போது ஒரு உடல் பருமனான முப்பத்தைந்து வயதான பெண் ஒரு அழகான பெண்குழந்தையை கையில் பிடித்தபடி வரவேற்பு அறையின்

மையத்தில் நின்றாள். சிலும்பி இருந்த தலைமயிர் அவள் தலையை வாரவோ அல்லது மேக்கப்பை போடுவதற்கு நேரத்தை செலவு செய்யாமல் குழந்தை பெறுவதிலே கண்ணாக இருந்திருக்கிறாள் என்பதை புரிந்து கொள்ளலாம். ஒரு இரண்டு வயது பெண் குழந்தை மருண்டபடி தாயின் கைகளை பிடித்தபடி நின்றது. அதைவிட ஒரு வயதுக்கு உட்பட்ட குழந்தை ஒன்று சிறிது தூரத்தில் தள்ளு வண்டியில் படுத்தபடி தனது கையை சூப்பிக்கொண்டிருந்தது. உப்பிப் பருத்திருந்த அந்தப் பெண்ணின் வயிறு அங்கு குறைந்த பட்சம் ஒரு குழந்தையாவது இருக்க வேண்டும் என்பதை காட்டியது. ஒரு குழந்தையின் முலைப் பால் தேவைக்காக பெண் உடலில் ஏறிய கொழுப்பு இறங்க முன்பு அடுத்த குழந்தையை கருவுற்றிருப்பதால் கொழுப்புக்கு மேல் கொழுப்பாக படிந்த அவளது தேகம் மினுமினுத்தது. தொட்டால் கைகளில் வெண்ணைக்கட்டிபோல் வழுக்கிவிடுவாள் என்று நினைக்க கூடியதாக இருந்தது.

அவுஸ்திரேலிய அரசாங்கம் சமீபத்தில் குழந்தைகள் பெறுபவர்களுக்கு விசேடமான போனஸ் கொடுத்து வருகிறது. அதற்கான பலன் என வியந்தபடி வரவேற்பு இடத்தில் இருந்த லீனியிடம் விசாரித்தபோது 'சிவா இந்தப் பெண்ணின் ஒரு ரொட்வீலரும் அதனது இரண்டு குட்டிகளுக்கும் பாவோ வைரஸ் நோய் வந்ததால் இங்கு கொண்டுவரப்பட்டது. ஐந்து நாட்கள் வைத்தியம் செய்ததால் அதனது செலவு ஆயிரம் டாலருக்கு மேலாகிவிட்டது. அதை தன்னால் கட்டமுடியாது. தான் தனியாக வாழும் சிங்கிள் மதர் என சொல்லி ஆர்பாட்டம் பண்ணுகிறார். நான் வைத்தியர்கள் போட்ட செலவுக் கணக்கை குறைக்க முடியாது. அரைமணித்தியாலமாக ஆரப்பாட்டம் செய்யும் இந்தப் பெண்ணால் எனக்கு தலைவலி வந்து விட்டது'. எனத் தலையில் கைவைத்தாள்.

எப்பொழுதும் அமைதியாக பேசும் லீனி இதைச் சொன்ன போது சுந்தரம்பிள்ளைக்கு லீனியில் அனுதாபம் வந்தது.

'நான் போய் பேசிப் பார்க்கிறேன்'.

'இன்றைக்கு வேலை செய்பவர்களில் சீனியர் நீதான் சிவா'

அந்தப் பெண்ணை இரண்டாவது பரிசோதனை அறையின் உள்ளே வரும்படி அழைத்த போது எதுவும் பேசாமல் மெதுவாக குழந்தைகளுடன் வந்தாள். அரைமணித்தியாலம் கூக்குரல் இட்டதால் அவளும் களைப்படைந்திருக்க வேண்டும். அத்துடன் உரக்க குரல் கொடுத்து சண்டைபிடிப்பவர்கள் மற்றவர்கள்

கவனத்தை ஈர்க்க விரும்புகிறார்கள். அப்படியான சந்தர்ப்பம் வரும் போது அமைதியடைந்து விடுகிறார்கள்.

நடமாடும் குழந்தை காப்பகமாக உள்ளே வந்த பெண்ணிடம் தன்னை அறிமுகப்படுத்திவிட்டு சுந்தரம்பிள்ளை விடயத்தை கேட்டான்.

'நான் புரோட்ஸ்மடோவில் இருந்து வருகிறேன். சீபா பத்து குட்டிகள் போட்டது. எல்லாமாக எட்டு குட்டிகளை மற்றவர்கள் கொண்டு போய்விட்டார்கள். இந்த இரண்டுக்கும் சீபாவுக்கும் வயிற்றால் இரத்தமாக போகத் தொடங்கியதால் நான் இங்கு ஐந்து நாட்களுக்கு முன் கொண்டுவந்தேன். இப்பொழுது ஆயிரம் டாலருக்கு மேல் கேட்கிறார்கள். எனக்கு இந்த இரண்டு குழந்தையை விட இன்னும் இரண்டு மூத்த குழந்தைகள் வீட்டில் உள்ளன. என்னால் ஆயிரம் டாலரை செலவிடமுடியாது.

'உங்கள் நிலமை புரிகிறது. ரோட்வீலருக்கு நீங்கள் தடை ஊசி போட்டிருக்கவேண்டும். ரொட்வீலரும் டோபமானும் விசேடமாக இந்த நோய்க்கு ஆளாகும் தன்மையைக் கொண்டவை. குறைந்த பட்சம் குட்டிகளுக்கு தடை ஊசி போட்டிருக்கலாம். இந்த நோயால் பெரும்பாலான நாய்குட்டிகள் இறந்து விடுவது வழக்கம். மிகவும் கடுமையான வைத்தியத்தில் தான் உங்களது குட்டிகள் உயிர் பிழைத்துள்ளன. நான் இதை சொல்லுவதற்கு காரணம் நான் உங்கள் சீபாவையும் குட்டிகளையும் இரண்டு நாட்கள் பொறுப்பாகப் பார்த்தேன். நாங்கள் செல்லப்பிராணிகளுக்கு வைத்தியம் செய்யும் போதும் நோய் தீர்க்க மருந்துகளை பாவிக்கும்போதும் உங்களிடம் பணம் அதற்கு இருக்குமா இல்லையா என நினைத்து வைத்தியம் செய்யமுடியாதுதானே. அவற்றின் உடல்நலத்தை கருதி வைத்தியம் செய்யவேண்டும் எனத்தானே நீங்கள் எங்களிடம் எதிர்பார்க்கிறீர்கள்?'

'ஆனால் எனக்கு இவற்றிற்கு உணவு வழங்குவதற்கே போதும் போதுமாகிறது. இந்தப் பணத்தை கொடுக்கும் சக்தியில்லை'.

'நான் ஒன்று சொல்லட்டுமா? நீங்கள் இவ்வளவு பெரிய நாயை வளர்க்கும்போது குறைந்த பட்சம் கர்ப்பத்தடை ஒபரேசன் செய்திருக்க வேண்டும். இப்படி பத்து குட்டிகளை பராமரிக்கும் பிரச்சினை வந்திராது'.

‘நீங்கள் சொன்னது உண்மைதான். நான் கூட அதை செய்திருந்தால் இது நடந்திராது’ என தனது உப்பிய வயிற்றை இடது கையால் தடவியபடி சிரித்தாள். அழகிய தடித்து குவிந்த உதடுகளை பிரித்து வரிசையான மேல் பல்லுகள் மட்டும் தெரிய நடிகை அஞ்ஞலீனா ஜொலி மாதிரி. அந்த சிரிப்பு உண்மையாக மனதுக்கு இதமாக, ஒரு தேவதையாக அவளைக் காட்டியது. இந்தச் சிரிப்பே ஆயிரம் டொலர் பெறுமதியானது என எண்ணிய சுந்தரம்பிள்ளை, மேலும் இந்தச் சிரிப்புத்தான் இவளுக்கு எதிரியாகிறது.வேலையற்ற சோம்பேறி யாரோ சிரிப்பில் மயங்கி இந்தப் பெண்ணை இடைவெளியற்று குழந்தை பெறும் இயந்திரமாக்கி இருக்கவேண்டும், என முடிவு செய்தான்.

‘இன்று கொடுக்க முடிந்த பணத்தை கொடுத்து உங்கள் சீபாவை கொண்டு செல்லுங்கள். நாளை வந்து எங்கள் வைத்தியசாலை நிர்வாகியோடு பேசி உங்களுக்குத் தள்ளுபடி கேளுங்கள்’.

‘இதை நீங்கள் வந்து வரவேற்பு அறையில் உள்ள பெண்ணிடம் கூறுங்கள்’.

அதை லீனியிடம் சொன்னபோது ‘உனக்கு நன்றி. இல்லையெனில் இன்று முழுவதையும் தலையிடியில் மிகுதி நேரத்தை களித்திருப்பேன் சிவா’

அவுஸ்திரேலியாவில் கணவன் பிரிந்து சென்ற பின் பல பெண்கள் பொருளாதாரத்தின் கீழ்நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். அவர்கள் அரசாங்கத்தின் பண உதவி பெற்றாலும் மன உணர்வு மற்றும் பொருளாதார ரீதியில் சமூகத்தின் விளிம்புகளில் வாழ்கிறார்கள். தன்னம்பிக்கை குறைந்து இவர்கள் வாழ்வதோடு இவர்களால் வளர்க்கப்படும் குழந்தைகளின் எதிர்காலமும் கேள்விக் குறியாகிறது.

# 24

**வா**ழ்க்கை என்பது ஒரே மாதிரி இருக்க வேண்டியது இல்லைத்தானே. ஏற்ற இறக்கங்கள் நன்மை தீமைகள் சுகங்கள் துக்கங்கள் என மாறிமாறி வருவது இயற்கை. அதற்கேற்ப ஷரனது வாழ்க்கையில் விரும்பத்தக்க ஒரு மாற்றம் வந்தது. அவளது குடும்பம் சார்ந்த சகலருக்கும் மகிழ்ச்சியை அளிக்கக்கூடியதாக அது இருந்தது. பல காலமாக தாய் வீட்டில் கணவன் கிறிஸ்ரியனை பிரிந்து இருந்த போதும் அவள் தனது விவாகரத்தை கோட்டுக்கு எடுத்து போகவில்லை. கோட்டுக்குச் சென்று வழக்குப் பேசி தனக்குச் சொந்தமாக வரக்கூடிய பல மில்லியன் டொலர்களை இழப்பதற்கு தயாரில்லை. அவசரத்திலும், ஆத்திரத்திலும் சாதாரண பெண்களைப்போல் உணர்வு வயப்பட்டாலும் சிறிது நேரத்தில் பல்கலைக்கழகத்தில் பயின்று வந்த அவளது மூளையில் சிந்திக்கும் முன் பகுதிகள் இரத்த ஓட்டத்தை அதிகரித்து அவளை அமைதியாக்கும். ‘கமோன் ஷரன், நீ மற்றவர்கள்போல் அல்ல. இதற்காகவா உனது இளமைக் காலத்தை வயதான ஒருவனோடு வீணடித்தாய். ஆத்திரத்தில் எடுக்கும் முடிவுகள் உன்னை கீழே தள்ளி வீழ்த்திவிடும். கணவனைப் பிரிந்த மற்றைய பெண்களைப்போல் அரசாங்கத்தின் பிச்சைப் பணத்திலும் மற்றவர்களின் அனுதாபத்திலும் வாழ்நாளை கடத்துவதற்கு பிறந்தவள் அல்ல. உனது அழகும், அறிவும் உன்னை ஒரு மகாராணி போல் வாழ்வதற்கு வழிகாட்டும்‘ எனச் சொல்லி அவளிடம் சிந்தனையை தூண்டிவிட்டு தன்னில் உள்ள நம்பிக்கையை உசுப்பி விடப்படுவதால் விவாகரத்து என்ற விடயத்தை முற்றாக தள்ளிப் போட்டிருந்தாள்

அவுஸ்திரேலியாவில் விவாகரத்து என வரும்போது சட்டம் பெண்கள் சார்ந்து அவர்களுக்கு அதிக சொத்தையும் பணத்தையும் தருவதாக ஆண்களால் குறை கூறப்பட்டாலும், கிறிஸ்ரியனிடம் இருக்கும் சொத்துகள் தந்தை வழியாக அவனுக்கு பாரம்பரியமாக வந்தவை. ஷரனோடு இருந்த காலத்தில் சம்பாதித்தவை அல்ல

என்பது மட்டுமல்ல, இவர்கள் திருமணமாகி இருந்த நாட்கள் குறைவானவை என்பதால் பெரும்பகுதியான பணம் அவனிடமே இருந்துவிடும் என்பது ஷரனுக்கு தெரியும்.

சொத்து விடயமாக இப்படியான மன ஓட்டம் ஷரனிடம் இருப்பதை கிறிஸ்ரியன் புரிந்து கொண்டதால் மீண்டும் தன்னுடன் வந்து வாழும்படி வற்புறுத்தினான். இருவருக்கும் தெரிந்த நண்பர்கள் மூலம் தூதுவிட்டான். ஆரம்பத்தில் ஷரன் மறுத்தாலும், பின்பு சிந்தித்து பார்த்த போது மகனுக்காகவாவது கடைசித் தடவையாக ஒன்றாக வாழ்ந்து பார்ப்போம். தொடர்ச்சியாக மறுத்தால் கிறிஸ்ரியன் விவாகரத்துக் கேட்டு கோட்டுக்கு போவான். இதுவரையிலும் தனது தவறு என்பதால் பொறுத்துக் கொண்டு இருக்கிறான். இதைவிட சில காரணங்கள் ஷரனது மனமாற்றத்திற்கு காரணமாக இருந்ததை மறுக்க முடியாது.

வேறு எந்த ஆணும் தனியாக அவள் இருந்த காலத்தில் அவளது வாழ்க்கையில் நண்பனாகவேனும் தற்காலிகமாக வராதது அவளுக்கு நீண்ட உறங்காத இரவுகளைத் தந்தது. தனிமை கொடுமையானது. அதிலும் சிறுவயதிலே காதல் இன்பங்களை அனுபவித்த அவளுக்கு ஆண் துணை இல்லாமல் இருப்பது கொடிய வேதனையைத் தந்தது. சாதாரண இருபத்து எட்டு வயதான பெண்ணாக வெள்ளி மற்றும் சனிக்கிழமை இரவுகளில் மெல்பனின் நைட் கிளப்புகளில் ஆண் துணை தேடி அலைய முடியாது. மூன்று வயது மகனுக்கு தாயாகவும் முழுநேர வைத்தியராகவும் இருக்க வேண்டிய பொறுப்பும் அவளால் உதறித் தள்ள முடியாத சுமையாக இருந்தது. கிறிஸ்ரியனுக்கு கடைசியாக ஒரு சந்தர்ப்பம் கொடுத்துப் பார்ப்போம் என நினைத்தபடி அவனது அழைப்பை ஏற்றுக்கொண்டது ஒரு விதத்தில் அவளுக்கு அமைதியை தந்தது. கிறிஸ்ரியன் மகனோடும் அதிக நேரத்தை செலவிட்டாள். இந்தக்காலத்திலே சிட்னியில் நடக்கவிருந்த தொழிலோடு சம்பந்தமான மகாநாட்டுக்கு செல்ல விடுமுறை கேட்டு வைத்தியசாலைக்கு விண்ணப்பித்தது மட்டுமல்ல அவளால் வேலையிலும் அதிக கவனத்தை செலுத்த முடிந்தது. இந்தக்கால கட்டத்தில் இருவரும் ஒருவரை ஒருவர் மதித்து நண்பர்கள் போல் நடந்தார்கள். ஒருவர் மீது ஒருவர் மனத்தளவில் ஆக்கிரமிப்பு நடக்காத நட்புரீதியான ஒப்பந்தத்தின் அடிப்படையில் வாழ்க்கை நடத்தியதால் ஷரனது வேலைகள் எதுவும் கிறிஸ்ரியனால் பாதிப்படையவில்லை. சந்தோசமாக வாழ்க்கை நடத்தினார்கள் என சொல்ல முடியாது என்றாலும் கணவன் மனைவியின் தாம்பத்தியம் அமைதியாக இருந்தது. ஷரனுக்கு தான்தான் தாம்பத்திய போரில்

வென்றவள் என்ற நினைப்பு இருந்தது. இதனால் கிறிஸ்ரியனுடன் உடலுறவில் பாரபட்சமில்லாமல் அள்ளி வழங்கினாள். ஆண் உடலுறவில் துய்ந்து அமைதி கொள்ளும் போது மனைவியின் மற்றக் குறைகளை மறந்து விடுகிறான் என்பது அவளுக்கு தெரிந்திருந்தது. இந்தக் காலத்தில் மார்க்கஸ் மிகவும் சந்தோசமாக இருந்தான். அவனுக்காக கிறிஸ்ரியன் நீண்ட விடுமுறை எடுத்து அவனுக்கு விருப்பமான பல இடங்களுக்கு கூட்டி சென்றான். தவறான பாதையில் சென்ற தமது வாழ்க்கைப் பயணம் மீண்டும் சரியான பாதையில் செல்வதாக இருவரும் எண்ணியதால் அது மனநிம்மதியை கொடுத்தது.

□ □ □

அவுஸ்திரேலியாவில் ஒரு வருடம் தொடர்ந்து வேலை செய்தால் நாலு கிழமைகள் விடுமுறை கொடுப்பார்கள். அப்பொழுது விடுமுறையை சம்பாதித்து கொள்வதாக கூறுவார்கள். அது வருடாந்த விடுமுறை என சொல்லப்படும். வேலையில் சேர்ந்த விதம், பின்பு அந்த வேலையில் இருந்து ரிமதி பாத்தோலியசால் நீக்கப்பட்டது, பின்பு அதைத் தக்க வைத்துக் கொள்ள போராடியது என்பதோடு மெல்பனில் சொந்தமாக வீடு வேண்டியபின் ஒரு உண்மையான அவுஸ்திரேலிய குடியேற்றவாசியாகியது என்பன ஒன்றன் பின் ஒன்றாக சங்கிலித் தொடராக நடந்தாலும் ஒரு தனிப்பட்ட ஒலிம்பிக் சாதனையாக தெரிந்தது. சாதாரணமாக வெளிநாட்டில் இருந்து வந்து குடியேறுபவர்கள் எல்லாம் இப்படி பல தடைகளை கடக்க வேண்டுமென்றாலும் சுந்தரம்பிள்ளைக்கு தான் ஓடும் கார்ச் சக்கரத்தில் ஒட்டுப்பட்ட சுவிங்கம் போன்ற உணர்வு இக்காலத்தில் இருந்தது. சிறிது ஆசுவாசமாக குடும்பத்தை எங்காவது அழைத்து செல்ல முடியாது இருந்தது. இதனால் சில வருடங்கள் தனது வருட விடுமுறையை எடுக்காது தொடர்ந்து வேலை செய்தபோது ஒரு இடத்தில் இருந்து திரும்பி கடந்த காலத்தை அசைபோட பசுமாட்டுக்கு மரநிழல்போல விடுமுறை தேவையாக இருந்தது.

வாழ்க்கையில் எவரும் தனித்து நின்று சாதிப்பதில்லை. சுற்றி இருக்கும் பலரது அர்ப்பணிப்புகள் மீது தான் சாதனைகள்,வெற்றிகள் எங்கும் உருவாக்கப்படுகின்றன. சாம்ராச்சியங்கள் முதல் தனிமனிதரின் சிறு வெற்றிகள் சாதனைகள் என எதைச் சொன்னாலும் தனியாக நின்று ஒருவரால் சமூகத்தில் செய்யவில்லை. நண்பர்களான காலோஸ் போன்றவர்களது உதவியால் வேலையை திரும்பப்

பெற்றதும் வீட்டை வேண்டுவதற்கு உதவிய ரியல் எஸ்ரேட் ஏஜன்ட் போன்றவர்கள் நன்றியுடன் அந்த விடுமுறைகால நினைவில் வந்து போனார்கள். சாருலதா நங்கூரம் போல் சுந்தரம்பிள்ளை தளும்பிய நாட்களில் வாழ்கையை ஓட துணை செய்தது போன்ற நினைவுகளை மனதில் நினைத்து அசைபோட அந்த விடுமுறை இடைவெளியை தந்தது.

விடுமுறையில் சுந்தரம்பிள்ளை நின்ற போது வீட்டில் பல விடயங்களை செய்ய வேண்டி இருந்தது. இந்தக் காலத்தில் வீட்டில் வளர்த்த பொன்னியின் பிரச்சினை மேலும் அதிகமாகியது. நாய்களுக்கு கொடுக்கப்படும் விசேட ரெயினிங் பொன்னிக்கு எதிர்பார்த்தது போல் பயனளித்ததாக இருக்கவில்லை. வீட்டைச் சுற்றி உள்ள வேலி ஐந்து அடி உயரமானது. வேலியின் மேலும் அத்துடன் கேட்மீதும் இன்னும் ஒரு அடி உயரத்தில் தடுப்பு வேலியை வைத்து உயரத்தை கூட்டிய போது வீடு கிட்ட தட்ட அதிபாதுகாப்பான சிறைச்சாலை போல் தோற்றமளித்தது. சிறைச்சாலையில் இருப்பது போன்ற தோற்றத்தையும் மன நிலையையும் பொன்னி என்ற இந்த பத்து கிலோ நாய் வீட்டில் உள்ளவர்களுக்கு உருவாக்கிவிட்டது.

அவுஸ்திரேலியாவின் வட பகுதியான குயின்ஸ்லண்ட் போன்ற இடங்களில் கோடைகாலத்தில் மழை பெய்யும். ஆனால் விக்டோரியா மற்றும் நியு சவுத் வேல்ஸ் மாநிலங்களில் குளிர் காலத்தில் மழை பெய்யும். மெல்பனின் மழைக்காலம் தென்துருவ குளிர் காற்றையும் தோழமையோடு அழைத்து வீட்டின் வெளிப்பகுதிகளில் விளையாடும். குளிரும் மழையும் சேர்ந்து நடமாடும் இந்த நாட்களில் நகரத்தவர் சோம்பேறியாகி விடுவார்கள். வீட்டுத்தோட்ட வேலைகள், வெளிவேலைகள் நின்று விடும். பெரும்பாலான மெல்பன் மக்கள் வீட்டுக் கண்ணாடி ஜன்னலால் எட்டிப் பார்ப்பதுடன் நின்றுவிடுவார்கள். நாய்களுடன் வெளியே நடப்பது குறைவதால் அவைகளில் கொழுப்பு உடலில் சேகரிக்கப்பட்டு நிறை கூறிவிடும். அக்காலத்தில் நடக்கும் அவுஸ்திரேலிய உதைப்பந்தாட்டம் ஒரு சிலரை விளையாட்டு மைதானத்துக்கு அழைத்தாலும் மற்றவர்கள் தொலைக்காட்சியில் தங்கள் கண்களை ஒட்ட வைத்துக் கொள்வார்கள். குளிர்பிரதேசங்களான விக்டோரியாவில் வாழ்பவர்கள் வாழ்வின் ஓட்டத்தை குறைத்துக் கொண்டு வீடுகளின் உள்ளே குளிர்கால நெடும்பயணத்தை செய்யும் நத்தைகள் போல் வாழ்வார்கள். இதற்கு சுந்தரம்பிள்ளை குடும்பமும் விதிவிலக்கல்ல. வேலை நேரங்களைத் தவிர மற்றைய நேரங்களில்

வீட்டினுள் கதகதவென இருக்கும் ஹீட்டர்களின் வெப்பத்தை அனுபவித்தபடி உள்ளே தஞ்சமாகினார்கள்.

விடுமுறை நாளில் சுந்தரம்பிள்ளை சமையலில் ஈடுபடுவதால் மற்றவற்றை மறந்து விடுவது வழக்கம். சமையலை ஒரு கலையாகவும், பொழுது போக்காகவும் எடுத்து அதில் தன்னை மறந்துவிட்ட சுந்தரம்பிள்ளை, அன்று சமையலை முடித்த பின்பு வீட்டின் பின்பகுதியில் பொன்னியைத் தேடியபோது அங்கு அதைக் காணவில்லை. ஆயிரம் டொலர் பெறுமதியான மேலதிக காவலரணை துச்சமாக நினைத்து வெளியேறிவிட்டது. ஞாயிற்றுக்கிழமை பாடசாலை விடுமுறையாதலால் எல்லோரும் வீட்டில் இருந்தார்கள். ஓடிய நாயை எங்கே தேடுவது என்று புரியவில்லை. வார நாட்களில் பாடசாலைக்குப் போயிருக்கலாம் என நினைக்கலாம். இன்று எவரும் அங்கிருக்கமாட்டார்கள் என்பதை விட பாடசாலை மணி ஒலிக்காத போது அங்கு நிச்சயமாக போகாது என்பதால் சுந்தரம்பிள்ளையும் காரை எடுத்துக்கொண்டு சகனுடன் பல இடங்களுக்குச் சுற்றினார்கள். சுற்று வட்டாரத்தில் உள்ள தெருக்கள், பூங்காக்கள் எனத் தேடி விட்டு வெறுங்கையோடு மீண்டும் வீடு வந்தான். சகனது ஆலோசனையின்படி எப்போதோ எடுத்த பொன்னியின் படத்துடன் காணவில்லை என எழுதி அவற்றில் பல பிரதிகளை சுற்றி இருந்த கடைகளிலும், மின்சாரக்கம்பங்களிலும் ஒட்டி விட்டு, திரும்பி வீட்டுக்கு வந்தனர். பொன்னியைக் காணாததால் மனதில் ஏற்பட்ட கிலேசம் இந்த முயற்சியின் பின்னால் சிறிது தணிந்து இருந்தது. விடுமுறை நாளானதால் சுற்றியுள்ள மிருக வைத்திய சாலைகளிலோ அல்லது நகரசபையினர் அடைத்து வைக்கும் இடங்களிலோ தேட முடியாது. வேறு ஒன்றும் செய்வதற்கு இல்லை என்ற உணர்வில் வீட்டில் தொலைக்காட்சி முன்னால் இருந்த போது கதவு தட்டப்பட்டது. திறந்த போது இரண்டு வீடுகளுக்கு அப்பால் இருக்கும் டோரத்தி வாசலில் நின்றார்.

‘உங்களது நாயை நான் அடுத்த தெருவில் கண்டேன்’.

சுந்தரம்பிள்ளையின் குடும்பம் அங்கு சென்று அவர்களது வீட்டின் கதவை தட்டிய போது ஒரு வயதான பெண் வந்தார். அவரை தொடர்ந்து பொன்னி வந்தது.

‘இது எங்கள் நாய்’

‘தெருவில் எங்களது காரில் அடிபட இருந்தது. நாங்கள் காரை நிறுத்தியதும் எங்கள் காரில் ஏறிவிட்டது. நாளை திங்கள் கிழமையானதால் நகரசபையில் செய்தியை கொடுக்க இருந்தோம்’.

‘இந்த பொன்னி வீட்டை விட்டு ஓடுவதே அதனது வேலையாகிவிட்டது. பலமுறை நடந்து விட்டது. என்றான் சகன்.

‘உங்களுக்கு நன்றிகள்’.அந்தப் பெண்ணுடன் அமைதியாக பேசி விடைபெற்றாலும் சுந்தரம்பிள்ளைக்கு மனதில் இனிமேல் எதுவும் செய்து பிரயோசனம் இல்லை. பொன்னியென்று பெயர் வைத்ததும் பொருத்தமாகி விட்டது. பொன்னி ஆற்றைப் போல் தனது கடலில் தனது முடிவு வரும்வரைக்கும் தொடர்ந்து ஓடிக்கொண்டு இருக்கிறது. பொன்னி காரில் அடிபட்டு கண்காணாத இடத்தில் துன்பப்பட்டு இறப்பதற்கு முன்பு நானே கருணைக்கொலை செய்து விட்டால் உத்தமம். ஆனால் இப்பொழுது இதைச் செய்ய வீட்டில் உள்ள மற்றவர்களுக்கு இப்பொழுது சொல்லத் தேவையில்லை என நினைத்துக் கொண்டான்.

அன்று இரவு முழுவதும் பொன்னி வீட்டின் உள்ளே நின்றது.

‘இனிமேல் நாங்கள் பொன்னியை வைத்திருக்க முடியாது. எங்காவது காரில் அடிபட்டு தெருவில் இறப்பதற்கான சாத்தியம் உள்ளது. நான் திரும்பவும் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்போகிறேன்.

‘அங்கு கருணைக்கொலை செய்வார்கள்’. என்றாள் சாருலதா

‘அது பரவாயில்லை. அமைதியாக மரணம் சம்பவிக்கும். அடிபட்டு தெருவிலும் பாதி வாகன சக்கரத்தில் மிகுதியாக பாதையிலுமாக அலங்கோலமாக இறப்பதிலும் பார்க்க இது மேலானது’.

‘அதுக்கு அப்படி விதியென்றால் நாங்கள் என்ன செய்வது. எங்களது ஊர்களில் எல்லாம் இப்படி கருணைக்கொலை செய்வில்லைத்தானே. நாய்கள் இயற்கையாக இறக்கும் வரையும் உயிர் வாழ்ந்தன’.

‘நாங்கள் மட்டும் விதியை நம்பி மருந்து செய்யாது இருக்கிறோமா? எத்தனை விதமான மருந்து வகைகளை எடுத்துக்கொண்டு உனது அம்மா உயிர் வாழுகிறார். எங்களின் உயிரை நீடிப்பதற்கு முனையும் போது விதியை பற்றி நாங்கள்

யோசிப்பது இல்லை. நீங்கள் சொல்லும் விதி நூறு வருடங்களுக்கு முன்பு அவுஸ்திரேலியாவில் வாழும் மனிதரை சராசரியாக இருவது வருடங்களுக்கு முன்பாக கொண்டு சென்றது. இப்பொழுது சராசரியாக ஆண்கள் எழுபத்தைந்து வருடங்களும் பெண்கள் எண்பது வருடமும் சீவிக்கிறார்கள். இதே போல்தான் நமது ஊரிலும் விதி மாற்றி எழுதப்படுகிறது. அக்காலத்தில் அறுபது வயது வாழ்வது சாதனையாக கொண்டாடப்பட்டது. இப்பொழுது நம்மவர்களே எழுபத்தைந்து வயதில் இரண்டாம் திருமணம் முடிக்கிறார்கள்'.

'இதற்கு மேல் நான் பேசி நீங்கள் கேட்கப் போவது இல்லை. நீங்கள்தான் நாய் ஒன்று வேணும் என வீட்டுக்கு கொண்டு வந்தது. இப்பொழுது அற்ப ஆயுளில் அதை கொலை செய்ய முயற்சிப்பதும்' என நறுக்கென வார்த்தைகளால் கொட்டி விட்டு அந்த இடத்தை விட்டு சாருலதா நகர்ந்தாள்.

அடுத்த நாள் திங்கட்கிழமை வேலைக்குச் சென்ற போது பொன்னியைக் கூப்பிட்டதும் காரின் உள்ளே வந்து முன்பக்க சீட்டில் இருந்து கொண்டு சுந்தரம்பிள்ளையின் கைகளை நக்கிக் கொண்டது.

இந்த நாய்க்குத் தன்னை கொலை செய்வதற்காக கொண்டு போகிறார்கள் என்பது தெரியாது. தனது நன்றியையும், அன்பையும் நக்கிக் காட்டுகிறது. இந்தப் பூமியில் மனிதன் இயற்கையையும் மற்ற உயிரினங்களினது பராமரிப்பையும் தனது அறிவின் வளர்ச்சியால் குத்தகைக்கு எடுத்துள்ளபோது அந்தக் கடமையை அவன் எவ்வளவு சரியாக செய்கிறான்? இயற்கையில் வனங்களை அழித்து வனவிலங்குகளை கொன்று தள்ளியிருக்கிறான். கடந்த சில நூற்றாண்டுகளில் மனிதனால் ஏற்பட்ட அழிவு மிகவும் பாரதுரமானது. திருத்தப்பட முடியாததாக இருப்பதை உணர்ந்துள்ளானா? அவன் செய்யும் முடிவுகள் இதுவரையும் சரியானவையா? மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப்படுகிறதா என்ற கேள்விகள் மனதில் எழுந்தன.

இப்படியாக மனிதகுலத்தைப் பற்றியும் தன்னைப்பற்றியும் சுயவிசாரணையுடன் வேலைக்குச் சென்ற போது வைத்தியசாலையில் ஓர் அதிர்ச்சி காத்திருந்தது.

சில நாட்களின் முன்பு வித்தியாசமான பூனைக் காய்ச்சல் பல பூனைகளுக்கு ஒரேகாலத்தில் வந்ததால் அவைகளின் தொண்டையில் இருந்து எடுத்த சாம்பிள்கள்கள் பிரத்தியேகமான பரிசோதனைக்கு அனுப்பப்பட்டன. அந்த முடிவுகளின்படி

ஒரு புதுவகையான வைரஸ், பூனைகளை தாக்கியுள்ளது என முடிவாகியதால் வைத்திசாலையில் பூனைகளுக்கு வைத்திய வசதிகள் ஒரு கிழமை நிறுத்தப்பட்டது. பூனைப்பகுதிகளும், அங்குள்ள கூண்டுகளும் விசேட இரசாயனத்தால் சுத்திகரிக்கப்பட்டு சிலநாட்கள் வெறுமையாக வைக்கப்பட்டன.

வைத்தியசாலையில் வதியும் கொலிங்வூட், நாய்களின் பகுதியில் கடந்த இரு நாட்களாக அடைக்கப்பட்டிருந்தது. அங்கிருந்த நாய்கள் கொலிங்வூட்டை பார்த்து இரவு பகலாக உறுமின.

பொன்னியைக் கருணைக் கொலை செய்வதற்கு முன்பாக சிலமணி நேரம் நாய்க்கூட்டில் விடப்போன சுந்தரம்பிள்ளை கொலிங்வூட்டை பார்த்து 'என்ன உனக்கு வந்தது'? எனக் கேட்டான்.

'இந்த விசர் நாய்களுக்கு மத்தியில் இருக்கிறேன் நீயும் போதாதற்கு ஒரு குட்டி நாயைக் இங்கே கொண்டு வந்திருக்கிறாய்' என அலுத்துக்கொண்டது.

நேர் எதிராக இருந்த கூண்டில் அடைக்கப்பட்ட பொன்னி குரைக்கவில்லை. தலையைத் திருப்பி கொலிங்வூட்டை சினேகமாக பார்த்தது.

'ஏது இந்த நாய்? கொலிங்வூட் விடவில்லை.

'இது எனது நாய். தொடர்ச்சியாக வேலி பாய்ந்து வீட்டை வீட்டு ஓடுகிறது. இதைத் தடுக்க சகல முயற்சிகளிலும் தோல்வி கண்டுவிட்டேன். இன்று கருணைக் கொலை செய்ய முடிவு எடுத்துவிட்டேன்.

'நான் நினைக்கிறேன் நீ அவசரப்படுகிறாய்' என தனது வழக்கமான பாணியில் கூறியது.

தனது முடிவில் சந்தோசம் அற்று, அதே வேளையில் வேறு வழி இல்லாமல் தள்ளப்பட்டதாக நினைத்துக்கொண்டிருந்த சுந்தரம்பிள்ளைக்கு இது எரிச்சலைக் கொடுத்தது.

'இப்ப யார் உனது நினைப்பை கேட்டது. நீயே பார்ப்பதற்கு பரிதாபமாக இருக்கிறாய். இந்த வைத்தியசாலையை கட்டி மேய்ப்பது போல நினைப்புடன் இருந்தாயே. உன்னிலையே கவலைக்கிடமாக இருக்கிறது. இந்த பூனைக்காய்ச்சலில் இருந்து

எப்படி உயிர் தப்பினாய்? அது சரி எவ்வளவுகாலம் இந்த சிறைவாசம்?'.

'ஐந்து நாட்களுக்கு'

'உன்னைப் பார்க்க பரிதாபமாக இருக்கிறது. முழு வைத்தியசாலையின் பூராயங்களை துருவிக்கொண்டு திரிந்த உனக்கு இது கஷ்டமாக இருக்குமே?

'என் விதி உனக்கு நக்கலாக இருக்கிறது'.

'என் வீட்டுக்கு வருகிறாயா?'

'மகிழ்ச்சியுடன் வருகிறேன். என்னோடு பொன்னியும் இருக்கட்டும். அந்தக் காலத்தில் வேலி பாயாமல் நான் பார்த்துக் கொள்கிறேன்'.

பொன்னிக்கு மரணதண்டனை ஐந்து நாட்கள் தள்ளி வைக்கப்பட்டது.

□ □ □

சுந்தரம்பிள்ளை தியேட்டரில் வேலை செய்து கொண்டிருக்கும் போது ஷரன் வந்து அவசரமாக 'இந்த நாய்க்கு அவசரமாக தொண்டைக்குள் ஏதாவது சிக்கி இருக்கிறதா என பார்க்க முடியுமா?' எனக் கேட்டாள்.

அவளது வெண்ணிற மேல் அங்கி மீது மார்போடு அணைக்கப்பட்டு சிறிய சிவப்பு நிற பொமரேனியன் நாய் இருந்தது. கொஞ்சலுடன் சிரிப்பு கலந்தபடி அவளது குரல் இருந்தது.

நிச்சயமாக இக்கால கட்டத்தில் சந்தோசமாக இருக்கிறாள் என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது.

'நாங்கள் மிகவும் பிசியாக இருக்கிறோம். அவசரமானது என்றால் மட்டும் செய்யமுடியும், என்ன விடயம்?' சாம் கேட்டது ஷரனுக்கு பிடிக்கவில்லை.

அவனை அலட்சியமாக ஒரு புழுவைப் பார்ப்பது போல் பார்த்து விட்டுச் சுந்தரம்பிள்ளையிடம் 'ஏதாவது எலும்பு சிக்கியிருக்கலாம் எனச் சந்தேகிக்கிறேன். தொடர்ச்சியாக இருமியபடி இருக்கிறது'

எனச் சொல்லிக் கொண்டு அந்த தியேட்டரில் இருந்த பூனைக் கூடொன்றினுள் அந்தச் சிறிய நாயை வைத்தாள்.

'தொற்று நோய் இருக்கலாமல்லவா' எனச் சுந்தரம்பிள்ளை சொல்லிக் கொண்டிருந்த போது ஷரன் வெளியேறி விட்டாள்.

அவளது பின்னசைவுகளை பார்த்துக் கொண்டிருந்த சாம் 'இவள் ஒரு விடயத்திற்கு மட்டும்தான் இலாயக்கு. நல்ல வேளை ஷரன் ஒருத்தியை மட்டும்தான் இந்த வைத்தியசாலை, ஏன் உலகமே தாங்கும். அப்பப்பா ஒரு நாள் கூட இவளோடு என்னால் சீவிக்க முடியாது. எப்படி கிறிஸ்ரியனால் சமாளிக்க முடிகிறது?' என்றான்.

'கமோன் சாம் நீ ஆரம்பத்தில் இருந்தே ஷரனிடம் மதிப்பு வைத்தது இல்லை. அவளது நல்ல பக்கத்தை பார்த்தது கிடையாது. நான் நினைக்கிறேன், அவளது சிறுவயதில் வளர்க்கப்பட்ட விதத்தால் கொஞ்சம் இப்படி இருக்கிறாள்'.

'அவளது நல்ல பகுதிகளை இரசித்துதான் சொல்கிறேன்'

'உனக்கும் காலோசுக்கும் வேறுபாடில்லை சாம்'

'ஆண்களை தனது தேவைக்கு பாவிக்க வேண்டுமானால் தேனொழுக பேசுவாள். தனது காலால், கைகளால் உராய்ந்தோ இல்லை கன்னத்தில் முத்தமிட்டோ அவர்களுக்கு உசுப்பேற்றுவாள். தனது வேலை முடிந்ததும் அப்படியே கழற்றி விட்டு போய் விடுவாள் இவையெல்லாம் அவளது நல்ல பகுதிகள் என நான் பார்த்திருக்கிறேன்' என ஏளனம் கலந்து கூறினான்.

'இதை நீ பெரிதாக பார்க்கிறாய். சாம், இந்த மாதிரியாக எல்லா பெண்களும் ஏதோ ஒரு அளவு செய்ய வேண்டியுள்ளது. அதற்கு உங்களைப் போன்ற ஆண்களும் காரணம். பெண்களை அவர்களின் மார்பின் அளவாலும் பின்னசைவையும் வைத்து மதிப்பிடும்போது அவர்களும் அதை உபயோகிப்பதில் தவறு இல்லைத்தானே?'

'கமோன் சிவா, அவர்கள் உபயோகிப்பதை தவறு என நான் சொல்லவில்லை. அப்படியான பெண்களின் உபாசகன். அவர்கள் காலடிகளில் தவம் கிடக்கும் பக்தன் நான். ஆனால் இவள் தனக்கு தேவையான போது உபயோகப்படுத்தி விட்டு தூக்கி எறிகிறாள். சில நேரத்தில் தன் அழகை, பாவனைப் பொருளாக்கிவிட்டு மற்றைய நேரத்தில் புனித பொருளாகிறாள். இன்னும் தெளிவாக சொன்னால் சில நேரத்தில் வாசித்துவிட்டு தூக்கிப்போடும்

அன்றைய பத்திரிகையாகிவிட்டு மறுநாள் வணக்கத்துக்குரிய வேதப் புத்தகமாகிறாள். தனக்கு தேவையானால் மார்லின் மன்றோ போலவும் தேவையற்ற போது மதர் திரேசாவாகவும் போடும் இரட்டை வேடம்தான் எனக்கு கண்ணில் காட்ட ஏலாது'

'நீ மிகவும் கடுமையாக அவளை விமர்சிக்கிறாய்'

'நான் ஒரு சம்பவத்தை கூறுகிறேன். நீ விடுமுறையில் இருந்த காலத்தில் நடந்தது. காலேசின் இத்தாலிய நண்பன் சேர்ஜியோவை உனக்குத் தெரியும்தானே'

'நமது வைத்தியசாலைக்கு வந்து சிறிய ரிப்பேர் வேலை செய்பவரைப் பற்றித்தானே சொல்கிறாய்.?'

'ஆமாம் அந்த சேர்ஜியோவுக்கு அறுபத்தைந்து வயது இருக்கும் இல்லையா?

'ஆமாம்'

'ஒரு நாள் மிகவும் இறுக்கமான துணியில் பாண்ட் போட்டுக் கொண்டு காரில் ஷரன் வந்து இறங்கிய போது அந்தக் கார் நிறுத்தும் இடங்களை வர்ணமடித்துக் கொண்டிருந்த சேர்ஜியோ வர்ணமடிப்பதை நிறுத்தி விட்டு 'இன்று டின்னருக்கு நான் தயார்' என ஒரு நகைச்சுவையாக கூறியிருக்கிறார். அப்பொழுது சிரித்து விட்டு பின்பு டாக்டர் ஆதரிடம் சேர்ஜியோவைப் பற்றி முறையிட்டிருக்கிறாள். இதனால் டாக்டர் ஆதர் சேர்ஜியோவை கண்டிக்க அந்த மனுசன் இப்பொழுது வேலைக்கு வருவதில்லை'

'நான் சேர்ஜியோவை தவறு என்பேன்'

'அப்படியானால் என் முதுகில் தடவியபடி சில மாதங்களுக்கு முன்பு ஷரன் உன் மனைவி அலுத்துவிடவில்லையா என கூறிவிட்டு வீக்கெண்ட் என்ன செய்கிறாய் என்று கேட்டாளே'

'நீ அதிஷ்டசாலி' என சிரித்துவிட்டு சுந்தரம்பிள்ளை அந்த பொமரேனியனை பெட்டிக்குள்ளிருந்து வெளியே எடுத்து அதன் தொண்டையை மெதுவாக அழுத்திய போது அந்த நாய் மெதுவாக இருமியது. தேமாமீட்டரை எடுத்து குதத்தினுள் வைத்து பார்த்த போது நாற்பது பாகை சென்ரிகிரேட்டில் வெப்பம் இருந்தது.

'சாம், இந்த நாய்க்கு சுவாச தொற்று நோய் உள்ளது. சரியாக சோதிக்காமல் எம்மிடம் ஷரன் தள்ளியிருக்கிறாள். போய் மூன்றாவது வைத்திய ஆலோசனை அறையில் உள்ள தேமாமீட்ரரை எடுத்துக்கொண்டு வா'

சாம் எடுத்துவந்த அந்த தேமாமீட்டரும் நாற்பது பாகை சென்டிகிரேட்டைக் காட்டியது.

நாய்க்குத் தொண்டைக்குள் எதுவும் அடைக்கவில்லை. சுவாசக்குழலில் தொற்று நோய் வந்துள்ளது என்பது உறுதியாகியது.

அந்த வழியால் மீண்டும் வந்த ஷரன் 'ஏய் போய்ஸ், எனது நாயை மயக்கமருந்து கொடுத்து பரிசோதித்தீர்களா'?

'அதற்கு மயக்கமருந்து தேவையில்லை. தேமாமீட்டர் தேவை'

'என்ன சொல்கிறீர்கள்?'

'நாற்பது டிகிரியில் வெப்பம் காட்டுகிறது. சுவாசத் தொற்று நோய் வந்துள்ளது.

'நான் செக் பண்ணினேன். அந்த மூன்றாவது அறையில் உள்ள தேமாமீட்டரில் ஏதோ தவறு உள்ளது.

'இதோ அந்த தேமாமீட்டர். அதால்தான் நாங்கள் வெப்பத்தை அளந்தோம்'

அந்த அழகிய முகம் சிவந்து சுருங்கியது, காற்றுப் போன பலூனைப் போல் ஆனால்

சில கணத்தில் மத்தாப்பு போன்ற அழகிய சிரிப்பால் அந்த ஒபரேசன் தியேட்டரை நிறைத்துவிட்டு 'ஓகே போய்ஸ் இந்த முறை நீங்கள் வென்றுவிட்டீர்கள். எனது தவறை ஏற்றுக் கொள்கிறேன்' பொதுவாக சொல்லி விட்டு சுந்தரம்பிள்ளையின் கைகளில் கிள்ளிவிட்டு சென்றாள்.

'சிவா எந்தப் பெண்ணிடமும் நான் பயந்ததில்லை. ஆனால் ஷரனை கண்டால் நான் விலகிப் போவதன் காரணம் எந்த நேரத்தில் எப்படி மாறுவாள் என கணிக்கமுடியாது. மெல்பனில் நாலு பருவகாலமும் ஒரே நாளில் வருவது போன்று அவளது குணங்கள் மாறக்கூடியது. அவளுக்கு உன்னில் ஒரு மென்மையான இடம் உள்ளது. கவனமாக நடந்து கொள். எப்பவாவது ஒரு நாள்

உன்னை மாட்டுவதற்கு திட்டம் வைத்திருப்பாள். அவள் மீது எந்த காலத்திலும் இரக்கமோ, மோகமோ ஏற்படுத்திக் கொள்ளாதே. உன்னைப் பொறுத்தவரை அவளிடம் இருந்து ஒதுங்கி இருப்பது நல்லது'.

'இந்த விடயத்தில் தங்களை நான் குருவாக ஏற்றுக்கொண்டு வருடங்களாகி விட்டது. உங்கள் உபதேசங்களை முழு மனதோடு ஏற்றுக்கொள்கிறேன். ஷரனை பொறுத்தவரையில் கணவனோடு சந்தோசமாக சேர்ந்து இருக்கிறாள் போல் தெரிகிறது. நமக்கெல்லாம் வலை வீசமாட்டாள் என நினைக்கிறேன். ஆனாலும் என்னால் முடிந்தவரை சகவைத்தியர் என்ற உறவுக்கு மேல் செல்லாமல் பார்த்துக் கொள்கிறேன்' என சிறிது நகைச்சுவை கலந்த குரலில் பதில் சொன்னான் சுந்தரம்பிள்ளை.

'நான் சொல்லிய விடயங்கள் நகைச்சுவையில்லை என்பதை நீ உணரும் காலம் வரக்கூடாது என நான் அல்லாவை பிரார்த்திக்கிறேன்' என சிறிது கோபத்துடன் தனது கடவுளின் பெயரை முதல் முறையாக பாவித்து பதில் கூறினான்.

## 25

**வை**த்தியசாலையில் சுந்தரம்பிள்ளைக்கு ஓய்வு நாளானதால் மெல்பனின் வடபகுதியில் வசிக்கும் நண்பனிடம் சென்றுவிட்டு திரும்பி வரும்போது வைத்தியசாலையுள்ளே சென்றான். எப்பொழுதும் வேலை செய்யும் நாளிலும் பார்க்க வேலை செய்யாத நாளில் சென்று, நண்பர்கள் வேலை செய்வதைப் பார்ப்பது திருப்தியைத் தரக்கூடியது. மனிதர்களுக்கு வேலை செய்வது உடலோடு அல்லது மூளையோடு மட்டும் சம்பந்தப்பட்டது அல்ல. வேலை தொழிலாக மாறி ஆன்மாவோடு சேர்ந்து விடுகிறது. வேதனம் இரண்டாம் பட்சமாகிறது. வேலை இல்லாமல் இருப்பதை நாகரீகமான மனிதனால் ஏற்றுக்கொள்ள முடியாது. மனித வேலையை உடலுழைப்பு என்ற சிறிய வரைவிலக்கணம் கொடுத்து இலகுவாக வரைவு செய்ய முயற்சித்த பொதுவுடைமைவாதிகள் தோல்வியைத் தழுவிக் கொண்டார்கள்.

அதேவேளையில் வேலையின் பொறுப்பு என்ற சுமை மனிதனின் தலையில் ஏற்றி விடப்படுகிறது. இந்தச் சுமை நிறைமாதப் பெண்ணின் வயிற்றுப் பாரம் போன்றது. இதனால்தான் வேலை முடிந்தபின் பிரசவம் முடிந்தது போன்ற திருப்தி மனத்திலும் உடலிலும் ஏற்படுகிறது.

சுந்தரம்பிள்ளை வேலை இல்லாமல் இருந்த அந்த சுதந்திரமான விடுமுறை நாளில் நண்பர்கள் வேலை செய்வதைப் பார்ப்பது அவனுக்கு திருப்தியை கொடுத்தது. சிலரது முகங்களில் வேலையின் அழுத்தம் தெரியும். சிலர் சிரித்தபடியே வேலை செய்வார்கள். ஒரு சிலருக்கு வேலையின் அழுத்தத்தோடு வீட்டில் உள்ள பிரச்சினை மேலதிகமாக அவர்கள் முகங்களில் தெரிவதுடன் வேலையில் தவறுகளை இழைத்து விடுவார்கள். சில தவறுகள் பிற்காலத்தில் நினைத்து இரைமீட்டிப் பார்க்கும் போது நகைச்சுவையாக இருக்கும்.

ஷாலற் என்ற பெண் வைத்தியர் பற்றிய சில கதைகள் அவர் வைத்தியசாலையை விட்டு போன பின்பும் ஆவி போல் வைத்தியசாலையில் உலாவிக் கொண்டிருக்கும். தேநீர் இடைவேளைகள், மற்றும் மதிய உணவு இடைவேளைகளில் அவை உணவுடன் கலந்து கலந்து பரிமாறப்படும். இதில் வேடிக்கையான ஒன்று பூனை சம்பந்தப்பட்டது. ஒரு நாள் பிரேத அறையில் ஒரு பூனையின் சடலம் எரிப்பதற்காக காத்திருந்தது. அந்தப் பகுதிக்கு பொறுப்பான மேவிஸ் , அதை எடுத்து வழக்கம் போல் செங்கல் மேடையில் போட்டு எரிக்க முற்பட்ட போது அந்த பூனையின் குதவாசலில் உயிரோடு இருந்த போது உடல் வெப்பத்தை கணிப்பதற்காக செருகப்பட்ட தேமாமீட்டர் அங்கிருந்தது. இதை பார்த்தும் இவ்வளவு பொறுப்புணர்வு அற்று இந்தப் பூனையை கடைசியாக வைத்தியம் பார்த்த வைத்தியர் யார் என துருவி துப்பறிந்து பார்த்தபோது வைத்தியர் ஷாலற் என அறிந்ததும் அதை தேனீர் அறையில் சோகத்தோடு இருந்த ஷாலற்றிடம் சொன்ன போது அவள் முகத்தை வேறு பக்கம் திருப்பி தோளை அலட்சியமாக அசைத்துவிட்டு ‘ மேவிஸ் நேற்று இரவு என்னை படுக்கை அறையில் நிர்வாணமாக பார்த்த பின் கூட எனது காதலன் என்னை விட்டு விலகி தனது புதுக்காதலியுடன் போய்விட்டான் என சோகத்தில் இருக்கிறேன். இந்த நேரத்தில் இறந்து போன பூனையின் குதவாசலில் எதை வைத்தேன் என எனக்கு சிந்திக்க நேரமில்லை’ என்றாள்.

அவளது அலட்சியத்தால் ஆத்திரமடைந்த மேவிஸ் ‘அவனிடமும் எதையாவது இப்படித்தான் மறந்திருப்பாய். அவன் அதை தாங்க முடியாது விலகி சென்றுவிட்டான்’ என சொல்லியபடி சென்றார்.

நல்லவேளை ஷாலட் இப்பொழுது இந்த வைத்தியசாலையில் வேலை செய்யவில்லை.

இதைப் போல மேலும் ஒரு ஆண் வைத்தியர் அடிக்கடி நினைவு கூறப்படுவார். அவரது செயலில் முக்கியமானது ஒரு நாள் ஒபரேசன் செய்யும்போது தற்செயலாகத் தட்டுப்பட்டு கீழே விழுந்த ஒபரேசனுக்கான உபகரணத்தை மீண்டும் எடுத்து பாவித்தார். இதனால் அந்த நாயில் அவர் செய்த ஒபரேசன் புரையோடி புண் வந்தது. ஒபரேசன் செய்த போது கூட இருந்து உதவிய நேர்ஸ் புரையேறிய காரணத்தை வெளியே சொல்லியதால் அந்த மிருக வைத்தியரை மிருக வைத்தியசபை விசாரணை செய்து தற்காலிகமாக அவரது வைத்திய லைசன்ஸ் நிறுத்தப்பட்டது. இக்காலத்தில்

கணவன் - மனைவி பிளவால் விவாகரத்து நெருக்கடியில் அவர் மனமுடைந்திருந்தார்.

சுந்தரம்பிள்ளையின் காலத்தில் சில மாதங்கள் மட்டுமே வேலை செய்த அண்டனியின் கதை புது மாதிரியானது. அவுஸ்திரேலியாவில் தொழிற்சாலையில் வேலை செய்யும் பாட்டாளி ஆண்களினது வாய்களில் தூசண வார்த்தைகள் சாதாரண வார்த்தைகளுடன் அதிக அளவில் கலந்துவரும். வெத்திலை பாக்கு சுண்ணாம்பு போல் கலந்து சிவப்பு துப்பல் போல் வெளிவரும். சாதாரண வார்த்தையும் தூசணவார்த்தையும் தங்க ஆபரணத்தில் செப்பு சேர்க்கப்பட்டது போன்றில்லாமல் இரண்டும் சம அளவில் இருக்கும். இதைச் சிலகாலம் ஒரு பெயின்ட் பக்டரியில் வேலை செய்த போது சுந்தரம்பிள்ளை அனுபவித்திருந்தான். இந்த வைத்தியசாலையில் முக்கியமாக வைத்தியர்களினது வாயில் அப்படி வருவது குறைவு. புதிதாகச் சேர்ந்த அண்டனி அதில் வித்தியாசமாக இருந்தான். நீலக்கண்களும் பிளட்டின் கலரான தலைமயிரும் கொண்டு ஸ்கண்டிநேவியர்கள் போன்ற தோற்றமுள்ள அண்டனி மெல்பனில் வசதி படைத்தவர்கள் உள்ள கிழக்குப் பக்கத்தில் பிறந்து வளர்ந்தவன். எப்படி, இப்படியான ஆங்கிலம் வந்தது என காலோசிடம் கேட்டபோது பெற்றோர்கள் இருவரும் இராஜதந்திரிகளாக ஐரோப்பாவில் வாழ்ந்த போது அண்டனி மெல்பனில் பாட்டா, பாட்டியுடன் தங்கிப் படித்தான். அப்போது நண்பர்களின் சேர்க்கையால் இப்படிப் பேச்சு வந்தது என்றான் காலோஸ்.

அண்டனிக்கு தூசணமான வார்த்தைகள் ஆத்திரத்தில் மட்டும் வருவதில்லை. சந்தோசம், துக்கம், சோர்வு என எல்லா மன நிலைகளிலும் வரும். வஞ்சகமில்லாமல் அன்னியோன்னியமாக தூசணவார்த்தைகளினால் மனம் திறந்து உரையாடும் போது கேட்பதற்கும் நன்றாகத்தான் இருக்கும். மேலும் அந்த துசண வார்த்தைகளை கரடு முரடாக இல்லாமல், சீவி செதுக்கி கூராக்கி சிற்பி போல் வித்தியாசமாக உச்சரிப்பான். கேட்பதற்கு இனிமையாக இருக்கும். அப்படியான வார்த்தைகள் ஒரு நாள் அண்டனியின் வேலைக்கு உலை வைத்தது. ஒரு நாயைக் கொண்டு வந்த முதிய பெண் ஒருவரிடம் மருந்து கொடுக்கும் முறையை பல முறை கூறியபோதும் அவருக்குப் புரியவில்லை. தூசணவார்த்தையுடன் செகிடு போல் இருக்கிறது என மெதுவாக பக்கத்தில் நின்ற நேர்சுக்கு கூறினாலும் அந்த வார்த்தையைக் கேட்ட பெண் அதிர்ச்சியடைந்து நிர்வாகத்தில் முறைப்பாடு செய்ததால் அண்டனியின் வேலை

போனது. அண்டனியின் வார்த்தைப் பிரயோகங்கள் மாறும் வரையும், நிரந்தரமாக வேலையில் இருப்பது கடினம் என்பது எல்லோருக்கும் தெரியும் என்பதால் சுந்தரம்பிள்ளை, காலோஸ் போன்றவர்களுக்கு அவன் மேல் அனுதாப உணர்வு இருந்தது. பிற்காலத்தில் அவுஸ்திரேலிய ஆதிவாசிகள் அதிகம் வாழும் குடியிருப்புகள் உள்ள வட அவுஸ்திரேலிய பகுதியில் மிருக வைத்தியராக வேலை கிடைத்துப் போன போது அண்டனி இனி பிழைத்துக் கொள்வான் என ஆறுதல் அடைந்தார்கள். ஆதிவாசிகள் தூசண வார்தைகளையிட்டு கவலைப்பட்டாலும் வைத்தியர்கள் அங்கு செல்வது குறைவனதால் எப்படியும் வேலையைத் தக்க வைத்துக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கைதான் அதற்கு காரணம்.

வைத்தியசாலைக்கு உள்ளே சென்றதும் சுந்தரம்பிள்ளை முதலில் கண்ட காட்சி கொலிங்வூட். குறுக்காக அடித்துவிட்ட சாம்பல் நிறப் பந்து மாதிரி கொரிடோரில் ஓடியது.

‘என்ன கொலிங்வூட் குறுக்கால போகிறாய்?’

‘ட்ராமா குயினை பார்க்க வந்தாயா? இல்லை உனது பிளட்டோனிக் காதலி போலினை கண்ணில் தொட்டு பொட்டு வைக்க வந்தாயா?’

‘உனக்கு நல்ல விடயங்களைப் பேசத் தெரியாது’

ஒரு விதத்தில் கொலிங்வூட் சொன்னதில் உண்மையிருந்தது. இந்த இரண்டு பெண்களும் ஏதோ விதத்தில் சுந்தரம்பிள்ளையின் மனதில் பாதிப்பை ஏற்படுத்தி இருக்கிறார்கள். இந்த இருவரும் இன்று ஒன்றாக வேலை செய்கிறார்கள் என்பது சுந்தரம்பிள்ளைக்குத் தெரிந்திருந்தது.

‘நான் சொன்னதில் பொய்யில்லைதானே? உண்மையைச் சொல்லு’ என மீண்டும் கொலிங்வூட்.

‘உனக்குப் பதில் தரவேண்டியது இல்லை’ என நகர முயன்ற போது இரண்டு பெண்களும் எதிரில் ஒன்றாக வந்தார்கள். இருவரில் யார் முகத்தைப் பார்ப்பது என்பது சுந்தரம்பிள்ளைக்குக் கடினமாக இருந்தது.

‘என்னைப் பார்க்காமல் இருக்க முடியாது சிவாவுக்கு’ எனக் கூறி கழுத்தில் ஷரன் கையை வைத்ததும் போலின் விலகி நின்று கண்ணைச் சிமிட்டினாள்.

‘பார்க்காவிட்டாலும் நினைத்துக் கொண்டு இருக்கிறேன்’ நகைச்சுவையாக சொன்னபோது அந்த கொரிடோரில் ஒருவர் பூனையுடன் வந்தார்.விலத்தி வழி விட்ட போது இரண்டு பெண்களும் தங்கள் பங்குக்கு முதுகில் தட்டி விட்டு வேலைக்கு போய்விட்டார்கள்.

இரண்டு பெண்களினதும் கேளிக்கையான சீண்டலால் பாதிக்கப்பட்டாலும் தன்னை சுதாரித்துக்கொண்டு நேரடியாக நாய்கள் பகுதிக்கு சென்றான் சுந்தரம்பிள்ளை.

நேற்று சுந்தரம்பிள்ளை செய்த ஒபரேசனில் ஒரு ஜெர்மன் செப்பேட் நாயின் மண்ணீரல் அகற்றப்பட்டது. அதில் ஏராளமான இரத்தம் செலவாகி இருந்தது. இதனால் வேறு நாயின் இரத்தம் ஒபரேசன் செய்த நாய்க்கு ஏற்ற வேண்டி இருந்தது.

பல தப்பியோடிய நாய்கள் இந்த வைத்தியசாலைக்கு மெல்பன் நகரத்தின் நாலாபக்கங்களிலும் இருந்து கொண்டு வரப்பட்டு அவற்றில் புதிய சொந்தக்காரர்களை சுவீகரிக்க முடியாத நாய்கள் கருணைக்கொலை செய்யப்படுவதற்கு முன்பாக அவற்றில் இருந்து இரத்தம் எடுத்து சேமித்து வைக்கப்படும். இந்த நாய்களில் மனிதர்கள் போல் பல வகையான குரூப்புகள் இருந்தாலும் முதல் முறையாக இரத்தத்தை ஏற்றுக்கொள்வதால் எந்த எதிர் விளைவுகளும் ஏற்படாது.

ஒபரேசன் செய்யப்பட்ட ஜெர்மன் செப்பேட் நாயைப் பார்க்கச் சென்ற போது அந்த நாய் ஆச்சரியப்படத்தக்க வகையில் எழுந்து நின்று உணவு உண்டு கொண்டு நின்றது. அந்த நாய்க்கு உணவு கொடுத்துக் கொண்டு ஜோன் நின்றான். குனிந்து உணவு கொடுத்தவனது கால்கள் வழக்கத்திலும் மாறாக அதிகம் பிரிந்து நிலத்தில் பாவியபடி இருந்தது. இடுப்புவலி உள்ளவர்கள் கால்களை பிரித்து தங்களை பாலன்ஸ் செய்வது போன்ற தோற்றத்தைக் கொடுத்தது.

சுந்தரம்பிள்ளை வந்த சந்தடியைக் கேட்டு திரும்பிய ஜோன் ‘என்ன வீடுமுறை நாளில் வீட்டில் இருக்க முடியவில்லையா?’

‘அதை விடு. இரவு மிஷேலால் அதிக தொந்தரவா? ஏன் இப்படி காலை விரித்துக்கொண்டு நிற்கிறாய்?

ஜோனிடம் சிரிப்பு மெதுவாக உதடு பிரிந்து பதிலாக வந்தது.

அந்தச் சிரிப்பில் வழமையான ஜோனைத் தெரியவில்லை. வழமையாகச் சிரிக்கும் போது பல்லுடன் அவனது சிவந்த முரசுகள் தெரியும். அத்துடன் சிறிது சத்தமும் சேர்ந்தே வரும்.

'உங்களுக்குத் தெரியாதா?'

'என்ன தெரியாது?

'எனக்கு எம்.எஸ்'

'அது என்ன எம்.எஸ்?'

'மல்ரிப்பிள் கிளிரோசிஸ்'

அதைக் கேட்டதும் சுந்தரம்பிள்ளையின் சப்த நாடிகளும் அடங்கிவிட்டன. இந்தக் கொடிய வியாதி முப்பது வயதான ஜோனுக்கு எப்படி வந்தது? முட்டாள்தனமாக அவனுடன் மிசேலை இழுத்து நகைச்சுவையாக பேசியது எவ்வளவு அநாகரிகமானது? ஆறுதல் வார்த்தைகளோ அனுதாப வார்த்தைகளோ அவனுக்குப் பிரயோசனம் தராது. எனவே அவற்றைச் சொல்லி அவனது உணர்வுகளைப் புண்படுத்த விரும்பவில்லை. ஜோன் யதார்த்தவாதி. தனது எஞ்சிய காலத்தில் நன்றாக இருக்கும் காலத்தை வேலையில் கழிப்பதற்காக வந்து வேலை செய்கிறான்.

'எப்ப நடந்தது?'

'நீங்கள் வருட விடுமுறையில் நின்ற போது'

'எனக்கு ஒருவரும் சொல்லவில்லை'.

'எல்லோரும் அதிர்ச்சியால் பாதிக்கப்பட்டதால் பேச முடியாமல் இருந்திருக்கும்'

அதிர்ச்சி என்பது ஒரு புறம். மற்றது தனிப்பட்ட விடயம் என நினைத்து இருக்கலாம். ஜோனுக்கு திருமணம் நடந்து சில வருடங்கள்தான் ஆகியுள்ளது. இளமையின் விளிம்பில் இன்பங்களை அனுபவிக்க நினைக்கும் வயதில் இப்படியான நிலை இவனுக்கு ஏற்பட்டிருக்கக்கூடாது. இங்கே இவனுக்கு ஏற்பட்ட வியாதிக்கு காரணமாக எதை நம்புவது? இவனது விதி என இலகுவாகச் சொல்வதா? சாதாரண மனிதரின் மனதில் தோன்றும் பதில் இலகுவாக விடையைத் தேடும். ஆனால் வைத்தியம் அறிந்த சுந்தரம்பிள்ளையால் அப்படி இலகுவான சமாதானம் தேடமுடியவில்லை.

மல்ரிப்பிள் கிளிரோஸ் பற்றிய மருத்துவ விபரம் மனதில் ஓடியது. நண்பனது நிலையையிட்டு அனுதாபத்துடன் இந்த கொலைக்கார நோய் எப்படி ஜோனுக்கு வந்தது என்பது புதிராக இருந்தது.

மூளை நரம்புகள் பாதிக்கப்படுவதால் தொடர்ச்சியாக பல அவயவங்களின் தொழில்கள் பாதிக்கப்படும். அதிலும் இளைய வயதில் உள்ளவர்களுக்கே இந்த நோய்வரும். பலன்ஸ் பண்ணி நிற்பது, வேலைகளைச் செய்வது, அதை விட பேச்சு என்பன தொடர்ச்சியாக பாதிப்படையும். தற்போதைய மருத்துவத்தால் குணப்படுத்த முடியாது. சில வேளைகளில் சில மருந்துகள் நோயின் தாக்கத்தின் வேகத்தை குறைக்கலாம். இதைவிட இந்த நோயால் ஏற்படும் மன அழுத்தம் மிகவும் பாதிப்பானது.இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள் தானாக செயல்படும் சக்தியை இழந்து மற்றவர்களின் பரமரிப்பில் தங்கி வாழ வேண்டிய நிலைக்கு தள்ளப்படும் போது என்ன நடக்கப் போகிறது என்பது அடுத்த கேள்வியாக எழுகிறது.

மிஷேல் எப்படி ஜோனை பராமரிக்கப்போகிறாள்? சில வருடங்கள் மட்டுமே பிணைத்த அவர்களது கல்யாண பந்தம் எவ்வளவு பலமானது? இவனை ஒதுக்கித் தள்ளிவிட்டு வேறு துணையைத் தேடிப் போவாளா? பலகாலமாக கரடு முரடான மோட்டார் சைக்கிள் குழுவில் அங்கத்துவமாக இருந்தவள் என்பதால் எப்படி இருப்பளோ. இப்பொழுதும் ஜோனிடம் சிலவேளையில் வேடிக்கையாக முரட்டுத் தன்மையாக நடந்திருப்பதை சுந்தரம்பிள்ளை பார்த்திருக்கிறான்.

இந்தச் சம்பவம் நடந்த சில மாதங்களில் வைத்தியசாலையில் ஜோனுக்குப் பிரியாவிடை வைத்திருந்தார்கள். வந்தவர்கள் எல்லோரும் சோகத்துடன் இருந்தார்கள். ஆனால் ஜோன் மட்டும் சிவந்த முரசு தெரிய சிரித்துக் கொண்டு பழைய ஜோனாக சக்கர நாற்காலியில் வலம் வந்தான். நோய் அவனை அசுர வேகத்தில் சுனாமி போல் தாக்கி அவனைச் சக்கர நாற்காலிக்குத் தள்ளிவிட்டது. அதைப் புரிந்துகொண்டு ஏற்றுக் கொள்ளும் நிலைக்கு ஜோன் வந்துவிட்டான்.

இப்படி மாறாத உயிர்க்கொல்லி நோய் ஒன்று தாக்கும்போது அதிர்ச்சி, ஆத்திரம், மனஅழுத்தம், பின்பு புரிந்துணர்வாக வாழ்தல் என்ற படிமுறைகளை மனிதமனம் கடந்து செல்கிறது என்பார்கள்.

அதில் கடைசியாக புரிந்துணர்வு நிலைக்கு துரிதமாக ஜோன் வந்தது சுந்தரம்பிள்ளையின் மனத்திற்கு ஆறுதல் அளித்தது.

□ □ □

மனக்கவலை தரும் விடயங்கள் தனித்தனியாக வருவதில்லை. அவை இரட்டையாக அல்லது மூன்றாக வருவதைச் சுந்தரம்பிள்ளை தனது அனுபவத்தில் கண்டிருக்கிறார்ன். அந்தக் கவலையான விடயமும் விடுமுறையில் இருக்கும் போது நடந்தது. கொலிங்வூட்டுக்கு சிறுநீரகத்தில் நோய் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டது. இப்பொழுது தீவிர வைத்திய பிரிவில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக சாமிடம் இருந்து தொலைபேசி வந்ததும் உடனே வைத்தியசாலைக்கு வந்தான்.

குழாயின் வழியே சேலையின் ஏற்றப்பட்டு அதோடு இணைக்கப்பட்ட மெசின் பீப் பீப் செய்து கொண்டிருந்தது. 'என்ன கொலிங்வூட் நன்றாகத்தானே இருந்தாய். நான் லீவு போடுகிறேன் என்றதும் உனக்கு, ஜோனுக்கு எல்லாம் பெரிய நோயாக வந்து விட்டது. உங்களுக்கெல்லாம் காய்ச்சல், தடிமல் என சிறு நோய்கள் வராதா? என்ன நடந்தது?'

'எல்லாம் காலோசால் வந்தது. அந்த மனிதனைக் கொரிடோரில் கடந்து போகும் போது எனக்கு வாந்தி வந்தது. அந்த மனிதர் அதைப் பார்த்து விட்டு அப்படியே என்னை பிடித்து வைத்து இரத்தத்தை எடுத்து பரிசோதனைக்கு அனுப்பியபின், எல்லோரும் எனக்குச் சிறுநீரகம் போய்விட்டது எனச் சொல்லி, இப்படி ஒரு கூட்டில் அடைத்து விட்டு இந்த மிசினைக் கொழுவி விட்டார்கள். அதை விட எல்லோரும் வந்து நான் மரணமடைய சிலகாலம் இருப்பதாக என்மேல் பரிதாபமாக நலம் விசாரிக்கிறார்கள். என்னைச் சமீபமாக இதுவரை நெருங்காதவர்கள் எல்லாம் ஆரத்தழுவி தழுவி முத்தம் கொடுக்கிறார்கள். அவர்கள் அணிந்திருக்கும் வாசனைத்திரவியங்கள் எனக்குத் தும்மலைத் தருகின்றன. பலரது லிப்ஸ்ரிக் என்னில் ஒட்டிக்கொண்டிருக்கிறது. அதையெல்லாம் நான் நாக்கால் துடைத்துச் சுத்தப் படுத்த வேண்டியது ஒரு சுமையாக இருக்கிறது. முன்போல் வளைந்து நெளிந்து சுத்தப்படுத்த உடம்பு இப்பொழுது இடம் கொடுக்கவில்லை. இந்தமாதிரியான கவனிப்புகள் நோயை விட மோசமாக இருக்கிறதால் என்னால் தாங்க முடியவில்லை. எனக்குப் பிடித்காதது மற்றவர்கள் என்னில் காட்டும் பரிதாப உணர்வு'

‘உன்பாடு அதிஷ்டம்தான். உன் மேல் பெண்களின் முத்தமழை பொழிகிறது என்று சொல்லு’

‘நக்கலா? என்னுடைய நிலைமையை நினைத்து நான் கவலைப் படுகிறேன்’.

‘நக்கல் இல்லை. உண்மையில் உனக்கு இப்பொழுது பதினைந்து வயது. இது மனிதர்களில் எண்பத்தைந்து வயதுக்கு சமமானது. இந்த வயதான முதியவரை எத்தனை பெண்கள் முத்தமிடுவார்கள். விதையில்லாமல் போனாலும் பெண்களிடம் செல்வாக்கு உனக்கிருக்கிறது’.

‘உனது பிளட்டோனிக் காதலி போலின்தான் அடிக்கடி உதட்டால் முத்தமிட்டது’.

‘பார்த்தாயா எனக்கு இல்லாத அதிஷ்டம் உனக்கு கிடைத்திருக்கிறது. அதையிட்டு மகிழ்ச்சியடைவதையிட்டு ஏன் கவலைப்படுகிறாய்?’

‘எனது இரத்தப் பரிசோதனை அறிக்கையை பார்த்தாயா? என்ன நினைக்கிறாய்?

‘உனக்கு மட்டுமல்ல எல்லா பூனைகளுக்கும் இந்தச் சிறுநீரக பாதிப்பு வருவதற்கு காரணம் அதிக புரதம் உள்ள சாப்பாட்டைத் தின்பதால் அதிக அளவு யூரியா உருவாக்கப்பட்டு சிறுநீரகத்திற்கு அதிக வேலை வாழ்நாள் முழுவதும் கொடுக்கப்படுகிறது. தற்போதைய நிலையில் உடன் மரணம் இல்லை என்பதால் பயப்படவேண்டியது இல்லை. இது குளிர்காலமானதால் நீ இன்னும் உயிர் வாழ்வாய்’

‘எத்தனை மாதம் கணக்குப் போடுகிறாய்?’

‘என்ன மனிதர்கள் மாதிரி மரணத்தை வெல்ல முயற்சிக்கிறாயா?

மரணத்துக்கான காலத்தை எதிர்பார்ப்பதும் அதைப் புரிந்து கொள்ள முயல்வதும் மரணத்திற்காக பயப்படுவதும் மனித இயல்பு. ஆனால் மிருகங்கள், மனிதனில் இருந்து இந்த மூன்றால் வேறுபடுகின்றன. மரணம் என்பது எதிர்பாராதது. ஆனால், எங்கோ காத்திருக்கும் என்பது மனிதர்களுக்கு ஆதிகாலத்திலே புரிந்திருக்கிறது. எப்பொழுது சம்பவிக்கும் என்று புரியாத போதும் வாழ்வுக்கு மரணமே இறுதிப்புள்ளி என்பதால் அதைத் தள்ளி வைப்பதற்காக ஆதிகாலத்தில் இருந்தே மனிதன் மருந்து வகைகளை தான் வாழும் சூழலில் தேடிக் கொண்டு இருக்கிறான்.

இதன் தொடர்ச்சியே இக்காலத்தில் முன்னேறிய வைத்தியம். ஒரு நூறு வருடத்தில் மனிதனின் வாழ்வை இருபது வருடத்துக்கு மேல் தள்ளி வைத்துள்ளது.

இந்த மரணத்துக்கான பயம் மனித நாகரீகத்தை மேம்படுத்த முக்கிய காரணமாக இருந்தது. மரணம் அடைவதற்கு முன்பு வசதியாகவும் வாழ்க்கையின் இன்ப உணர்வுகளையெல்லாம் அடைந்து விடவேண்டும் என்ற வேகம் செவிப்புலனுக்கும் கண் பார்வைக்காகவும் கலைகளையும் வாழ்வின் வசதிக்காக வீடுகள் பொதுக் கட்டிடங்கள் என எல்லாவற்றையும் கட்டினான். நாவின் ருசிக்காக உணவுகள் உருவாக்கியதும் ஆதிமனிதன் ஒரு இலட்சம் வருடங்களின் முன்பு தொடங்கிய முயற்சிகளின் நீட்சியே, தற்போது நாம் பார்க்கும் நாகரீகம்.

மனிதர்கள் ஆதியில் இருந்து தமது மரணத்தைப் புரிந்து கொள்ளுவதனால் மரணம் ஒரு சடங்காக மாறி அது கலாச்சாரத்தின் ஒரு கூறாக மனித நாகரீகத்தின் தொடர் கதையாகியுள்ளது. ஆதிகால மனிதனில் இருந்து இக்கால மனிதன் வரை மரணத்தைப் புறக்கணிக்கவோ, வெல்லவோ முடியவில்லை. சமயங்கள் மனிதனின் இருப்பையும் அவனது அகத்தையும் ஒறுத்து மரணத்தை புறக்கணிக்க முனைந்தன. அதற்கு மாறாக மரணத்தை வெல்ல மக்கள் சமயத்தை துணைக்கு அழைக்கிறர்கள். கௌதம புத்தர் தன்னிடம் மகனை இழந்து வந்த பெண்ணிடம் மரணம் நடக்காத வீடு ஒன்றில் இருந்து கடுகைக் கொண்டு வரும்படி கூறியதன் மூலம் இறப்பு நிதர்சனமானது என்று சொல்ல முயற்சிக்கிறார். ஆனால் மரணத்தைத் தடுக்க அந்த சாக்கிய புத்தரிடம் மன்றாடும் மனிதர்கள் ஏராளம். கோயில்களுக்கு செல்பவர்களும் மரணத்தை வெல்ல சாமியார்களைத் தேடுபவர்களும்தான் இரண்டாயிரம் வருடங்கள் கடந்தும் அதிகமாகிறார்கள்.

‘எவ்வளவு காலம் உயிர் வாழ்வேன்’ மீண்டும்.

‘இரண்டில் இருந்து ஆறுமாதம். அது உனது அதிஷ்டத்தைப் பொறுத்தது’

‘அவ்வளவுதானா?’

‘என்ன அவ்வளவுதானே’

‘என்ன அப்படி கேட்கிறாய்? மனிதர்களின் வாழ்வோடு ஒப்பிடும் போது உனது ஆறுமாத வாழ்வு மூன்று வருடத்திற்குச் சமமானது தெரியுமா?’

‘உனது கணக்குத் திறமையை என்னிடம் காட்டாதே. நான் உயிர் வாழும் காலத்தைப் பற்றி பேசும் போது நீ உனது பேசும் திறமையைக் காட்டுகிறாய்’.

‘கொலிங்வூட் நான் வழக்கமாக நோயாளிகளோடு பேசுவதில்லை. அவற்றின் உரிமையாளர்களோடு பேசும் போது அவர்களுக்கு ஆறுதலாக பேசுவது இப்படித்தான். எந்த உயிருக்கும் முதுமை கடினமானது. உடலில் பலம் குறைந்து போவதோடு நோய்களையும் சுமந்து கொண்டு மனிதர்கள் நலிவடையும் போது சமூகத்தால், உறவினர்களால் சுமையாக கருதப்பட்டு புறக்கணிக்கப்படுகிறார்கள். இப்படியாக உடல் வலியோடு மனதில் வலியையும் சுமந்து கொண்டுதான் ஒவ்வொரு முதியவர்களும் நடமாடுகிறார்கள். அவர்கள் உடல் கூனடைவது இப்படியான மனச்சுமை காரணமாக இருக்கலாம் என நான் சந்தேகிப்பது உண்டு. அவர்களோடு ஒப்பிடும்போது உனக்கு மிகவும் சிறப்பான கவனிப்புடன் வைத்தியவசதியும் கிடைக்கிறது. அழகிய பெண்களின் முத்தங்கள், அரவணைப்புகள் எல்லாம் கிடைக்கிறது. அதற்கு மேல் நீ உணவு அருந்தாமல் மூன்று நாட்கள் இருக்கும்படி நேர்ந்தால் நானே உன்னை கருணைக்கொலை செய்து விடுகிறேன்’.

‘கொஞ்சம் ஆறுதலாக இருக்கு. அப்படியானால் நீ மட்டுமே கருணைக்கொலை செய்ய வேண்டும் என எழுதிவிடு. நான் மற்றவர்கள் கையால் இறக்க விரும்பவில்லை.

‘அது ஏன் என்கையால் இறப்பதில் ஒரு சந்தோசம்?

‘என்னைப்புரிந்து கொண்ட ஒரே வைத்தியர் நீதானே?

‘நீ பயந்துவிட்டாய். உனக்கு நம்பிக்கை குறைந்து விட்டது. பழைய நிலைக்கு நீ மாறவேண்டும். இல்லாவிடில் நீ மேலும் நோயாளியாகி விடுவாய்’.

‘நான் கேட்ட விடயத்துக்கு பதில் சொல்லு’

‘அப்படியே செய்கிறேன். நீ எனது நண்பனாகி விட்டாய். உனக்காக இதைச் செய்ய மாட்டேனா? கொலிங்வூட்’

‘அது சரி. மேலும் ஒரு விடயம் சொல்ல வேண்டும்’.

‘அந்த சிவப்புத் தலைக்காரியும் உனது எதிரி ஸ்ரிவனும் காதலிக்கிறார்கள்’

‘அது எப்படி உனக்கு தெரியும்?’

‘அந்தப் பெண் என்னை இரவு பரிசோதித்துக்கொண்டு இருக்கும் போது ஸ்ரிவனின் கரங்கள் அவளது அந்தரங்கங்களை பரிசோதித்தது. அவர்களுக்கு நான் பார்க்கிறேன் என்ற விவஸ்தை இல்லாமல் சரசமாடினார்கள். வைத்தியசாலையை என்ன என்று நினைத்தார்கள்?

‘கொலிங்வூட் உணர்ச்சி வசப்படாதே. இருவரும் திருமணமாகதவர்கள். கொஞ்சம் சந்தோசமாக இருக்க நினைத்தால் உனக்கு என்ன வந்தது?. நல்ல சினிமாவைப் பார்க்கிறாய் என நினைத்து விடு’.

‘அவர்கள் வெளியாலே எந்த மாதிரி நடந்தாலும் எனக்குப் பிரச்சினையில்லை.. வைத்தியசாலையை சரசமாடுவதற்கு பாவிக்க கூடாது. வேலை பார்க்கும் இடம் புனிதமானது. காலோசைப்பற்றி நான் ஏதாவது சொல்லியிருக்கிறனா? அந்த மனுசன் ஸ்திரிலோலனாக இருந்தாலும் வைத்தியசாலைக்கு வெளியே தனது சரச சல்லாப விளையாட்டுகளை வைத்திருப்பது எனக்குப் பிடித்திருக்கிறது.

‘கொலிங்வூட் உன்னிடம் இந்த மாதிரியான கருத்துகள் இருப்பது எனக்குத் தெரியாது. இது எப்படி உன்னுடைய மனதில் பதிந்தது?

‘இதென்ன பெரிய விடயம்? நான் வளர்ந்த சூழ்நிலை அப்படி. சிறு குட்டியாக இந்த வைத்தியசாலையில் வளரும்போது இவைதான் சரியான உணர்வுகள் என என்னுடைய அறிவில் பதிந்தது. அந்தப் பதிவுகள் இந்தப் பதினைந்து வருட காலத்தில் தொடர்ச்சியாக வந்து கொண்டிருந்தது. நீங்கள் அதைத்தான் மனசாட்சி என்கிறீர்கள். மனசாட்சி என்பதும் உங்களது புறச்சூழலில் இருந்து நீங்கள் புரிந்து கொண்டதை உங்கள் அடுத்த பரம்பரைக்கு கடத்துகிறீர்கள். புதிய சூழ்நிலைக்கு மாறியதும உங்கள் மனசாட்சி மாறுகிறதே. நானும் இந்த வைத்தியசாவையில் புரிந்த விடயங்களை எனது அளவுகோலாகப் பாவித்து இங்கே நடக்கும் விடயங்களைப் பார்க்கிறேன். இங்கே வளர்ந்தபோது இந்த வைத்தியசாலை சுமுகமாக நடக்கவேண்டும் என்பது எனது நோக்கமாகிறது.

‘உன்னோடு பேசுவது அறிஞரோடு தத்துவ விசாரத்தில் ஈடுபடுவது போல் இருக்கிறது. அதற்கு விசேட நேரம் ஒதுக்க வேண்டும் ஆனால் எனக்கு அதற்கு நேரமில்லை. இங்கு வேலை செய்வதற்காக மட்டுமே வேதனம் வாங்குகிறேன்’ எனச் சொல்லிவிட்டு அந்த இடத்தை விட்டுச் சுந்தரம்பிள்ளை விலகினான்.

## 26

**ஜோ**னின் பிரியாவிடை வைத்தியசாலையில் நடந்த சில மாதங்களின் பின் அவனது வீட்டுக்கு ஒரு காலை நேரத்தில் அவனது உடல் நலத்தை விசாரிப்போம் என நினைத்து சுந்தரம்பிள்ளை சாருலதாவுடன் சென்றான்.

ஈரலிப்பாக இருந்த காலைப்பொழுது பனிப்புகாரின் போர்வையில் இருந்து வெளியேவரத் தாயின் வயிற்றிலிருந்து வரத்துடிக்கும் குதிரைக் குட்டிபோல் திமிறியது. கண்ணுக்கெட்டியவரை டன்டினோங் மலையடிவாரத்தில் உள்ள அந்தப் புறநகரின் புறச்சூழலில் எதுவித மாற்றமும் தெரியவில்லை. மலைச்சாரலில் உயர்ந்து வளர்ந்த யூகலிப்ரஸ் மரங்கள் பச்சைப் பசேலன கண்களையும், அந்த மரங்களில் இருந்து வந்த மணம் காற்றில் கலந்து கற்பூரவள்ளி வாசனையாக வந்து சுவாசப்பையை நிறைத்தது. வாகனத்தில் மலைக்குன்றுகளுக்கு இடையால் அமைக்கப்பட்ட வீதியால் காரில் சென்றபோது கண்ணுக்கு தெரியும் காட்சி இராட்சத ஓவியமாக விரிந்தது. அந்தப் புறநகரின் மூன்று பக்கத்தில் உள்ள மலைகளை, வெள்ளி நிறமுகில்கள் ஆரத்தழுவி நாளையென எதுவும் இல்லை என்பதுபோல் சரசமாடின. அடர்ந்து வளர்ந்திருந்த மரங்கள் அரசிளங்குமாரியின் தோழிகள் போல் இந்தக் காதல் விளையாட்டுக்குப் பாதுகாப்புப் போர்வையாக மறைத்தன. அவைகளது சரசத்தை ஆதவன் கூட கலைக்க விரும்பாது மெதுவாக தனது ஒளிக்கரங்களை மெல்பனின் கிழக்குப் பகுதியில் தவழவிட்டான். அந்த ஒளிக்கற்றைகள் பொற்கரங்களாக மரங்களின் இடைவெளியில் மெதுவாக நுழைந்து வெளிவந்தன. இயற்கையின் இந்த உல்லாச சல்லாபத்தால் பொழிந்த மழையில் அந்த மலை சார்ந்த காட்டுப் பிரதேசம் அடர்ந்து வளர்ந்து இருந்ததுடன் பல நீரோடைகள் கிளைபரப்பி அடிவாரத்தை நோக்கி ஓடி சலசலத்துக் கொண்டு ஓடையாக பாய்ந்து கொண்டிருந்தன.

இந்தப்பகுதி தேசிய வனப்பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டு சிறிய பகுதி மட்டும் மக்கள் குடியிருப்பிற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. மற்றப்பகுதிகளில் அமைந்துள்ள வழித்தடங்கள் மலையேறுபவர்கள், காடு வழிநடப்பவர்கள் தேவையைக் கருதி அமைக்கப்பட்டுள்ளது. இங்கு மெல்பனின் பலபகுதியில் இருந்து மக்கள் இந்தப் பிரதேசத்திற்கு வந்து இயற்கை எழிலை அனுபவிப்பார்கள்.

தான் வாழும் இடத்தை இயற்கை வளம் கொழிக்கும் இடமாக அழகுணர்வுடன் தெரிந்து எடுத்து வாழ நினைத்தவன் ஜோன். அப்படிப்பட்ட அவனது வாழ்வு மட்டும் நிலத்தில் இருந்து குறுகிய காலத்தில் பிடுங்கப்பட்டு அழிக்கப்படும் இளம்செடியாக இருப்பது எவ்வளவு கொடுமை என நினைத்தபடி அவனது வீட்டுக்கு சென்றனர் சுந்தரம்பிள்ளையும் சாருலதாவும்.

வீட்டெதிரே காரை நிறுத்திவிட்டு இறங்கியவர்கள் எதிரே மிஷேல் வாசலில் சிரித்தபடி அந்தக் குளிர்காலை நேரத்தில் கொக்கோ கோலா பருகியபடி நின்றிருந்தாள்.

பார்வைக்கு சிறிது பருத்து இருந்தது போல் தெரிந்தது. அவளது கன்னப்பகுதி உப்பியிருந்தது. தடிப்பான உதடுகளுக்கு உதட்டுச் சாயம் மெல்லிய இளம் சிவப்பு நிறத்தில் தீட்டியிருந்தாள். அவள் சிரிப்பில் சந்தோசத்தைக் காட்டுகிறாளா இல்லை உள்ளத்தில் உள்ள கவலைக்குத் திரை போடுகிறாளா என்பதும் புதிராக இருந்தது. சிலர் கவலையுடன் இருக்கும் போது உணவைக் கவனிக்காததால் மெலிந்து உருக்குலைந்து விடுவார்கள். அதே நேரத்தில் சிலர் அதுவும் பெண்கள் முக்கியமாக கவலையை மறப்பதற்காக உணவைத் தேடுவார்கள். சொக்கிலேட் போன்ற இனிப்பான உணவுகள் ஒருவித போதையைக் கொடுப்பதால் மேலும் மேலும் உண்பதற்கான விருப்பத்தை உருவாக்கும். இந்த வகையான தன்மை இளம் பெண்களை மேற்கு நாடுகளில் தாக்குகிறது. இப்படியாக எடை கூடி விட்டால் பின்பு அதைக் குறைக்க என சைகோலஜிஸ்ட், வைத்தியர்கள், உணவு தயாரிப்பவர்கள் என அவர்கள் நாடுவதால் இந்த எடைகுறைப்பு பெரிய வியாபாரமாகிவிட்டது.

மிஷேலை நலம் விசாரித்த போது தனது வேலையை விட்டு ஜோனுடன் முழு நேரமும் இருப்பதாகக் கூறினாள்.

ஜோன் மீது கொடிய நோய் தாக்கிய போதிலும் ஏதோ ஒருவிதத்தில் அதிஷ்டசாலியாக இருந்திருக்கிறான். மனைவி முழு நேரத் தாதியாக மாறி அவனைப் பராமரிப்பது எவ்வளவு சிறந்தவிடயம் என்பதை

வியந்தபடி வீட்டினுள்ளே சென்ற போது பழைய நினைவுகள் நினைவில் வந்து அலைமோதியது சுந்தரம்பிள்ளைக்கு. சில வருடங்கள் முன்பாக அவர்களது திருமணத்தின் முன்பு நடந்த விருந்தில் உடைகளை கழற்றும் நடனமும், அதற்கு விருந்தினராக சாமுடன் அழைக்கப்பட்ட விடயமும் ஞாபகத்துக்கு வந்தாலும் அதை அன்று சாருலதாவிடம் சொல்லாமல் மறைத்ததால் இன்றும் அதைக் கூறமுடியாமல் அந்த நினைவுகளின் உதைப்பை, மனதில் தனியாக அனுபவித்தான். சில நினைவுகள் நிறைமாதக் குழந்தை போல் கால்களை உதைத்துக்கொண்டு வெளிவர துடிக்கும்போது, அதை அடக்குவது கடினமாகிவிடும். எப்படியும் பிரசவம் மாதிரி ஏதோ ஒருகாலத்தில் வெளி வந்துவிடும். வேறு சில நினைவுகள் கிணற்றில் விழுந்த கல்லாக, காலங்களின் தொடர்ச்சியால், பாசியால் மூடப்பட்டு மறைந்து கிடந்துவிடும்.

ஹோலில் இருந்த தொலைக்காட்சியில் ஜோன் தனது அபிமான உதைபந்தாட்ட கழகமான எசண்டன் கழகத்துடன் ஜீலோங் அணி விளையாடும் உதைபந்தாட்டத்தின் பதிவு செய்த பழைய விளையாட்டை பார்த்து இரசித்துக் கொண்டிருந்தான்.

உள்ளே சென்றதும் சாருலதாவையும் சுந்தரம்பிள்ளையையும் ஜோன் அடையாளம் கண்டு சிரித்தான். அவனது முகச்சிரிப்பை பார்த்து விட்டு சுந்தரம்பிள்ளை அவனது கையை நோக்கிய போது அவனது கையில் வைத்திருந்த தொலைக்காட்சியின் ரிமோட் மெதுவாக நடுங்கியது. நாற்காலியில் இருந்து எழுந்திருக்காத போதும் அவனது முழு உடலின் உருக்குலைவு தெரிந்தது. முப்பது வயதில் இளமையின் பூரிப்பில் ஒளிராமல் எரிந்து உயிர்விடும் மெழுகுவர்த்தியாக தெரிந்தான். அவனைப் பார்க்க மனதுக்கு மிகவும் சங்கடமாக இருந்தது

‘என்னைப் பார்க்க வந்தது சந்தோசம், சிவா, சாருலதா. வைத்தியசாலையில் எல்லோரும் எப்படி இருக்கிறார்கள்?

‘நாங்கள் நன்றாக இருக்கிறோம். உன்பாடு எப்படி’

‘சில மருந்துகள் எடுக்கிறேன். பெரிதாக முன்னேற்றம் இல்லை’. என சிறு வசனங்களாக பொறுக்கி எடுத்துப் பேசினான்

ஜோனோடு பேசும் போது சமையல் அறையில் மிஷேலுடன் இருந்த இளைஞன் ஹோலுக்கு வந்ததும் அந்த இளைஞனை ஜோனின் நண்பன் என அறிமுகப்படுத்தினாள் மிஷேல்.

மிஷேல் மருந்துகள் சம்பந்தமாக சாருலதாவுடன் பேசினாள்.

சிறிது நேரத்தில் ஜோனின் நண்பனான அந்த இளைஞனும் மிஷேலும், ஜோனை அவனது அறைக்குக் கூட்டிக் கொண்டு சென்றார்கள்.

‘இது மிஷேலின் புதிய நண்பன் என நான் நினைக்கிறேன்’ என சாருலதா மெதுவாக சுந்தரம்பிள்ளையிடம் கூறியபடி அவர்கள் வீட்டில் இருந்து வெளிவந்தாள்

□ □ □

**கொ**லிங்வூட், சுந்தரம்பிள்ளையுடன் இருந்த காலத்தில் பொன்னி ஒழுங்காக வீட்டில் இருந்தது. பொன்னி, கொலின்வுட்டுடன் நட்புறவு கொண்டுவிட்டதால் இருவரும் ஒன்றாக விளையாடுவதும் இரவில் படுப்பதும் நாய்-பூனை உறவு எனத் தெரியாமல் இரண்டு நட்பான பிராணிகளாக தெரிந்தன. அந்த ஒரு கிழமையில் எப்படி அவைகளுக்கிடையே பலமான உறவு உருவாகியது என்பது அதிசயமாக இருந்தது.

மாமிசம் உண்ணும் விலங்குகள் தங்களது இடங்களை வகுத்துக்கொண்டு மற்றைய மிருகங்களை அந்த வெளியில் உட்புகுவதைத் தடுக்கும் இயற்கையான குணமுடையவை. மனிதர்கள் வளர்ப்பினால் இந்த குணத்தை நாய், பூனைகளில் இருந்து இல்லாமல் செய்ய முடியாத போதிலும், பயிற்சியாலும் ஒன்றாக சிறுவயதில் இருந்து வளர்ப்பதாலும் அவை நட்புடன் வளர்கின்றன. இதற்குச் சிலகாலம் செல்லும். ஆனால் இங்கு அந்த நட்புறவு மிக இலகுவாக ஏற்பட்டுவிட்டதற்கு கொலிங்வூட்டின் சாதுரியம் காரணமாக இருக்கும்.

அந்த நட்புறவு அதிக நாள் தொடரவில்லை. ஒரு கிழமையாகியதும் வைத்தியசாலையில் நிலவரம் சீராகி பூனை வாட் திறக்கப்பட்டது. இதனால் கொலிங்வூட்டை அங்கே மீண்டும் செல்ல வேண்டியதாகி விட்டது.

கொலிங்வூட் வைத்தியசாலைக்கு எடுத்து வந்த ஒரு மாதகாலத்தில் அந்தக் கவலையான விடயம் நடந்தது.

பாடசாலை முடிந்து வந்த சகன் ‘அப்பா பாடசாலையின் முன்பு சிறிய நாய் அடி பட்டதாகவும் அதை எமர்ஜன்சி வைத்தியசாலைக்கு கொண்டு சென்றார்கள் என்று எனது நண்பர்கள் கூறினார்கள்’ எனக் கவலையோடு சொன்னான்.

அவனது முகத்தின் கலக்கத்தையும் கவலையையும் பார்த்தபோது சுந்தரம்பிள்ளைக்கு சோகம் பற்றிக்கொண்டது.

உடனே வீட்டின் பின்வளவில் தேடியபோது பொன்னியைக் காணவில்லை. அடிபட்ட நாய் பொன்னியாக இருக்கலாம் என்ற சந்தேகத்தில் எல்லோரும் குடும்பமாக சமீபத்தில் உள்ள எமேஜென்சி வைத்தியசாலைக்குச் சென்று அங்குள்ள ரிசப்சனில் தங்கள் நாயைத் தேடி வந்ததாகவும் மேலும் மிருக வைத்தியர் என்றதும் உள்ளே அழைத்து சென்றார்கள். மயக்கநிலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் பொன்னி இருந்தது. தலையில் அடிபட்டதால் மூளையில் பலமான காயம். அத்துடன் வலிப்பு இருந்ததால் அதற்கு மயக்க மருந்து கொடுக்கப்பட்டிருக்கிறது.

பொன்னி உயிர் பிழைத்தாலும் நடமாடுவதற்கான சாத்தியக் கூறுகள் குறைவாக உள்ளது என பொன்னியைப் பார்த்த அங்குள்ள வைத்தியர் கூறியதால் கனத்த மனதுடன் கருணைக்கொலைக்கான கையெழுத்தை சுந்தரம்பிள்ளை ரிசப்சனில் இருந்த பெண் நீட்டிய கடுதாசியில் வைத்தான். மற்றவர்களிடம் கையெழுத்து வாங்கிக் கருணைக் கொலை செய்யும் வழக்கத்திற்கு மாறாக இன்று தனது கையெழுத்தை பொன்னியின் கருணைக்கொலைக்கான அனுமதிப்பத்திரத்தில் வைத்து மற்றவர்களுக்கு கொடுத்தான் சுந்தரம்பிள்ளை.

மயக்கத்தில் இருக்கும் பொன்னியின் நாளத்துக்குள் ஏற்கனவே சேலையின் திரவம் சென்று கொண்டிருந்தது. அந்த வைத்தியர், பீனோபாபிரோன் அல்லது பச்சைக்கனவு என செல்லப்பேருடன் அழைக்கப்படும் அந்த பச்சை மருந்தை அந்த சேலையின் குழாயின் உள்ளே செலுத்தியபோது பொன்னியின் சுவாசம் நின்று ஒரு சில கணத்தில் இதயத்துடிப்பு அடங்கியது. அதன் பின்னால் கண்கள் குத்திட்டு மூளையின் இறப்பை உறுதிப்படுத்தியது. மயக்கமாக இருக்கும் போது கருணைக் கொலை செய்வது சிறிது இலகுவானது.

மனிதன் நித்திரையிலும் மயக்கத்திலும் இருக்கும்போது தனது ஆத்மா உடலைவிட்டு வெளியே செல்வதான கருத்தாக்கம் கனவுகளால் உருவானது. நித்திரை கொள்ளும் போதும் மயக்கமாகும் போதும் தற்காலிகமாக உயிராவி வெளியேறிவிட்டது என்ற கருத்தாக்கத்தால் மயக்கமாக இருக்கும் மிருகங்களை கருணைக் கொலை செய்வது செல்லப்பிராணிகளின் உரிமையாளர்கட்கும், மிருக வைத்தியர்களுக்கும் இலகுவாக இருப்பது ஆச்சரியமில்லை.

இதே முறையைத்தான் அமெரிக்காவில் மனிதனைத் தண்டனை என்ற பேரில் கொலை செய்வதற்கும், ஆரம்பத்தில் மயக்கமருந்து செலுத்திய பின்பு உடல் தசைகளை ரிலாக்ஸ் பண்ணும் மருந்து கொடுக்கப்படுகிறது. அதன் பின்பு கடைசியாக சுவாச மற்றும் இதயத்துடிப்பிற்கான மூளையின் பகுதிகளை நிறுத்தும் மருந்தும் செலுத்தப்படுகிறது.

இறப்புக்கு முன்பாக அதை உணர்ந்து கொள்ளும் தன்மை மனிதனுக்கு மட்டுமே உள்ளது. மிருகங்களால், பறவைகளால் அதை உணர்ந்து கொள்ள முடியாது. காட்டில் மேயும் மானால் அம்புடன் காத்திருக்கும் வேடனை நினைத்துப் பார்க்க முடிவதில்லை. நீரில் மிதக்கும் மீனால் அருகில் தொங்கும் தூண்டலினால் மரணம் வருவதை உணரமுடியாது. அதே போல் வளர்ப்பு மிருகங்களையும் கருணைக் கொலை செய்வதற்கு மிருக வைத்தியரிடம் கொண்டு வரும்போது அவைகளுக்கு தங்களுக்கு வரவிருக்கும் மரணத்தை புரிந்து கொள்ள முடிவதில்லை. ஆனால் மனிதர்கள் மரணத்தைப் புரிந்து கொண்டு அச்சமடைவதுடன் அதைத் தடுக்க நினைப்பார்கள். மரணத்தை நினைத்து பயந்து மனிதன் அதை புரிந்து கொள்ள முயல்வதே மனித நாகரீக வரலாற்றில் சமயங்களின் தோற்றத்திற்கு காரணமாகிறது. ஆங்காங்கு தோன்றிய ஞானிகள் இறப்பை புறக்கணிக்க முயற்சித்து உபதேசித்தபோது ஒரு சிலர் மட்டும் இறப்பை மட்டுமல்லாது மனித வாழ்கையையும் அதன் உறவுகளையும் அதனால் ஏற்படும் உணர்வுகளையும் புறக்கணிக்கிறார்கள். இவர்கள் மனித கலாச்சாரத்தின் விளிம்பு நிலை மாந்தர்களாக மட்டும் இருந்திருக்கிறார்கள். இறப்புக்கு பயப்படாமல் இருந்தால் மனிதகுலம் டைனோசர்கள் போல் அழிந்து விட்டிருக்கும். இதனால்த்தான் சாதாரண மனிதன் இறப்பை புறக்கணிக்க முடியாமல் அதை வாழ்வின் முக்கிய சடங்காக்கிறான். உலகத்தின் சகல பிரதேசத்திலும் வாழும் மக்கள் இறப்பை பிரபலப்படுத்தி அதை கலாச்சாரத்தின் ஒரு பகுதியாக முக்கியத்துவப்படுத்துகிறார்கள். இதனை எண்ணும் போது இறப்பை உதாசீனப்படுத்த எண்ணியவர்கள் ஆரம்பத்திலே தோற்கடிக்கப்பட்டதையே கலாச்சாரங்களின் வரலாறு சொல்கிறது.

காயமே இது பொய்யடா அது காற்றடைத்த பையடா என இருநூறு வருடத்தின் முன்பு கூறிய சித்தர்களும் இறப்பு இல்லா வீடே இல்லை என மகனது உயிரைக் காப்பாற்ற தன்னைத்தேடி வந்த பெண்ணைப் பார்த்து புத்தர் கூறியதும் பண்டைய எகிப்தியர்களில்

இருந்து இன்று வாழும் மக்கள்வரை, வாழ்க்கை நிலையற்றது என தெரிந்து கொண்டாலும் இறப்பைப் புறக்கணிக்க முடியவில்லை.

முன்பு ஒரு நாள் பொன்னியை கருணைக் கொலைக்கு வைத்தியசாலைக்கு காரில் கொண்டு சென்ற போது பொன்னி எந்த அச்சமுமற்றுப் பக்கத்துச் சீட்டில் இருந்தபடி தனது நீளமான சிவந்த நாக்கால் தொடர்ச்சியாக சுந்தரம்பிள்ளையின் இடது கையை நக்கியபடி காரில் வந்தது. இடைக்கிடை தனது கருமையான ஈரமான மூக்கை அந்தக் கையில் வைத்து அழுத்தும். அன்று அதனது முகத்தில் கோடைகாலத்தில் பிக்னிக்கிற்கு குடும்பத்துடன் செல்லும் சிறுவனின் முகத்தில் உள்ள மகிழ்ச்சி தெரிந்தது. இந்த மகிழ்ச்சியான நிலை சுந்தரம்பிள்ளையைச் சங்கடத்தில் ஆழ்த்தியது. மரணத்தைப் புரிந்து கொள்ளாத பொன்னிக்கு அதை வளர்த்தவனாகிய தானே அந்த மரணத்தை பொன்னிக்கு கொடுக்கவிருப்பது என்பதே அந்தச் சங்கடத்திற்குக் காரணம். நண்பன் கலோஸைக் கொண்டு கருணைக்கொலையைச் செய்தால் என்ன என யோசித்தாலும் அப்படிக் கோழைத்தனமாக தனது பொறுப்பில் இருந்து நழுவி விட முடியாது என்பதால் பொன்னிக்குத் தனது கையாலே மயக்க ஊசியையும் மரணத்துக்கான ஊசியையும் போடவேண்டும் என நினைத்தான். நல்ல வேளையாக கொலிங்வூட்டால் பொன்னியின் உயிர் அன்று காப்பாற்றப்பட்டு சில கிழமையின் பின்பாக வேறு ஒருவரின் கையால் இறந்தது.

உயிர்ப்பயம் என்பதை அறியாது வீதியெங்கும் தனக்கு சொந்தமானது என்று நினைத்தபடி ஓடிய பொன்னி போல் இல்லாமல் கொலிங்வூட்டுக்கு மனிதர்கள் போல் இறப்பை பற்றிய சிந்தனையும் மரணத்தில் மேல் பயமும் வந்து பற்றிக்கொண்டுவிட்டது. அதைவிட மரணத்தை இப்படித்தான் அடையவேண்டும் என்ற மன எண்ணமும் வந்து விட்டது. இந்த மாதிரியான எண்ணங்கள் மனிதர்களைத் தவிர எந்த உயிரினத்திற்கும் இல்லாத உணர்வுகள், ஆனால் எப்படி கொலிங்வூட்டுக்கு மட்டும் சிந்திக்க முடிந்தது?

இந்த வைத்தியசாலையில் தொடர்ந்து மனிதர்களுடன் வாழ்வதால் பேசும் திறமையை பெற்றது போல் மரணத்திற்கு அஞ்சும் நிலையையும் பெற்றதா? கொலிங்வூட்டின் மூளையின் சில பாகங்கள் இதற்கு ஏற்ப மாற்றமடைந்தனவா? இப்படியாக நடப்பதற்கான சாத்தியங்கள் உள்ளனவாக என தெரிந்து கொள்ள மனிதர்களின் மனநிலை சம்பந்தமான விடயங்களையும் மிருகங்களின்

நடத்தைகள் பற்றிய புத்தகங்களையும் சுந்தரம்பிள்ளை படிக்கத் தொடங்கினான்.

சிறுநீரகம் உடலின் கழிவுப்பொருட்களை வெளியேற்றும் உறுப்பு. இந்த உறுப்பு மாமிசத்தை உண்ணும் பிராணிகளில் சீக்கிரமாக பழுதடைந்ததால் அங்கு கழிவுப்பொருட்கள் தேங்கி அவை வாந்தியை உருவாக்கும். அத்துடன் உடலின் தசைகளின் செயலாக்கத்திற்கு உதவும் கனிப்பொருட்களில் மாற்றத்தை ஏற்படுத்தி களைப்பை உருவாக்கும். இந்த மாதிரியான குணங்குறிகள் தெரிந்ததால் கொலிங்வூட் கூட்டில் அடைக்கப்பட்டுச் சேலையின் திரவத்தால் இரத்தத்தில் உள்ள இந்த அழுக்குகள் வெளியேற்றப்பட்டு, மீண்டும் புது இரத்தம் பெற்றது போன்ற நிலையை அடைந்த போது மீண்டும் வெளியே நடமாடத்தொடங்கியது.

நடமாடத் தொடங்கினாலும் வைத்தியசாலையின் நடவடிக்கைகள் கொலிங்வூட்டைப் பாதித்தது. அதனால், முன்போல பல இடங்களுக்கு நடமாடித் திரிவதில்லை. முக்கியமாக மற்ற மிருகங்கள் இருக்கும் இடங்களைத் தவிர்த்தது. பகலில் கணக்காளர் ஜோனின் அருகிலும் இரவில் வைத்தியசாலையின் மேற்தளத்தில் இருக்கும் வைத்தியசாலையைச் சுத்தம் செய்பவர்கள் வீட்டிலும் இருந்தது. அதிக அளவு நேரத்தை தூங்குவதில் கழித்தது. மதிய வேளையில் மட்டும் சுந்தரம்பிள்ளையிடம் வந்து மடியில் இருந்து பேசுவது வழக்கமாகி விட்டது. பழைய எகத்தாளமான பேச்சு, அலட்சியமான பார்வை என்பன இல்லாமல்போய்விட்டது. சுந்தரம்பிள்ளைக்கும் கொலிங்வூட்டுக்கும் இடையில் குரு- சிஷ்யன் போன்ற உறவு ஏற்பட்டு பேச்சுவார்த்தைகள் நடந்தது. இந்த பேச்சுகள் மற்றவர்களுக்குக் கேட்காவிட்டாலும் இந்த இருவருக்கும் இடையில் ஏற்பட்ட உறவு புதுமையாக மற்றவர்களுக்குத் தெரிந்தது. வெளியே மதிய உணவுக்குப் போவதைத் தவிர்த்து கொலிங்வூட்டோடு அந்த நேரத்தை கழிப்பது என சுந்தரம்பிள்ளை முடிவு செய்திருந்தான்.

முதியவர்கள் இளமைக்கால நினைவுகளை இரைமீட்டுப் பார்ப்பது போல் கொலிங்வூட், சுந்தரம்பிள்ளையிடம் வைத்தியசாலைக்கு வரமுன்பு நடந்த விடயங்களைப் பேசியது.

கொலிங்வூட்டுக்கு மரணபயத்தை உருவாக்கக்கூடிய ஒரு நிகழ்ச்சி வைத்தியசாலையில் நடந்தது. புதிதாக சேர்ந்த ஜேன் வைத்தியசாலையில் அனாதரவாக வந்து சேர்ந்த ஒரு ஆறுமாதமான ஜெர்மன் செப்பேட் கலப்பு நாயை கருத்தடைக்காக ஒபரேசன் செய்து

கொண்டிருந்த போது அந்த நாய் தனது சுவாசத்தை நிறுத்தி விட்டது. ஆனால் ஜேனோடு வேலை செய்த நேர்சான மார்வின் அதைக் கவனித்த போது ஏற்கனவே சில நிமிடங்கள் கடந்து விட்டது. காலோசும் மற்றவர்களுமாக ஓடி வந்து முதல் உதவி கொடுத்து உடலை விட்டு வெளியே சென்ற உயிரை மீண்டும் பிடித்துக்கொண்டு வந்தபோது அந்த நாய் பிழைத்துக்கொண்டது. ஒபரேசன் முடிந்து மயக்கத்திலிருந்து எழும்பியது. வைத்தியசாலையில் உள்ள நாயானபடியால் கூட்டில் அடைத்து வைக்கப்பட்டது. அடுத்த நாள் காலை நாய்ப் பகுதி மேற்பார்வையாளரான மேவிஸ் அவதானித்தபோது அந்த இரும்புக் கூட்டில் தலையை மோதிக் கொண்டு நின்றது. இதை மேவிஸ் கூறியதும் சுந்தரம்பிள்ளை அங்கு போய் பார்த்தான். அப்போது அந்த நாய்க்கு கண் தெரியவில்லை என சுந்தரம்பிள்ளைக்கு சந்தேகம் ஏற்பட்டது. இருட்டில் வைத்துக் கண்ணைப் பரிசோதித்த போது கண்களில் எந்த குறையும் தெரியவில்லை. இந்த நேரத்தில் அங்கு வந்த ஆர்தர் இந்த நாயின் மூளையின் பார்வைப் பகுதி செயலிழந்துவிட்டது. மூளைக்கு ஒட்சிசன் இல்லாமல் போகும்போது முதலாவதாக விசுவல் கோட்டெக்ஸ் என்ற மூளைப்பகுதி செயலிழக்கிறது. இந்த நாயை கருணைக் கொலை செய்வதைத் தவிர வேறு வழியில்லை என்றார்.

இந்த விடயங்கள் நடப்பதை கொலிங்வூட் பார்த்துக் கொண்டிருந்தது. தனக்கு இப்படியான நிலை விரைவில் வரவிருப்பதாக நினைத்து அச்சத்தில் நகர மறுத்து தனது செயல்பாட்டை குறைத்து கொள்ளுகிறது. முதிர்ந்த காலத்தில் படிப்படியாக தன்னிலையை இழக்கும் வயதான மனிதர்களின் இயல்பை அப்படியே கொலிங்வூட்டும் பிரதிபலிப்பதாக சுந்தரம்பிள்ளை நினைத்தான்.

மனிதர்களுக்கு அவர்களை சுற்றி இறப்பு தொடர்ச்சியாக நடக்கிறது. உறவினர்கள், சுற்றார்கள் மரணமடைகிறார்கள். இறப்புகளை இளவயதில் பொருட்படுத்தாத போதிலும் ஒருவன் தனது இறுதிக்காலத்தில் தனது வயதை ஒத்தவர்கள் ஒவ்வொருவராக மரணமடையும் போது அந்த மரணங்களை எண்ணியபடி வாழ்கிறான். இறப்பின் சிந்தனை அவனை நிலை குலைய வைக்கிறது. தனது இறப்புக்கும் திகதி குறிக்கப்பட்டதாக எண்ணி மனவேதனையை அடைகிறான். அந்த வேதனையில் ஏற்படும் மனஅழுத்தம் அவனுடைய உடலையும் இயங்காமல் பண்ணுவதால் மேலும் பலவீனம் அடைகிறான். மருத்துவ ரீதியில் பார்க்கும்போது தசைகள் எலும்புகள் வலுவையும் பரிமாணத்தையும் இழக்கின்றன.

## 27

சுந்தரம்பிள்ளை சிட்னியில் நடக்கவிருக்கும் எலும்பு முறிவு சம்பந்தமான கொன்பரன்ஸுக்கு செல்வதற்கு விடுமுறைக்கு விண்ணப்பித்திருந்தான். பதினைந்து மிருக வைத்தியர்கள் வேலை செய்யும் வைத்தியசாலையில் ஒருவர், இருவருக்கு மட்டுமே ஒரே நேரத்தில் விடுமுறை கிடைக்கலாம். விண்ணப்பித்த போது விடுமுறை கிடைக்கும் என்ற நம்பிக்கையில்லை. கிடைத்தால் நல்லது. கிடைக்காவிட்டால் எதுவித நட்டமும் இல்லை என்ற அலட்சியமான மனநிலை விண்ணப்பிக்கும் போதிருந்தது.

வியப்புக்களும் ஆச்சரியங்களும், திருப்பங்களிலும் முடுக்குகளிலும் காத்திருப்பது போல் சுந்தரம்பிள்ளைக்கும் அந்த விடுமுறை கிடைத்தது. கடந்த நான்கு வருடத்தில் இப்பொழுதுதான் முதல் தடவையாக வெளியூருக்கு கொன்பரன்ஸ் எனப் போகச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. ஆரம்பத்தில் சாருலதா, பிள்ளைகளுடன் ஒன்றாகச் செல்ல நினைத்தாலும் குழந்தைகளுக்குப் பாடசாலை நாட்கள் என்பதால் தனியே போவது என்று முடிவாகியது.

ஷரனுக்கும் அந்தக் கொன்பரன்சுக்கு செல்ல அனுமதி கிடைத்திருந்தது. ஒரு கிழமை சம்பளத்துடன் கல்வி கற்கக் கிடைத்த அந்தச் சந்தர்ப்பத்தை நல்ல விடுமுறையாக சிட்னியில் செலவிட இருப்பதாகவும் மாக்கஸ்சை அம்மாவிடம் விட்டு விட்டு கிறிஸ்ரியனுடன் செல்ல இருப்பதாகவும் வைத்தியசாலையில் போலினுக்குக் கூறி இருந்தாள்.

ஷரனுடன் ஒரே இடத்திற்குச் செல்வது மனதிற்கு நெருடலாக இருந்தது. வைத்தியசாலையில் அவளை ஒதுக்கி நடந்த சுந்தரம்பிள்ளைக்கு ஒரே கொன்பரன்ஸுக்கு இருவரும் சிட்னி செல்வது மனதிற்கு திருப்தியாக இருக்கவில்லை. அவளின் மேல் ஏற்பட்ட சலனங்கள் சருகாகிய ரோஜாவின் இதழ்களில்

இருந்து வரும் இலேசான வாசனை போன்றது. முற்றாக மறைந்து போகவில்லை. ஆனால் அவளுக்காக கிடைத்த சந்தர்ப்பத்தை விடமுடியாது. அவள் கணவனோடு வருவது ஒரு விதத்தில் நல்ல விடயம். குறைந்த பட்சம் ஷரனுக்கு இது இரண்டாவது தேன்நிலவாக அமைந்தால் அவளுக்கு நல்லது என நினைத்து மனதால் சமாதானம் அடைய முடிந்தது.

□ □ □

ஒரு வார விடுமுறை நாளன்று திடுதிப்பென சுந்தரம்பிள்ளை வீட்டுக்கு வந்த காலோஸ் 'எனக்கு ஜோனைப் பார்க்கவேண்டும். அவனது நிலைமை சீரியஸாகிக் கொண்டு வருவதாக மெல்வின் சொன்னான். என்னோடு வரமுடியுமா?'

'நான் சில வாரங்களுக்கு முன்பாகத்தான் என் மனைவியுடன் சென்றேன். நான் வரவில்லை'.

'என்னால் இப்படியான இடங்களுக்கு தனியாகப் போக முடியாது. ஜோன் துன்பப்படுவதை பார்ப்பது கடினமானது. தயவு செய்து வா'.

இந்த விடயத்தில் சுந்தரம்பிள்ளைக்கும் ஒரே மனப்பான்மை இருந்தாலும் காலோஸின் வேண்டுதலை தவிர்க்க முடியவில்லை

காலோசுடன் சுந்தரம்பிள்ளை ஜோன் வீட்டுக்குச் சென்ற போது ஜோனால் ஒழுங்காகப் பேச முடியவில்லை. வசனத்தை மிகக் கஷ்டப்பட்டு தொடக்கினால் அதை முடிக்க முடியாதிருந்தது. அந்த பிரச்சினையை சமாளிக்க அவன் தொடர்ந்து சிரித்துக் கொண்டிருந்தான். அவனால் அந்தச் சிரிப்பை நிறுத்த முடியவில்லை. அவனோடு பேச முனைவதோ, அவனைப் பார்த்துக் கொண்டிருப்பதோ அவனுக்கு அளிக்கும் தண்டனையாக இருந்தது. சுந்தரம்பிள்ளையும், காலோசும் இனிமேல் இருப்பது சரியல்ல என முடிவு செய்து அந்த இடத்தில் இருந்து விரைவாக வெளியேறும் தருணத்தில் வாசலில் மிஷேலின் காரைக் கழுவிக் கொண்டிருந்த இயன் உள்ளே வந்தான். அவன் காலோசிடம் கை குலுக்கி விட்டு மிஷேலை நோக்கிச் சென்றான்.

ஜோனின் நண்பனாக அறிமுகப்படுத்தப்பட்ட இயன், உள்வீட்டுப் பிள்ளைபோல் அங்கு வலம்வந்தது அவனை அந்த வீட்டில் வசிப்பவனாகக் காட்டியது. மிஷேலோடு பழகும் பாவனையில் இருந்து இப்பொழுது மிஷேலின் நண்பனாக இருப்பது புரிந்தது.

ஹோலுக்கு எதிரே இருந்த ஜோனின் படுக்கையறையில் பல உபகரணங்கள் இருந்தன. படுக்கையில் இருந்து பிடித்துக் கொண்டு எழும்புவதற்காக அவனால் பாவிக்கப்படுவது தெரிந்தது. அந்த உபகரணங்கள், சக்கர நாற்காலி என்பன அந்த அறையின் இடத்தை அடைத்துக் கொண்டிருந்தன. அவனது படுக்கையறை இவற்றால் ஒரு ஜிம்னாசியம் போன்ற தோற்றத்தைக் கொடுத்தது.

ஜோனின் படுக்கை அறைக்குப் பக்கத்து அறையின் கதவு திறந்திருந்தது. அதனூடாகப் பார்த்த போது அங்கே, புதிதாக டபிள் பெட் போடப்பட்டு, இரண்டு தலையணைகளுடன் ஒரு மெல்லிய மஞ்சள் கம்பளிப் போர்வையால் அந்த பெட் மூடப்பட்டு இருந்தது.

அந்த அறையைப் பார்த்து மெதுவாக சிரித்தான் கலோஸ். அவனது சிரிப்பின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டதால் வேறு பக்கத்துக்கு முகத்தை திருப்பிக் கொண்டான் சுந்தரம்பிள்ளை.

ஆனாலும் காலோஸ் விடவில்லை

‘மிஷேல் கணவனைப் பக்கத்து அறையில் வைத்துக் கொண்டு வேறு ஒருவனுடன் இந்த வீட்டின் கூரைக்குள், அதுவும் அடுத்த அறையுள் படுக்கிறாள்’ என காதோடு அங்கேயே கூறினான் காலோஸ்.

இதைக் குறைந்த பட்சம் அந்த வீட்டின் வெளியே வந்து கூறினால் நாகரிகமாக இருக்கும் என பதிலுக்குச் சொல்ல நினைத்தாலும் மவுனமாக அந்தக் கூற்றைப் புறக்கணிப்பதுதான் தற்போதைக்கு நல்லது என நினைத்தான் சுந்தரம்பிளளை.

வெளியே வந்து காரில் ஏறியதும் ‘மிஷேல் இரண்டு வருடமாக ஜோனைப் பராமரிக்கிறாள் அவள் நினைத்திருந்தால் பெற்றோரின் வீட்டில் விட்டு விட்டு தான் நினைத்தவனுடன் வாழ்திருக்க முடியும். இவர்களுக்கு இடையில் தொடர்பு இருந்தாலும் இருவரும் சேர்ந்து முழு மனதுடன் ஜோனைப் பராமரிப்பது என்னைப் பொறுத்தவரை உன்னதமான விடயம். கணவன் மனைவி என்ற உறவு அவர்களிடையே அறுந்து போய் விட்டாலும் தனது கடமையாக ஜோனைப் பாராமரிக்கும் போது அவளது மனஉணர்வுகள், தனிமை, களைப்பு எனப் பல வெற்றிடங்களைப் புறக்கணிக்கமுடியாது. அதை அவள் புறக்கணித்தால் இயங்க முடியாது போய்விடும். அவளது உணர்வுகளைப் புரிந்து கொள்ள அவளது இடத்தில் இருக்கவேண்டும்’.

‘நீ என்னத்தைச் சொன்னாலும் கணவனைப் பக்கத்து அறையில் வைத்துவிட்டுக் காதலனுடன் உடலுறவு கொள்வதை என் மனதால் ஏற்க முடியாது’.

‘அதற்காக உடலுறவு கொள்ள வீட்டுக்குப் பின்னால் போகமுடியுமா? என்ன பேசுகிறாய்?

நீ எல்லா உறவுகளையும் பாலுணர்வை அடிப்படையாக வைத்துப் பார்க்கிறாய். தற்பொழுது ஜோனுடன் பேசமுடியாது. குறைந்தபட்சம் பேசி மகிழ்வதற்கு ஒருவர் தேவை. அவர்களுக்கிடையில் பிள்ளைகள் இருந்தாலும் பரவாயில்லை. என்னைப் பொறுத்தவரையில் அவளது தனிமை கொடியது. அவள் தனது கடமையை தவறாது செய்கிறாள். தற்காலத்தில் மிஷேலை ஒரு உன்னதமான பெண்ணாக நான் நினைக்கிறேன்’ விட்டுக் கொடுக்காமல் சிறிது ஆத்திரத்துடன்.

‘நாம் சண்டை போடவேண்டாம். ஆனால் நீ என்னத்தைச் சொன்னாலும் நான் ஏற்றுக் கொள்மாட்டேன்’

‘இந்த விடயத்தில் நாங்கள் இருவரும் வேறுபடுவோம்’.

அடுத்த ஞாயிற்றுக்கிழமை காலோஸின் அழைப்புக்கிணங்க மதுச்சாலைக்குச் சென்று மது அருந்திவிட்டு அதன் கீழ்ப் பகுதியில் உள்ள கபேக்கு சென்றபோது அங்கு சக்கர நாற்காலியில் அமர்ந்தபடி ஜோன் நடுங்கும் கைகளால் பிங்கோ விளையாடிக்கொண்டிருந்தான் அவனுக்குப் பக்கத்தில் மிஷேல் அடுத்த மிசினில் விளையாடிக் கொண்டிருந்தாள்.

‘என்ன மிஷேல் எங்கள் இடத்துக்கு வந்திருக்கிறாய்’என்றான் சுந்தரம்பிள்ளை

ஜோன் பிங்கோ விளையாட ஆசைப்பட்டதால் இங்கு வந்தோம். தனியாக ஜோனைக் கொண்டு வருவது எனக்கு கடினமானதால் இயனையும் கூட்டிவந்தேன்

சிறிது தூரத்தில் இயன் மதுக்கிளாசுடன் பிங்கோ விளையாடிக் கொண்டிருந்தான்

□ □ □

**சி**ட்னியின் தென் கிழக்குப் பிரதேசம் கடற்கரையை அண்டியது. அங்குதான் சிட்னியின் விமான நிலையமும் உள்ளது. விமான நிலையத்துக்கு அருகே உள்ளது உல்லாசப் பிரயாணிகளுக்கு

பிரசித்தமான பொண்டாய் கடற்கரை அந்தக் கடற்கரையருகே உள்ள ஒரு பெரிய ஹோட்டலில் அந்த எலும்பு முறிவு கொன்பரன்ஸ் நடந்தது. அந்த ஹோட்டலிலே தங்குவதற்கு அறையை ஒழுங்கு செய்திருந்தான் சுந்தரம்பிள்ளை.

கொன்பரன்ஸ் ஐந்து நாட்கள் நடந்தது. இருநூற்றுக்கு மேற்பட்டவர்கள் வந்திருந்ததால் அதிக நேரம் ஷரனுடன் பேச வாய்ப்புக் கிடைக்காத போதிலும் கணவர் கிறிஸ்ரியன் உடன் வந்து அதே ஹோட்டலில் தங்கியிருப்பதாக சொன்னாள். சுந்தரம்பிள்ளை அவளுக்கு இந்த விடுமுறை மகிழ்ச்சியைக் கொடுக்குமென நினைத்த போதும் எதிர்பார்த்த அளவு மகிழ்ச்சி அவள் முகத்தில் தெரியவில்லை

வெள்ளிக்கிழமை கடைசி நாளானதால் மதிய உணவு இடைவெளியில் உணவுகள் பரிமாறப்பட்ட இடத்தில் இருவரும் உணவுக் கோப்பைகளுடன் சந்தித்த போது வழமைபோல் கையை தோளில்போட்டு 'சிவா வீடு செல்லும் போது என்னிடம் சொல்லிவிட்டு போ. நாங்கள் நாளைதான் மெல்பன் வருவோம்' என்று விட்டு உணவுடன் மறைந்துவிட்டாள்.

கொன்பரன்ஸ் முடிவதற்கு இரண்டு மணித்தியாலத்துக்கு முன்பாக அவள் இருக்கையை விட்டு எழுந்து சென்றதை சுந்தரம்பிள்ளை பார்த்தான். ஏதாவது அவசரமோ இல்லை சிட்னியில் சொப்பிங் செய்யப் போகிறாளோ?

ஐந்து மணிக்கு கொன்பரன்ஸ் முடிந்ததும் அறைக்குச் சென்று தனது உடைகளை அடுக்கிப் பெட்டிகளைத் தயார் செய்து கொண்டு எட்டு மணியளவில் விமானநிலையம் செல்வதற்காக அறையில் இருந்து வெளியே வந்தபோது ஷரன் கேட்டுக்கொண்ட விடயம் மனதில் தட்டியது. பேச்சுக்காக சொல்லியிருப்பாள். இவளைப் பார்க்கப் போய், இதுவரையும் அறிமுகமாகாத அவளது கணவனையும் தேவை இல்லாமல் சந்திக்க வேண்டியிருக்கும். நல்லவன் இல்லை என்று பலராலும் சொல்லப்பட்ட அவனைப் பார்த்து அறிமுகமாவது இப்பொழுது அவசியமா என்ன கேள்வி எழுந்தது.

ஷரன் ஐந்து நாளும் பேசாமல் இன்று மட்டும் ஏன் வலிய வந்து சொன்னாள்? நாளையோ மறுநாளோ மீண்டும் வைத்தியசாலையில் சந்தித்தால் ஏன் வரவில்லை என்பாள். எதற்கும் தலையை காட்டி விட்டு போவோம். அவள் இருப்பது வேறு ஒரு புளோரில்

என்பதால் அப்படியே பெட்டிகளுடன் சென்று அவளது அறையை இரண்டு தடவை தட்டிய போது கதவு திறக்கவில்லை.

இப்ப என்ன செய்வது? திரும்பிப்போவோம் என நினைத்தாலும் சிறிது தாமதித்து விட்டு மூன்றாவது முறையாகத் தட்டிவிட்டு திரும்புவோம் என நினைத்தபோது கதவு மெதுவாகத் திறந்தது. அறையுள்ளே இருந்த இருள் தள்ளிக் கொண்டு வெளியே வந்தது. ஆரம்பத்தில் உள்ளே எதுவும் தெரியாத போதிலும் சில கணநேரத்தில் கொரிடோரின் வெளிச்சம் உள்ளே ஊடுருவிய போது கதவின் மறு புறத்தில் பார்த்த காட்சி சுந்தரம்பிள்ளையை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. உடனடியாக அவனது கண்களை நிறைத்தது எந்த துண்டுத்துணியும் அற்ற அவளது உடல்தான்.

ஷரன் முழு நிர்வாணமாக நின்றாள்.

இல்லை அவளது உடலின் இடது தோள்பகுதியை அவளது கூந்தல் மறைத்தது.

பூர்ண நிலவை உருக்கி வார்த்த அவளது உடலின் பல இடங்களில் அவசரத்தில் சிவப்பு வர்ணத்தால் ஆங்காங்கு தீட்டியது போல் இரத்தம் கண்டலாக உறைந்தது போல் தெரிந்தது. காட்டு மிருகத்தால் பலமாக தாக்கப்பட்டு உயிர்காக்க அவள் போராடியதால் காயம்பட்டு இருக்கலாம் என நினைக்க வைக்கும்படி இருந்தது.

சிட்னியில் ஐந்து நட்சத்திர ஹொட்டலுக்கு எந்தக் காட்டு மிருகம் வரும்?

உள்ளே வந்து கதவை மூடிய சுந்தரம்பிள்ளையால் என்ன நடந்திருக்கலாம் என்பதை ஓரளவு ஊகிக்க முடிந்தாலும் அதை அவள் சொல்லும்வரை மவுனமாக இருந்தான். வலது கன்னம் சிவந்தும் வலது கண்ணை சுற்றியுள்ள பகுதி வீங்கிப் பெரும்பகுதியான கண்ணை மறைத்தது. நல்ல வேளையாக முகத்தில் தழும்பு வரக்கூடிய எந்தக் காயமும் இருக்கவில்லை. அந்த அடி இடது கையால் அடிக்கப்படிட்டிருக்கிறது. அடித்தவனது வலதுகையை ஷரன் தடுத்ததால் இடது கைபேசி இருக்கிறது. அவளது முகத்தில் நிரந்தரமான தழும்பு ஒன்றை நினைத்துப்பார்க்கக் கூட அவனால் முடியவில்லை. இடது விலாப்பகுதியில் உலக வரைபடத்தில் அந்தக்கால சோவியத் ரஷ்யா இரண்டு கண்டங்களில் இருப்பதுபோல் வயிற்றில் இருந்து முதுகுவரை இரத்தம் கண்டியிருந்தது. அதுமட்டுமல்ல இரத்தம் கசிந்திருப்பது போல்

தெரிந்தது. வாசலருகே சில நிமிட நேரம் தாமதித்து விட்டு,அவள் மீண்டும் எதுவும் பேசாமல் படுக்கையை நோக்கித் திரும்பிய போது கண்டிப்போன மேல் முதுகும் தெரிந்தது. அடிவாங்கும் போது முன்பகுதியை கைகளால் மறைத்து விமான விபத்து நடந்தால் எப்படியாக உடலை வைத்திருக்கவேண்டும் என்ற நிலையில் முகத்தை பாதுகாத்திருக்கவேண்டும். சிறுவயதில் இருந்து பயின்ற கராட்டி பயிற்சியும் உதவியிருக்கும். அவளது பெண்மையின் பிரத்தியேக அங்கங்களை தவிர மற்ற இடங்கள் கண்டிப் போய்விட்டதாக சுந்தரம்பிள்ளைக்கு தெரிந்தது. இப்படி ஒரு பெண்ணை அடிப்பதற்கு ஒரு மனிதனால் எப்படி முடிந்தது? அதுவும் அவளோடு பல வருடம் தாம்பத்தியம் செய்து அவளது உடலோடும், உள்ளத்தோடும் உறவாடிய ஆண் மகனால் தனது ஜன்ம விரோதியை அடிப்பது போல் அடித்து துவைத்துப் போடப்பட்டிருக்கிறாள். இப்படியான வன்முறை அந்த அறையில் நடந்திருப்பதை நினைக்க முடியாமல் இருந்தது.

ஷரன் போய் கட்டிலில் விழுந்து போர்வைக்குள் தனது நிர்வாணத்தையும் காயங்களையும் மறைந்துக்கொண்டு படுத்தாள்.

சுந்தரம்பிள்ளைக்கு அதன் பின்புதான் நாக்கில் ஈரம் கசிந்து பேச்சை துவக்க முடிந்து. அது கூட சரளமாக வரவில்லை. விட்டு விட்டுத்தான் வந்தது.

‘என்ன நடந்தது ஷரன்? இவ்வளவு மோசமாக யாரால் தாக்கப்பட்டாய்?

அவளது போர்வைக்குள் இருந்தபடி ‘எனக்கு யார் வில்லன் இருக்கிறான் கிறிஸ்ரியனைத் தவிர?’ என்றாள்.

‘இவ்வளவு மோசமாகவா?’

உனக்கு உட்காயங்கள் தெரியவில்லை. அவனால் வெளிக்காயம் தெரியாமல் அடிக்கமுடியும்.

‘ம்’

உனது கமராவால் என்னை இப்படியே போட்டோ பிடித்துக் கொள்வாயா?

‘முதல் ஏன் இது நடந்தது எனச் சொல். அதன்பின்பு போட்டோ பிடிப்பதை பற்றிப் பேசுவோம்’.

‘நான் சிறிது முன்னால் சொப்பிங் செய்ய விரும்பி வந்தபோது இந்தப் படுக்கையில் ஒரு எஸ்கோட் பெண்ணுடன் உடல் உறவில் இருந்தான். அவனுக்கும் எனக்கும் நடந்த கைகலப்பில் எனக்கு வந்த காயங்கள் இவை’

‘உன்னை மிகவும் மிருகத்தனமாக தாக்கி இருக்கிறான். நீ பொலிசுக்கும் டாக்டரிடமும் செல்ல வேண்டியது இப்பொழுது அவசியம். நான் எனது விமானப்பயணத்தை இரத்து செய்து விட்டு என்னால் முடிந்த உதவிகளை செய்கிறேன். இந்த மாதிரி அரக்கத்தனத்தை நான் வாழ்நாளில் பார்த்ததில்லை.

‘முதல் என்னை போட்டோ எடு’ எனச் சொல்லி விட்டுப் படுக்கையில் இருந்தபடி அந்த ஹோட்டேல் அறையின் சகல விளக்குகளையும் போட்டு விட்டு போர்வையை விலக்கி படுக்கையில் அமர்ந்தாள்.

‘நான் எடுக்கிறேன். உனது அண்டவெயரையும் பிராவையும் போடுகிறாயா. பார்ப்பதற்கு கஷ்டமாக இருக்கிறது’

‘நான் அண்டவெயரை போட்டால் இடுப்பில் உள்ள காயத்தை முழுவதாக எடுக்க முடியாது. அதேபோல் பிராவை போட்டால் முதுகுக் காயம் மறைந்து விடும். எனது காயங்களை எடுத்து பாதுகாப்பாக வைக்க விரும்புகிறேன். எதிர்காலத்தில் அவன் மீது ஏதாவது செய்வதற்கு எனக்குச் சாட்சியம் தேவை. என்னை இந்த நிலையில் பார்க்கும் போது உனக்கு பரிதாபம்தான் வரும். காம உணர்வு வராது என்பது எனக்குத் தெரியும்’.

வேறு வழியில்லாமல் தனது பெட்டிக்குள் இருந்த கமராவை எடுத்து தயக்கத்துடன் பல கோணங்களில் படம் எடுத்தான் சுந்தரம்பிள்ளை.

இரண்டு கைகளை உயர்த்தி முதுகுக் காயங்களை காட்டியபடி ‘கிறிஸ்ரியனுக்கு எதிராக நான் இங்கே வழக்குப் போடப் போவதில்லை. நான் அவனைக் கொலை செய்யப் போகிறேன்’

அவளது ஆத்திரமும் காயத்தின் வலியும் அப்படிப் பேச வைக்கிறது. அவளது வார்த்தைகளுக்கு எப்படியாக அர்த்தம் கற்பிப்பது என்பதும் புரியவில்லை. ஆனால் இவளால் இந்த வலியில் அழாமல் இருக்க முடிகிறது. அது பெரிய விடயம். சாதாரண பெண்களாக இருந்தால் கதறிய படி இந்த ஹோட்டலை

விட்டே ஓடிப்போயிருப்பார்கள். அல்லது அம்புலன்சுக்கு அழைப்பு விடுத்து ஆர்ப்பாட்டம் பண்ணியிருப்பார்கள். அவளது மன நிலையை நினைத்து பார்க்கவோ ஆறுதல் சொல்வதோ மிகக் கடினமான காரியமாகப்பட்டது. ஏதாவது சிறு உதவி மட்டும் மனிதாபிமானமாகவோ நட்பு முறையிலோ இப்பொழுது செய்ய முடியும். இது கணவன் மனைவி விவகாரமானதால் சிக்கலானது மட்டுமல்ல. இருவரது எதிர்காலத்தையும் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

'இப்பொழுது எங்கே கிறிஸ்ரியன்?'

'என்னை அடித்துவிட்டு அந்த வேசையை கூட்டிக் கொண்டு வெளியே சென்றவன்தான் இன்னும் திரும்பி வரவில்லை'.

சுந்தரம்பிள்ளையின் வற்புறுத்தலின் பின்பு பிஜாமாவை அணிந்து கொண்டாள். அவள் உடுத்தியதும் அறைக்கு உணவு கொண்டு வரும்படி தொலைபேசியில் சுந்தரம்பிள்ளை வரவேற்புப் பகுதியில் சொன்னதும் சிறிது நேரத்தில் உணவு வந்தது.

உணவு கொண்டு வந்த பரிசாரகன் தன்னைப் பார்ப்பதைத் தவிர்ப்பதற்காக பாத்ரூமுக்குள் மறைந்தாள். அவன் வெளியேறியதும் முகத்தைக் கழுவித் தலைமயிரை ஒதுக்கிக் கொண்டு வெளியே வந்து அந்தக் கட்டிலில் அமர்ந்தாள்.

தனது அழகான உடலையும் அறிவையும் தனது தேவைகளை நிறைவேற்றும் துருப்பு சீட்டாக வைத்திருந்தவள். இந்த மாதிரியான அலங்கோலத்தில் அன்னியன் ஒருவன் பார்ப்பதை விரும்பாதது புரிந்து கொள்ள முடிந்தது.

'ஏதாவது ஒயின்மன்ற்றாவது வாங்கி வரவா. உன்னை இப்படிப் பார்த்துக் கொண்டு ஒன்றும் செய்யாமல் நிற்பதற்கு எனக்கு அந்தரமாக இருக்கிறது. ஏதாவது உதவி செய்ய வேண்டுமென்றால் தயங்காமல் கேள்'

'எனது உடல் வலியில் அந்த வேசைமகனில் மேல் உள்ள கோபம் தங்கியிருக்கிறது. அவனை கொலை செய்யும் எண்ணத்தில் தொய்வு ஏற்படக்கூடாது என்பதற்காக இந்த வலிக்கு நான் மருந்து எடுக்க விரும்பவில்லை. இப்பொழுது நீ இந்த அறையில் இருப்பதை விட எனக்கு பெரிய உதவி ஒன்றுமில்லை. மூன்று மணியில் இருந்து எட்டு மணிக்கு நீ வரும் வரையில் நான் வாயால்

முனகிக் கொண்டும் மனதில் குமுறிக் கொண்டும் படுத்திருந்தேன். நீ வராமல் இருந்தால் இரவு முழுவதும் இப்படியேதான் பசியோடு இருந்திருப்பேன்'.

அவளது வேதனைக்கோ கோபத்திற்கோ ஆறுதல் சொல்லமுடியாது. குறைந்த பட்சம் அதை வளர்க்காமல் இருப்பது நல்லது என சுந்தரம்பிள்ளை மவுனமாகினான்.

மீண்டும் மனம் கேட்கவில்லை

'இவ்வளவு காயத்துடன் நீ டொக்டரைப் பார்க்காதது நல்லதல்ல'

எந்தப் பதிலும் சொல்லாமல் உணவில் சிறுபகுதியை அவள் உண்ணத் தொடங்கிய போது அவளோடு அந்த உணவை பகிர்ந்தான் சுந்தரம்பிள்ளை.

இப்பொழுது நிலைமை சங்கடத்தை அளித்தது. சுந்தரம்பிள்ளைக்கு அந்த ஹோட்டலில் அறையில்லை. ஷரனது அறையில்தான் இரவைக் கழிக்க வேண்டும். இந்த நிலையில் அவளைத் தனியே விட்டு விட்டு போவதும் இயலாத காரியம். அவளது அறையில் இருந்த சோபாவில் சுந்தரம்பிள்ளை சாப்பிட்டு விட்டுப் படுத்தபோது நித்திரை வரமறுத்தது. கிறிஸ்றியனின் பெயரில்தான் இந்த அறையுள்ளது. அவன் வந்து கதவு தட்டினால் இந்த அறையில் இருக்கும் என்னையும் அடிப்பதற்கு முயல்வான். கராத்தேயில் கறுப்பு பெல்ட் பெற்று காரத்தே ஆசிரியராக இருக்கும் அவனுடன் கைகலப்பில் எதிர்ப்பது முடியாத காரியம். ஷரன் மாதிரி காயங்கள் ஏற்படலாம் என்பதும் அதன் பின்பு இப்படியான விடயங்களை எப்படி மற்றவர்களுக்கு சொல்லமுடியும்? அதிலும் சாருலதாவுக்கு புரியவைத்து நிரபராதி என எப்படி நம்பவைக்க முடியும்? அந்த நேரத்தில் ஷரன் என்ன சொல்லுவாள் என்பதும் நம்ப முடியாது. ஒவ்வொரு நேரத்திலும் மாறுவதும் தேவையில்லாமல் பொய் சொல்லுவதுமாக இவளது இயல்பு. சாதாரண காலங்களிலேயே மெல்பன் காலநிலையாக மாறுபவள். இப்பொழுது இவள் பொலிசுக்கு போவதானல், நாம் உதவி செய்வது மனிதாபிமானமாக இருக்கும். அதைவிட்டு தனக்கு காவலாக படுத்திரு எனக் கேட்கிறாள். எக்காலத்திலும் புதிராக இருக்கிறளே?.

சாம், ஷரனைப் பற்றிய கூறிய வார்த்தை நினைவுக்கு வந்தது. "மர்லின் மன்றோவாகவும் பின்பு மதர் திரேசாவாகவும் மாறுவாள். எக்காலத்திலும் இரக்கமோ மோகமோ கொள்ளாதே"

எவ்வளவு கடுமையான வார்த்தைகள்?

இப்படிப் பல நினைவுகள் மனதைக் குடைந்தன.

இடைக்கிடை ஷரனின் முனகல் கேட்டது. ஆரம்பத்தில் அதைப் பொருட்படுத்தவில்லை. முனகல் பெரிதாகியதும் அவற்றின் இடைவெளிகள் குறைந்து வந்த போது வேறு வழியில்லை.

'ஷரன், என்ன செய்கிறது?'

'உடல் முழுவதும் வலியாக இருக்கிது. மூச்சு விடுவது கஷ்டமாக இருக்கிறது. வேசைமகன் விலா எலும்பை உடைத்துவிட்டானா தெரியவில்லை'.

அருகில் சென்று 'அம்புலன்ஸை அழைக்கட்டுமா'

'இந்த கட்டிலில் வந்து இரு'

மெதுவாக ஓரத்தில் இருந்தவனிடம்,

'முதுகின் கீழ் கையை கீழே வைத்து என்னை சிறிது நகர்த்தி விடு. நகரவோ திரும்ப முடியாமலோ இருக்கிறது'

முதுகில் கீழ் கையை வைத்துத் தூக்கிவிட்டதும் ' நீ முதுகைத் திருப்பினால் விலாவைப் பார்க்கிறேன்'

'நீ பார்க்கத் தேவையில்லை. எனக்கு பக்கத்தில் படுத்துக் கொள். கொஞ்சம் ஆறுதலாக இருக்கும்.

இவளுக்கு என்ன நடந்தது. அடித்ததில் மூளையில் ஏதாவது பிசகிவிட்டதா? இல்லை.என்னை பரிசோதித்துப்பார்க்க விரும்புகிறாளா?

' நீ இருக்கும் இந்த நிலையிலா? நீ என்னைத் தர்மசங்கடத்தில் ஆழ்த்துகிறாய்'

'உனக்குத் தெரியும்தானே சிவா. காதல் செய்தால் உடலில் இருந்து ஒக்சிரோசின் வலி போக்கும் இரசாயனங்கள் உருவாகும் என்று. அதனால் எனது வலி நிவாரணத்துக்கான மருந்தை உன்னிடம் இருந்து யாசிக்கிறேன்' என இளநகையுடன் கையை நீட்டினாள்.

சுந்தரம்பிள்ளை பரிதாபமான அவளது கண்களைப் பார்த்தபடி கண்ணருகே இருந்த காயத்தில் உதட்டால் மெதுவாக

முத்தமிட்டபோது அவள் தலையின் மயிரை கோதிப் பிடித்தபடி 'நீ எத்தனை நாள் என்னை காமத்துடன் பார்த்திருக்கிறாய். ஒவ்வொரு நாளும் என்னைக் காணும்போது உனது கண் அசைவுகள் என்னைத் தொடர்வது எனக்கு தெரியாது என நினைத்தாயா'? எதற்காக தைரியமில்லாத ஹிப்போக்கிரசியான ஆண்மகனாக இருக்கிறாய்?

'உன்னைக் காமத்துடன் பார்க்கவில்லை. அல்லது உன்னில் ஆசையில்லை என நான் எக்காலத்திலும் சொல்லமாட்டேன். உன்னழகின் கவர்ச்சி உனக்குத் தெரியும். நான் உன்னைப் பற்றிச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. உன்னைப் போன்ற அழகியைப் பார்த்து எந்த ஆண்மகனால் அப்படி இல்லை என எப்படி சொல்ல முடியும்? இன்றைக்கு விடயம் வேறு. இப்படி புலியால் வேட்டையாடப்பட்ட மானாக அடிபட்டு உடல் புண்ணாகி இருக்கும் நிலையில் எனக்கு உன்னில் காம உணர்வு எப்படி வரும்? நீயே அதை ஆரம்பத்தில் சொன்னாயே?

'உன் உதாரணம் கவித்துவமாக இருக்கிறது. ஆனாலும் உண்மையில் நீ பொய் சொல்கிறாய். கிறிஸ்ரியனுக்கு பயப்படுகிறாய். உண்மையா இல்லையா?' எனசிரித்தபடி தலையை உயர்த்திவிட்டு மீண்டும் முனங்கினாள்.

'அதுவும் உண்மைதானே. எந்த நேரத்தில் உனது கணவன் வந்து கதவை தட்டினால் என்பாடும் உன் கதிதான். ஒரு வித்தியாசம் நான் எஸ்கோட் இல்லை'

'அவனை நான் எதிர்பார்க்கிறேன். அந்த வேசைமகன் நான் பார்க்கும்படி விபசாரியை பணம் கொடுத்து அறைக்கு கூட்டி வந்து புணர்நதான். அவன் உன்னோடு நான் ஒன்றாக இருப்பதை இந்த அறைக்கு வந்து பார்க்க வேண்டும் என்பது எனது விருப்பம்'.

'அப்ப இருவரும் ஒன்றாக வைத்தியசாலைக்குப் போக வேண்டிவரும்'.

படுக்கைக்கு அருகில் இருந்த விளக்கை அணைக்க முயன்ற சுந்தரம்பிள்ளையிடம் எனக்கு 'இந்த நேரத்தில் வெளிச்சம் வேண்டும்' என்றாள்.

தயக்கத்துடன் கட்டிலின் அருகில் அமர்ந்ததும் 'சிவா நான் சில மணி நேரமாவது வலியை மறந்து உன்னோடு சந்தோசமாக இருக்க விரும்புகிறேன்' என கைகளால் தலைமயிரை பலமாக இழுத்தாள்.

‘ரிலாக்ஸ் நான் உன்னை விட்டு ஓடமாட்டேன்’.

தனது கையை எடுத்துவிட்டு தனது கழுத்தை தலையணையில் அழுத்தியபடி ‘என் உடல் காயம் மனக்காயத்தின் வலி உனக்கு தெரியாது’.

‘ம் உண்மைதான் ஆனால் விருந்தாக சாப்பிடுவதா இல்லை அவசரமாக தட்டிப் பறித்து சாப்பிடுவதா என்பதை நீயே முடிவு செய்துகொள்’.

‘அப்படியானால் விருந்தாக பரிமாறுவோம்’.

□ □ □

ஒரு மணிநேரத்தில் எழுந்து குளியலறைக்கு சென்று திரும்பியவள் மீண்டும் தனது பிஜாமாவை போட்டுக் கொண்டு ‘ஹா ஹா உனது வார்த்தைகளை பொய்யாக்கி விட்டேன்’ எனக்கூறியபடி சிவாவின் தலையைத் தடவினாள்.

படுக்கையில் இருந்து எழுந்தபடி ‘’நீ கிறிஸ்ரியனில் மேல் இருந்த ஆத்திரத்தை இதன் மூலம் தணித்துக்கொண்டாய். இதனால் இருவருக்கும் என்ன கிடைக்கும்?

‘நான் உன்னில் ஆசைப்பட்டதில்லை. ஆனால் மரியாதை வைத்திருந்தேன். நீ நான் பார்க்காத போதெல்லாம் என்னைப் பார்ப்பதை நான் அறிவேன். இதைத் தெரிந்ததால்தான் நான் உன்னை பக்கத்தில் படுக்க அழைத்தேன். விருப்பமில்லாமல் எனக்காக வந்தாய் என்று வைத்துக் கொண்டாலும் என்னில் ஆசை இல்லாமலா இப்படிக் காதல் புரிந்தாய்? நான் சுயநலமாகத்தான் உன்னை அழைத்தேன் என ஒப்புக்கொள்கிறேன். கிறிஸ்ரியனைத் தவிர்ந்து நான் காதல் புரிந்த ஒரே ஆண் நீதான். அது எனது உடலில் கிளர்ச்சியை ஏற்படுத்தி வலிகளை குறைத்தது. நேர்மையாக ஒப்புக்கொள்கிறேன். இதைத் தவிர உன்னிடம் ஒரு கடன் தீர்க்கவிருந்தது.

‘அது என்ன கடன்?

‘நினைவில்லையா ஒரு நாயை நான் ரெம்பரேச்சர் பார்க்கவில்லை என்று நீயும் சாமும் என்னை அவமானப்படுத்திய போது இந்த முறை நீங்கள் வென்றீர்கள் என சொன்னேன். உன்னை கொஞ்சம்

மாட்ட வேண்டும் என்று என்னிடம் ஒரு திட்டம் மனதில் இருந்தது' என்று கன்னத்தில் முத்தமிட்டாள்.

'நான் எத்தனை அழகான பெண்களை காமத்துடன் பார்த்திருந்தாலும் என் மனைவியைத் தவிர வேறு ஒரு பெண்ணிடமும் உடலுறவு கொண்டதில்லை. நீ என்னைத் திட்டம் போட்டுக் கவிழ்த்து விட்டாய்'. பொய்யான கோபத்துடன்.

'கவலைப்படாதே. என்னில் எந்த நோயும் இல்லை. கீழைத்தேச மனசாட்சிக்கு, குற்ற மனப்பான்மை கொஞ்ச நாள்தான் மனசாட்சிக்கு உறுத்தும். எனக்கு கிறிஸ்ரியன் அடித்திருக்காமல் இருந்து ஏதாவது சந்தர்ப்பவசமாக உன்னோடு இப்படி நடந்திருந்தால் எனக்கும் இப்படி அந்த உணர்வு இருக்கும். எனக்கு இரண்டு விதமான உதவிகளைச் செய்திருக்கிறாய். கிறிஸ்ரியன் என்னை அடித்து அதன் மூலம் நீ ஒரு பெண்ணில்லை என்று கூறி எனக்கு முன்பாக வேறு பெண்ணுடன் உறவு கொள்வதற்கு முடியும் என்பதை தெரிவிக்க நினைத்தான். எனக்கு அதே போல் நான் அடி வேண்டிய பின்பும் உன்னோடு உறவு கொண்டது எனது அகஉணர்வை எனது காம உணர்வுடன் தொடர்புபடுத்தி என் இருத்தலை உணர்ந்து கொள்ள முடிந்ததால் நான் சந்தோசமடைந்தேன். இல்லாவிடில் எனக்கே என்னில் சந்தேகம் வந்து என்னை என் தேகத்தில் என் பெண்மையை தேடியிருப்பேன். கிறிஸ்ரியன் மேல் உள்ள ஆத்திரத்தால் பழிவாங்கும் உணர்வுடன் என்னால் உன்னோடு உடல் உறவை சந்தோசமாக அனுபவிக்க முடிந்தது. இதனால் எனது உடல் வலி கூட தொலைந்து விட்டது. நித்திய காமத்தில் இருக்கும் ஆண் வர்க்கத்தால் என் தேடலைப் புரிந்து கொள்ள முடியாது. ஒவ்வொரு ஆணும் தனது மனைவியை விட்டு வேறு பெண்ணுடன் உடல் உறவு கொள்ளும் போது தன் மனைவின் அகத்தை, பெண்மையை அவமானப்படுத்தி அலையவைக்கிறான். இது பெண்களுக்கும் பொருந்தும் என்றாலும் பெண்கள் இதை இலகுவாக செய்வதில்லை. ஆணோ மலசலம் கழிப்பது போல் இலகுவாக செய்கிறான். நான் இந்த நிலைக்கு கிரிஸ்றியனால் தள்ளப்பட்டேன். சிவா என்னால் உனக்கு எந்த பிரச்சினையும் வராது. உனது நட்பையும் உனது உதவியையும் நான் மறக்கமாட்டேன்'. சுந்தரம்பிள்ளையின் உச்சியில் முத்தமிட்டாள்.

அவுஸ்திரேலியப் பாலைவனத்தில் வாழும் காலா என்ற கிளி போன்ற பறவை நூறு கிலோ மீட்டரில் சூறாவளி அடிக்கும்போது அந்த சூறாவளியின் மத்தியில் பறந்து அடிபட்டு கீழே காயத்துடன்

விழுமாம். அந்தகாயத்தால் ஏற்படும் வலியின் மூலம் தான் உயிர் வாழ்வதை உறுதிப்படுத்தும் என எங்கோ ஒரு புத்தகத்தில் படித்த சம்பவத்தை உறுதிப்படுத்துவது போல் இருந்தது அவளது வார்த்தைகள். இவள் தனது காயத்திற்கு புதுவிதமாக மருந்து தேடுகிறாள் என்பது மட்டும் புரிந்தது.

அவள் கூறியது போல் மனசாட்சி என்பது நாம் எமது சூழலுக்கு ஏற்ப வாழ்வதற்காக மனதில் உருவாக்கி கொள்ளும் பதிவு. அதுவும் காலம் இடம் என வேறுபடுகிறது ஒவ்வொருவரது மனசாட்சியும் வித்தியாசமானது மட்டுமல்ல ஒன்றிற்கு ஒன்று தொடர்பு இல்லாத இருண்ட குகைகள் போன்றது. இவளது மன உணர்வு அவள் வாழ்ந்து வளர்ந்த கலாச்சாரத்துக்கும் வாழ்ந்த சூழலுக்கும் ஏற்ப அவளிடம் உருவாகியுள்ளது. கிரிஸ்ரியனோடு அவள் வாழ்ந்த குடும்ப வாழ்வில் தன் இருத்தலை அடிக்கடி தொலைத்துவிட்டு விளையாட்டு பொருளை தேடும் குழந்தை போல் தேடுகிறாள். ஒவ்வொரு பெண்ணும் திருமணத்திற்காக தன்னைத் தொலைப்பதை வழக்கமாக செய்து வரும்போது, ஷரனுக்கு இயல்பாக அதை செய்ய முடியாதவளாக இருப்பதால் வெளியுலகில் சிறு காரியங்களூடாக, அவைமற்றவர்களுக்கு சிரிப்புக்கிடமாக இருந்தபோதிலும், அவை மூலம் தன்னை வெளிக்காட்டுகிறள். அவளது அந்தரங்க உணர்வுகளை தன்னால் எட்டியும் பார்க்க இயலாத நிலையில் எது சரியானது எது தவறானது என்பதைத் தீர்மானிப்பது கடினமானது. நடந்த விடயத்தை மறக்கவும் முடியாமல் நினைக்கவும் முடியாமல் சுந்தரம்பிள்ளையின் மிகுதி இரவு கழிந்தது.

காலையில் சிட்னியில் இருந்து விமானமேறி மெல்பனில் அவளது வீட்டிற்கு வாடகைக்காரில் அவளைக் கொண்டு சென்று விட்டபோது ‘இதை எவரிடத்திலும் சொல்லாதே’ எனச் சொல்லி காமராவில் தனது படங்கள் இருந்த சிப்ஸ்ஸை வாங்கிக் கொண்டாள்.

## 28

பத்து மில்லியன் டொலர் சொத்துக்கு உரிமையாளராகிய பின், இலண்டனில் ஒரு மிருக வைத்தியசாலையில் நியமனம் பெற்றுக்கொண்டு செல்லும்போது ‘எப்பொழுதாவது இங்கிலாந்துக்கு வந்தால் என்னைப் பார்’ எனச் சொல்லி விட்டு ஷரன் தனது இண்டனில் வதியும் சிறிய தாயாரின் விலாசம் கொண்ட காகிதத்தை மெல்பன் விமான நிலையத்தில் வைத்து சுந்தரம்பிள்ளையிடம் கொடுத்தாள்.

எங்கோ கடலுக்கு அடியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் பல்லாயிரம் கிலோமீட்டரில் உள்ளவர்களைத் தாக்கும் சுனாமி போல் இவள் செய்த காரியம் வேறு எந்த சராசரி பெண்ணாலும் செய்து முடித்திருக்கமுடியாது. அப்படி செய்து முடித்திருந்தாலும் இப்படி வெளிநாடு போக முடியாது. இவள் குற்றத்தின் தண்டனையில் இருந்து தப்பியதற்கு சிட்னி ஹோட்டலில் அவளோடு தான் தங்கியதுதான் காரணம் என்பது இன்னமும் சுந்தரம்பிள்ளையால் நம்ப முடியவில்லை.

அன்று நடந்த விடயங்கள் தற்செயலானவையா? இல்லை இவளால் திட்டமிடப்பட்டதா? அல்லது சந்தரப்பத்திற்கு ஏற்றபடி சமயோசிதமாக நடந்து கொண்டு தன்னைப் பாதுகாத்தாளா?

பலமுறை கேட்டாலும் விடைதெரியாத விடுகதையாக அவள் இருந்தாள்.

ஆரம்ப காலங்களில் இருந்து இன்றுவரை அவிழ்க்க முடியாத புதிராக மட்டும் அல்லாது தான் அவளுடன் சேர்ந்து பிணைந்து விடப்பட்டதாக சுந்தரம்பிள்ளை நம்பினான். அவளில் விருப்பம் இல்லை என விலகிவிட முடியாது. அதேவேளையில் விரும்பியும் உண்மையான நட்புடன் இருக்க முடியாத தன்மை இவளுடன் தொடர்ந்து வருகிறது. வைத்தியசாலையில் மற்ற எவரும்

ஷரனுடன் எந்த தொடர்பும் வைத்துக்கொள்ளாத நிலையில் தான் ஒருவனாக அவள் நாட்டை விட்டுச் செல்லும் வரையும் அவளுக்கு உதவியாக இருந்தது மனிதாபிமானமான நட்பா இல்லை காமம் கலந்த உணர்வின் வெளிப்படுத்தலா என அகத்தில் அடிக்கடி வினாவிக்கொண்டு விடையற்றவனாக சுந்தரம்பிள்ளை இருந்தான்.

அவள் விமானத்தளத்தின் கஷ்டம் பகுதியில் சென்று ஒரு கையில் பெட்டியும் மறுகையில் மாக்கசை பிடித்தபடியும் செல்லும் அவளது உருவம் விமான நிலையத்தின் கதவுகளுக்கு அப்பால் மறையும்வரை அங்கு நின்றான். உருவம் மறைந்தபின் அந்தக் காட்சி, நிழலாக அழுத்தமாக அவனது நெஞ்சில் செதுக்கப்பட்டது. உடனே விமான நிலையத்தை விட்டு போக விரும்பினாலும் முடியவில்லை. சில நிமிடத்தில் அருகே உள்ள கபேயில் இருந்து காப்பியை அருந்தியபடி கடந்த சில மாதங்களில் நடந்த விடயங்களை அசை போட்டபோது அவை சினிமாவில் அல்லது ஒரு சீரியலில் வருவது போன்ற சம்பவங்களாக இருந்தன.

சிட்னியில் இருந்து வந்தபின் வைத்தியசாலைக்கு வராமல் தனது இராஜினாமா கடிதத்தை அனுப்பியிருந்தாள் என்ற விடயம் வைத்தியசாலையில் பேசப்பட்டது. அது சம்பந்தமாக ஷரனைத் தொடர்பு கொண்டு பேச வேண்டும் என நினைத்தாலும்,அது நடக்கவில்லை. சுந்தரம்பிள்ளையின் தயக்கத்துக்குப் பல காரணங்கள் அவற்றில் முக்கியமானது கணவன் - மனைவி சண்டையில் மாட்டிக் கொண்டது மட்டுமல்லாமல் அவளுடன் உடலுறவு கொண்டு இன்னும் விடயத்தை சிக்கலாக்கியது. ஷரனுக்கு கிறிஸ்ரியன் அடித்த விடயத்தைச் சொல்லி அவளுக்கு உதவிய விடயத்தை சாருலதாவுக்கு சொல்லியபடியால் மேற் கொண்டு விடயங்கள் சிக்கலாகுவது தவிர்க்கப்பட்டது. சாருலதாவுக்கு தன் கணவன் இரவில் அடிபட்ட பெண்ணுடன் தங்கியிருந்த விடயம் தெரிந்தாலும் வித்தியாசமாக கேட்கவோ,சந்தேகப்பட்டு நினைக்கவோ இல்லை என்பது அவளது நடத்தையில் தெரிந்தது. அதேவேளையில் சுந்தரம்பிள்ளைக்கு ஷரனோடு இருந்த அந்த இரவு பல நாட்களாக மனத்திரையில் அடிக்கடி சினிமாவாக ஓடியது.

இரண்டு கிழமையில் ஒரு நாள் வீட்டுக்குத் தொலைபேசி அழைப்பு வந்தது. அந்தத் தொலைபேசியில் பேசியவர் மெல்பனில் ஒரு பெரிய லோயர்களின் கம்பனியின் பெயரைச் சொல்லி அங்கு வேலைசெய்வதாகவும், தனது பெயர் நிக் லோசன்

என அறிமுகப்படுத்தி விட்டு தான் டொக்டர் ஷரன் பேட்டின் வழக்கறிஞர் எனக்கூறினார்.

ஷரனுக்கு மணவிலக்கு ஏற்பாடு செய்யும் வழக்கறிஞராக இருக்கவேண்டும். சிட்னியில் அவளை ஒரு கொடிய மிருகத்தை அடிப்பதிலும் பார்க்கக் குரூரமாக அடித்தவனுடன் தொடர்ந்து ஒன்றாக குடும்பம் நடத்த விரும்பாமல் மணப்பிரிவிற்கு ஏற்பாடு செய்திருக்க வேண்டும். இதில் சிட்னியில் அடித்ததற்கு சாட்சி சொல்ல அழைக்கக் கூடும் என நினைத்த சுந்தரம்பிள்ளைக்கு அந்த வழக்கறிஞரின் அடுத்த வசனம் உடலை வியர்க்கப் பண்ணியது. கற்பனைக்கப்பாற்பட்ட அதிர்ச்சியைக் கொடுத்து உயிரை உடலில் இருந்து வெளியே இழுத்து மயக்க நிலைக்கு அழைத்து செல்வதுபோல் இருந்தது.

‘ஷரன் தனது கணவனைக் கொன்றதாக கூறும் வழக்கில் ஆஜராகும் பரிஸ்டருக்கு நான் உதவி செய்கிறேன். அடுத்த வெள்ளிக்கிழமை அந்த வழக்கை மெல்பன் நீதிமன்றத்தில் எடுக்கிறார்கள். உங்களைச் சாட்சிக்கு வரும்படி அழைக்க விரும்புகிறோம்’.

வார்த்தைகள் வெளி வரமறுத்ததால் சிறிது நேர மவுனத்தின் பின்பு சுதாரித்துக் கொண்டான்.

‘மன்னிக்கவும்’

‘பரவாயில்லை. இப்பொழுதுதான் கேள்விப்படுகிறீர்கள் என நினைக்கிறேன்’

‘உண்மைதான்’

‘எல்லா பத்திரிகை, தொலைக்காட்சியிலும் வந்தது. உங்களுக்குத் தெரியும் என்பதால் நேரடியாக விடயத்திற்கு வந்தேன்’

‘எனக்கு இந்தக் கொலையை பற்றி எதுவும் தெரியாதே. என்னால் என்ன சொல்லமுடியும்?’

‘சிட்னியில் ஹோட்டலில் அடித்தது சம்பந்தமாக மட்டும்தான் உங்களிடம் கேட்கப்படும்’.

‘நான் வந்து அதைக் கூறமுடியும்’

‘வெள்ளிக்கிழமை பத்துமணிக்கு வழக்கு மெல்பன் நீதிமன்றத்தில் தொடங்குகிறது. அதைபற்றிப் பேசுவதற்கு ஒன்பது மணியளவில் உங்களைச் சந்திக்க விரும்புகிறோம்’.

அவரது தகவலின்படி சிட்னியில் இருந்துவந்த சில நாட்களில் தகப்பனின் வேட்டைத் துப்பக்கியால் கிறிஸ்ரியனை சுட்டுவிட்டு பொலிசில் சரணடைகிறாள். அந்த வழக்கில் சிட்னி ஹோட்டலில் எடுத்த படங்கள் முக்கிய சாட்சியாகின்றன.

மூன்று நாட்கள் தொடர்ச்சியாக வேலைக்குப் போகவில்லை என்பதால் நடந்த விடயங்கள் சுந்தரம்பிள்ளைக்குத் தெரியாமல் போய்விட்டது. இப்படியான விடயங்களை மணிக்கு நான்கு தடவை சொல்லும் வானொலி, தொலைக்காட்சி,பத்திரிகையில் இருந்தும் எப்படி தவறவிட்டிருக்க முடியும் என எண்ணியபடி வைத்தியசாலக்குத் தொலைபேசி எடுத்த போது எல்லோரும் பிசியாக இருப்பதால் நேரே டொக்டர் ஆதருக்கு தொடர்பு கிடைத்தது.

‘சிவா மிகவும் பாரதூரமான விடயம் ஒன்று மூன்று நாட்களுக்கு முன்பு நடந்து விட்டது. ஷரன் துப்பாக்கியால் கணவனைக் கொலை செய்து விட்டதாக நாங்கள் கேள்விப்பட்டோம்.தற்பொழுது பொலிஸ் ரிமாண்டில் இருப்பதாக தகவல் கிடைத்தது’ என மிக மனவருத்தத்துடன் கூறினார்.

அந்த வழக்கில் சாட்சியாக அழைக்கப்பட்டதையும் அத்துடன் சிட்னி ஹோட்டலில் நடந்ததையும் சுந்தரம்பிள்ளை சொன்னான்.

‘அப்பொழுது பொலிசுக்குப் போய் இருந்தால் இந்த கொலை தவிர்க்கப்பட்டிருக்கலாம்’

‘பலமுறை வற்புறுத்தியும் ஷரன் கேட்கவில்லை. காயங்களுக்கு டாக்டரை பார்க்கும்படி கேட்டபோது மறுத்துவிட்டாள். அந்த விடயத்தை எவரிடமும் சொல்ல வேண்டாம் என்றதால் நான் அதைப் பற்றி எவரிடமும் கூறவில்லை. அன்று இரவு முழுவதும் அவனைக் கொலை செய்வேன் எனப் பல முறை கூறினாள். அது அவன் மிருகத்தனமாக அடித்ததில் ஏற்பட்ட வலியால் சொல்லும் வார்த்தைகள் என நினைத்தேன்’.

‘வைத்தியசாலைக்கு ஏற்கனவே இராஜினாமா கடிதத்தை அனுப்பியதால் எங்களுக்கும் எதுவும் தொடர்பு இருக்கவில்லை,

அதிலும் தனிப்பட்ட காரணம் என கடிதத்தில் எழுதி இருந்ததால் எதையும் அனுமானிக்கவும் முடியவில்லை'.

'நான் கேள்விப்பட்டது மற்றும் புரிந்து கொண்டதன்படியும் கடந்த மூன்று வருடங்கள் அவளது திருமண வாழ்க்கை சீராக அமையவில்லை என்பது தெரிந்தது. அவளிடமிருந்து விவாகரத்துக்கான நடவடிக்கையைத்தான் எதிர்பார்த்தேன். ஆனால் இந்த முடிவை நான் கற்பனையிலும் நினைத்துப் பார்க்க முடியவில்லை' எனக்கூறிவிட்டு சுந்தரம்பிள்ளை தொலைபேசியை வைத்தான்.

□ □ □

இந்தக் காலத்தில் கொலிங்வூட் உணவு அருந்த மறுத்து வாந்தி எடுத்ததால் மீண்டும் தீவிர வைத்தியப் பிரிவில் சேர்க்கப்பட்டது. இரத்தப் பரிசோதனையில் சிறுநீரகம் முற்றாகப் பழுதாகிவிட்டது என்பதை இரத்த பரிசோதனை அறிக்கை காட்டியது. பட்டினியாக இருப்பதிலும் பார்க்க மரணபயம் பெரிதாக அலைக்கழித்தது. ஒவ்வொரு முறையும் சுந்தரம்பிள்ளை தீவிர சிகிச்சைப் பிரிவின் பக்கம் போன போது நடுங்கியபடி இருந்தது.

'எனது இறப்பை எப்பொழுது செய்யப் போகிறாய்? நான் ஒவ்வொரு கணமும் இறப்பதைப்போல் கனவு காணுகிறேன். அதில் பெரிய நாய்களெல்லாம் வந்து என்னைக் குதறுவதாகவும், எனது குடல் வெளியே வந்து இழுபடுவதாகவும் தெரிகிறது. ஒரு கருப்பு டொபமான் நாய் எனது கனவில் அடிக்கடி வருகிறது. அது என்னைப் பார்த்தபடி குரைத்துக் கொண்டிருக்கிறது. அதனது கருமையான கண்கள் இருளைத் துளைத்தபடி என்னை ஊடுருவி செல்கிறது. காதுகள் என்னைப் பார்க்கும் போது நேராக விறைத்தபடி நிற்கின்றன. அதனது உதடுகள் விலகும்போது கோரைப்பற்கள் சொல்லமுடியாத அளவு விகாரமாக இருக்கிறது' என நடுங்கியது.

'கொலிங்வூட் நீ அதிக நேரம் தூக்கத்தில் கழிப்பதால் மனிதரைப்போல் கனவுகள் காணுகிறாய். உனது வாழ்நாளில் இந்த வைத்தியசாலையில் பார்த்த விடயங்கள் இப்பொழுது ஆழ் மனதில் வந்து போகிறது. இவையெல்லாம் தொலைக்காட்சியில் வரும் விம்பங்கள் போன்றவையே. இவைகள் உண்மையல்ல. உன்னைக் கருணைக் கொலை செய்வதைப் பற்றி எல்லோரிடமும் நான் கலந்து ஆலோசிக்க வேண்டும். நீ இந்த வைத்தியசாலையில் வளர்ந்ததால் எல்லோருக்கும் உன்னைப் பற்றிய கரிசனம் உள்ளது. மற்றவர்கள்

உனக்கு விடை கொடுப்பதற்கு இரண்டு நாள் அவகாசம் கொடுக்க விரும்புகிறேன்.

‘டிராமாக்குயின் கணவனைக் கொலை செய்து விட்டாளா?. அவளுக்கு என்ன நடக்கும்?

‘மரணத்திற்கு இரண்டு நாள் அவகாசம் கொடுத்திருக்கும் நிலையில் உனக்கு இப்படியான ஊர்வம்பு தேவையாக இருக்கிறது. மனிதரில் இருந்து ஒரே ஒரு வித்தியாசம்,பயத்தில் நீ கடவுளை நோக்கி பிரார்த்திக்கவில்லை. அந்த கடவுள் என்ற கருத்தாக்கம் இந்த வைத்தியசாலையில் இல்லாததால் உனக்குப் புரியவில்லை. அதாவது கடவுளை அறியாத ஆதிகால மனிதர்களின் நிலையில் இருக்கிறாய். உனக்குக் கறுப்பு டோபமானில் ஏற்பட்ட மனப்பிராந்தியை இலகுவாக மனிதர்கள் கடவுளாக்கி வடிவம் கொடுத்திருப்பார்கள். நீ பேசுவது போல எழுதவும் முடிந்திருந்தால் டோபமானை கடவுளாக்காது விட்டாலும் காலனாக்கி விட்டிருப்பாய். அது சரி எல்லா நாய்களையும் விட்டு விட்டு டோபமானில் உனது கனவு ஏன் வந்தது?’

‘இந்த வைத்தியசாலைக்கு வருவதற்கு முன்னால் குட்டியாக இருந்த காலத்தில் நான் இருந்த வீட்டில் கறுத்த டோபமான் இருந்தது. என்னால் அந்த வீட்டின் பின்வளவிற்கு போய்வர முடியாது. வீட்டின் முன்பகுதியில்தான் எனது காலத்தை கடத்த வேண்டி இருந்தது. வீட்டின் வெளிவாசலில்தான் எனது சீவியம் நடந்தது. இந்த நிலையைச் சகிக்காமல் சில மாதங்களில் நான் அந்த வீட்டை விட்டு வெளியேறியதால் தெருவில் கண்டெடுத்த சிலரால் இங்கு கொண்டுவரப்பட்டேன்’.

‘உனது சிறு பருவத்துப் பயம் ஆழ்மனதில் பதிந்து இப்பொழுது கனவில் வருகிறது. பதினைந்து வருடங்கள் டொபமான் வாழ்ந்த சரித்திரம் இல்லை. நீ பார்த்த அந்த டொபமான் ஏற்கனவே இறந்திருக்கலாம்’ எனச் சொல்லிவிட்டு சுந்தரம்பிள்ளை கொலிங்வூட்டை கையில் எடுத்துக் கொண்டு வைத்தியசாலையின் கொரிடோர் வழியாகச் சென்றபோது ஆதர் எதிரே வந்தார்.

‘எப்படி இப்ப கொலிங்வூட் பாடு’ எனக் கேட்டபடி தோலை இழுத்து உடலின் நீர்த்தன்மையை பரிசோதித்தார்.

‘ம் பரவாயில்லை’. பசி எப்படி? உணவு ஏதாவது..’. கவலையுடன் ஆதர்.

‘இரண்டு நாட்களாக சாப்பாடு இல்லை. சேலையின் ஏற்றுவதால் உயிர் வாழ்கிறது. இதற்கு மேல் சாப்பிடாத கொலிங்வூட்டை வைத்திருப்பது காருண்ணியமானதாக எனக்குப் படவில்லை. நான் கருணைக்கொலை செய்வதற்கு உத்தேசித்துள்ளேன். மற்றவர்களிடம் அது பற்றிப் பேச நினைக்கிறேன்’

‘வைத்தியசாலையில் செல்லப்பிராணியாக விளையாடித் திரிந்த கொலிங்வூட் துன்பப்படக்கூடாது. என்னைப் பொறுத்தவரை அது சரிதான்’ என சொல்லிவிட்டு ஆதர் தன்னுடைய அறைக்குச் சென்றார்.

கொலிங்வூட் அப்பொழுது கண்ணை மூடியபடி தனக்குக் கேட்கவில்லை என்பது போல் பாவனையில் இருந்தது.

சுந்தரம்பிள்ளை தேநீர் அறைக்கு கொண்டுக் சென்றார். அங்கு எவரும் இருக்கவில்லை.

நீ அந்த டிராமா குயினது விடயத்தைச் சொல்லவில்லை?

‘உனது கேள்வி அமெரிக்காவில் கொலைத்தண்டனையில் இறக்க இருப்பவர்களினது கடைசி ஆசை போன்று இருக்கிறது. இறப்பை மூன்று விதமாக மனிதர்கள் எதிர் கொள்ளவார்கள் என படித்திருக்கிறேன். மரணத்திற்கு முன் வாழ்கையின் சகல சுகங்களையும் அனுபவித்து விட்டு போக நினைப்பார்கள். அழகிய பெண்கள், மதுவகைகள், நறுமணம்தரும் ரோஜாக்கள், காதுக்கு இனிய கானங்கள் என புலன்களின் தேவைகளை சுகிக்க வேண்டுமென நினைத்து, அதன் அடிப்படையில் இறக்கவிருப்பவனது கடைசி ஆசையை நிறைவேற்றுவது என்ற கருத்தாக்கம் வந்தது. இந்த ஆசை நிறைவேறாவிட்டால் ஆவியாக அலைவார்கள் என் உபகதைகளை சிருஷ்டித்தார்கள். இது ஆதிமனிதனிலிருந்து, தற்போது நவீன விஞ்ஞான காலம்வரை மாறாமல் இருக்கிறது. இதற்கப்பால் முதிர்ந்த வயதில் ஆசைகளைக் குறைத்து மெதுவாக அடங்கி உயிர்விடுவது, துள்ளிக் குதித்து பாய்ந்து கரைபுரண்டு ஓடும் நதி ஒன்றாகி, சலனமின்றிக் கடல் எது, நதி எது என அடையாளம் தெரியாமல் அமைதியாக ஒன்றாவது போன்றது. இதைத்தான் காடு செல்லுதல் துறவறம் பூணுதல், உணவை ஒறுத்து உபவாசம் மேற்கொள்ளல். வடக்கிருத்தல் என கிழக்கத்திய ஞானிகளும் துறவிகளும் வலியுறுத்தினார்கள். இதற்கு அப்பால் மூன்றாவதாக தாங்கள் வாழும்போது செய்த அறங்கள், செயல்பாடுகள் என்பன தாங்கள் விட்டுச் சென்றவை

தங்களது எச்சங்களாக வாழுகிறது என்ற நினப்பில் அரசர்களும் அறிஞர்களும் இறந்தார்கள். மொசப்பத்தேமிய இதிகாசத்தில் கில்கமெஸ் என்ற மன்னன் உயிர்காக்கும் செடி பறிபோனபின்பு தனது கோட்டை உறுதியான சுவர்கள் காலத்தை வெல்லும் என்று ஆறுதலடைந்தானாம். உன்னைப் பொறுத்தவரை உனது ஆசை இலகுவான முதல் வகையில் சேர்ந்தது போலத் தெரிகிறது. அதை நிறைவேற்றுவது எனது கடமை. ஷரனுக்கு மெல்பன் நீதிமன்றத்தில் வழக்கு நாளைக்கு நடக்கிறது. அதில் நான் அவளது சார்பாக வழக்கில் சாட்சி சொல்கிறேன். அதனால்தான் நாளை மறுதினம் உனது கருணைக்கொலைக்கு திகதி வைத்திருக்கிறேன்'.

'அதென்ன உனக்கு அவளில் அவ்வளவு ஈடுபாடு? அது எப்போது வந்தது?'

'மற்ற செல்லப்பிராணிகள் போலவா உன்னோடு பழகினேன்?. உனது அறிவும் உனது அகங்காரமும் எனக்கு ஆரம்பத்திலே பிடித்துவிட்டது. அதனால் உன்னோடு இவ்வளவு ஈடுபாடாக இருக்கிறேன். அது போலத்தான் அவளது அழகும் அறிவும். அத்துடன் கர்வத்துடன் தன்னை மட்டுமே முக்கியமானவளாக நினைப்பதும் அளவு கடந்து நேசிப்பதும், அதற்காக எதையும் செய்வதும் போன்ற அவளது செயல்கள் அவளை மற்றவர்களில் இருந்து பிரித்துக் காட்டுகிறது. அது அவளின் சிறப்பாக நினைப்பதால் அவளில் எனக்கு ஒரு ஈடுபாடு என வைத்துக்கொள்'.

அப்பொழுது போலினும் பூனைப் பகுதியில் வேலை பார்க்கும் மோரினும் வந்தார்கள்.

போலின் முகத்தில் சந்தோசம் தெரிந்தது.

'என்ன இவ்வளவு புன்னகை உன் முகத்தில் ?'

'விடயம் தெரியாதோ. போலினுக்குப் புதிய போய்பிரண்ட் உடன் நிச்சயதார்த்தம் நடந்து விட்டது' என்றார் மோரின்.

'காட்டு' என போலினது விரல்களை பிடித்த போது அந்தப் பழைய மோதிர அடையாளம் முற்றாக மறைந்து விட்டது. இப்பொழுது அந்த விரலை அழகிய வைர மோதிரம் அலங்கரித்தது.

'இந்த மோதிரத்திற்கு சொந்தக்கார அதிஸ்டசாலியான மனிதன் யார்?

'பிரான்சிஸ். கம்பியூட்டர் புரோகிராமர்' என்றாள்.

‘எனக்கு பிரான்சிசை நினைத்துப் பொறாமையாக இருந்தாலும் உன்னை நினைக்கச் சந்தோசமாக இருக்கிறது’ என்றபோது சுந்தரம்பிள்ளையின் தலையில் செல்லமாக அடித்தாள்.

‘மோரின், போலின், சனிக்கிழமை கொலிங்வூட் கருணைக் கொலை செய்யப்படுகிறது. உங்களது முத்தங்களையும், கட்டியணைப்புகளையும் கொடுப்பதற்கு அவகாசம் நாற்பத்தெட்டு மணிநேரங்கள் மட்டும்தான். அதற்கு மேல் தாங்காது’ என்றபோது கண்ணீருடன் கொலிங்வூட்டை தன்கையில் வாங்கி அதன் தலையில் உதட்டை பதித்து முத்தம் கொடுத்தபடி ‘எனது அன்புக்குரிய முதியவரே’ என மார்போடு அணைத்தாள்.

‘போலின், நான் நாளைக்கு ஷரனது வழக்கு விடயமாக மெல்பன் நீதிமன்றத்தில் இருப்பேன். நாளை கொலிங்வூட்டை கவனிப்பதுடன் இந்தக் கருணைக்கொலை விடயத்தை எல்லோருக்கும் அறிவித்துவிடு. விளம்பரப்பலகையில் ஒரு அறிவித்தலைப் போட்டு கடைசி மரியாதையை உயிரோடு இருக்கும்போது தெரிவிக்கச் சொல்லு. சாதாரண பூனைபோல் அல்ல. கொலிங்வூட்டால் எல்லாவற்றையும் தெளிவாகப் புரிந்து கொள்ளமுடியும்’.

‘ஷரனது வழக்கைப் பற்றி என்ன அறிந்தாய்? என மோரின் கேட்டாள்.

‘அந்த ஹோட்டலில் நடந்த விடயத்தை தவிர எனக்கு எதுவும் தெரியாது. அவளது வழக்கறிஞர் என்னைச் சாட்சியாக வரும்படி சொன்னது மட்டும்தான் இப்பொழுது தெரிந்த விடயம்’என அந்த விடயத்துக்கு சுந்தரம்பிள்ளையால் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

மோரின் ஊர்வம்புகள் பேசுவதில் கெட்டிக்காரி. வாய் கொடுத்தால் பலவிடயங்களைத் தெரிந்து கொள்வதில் சாமர்த்தியசாலி. இதுவரையும் சிவா நல்ல மனிதர். நல்ல வைத்தியர் என அவள் வைத்திருந்த அபிப்பிராயத்தைக் கெடுக்க விருப்பமில்லை.

□ □ □

**வ**ழக்கு நீதிமன்றத்திற்கு வந்த அன்று சுந்தரம்பிள்ளை மெல்பன் நீதிமன்றத்திற்கு அருகாமையில் உள்ள கபேக்கு ஏற்கனவே கூறியபடி சென்றபோது அங்கு நான்கு பேர் ஒன்றாக ஒரு மேசையில் இருந்தார்கள். அவர்களில் ஒருவர் ஷரனது பெண் பரிஸ்ரர். அவருக்கு உதவியாக நிக் லோசன் இருந்தார். இவர்களை விட மேலும் இரண்டு பெண்கள் மத்திய வயதினர். அவர்களை நிக்

லோசன் அறிமுகப்படுத்திய போது ஒருவர் அவுஸ்திரேலியாவின் திருமணமான பெண்கள் குடும்பங்களில் கணவர்களால் அடித்து துன்புறுத்தப்படுதலிலும், பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்படுவதிலும் ஆராய்ச்சி செய்து டொக்டர் பட்டம் பெற்று, இங்குள்ள பல்கலைக்கழகமொன்றில் பகுதி நேரமாக வேலை செய்பவர். மற்றப் பெண்மணி மனோவியாதி நிபுணர். இவர் விக்டோரிய சிறைகளில் வைக்கப்பட்ட பெண்கள் எதற்காக இந்த குற்றங்களில் ஈடுபட்டவர்கள் என்பதில் ஆராய்ச்சி செய்து டொக்டர் பட்டம் பெற்றவர். தற்போது சிறையில் உள்ளவர்கள் விடயமாக விக்ரோரிய அரசாங்கத்திற்கு ஆலோசனையாளர். இப்படியான மிகவும் பெரும்புள்ளிகள் ஷரனுக்கு சார்பாக வேலை செய்கிறார்கள். அந்தக் கபேயில் எப்படி ஷரனை விடுதலை செய்வது என்ற ஆலோசனைக் கூட்டத்தில் சுந்தரம்பிள்ளை, பெரிய சுறாக்கள் நடுவே சிறிய மீனாகத் தான் இருப்பதாக உணர்ந்தான். அவர்களது திட்டமிடப்பட்ட சட்டவாதம் - குடும்பத்தில் கணவனால் தொடர்ச்சியாக ஷரன்மீது நடந்த வன்முறையால் அவள் மனம் பாதிக்கப்பட்ட நிலையில் தனது பாதுகாப்புக்காக பாவிக்க நினைத்த துப்பாக்கி அவர்களுக்கு இடையில் நடந்த கைகலப்பில் வெடித்து விட்டது. சம்பவத்திற்கு நேரடியான சாட்சியம் எதுவும் இல்லை. வழக்கின் முடிவு சந்தர்ப்ப சாட்சியங்களில் மட்டுமே தங்கியுள்ளது. தொடர்ந்து உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் வன்முறைக்கு உட்பட்டிருப்பதால் நடந்த கைமோசக் கொலையாக இதை எடுத்துக் கொள்வதோடு இப்படியாகப் பாதிக்கப்படும் பெண்களின் நிலையில் ஷரனுக்கு வேறு பாதுகாப்பு இருக்கவில்லை என்பதாக இருந்தது.

பேசிக்கொண்டிருந்தபோது மத்திய வயதான பெண் கவலை தோய்ந்த முகத்துடன் அங்கு வந்தார். அவரை எல்லோருக்கும் நிக் லோசன்,ஷரனின் தாயார் நிக்கோலா பேட் என அறிமுகப்படுத்தினார். ஷரனிலும் பார்க்கச் சிறிது உயரம் குறைந்து, பருமனாக இருந்தார்.

பரிஸ்டர் தனது விளக்கத்தைத் தொடர்ந்தார்.

'ஏற்கனவே அடித்துத் துன்புறுத்தியதாக பொலிசில் கொடுத்த புகாரும் எங்களுக்குச் சாதகமாக இருக்கிறது. இன்றைக்கு நாங்கள் கொடுக்கும் ஆவணங்களைப் பார்ப்பதற்கு மட்டும் நேரம் நீதிபதிக்குச் சரியாக இருக்கும். விசாரணைகளை மேற்கொள்ள நேரம் இருக்காது'

பரிஸ்டர் பேசி முடிந்ததும் நிக் லோசன் 'நீங்கள் அந்த ஹோட்டலில் ஷரனை எடுத்த படங்கள் எங்களுக்கு இந்த வாதத்திற்கு பலமான சாட்சியமாகிறது'. எனச் சொன்னபோது எல்லோரும் சுந்தரம்பிள்ளையை நோக்கித் திரும்பினார்கள். அதுவரையும் சுந்தரம்பிள்ளையின் இருப்பு அங்கு முக்கியமாகக் கருதப்படவில்லை.

இந்தப் படங்களை எடுத்ததற்கு ஷரனே காரணம்.அவள் என்னை வற்புறுத்தி எடுக்க பண்ணினாள் என அத்தனை பேருக்கும் உடனே சொல்ல வேண்டும் போல் இருந்தது. ஆனால் சொல்ல முடியவில்லை.

இப்படி ஒரு வழக்கை அன்று அவள் எதிர்பார்த்து சாட்சியங்களைத் தயார் செய்தாளா? அவள் விரித்த வலையில் கிறிஸ்ரியன் மட்டுமல்ல, நானும் விழுந்தேனா?.

கேள்விகள்... ஆனால் பதில் இல்லாத கேள்விகள்.

மீண்டும் பரிஸ்டர் 'சிட்னியில் நடந்த விடயத்தை டொக்டரிடம் இருந்து ஒரு அறிக்கையாக எழுதினால் அதை நீதிபதிக்குக் கொடுக்கலாம். இதன் மூலம் டொக்டரை குறுக்கு விசாரணைக்கு வரவழைப்பது அவசியமற்றதாக்கலாம். மேலும் எங்கள் அதிஷ்டத்திற்கு பெண் நீதிபதியொருவர் வழக்கை எடுப்பதாக இருக்கிறது'.

உடனடியாக நிக் லோசன் தனது மடிக்கணனியை எடுத்துக் கொண்டு தூரத்தில் இருந்த மேசையை நோக்கிச் சென்றபோது அவரைச் சுந்தரம்பிள்ளை பின் தொடர்ந்தார்.

'ஒரு மணித்தியாலத்தியாலம்தான் நமக்கு இருக்கிறது. எனவே வேகமாக இதை எழுதி முடிக்க வேண்டும். நீங்கள் நடந்த விடயத்தைக் கூறுங்கள்' என்றார்.

சுந்தரம்பிள்ளை ஐந்து மணியில் இருந்து இரவு பத்து மணிவரையும் நடந்த விடயங்களை ஆதியோடந்தமாகக் கூறியபோது உடனுக்குடன் அதைத் தனது மடிக்கணனியில் பதிவு செய்தார். ஒரு விதத்தில் சுந்தரம்பிள்ளைக்கும் அது சரியாக இருந்தது. எழுதிய விடயத்தைச் சொல்லும்போது இலகுவாக இருக்கும். அதைவிடச் சினிமாவில் வந்த நீதிமன்றக் காட்சிகள் குறுக்கு விசாரணையை, கொலைக்களமாக நினைக்கவைத்தது.

கணனியில் டைப் அடித்து முடித்துவிட்டு அதைப் படித்துப் பார்க்கும்படி நிக் லோசன் கூறினார்.

பத்து மணிக்குச் சரியாக நீதிமன்றம் தொடங்கியது. பெண் நீதிபதி உள்ளே வந்து இருக்கையில் அமர்ந்தார். எல்லோரும் எழுந்து நின்றார்கள்.

சில நிமிடத்தின் பின்பு ஷரன் இரண்டு பெண்காவலர்களால் உள்ளே கொண்டுவரப்பட்டாள். சிறிது மெலிந்திருந்தாலும் முகத்தில் கடந்த காலங்களில் இருந்ததிலும் பார்க்கப் பிரகாசமாக இருந்தது. முகத்தில் எந்த ஒரு மேக்கப்பும் இன்றி இருக்கும் போது சில வருடங்கள் குறைந்தது போல் தோன்றினாள். கண்ணில் மட்டும் கர்வமான எள்ளல் வழமைபோல் தெரிந்தது.

குற்றவாளி என ஒத்துக் கொண்டதும் தன்னைத் தாக்க வந்தவேளை, தற்பாதுகாப்பிற்காக அந்தத் துப்பாக்கியை எடுத்தபோது அதைத் தன்னிடமிருந்து கிறிஸ்ரியன் பறிக்க முயன்றபோது வெடித்த ஒரே குண்டு தலையில் பாய்ந்துவிட்டது என ஷரனால் கூறப்பட்டது.

கிறிஸ்ரியன் கருப்பு பெல்ட் கராட்டி வீரர் என்பதால் அவரது கைகள் ஒவ்வொன்றும் ஆயுதம் ஒன்றிற்கு சமமானது என பரிஸ்டரால் நீதிமன்றத்திற்கு நினைவுறுத்தப்பட்டது.

ஷரனது பரிஸ்டரால் பல பத்திரங்களுடன் சிட்னி ஹோட்டலில் சுந்தரம்பிள்ளையால் எடுக்கப்பட்ட போட்டோக்கள் சமர்ப்பிக்கப்பட்டன. அன்று வழக்கு மீண்டும் ஒரு நாளுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

□ □ □

**கா**லை பத்து மணியளவில் ஐம்பது பேர் வேலை செய்யும் வைத்தியசாலை வழக்கத்திற்கு மாறாக அமைதியாகிவிட்டது. இப்படியான அமைதி இந்த வைத்தியசாலையில் இருப்பது வழக்கமானதல்ல. மனிதர்களும் அவர்களது செல்லப்பிராணிகளும் வேறு திசைகளில் நடமாடும் போது செல்லப்பிராணிகள் குரைத்தோ சீறியோ தங்களது இருப்பை வெளிப்படுத்தும். அவற்றைத் தவிர்த்து வைத்தியர்கள், நேர்சுகள் என்போர் அங்கும் இங்கும் அமைதியைத் தொலைத்து விட்டு அலையும் இடமான வைத்தியசாலையின் கொரிடோர், இன்று நடப்பவர்களின் காலடியோசையை தெளிவாக கேட்கும் மயானத்தின் அமைதியை தன்வயப்படுத்தியதாக இருந்தது.

சுந்தரம்பிள்ளைக்கு இது புதுமையாகவிருந்தது. காரணம் புரியவில்லை.

நாய்களின் கூடுகளில் வாட் ரவுண்டை முடித்துவிட்டு பூனைப்பகுதியில் கொலிங்வூட்டின் இறுதி அத்தியாயத்தை ஏற்கனவே தீர்மானித்தபடி முடித்து வைப்போமெனச் சென்ற போது அங்கு வைத்தியசாலையில் வேலை செய்பவர்கள் எல்லோரும் கொலிங்வூட்டைச் சுற்றி கூடி நின்றனர். கொலிங்வூட் அங்கிருந்த பெரிய மேசையில் வெள்ளைத்துணியில் படுத்திருந்தது. தலை கீழே தொங்கிக் கொண்டிருந்ததால் கொலிங்வூட்டின் மூக்கு, மேசைத் துணியை தொட்டுக் கொண்டிருந்தது. மிருதுவான சாம்பல் நிறமான உரோமங்கள் மென்மையற்று இன்று முட்கள் போல் கண்ணுக்குத் தெரிந்தன. சிறுநீரக வியாதியால் இரத்தத்தில் உள்ள உப்புச் சக்தி வெளியேறி விடுவதால் தசைநார்களின் இயக்கத்துக்கு உப்பின் பற்றாக்குறை ஏற்பட்டு தசைகளின் வலிமை குறைந்து விடுகிறது. கழுத்தை நிமிர்த்தி வைப்பதற்குக் கழுத்துத் தசைகள் ஒத்துழைக்க மறுத்துவிடுவதால் பலமற்று விடுகிறது. உடலின் நீர்த்தன்மை இழப்பதால் தோலின் மிருவான தன்மை குறைந்து விடுகிறது.

மொத்த வைத்தியசாலையே ஒன்றாக வந்து இறுதியாக விடை கொடுத்து அனுப்பக் காத்து நிற்பது கொலிங்வூட்டைப் பொறுத்த வரையில் பதவியில் இருக்கும் போது இறந்த அமெரிக்க ஜனாதிபதிக்குக் கொடுக்கும் ராஜாங்க மரியாதை போன்றது. ஏற்கனவே ஒரு செப்புத்தட்டு செய்யப்பட்டு அதில் கொலிங்வூட்டின் பெயரும் பிறந்த திகதி ஒரு குத்து மதிப்பாக எழுதப்பட்டிருந்தது. அந்தத் தட்டும் மேசையில் வைக்கப்பட்டு இருந்தது. அதன்படி கொலிங்வூட்டுக்குப் பதினைந்து வயதாகிறது.

எல்லோரும் கருணைக்கொலையை செய்வதற்கு சுந்தரம்பிள்ளையை எதிர்பார்த்துக் கொண்டு நின்றனர்.

சுந்தரம்பிள்ளையின் மனநிலை வேறு ஒரு சம்பவத்தை நினைத்துப் பார்க்க வைத்தது. அவுஸ்திரேலியாவில் கடைசியாகத் தூக்குத்தண்டனைக் கைதியின் கழுத்தில் சுருக்கு மாட்டிய பென்றிஜ் சிறை ஊழியரின் நிலையைப் போன்ற நிலைக்குத் தான் தள்ளப்பட்டதாக நினைக்க வைத்தது. அவுஸ்திரேலியாவில் கடைசியாக நிறைவேற்றப்பட்ட மரணதண்டனை 1967ம் ஆண்டுதான் நடந்தது. தப்பி ஓடும் போது சிறைக்காவலர் ஒருவரைக் கொலை செய்ததற்காக தூக்குக் கயிற்றில் தொங்கி இறக்கும் மரணதண்டனை

டொனால்ட் றயனுக்கு விதிக்கப்பட்டது. அந்த தூக்குத் தண்டனை நடந்த பென்றிஜ் சிறைச்சாலைக்கு குடும்பத்துடன் ஒரு நாள் உல்லாசப்பயணம் சென்றிருந்தான் அங்கு அந்த தூக்குகயிற்றின் நீளம் கூடினால் கழுத்தெலும்பு உடனே உடையாது. மரணம் மெதுவாகத்தான் நடைபெறும். அதேபோல் நீளம் குறைந்தால் கழுத்தெலும்பு உடைவதற்குப் பதிலாக சுவாசக்குழாய் நசிந்து மூச்சுத் திணறி அதன் மூலம் இறப்பதற்கு அதிக நேரம் எடுக்கும். மூச்சு திணறும்போது மலம் சலம் வெளியேறி அசுத்தமாகும் என அந்தப்பகுதியில் நின்ற ஒரு இளைஞன் தெரிவித்தான்.

தனது மரணத்தை விரைவாக முடித்துவிடு என கொலிங்வூட்டும் கேட்டிருந்ததால் அந்தத் தூக்குக் கயிற்றின் நீளம் பற்றிய விளக்கம் மனதில் நிழலாடியது. இங்கேயும் ஒரு கொலைகாரராக பச்சைத்திரவத்தை இரத்தக் குழாயில் ஏற்றும்போது கொலிங்வூட்டின் இரத்த நாளத்தின் விட்டத்திற்கு ஏற்ப ஊசியின் நீளம் உள்விட்டம் இருக்கவேண்டும். வயது கூடி முதுமை அடைந்ததால் இரத்த ஓட்டம் வேகம் குறைந்துவிடுவதால் ஏற்றிய திரவம் மூளைக்கு செல்ல சிறிது நேரம் எடுக்கும். அந்த இடைவெளியில் சிறிதளவு திரவத்தால் வலிப்பு வந்தால் மலம் சலம் வெளியேறிவிடும். ஒரே நேரத்தில் மரணத்தை ஏற்படுத்தும் அளவு பச்சைத்திரவம் உள்ளே செல்லவேண்டும். வேலையைச் செய்யும் போது அதை முடிந்தவரை சரியாகச் செய்யவேண்டும் என்பதால் சுந்தரம்பிள்ளை அந்த ஊசியோடு அருகில் சென்றபோது இதுவரையில் மயக்கத்தில் இருந்தது போல் படுத்திருந்த கொலிங்வூட்டை மோறின் கையில் எடுத்தாள்.

சுந்தரம்பிள்ளை கொலிங்வூட்டின் முகக்தருகே சென்று கேட்டான்.

கொலிங்வூட், உனது கடைசி ஆசை என்ன?.

சுந்தரம்பிள்ளையைக் கூடி இருந்தவர்கள் வியப்புடன் பார்த்தார்கள்.

‘டிராமா குயினுக்கும் உனக்கும் ஏதாவது தொடர்பு இருந்ததா?

‘இருந்தது. அது வைத்தியர் போன்ற தொடர்பு’

‘எனக்குப் புரிந்துவிட்டது. ஒழுங்காக என்னைக் கருணைக்கொலை செய்’

ஏற்கனவே முன்காலில் மயிர்கள் வழிக்கப்பட்டு சேலையின் குழாய் பொருத்தி இருந்ததால் ஆரம்பத்தில் நினைத்தது போல் நேரடியாக ஊசியை ஏற்றவேண்டி இருக்கவில்லை. இலகுவாக அந்த குழாயூடாக பச்சைத்திரவம் சென்றதும். கொலிங்வூட் கண நேரத்தில் மோறினின் கையில் சடலமாகியது.

□ □ □

ஷரனது வழக்கு மேலும் சிலதினங்கள் நடந்த போதும் சுந்தரம்பிள்ளை நீதிமன்றத்திற்கு செல்லவேண்டி இருக்கவில்லை. எழுதிய அறிக்கை மட்டும் போதுமானதாக இருந்தது என நிக் லோசன் கூறி இருந்தார். அதன் பின்பு ஷரனைப் பற்றிய விடயங்கள் பத்திரிகை, தொலைக்காட்சி வாயிலாக மட்டும் தெரிந்து கொண்டான். அவள் விடுதலையாகி ஆறுமாதத்தில் தொலைபேசியில் வீட்டுக்கு அழைத்து சுந்தரம்பிள்ளைக்கு நன்றி சொல்லி விட்டு இங்கிலாந்து போவதாகவும் விமான நிலையத்திற்கு வரமுடியுமா எனவும் கேட்டாள்.

அதே குரல். அதே ஏற்ற இறக்கம். காந்தமாக இருந்தது. மறுக்க முடியவில்லை.

□ □ □

ஒருவிதத்தில் இந்த வைத்தியசாலையில் வேலை தொடங்கிய ஆரம்பகாலத்தில் ரிமதி பாத்தோலியசை வில்லனாக அடையாளம் காணமுடிந்தது.அப்பொழுது தர்மத்திற்கும் அதர்மத்திற்கும் நடக்கும் போராட்டம் போன்று இருந்தது. இப்போது நடந்த கதையில் ஷரனது பாத்திரம் என்ன? தனது பாத்திரம் என்ன என்ற சுந்தரம்பிள்ளை கேள்வியுடன் விமான நிலையத்தை விட்டு வெளியேறியபோது ஏதோ ஒரு விமானம் மேலெழும் இரைச்சல் கேட்டது.

# பின்னுரை

## கருணாகரன்

“அசோகனின் வைத்தியசாலை“ என்ற புதிய நாவல் நடேசனுடைய இணையத்தில் பிரசுரமாவதற்கு முன்பு, முழுமையாக வாசிக்கக் கிடைத்தது. புலம்பெயர் சூழலிலிருந்து புதிதாக ஏதாவது வரும் என்று எதிர்பார்க்கப்பட்டதற்கு ஏற்றமாதிரி, வேறுபட்ட கதைக் களத்தையும் நிகழ்ச்சிகளையும் பாத்திரங்களையும் கருவையும் கொண்டு தமிழில் எழுதப்பட்டிருக்கிறது.

இந்த நாவல் அவுஸ்ரேலியாவில் ஒரு மிருக வைத்தியசாலைச் சூழலில் மையப்படுத்தப்பட்டுள்ளது. சிகிச்சை பெறும் விலங்குகளைப் பராமரிப்பதற்கான விடுதிகள், அதற்குரிய ஆட்கள், பாதுகாப்பு ஏற்பாடுகள், மருத்துவ நிபுணர்கள், நிர்வாக அமைப்பு, வைத்தியசாலையை இயக்கும் ஆலோசனைச் சபை போன்றவற்றைக் கொண்டது அங்குள்ள மிருக வைத்தியசாலை. இத்தகையை மிருக வைத்தியசாலைகளின் முன்னோடியாக அசோகச் சக்கரவர்த்தியே இருந்திருக்கிறார் என வரலாற்றுச் சான்றுகளை முன்வைத்துக் கூறுகிறார் நடேசன்.

இந்த நாவலில் கிடைக்கின்ற அனுபவங்களின் சிறப்பு, மிருகங்களும் மனிதர்களும் இணைந்துள்ள புள்ளியே. விலங்குகளுக்கும் மனிதனுக்குமிடையிலான உறவென்பது நாகரிகத்துக்கு முற்பட்டது. காட்டு வாழ்க்கைக் காலத்திலிருந்து ஆரம்பமாகிய உறவு அது. எனினும் இன்றும் அது தொடருகிறது. மனிதர்கள் நகர்மயமாகி, அறிவுமயமாகி, விஞ்ஞானப் பொறிமுறைகளால் அவர்களுடைய வாழ்க்கை கட்டமைக்கப்பட்டிருந்தாலும் மனிதருக்கும் விலங்குகளுக்குமிடையிலான பிணைப்பும் உறவும் நீங்கி விடவில்லை. இதை நாவல் மிக நுட்பமாகத் தெளிவுறுத்துகிறது. இந்த வைத்தியசாலையில் உள்ள மனிதர்களையும் பிராணிகளையும் இந்தத் தரப்புகளுக்கிடையில் நிகழ்கின்ற சம்பவங்களையும் அங்கே

உருவாகின்ற பிரச்சினைகளையும் அவற்றின் மத்தியில் நிகழ்ந்து கொண்டிருக்கிற வாழ்க்கையையும் அடிப்படையாக்கி இதைச் செய்துள்ளார் நடேசன். நடேசனின் படிப்பும் தொழில்முறையும் மிருக வைத்தியத்துறையில் இருப்பது இதைச் சிறப்பாகச் செய்வதற்கு அவருக்கு உதவியுள்ளது. தமிழர்கள் இதுவரையில் அறிந்திராத ஒரு களமும் வாழ்க்கையும் இதிலுண்டு. இந்தச் சிறப்புக்காகவே இந்த நாவல் வரவேற்பைப் பெறும்.

இந்த மருத்துவமனையில் சிகிச்சை பெறும் விலங்குகள் பெரும்பாலும் நாய்களும் பூனைகளுமே. இவை செல்லப்பிராணிகள். ஆனால், இந்தப் பிராணிகளை வளர்க்கின்ற சில மனிதர்களும் ஒருவகையில் சிகிச்சைக்குரியவர்களாகவே உள்ளனர். மட்டுமல்ல, இந்த நாவலை வாசிக்கின்றவர்களிடமும் ஒரு வகையான சிகிச்சையையும் நடேசன் மேற்கொள்கிறார். முக்கியமாக ஈழத்தமிழ்ச் சமூகத்தினர் இன்று எதிர்கொண்டிருக்கின்ற மன நெருக்கடிகள் அரசியல் நெருக்கடி மற்றும் பண்பாட்டு நெருக்கடி சார்ந்தவை. இந்த நெருக்கடிகளை எப்படித் தீர்த்துக் கொள்ள முடியும் என்பதற்கு இந்த நாவலில் வருகின்ற பாத்திரங்களும் நிகழ்ச்சிகளும் வழிகாட்டிகளாக உள்ளன. அப்படிப்பார்த்தால் இது ஒரு மருத்துவ நாவலாகவும் உள்ளது.

வாழ்க்கை புதிய தளங்களில் அகலிக்கும்போதும் வேர்விடும்போதும் அதனுடைய வெளிப்பாடுகளும் வேறுபட்டு, புதிதாகவே அமையும். இதைச் சரியாக உணர்ந்துகொண்ட மனம் அதன் ருசியையும் தாகத்தையும் நெருக்கடியையும் துக்கத்தையும் சொல்லத் துடிக்கும். வழமை சார்ந்தோ, மீறியோ புனைவுகளை உண்டாக்க விரும்புவதற்குப் பதிலாக தான் உணர்ந்து கொண்டிருக்கும் புதிதுகளை உவந்தளிக்கவே விரும்பும். தன்னுடைய அறிதல்களையும் உணர்தல்களையும் அனுபவச் சாரத்தையும் பகிர்வதில் ஆவலுறும். இப்படிச் செய்யும்போது ஒரு புதிய படைப்பு உருவாகிறது அல்லது நிகழ்கிறது. இது இயல்பாக உருவாகிற ஒரு மீறல். இந்த எண்ணமே இங்கே நடேசனிடமும் உள்ளது.

நடேசன் இந்த நாவலை தமிழ்ச்சூழலுக்கு தந்திருப்பதே தான் உணர்ந்த புதிதுகளைப் பிறருக்கும் பரிமாற்றிக் கொள்ள வேண்டும் என்ற வேட்கையின் விளைவாகும். புதிய திணையில் பெறக்கூடிய ஒன்றை தன் வீடு கொண்டு சேர்க்கும் வேட்கை இது. “திக்கெட்டும்

செல்வீர், கலைச் செல்வங்கள் யாவும் கொண்டு வாரீர்" என்று பாரதி சொன்னதை நிஜமாக்குவதென்பது இப்படித்தான் போலும்.

இன்று தமிழரின் வாழ்க்கை புதிய புலங்களில் - புதிய திணைகளில் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. அண்மைய நூறு ஆண்டுகளில் தமிழ்ச் சமூகத்தில் ஏற்பட்டிருக்கும் திணை பெயர்வுகளும் அதனடியாக ஏற்பட்ட அனுபவக் கொதிப்புகளும் அதிகம். அதற்கு முன்னர் அயற் சூழலுக்குள் மட்டும் மட்டுப்பட்டிருந்த தமிழர் வாழ்க்கை, இன்று பிற கண்டங்களை நோக்கிப் பெயர்ந்து வேர்விட்டுள்ளது. ஆனால், பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே, மேற்குலகச் சமூகங்கள் பிற கண்டங்களில், பிற திணைகளில் வாழ்ந்த அனுபவத்தைக் கொண்டவையாக மாறிவிட்டன. அந்த அனுபவம் அவர்களை, அவர்களுடைய இயல்பினை, அவர்களுடைய கருத்துலகத்தை, அவர்களின் நிலைப்பாடுகளை, அவர்களுடைய மரபார்ந்த நடவடிக்கைகளை எல்லாம் மாற்றியமைத்தன. இதனால் அந்தச் சமூகங்கள் பன்மைத்துவத்திலும் சகிப்புணர்விலும் பரஸ்பர புரிந்துணர்விலும் ஜனநாயக அடிப்படைகளிலும் கணிசமான அளவுக்கு முன்னேறியுள்ளன. ஆதிக்க உணர்வு அவர்களிடத்தில் இன்னும் விலகாதிருந்தாலும் அதை அவர்கள் ஒரு விசக் காய்ச்சலைப் போல தீவிர நிலையில் பிரயோகிப்பதில்லை. பலவற்றுக்கும் இடமளிக்கும் மறுபார்வை, மாற்றபிப்பிராயம் போன்றவற்றுக்கு தாராளமாக வாய்ப்பளிக்கிறார்கள். இதன்மூலம் சமூக நெருக்கடிகளை முடிந்த அளவிற்குத் தணித்துக் கொள்கின்றனர். கூடவே மனிதர்களைப் பரஸ்பரம் மதிக்கின்ற நிலையிலும் வளர்ச்சியிலும் மேலோங்கியிருக்கிறார்கள்.

தமிழர்களுக்கு வெளிச் சூழல் மற்றும் வெளிப்பண்டாட்டு நேரடி அனுபவம் பெருந்திரளாக அண்மித்தே கிடைத்துள்ளது. எனவே அப்படி அமைந்திருக்கும் அவுஸ்திரேலிய வாழ்க்கையிலிருந்தும் தன்னுடைய மிருக வைத்திய அனுபவத்திலிருந்தும் தன்னுடைய கால அரசியல் நிலைமைகளிலிருந்தும் அல்லது இவற்றை மையப்படுத்திய வகையிலிருந்தும் இந்த நாவலைப் படைத்திருக்கிறார் நடேசன்.

யதார்த்தத்தை மையப்படுத்தி, அதை ஆதாரமாக்கியே "அசோகனின் வைத்தியசாலை" உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நாவல் பெரும்பான்மையான தமிழர்களின் மனநிலையில் அதிர்வை ஏற்படுத்தக் கூடியது. ஆகவே, பாரம்பரியங்களைச் சார்ந்து தங்களை உருவாக்கியிருப்போரின் சிந்தனை முறையிலும் நம்பிக்கையிலும் ஊடுருவி மின்சாரத்தைப் பாய்ச்சக்கூடிய ரசவாதத்தை நடேசன்

தன்னுடைய ஏனைய எழுத்துகளில் பிரயோகப் படுத்துவதைப் போல இந்த நாவலிலும் பயன்படுத்தியிருக்கிறார். வெள்ளையர்கள் செல்வாக்குச் செலுத்துகின்ற அவுஸ்திரேலியாவில் புலம்பெயர்ந்து வாழ முற்படுகின்ற படித்த ஈழத்தமிழர் ஒருவரின் வாழ்க்கையும் நம்பிக்கைகளும் அனுபவங்களும் அபிப்பிராயங்களும் எப்படி அமைகின்றன என்பது நாவலின் ஒரு மையம். இன்னொரு மையம் வெள்ளையர்களின் வாழ்க்கை. அவர்கள் எப்படி பொதுவெளியிலும் தனிவாழ்விலும் இயங்குகிறார்கள் என்பது. வேறொரு மையம் இந்த இரண்டு தரப்புகளும் ஒன்றிணைந்து வாழ்கின்ற, இயங்குகின்ற முறைமை.

புலம்பெயர் வாழ்வென்பது எளிதான ஒன்றல்ல. பழகிய ஒன்றுமல்ல. அது முற்றிலும் புதிய களத்தையும் நெருக்கடி நிறைந்த யதார்த்தத்தையும் உடையது. புதிய திணையொன்றில் வேர் கொள்ள எத்தனிப்பது, எத்தனிக்க வேண்டியது. அத்தகைய எத்தனிப்புகளையும் முயற்சிகளையும் மேற்கொண்டே லட்சக்கணக்கான தமிழர்கள் இன்று பல கண்டங்களிலும் வாழ்கின்றனர். நடைமுறை வாழ்க்கையை அவர்கள் நெகிழ்ச்சி நிறைந்த வழிமுறையில் அமைத்திருக்கின்றனர். ஆனால், தங்களுடைய அரசியல் அபிலாஷையையும் மனதில் உருவாக்கி வைத்திருக்கும் வாழ்க்கையையும் இதற்கு எதிர்நிலையில் - கடுமையான தீவிரத்தில் கொண்டிருக்கின்றனர். நடேசன் இதை மறுதலிக்கிறார். அவருக்கு வாழ்க்கை ஒரு கற்றுத்தரும் சிறந்த வழிகாட்டி. நடைமுறை வாழ்க்கையிலிருந்தும் தினசரி நிகழ்ச்சிகளின் எதிர்கொள்ளல்களிலிருந்தும் அனுபவங்களையும் அறிவையும் பெறுகிறார். எனவே தான் வாழ்கின்ற (புலம்பெயர்) சூழலின் அனுபவத்தையும் அறிதற் புலத்தையும் கொண்ட எழுத்தை அவர் அளிக்க முற்படுகிறார். இது புலம்பெயர் எழுத்தாளர் ஒருவரின் அவசியமான பணி எனக் கருதுகிறார்.

தமிழ்ச் சூழல் இன்னும் அணுகத் தயங்குகின்ற, மறைக்க முற்படுகிற, கூச்சமடைகின்ற அரசியல், பாலியல் விசயங்களையெல்லாம் நடேசன் மிக இயல்பாக, யதார்த்தமாகச் சொல்லிவிடுவது கவனத்திற்குரியது ஒன்று. எல்லாச் சமூகங்களிலும் அரசியல் உண்டு. எந்தத் தரப்பிடமும் ஆதிக்க உணர்விருக்கும். அல்லது சந்தர்ப்பங்களின்போது தங்கள் நலனை முதன்மைப்படுத்திக் கொள்ளும் வேட்கை இருக்கும். மனிதர்களிடையே முரண்பாடுகளும் அவற்றை விளங்கிக் கொண்டு தீர்க்கும் தரப்புகளும் அவற்றைப் பெருப்பித்து பிரச்சினைகளை வளர்க்கும் தரப்பும் இருந்தே தீரும்.

உலகமும் மனிதர்களும் இத்தகைய கலவையின் விளைவு என்பதே இந்த நாவலில் வரும் நாவலின் சாரம்.

ஒரு படைப்பானது தன்னுடைய உள்ளடக்கங்களில் பல்வேறு வகையான அனுபவத் தொகுதிகளையும் உணர்வாழங்களையும் அறிதல்களையும் உணர்த்துதல்களையும் கொண்டிருக்கும். அது காணுகின்ற, காட்டுகின்ற தரிசனங்கள், அளிக்கின்ற வியப்புகள் படைப்பின் கற்பனைத் திறனை வாசக மனதிலும் செறிவாக்கும். படைப்பின் வெற்றியை - அதனுடைய மறதியின்மையை அளிக்கின்ற விசயங்கள் இவைதான். வாசக மனதில் செறிவடைந்த தரிசனங்கள் பின்னர் ஒருபோதும் அழிவதில்லை. பதிலாக அந்தத் தரிசனங்கள் மேலும் பல புதிய தரிசனங்களை மனதில் உருவாக்குகின்றன. தரிசனங்களைக் காணும் வழிகளையும் விழிகளையும் உருவாக்கியும் விடுகின்றன. இத்தகைய தரிசனங்களை அளித்த படைப்பு பிறகு, நிலைபேறாக அந்த மனதில் தங்கிவிடுகிறது. அந்தப் படைப்பின் பாத்திரங்களும் அப்படி நிலைபேற்றைப் பெற்று விடுகின்றன. இங்கே வாசகமனம் தன்னுடைய ஆழ்நிலைகளில் கொள்ளக்கூடிய தரிசனங்களைச் சிறப்பாக உண்டாக்கியுள்ளார் நடேசன்.

கெட்டிதட்டிப்போன வாழ்க்கை முறையிலிருந்து, புதிய வாழ்க்கைக்கும் புதிய சிந்தனைக்கும் நகரத் தயாராகுங்கள். நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கான துணிச்சலும் மாற்றங்களுக்கான தயார்ப்படுத்தலும் நெகிழ்ச்சியிலிருந்தே ஏற்படவேண்டும் என்ற உளவியற் சிகிச்சையை, சிந்தனைச் சிகிச்சையை நடேசன் மேற்கொள்கிறார். குடும்ப வன்முறை என்பது ஒரு பெண்ணை எப்படியானவளாக மாற்றிக்கொள்ள வைக்கிறது என அவர் உணர வைப்பதன் மூலமாக குடும்பம் தொடர்பாகவும் பெண்கள் தொடர்பாகவும் சமூக நிலைப்பட்டு, உளவியல் நிலைப்பட்டுப் பேசுகிறார். பன்மைத்துவப் பண்பு இல்லையென்றால் இனிவரும் உலகில் வாழ்க்கை இல்லை என்பதெல்லாம் நாம் கவனிக்க வேண்டியவை.

சிந்தனையாலும் முயற்சியினாலும் அறிவைப் பயன்படுத்தும் முறைமையினாலும் மாற்றங்கள் உருவாகின்றன. பிரச்சினைகள் எந்தச் சூழலிலும் எந்தக் களத்திலும் இருக்கும், ஏற்படும். இன முரணும் பகையும் ஒதுக்குதல்களும் எங்குமுள்ளன. காழ்ப்பு என்பது பலவிதங்களில் பல இடங்களிலும் ஒரு அழிக்கவே முடியாத செடியாக பெருகிக் கொண்டிருக்கிறது. நெல்லிருப்பதைப் போல புல்லும் இருக்கவே செய்யும். புல்லைப் பற்றிச் சிந்திப்பதை விட

நெல்லைப் பற்றிச் சிந்தியுங்கள். புல்லையும் எப்படிப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று யோசியுங்கள். அதுதான் யதார்த்தம். அப்படித்தான் மனிதர்கள் யோசிக்க முடியும் என்று இந்த நாவலில் வருகின்ற பாத்திரங்கள் நமக்குச் சொல்கின்றன.

ஒரு மகத்தான படைப்பின் பண்பிற்கமைய எல்லாவற்றையும் வாசகரிற் தரிசனப்படுத்திச் சுய சிந்தனைக்கும் தரிசனத்திற்கும் இடமளித்துச் செல்கிறது நாவல். எத்தகைய அரசியல் நிர்ப்பந்தத்தையும் நிபந்தனையையும் அளிக்கவில்லை அது. அதிகம் பிரசங்கிப்பதை விடவும் செயலால், வாழும் முறையால் உணர்த்துவது சிறப்பாகும் என்பது நடேசனின் நம்பிக்கை.

பொதுவாகத் தமிழில் பேணப்பட்டுவரும் தமிழ்ச் சமூகம் பற்றிய புனித அடையாளங்களையும் இயல்புகளையும் "அசோகனின் வைத்தியசாலை" மறுக்கிறது. இதில் வருகின்ற தமிழ்ப் பாத்திரங்கள், தாங்கள் வாழ்கின்ற காலத்தின், சூழலின், நிலைமைகளின் தாற்பரியங்களை ஏற்றும் அனுசரித்தும், விலகியும் மறுதலித்தும் ஒத்தோடியும் வாழ்கின்றன. வாழ்க்கை என்பது எல்லாமும் இணைந்தது, எல்லாம் கலந்ததே. அதில் இனிப்பும் உண்டு. கசப்பும் உண்டு. உறைப்பும் புளிப்பும் உண்டு. எல்லாச் சுவையும் இல்லாத ஒரு வாழ்க்கை எங்குமில்லை. இதை ருஸிக்காத எந்தச் சமூகமும் இல்லை என்ற உண்மையை நடேசன் வலியுறுத்துகிறார். இதற்கு இந்த நாவலில் வரும் சுந்தரம்பிள்ளை என்ற பாத்திரம் நல்ல வகைமாதிரி. புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் சமகால உண்மைப் பிரதிநிதியாக இயங்குகிறார் சுந்தரம்பிள்ளை. சுந்தரம்பிள்ளை தான் வாழ்கின்ற அவுஸ்திரேலிய நிலப்பரப்பிலும் அங்குள்ள மேற்கு மயப்பட்ட சமூகத்திலும் பிற சமூகத்தவர்களை அதிகமாகக் கொண்ட தொழிலிடத்திலும் மையங்கொண்டு இயங்கும்போது கொள்ள வேண்டியிருக்கிற நெகழ்ச்சிகளும் கவனத்திற்குரியன.

சுந்தரம்பிள்ளை யதார்த்தமானவர். தமிழ்க் கதாநாயகப் புனிதப் பிம்பத்தின் நிழல் படாத - ஒளி பட்டுத் தெறிக்காத சாதாரணமான பாத்திரம். ஒளிவட்டங்கள் சூட்டப்படாத மனித இயக்கம். மனித இயல்பும், வாழ்க்கையின் சவால்களும் கலக்கின்ற போது விளைகின்ற வாழ்க்கையோடு இணைந்த பாத்திரம். ஒரு புனைவின் சிறப்பு இங்கேதான் மதிப்பைப் பெறுகிறது. யதார்த்தமான ஒன்றே உண்மைக்கு நெருக்கமான சிறந்த வடிவமாகும்.

*நடேசனின் இரண்டு நாவல்கள் ஏற்கனவே வெளியாகியுள்ளன. ஒன்று "வண்ணாத்திகுளம்" மற்றது "உனையே மயல்கொண்டு" இதில் "வண்ணாத்திகுளம்" ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. நடேசன் தொடர்ந்து 10 ஆண்டுகளுக்கும் மேலாக இணையத்திலும் பத்திரிகைகளிலும் எழுதிவருகிறார்.*

*நடேசனின் இந்த நாவல் அவர் எழுதிய நாவல்களில் முக்கியமான ஒன்று என்பதை இந்த நாவல் புனைவா அல்லது உண்மைகளின் பதிவா என்று நம்மைத் தடுமாற வைப்பதில் இருந்தே புரிந்து கொள்ள முடியும். அதேவேளை இது தடுமாறிக்கொண்டிருக்கும் தாழ்நிலைச் சமூகமொன்றினை உய்வித்து, உயர்த்துவதற்கான நல்லதோர் படைப்பு.*